Issued 11—12—74]

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

TUESDAY 20th AUGUST 1974

Volume CXXIV—No. 1

B. No. 102

©
GOVERNMENT OF TAMIL NADU
1974

*Legislative Council Department*
*Fort St. George, Madras-9.*

PRICE 35 *Paise*]

# Tamil Nadu Legislative Council Debates

Forty-eighth Session of the Legislative Council under the Constitution of India

20th to 24th August 1974.

VOLUME CXXIV (Numbers 1—5)

TABLE OF CONTENTS.

PAGES

*Tuesday, 20th August* 1974.


| | |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... | i—v |
| Principal Officers of the Tamil Nadu Legislative Council ... ... ... ... | vii |
| List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies ... ... | ix—xi |
| 1. Questions and Answers .. .. .. .. | 1—25 |
| 2. Announcements— | |
| (1) Message from the Governor .. .. | 25 |
| (2) Message from the Assembly ... ... | 25—26 |
| 3. Calling attention to improper distribution of milk and other irregularities in Thanjavur District Co-operative Milk Production and Marketing Federation Limited, Thanjavur ... ... | 28—29 |
| 4. Discussion on the Annual Financial Statement for 1974-75 and the Supplementary Financial Statement for 1973-74 of the Tamil Nadu Electricity Board ... ... ... ... | 29—6( |

311.32 N74
174.10432
63141




PAGES

Wednesday, 21st August 1974

1. Questions and Answers ... 61—82
2. Announcements—
   (1) Message from the Governor ... 82
   (2) Message from the Assembly ... 82
3. Calling attention to the [illegible] to Post-graduate teachers promoted from Government B Wing High Schols to Colleges ... ... 83—86
4. Government Resolution *re*—
   Agreement regarding Katcha Thivu ... ... 86—122
5. Government Bill—
   The Tamil Nadu Appropriation (No. 3) Bill, 1974 (L.A. Bill No. 41 of 1974) ... 122—147
6. Papers laid on the table of the House ... ... 147—149

Thursday, 22nd August 1974

1. Questions and Answers ... ... ... ... 155—167
2. Discussion on the Annual Financial Statement for 1974-75 and the Supplementary Financial Statement for 1973-74 of the Tamil Nadu Elecricity Board—*cont.* ... ... ... ... 168—219
3. Papers laid on the table of the House ... ... 218—219

Friday, 23rd August 1974

1. Questions and Answers ... ... ... ... 221—238
2. Announcement *re*—
   Message from the Assembly ... ... 238—239
3. Point of Information *re*—
   Delay in receipt of answers from Departments to questions ... ... ... 240—241





PAGES

Friday, 23rd August 1974—*cont.*

4. Calling attention to non-payment of house rent allowance to the staff of Raja Serfoji (Government) College, Thanjavur ... ... ... 22—243
5. Government Bills—
   (1) The Tamil Nadu Cultivating Tenants (Right to Purchase Landowners' Rights) Bill, 1973 (L.A. Bill No. 11 of 1973) as passed by the Legislature .. ... ... ... 243—247
   (2) The Tamil Nadu Estates (Abolition and Convertion into Ryotwari) Amendment Bill, 1974 (L.A. Bill No. 27 of 1974) ... ... ... 247—249
   (3) The Tamil Nadu Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 33 of 1974) ... ... ... ... 249—258
   (4) The Tamil Nadu General Sales Tax (Second (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 35 of 1974) ... ... ... ... 259—267
   (5) The Tamil Nadu General Sales Tax (Third Amendment) Bill, 1974 (L.A. Bill No. 40 of 1974) ... ... ... ... 267—273
   (6) The Motor Vehicles (Tamil Nadu Amendment) Bill, 1974 (L.A. Bill No. 32 of 1974) ... 273—274
6. Papers laid on the table of the House ... ... 275

Saturday, 24th August 1974

1. Questions and Answers ... ... ... 285—304
2. Announcement *re*—
   Decision of the Business Advisory Committee ... 304
3. Calling attention to the hardships caused to agriculturists on account of stoppage of loans for sinking and deepening wells ... ... 304—309
4. Government Motion—
   Transaction of Government Business on a Private Members' Day ... ... ... 309

PAGES

Saturday, 24th August 1974—*cont.*


Government Bills—

(1) The Tamil Nadu Prohibition (Revival of Operation and Amendment) Bill, 1974 (L.A. Bill No. 38 of 1974) ... ... ... 309—349

(2) The Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and Extension of Term of Office) Third Amendment Bill, 1974 (L.A. Bill No. 28 of 1974) ... ... ... ... ... 349—352

(3) The Madurai City Municipal Corporation (Amendment and Extension of Term of Office) Second Amendment Bill, 1974 (L.A. Bill No. 29 of 1974) ... ... ... 352—353

(4) The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Fifth Amendment) Bill, 1974 (L.A. Bill No. 26 of 1974) ... 353—354

Index ... ... ... ... 363—394


# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

*Governor of Tamil Nadu*

THIRU KODARDAS KALIDAS SHAH

*Members of the Council of Ministers.*

1. THE HON. DR. M. KARUNANIDHI, Chief Minister in-charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to Indian Civil Services and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections and Film Technology.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN, Minister in-charge of Education including Technical Education, Official Language, Legislature and Tourism and Tourist Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN, Minister in-charge of Public Health, Medicine, Tamil Nadu Drainage and Water Board and Town Planning.

4. THE HON. THIRU N. V. NATARAJAN, Minister in-charge of Backward Classes, Information and Publicity, Registration, Ex-Servicemen, Prosperity Brigade, Youth Service Corps, Bhoodan and Gramdan.

5. THE HON. THIRU P. U. SHANMUGAM, Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Ports.

6. THE HON. THIRU S. MADHAVAN, Minister in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law Courts and Prisons.

7. THE HON. THIRU S. J. SADIQ PASHA, Minister in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Commercial Taxes, Prohibition and Excise Revenue and Waqfs.

8. THE HON. THIRU SI. PA. ADITHANAR, Minister in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing. Animal Husbandry, Agro-Engineering wing Agro-Engineering and Service Co-opertive Societies at the Block, District and apex level including the Federation.

9. THE HON. THIRU A. P. DHARMALINGAM, Minister in charge of Municipal Administration, Community Development and Panchayats and Panchayat Unions.

10. THE. HON. THIRU MANNAI P. NARAYANASWAMY, Minister in-charge of Food, Co-operation and Agricultural Refinance.

11. THE HON. THIRU K. RAJARAM, Minister in-charge of Labour, Housing, Accommodation Control, Legislation on Weights and Measures, Statistics and Slum Clearance Board.

12. THE HON. THIRU C. V. M. ANNAMALAI, Minister in-charge of Social Welfare including Women's and Children's Welfare, Fisheries, Beggers' Home, Orphanages and Approved Schools and Vigilance Service.

13. THE HON. THIRU O. P. RAMAN, Minister in-charge of Electricity, Legislation on Money-lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests and Cinchona.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN, Minister in charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. THE HON. THIRU M. KANNAPPAN, Minister in-charge of Religious Endowments, Khadi and Village Industries and Rural Industries Project, Milk, Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation.

16. THE HON. THIRU N. RAJANGAM, Minister in-charge of Harijan Welfare, Indians Overseas and Refugees and Evacuees Newsprint Control, Passports and Cinematograph Act.

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர் :

மேதகு திரு. கோதார்தாஸ் காளிதாஸ் ஷா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பொதுத்துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், திரைப்படத் தொழில் நுட்பவியல்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (கல்வி அமைச்சர், கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, சட்ட மன்றம், சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

3. மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுச் சுகாதாரம், மருத்துவம், தமிழ்நாடு கழிவுநீர்-குடிநீர் வாரியம், நகரமைப்பு.

4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பிற்பட்டோர் நலன், செய்தி-விளம்பரம், பத்திரப் பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள், சீரணி, இளைஞர் அணி; பூதான—கிராமதான இயக்கங்கள்.

5. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (பொதுப்பணித்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுப்பணிகள், சிறப்புச் சிறு பாசனம் உள்ளிட்ட சிறுபாசனத் திட்ட வேலைகள், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

6. **மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (தொழில் அமைச்சர்) ...ழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—தொழிற் ...லைகள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், ...ரிப்பொருள்கள், இரும்பு-உருக்குக் கட்டுப்பாடு, வேலை ...ய்ப்பும்-பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி ...ற்றங்கள், சிறைச்சாலைகள்.

7. **மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (வருவாய்த் ...றை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு ...ப்பார்:—வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட ...ருவாய் நிறுவனங்கள், மாவட்ட துணை ஆட்சித் தலைவர்கள், ...ணிக வரிகள், மதுவிலக்கு, ஆயத்தீர்வை வருவாய், முகம்மதியர் ...றக்கட்டளைகள்.

8. **மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:** (வேளாண்மைத் ...றை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு ...ப்பார்:—வேளாண்மை, உணவு உற்பத்தி, கால்நடை வளர்ப்பு, ...ளாண்மைப் பொறியியல் பிரிவு, கூட்டமைப்புக்கள் உள்ளிட்ட, ...நில, மாவட்ட அளவிலான வளர்ச்சிவட்டார வேளாண்மைப் ...ாறியியல் மற்றும் பணிமுறைக் கூட்டுறவுச் சங்கங்கள்.

9. **மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (உள்ளாட்சித் ...றை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு ...ப்பார்:—நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ...ாட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள்.

10. **மாண்புமிகு திரு. மன்னை பி. நாராயணசாமி:** (உணவு- ...ட்டுறவுத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட பொறுப்பு வகிப்பார் ...ணவு, கூட்டுறவு மற்றும் வேளாண்மை மறுநிதி உதவி.

11. **மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (தொழிலாளர் நல ...மைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— ...ாழிலாளர் நலன், வீட்டு வசதி, இடவசதிக் கட்டுப்பாடு, ...டைகள்-அளவுகள் குறித்த சட்டம், புள்ளி விவரம் மற்றும் ...சை மாற்று வாரியம்.

12. **மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** (சமூக நலத் ...றை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு ...ப்பார்:—மகளிர்-சிறுவர் நலன் உள்ளிட்ட சமூக நலத்துறை, ...ளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள் மற்றும் திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள்.



13. **மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** (மின்சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள் மற்றும் சின்கோனா.

14. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்** (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுது பொருள் அச்சுத்துறை மற்றும் அரசினர் அச்சகம்.

15. **மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— அறக்கட்டளைகள், காதி மற்றும் கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், பால் உற்பத்தி, பால் பெருக்குத் திட்டம், தமிழ்நாடு பால்பண்ணை வளர்ச்சிக் கழகம்.

16. **மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:** (அரிசன நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— அரிசன நலன், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, பயண அனுமதிச் சீட்டுகள் மற்றும் திரைப்படச் சட்டம்.

தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்.

**மேலவைத் தலைவர்.**

மாண்புமிகு திரு. சி. பி. [illegible]ற்றரசு

**மேலவைத் துணைத் தலைவர்.**

திரு. ம. பொ. சிவஞானம்

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. திரு. எம். சங்காலிங்கம்
2. திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷதர்
3. திரு. எம். ஆறுமுகசாமி
4. திரு. எஸ். முத்துசாமி

**மேலவைச் செயலாளர்.**

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ.,பி.எல்.

**உதவிச் செயலாளர்**

திரு. த. பி. டெல்லிதுரை, பி.எஸ்ஸி.

**விவாதப் பதிப்பாளர்**

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல், பி.எல்

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 1 அப்துல் வகாப், கே. எஸ். .. | மாநிலச் சட்டப் போவை. |
| 2 அய்யணன் அம்பலம் .. | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 3 அறிவழகன், க., எம். ஏ. .. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர் தொகுதி. |
| 4 அறிவுடைநம்பி, புலவர் ஒ. .. | வட ஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர் தொகுதி. |
| 5 அனிபா, நாகூர், ஈ.எம். .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 6 ஆதித்தன், எஸ்.டி.,பி.ஏ.,பி.எல். | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 7 ஆறுமுகசாமி, எம். .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 8 இளம்பரிதி .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 9 இராசகோபால், சி.வி. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 10 இராசமாணிக்கம், எஸ்.ஏ. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 11 இராசாராம், கே. (எதிர்க் கட்சித் தலைவர்). | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 12 இராஜு, ஜி. என். .. | மாநிலச் சட்டப் பேரவை |
| 13 இராமகிருஷ்ண தேவர், எஸ். .. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 4 இராமநாதன், எம். .. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 5 இராமசுப்பையா, காரைக்குடி .. | நியமனம் |
| 6 இராமசாமி படையாச்சி, எஸ்.எஸ். | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| எல்லமந்தா .. | மாநில சட்டப் பேரவை. |
| கணபதி, கே.எஸ். .. | தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி ஆசிரியர் தொகுதி. |
| குன்றக்குடி அடிகளார், தவத்திரு | நியமனம். |
| கோலப்பா, சி.ஆர். .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| சக்தி மோகன், ஆர். .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| சங்கரலிங்கம், எம். .. | திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர் தொகுதி. |
| சந்தோஷம், டி, எம்.ஏ.பி.எல். | சென்னை தெற்கு பட்டதாரிகள் தொகுதி. |

| தொடரிலக்கமும் உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
| --- | --- |
| (1) | [2] |
| 24 சாம்பசிவம், இரா. .. | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 25 செங்கோட்டு வேலப்ப கவுண்டர், எஸ்.சி. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 26 சிவஞானம், ம. பொ. (துணைத் தலைவர்). | நியமனம். |
| 2'( சிற்றரசு, சி. பி. (மாண்புமிகு தலைவர்) | மாநிலச் சட்டப் பேரவை |
| 28 சுந்தரேசத் தேவர், என். .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 29 சுவாமிநாதன், ஜி, பி. பார்மஸி | தமிழ் நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 30 தங்கப்பாண்டியன், வி. பி.ஏ.பி.டி.. | மாநிலச் சட்டப பேரவை. |
| 31 தங்கவேலு, ஏ. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 22 தமிழரசி, சி. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 33 தாமஸ், பி. ஆர். .. | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி. |
| 34 தாமோதரன், ஏ.ஆர் பி.எஸ்.ஸி. (ஆனர்ஸ்). | சென்னை வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 35 தாமோதரன், ஜி.ஆர். .. | சென்னை மேற்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 36 திராவிடமணி, அ. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 37 டிமாண்டி டென்சில் வின்சென்ட் | மாநிலச் சட்டப் பேரவை. |
| 38 தென்னரசு, எஸ்.எஸ். .. | நியமனம். |
| 39 தேவராஜ், வி.எம். .. | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 40 நடராசன், எம்.கே.டி. .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 41 நடராசன், என்.வி. (பின் தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 42 நாராயணசாமி, மன்னை, பி. (உணவு கூட்டுறவுத் துறை அமைச்சர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 43 நாராயணசாமி எஸ். .. | சென்னை மாவட்ட பட்டதாரிகள் தொகுதி. |
| 44 பக்கர், எம்.எம். .. | நியமனம். |



| தொடரிலக்கமும் உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
| --- | --- |
| (1) | (2) |
| 45 பலராமன் எஸ். | .. வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 46 பாலசுப்பிரமணியம், அ. | .. சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 47 பாலசுப்பிரமணியம், கு.மா. | நியமனம். |
| 48 பெரியண்ணன், .வி.ஆர். | .. சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 49 மணி, கோ.சு. | .. தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 50 மாசிலாமணி, மு. | .. மாநிலச் சட்டப் பேரவை. |
| 51 முத்து, எஸ். | .. மாநிலச் சட்டப் பேரவை. |
| 52 முத்துகிருஷ்ணன், டி.வி. | .. மாநிலச் சட்டப் பேரவை. |
| 53 முத்துசாமி, செ. | .. சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 54 முருகேசன், எச். எல். | .. நியமனம். |
| 55 ரஸ்ஸல் ராஜ் | .. நியமனம். |
| 56 வசந்தபை, ஜி. | .. சென்னை மாவட்ட பட்டதாரிகள் தொகுதி. |
| 57 வில்வம், ஏ. கே. | .. நியமனம். |
| 58 வில்சன் அப்போலோஸ், என். | .. கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59 வெங்கா, வி. | .. செங்கல்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 வெள்ளபாண்டியன், எஸ். | .. திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 61 வெங்கடேஸ்வர தீட்சிதர், ஒய். | .. திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62 ஜார்ஜ் கோமகன் | .. மாநிலச் சட்டப் பேரவை. |
| 63 வெற்றிடம் | .. சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

---

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் சட்ட மன்ற மேலவையின்
நாற்பத்தி எட்டாவது கூட்டத் தொடர்.

---

செவ்வாய்க்கிழமை, 1974 ஆகஸ்ட் 20.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில், பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Finance Corporation at Chintadripet*

@ * 41 Q.—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether complaints have been received that several persons were cheated this year by a certain Finance Corporation at Chintadripet, Madras City;

(*b*) if so, the full details thereof; and

(*c*) the action taken by the Government in this regard?

சிந்தாதிரிப்பேட்டையில் நிதி உதவிக் கார்ப்பரேஷன்.

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை நகரில், சிந்தாதிரிப்பேட்டையில் நிதி உதவிக் கார்ப்பரேஷன் என்ற அமைப்பினால். இவ்வருடம் பல மக்கள் ஏமாற்றப்பட்டார்கள் எனப் புகார் வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் முழு விவரம் என்ன?

(உ) அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

---

@ 19—8—1974 வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.

(இ) & (உ) லத்திப் என்பவர், சென்னை, எண் 26, பாலகிருஷ்ண பிள்ளை தெரு, சிந்தாதிரிப்பேட்டையில் சீட்டு நிறுவனம் ஒன்றை நடத்தி வந்தார். சந்தாதார்கள் பணம் செலுத்திய நாளிலிருந்து ஒரு மாதம் கழித்து செலுத்திய தொகைக்கு இரட்டிப்பு மதிப்பில், மேசை, விசிறி, சைக்கிள், நாற்காலிகள் போன்ற பொருள்கள் சந்தாதார்களுக்குக் கொடுக்கப்படுமென்று உறுதிமொழி அளித்தார். பலர் இதனால் பயனடையலாம் என்னும் நம்பிக்கையில் குற்றம் சாட்டப்பட்டவரிடம் பணம் செலுத்தினர். 17—12—1973 ஆம் நாள் மாலை அவர் வசூல் தொகையுடன் திடீரென்று தலைமறைவாகிவிட்டார். புகார் கிடைத்ததன் பேரில், சிந்தாதிரிப்பேட்டை காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. பின்னர் 1974 பிப்ரவரியில் குற்றஞ் சாட்டப்பட்டவர் கைது செய்யப்பட்டார். அவர் மீது வழக்கு தொடரப்பட்டு, நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**திரு. எம். சங்கரலிங்கம்:** தலைவரவர்களே, இந்த மாதிரி முன்பணமாகப் பெற்று, சாமான்கள் கொடுக்கப்படுமென்ற முறையில் பல கடைகள் நடைபெறுகின்றன. கடைசியில் அவை ஏமாற்றுவதில் முடிவதால், அவற்றைச் சீட்டுச் சட்டத்தின்கீழ் ஒழிப்பதற்கு அரசு பரிசிலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இவரைப் பொறுத்த வரையில், ஐ.பி.சி. 408, 420 பிரிவுகளின் கீழ் சாட்டப்படும் குற்றங்களுக்கு அதிகமாக 7 ஆண்டுக்கால தண்டனை விதிக்கக்கூடிய அந்தப் பிரிவு பயன் படுத்தப்பட்டிருக்கிறது. பொதுவாகச் சீட்டுக் கம்பெனிகளில், பல வகைகளில் மோசடிகள் நடப்பதைத் தடுப்பதற்கென்று தனியாக ஒரு சட்டம் கொண்டு வருவதுபற்றிச் சட்டத் துறை ஆய்ந்துகொண்டிருக்கிறது.

## *Opening of a Police Outpost at Padi*

@ * 42. *Q.*—THIRU A. R. DAMODARAN (on behalf of Thiru G. VASANTHA PAI): Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have received representations from the residents of Padi, Korattur, Mugapperi and Mannur Villages in Chingleput district for the opening of a Police Outpost at Padi or in any of the surrounding villages in view of the increasing thefts in the said areas; and

(*b*) if so, the action taken by the Government in this behalf?

---

@ 19—8—1974 வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.



### பாடியில் புறக் காவல் நிலையம் ஏற்படுத்தல்.

**திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. வசந்த பாய் சார்பில்):** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், பாடி, கொரட்டூர், முகப்பேரி, மன்னூர் கிராமங்களில் திருட்டுகள் அதிகமாக நடப்பதன் காரணமாக பாடியில் அல்லது அதன் சுற்றுப்புறக் கிராமங்கள் ஏதாவது ஒன்றில் புறக்காவல் நிலையம் ஒன்றை ஏற்படுத்த மேற்சொன்ன கிராம மக்களிடமிருந்து முறையீடுகள் அரசுக்கு வந்துள்ளனவா?

(இ) ஆமெனில், அவை குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, (அ) & (இ) கொரட்டூரில் புறக்காவல் நிலையமொன்றை தொடங்க வேண்டுமென்று கேட்டு, செங்கற்பட்டு மாவட்டம், பாடி, கொரட்டூர், மொகப்பேரி, மன்னூர் கிராமங்களைச் சேர்ந்தவர்களிடமிருந்தும், மற்றும் திரு. மீனாட்சிசுந்தரம் என்பவரிடமிருந்தும், ஏனையோரிடமிருந்தும் காவல் துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரலுக்கு முறையீடு வந்தது. இதே போன்ற முறையீடு கொரட்டூர் கோட்டம், வீட்டு வசதி வாரிய நிர்வாகப் பொறியாளரிடமிருந்தும் வந்தது. இது பற்றிய செயற்குறிப்பினை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் அரசுக்கு அனுப்பியுள்ளார். விரைவில் முடிவு எடுக்கப்படும்.

## *Special Pay to Additional Headmasters*

* 51. *Q.*—THIRU S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether representations have been received that, in some Higher Elementary Schools, the Additional Headmasters are denied special pay; and

(*b*) if so, the action taken thereon?

### கூடுதல் தலைமை ஆசிரியர்களுக்கு சிறப்புச் சம்பளம்

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உயர் தொடக்கப் பள்ளிகள் சிலவற்றில் கூடுதல் தலைமை ஆசிரியர்களுக்கு சிறப்புச் சம்பளம் கொடுக்கப்படுவதில்லை என்ற முறையீடு ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) உயர் தொடக்கப்பள்ளிகளில் பி.டி. தலைமை ஆசிரியர்கள் நியமனத்தால் "கூடுதல் தலைமை ஆசிரியர்களாக" ஆக்கப்பட்ட செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு உயர் தொடக்கப்பள்ளி செகண்டரி கிரேடு தலைமை ஆசிரியர்களுக்குரிய சிறப்பு ஊதியம் கொடுத்துவர வேண்டும் என்று உள்ளாட்சி மன்றங்களுக்கும் தனியார் நிருவாகங்களுக்கும் பள்ளிக் கல்வி இயக்குநர் அறிவுரை வழங்கியுள்ளார்.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, இப்படிப்பட்ட கூடுதல் தலைமை ஆசிரியர்கள் எந்த அடிப்படையில் நியமனம் செய்யப்படுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். சீனியாரிட்டி அடிப்படையில் கூடுதல் தலைமை ஆசிரியர்களாக நியமனம் செய்யப்படுகிறார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, தொடக்கக் கல்வியை விரிவாக்குவதற்கு, ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தின்கீழ் 1971-72, 1972-73 ஆம் ஆண்டு 1,800 ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டார்கள். அதில் 1,190 பி.டி. ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப் பட்டார்கள். மீதமுள்ள 610 இடங்களுக்கு செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள். பி.டி. தலைமை ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டபோது, பணியில் ஏற்கெனவே உள்ள செகண்டரி கிரேட் தலைமை ஆசிரியர்கள் கூடுதல் தலைமை ஆசிரியர்களாகக் கருதப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டது. ஊதியத்தில் எந்தவிதப் பாதகமும் ஏற்படக்கூடாதென்பதற்காக சம்பளமும், சிறப்பு ஊதியமும் வழங்கப்பட வேண்டுமென்று கூறப்பட்டது. தனியார் பள்ளிகளுக்கும் தரப்பட்டிருக்கிறது; ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கும் தரப்பட்டிருக்கிறது. அந்தப் பள்ளிகளுடைய தலைமை ஆசிரியர்கள் கூடுதல் தலைமை ஆசிரியர்களாக ஆகிறார்கள். ஆகவே அந்தக் கூடுதல் தலைமை ஆசிரியர்களுக்கு உயர் தொடக்கப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள் பதவிகள் காலி வந்தால் தரப்படுமென்ற நிலைமை இருந்து வருகிறது.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, இந்தக் கூடுதல் தலைமை ஆசிரியர்களுக்கு ஏதாவது வேலை வரையறுக்கப்பட்டிருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன். மேலும் அவர்களுடைய கடமை என்னவென்றும் அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே. அதுபற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, பட்டதாரி ஆசிரியர்களை பள்ளித் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கும்போது, சில ஜூனியர் ஆசிரியர்கள் கூடுதல் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்படுகிறார்கள். சீனியாரிட்டிபடி கூடுதல் தலைமை ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்களா அல்லது நடுநிலைப் பள்ளிகளில் ஜூனியர்கள் தலைமை ஆசிரியர்களாக இருக்கும்போது, அந்தப் பள்ளிகளில் பி.டி. ஆசிரியர்களைத் தலைமை ஆசிரியர்களாகப் போடும்போது, அந்த ஜூனியர்களே கூடுதல் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப் படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதுபற்றி முழு விவரம் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால், அதுபற்றி எடுத்துச் சொல்கிறேன். நான் யூகிக்கிற அளவுக்கு, ஒவ்வொரு உயர் தொடக்கப் பள்ளிக்கும் தலைமை ஆசிரியர் இருக்க வேண்டும். ஆகவே ஏற்கெனவே தலைமை ஆசிரியர்கள் இருப்பார்கள். நாம் பி.டி. தலைமை ஆசிரியரைப் போடும்போது, ஏற்கெனவே அங்கே இருக்கிற தலைமை ஆசிரியர் கூடுதல் தலைமை ஆசிரியராக நியமிக்கப்படுகிறார். ஆக, அதிலே சீனியர், ஜூனியர் என்று பார்ப்போமானால், மற்றைய பள்ளிகளிலே சீனியர் தலைமை ஆசிரியர்களை வைத்துவிட்டு, இங்கே ஜூனியர் தலைமை ஆசிரியர்களைத்தான் கூடுதல் தலைமை ஆசிரியர்களாகப் போட வேண்டி வரும். ஏனென்றால், தனித் தலைமை ஆசிரியர்களாக இருப்பதுதான் அவர்கள் விரும்புகின்ற ஒன்றாக இருக்கும். பி.டி. தலைமை ஆசிரியர்கள் இருக்கிற இடத்தில், தங்களைத் தனித் தலைமை ஆசிரியர்களாக ஆக்க வேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள். பிறகு நாம் அவர்களைக் கூடுதல் தலைமை ஆசிரியர்களாக்கினோம். ஆனால் அது எந்த அடிப்படையில் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் அறிய விரும்புவார்களேயானால், அதுபற்றித் தனிக் கேள்வி கேட்டால், அதன் முழு விவரத்தையும் அறிவிக்கலாம்.

**திரு. அ. அய்யணன் அம்பலம் :** தலைவரவர்களே, பி.டி. ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்பட்ட உயர் தொடக்கப்பள்ளிகளில் இருக்கும் கூடுதல் தலைமை ஆசிரியர்களை மற்ற பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கலாமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மற்றைய பள்ளிகளில் அவர்கள் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்படலாம். வேறு எந்தப் பள்ளியிலாவது தலைமை ஆசிரியர் இடம் காலி ஏற்படும்போது, அந்தக் காலி இடங்களில் இந்தக் கூடுதல் தலைமை ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்படலாம்.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, கூடுதல் தலைமை ஆசிரியர்கள், நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களின் சம்பளத்தைப் பெறுகிறார்கள். அவர்கள் தனிச் சம்பள விகிதம் பெறுகிறார்கள். இவர்களை வேறு பள்ளிகளுக்கு—தொடக்கப் பள்ளிகளுக்கு—மாற்றுகிற முறையை இன்றைக்குச் செய்துகொண்டிருக்கிறார்கள். அப்படிச் செய்யும்போது, இவர்களுக்கு அந்தச் சம்பளம் கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. அவர்களுக்கு ஊதியப் பாதுகாப்பு அளிப்பதற்காகத்தான், கூடுதல் தலைமை ஆசிரியர்கள் என்று போட்டு, தனிச் சம்பளம் தருகிறோம். எனவே, உயர் தொடக்கப் பள்ளிகளில் வேகன்சி வந்தால்தான் அவர்கள் மாற்றப்படுவார்கள் என்று தெளிவாக அரசு உத்தரவிடுமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, சம்பளம் எந்த வகையிலும் பாதிக்கப்படக்கூடாது என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. எங்கேயாவது, யாராவது பாதிக்கப்பட்டிருப்பார்களானால், அதை இயக்குநர் கவனத்திற்கோ அல்லது அரசின் கவனத்திற்கோ கொண்டு வந்தால், அது பற்றித் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## *Recognition of Technical Teachers' Diploma*

52. *Q.*—THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state whether there is any proposal with the Government to recognise the Technical Teachers' Diploma (in Commercial Practice) awarded by the Director of Technical Education as an equivalent to the Diploma in Commerce awarded by him?

### தொழில் நுட்ப ஆசிரியர்கள் தகுதிப் பட்டயத்தை அங்கீகரித்தல்

**திரு. கே. எஸ். கணபதி :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

தொழில் நுட்பக் கல்வி இயக்குநரால் வழங்கப்படும் தொழில் நுட்ப ஆசிரியர்கள் தகுதிப் பட்டயத்தை (வணிக நடைமுறையில்) அவரால் அளிக்கப் படும் வணிகவியல் தகுதிப் பட்டயத்திற்குச் சமமானது என்று அங்கீகரிப் பதற்கான செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

(பிற்பகல் 4-10)

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவரவர்களே, இந்த சர்டிபிகேட், டிப்ளமோ இந்த இரண்டு கோர்ஸ்களுக்குமே பாடத் திட்டம் ஒன்றாக இருக்கின்றது. இரண்டு பாடத் திட்டங்களும் ஒன்றாக இருந்தாலும் ஒன்று சர்டிபிகேட்



டாகவும், இன்னொன்று டிப்ளமோவாகவும் வழங்கப்படுவதாலே, அவர்கள் வேலை வாய்ப்புகளுக்கு இடையூறாக இருக்கின்றது. பாடத் திட்டம் ஒன்றாக இருக்கிறது என்ற அடிப்படையில் இரண்டையும் ஒன்றுபடுத்தி அரசு உத்தர விடுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இங்கே குறிப்பிடுகின்றபடி, டி.டி.சி. என்றும் டி.சி.பி., டிப்ளமோ இன் கமர்ஷியல் பிராக்டீஸ் கோர்ஸ் என்றும் இருக்கின்றது. அது டிப்ளமோ இன் காமர்ஸ் என்றுதான் இருக்கின்றது. ஆக இரண்டிற்கும் வேறுபாடு இருக்கின்ற நிலையில் தான் இருந்து வருகிறதேயல்லாமல் அந்த இரண்டும் ஒரே நிலையில் இல்லை என்று கூறப்பட்டிருக்கின்றது.

Diploma in Commercial Practice Course is a regular full-time course for post-Matric students for a duration of three academic years and the Diploma in Commerce is not at all a regular course but a qualification awarded to the candidates who have passed the following subjects of the Government Technical Examinations :

Typewriting—English or Tamil—Higher.
Shorthand—English or Tamil—Lower.
Commercial Practice—Higher.
Commercial Geography—Higher.
Banking—Higher.
Accountancy—Higher.

The syllabus content of the Diploma in Commercial Practice Course by and large covers various subjects which are not prescribed for awarding Diploma in Commerce qualification.
இதன் காரணமாகத்தான் இரண்டையும் ஒன்றாக ஆக்குவதற்கு இல்லை என்று இயக்குநர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள்.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, ஏற்கெனவே இந்தி ஆசிரியர்களாக இருந்து இப்போது இடைநிலை ஆசிரியர்களாக வந்திருப்பவர்களின் முழு ஊழிய காலமும் தற்போது செலக்ஷன் கிரேடுக்காக 10 வருடம் கணக்கிடப்படுவதற்குச் சேர்த்துக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன். காரணம் மொழிப் பிரச்சினை வரும்போது இந்தி ஆசிரியர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள் என்ற உறுதி அளிக்கப்பட்டிருக்கின்றது. எனவே அவர்களுடைய ஊழிய காலம் எடுத்துக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அங்கத்தினர் அவர்கள் கேட்கின்ற துணை வினா இந்த மூலக் கேள்வியைப் பொருத்தது அல்ல என்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

## *Promotion of Ex-Hindi Pandits*

* 53. Q.—THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state whether the Government will consider promoting the ex-Hindi Pandits who are at present working as Secondary Grade Teachers in Government High Schools, if they have acquired the B.A., B.Ed., Degrees with Hindi under Part I by amending the relevant rules?

## இந்தி மொழி ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு

**திரு. கே. எஸ். கணபதி :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

அரசு உயர் நிலைப் பள்ளிகளில் தற்போது இடைநிலை ஆசிரியர்களாகப் பணியாற்றும் முன்னாள் இந்தி மொழி ஆசிரியர்கள் முதல் பிரிவில் இந்தி மொழி எடுத்து, பி.ஏ., பி.எட்., பட்டப் படிப்புத் தகுதி பெற்றிருப்பின், தற்போதுள்ள விதிமுறைகளில் தக்க மாற்றங்கள் செய்து அவர்களுக்குப் பதவி உயர்வு அளிப்பது பற்றி அரசு பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பள்ளியிறுதித் தேர்வு (S.S.L.C.) வரை தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு படித்து, பின்னர் அரசு பள்ளிகளில் இடைநிலை ஆசிரியர்களாகப் பணியாற்றுகையில் தமிழ் மொழி மூலம் பாடங்களைப் பயிற்றுவித்த அனுபவமுள்ளவர்களைப் பொருத்த மட்டில் குறிப்பிட்ட விதியிலிருந்து விலக்கு வழங்கலாமென அண்மையில் ஆணையிடப்பட்டுள்ளது.

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவரவர்களே, இடைநிலை ஆசிரியர்களாக இருப்பவர்கள் மற்றும் பிற பணிகளில் இருப்பவர்கள், முன்னாளில் இந்தி ஆசிரியர்களாக இருந்தவர்கள், பி.ஏ., பி.எட்., பட்டம் பெற்ற பிறகு காலியான இடம் 'ஏ' விங் வேகன்சியாக இருக்கிறது. அவர்கள் பார்ட் I-ல் தமிழ் படித்திருந்தால்தான், அந்தப் பணியில் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். ஆனால் தனியார் பள்ளிகளிலே முன்னமேயே இருப்பவர்களை இந்த விதி கட்டுப்படுத்தாது என்று தெளிவாக உத்தரவு இருக்கின்றது, ஆனால் அவர்களுக்கு இந்தப் பாதுகாப்பு இல்லை. எனவே அவர்கள் ஏற்கெனவே 'பி' விங்



பள்ளியிலேயே இருந்து விட்ட காரணத்தினாலேயே அவர்களுக்கு உயர் பதவிக்குச் செல்வதற்கு வாய்ப்பு இல்லை. அந்த வாய்ப்பை ஏற்படுத்தும் அளவிலே ஒரு உத்தரவு பிறப்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சப்ளிமெண்டரி கேள்விகளைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, தமிழ் அல்லாத பிற மொழிகளில் பட்டம் எடுத்திருப்பின், எஸ்.எஸ்.எல்.சி. வரையில் தமிழைப் போதனை மொழியாக எடுத்துப் படித்து, இடைநிலை ஆசிரியராக இருக்கும்போது தமிழ் மொழி மூலம் பயிற்றுவித்து வந்தவராகவும் இருப்பின், பட்டப்படிப்பில் தமிழை மொழிப்பாடமாகப் படித்திருக்கவேண்டும் என்ற விதியிலிருந்து தவிர்ப்பு வழங்கலாம் என்று இருக்கிறது. அத்தகையவர்கள் பள்ளி உதவியாசிரியர்களாகப் பதவி உயர்வு பெற்றால், அவர்கள் தகுதிகாண் காலத்திற்குள் 'தமிழில் முன்னேற்ற மொழித் தேர்வு' அதாவது "அட்வான்ஸ்ட் லாங்குவேஜ் டெஸ்ட்" எழுதித் தேர்வு பெற வேண்டும் என்றும் அண்மையில் ஆணையிடப்பட்டுள்ளது.

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவரவர்களே, 'ஏ' விங் பள்ளிகளிலும், 'பி' விங் பள்ளிகளிலும் குழப்பம் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே, கேள்விகள் சற்று நீளமாக இருக்கவேண்டிய அவசியமாக இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** துணை வினாக்கள் Short ஆக, சுருக்கமாக இல்லையென்றால் குழப்பம் நமக்கே வந்துவிடும்போல் இருக்கின்றது.

## *Assistant Professors in Tamil Colleges*

* 54. Q.—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR:) Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether any representation has been received by the Government regarding the heavy work load of the Assistant Professors working in Tamil Colleges; and

(b) if so, the action taken thereon by the Government?

### தனித் தமிழ்க் கல்லூரிகளில் துணைப் பேராசிரியர்கள்

திரு. சி. வி. ராஜகோபால் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தனித் தமிழ்க் கல்லூரிகளில் பணி செய்யும் துணைப் பேராசிரியர்களுக்கு வேலைப்பளு அதிகமாக இருக்கிறது என்று அரசுக்கு முறையீடு வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### *Special Increment to Government Staff who have acquired Pulavar Degree*

* 55. Q.—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether any representation has been received requesting the grant of special increments to the Government staff who have acquired the Pulavar Degree; and

(b) if so, the action taken thereon?

### அரசு அலுவலர்களில் புலவர் பட்டம் பெற்றவர்களுக்குச் சிறப்பூதியம்

திரு. சி. வி., ராஜகோபால் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு அலுவலர்களில் புலவர் பட்டம் பெற்றவர்களுக்கு சிறப்பு ஊதிய உயர்வு கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்ததா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம். சென்னை தெய்வீகப் பேரவைத் தலைவரிடமிருந்து இக்கோரிக்கை வந்தது.

(இ) இக்கோரிக்கை நன்கு ஆய்ந்த பின் ஏற்பதற்கில்லை என்று அறிவி



### *Ravana Kaviyam*

* 56. Q. THIRU RAMA SUBBAIYA: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to include some of the portions from Ravana Kaviyam written by Pulavar Kulandai in the syllabus of the schools and colleges; and

(b) if so, from which academic year it will be included?

### இராவண காவியம்

திரு. இராம சுப்பையா: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) புலவர் குழந்தை அவர்கள் இயற்றிய "இராவண காவியத்தின்" சில பகுதிகளைப் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குப் பாடமாக வைப்பதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசாங்கத்திடம் உண்டா?

(இ) ஆமெனில், எந்தக் கல்வியாண்டிலிருந்து வைக்கப் பெறும்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### *Peranampet Hospital*

* 57. Q. THIRU L. BALARAMAN: Will the Hon. the Minister for Health be pleased to state the steps taken by the Government to convert the hospital at Peranampet, North Arcot District, into a General Hospital?

### பேரணாம்பட்டு மருத்துவமனை

திரு. எல். பலராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

வட ஆற்காடு மாவட்டம், பேரணாம்பட்டு மருத்துவமனையைப் பொது மருத்துவ மனையாக மாற்றியமைக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** அத்தகைய செயற்குறிப்பு ஒன்றும் அரசின் பரிசீலனையில் இல்லை

**திரு. எல். பலராமன் :** தலைவரவர்களே, அந்தப் பகுதி பின்தங்கிய பகுதியாகவும், ஒதுக்குப்புறமாகவும் இருப்பதனுல், அங்கே ஒரு மருத்துவ மனை இருக்கவேண்டியது அவசியம் என்று அரசுக்குக் கோரிக்கை விட்டிருக்கின்றார்களா? அந்தக் கோரிக்கையை அரசு மறு பரிசிலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, பொதுமக்கள் அமைச்சருக்கு வேண்டுகோள் விட்டார்கள். ஆனுல் பொதுமக்கள் அரசுக்கு விண்ணப்பம் அனுப்பவில்லை. இரண்டுக்கும் உள்ள வேற்றுமையை அங்கத்தினர் அவர்கள் உணர்வார்கள் என்று நம்புகிறேன். நான் அங்கே சென்ற போது பொதுமக்கள் என்னிடத்திலே தெரிவித்தார்கள். ஆனுல் அவர்கள் அரசுக்கு முறையாக விண்ணப்பிக்கவில்லை. அதைப் பெற்றுத்தான் அரசுத் துறையைச் சேர்ந்தவர்கள் பதில் அளிப்பார்கள். ஆனுல் முக்கியமாக அங்கே பெண்களுக்கான மகப்பேறு மருத்துவ நிலையம் ஒன்று அரசால் நடத்தப்படுகிறது. அங்கேயே பஞ்சாயத்து யூனியன் டிஸ்பென்சரி ஒன்று பொது டிஸ்பென்சரியாக, ரூரல் இன்ஸ்டிடியூஷனாக நடத்தப்படுகிறது. ஆகவே பஞ்சாயத்து யூனியன் டிஸ்பென்சரி ஒன்று நடத்தப்படுகின்ற காரணத்தால், இந்த மெட்டர்னிடி ஆஸ்பிடலை ஆடவர்களுக்கும் சேர்த்து ஜெனரல் ஆஸ்பிடலாக அமைப்பது என்பது அவ்வளவு மிக அவசியமான காரியம் இல்லை. ஆனுல் எதிர்காலத்திலே ஏதாவது செய்யக்கூடுமானுல் பரிசீலிக்கலாம்.

**திரு. கே. ராஜாராம் :** தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் கூறும் போது, அமைச்சர் அவர்களுக்கு விண்ணப்பித்தார்கள், அரசுக்கு விண்ணப்பிக்கவில்லை என்று கூறினுர்கள். அரசுக்கு விண்ணப்பம் எப்படிச் செய்ய வேண்டும், அமைச்சருக்கு எப்படி விண்ணப்பம் செய்ய வேண்டுமென்று பொது மக்களுக்குத் தெரியாது. பொதுவாக அமைச்சர் அவர்களிடத்தில் மனுக் கொடுத்தால் அதை அரசுக்கு மனுக்கொடுத்ததாகத் தான் எல்லோரும் எண்ணிக்கொண்டிருக்கின்றோம். வேறு விதமாக இருந்தால், விளக்கிச் சொல்லுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, வேறு ஒரு நிகழ்ச்சிக்குச் சென்றபோது ஒரு வரவேற்புக் கொடுத்தார்கள். அந்த வரவேற்பிலே அந்தக் கருத்து சொல்லப்பட்டது. ஆனுல் அங்கே அந்த பஞ்சாயத்து யூனியன் டிஸ்பென்சரி ஒன்று இருக்கின்ற காரணத்தால், அதை புரோவின்சியலைஸ் செய்து எடுத்து மருத்துவ மனையாக நடத்துவதா அல்லது மெட்டர்னிடி ஆஸ்பிடல் இல்லாமியர் ஏராளமாக இருக்கிற இடத்தில் பெண்களுக்கு என்று உள்ள மருத்துவ மனை, அதிலேயே கட்டிடம் கட்டிச் சேர்ப்பதா என்பது பிரச்சினை. ஆனுல் இரண்டிலுமே பேரணம்பட்டு தாலுக்கா



தலைநகரமாக இல்லாத காரணத்தால், அதற்கு அடுத்த உரிமைதான் பெற முடியும். எனவே பொருளாதார வசதிக்கு ஏற்றவாறு செய்ய வேண்டும். ஒன்று புரோவின்சியலைஸ் செய்வதா அல்லது இருக்கிற மருத்துவ மனையை மாற்றுவதா என்பது பிரச்சினை. இவை எதிர்காலத்திலேதான் பரிசீலிக்கப்பட வேண்டும்.

## *High Speed Diesel*

* 58. *Q.*—THIRU A. R. DAMODARAN : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) the quantity of High Speed Diesel released by the Oil Companies for sale in Tamil Nadu during each of the months, October, November and December 1973 and January 1974;

(*b*) whether any cut has been imposed by the Government of India in the supply of High Speed Diesel to Tamil Nadu during the month of February, 1974; and

(*c*) if so, the extent of this cut?

### அதிவேக டீசல் எண்ணெய்

**திரு. ஏ. ஆர் தாமோதரன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டில், 1973-ஆம் ஆண்டு, அக்டோபர், நவம்பர், டிசம்பர் திங்கள், 1974-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் ஆகிய ஒவ்வொரு திங்களிலும் விற்பனைக்காக எண்ணெய்க் கம்பெனிகளால் விநியோகம் செய்யப்பட்ட அதிவேக டீசல் எண்ணெய் அளவு யாது?

(இ) தமிழ் நாட்டிற்கு, 1974-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் ஒதுக்கப்பட்ட அதிவேக டீசல் எண்ணெயின் அளவை இந்திய அரசு குறைத்ததா?.

(உ) ஆமெனில், அவ்வாறு, குறைத்ததன் அளவு யாது?.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) தமிழ் நாட்டில் எண்ணெய்க் கம்பெனிகளால் விநியோகம் செய்யப்பட்ட டீசல் எண்ணெயின் அளவுகள் பின்வருமாறு—

1973 அக்டோபர்—49349.3 கி. லிட்டர்கள்.
1973 நவம்பர்—51455.2 கி. லிட்டர்கள்.
1973 டிசம்பர்—54942.0 கி. லிட்டர்கள்.
1974 ஜனவரி—56575.0 கி. லிட்டர்கள்.
1974 பிப்ரவரி—53174.0 கி. லிட்டர்கள்.

(இ) கடந்த பிப்ரவரி மாதம் எவ்விதமான எண்ணெய்—வெட்டும் மத்திய அரசால் அமுலாக்கப்படவில்லை.

(உ) கேள்விக்கு இடமில்லை.

THIRU A. R. DAMODARAN : Sir, has there been any cut imposed after February 1974 in the months of March, April, May, June and July 1974?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, as far as the supply from February to May 1974 is concerned, there has been a progressive increase from 42,717 kilo litres to 64,860 kilo litres.

THIRU A. R. DAMODARAN : Sir, I would like to invite the attention of the Hon. Minister to the fact that the allocation of High Speed Diesel oil is decided at the Supply Plan meeting held by the Government of India. But the supply made to Tamil Nadu does not correspond with the Supply Plan meeting schedules. May I, therefore, request whether the Hon. Minister could kindly clarify us with the actual receipts in Tamil Nadu for the various months, because 20 per cent cut has been imposed by all the Oil Companies on diesel.

THE HON. THIRU S. RAMACHANDRAN : As the hon. Member has rightly pointed out, the Supply Plan meeting is held by the Government of India and they fix the quota for the respective States. But the information which I have furnished to the House now relates to the actual supply made from the respective Oil Companies. As far as the discrepancy between the estimated allotment and the actual receipt is concerned, I have no information whether they have been verified.

THIRU A. R. DAMODARAN : Sir, do the Government have any proposal on the advice of the Government of India to introduce ration cards for agriculturists and commercial vehicles?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, there is no such proposal at present.

THIRU K. S. ABDUL WAHAB : Sir, during the months of June and July 1974, there was too much scarcity of diesel in the State. In the bunks there were ' No Stock ' boards. May I know the reason for this scarcity of diesel?



THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, for some time back, due to power cut, there has been an enormous demand for diesel oil for use in pumpsets as well as for the industries. Such a big demand was not anticipated at that time. The shortage was brought to the notice of the Government of India and they have brought an oil tanker of the capacity of 19,000 tons and with that High Speed Diesel oil, we were able to tide over our shortage.

THIRU S. NARAYANASWAMY : Is the Hon. Minister aware that recently diesel oil supplies to industries are being made on the basis of their consumption during a period of power cut which is considerably below the installed capacity, and on that basis, they are trying to allocate only 60 or 70 per cent at Government of India level and it is high time to inform the Central Government that allocation should be made as a percentage of installed capacity rather than on the basic of actual consumption during a period of power cut, as this is likely to involve all industries in harship?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, as far as the shortage of diesel is concerned, it is an international phenomenon and it is not merely a national phenomenon. The hon. Member himself is well aware of that. But in respect of its allocation on the basis of installed capacity, I have no knowledge.

THIRU C. V. RAJAGOPAL : Mr. Chairman, Sir, will the Hon. Minister be pleased to tell us the steps he will be taking in view of the fact that nowadays the agriculturists do not get diesel oil for their oil engines and even today the agriculturists are loitering near the petrol bunk without getting diesel?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, as far as the supply of diesel oil to pumpsets is concerned, I think the petrol bunks will be in a position to meet the requiremnts of agriculturists, but the pumpsets will be normally connected with electricity.

THIRU A. R. DAMODARAN : Sir, is the Hon. Minister aware that in some districts of our State, the Collectors have asked H.S.D. dealers not to supply High Speed Diesel oil in barrels to agriculturists? In view of the difficulties that the agriculturists face in getting supplies for pumpsets, will the Government amend these instructions?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, what the hon. Member has mentioned to this House is a new information and the Government will take notice of it.

*State Transport Express Buses.*

*59 Q.—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether it is a fact that the State Transport Express buses are plying with defects; and

(*b*) if so, the reason therefor?

**அரசு போக்குவரத்துத் துரித வண்டிகள்**

***திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :*** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) அரசு போக்குவரத்துத் துரித வண்டிகள் பழுதுடன் ஓடிக் கொண்டிருக்கின்றன என்பது உண்மையா ?*

*(இ) ஆமெனில், அதற்கான காரணம் யாது ?*

***மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :*** *(அ) இல்லை.*

*(இ) கேள்விக்கு இடமில்லை.*

*(பிற்பகல் 4-20)*

***திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :*** *தலைவர் அவர்களே, முழுதும் பழுதடைந்த பஸ்ஸாக இருந்தால் ஓட முடியாது. ஆனால் குறைந்த அளவிலே பழுதடைந்த—வைப்பர் இல்லாமல் இருப்பது, ரேடியேட்டர் ஓட்டையாக இருப்பது, இன்ஜினிலேயிருந்து ஆயில் ஒழுகுவது போன்று இருக்கும் பஸ்களை ரோடிலே ஓடவிடுகிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?*

***மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :*** *தலைவர் அவர்களே, விரைவு பேருந்துகளைப் பொறுத்தவரையில், நாள் ஒன்றுக்கு 241 வழித் தடங்களை இயக்கி வருகின்றோம். அதிலே வாரத்திற்கு 9 தடவைகள்தான் பிரேக்டவுனாக ஆகின்றன. நாள் ஒன்றுக்கு இரண்டுக்கும் குறைவாகவே எண்ணிக்கை இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன குறைபாடுகள் இல்லை என்றே கொள்ளலாம்.*

THIRU G. SWAMINATHAN : Sir, may I know the number of vehicles that are being operated by the Transport Corporations and the number of buses on the average which are in disrepair?



Yesterday, the Hon. Minister of the Central Government said that in many of the Transport Corporations, for every one bus, there was one bus under repair. Is it so in our case?

THE HON. THIRU S. RAMACHANDRAN : It is not so in our case. Our Transport Corporations are making a very good utilisation of the vehicles available. For the information of the hon. Member and the House, I may say that the Pallavan Transport Corporation has achieved 92 per cent utilisation at present.

THIRU A. R. DAMODARAN : Sir, in Madras City, the utilisation is 150 per cent. May I know whether the Government propose to put more buses in Madras City, Sir?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, I am not giving per-bus utilisation. I mentioned the number of buses utilised against the total fleet. As far as the solution of congestion problem in the City is concerned, the Government of India have agreed in principle to give sanction for 3 crores of rupees loan and we will be pressing into service another 250 buses probably by January 14.

THIRU G. SWAMINATHAN : Sir, may I know the percentage of utilisation of the buses in the other Corporations in Tamil Nadu?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, I have no information readily available now. But our utilisation percentage in almost all the Corporations is over 87 per cent.

THIRU K. S. ABDUL WAHAB : While answering this question, the Hon. Minister was saying that there were only 9 breakdowns per week at present. May I know the comparative figures for the last year?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, the hon. Member may put a separate question.

1974 ஆகஸ்ட் 20

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவர் அவர்களே, இந்த அவை உறுப்பினர்களுடைய அனுபவத்திலோ என்னவோ தெரியவில்லை, பல உறுப்பினர்கள் சென்ற விரைவுப் பேருந்துகள் வழித்தடங்களிலே தடைபட்டு நின்றன என்பது உறுப்பினர்கள் பலருக்கு நன்கு தெரியும். சென்ற இரண்டு மூன்று மாதத்திற்கு முன்பேகூட மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் இதுபற்றி நான் குறிப்பிட்டேன். நான் சென்ற ஒரு பேருந்து இருபதாவது மைலிலே நின்றுவிட்டது. அது போகும்பொழுதே ஒரு டயரிலே காற்று குறைவாக இருந்தது. அதற்கு அங்கே ஒரு ஸ்டெப்னி கிடையாது. அதை முன்னாலே வருகிற ஒரு வண்டியிலே வாங்கினால், அதை மாட்டுவதற்கு ஜாக்கி கிடையாது. எதிர்பாராத விதமாக எதிரிலே வந்து நின்றுகொண்டிருந்த இன்னொரு பஸ்ஸிலே ஜாக்கியை எடுத்துவந்து, ஜீப்பிலே வாங்கிய ஸ்டெப்னியை மாட்டிக்கொண்டார்கள். இது பலதடவை நடக்கிறது என்று பல உறுப்பினர்களும் சொல்கிறார்கள். ஆனால் வாரத்திற்கு 9 தான் பிரேக் டவுன் நடக்கிறது என்பது வியப்புக்குரியது. அது உண்மையிலேயே 9 தான் என்றால் சந்தோஷத்திற்குரியது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, ஒருவேளை உறுப்பினர்கள் போகக்கூடிய பேருந்துகள் அடிக்கடி பழுதடைகின்றனவா என்று அமைச்சர் அவர்களிடம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அது உறுப்பினர் அவர்களுடைய குறை அல்ல என்பது மட்டும் தெரியும்.

**திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவர் அவர்களே, நேற்றைய தினம் மட்டும் நான் நான்கு அரசுப் பேருந்துகளிலே வந்து, அவை பழுதடைந்து கடைசியாக அதில் வரமுடியாமல், தனியார் ஒருவருடைய பிளஷர் காரிலே இங்கே வந்து சேரக்கூடிய துர்ப்பாக்கியம் எனக்கு ஏற்பட்டது. நான் முதலிலே 503 என்றுள்ள பஸ்ஸில் திருச்சியில் ஏறினேன். அது தொழுதூ வந்தபோது நின்றுவிட்டது. காரணம் என்னவென்றால், சரியாக ஆயில் டாங்க் இல்லை என்றார்கள். அடுத்தபடியாக 530-லே வந்தேன். அதன் மு சக்கரத்திலே காற்று இல்லாமல் நின்றுபோய்விட்டது. அதற்குப் பிற 574-லே ஏறி விழுப்புரம் வந்தேன். அதில் இரண்டு டயரிலேயும் காற்று இறங் நின்றுவிட்டது. கடைசியாக நான்காவது பஸ்ஸில் ஏற்றிவிட்டார்கள். அ மாமண்டூர் வந்தவுடன் அதன் டிரைவருக்கு 103 டிகிரி ஜுரம் வந்துவிட்ட



1974 ஆகஸ்ட் 20

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இந்த விளக்கத்திற்குப் பிறகு இனிமேல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பஸ்ஸிலே வந்தால், டிரைவரும் கண்டக்டரும் ஏறுவதற்குத் தயங்குவார்கள் என்று கருதுகிறேன்.

**திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவர் அவர்களே, அதை நானே நேற்று சொன்னேன். இனிமேல் நான் ஏறினால், அவர்கள் ஏறுவதற்குக்கூட பயப்படுவார்கள் என்று சொன்னேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, அப்படி பஸ்கள் அடிக்கடி பழுதடைவதற்குக் காரணம், உறுப்பினர் அவர்கள் சென்றதுதான் என்று முதலமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா ?

THIRU C. V. RAJAGOPAL : Mr. Chairman, Sir, the question relates to sick buses. How can the Government run the sick buses? The question s regarding sick buses. How can the sick buses run?

MR. CHAIRMAN : When they start, they are not sick. Only mid-way they ecame like that.

### *Construction of Hostels for Harijan Students in Ramanathapuram district*

*60 Q.—THIRU GEORGE KOMAGAN (on behalf of THIRU V. THANGAPANDIAN): Will the Hon. the Minister for Harijan Welfa e be pleased to state—

(a) the r umber of hostels for Harijan students proposed to be constructed by the Government in Ramanathapuram district during 1974–7! ; and

(b) whetl er there is any proposal to construct such a hostel in Mallankinar Town Panchayat of that district?

### இராமநாதபுரம் மாவட்டத்தில் அரிசன மாணவர்களுக்கு விடுதி கட்டுதல்

**திரு. ஜார்ஜ் கோமகன் (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்) :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில், 1974–75-ஆம் ஆண்டில், எத்தனை அரிசன மாணவ விடுதிகள் கட்ட அரசு உத்தேசித்துள்ளது?

[திரு. ஜார்ஜ் கோமகன்] [1974 ஆகஸ்ட் 20

(இ) அந்த மாவட்டத்திலுள்ள மல்லாங்கினர் பேரூராட்சியில் அத்தகைய விடுதி கட்டும் செயற்குறிப்பு ஏதும் உண்டா?

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் :** (அ) ஒன்பது விடுதிகள்.

(இ) ஆம்.

**திரு. ஜார்ஜ் கோமகன் :** தலைவர் அவர்களே, துணை மானிய மதிப்பீட்டில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தாழ்த்தப்பட்டோர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் வாயிலாக அரிஜன மாணவர்களுக்கு என்று 100 விடுதிகள் கட்டப்பட இருப்பதாக அறிவித்தார்கள். சென்னை நகரத்திலே அவற்றில் எத்தனை விடுதிகள் கட்டப்பட இருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் :** தலைவர் அவர்களே, இது இராமநாதபுரம் மாவட்டத்தைப்பற்றிய கேள்வி. அந்தக் கேள்விக்குத்தான் இங்கே விடையளிக்க முடியும். சென்னை நகரத்திலே என்றார். தமிழ் நாட்டிலேயே என்று கேட்கட்டும், தனியாக, மாவட்ட வாரியாகச் சொல்கிறேன்.

### *Beautification of Vellore Fort*

@* 37 Q.—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(a) whether the Government propose to ply boat services in the moat around the Vellore Fort and to beautify the Fort Glacis;

(b) if so, the details thereof;

(c) the estimated expenditure thereof; and

(d) the dates on which the work will be commenced and completed?

### வேலூர் கோட்டையை அழகு படுத்தல்

**திரு. எல். பலராமன் :** மாண்புமிகு சமூக நல அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்டம் வேலூர் நகரத்தில் இருக்கும் கோட்டையைச் சுற்றியிருக்கும் அகழியில் படகு விடவும் கோட்டை வெளியை அழகுபடுத்தவும் அரசு திட்டமிட்டுள்ளதா?

@ 17—8—1974 வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்டது.



1974 ஆகஸ்ட் 20] [திரு. எல். பலராமன்]

(இ) ஆமெனில், அதன் விபரம் யாது?

(உ) இதற்கான மதிப்பீடு எவ்வளவு?

(எ) எப்போது வேலை துவங்கி முடிக்கும் உத்தேசம்?

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை :** (அ) ஆம்.

(இ) வேலூர் கோட்டையைச் சுற்றியுள்ள சரிவுப் பகுதியை அழகு படுத்தும் பணி,—வேலூர் நகர மேம்பாடு-அழகுபடுத்தும் குழுவால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வடாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவரே மேற்சொன்ன குழுவின் தலைவர். வேலூரில் கோட்டை அகழிப் பகுதியில் படகு குழாம் ஒன்றையும், உல்லாச மீன்பிடிப்போர் குழாம் ஒன்றையும் அமைக்க மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளார்.

(உ) இது தொடர்பாக ஆகும் செலவு, பொதுமக்களிடமிருந்து திரட்டப்பட்ட நன்கொடைத் தொகையிலிருந்து வேலூர் மேம்பாடு-அழகுபடுத்தல் குழுவால் செய்யப்படும். இதற்கு மேற்பட்டு ஆகும் செலவு மாவட்ட தல நிதியிலிருந்து செயயப்படும். அதுபற்றிய மதிப்பீடு ஆய்வில் உள்ளது.

(எ) அகழிக்கு முறையாக தண்ணீர் வழங்குவதை உறுதி செய்ய இயலும் வகையில், கோட்டை அகழிக்குச் செல்லும் வாய்க்காலில் தூர் வாரி அதை ஆழப்படுத்தும் பணியை மேற்கொள்ள, சென்னை மீனள இயக்குநர் ஒப்புக் கொண்டுள்ளார். இப்பணிக்கான மதிப்பீட்டை அனுப்புமாறு வடாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்கப்பட்டுள்ளது.

இச்செலவிற்கு அரசு ஏற்பளித்தவுடன் மேலே (எ)-ல் குறிப்பிடப்பட்ட பணி தொடங்கப்படும்.

(பிற்பகல் 4-30)

**திரு. எல். பலராமன் :** தலைவரவர்களே, அதற்காக எவ்வளவு தொகை செலவிடப்பட்டிருக்கின்றது? மேலும் அகழியை தூர் வாருவதற்காக மதிப்பீடு இடப்பட்டிருக்கின்றதா? அப்படியானால், மதிப்பீட்டின் தொகை எவ்வளவு? எப்போது அந்த வேலை துவங்கும் என்பதை அறிய விரும்புகிறேன். அதற்கான விவரங்களை அமைச்சர் அவர்கள் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை :** தலைவரவர்களே, அவைபற்றிய மதிப்பீடுகள் ஆய்வில் உள்ளன என்று பதிலில் தெரிவித்திருக்கிறேன். மதிப்பீடு செய்யும்படி பணிக்கப்பட்டிருக்கின்றது. இன்னும் அது முடியவில்லை.

**திரு. எல். பலராமன் :** தலைவரவர்களே, அந்த அகழியில் படகு விடுவது பற்றிக் கூறினார்கள். அந்தப் படகுகளை ஓட்டுவதற்கான ஆட்களை யார் நியமிப்பது? மாவட்ட ஆட்சியாளரா அல்லது அரசா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை :** தலைவரவர்களே, மாவட்ட மேம்பாட்டுக் கழக அமைப்பின் மூலம் படகுகளை இயக்குவதற்கான பொறுப்பை அவர்களே ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள்.

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவரவர்களே, என்னுடைய துணைக் கேள்வி இதையொட்டிய கேள்வியாக இல்லாவிட்டாலும், கேட்க விரும்புவது, நமது செயிண்ட். ஜார்ஜ் கோட்டையைச் சுற்றியுள்ள அகழியிலே ஆங்காங்கு நீர் தேங்கி மிகவும் அசிங்கமான நிலைமையில் இருக்கின்றது. இந்த அகழிக்கு கடலிலிருந்து நீரைக் கொண்டுவருவதற்கு வழி இருக்கின்றது என்று சொல்லுகின்றார்கள். அப்படியிருந்தால் கடல் நீரைக் கொண்டு இந்த அகழியைச் சுத்தப்படுத்த அரசு முன்வருமா, அதற்கான ஏற்பாட்டைச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, இக்கோட்டையைச் சுற்றியுள்ள புல் பூண்டுகளைச் செதுக்குவதற்கான உரிமையை மத்திய சர்க்காரிடமிருந்து நாம் பெற்றுக்கொள்ளுவதற்குப் பல மாதகாலம் பிடித்தது. இப்போது மத்திய அரசின் துணை அமைச்சர் அவர்களை அழைத்து வந்து இந்த அகழியின் மோசமான நிலைமையை எடுத்துக் காட்டி அதைச் சீர்படுத்துவதற்கான அனுமதி வழங்கிட வேண்டும் என்று கேட்டு நெடுநாட்கள் ஆயின. இன்னும் எந்தவிதமான ஒப்புதலும் வரவில்லை.

**திரு. எல். பலராமன் :** தலைவரவர்களே, வேலூர் கோட்டை மத்திய அரசின் ஆர்க்யலாஜிகல் டிபார்ட்மெண்டிடம் இருக்கின்றது. அப்படி இருக்கும்போது அதைச் சீர்படுத்த, அதைச் சுற்றியுள்ள அகழியைச் சுத்தப்படுத்த மத்திய அரசிடம் அனுமதி கேட்டு, அவர்கள் அளித்துள்ளனரா? மேலும், அக் கோட்டையிலுள்ள கோவில்களையும் அலுவலகங்களைக் கொண்ட பழங்காலக் கட்டிடங்களையும் முழுமையாகச் சீரமைத்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, கேள்வியில் இருப்பது, கோட்டைக்கு வெளியிலுள்ள அகழியில் படகுகளை விடுவது பற்றித் தான். கோட்டைக்கு வெளியில் நமக்கு உரிமை இருக்கின்றது. ஆனால், கோட்டையும் அதைச் சார்ந்த மற்ற இடங்களும் மத்திய அரசுக்கு உரியவை. இதுதான் வேடிக்கை.



### *Nutrition Programme*

@ *38. Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(a) the expenditure incurred during 1972–73 under Applied Nutrition Programme;

(b) whether there is any contribution of the Central Government and the World Health Organization in this Scheme; and

(c) if so, the amount of contribution?

### சத்துணவுத் திட்டம்

**திரு. எம். சங்கரலிங்கம் :** மாண்புமிகு சமூக நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சத்துணவுத் திட்டத்தின் கீழ், 1972-73-ஆம் ஆண்டில் செலவு செய்த தொகை எவ்வளவு?

(இ) இதில் மத்திய அரசு மற்றும் உலக சுகாதார அமைப்பு, இவைகளின் பங்கு ஏதேனும் உண்டா?

(உ) ஆமெனில், எவ்வளவு?

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை :** (அ) சிறப்புச் சத்துணவுத் திட்டத்திற்காக 1972–73 நிதியாண்டில் செலவிடப்பட்ட தொகை ரூபாய் 1,03,77,923.80.

(இ) & (உ) சிறப்புச் சத்துணவுத் திட்டம் மத்திய அரசின் ஒரு முழு மானிய திட்டம். இத்திட்டச் செலவு முழுவதையும் மத்திய அரசுதான் ஏற்கிறது. உலக சுகாதார அமைப்பு இத்திட்டத்தில் பங்கேற்கவில்லை.

**திரு. எம். சங்கரலிங்கம் :** தலைவரவர்களே, 1972-73-ஆம் நிதி ஆண்டிலே இந்தச் சத்துணவுத் திட்டத்திற்காகச் செலவிடப்பட்ட தொகையை முழு மானியமாக மத்திய அரசு மாநில அரசுக்குக் கொடுத்திருக்கின்றது என்று சொல்லப்படுகிறது. இது, ஆண்டு முழுவதும் தொடர்ந்து கொடுக்கப்பட்டு, தொடர்ந்து செயல்பட்டு வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

---

@ 17—8—1974 வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** தலைவரவர்களே, ஒவ்வொரு நிதி ஆண்டிலும் மாநில அரசு இந்தத் திட்டத்தின் கீழ் பணத்தைச் செலவிட்டு, பின்னர் அவ்வப்பொழுது ஆகும் செலவினங்களை மத்திய அரசுக்கு எடுத்துக்கூறி அத்தொகையைப் பெற்று வருகின்றது.

**திரு. செ. முத்துசாமி:** தலைவரவர்களே, இந்தச் சத்துணவுத் திட்டத்தின் கீழ் எந்தெந்த வகையான உணவு யார் யாருக்கு வழங்கப்பட்டு வருகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** தலைவரவர்களே, மத்திய அரசுத் திட்டமாக இந்தச் சிறப்புச் சத்துணவுத் திட்டம் சென்னை மாநகரில் நகர்ப்புறக் குடிசைப் பகுதிகளில் 1970 அக்டோபர் மாதத்திலிருந்து கொண்டு வரப்பட்டது. இந்தத் திட்டம் பின்னர், சேலம் மாவட்டத்திலே மலைப்பகுதிகளான ஏற்காடு, கொல்லி மலைப் பகுதிகளுக்கும் 1971 பிப்ரவரியில் நீட்டிக்கப்பட்டது. பின்னர் இந்தத் திட்டம் ஒரு லட்சம் மக்கள் தொகை அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் தொகை உள்ள பதினெட்டு முக்கிய மாநகராட்சி நகரங்களுக்குப் படிப்படியாக விஸ்தரிக்கப்பட்டது.

இந்தத் திட்டம் இந்த மாநிலத்திலே 1970-ல் கொண்டு வரப்பட்டபோது, மூன்று வயதுக் குழந்தைகள் மட்டுமே இத்திட்டத்தின் கீழ் பயனடைந்தனர். இந்தத் திட்டத்தில் பின்னர் மாற்றம் செய்ததற்குக் காரணம், நகர்ப்புற குடிசைப் பகுதிகளிலும் மலைப் பகுதிகளிலும் வாழ்கிற மூன்று வயது முதல் ஆறு வயது குழந்தைகளும், கருவுற்ற தாய்மார்களும், குழந்தைகளுக்குப் பாலூட்டும் தாய்மார்களும் இதனால் பயனுறவேண்டும் என்று மாநில அரசு அனுமதி வழங்கியிருக்கின்றது. இத்திட்டம் இப்போது இராமநாதபுரம் மாவட்டம், தருமபுரி மாவட்டம் ஆகிய மாவட்டங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. இவ்விரு மாவட்டங்களிலும் ஏறத்தாழ பத்தாயிரம் பேர் இத்திட்டத்தினால் பயன்பெற்று வருகின்றார்கள்.

இந்தத் திட்டத்தின்கீழ் 247,573 குழந்தைகளும், 27,554 தாய்மார்களும் பயனடைந்து வருகின்றார்கள்.

**திரு. ஏ. பாலசுப்பிரமணியம்:** தலைவரவர்களே, இந்தச் சத்துணவுத் திட்டத்தின் கீழ் என்னென்ன பொருள்கள் வழங்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** தலைவரவர்களே, நகர்ப்புற குடிசைவாழ் தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் மாடர்ன் பேக்கரீஸ் நிறுவனத்தாரால் தயாரிக்கப்படும் வைட்டமின் கொண்ட உணவு 75 கிராம்,





அதாவது ரொட்டி கொடுக்கப்படுகிறது. இது சென்னை மற்றும் பெங்களூர் மாடர்ன் பேக்கரீஸ் பிரிவிலிருந்து வாங்கப்பட்டு பயன் பெறுவோர் அனைவருக்கும் கொடுக்கப்படுகிறது. அத்துடன் சென்னை நகரில் 0-3 வயது குழந்தைகளுக்கு 100 மில்லி லிட்டரும் 1 முதல் 3 வயது குழந்தைகளுக்கு 200 மில்லி லிட்டர் பாலும் வழங்கப்படுகிறது.

**திரு. செ. முத்துசாமி:** தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் கீழ் வினியோகிக்கப்படும் பொருள்கள் எந்த அமைப்பின் கீழ் வழங்கப்படுகின்றன? இதை வினியோகம் செய்வதற்கு என்று தனியாக பணியாளர்கள் இருக்கின்றார்களா? அவர்களுக்குத் தனியாகச் சிறப்பூதியம், ரெம்யூனெரேஷன் கொடுக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** ரூபாய் 20 மதிப்பூதியத்தில் அமைப்பாளர் ஒருவரும், ரூ. 10 மதிப்பூதியத்தில் உதவியாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டு, அவர்கள் மூலம் இந்தத் திட்டத்தின் கீழ் சத்துணவுகள் வழங்கப்படுகின்றன

MR. CHAIRMAN : Questions are over.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்.

### (1) ஆளுநரிடமிருந்து செய்தி.

MR. CHAIRMAN : I have received a message from the Governor of Tamil Nadu recommending to the Legislative Council the consideration of the Tamil Nadu Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1974, as passed by the Legislative Assembly.

### (2) பேரவையிலிருந்து செய்தி.

MR. CHAIRMAN : I have also received messages from the Hon. Speaker, Legislative Assembly transmitting copies of the following Bills, as passed by the Assembly, and signed by him for the concurrence of the Council :—

1. The Tamil Nadu Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1974 (L.A. Bill No. 27 of 1974).

2. The Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalites (Amendment and Extension of term of Office) Third Amendment Bill, 1974 (L.A. Bill No. 28 of 1974).

3. The Madurai City Municipal Corporation (Amendmnt and Extension of Term of Office) Second Amendment Bill, 1974 (L.A. Bill No. 29 of 1974).

4. The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Fifth Amendment) Bill, 1974 (L.A. Bill No. 26 of 1974).

### 3. கவன ஈர்ப்பு.

### தஞ்சாவூர் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தி-விற்பனைக் கூட்டமைப்பு, பாலை முறை கேடாக வழங்கியது, ஏனைய முறைகேடுகள் குறித்து.

THIRU G. SWAMINATHAN : Mr. Chairman, Sir, I wish to call the attention of the Hon. the Minister for Religious Endowments to a matter of urgent public importance, namely, the improper distribution of milk and other irregularities by the Thanjavur District Co-operative Milk Production and Marketing Federation Limited, Thanjavur, and consequent distress caused to the consuming public of Thanjavur Town.

(பிற்பகல் 4-40)

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தி-விற்பனைக் கூட்டமைப்பு, தஞ்சாவூர் மாவட்டத்தில் கிராமப்புறங்களில் பாலைச் சேகரிக்கவும், தஞ்சாவூர் நகரில் பாலை வழங்கவும் பொறுப்பு வகிக்கிற மாவட்ட அளவிலான நிறுவனமாகும். பாஸ்டர் முறையில் பாலைப் பக்குவப்படுத்தும் நிலையம் ஒன்றையும், பால் வற்றிய பசுக்களைப் பேணுவதற்கான மீட்புப் பண்ணை ஒன்றையும் கால்நடை தீவனப் பிரிவு ஒன்றையும் நிறுவுவதற்காக ரூ. 20.12 லட்சம் நிதி உதவி அந்த நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட்டது. நடைமுதல் மூலதனம் பற்றாக்குறை காரணமாகவும் பிற இடர்பாடுகள் காரணமாகவும் மேற்குறிப்பிட்ட திட்டங்களைப் பயனுக்குக் கொண்டுவர இயலவில்லை. பல்வேறு சங்கங்களிடமிருந்து பாலைச் சரிவர சேகரிக்கவும், அதனைச் சரிவர விற்பனை செய்யவும் இயலவில்லை. இந்தக் கூட்டமைப்பின் நிர்வாகம் அரசுச் சார்பற்ற உறுப்பினர்கள் அடங்கிய நியமனம் செய்யப்பட்ட குழுவிடம் ஒப்படைக்கப் பட்டது. அப்போது கூட கூட்டமைப்பின் செயல்முறையில் முன்னேற்றம் ஏதும் காணப்படவில்லை. கூட்டமைப்பு செயல்படுவது குறித்து நுணுக்கமாக



ஆய்வு செய்யும் பொருட்டு அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்றை பால் உற்பத்தி-பாற்பண்ணை வளர்ச்சித் துறை ஆணையாளர் நியமித்தார். கூட்டமைப்பின் பல்வேறு நடவடிக்கைகளை சீரமைப்பதற்கான அறிக்கை ஒன்றை குழு அளித்துள்ளது. அதன் பரிவுரைகளுக்குச் செயல்வடிவம் கொடுப்பதற்காக, கூட்டமைப்பின் நிர்வாகக் குழுவில் மாவட்ட ஆட்சித் தலைவரும் ஒரு சில அதிகாரிகளும் அரசுச் சார்பற்றவர்களும் அடங்கும் வகையில், அக்குழு மாற்றியமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் கூட்டமைப்பின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். புதிய நிர்வாகக் குழு 1—12—1973 அன்று நிர்வாகத்தை மேற்கொண்டது.

நிர்வாகத்தை மேம்படுத்தி பால் உற்பத்தியைப் பெருக்க புதிய நிர்வாகம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. கூட்டமைப்பின் உடனடித் தேவைகளை நிறைவு செய்வதற்காக இக்கூட்டமைப்பிற்கு ரூ. 2 லட்சம் நடைமுதல் மூலதனக் கடனை 1974 மார்ச்சில் அரசு அனுமதித்தது. பால் சேகரிப்பதற்கான புதிய நிலையங்கள் தொடங்கப்பட்டு, ஆதாயம் தராத பால் சேகரிப்பு நிலையங்கள் மூடப்பட்டன. இப்பகுதியில் 30 புதிய சங்கங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இருபத்தெட்டு நிலையங்களைச் சங்கங்களாக மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கூட்டமைப்பு இதற்கு முன் 3,119 லிட்டர் பாலை உற்பத்தி செய்தது. இப்போது அதன் உற்பத்தி அளவு 6,241 லிட்டராகும். பணியாளர் குறித்த செலவு திங்கள் ஒன்றுக்கு ரூ. 18,000 என்பதிலிருந்து ரூ. 11,000 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

பால் அதிகமாகக் கிடைக்கும் டிசம்பர்-மார்ச் கால அளவுடன் ஒப்பிடுகையில் பால் குறைவாகக் கிடைக்கும் ஜூலை-செப்டம்பர் மாதங்களில் சாதாரணமாக பாதி அளவிற்குக் கூட பால் உற்பத்தி ஆவதில்லை. தமிழ் நாடு முழுவதும் பால் உற்பத்தி தொடர்பான பொதுவான நிலை இதுதான். தஞ்சாவூர் கூட்டமைப்பு பால் உற்பத்தியைப் பெருக்க தீவிர முயற்சிகளை மேற்கொண்டபோதிலும் இம்மாவட்டத்தில் வறட்சி நிலைமைகள் நிலவியதாலும், இந்த ஆண்டு தென்மேற்குப் பருவ மழை பொய்த்ததாலும் பால் உற்பத்தி பொதுவாகக் குறைந்துவிட்டது. இன்றைய நிலவரப்படி கூட்டமைப்பின் பால் உற்பத்தி அளவு நாளொன்றுக்கு 3,800 லிட்டராகும்.

மிகக் குறைவான பால் உற்பத்தி காரணமாக, பால் உற்பத்தி குன்றிய இப்பருவத்தில் நுகர்வோருக்கு முன்னர் வழங்கிய அதே அளவில் பால் வழங்கி வர கூட்டமைப்பால் இயலவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் 6—8—1974

அன்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூட்டம் ஒன்றைக் கூட்டி, மன்னார்குடி பால் வழங்கு கூட்டுறவுச் சங்கத்திடமிருந்து நாளொன்றுக்கு சுமார் 1,000 லிட்டர் பாலைப் பெறுவதன் மூலம் தஞ்சாவூரிலுள்ள நுகர்வோருக்கு பால் வழங்குவதற்கான உடனடி ஏற்பாடுகளைச் செய்தார். இப்போது நிலைமை சீரடைந்து, பொது மக்களுக்கும் மருத்துவமனைகளுக்கும் போதிய பால் வழங்கப்படுகிறது. பால் பங்கீட்டு அமைப்பு சீரமைக்கப்பட்டு புகார் எதுவும் இல்லாத வகையில் பால் வழங்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவு பால் உற்பத்தி நிலையத்தில் ஏற்பட்டுள்ள ஒழுங்கீனங்கள்பற்றியும், பொதுவாக நீண்ட நாளைய திட்டத்தைப்பற்றியும் அமைச்சரவர்கள் சொன்னார்கள். இதைத் தனியாரிடமிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் எடுத்து நடத்திய போது நல்ல முறையில் நடுவில் ஒரு ஆண்டு நடந்துகொண்டிருந்தது. இந்த ஒழுங்கீனங்கள் நிவர்த்தி செய்யப்பட்டன. விநியோக முறை சரியாக நடந்தது. ஆனால் கடந்த 2, 3 மாதங்களாக மறுபடி நிலைமை கட்டுக் கடங்காமல் மோசமாகியுள்ளது என்று சொல்லிக்கொள்கிறேன். அமைச்சரவர்கள் நன்றாக நடப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் இந்த இரண்டு மாதங்களில் நிலைமை மறுபடியும் மோசமடைந்திருக்கிறது. ஆகவே மாவட்ட ஆட்சித் தலைவர் மீண்டும் கவனம் செலுத்தி, இருக்கக்கூடிய பாலை ஓரளவு நல்ல முறையில் விநியோகிக்கக் கூடியவாறு, அரசு ஆவன செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டதற்குப் பிறகு நாள் ஒன்றுக்கு 6,241 லிட்டர் பால் விநியோகம் செய்தார்கள். ஆனால் இந்த ஜூன், ஜூலை, செப்டம்பர் மாதங்கள் லீன் சீசன், பால் கிடைக்கிற அளவு குறைந்து விடுகிறது. இந்தக் காரணத்தினால்தான் தஞ்சாவூர் நகரத்தில் வழங்கக் கூடிய பால் அளவு குறைந்து மன்னார்குடி கூட்டுறவு சங்கத்திலிருந்து நாள் ஒன்றுக்கு ஆயிரம் லிட்டர் பால் வாங்கி விநியோகித்துக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் யோசனையை கவனத்தில் கொண்டு மேலும் குறையில்லாமல் நிவர்த்தி செய்யலாம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, இருக்கக் கூடிய பாலுக்கு ஒரு கார்டு கொடுக்கிறார்கள். எங்கள் வீட்டில் வாங்கிக்கொண்டிருக்கிறோம். இரண்டு லிட்டருக்கு என்று கார்டு கொடுத்தால், ஒரு லிட்டர் அரை லிட்டர்



கூட கொடுக்கமாட்டார்கள். அப்படியே சென்று விடுகிறார்கள். இதைத் தற்போது எங்கள் மாவட்டத்திற்குப் புதிதாக மாற்றலாகி வந்திருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவரவர்களிடத்தில் நானே நேரில் குறிப்பிட்டேன். இப்படி பல இடங்களில் நடந்து கழகங்கள் சம்பந்தப்பட்டவர்களும் தெரிவித்தார்கள். தகுந்த நடவடிக்கை எடுக்கிறேன், எடுக்கிறேன் என்று மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இதன் அடிப்படையில் அரசிலிருந்து கடிதம் செல்லுமானால், இருக்கக் கூடிய அளவிலே விருத்தி யடையக்கூடிய நிலைமை இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, சமீபத்தில் இன்னும் இரண்டொரு வார காலத்தில் தஞ்சை நகருக்குச் செல்வதாக இருக்கிறேன். அட்வைசரி போர்டு கூட்டத்தைக் கூட்டி மாவட்ட ஆட்சித் தலைவரவர்களை அழைத்து மாவட்ட அளவிலே பால் உற்பத்தியை எப்படிப் பெருக்குவது என்று ஆலோசித்து தற்போது விநியோகத்தில் இருக்கிற குறைகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை உறுதியாக எடுக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**4. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1974-75 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை, 1973-74 ஆம் ஆண்டு துணை நிதி நிலை அறிக்கை ஆகியவற்றின் மீது விவாதம்.**

**திரு ஜி. சுவாமிநாதன் :** இன்றையதினம் கச்சத் தீவு பற்றிய தீர்மானம் வருவதாகச் சொல்லியிருந்தார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நாளைக்கு வருகிறது.

THIRU G. SWAMINATHAN : Mr. Chairman, Sir, I am thankful to you for having given me an opportunity to speak on the performance of the State Electricity Board. From the statement given by the Hon. Minister, we are able to see that the Electricity Board has been incurring a heavy loss during the last many years. It has been stated by the Hon. Minister that the Electricity Board has lost to the tune of Rs. 10 crores during the year 1973-74 and he expects the Board to lose nearly Rs. 18.6 crores during the period 1974-75. He has not mentioned how he is going to make up the deficit or the loss. I understand that the Reserve Bank of India has given strict instructions that amounts should be given to

the State Electricity Board after careful scrutiny. We have also been informed that the Life Insurance Corporation and the Commercial Banks which have been financing the Board are also going to restrict the amount to be given to the Board. We are also informed that because of the excise duties imposed by the Government of India in their Supplementary Budget, prices are going up in regard to various commodities. The Electricity Board should also take into account the escalation in prices of the commodities because of the excise duties going up. We understand that the cost of the materials used by the Electricity Board has gone up by about 30 to 40 per cent because of the recent Budget of the Government of India.

Sir, under section 69 (1) of the Electricity (Supply) Act, 1948 the Electricity Board should give an annual Statement of Account Profit and Loss Account and also Balance Sheet. In the statement that has been given by the Hon. Minister, we are finding it extremely difficult to locate the points we require and we are also unable to find out the cumulative loss sustained by the Board over this period. I wish to know whether the Government will take appropriate action to present the Balance Sheet of the State Electricity Board. If that is given, I am sure the Members will be able to scrutinise the statement in a better way and they will be able to offer their views in this August Council.

*(பிற்பகல் 4.50)*

Regarding the Rural Electrification programme, the Hon. Minister has informed us that during the year 1973–74 and the year 1974–75, many villages have been electrified and also that energy will be given to the agricultural pumpsets. I only wish to know how the Hon. Minister is expecting to achieve such a Rural Electrification programme and expand electrification in villages when we are not devoting much attention to power generation. What I mean is that we are thinking more of supply of electricity than of generation in our State. We will not be able to go on giving the benefit of electricity to the people even though we want to extend electricity to the villages, Harijan colonies





unless it is commensurate with the generation of power. There seems to be a wide gap between generation and supply and we have to take care that at least the people who are at present getting supply of current will not be denied their requirements because of the additional supply we are going to give to villages. Already we are experiencing constant cut in current supply and it has been mentioned by my esteemed friend Thiru Narayanaswamy that many industries and agricultural pumpsets already existing could not get sufficient energy. If we expand it further, we may have to have more power cuts in the years to come because the generation of energy cannot be made equal to the supply of energy even for years to come and even after the Fifth Five-Year Plan period.

*மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:* தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு 60 ஆயிரம் பம்ப்செட்டுகளுக்குக் கொடுத்தோம். இப்போது கிட்டத்தட்ட பாதியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஆண்டுக்கு ஏறத்தாழ 15 சதவிகிதம் அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்ற கணக்கில் தான் பற்றாக் குறை என்று குறிப்பிட்டிருக்கிறேன். 925 மெகாவாட் மின்சாரம் இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் உற்பத்திக்கு வருகிறது. அடுத்த ஆண்டு 110 மெகாவாட் எண்ணூரில் உற்பத்தியாகவிருக்கிறது. 15 சதவிகித உற்பத்தியைப் பார்க்கும்போது எவ்வளவு பற்றாக்குறை என்று கேட்டிருக்கிறார்கள். பற்றாக்குறையைப் போக்குவதற்கு சில திட்டங்களைச் சொல்லியிருக்கிறோம்.

THIRU G. SWAMINATHAN: Sir, my feeling is that unless we give importance to the question of additional generation of power, we will have to face troubles because of loan shedding, etc., and all these difficulties may come quite often and we will not be able to given uniform electricity to the people. The Government should give their thought to this matter also. I congratulate the Government on having taken effective steps regarding the second mine cut in Neyveli and on having effectively represented matters to the Central Government. Of course, the Central Government have not consented till now to the second mine cut because of the heavy loss that they will be consequently incurring. We are informed that our Industries Minister, the Hon. Thiru S. Madhavan, when he went to Delhi recently, had a talk with the Union Finance Minister on this matter. We are also informed that our

Government are even prepared to bear the losses that are incurred by the Neyveli Lignite Corporation because of the second mine cut. The Neyveli Corporation is incurring a very heavy loss and, therefore, I do not think it will be possible for the Tamil Nadu Government to bear such a heavy loss, and on this, I want an elucidation from the Hon. Minister. The main difficulty and drawback about Neyveli is the labour problem. When the labour problem continues there, there will be heavy losses and I do not think it will be possible for us to say that all those losses will be borne by the Tamil Nadu Government.

Regarding the expansion of Kalpakkam Atomic Station also, I congratulate the Government on the effective steps taken and I hope the Government of India will see to it that the expansion of Kalpakkam Station and also the second Atomic Station in Tirunelveli district are granted early.

Regarding Kadamparai Scheme, it was mentioned during the last year that the pumped storage station was 400 MW capacity I think this has been already commissioned some amount has been spent on this and some people, about 400 or 500 people, have also been recruited for this project. Now I hear that the Government are having a second thought over the matter and that they have approached a private concern for reviewing the matter. I do not know why after taking a decision in the matter of having a pumped storage station—which is a good thing—the Government should review the position.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, காடம்பாறைத் திட்டம் இன்றுள்ள 400 மெகாவாட்டோடு, இரவு நேரத்தில் உபரியாக இருக்கின்ற மின்சாரத்தைப் பயன்படுத்தி தண்ணீரை மேலேயேற்றி பகல் நேரத்தில் வேண்டிய நேரத்தில் பயன்படுத்திக்கொள்ள போடப்பட்டிருக்கிறது. இப்போது இருக்கின்ற நிலைமையைப் பொறுத்து, இந்தத் திட்டம் வருகின்ற காலத்தில் இரவு நேரத்தில் எனர்ஜி இருக்குமா என்ற ஐயப்பாடு எழுப்பப்பட்டது. அதையெல்லாம் கணக்கில் கொண்டுதான் கிட்டத்தட்ட 40, 45 கோடி ரூபாய்க்குப் போடப்பட்டதை, 70, 75 கோடி ரூபாய் வரை போட்டிருக்கிறது. 'பீக் அவர்' நேரத்தில், கட்டி முடித்த பிறகு, பயனடைகின்ற முறையில் தெளிவாக ஆராய்ந்த பிறகு நமக்கு எவ்வளவு சர்ப்ளஸ்



இரவு நேரத்தில் இருக்கிறது என்று கணக்குப் பார்த்து அதற்குத் தகுந்தாற் போல் உருவாக்கப்பட்டிருக்கிறதே தவிர, திட்டத்தை நிறுத்துவது என்பதல்ல. ஒரு கோடி ரூபாய் வரை அட்வான்ஸ் செய்யப்பட்டு, பொருட்களை இறக்குமதி செய்வதற்கு உத்தரவாதம் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை மறுபரிசிலனை செய்ய வேண்டுமென்ற கருத்து எழுந்தது. அந்தக் கருத்து தான் பரிசிலனை செய்யப்பட்டது. இந்தத் திட்டத்தை முழுமையாக விட்டுவிடுவதாக இல்லை.

THIRU G. SWAMINATHAN : Sir, as it has been already mentioned by the Hon. Minister, I think we have spent about Rs. 1.25 crores and about 500 persons have been employed in the project. The Government should have taken a decision after considering all these matters even last year. Once they have decided upon a particular thing, why should they try to review that ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, இது சாதாரண செலவில் அல்ல, 70 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும் திட்டம். டாட்டா கன்சல்டண்டோடு, நமது வாரியத்திலுள்ள இஞ்சினியர்களும் பரிசீலித்து பின்னாலே, நமக்கு டெக்னிக்குகள் அதிகமாகத் தெரியாவிட்டாலும், நாம் வழங்குகின்ற அளவுக்கு இரவு நேரத்தில் உபரியாக இருக்கிறது என்று சொன்ன பிறகுதான், கட்டாயமாக எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

THIRU G. SWAMINATHAN : Sir, my only point is that there should be proper co-ordination between the people who are executing the projects and the people who are managing the Board. Otherwise, such difficulties might arise. After we execute a plan or after we start executing a plan, it is not proper to stop it because the delay of every year will make the cost of the project increase. That is why I am bringing this matter to the notice of the Hon. Minister.

I have recently heard about a Russian scheme which seems to me to be very novel. I want to suggest to the Hon. Minister whether it would be possible for him to take up such a scheme in hand, namely, the underground tunnel scheme. It is said that such a scheme is there in many other countries like Switzerland.

Norway and Sweden. They are having underground tunnels and from there they are producing energy. Whether that system of power generation could be adopted in our State can also be thought of. Recently, we heard that there was a meeting with the Hon. Minister from the Centre.

THIRU S. T. ADITYAN : The hon. Member may please give a little more detail about the underground tunnel scheme. If it goes beyond a particular depth, we may get the internal heat of the earth and it is true. I do not know whether any programme of that kind has so far been successful. Will the hon. Member please give a little more information ?

THIRU S. NARAYANASWAMY : Even in our country, in Projects like Idikki Project, there are tunnels into the mountains. The power station is concealed within the mountains there.

THIRU S. T. ADITYAN : Sir, it is a different thing.

THIRU G. SWAMINATHAN : Here it is generated by hydel power. We are having surface water to go into the tunnel. There they are having underground tunnels from which energy is produced by means of a different process.

THIRU S. T. ADITYAN : All that water will go waste.

THIRU G. SWAMINATHAN : We must consider whether it would be possible to adopt that scheme without wastage of water. This scheme is adopted in many countries like Norway, Sweden, Switzerland and also Russia. I am only saying this as a suggestion for the Government to consider. I do not say that it is a fool-proof system. It should be considered by the Government whether such a scheme would be feasible.

Recently we heard that there was a meeting between the Hon. Minister of the Central Government and the Hon. Minister of Sri Lanka Government regarding the common grid between Sri Lanka and Tamil Nadu and it is said that it will be a good proposal. Such common grids between nations are also popular in other countries. Even in our own country, we have a common grid between India and Nepal. There is a common grid between Britain and France. The lean period for Sri Lanka is July-October and our lean period seems to be between April and June.





So, if we are able to get on with the proposal to have a common gird, we will able to get current from Ceylon. We are informed that this is also not difficult since we can lay cables through steamer and the distance will be only 12 to 20 miles. This matter may be considered by the Government and if the proposal is feasible, they may take it up with the Government of India to push through the scheme.

(பிற்பகல் 5-00)

Regarding the Power Generation Corporation, we have been hearing quite a lot about it and the Hon. Minister also has given in his statement that such a Corporation is going to be formed by our Government. We would like to have certain clarifications from the Hon. Minister regarding the Power Generation Corporation. The Electricity Board which is functioning at present, under an Act is not only intended for generation of power, but it is also in charge of supply and distribution of power. If we are going to have a separate Power Generation Corporation, it is not known what will be the adjustment that will come to exist between the Power Generation Corporation and the State Electricity Board. We do not also know what would happen to the Power Generation units that we are already having. Are we going to purchase power from the Power Generation Corporation and entrust the Electricity Board only with supply and distribution of electricity? It is not known whether we are going to purchase elecricity from the Power Generation Corporation and then distribute it. These points have not been elucidated by the Hon. Minister and he may kindly elucidate these points to the House for information.

We have taken over some of the electricity undertakings in our State and I think there is a lot of confusion regarding the management of the electricity undertakings. I am informed that the Superintending Engineer of a particular electricity undertaking is in charge of the electricity undertaking in a particular place, and there is another Superintending Engineer who is in charge of acquisition. The State Electricity Board is having control over the Superintending Engineer regarding purchases for certain electricity undertakings. The purchases are made directly for

some electricity undertakings and for certain other undertakings the purchases are made from the Stores at Madras and they are being sent. Consequently, stores are not being maintained for each place. I want to know whether we are going to have these undertakings as commercial units or we are going to tack them on with the State Electricity Board. If we are going to tack them on to the State Electricity Board, we can do it as early as possible. If we are going to have them as separate electricity undertakings, then we should run them as separate undertakings on profit or whatever it is. The purchase method has to be definite and the method of purchase and supply of electricity to consumers also has to be definite. I am told that large amounts that have been collected by the State Electricity undertakings are kept in current account without getting any interest during the last few months. I would only suggest that the Superintending Engineer may be under the direct control of a Chief Engineer in the State Electricity Board so that there may be co-ordination regarding all these things. I am also told of a particular electricity undertaking where near about 750 persons are now waiting to get electricity and about 200 persons have already paid for connections.

Regarding the working of the Electricity Board, I am sorry to mention that there is a lot of indiscipline there. There has also been inordinate delay in billing during the last 6 or 7 months. We have also read a lot in the newspapers that bills have not been received by the public for over 6 or 7 months. I am told that in certain areas in Madras City, bills have not been received from April onwards. When the State Electricity Board is in such a difficult position as not to be able to pay even interest to the proper persons, I do not know why a large number of bills are pending for want of demand, while people are ready to pay. I am informed that the delay in billing is due to the difficulty between the Unions—one Union fighting with the other and one Union going to the Court and getting a stay order and all that. It seems that a particular clerk in the billing section is being given 700 bills for him to prepare. It seems an arrangement was made by the State Electricity Board during the year 1969 and according to that arrangement, they have to prepare only 40 bills per day and they are doing it through a ready-reckoner. When even these 40



bills are not being prepared, I think the system has to be reviewed by the State Electricity Board. I am informed that a particular individual will be able to make out not less than 150 bills in a day. It seems that within two or three days the persons who are in charge of this work finish it. It seems that they spend one or two hours a day on this work and that they are not doing any work at all during the remaining period. I wish that the State Electricity Board looks into this matter also. I may also inform the House that the staff have not received their Travelling Allowance and their increments, etc., for over a period of six months and there has been a lot of gherao' by the lower grade staff of the engineers and others. I have received a represenation from some engineer starting that they are being subjected to harassment by the departmental staff and that they have sent an appeal to the Electricity Board in this regard. In so many Systems engineers are being 'gheraoed', abusive language is used against them, sometimes they are assaulted and no action is taken against such miscreants. In such cases, the engineers go to the Police wherever necessary and also report to the Departmental Officers who are their next superiors, but no action is taken. I may also bring to the notice of the Hon. Minister, putting up of notices in the premises of the Electricity Board. On notice boards where only official notices have to be put up, the Unions are putting up their notices. In a letter the Board itself has stated that such practices are not to be allowed, but yet I find that the practice is continuing. In letter No. 63579/73-74, those people have been informed by the Electricity Board thus—"I am to inform you that instances have been brought to the notice of the Board where the display of notices in the premises of the Board's buildings has become the root cause of agitation and mass demonstrations by Union employees". Regarding indiscipline, there was another letter from the Secretary of the Board No. 28615, dated 13th July 1973 which says "It is regrettable to note that in spite of the appeal, the response from the Unions is far from encouraging. Instances have come to notice of workmen engaging themselves in activities like hunger-strike, relay-fast, mass casual leave, mass representation, ghareoing of officers, pen-down strikes and the like". The letter goes on to say that "no-work no-wages" will be implemented. I understand the

Board has been so lenient that 'no wages' have not been given for people who have done no work. We have to be strict with our employees and have to give all encouragement for proper work. If they do not do proper work and if give trouble to the officers, we should see that we take strict disciplinary measures against such people. If we are weak-kneed and if we do not want to take disciplinary action against them for political or administrative reasons, we may not be doing things in the interest of our country.

Regarding line losses, the hon. Member Thiru Ganapathi has referred to it in detail and I hope that the State Electricity Board will see that the line losses are reduced as much as possible.

The other point to which I wish to refer is the issue between technocrats and I.A.S. Officers in managing the Board. In many States, it has been agreed that the technocrats should be allowed to manage State Electricity Boards. In some other States, especially in Uttar Pradesh, a technical Engineer has been appointed Chairman of the Electricity Board. Personally, I feel that a technical person, as Chairman of the Board, will be able to do much better than I.A.S. Officers. In our State, we have a part-time Chairman who has got other duties also. For the State Electricity Board which is in charge of projects involving crores of rupees, we should have a full-time technical Chairman. When there was a technical Chairman in our State, our State Electricity Board was functioning well. In many other States in the country they have agreed to the appointment of technical personnel to manage the State Electricity Boards. I would, therefore, recommend to the Government and the Hon. Minister that thought may be given to this proposal, and that, if feasible, it may be implemented. Thank you.

*** திரு. எஸ். சி. செங்கோட்டுவேலப்ப கவுண்டர் :** மாண்புமிகு தலைவரவர்களே, 1974-75 ஆம் ஆண்டு மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையிலே, நம்முடைய மதிப்பிற்குரிய அமைச்சரவர்கள் ஒருசில புள்ளி விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அவர் கொடுத்துள்ள அறிக்கையிலே, "நாடு விடுதலையடைந்த பிறகு, அதுவும் 'குறிப்பாக கடந்த ஏழெட்டு ஆண்டுகளில் வேகமான மின் வளர்ச்சி தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ளது" என்று குறிப்பிட்டுள்ளார்கள்.



(பிற்பகல் 5-10)

7, 8 ஆண்டுகளில் தமிழ் நாட்டிலே எந்த அளவுக்கு மின் உற்பத்தி அதிகமாகி இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. ஏனென்றால் 4, 5 ஆண்டுகளாகப் பற்றாக்குறை நிலைமைதான் மின்சாரத்தைப் பொறுத்த அளவிலே இருந்து கொண்டு வருகின்றது. மின்சாரத்தைப் பொறுத்த அளவிலே இங்கே பல பேர்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கின்றார்கள். நானும் இரண்டொரு கருத்துக்களை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நேற்றையதினம் இங்கே மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. கணபதி அவர்கள், மின்சார வாரியத்திற்குக் கொடுக்கப்பட வேண்டிய கட்டணம் ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் ஆகியவற்றிலிருந்து அதிகமாக வசூலிக்கப்படாமல் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகளைப் பொறுத்த வரையிலே ஒன்றை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். கிராமப் புறங்களிலே அவர்களுடைய தேவைகளை கவனித்துக் கொள்வது ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்தான். இந்த ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகளில் உள்ள பிரச்சினைகளில் ஒன்று மின்சார தெரு விளக்குகள். பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் மற்றொன்று. இவைகளை ஊராட்சிகள் கவனித்துக்கொள்ளுகின்றன.

சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், கோவை மாவட்டத்திலே எத்தனை தெரு விளக்குகள் பொருத்தப் படாமல் இருக்கின்றன, எத்தனை பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படாமல் இருக்கிறது என்பதற்காக ஒரு கூட்டத்தைக் கூட்டினார்கள். அவர்கள் ஊராட்சி மன்றங்களிலிருந்து சரியான தகவல்களைப் பெற்று, மின்சார இலாகா சம்பந்தப்பட்டவர்களை வைத்துக்கொண்டு இந்தக் கூட்டத்தை நடத்தினார்கள். அந்தக் கூட்டத்திலே எத்தனை குடிநீர் திட்டங்களுக்கும், தெரு விளக்குகளுக்கும் மின் இணைப்பு கொடுக்கப்படாமல் இருக்கிறது என்ற விவரத்தை அவர்கள் சொன்னார்கள். அன்றையதினம் மற்றொரு பிரச்சினைகூட எழுந்தது. இதை ஏன் நான் இங்கே விளக்கிக் கூறுகிறேன் என்றால், கிராமப் புறங்களைப் பொறுத்த வரையிலே, எவ்வளவு தேவை என்பதுபற்றி நான் சொல்லவேண்டியது கடமை. விவசாயம் மிக மிக இன்றியமையாதது. நகர்ப்புறங்களைப் பொறுத்த வரையிலே, தொழிலை எடுத்துக்கொண்டால், மதிப்பிற்குரிய நண்பர் திரு. சித்ரா நாராயணசாமி போன்றவர்கள் தொழிலுக்கு மின்சாரத் தட்டுப்பாடு இருக்கிறது என்று சொன்னால், அவர்கள் ஜெனரேட்டர் வைத்து மின்சாரம் உற்பத்தி செய்து கொள்ள முடியும், தொழிற்சாலையை இயக்கக்கூடியவர்களாக இருக்க முடியும்.

ஆனால் விவசாயியினுடைய நிலைமை அவ்வாறு அல்ல. தங்களுடைய விவசாயக் காரியங்களுக்கான மின்சாரத் தேவையை அரசிடமிருந்துதான் பெற முடியும். ஒரு விவசாயி தனியே மின்சார உற்பத்தி செய்தோ அல்லது கிராம விவசாயிகள் ஒன்றுகச் சேர்ந்தோ மின் உற்பத்தி செய்துகொள்வது என்பது நடக்க முடியாத காரியம்.

இதை முடித்துவிட்டு கிராம ஊராட்சி ஒன்றியங்கள்பற்றிப் பேச விரும்புகிறேன். நேற்றையதினம்கூட அமைச்சர் அவர்கள் இரவிலேதான் மின்சாரம் நமக்கு அதிகமாக மீதமாகிறது என்று சொன்னார்கள். அமைச்சர் அவர்களை இந்தச் சந்தர்ப்பத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். விவசாயி அவனுடைய விவசாய நிலத்திற்கு இரவிலே நீர் பாய்ச்சுவது என்பது சரியான காரியம் அல்ல. ஏனென்றால் வேறு எந்த வேலையாக இருந்தாலும், அவன் அதை இரவிலே செய்து கொள்ளலாம். ஆனால் பயிருக்கு, வெள்ளாமைக்கு அவன் தண்ணீர் பாய்ச்சும்போது, பயிர் பூராவுக்கும் பாசனம் செய்ய முடியாது. இதை எங்களைப் போன்றவர்கள், விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்கள்தான் உணர முடியும். இரவிலே மின்சாரம் கொடுப்பதால் பாதி நிலம்தான் தண்ணீர் பாயும், பாதி நிலம் தண்ணீர் பாயாது விடுபட்டுவிடும். விவசாயம் பாதிக்கப்படும். அப்படி விவசாயம் பாதிக்கப்படும் என்று சொல்லும்போது, நாம் ஒரு விஷயத்தை மறந்துவிட முடியாது. ஒரு தடவை விவசாயி தன்னுடைய விவசாயத்தில் பாதிக்கப்பட்டுவிட்டால், அந்த ஆண்டு முழுவதும் அவன் கஷ்டப்பட நேரிடும் என்பதை நான் இந்த சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்கின்றேன். அந்த வருடத்தில் வருகின்ற வருமானத்தை வைத்துத்தான் அந்த வருடம் முழுவதும் அவனுடைய குடும்பத்தை பராமரிக்க, இதர இனங்களுக்கான செலவுகளைச் சரிசெய்துகொள்ள வேண்டிய நிலை இருக்கின்றது. விவசாயத்திற்கு இரவிலே மின்சாரம் கொடுப்பது என்பதை அறவே அகற்ற வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே குறிப்பிட விரும்புகின்றேன்.

அடுத்து, விவசாயிகள் மின்சார இணைப்புப் பெறுவதிலே சங்கடங்கள் பல ஏற்படுகின்றன. பல பேர்கள் மின்சார இணைப்பு கிடைக்காமல் இருக்கின்றார்கள். ஆகவே தயவுசெய்து விவசாயத்தைப் பொறுத்தவரையில், மின்சார இணைப்புக் கொடுப்பதிலே அரசு மிக்க கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இந்த ஊராட்சிகளைப் பொறுத்த வரையிலே, மின்சாரப் பற்றாக்குறை, பவர் கட் இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறார்கள்.





உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கின்றேன். ஒரு பஞ்சாயத்திலே 100 தெரு விளக்குகள் இருந்தால், அதிலே விட்டுவிட்டு 50 தெரு விளக்குகள் எரியாமல் செய்து விடுகிறார்கள். ஆனால் ஒரு மாதத்திற்குக் கட்டணம் வசூலிக்கும் போது, அந்த 100 தெரு விளக்குகள் எரிவதற்கான தொகைக்கு பில் அனுப்பி விடுகிறார்கள். எத்தனை விளக்குகள் எரியவிடப்படாமல் இருந்ததோ அத்தனை விளக்குகளுக்கான தொகையைக் கழித்துவிட்டு பில் அனுப்ப வேண்டும். இதை நீங்களே பார்த்துச் செய்ய வேண்டுமென்று கலெக்டர் அவர்களிடம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதை இங்கேயும் தெரிவித்துக்கொள்கின்றேன். பவர் கட் என்று சொல்லிவிட்டு அதே சமயத்திலே ஒரு மாதத்திற்கு 100 விளக்குகளுக்கான கட்டணத்தை வசூலிப்பதைத் தடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, தனியார் நிறுவனங்களை எடுத்துக்கொண்டிருப்பது பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தனியார் மின் நிறுவனங்களை அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது என்றாலும், அந்த நிறுவனங்கள் அரசு அலுவலகங்களோடு சேர்ந்து செயல்படவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவைகள் ஏற்கெனவே இருந்த இடத்திலேயே தனி யூனிட்டுகளாகத்தான் இருந்துகொண்டு வேலை செய்கின்றன. அவர்களுக்கும் மின்சார வாரியத்திற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா என்பதுபற்றி யோசிக்க வேண்டியிருக்கிறது. அவைகளை ஏற்றுக்கொண்டு இப்போது கிட்டத்தட்ட 6 மாத காலம் ஆகின்றது. அந்த யூனிட்டுகள் தனியாகச் செலவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றுதான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கூடிய விரைவிலே அந்த யூனிட்டுகளை மின்சார வாரியத்தோடு இணைத்துச் செயல்படுவதற்கு ஏற்ற ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மற்றொன்றையுங்கூட இங்கே சொல்லியிருக்கிறார்கள். தமிழ் நாடு மின் வாரியத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகளைப்பற்றிக் குறிப்பிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. அதை நான் மறுக்கவில்லை. அதிலே வேலை செய்பவர்களுக்குச் சலுகைகள் கொடுக்க வேண்டும் என்பதிலே எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. கொடுக்க வேண்டியதுதான். ஆனால் மின்சாரம் உபயோகப்படுத்துகின்றவர்களுக்கு என்ன சலுகைகளைக் கொடுத்திருக்கின்றார்கள்? கட்டண உயர்வுதான், அபாயம்தான் வருகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதாவது கட்டணம் ஏறப்போகிறது என்றுதான் சொல்லியிருக்கின்றார்கள். இதே நிலையை நீடிக்கவிடக்கூடாது. நீடித்துக்கொண்டு போவது அவ்வளவு சிறப்பானது அல்ல என்று தெரிவித்துக் கொள்கின்றேன். பணியாளர்களுக்கு நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும்.

சலுகைகளைக் கொடுக்க வேண்டும் என்பது வரவேற்கக்கூடியவைதான். அதே சமயத்தில் இன்னொன்றைப் பார்க்க வேண்டும். நேற்று நம்முடைய நண்பர் திரு. ராஜகோபால் அவர்கள் குறிப்பிட்டார்கள். சூப்பிரண்டண்டிங் என்ஜினியர், டிவிஷனல் என்ஜினியர் அலுவலகங்கள் எப்படி வேலை செய்கின்றன என்பதைப்பற்றிக் குறிப்பிட்டுப் பேசினார்கள். இப்போதுகூட அவர்களுக்கு உதாரணமாக ஒன்று சொல்ல முடியும். புதிதாக மின் சப்ளை வருவதிலே உள்ள கஷ்டம் எனக்கே ஏற்பட்டுள்ளது. இதற்குப் பரிகாரம் தேட வேண்டும் என்பதற்காக நான் சொல்லவில்லை. என்னுடைய வீட்டுக்கு சிங்கில் பேசிலிருந்து திரி பேஸ் கனெக்ஷனுக்கு மாற்றிக்கொடுக்க வேண்டுமென்று விண்ணப்பித்தேன். சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து பதில் வந்தது. "அந்த வீடு உங்களுக்கு எப்படிச் சொந்தம், மணியக்காரரிடமோ, கணக்குப்பிள்ளையிடமோ இருந்து அத்தாட்சி வாங்கிக் கொடுங்கள்" என்று சம்பந்தப்பட்ட அஸிஸ்டெண்ட் இன்ஜினியரிடமிருந்து பதில் வந்தது. நான் அவர்களிடம் சொன்னேன். "ஐயா, அந்த கனெக்ஷன் என் பேரிலேதான் வந்தது. சர்வீஸ் கனெக்ஷன் இருந்து கொண்டிருக்கிறது. மீண்டும் மீண்டும் திரும்பக் கேட்பது நீங்கள் எவ்வளவு சிறந்த நிர்வாகி என்பதைக் காட்டுகிறது" என்றுதான் பதில் எழுதினேன். ஏற்கனவே உள்ள சர்வீஸ் கனெக்ஷன் திரு. எஸ். சி. செங்கோட்டுவேலப்ப கவுண்டர் என்ற பேரிலேதான் இருக்கிறது. ஆனால் இன்னொரு முறை கர்ணத்திடம் சர்டிபிகேட் வாங்கிக் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். சாதாரணமாக கிராமத்தில் உள்ளவர்கள் அந்த மின்சார அலுவலகங்களில் தங்களுடைய காரியங்களை எப்படி நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். நான் கேட்டதற்கு இந்தமாதிரி பதில் வந்தது. அதற்கு நான் இந்த மாதிரியான பதில் கொடுத்தேன். அதைப்பற்றி நான் இங்கே குறிப்பிட வரவில்லை. அது மாதிரி ஒரு விண்ணப்பம் அனுப்பும்போது, உங்களுக்கு அந்த வீடு எப்படிச் சொந்தம் என்று கேட்கிறார்கள். ஏற்கெனவே உள்ள சர்வீஸ் அதே பேரிலேயே இருக்கிறது. மீண்டும் ஒரு முறை கர்ணத்திடம், மணியக்காரரிடம் இருந்து அத்தாட்சி வாங்கிக் கொடுங்கள் என்று சொன்னால், இதைவிட மோசமான செயல் வேறு ஒன்றுமே இருக்க முடியாது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்த மாதிரியான சிறிய காரியங்களை அலட்சியப்படுத்தி மிகவும் பெரிதுபடுத்துவது மின்சாரத் துறையில் சர்வசாதாரணமான நிகழ்ச்சி என்பதைத்தான் நான் சொல்லிக்கொள்கின்றேன். ஆகவே இதையெல்லாம் உடனடியாகத் தவிர்க்க வேண்டும். விவசாயத்தைப் பொறுத்த





ளவிலே, மின்சாரம் இன்னும் சீரான முறையிலே வழங்கப்பட வேண்டும். கல் நேரங்களில் மின்சாரம் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அரிஜன காலனிகளைப் பொறுத்தவரையில், ஒன்று சொல்ல விரும்புகிறேன். ல இடங்களிலே காலனிகளிலே மின் விளக்குகள் போடப்பட்டு இன்னும் ருமையாகச் செயல்படாமல் இருக்கின்றன. கணக்குப்படி, நம்பர் மட்டும் திகமாக இருக்கின்றனவே தவிர; அவைகள் செயல்படுவதில்லை. இவை ளெல்லாம் நல்ல முறையிலே செயல்படுவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். மின்சார உற்பத்தித் திறன் இன்னும் அதிகப்படுத்தப்பட வேண்டும். இதிலே ஆயுள் இன்ஷூரன்ஸ், ற்ற இன்ஷூரன்ஸ் கம்பெனிகள் இவைகளிலிருந்து கிடைக்கும் உதவியைத் நம்பியிருக்கிறோம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கான் பெரிதும் நிறையக் கடன் வேண்டுமென்றும் காட்டியிருக்கிறார்கள். நம்முடைய மின்சாரத் திறன் இன்னும் அதிகரிக்கப்பட வேண்டும். அமைச்சரவை குறிப்பாக தொழிலிலே காட்டும் ஆர்வத்தை, விவசாயத்திலும் காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-20)

* Thiru A. R. DAMODARAN : Mr. Chairman, Sir, it give me very great pleasure to participate in the debate on the Financial Statement of the State Electricity Board. We all realise that this is one of the premier public utility concerns in our State and in view of the fact that power has become a very important factor in our lives, I am not surprised that so much interest has been displayed by the Members in pointing out the various deficiencies in the working of the Board, and various suggestions have been made for improving its working. I have always held the belief that we, in Tamil Nadu, have had a fairly good progress in the matter of power generation transmission and distribution. Only the other day, I was reading an article on power development in the State wherein it was pointed out that out of a total installed capacity of 4,800 MW, Tamil Nadu alone had an installed capacity of 2,250 MW and the fact that in the southern region, taking into account the Neyveli Lignite Corportation—almost 42 per cent of the generating capacity has been created in Tamil Nadu is indeed

a tribute to those who have planned for power development in the past as well as to those are seeing to it that this progress is maintained in Tamil Nadu.

Sir, the index of a State's progress is sometimes judged by the per capita consumption of electricity and in the select socio-economic indicators that have been given in the economic appraisal, one important fact has been brought out that in the whole of India, only two States—the States of Maharashtra and Punjab—have a higher per capita power consumption than Tamil Nadu but another significant detail has also been given and I would like to mention this because industrialisation is of paramount importance in our country not only from the point of view of reducing shortages but also of increasing employment. As far as the industrial consumption of electricity is concerned, Tamil Nadu, unfortunately, is the sixth in the list and there are five States in India which have a per capita industrial consumption of electricity well over Tamil Nadu. These States are West Bengal, Punjab, Mysore, Maharashtra and Gujarat.

Now, Sir, the reason why in Tamil Nadu, we are third in the list as far as per capita consumption of electricity is concerned, but are the sixth in the list in so far as the per capita industrial consumption is concerned, is that the Government have, as a policy decision, decided that greater importance should be given to rural electrification as well as to the energisation of agricultural pump-sets. This—and I express this opinion in all humility—in my opinion, is costing the State considerable amount in so far as the power availability for industry is concerned. I am not for a moment suggesting that these are not necessary. But when I spoke on the Electricity Board Budget in 1972, I stressed the fact that we should devote our attention to the generation of electric power and, we should also re-define our priorities so that the amounts that are available, the capital resources that are available are not frittered away in distributing schemes but are used for the generation of power.

Sir, going through the financial statement of the Electricity Board, I must confess and congratulate, Sir, the financial experts on the considerable jugglery which they have indulged in intrying



to balance what, in my opinion, is a very difficult Budget. Nobody can question those facts and in fact, one refrain in the Hon. Ministers speech which is almost a lamentation, if I may say so, is that the finances of the State Electricity Board are in an extremely perilous state and that considerable effort would be required to improve the revenues of the Board. If it is to strike even and how far this has affected the finances of the Board is evident from the fact that, for the year 1973-74, an astonishing provision has been made in the matter of setting apart a portion of the revenues for the depreciation reserve the general reserve and the payment of interest on Government loans.

Sir, I think the depreciation reserve, according to the Electricity (Supply) Act, 1948 is of the order of 1 per cent or 1½ per cent —I am not sure of the figure—but it is a very small amount and it is rather surprising that during the year 1973-74 and the year 1974-75 against a total depreciation reserve of Rs. 31.44 crores which should have been set apart from the revenues of the State Electricity Board, only a sum of Rs. 9.94 crores has been set apart resulting in a short-fall of over Rs. 21.50 crores. Similarly, under General Reserve, as against the half per cent which is credited to General Reserve usually, against an amount of Rs. 5.11 crores which should have been set apart, no provision has been made either in the Revised Estimate or the Budget Estimate for want of revenue. Therefore, Sir, if we take these two areas into account, if this reserve had been provided for, it would have meant that a further shortfall of Rs. 26 crores would have resulted in the Revenue Budget of the Electricity Board. Not only this, Sir, the other fact is that under borrowings from Government, no provision has been made in the Revised Estimate for 1973-74 and the Budget Estimate for 1974-75 for payment of interest on Government loans for want of revenue surplus. Sir, I have been trying to find out from the financial statement what exactly is the borrowing of the State Electricity Board from the Government of Tamil Nadu. I am not aware of the figures but I presume that it will be quite a substantial sum. It should be well over 250 crores of rupees and even at the average rate of interest which ranges from 5 per cent to 8 per cent, if we take

(Thiru A. R. Damodaran) [1974 ஆகஸ்ட் 20

into account the interest that should be paid to the Government of Tamil Nadu, I am sure the amount of interest will be well over 15 crores of rupees per annum. I do not have the exact figures because the figure has not been mentioned, but if that is also taken into consideration, then we arrive at the astonishing conclusion that if this statutory reserve had been provided for and if the provision for interest on Government loans had also been provided for, the deficit in the Electricity Board Budget for this year would have been well over Rs. 20 crores. Therefore, Sir, I sympathise fully with the Hon. Minister when he has made a plea which I am sure will fall on deaf ears because it is only the administration which will have to take courage in both hands and revise the power rates. I do not think he expects anybody from this side to give him advice that he should increase the rates. When it was done in the past, many difficolties had to be met. While I fully realise that a certain revision of the power-tariff may be indicated for all sectors, I would venture to advise him that he should not wait for the Legislature to be adjourned after this session and then come forth with a surprising announcement in the first week of September that power tariffs will be revised for industrial, commercial and agricultural consumption. I would rather urge that before he effects any revision in tariff, it would be better for him to consult representatives of the agricultural sector, the industrial sector and the commercial and trading sector. There can be on denying the fact that a certain amount of revision is called for, but to what extent and how exactly it should be. shared by the consumers of electricity is a matter that should not be left entirely to the State Electricity Board or to the Hon. the Minister for Electricity or even to the Cabinet of Tamil Nadu. This is a very explosive situation. I do not think I have to inform this Government how explosive it can be because when they tried to revise the agricultural tariff last year, it was made into a very hot political issue and in my opinion, it was unfortunate because I really felt at that time that a revision in the agricultural tariff was necessitated by sheer economic factors. Unlike the various cuts that have been announced by the Hon. Minister which he has done with a great deal of courage, in this, we have got to convince the people. Over the past nine months, we have seen Thiru Raman, the Hon. the Minister for



1974 ஆகஸ்ட் 20] [Thiru A. R. Damodaran]

Electricity, in various forms and I am reminded of a song "ராமன் எத்தனை ராமனடி" in a Tamil film. Similarly our Hon. Minister started—he looked beautiful and charming when there was no power cut; with a 20 per cent cut he was slightly crest fallen; with a 40 per cent cut he was dejected and with a 60 per cent cut he was posstively harassed. Now the smile has come back on his face because he has come back to 50 per cent cut, and it is doubtful whether we will come back to the situation when we will have no cut at all. I would, therefore, urge, as a first point, that while I realise that a certain revision in the tariff should be effected out of sheer economic necessity and since some of us on this side of the Bench have been advocating that public sector undertakings and public utility concerns should work on a cost-plus basis, I, as a businessman, am in sympathy with the economic ideals of the Electricity Board in that it should try to break even. We cannot afford to subsidise power. The Government of India and the Government of Tamil Nadu have no money to subsidise any tariff if we take into account the present needs. I would, therefore, request the Hon. the Minister for Electricity to take into confidence all sectors. I am sure he will have the co-operation from these sectors in working out a suitable tariff which would not only place the Electricity Board out of difficulty but would also ensure that the consumers of electricity share the burden of an increased tariff in bearable proportions.

(பிற்பகல் 5-30)

Sir, the financial statement contains a great deal of information. But I would like to ask the Hon. the Minister for Electricity why he is not able to give us the Administration Report of the State Electricity Board even two years after the statements have been completed. The latest Administration Report that is in my hands is for the year 1971-72. We have not received the Administration Report for the year 1972-73 and, of course, we have not received it for the year 1973-74. I think, Sir, that it is about time that a Board of this magnitude and size with a capital outlay of over Rs. 572 crores should follow the example of our public limited companies, which are forced to place their reports within six months after the end of the financial year. I am sure, Sir, there are excellent statisticians in the Electricity Board. If a certain

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

diversion of surplus labour which my friends assure me are available in other sectors of the Board—could be effected; probably these administration Reports could be received well in time.

Sir, we have always stressed that the thermal content of the grid should be increased since we have exhausted—at least we have been saying that we have exhausted--all our hydro-electric resources and that therefore, thermal content of the grid should be enlarged so that power should be available to the State at all times of the year.

I am sorry I fully sympathise with the Hon. the Minister for Electricity in the anguish he has expressed in his statement that the Government of Tamil Nadu are deeply concerned at the tremendous delay in the sanction of the second mine cut to Neyveli, Sir, we have only lignite in our State. We have exhausted our hydro-electric resources. We have no coal in Tamil Nadu. With regard to atomic power plants at the present rate of inflation, with a large import content, I do not know if we will be able to get them even in 10 years' time. Since lignite is the only raw material which is available in Tamil Nadu it is sheer economic necessity for the Government of India to sanction the second mine cut at Neyveli. I have stressed this often. The Government of Tamil Nadu have been stressing for the past eight years and I am somewhat surprised that in a recent Seminar or Conference of the Central Water and Power Commission plus the other Engineers from our State Electricity Board, they have set a time schedule saying that a Hydel project should be completed in five years and a Thermal project in 3½ years. If it take 9 years even to sanction a plan, then with what credibility, can they ask our Engineers in Tamil Nadu to complete the projects within 3½ years and 5 years? It is ridiculous. I think this view point should be placed before the Power Minister at the Centre if he holds a Seminar. We must make it quite clear to them. In fact Member after Member referred to the fact that a labour situation is developing in Neyveli. Sir, you will never be able to resolve the labour situation in Neyveli because the labour situation is directly linked to the stagnation that exists in the Neyveli Lignite Corporation. In this project costing Rs. 150 crores, there has been no expansion



for the past ten years. If the second mine cut had been taken up, thousand of Junior Engineers could have received promotion as Assistant Engineers and Assistant Engineers and Executive Engineers and more persons could have been absorbed in the plant. The employment potential could have been increased. The generating capacity could have been increased from 600 MW to 1000 MW at a cost of only Rs. 36 crores. But we are taling of having thermal Stations costing about Rs. 50 to Rs. 60 crores for getting only about 100 MW power. I cannot see the reason why the Central Government are delaying unnecessarily the sanctioning of the second mine cut at Neyveli. I have been told by influential people that one reason why this decision is being delayed is the deteriorating labour relations in Neyveli. In fact my point is that it is a vicious circle and labour relations will never improve in Neyveli until the Government sanction the second mine cut and give all the people who are employed in that Corporation legitimate avenues for improvement of their position. Therefore, both these aspects have to be taken into account and I certainly hope that this project will not only be speedily sanctioned but that the Government of India who are very fond of setting targets for State Electricity Board, will set targets for their own Ministry and see that the Plan is sanctioned, approved and adequate funds granted so that the second mine cut is taken up at the earliest possible moment. May I incidentally appeal to the Hon. the Minister for Labour to speedily resolve this dispute of Junior Engineers who are on strike? I know their problems. Everyone has been asked by our Prime Minister, in view of the state of emergency in the country, to work without resorting to any agitation. But it does not mean that we can close our eyes to what may well be the legitimate grievances of these people and while I have no knowledge of the exact demands made by them, I will plead, that our Minister for labour who has successfully intervened in labour agitations in the past may take up this matter and see that the Junior Engineer's strike is resolved and that the Lignite Corporation works to full capacity so that even the 30 per cent cut may be removed.

Mention has been made that the Tamil Nadu Government have accepted the expenditure which had to be incurred for the conversion of two 50 MW boilers in Neyveli which have been converted

to furnace oil. I believe even the capital expenditure has been approved by the Tamil Nadu Government. The recurring cost, that is, per unit cost is said to be 27 paise. I do not know whether the Government of Tamil Nadu have averaged the rate or whether they will be purchasing power from this Unit at 27 paise per unit. This has not been clearly mentioned. May I point out that all these expenses would appear to be infructuous in view of the fact that the Government of India are imposing very severe cuts in the supply of furnace oil. I do not know what our Minister for Electricity is going to do in this unfortunate case because we are already committed as far as the capital expenditure is concerned in the glorious hope that furnace oil would be supplied. I hope that at least in the case of these two units, the Government of India will be able to supply furnace oil so that we may be able to recover our capital cost as well as utilise the power that may be generated from these two units.

(பிற்பகல் 5-40)

My Friend Thiru Swaminathan referred to the Kadamparai Pumped Storage Scheme. Two years ago, Sir, I congratulated the Electricity Board on this very novel scheme and in fact going through the progress, I find that upto 1972-73, the expenditure incurred is already Rs. 4.76 lakhs and a sum of Rs. 1 crore has been advanced to the Heavy Electricals India Limited, Bhopal, for this scheme. Under the new schemes, two new schemes have also been proposed Konayar Pumped Storage Hydro-Electric Project and Vellar Pumped Storage Project. Both these schemes seem to be very good because they are 150 MW stations and the investment is estimated to be only Rs. 6½ crores. But in view of the fact that doubts have been expressed by the Hon. Minister as to whether we will have sufficient power during non-peak hours in the next five or ten years. I wonder whether these schemes have been fully investigated before they been submitted for approval. I suggest that these two schemes should also be investigated by the Electricity Board and if they are not feasible, they should be dropped and we should not send them to the Central Government and then say that we are waiting for sanction. If they are not feasible, they should be dropped at once from the new schemes and other schemes which are viable and which



can be readily accepted should be taken up. Sir, we have been requesting for a number of years the Minister for Electricity to investigate the possibilities of the Hogenakal Hydro-Electric Ministerial conferences have taken place; on a number of occasions they have gone across the borders and come back and issued statements and for the past two or three years, we have been hearing that either the Karnataka Government have certain reservations about this or the Tamil Nadu Government have not been able to push this idea through. I think the time has come for the people in both the States to take their Power Ministers to task on this matter because we are not interested in Ministerial discussion and Ministerial meetings. Too often in the past, in the matter of river water dispute, in the utilisation of river water, in the promotion of joint ventures in the Electricity field itself, I think one State Government is effectively sabotaging the idea and I think that unless a genuine attempt is made to resolve the disputes in inter-State projects like Hogenakal Project which was estimated to have an installed capacity of 600 MW at an estimated cost of Rs. 65 crores and where a tremendous capacity could have been created and at a time when Karnataka State is having 30 per cent cut and the Tamil Nadu State is having 60 per cent cut, the Ministers of both the States have some excuse to offer, the time has come for the people to take these Ministers to task and tell them like the people of Hamelin Town who were so riddled with rats that all of them marched to the Mayor and said " Either you solve this problem or you get out of the Town Hall " The Mayor was issued an ultimatum and the Mayor promptly called the Pied Piper of Hamelin and what happened afterwards is a story everyone knows. I only want to stress that this happened because, in my opinion, a genuine and sincere attempt has not been made on both sides. We have somehow touched the fringe of the problem, but I think we have not made a definite progress. If necessary, we should have the Central Minister for Power and Irrigation—instead of issuing communiques from Delhi and issuing statements saying that this will be settled in God 's own time—and we must give a time-limit for the three Ministers and if they are unable to arrive at a solution, well, the people must come to their own conclusions about the sincerity of our administrators in tackling national problems.

[Thiru A. R. Damodaran] [1974 ஆகஸ்ட் 20

We must, as I said, Sir, have a list of priorities and in so far as Tamil Nadu State Electricity Board is concerned, I feel the Government have done enough for rural electrification and they should think more in terms of devoting funds for the generation of electricity. I am not trying to cast any aspersion on the powers of the past, but there can be no gainsaying the fact that over Rs. 35 crores have been diverted to rural electrification programmes. We must be honest enough to tell the people that if we are going to extend electricity to each and every remote corner of Tamil Nadu, it will only mean that we must live up with a 40 per cent power cut for the next ten years of our existence. If we have a 40 per cent power cut, it will affect production in our fields, it will affect poduction in our factories, it will prevent the entry of new industrial undertakings into our State and it will prevent the expansion of existing industrial undertakings. I think, Sir, if we are able to place this viewpoint before the public, that degree of public co-operation will be forthcoming which will enable the Electricity Board to stick to its programmes of improving its generating capacity.

Many complaints have been made about the billing procedure. It is a fact that we do not receive bills in time. It is also a fact that when are make payments, these payments are not shown as credits in the bills that we receive. I myself received a bill in the month of April or May for Rs. 1,500 not taking into account the Rs. 1,000 that I had already paid. But I think, instead of finding fault with these lapses, we must make an intenssive study of the labour situation in the Electricity Board itself. Member after Member has complained of corruption in its ranks, bad billing procedure, imprompt attendance and various other matters. Members have even said that many persons do not work

(பிற்பகல் 5-30)

and that they are lethargic and roaming about the corridors. I think the Electricity Board is of such a size that we cannot solve these problems by any ad hoc solution. It will be impossible for a Minister for Electricity or even the Minister for labour to try to solve a dispute after it arises. I do not agree with my hon. Friends that this will be done merely by dismissing people or transferring them or suspending them. A thorough study— in fact, a new



1974 ஆகஸ்ட் 20] [Thiru A. R. Damodaran]

science called behavioural science has developed and I am sure my hon. Friend Thiru Narayanaswami will agree—has to be done why people react in the way they do I think it is time that the State Electricity Board, instead of trying to find ad hoc solutions—recognising this Union, derecognising that union, dismissing that chap and suspending this chap—should make a thorough study as to why our workmen and our labourers react in the form in which they do. I am sure that the correct approach has not been adopted either by the workmen or by the administrators. There is something wrong; it is wrong in every industry in our country and it is wrong in the State Government and the Central Government by the way the N.G.G.Os. react and by the way our administrators react to them. I would, therefore, plead, Sir, that the State Electricity Board should have a separate high-power labour Cell with qualified people who know something about industrial relations and who know something about the behavioural pattern of those who work under the Board. We should not try to solve it by the rule of the thumb but a deeper study should be made to see that this friction is removed. Because the Electricity Board is one of the biggest undertakings in our State with a capital outlay of Rs. 572 crores, we cannot afford to take risks and far from decrying labour, I would say that we have not properly understood the motivations and would plead that a special cell be created. We have a very senior member of the Indian Administrative Service as the Chairman of the Electricity Board, who was formerly the Deputy Chairman of the State Planning Commission and with his experience of industrial development and his knowledge of industrial development, I am sure he must be devoting some attention to the problem of labour relations in the Electricity Board. I hope that he will also receive the encouragement of the Government because one of the biggest factors is the frequency of the interference of Government in matters pertaining to the Board. We have said that this is an autonomous body, that it has nothing to do with the Government and that it will be fully autonomous in its working. But, no Minister of Electricity is able to withstand the pressure from so many legislators saying that this suspended employee should be re-instated or that one should be appointed in the place of so and so. These are natural pressures that develop in a democracy but

I feel that, in view of the dangerous trend that is developing, we should try to insulate ourselves as far as possible from the frequent intereference with the administration of the Board. I am sure the officers of the Board will be able to solve these disputes provided they are given a free hand for some time to do this and with Thiru Rajaram as the Chairman of the State Electricity Board, although he is not a technocrat in the true sense of the word and although I fully support the hon. Member Thiru Swaminathan's idea that a technocrat should be given a chance to be Chairman of some technical Board, nonetheless . . . . .

THIRU S. NARAYANASWAMY : Sir, does the hon. Member know that it was during the period of a Central Minister who was a technocrat that we had 'Nil' expansion of electricity in this country and that he resigned on that?

Thiru A. R. DAMODARAN : Sir, the fault was not with the poor technocrat. He had adequate technical knowledge and advice to give, but he had not political weight. The political weight is determined by the hold that one has not only over one's constituency but also a number of other Members of Parliament coming from one's own area. Poor Dr. K. L. Rao has been blamed but I think he is blameless because he has been insisting for 7 or 8 years that we are going to have the power famine that we are having in our country today Nobody listened to him at that time because resources were diverted to other areas. Although I agree with the hon. Member Thiru Narayanaswamy that all technocrats may not be excellent administrators, nonetheless, I only wish to mention that with an experienced administrator at he held of he will be given a freer hand to see that labour relations improve in the Electricity Board.

The Minister in charge of Electricity is having a very tough portfolio, Sir. There is no doubt about it because at least the Minister for Food. Nature and Providence being kind, if he has a good monsoon, will have a good harvest and forget everything about food problem in three of four months' time. But as far as the Minister for Power is concerned. I am afraid, there is no hope at all for the next seven years and even if he should become again





the Minister in 1976, I hope he will ask for a change of portfolio. Even if he should become the Minister for Power in 1976, all the indications are that taking into account the way in which decisions are made and decisions are delayed, progress in our country will be absolutely 'Nil' because we have not realised that Power is an important factor for improving industrialisation, for improving employment and for improving agricultural production. Tamil Nadu must certainly be proud that over 6½ lakhs of pumpsets have been energised which accounts for nearly one-third of the total for the country. If at all we are marginally surplus in the production of foodgrains, it is because from 1967 to 1973 we have definitely devoted a great deal of our resources to the energising of agricultural pumpsets. No State has done it. If States like Bihar and Uttar Pradesh had done it, we would have had a surplus of 20 million tonnes of grains in our country. We are making a heavy sacrifice because we are diverting a portion of our resources to the agricultural sector, but, nonetheless, this is a legitimate record of which we can be proud and the State Electricity Board also can be proud of this fact. I am sure, Sir, that with a little more judicious use of resources we will be able to turn the corner and although we may not be surplus in power, at least we can try to catch up with the demand to the extent that it is possible for us to do.

Thank you, Sir.

**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** தலைவரவர்களே, தமிழ் நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது ஒரு சில கருத்துக்களைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய தமிழ் நாடு மின்சார வாரியமும், அந்தப் பொறுப்பை ஏற்றிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களும், நம்முடைய தமிழ் நாடு அமைச்சரவையும்கூட, மின்சாரத்தை எல்லா கிராமப் பகுதிகளுக்கும் எந்த அளவுக்கு அதிகமாக ஒதுக்க முடியுமோ அந்த அளவுக்கு ஒதுக்கி, நிறைய மோட்டார் மின் இணைப்புகள் அளிக்கப்பட்டிருக்கின்றன என்பதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. அப்படிப்பட்ட தமிழ் நாடு மின்சார வாரியத்தையும் நம்முடைய அமைச்சரவையையும் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம்.

குறிப்பாக, கிராமப் பகுதிகளிலே விவசாயிகளுக்கு எந்தெந்தக் காலத்தில் மின்சாரம் தேவை என்ற பிரச்சினைதான் இன்று நாட்டிலே முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது. விவசாயத்திற்கு கூடிய வரையில், பகல் நேரத்தில் மின்சாரம் அளிப்பதுதான் சிறந்ததாகும். ஆனால், பகல் நேரத்தில் பெரிய தொழிற்சாலைகளுக்கு மின்சாரத்தை ஒதுக்கி விட்டு இரவு நேரங்களில் அதிகமாக பம்ப்செட்டுகளுக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். இரவு நேரங்களில் தொழிற்சாலைகளில் வேலை செய்ய முடியாது; ஆகவே பகல் வெளிச்சத்தில்தான் வேலை செய்ய முடியும் என்கிறார்கள். தொழிற்சாலைகள் அத்தியாவசியமான பொருட்களை உற்பத்தி செய்துகொண்டிருக்கின்ற காரணத்தால், பகல் நேரங்களில் நாம் தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் வழங்கிக் கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். தொழிற்சாலைக்கு இரவு நேரங்களில் கொடுத்தால்கூட, மூன்று இரண்டு ஷிப்டுகளைப் போட்டுக்கொண்டு வேலை செய்யலாம் என்ற நிலையிருக்கிறது. ஆனால், விவசாயம் அப்படி அல்ல. இரவு தண்ணீர் பாய்ச்சுகின்ற நேரத்தில்—நெல் வயல் என்றால்கூட ஓரளவுக்கு மடைக்கு வயல் திருப்பி விடலாம். ஆனால், கரும்பு, சோளம் மற்ற புஞ்சை தான்யங்களுக்கு—பாத்தி, பாத்தியாக தண்ணீர் பாய்ச்சுகின்ற காரணத்தால், கஷ்டமாக இருக்கிறது. அப்படி தண்ணீர் பாய்ச்சுகின்ற நேரத்தில், தொழிற்சாலைகளில் ஆக்ஸிடெண்ட் ஏற்படுவது போல், வயல்களில் வேலை செய்பவர்களுக்கும் ஆக்ஸிடெண்ட் ஏற்பட்டு விடுகிறது. கடந்த ஆண்டு நாமக்கல் வட்டத்தில் ஒரு இடத்தில் இரவு நேரத்தில் தண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருந்த போது, ஒரு விவசாயியை பாம்பு கடித்து, தண்ணீர் திருப்பப்போனவர் வரவில்லையே என்று அவருடைய தம்பி அவரைத் தேடச் சென்று அவரையும் பாம்பு கடித்து, இருவரும் இறந்து விட்டார்கள். அப்படிப் பார்க்கின்ற நேரத்தில், விவசாயிகளுக்கு நாம் எவ்வளவுதான் நன்மை செய்திருந்தாலும், இரவு நேரத்தில் மின்சாரம் கொடுக்கின்ற காரணத்தால் இப்படி ஒரு இழப்பு ஏற்படுகிறது, கஷ்டம் ஏற்படுகிறது என்பதால், அவர்களிடையே ஒரு தவறான எண்ணம் அரசின் மீது ஏற்படுகிறது. இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களை ஒன்று கேட்டுக்கொள்கிறேன். தொழிற்சாலைகளில் இரவில் வேலை செய்துகொண்டிருக்கும்போது ஆக்ஸிடெண்ட் ஏற்பட்டால் அல்லது அதில் இறந்து விட்டால், அந்தத் தொழிற்சாலையிலிருந்து காம்பன்சேஷன் கொடுக்கிறார்கள். அதுபோல் அரசாங்க ஊழியர்களுக்கு, அவர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கின்ற நேரத்தில் இறந்து விட்டால், 10 ஆயிரம் ரூபாய் தருகிறோம். ஆனால், நாட்டிலே வாழ்கின்ற அத்தனை பேருக்கும் முக்கியமான, அத்தியாவசியமான உணவுப் பண்டங்களை விளைவித்துக் கொடுக்கின்ற விவசாயிக்கு ஒரு



ஆக்ஸிடெண்ட் ஏற்பட்டால், அவருக்கு ஏதாவது நாம் காம்பன்சேஷன் கொடுப்பதற்கு வழியில்லை. அந்தக் கடமையைச் செய்வதற்கு நிச்சயமாக நம்முடைய சர்க்கார் வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயி என்றால் பெரிய ஜமீன்தாராக இருப்பான், 10, 20 ஏக்கர் நிலத்திற்குச் சொந்தக்காரனாக இருப்பான் என்று நினைக்கலாம். 10, 20 ஏக்கர் வைத்திருப்பவன் தண்ணீர் பாய்ச்சுவதற்குச் செல்லமாட்டான். கூலி விவசாயிதான் தண்ணீர் பாய்ச்சப் போகிறான். அவன் இறந்து விட்டால், அவனுடைய குடும்பம் ரொம்பக் கஷ்டப்படுகிறது. தொழிற்சாலையில் உள்ளவர்களுக்கு அல்லது அரசு ஊழியர்களுக்கு காம்பன்சேஷன் கொடுப்பது போல், விவசாயக் கூலிக்கும் காம்பன்சேஷன் கொடுப்பது என்பது அரசாங்கத்திற்குக் கஷ்டமாக இருக்காது. அதுமாதிரி காம்பன்சேஷன் கொடுக்க வேண்டுமென்று நம்முடைய சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிராமப்பகுதியிலே இன்னும் மின் இணைப்பு கிடைக்காத நிலையிருக்கிறது. அமைச்சரிடத்தில் பேசும்போது அதைக் குறிப்பிட்டேன். நாமக்கல் வட்டத்தில் காக்காதூர் கிராமத்தில், கம்பி எல்லாம் இழுத்தாகி விட்டது. ஆனால் ட்ரான்ஸ்பார்மர் இல்லாமல் மின் இணைப்பு கொடுக்கப்படாமலிருக்கிறது. திருச்செங்கோடு பகுதியில்கூட மின் இணைப்பு கிடைக்காத காரணத்தால், கஷ்டமாக இருக்கிறது. பணம் கட்டி இருக்கிற காரணத்தால், மின்சார இணைப்பு கொடுக்க முடியவில்லை என்று சொல்லுகிறார்கள்.

(பிற்பகல் 6-00)

ஆனால் அதே நேரத்தில் சென்னை, மதுரை போன்ற பெரிய நகரங்களுக்கு இந்த மாதம் வந்துவிட்டு, மீண்டும் அடுத்த மாதம் வருகிறபோது சாதாரண இடங்களிலெல்லாம் பெரிய மாளிகைகள் ஏற்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். அந்தக் கட்டிடங்கள் ஏர் கண்டிஷன் செய்யப்பட்டிருக்கின்றன. அவர்கள் வெகு சீக்கிரம் இணைப்பு வாங்கிவிடுகிறார்கள். வெளி நாட்டுக்காரர்கள் நமது மாநிலத்திற்கு வருவதால், அப்படிப்பட்ட பெரிய விடுதிகளைக் கட்டுகிறோம். அதையெல்லாம் அப்புறம் பார்த்துக்கொள்ளலாம். முதலில் பம்ப்செட்டுகளுக்கு இணைப்பு கொடுக்க வேண்டும். பின்னர்தான் கட்டிடங்களுக்கு இணைப்பு கொடுக்க வேண்டும். நகரத்தில் உள்ளவர்கள் அமைச்சரவர்களிடமும், சீப்-இன்ஜினியர் போன்றவர்களிடமும் பேசிவிட்டு, தங்கள் காரியத்தை முடித்துக்கொள்கிறார்கள். ஆனால் கிராமங்களில் உள்ளவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. தொழிற்சாலைகள் மிகவும் அத்தியாவசியமான ஒரு தேவையாகும். எனவே ஆடம்பரப்

பொருள்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதை நிறுத்திவிட்டு, நம்முடைய பம்ப் செட்டுகளுக்கு இணைப்பு கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். கிராமங்களில் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, விவசாயிகளிடம் மின்சாரக் கட்டணம் வசூலிப்பதுபற்றி ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். விவசாயிகளுக்கு பில் சரியாக வருவதில்லை. இரண்டு மூன்று மாதங்கள் கழித்து, எல்லாவற்றிற்கும் சேர்த்துப் பணம் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். பழைய பாக்கியை செலின்யூ யூனிட்டில் கட்டினால்தான், இப்போது, நடைமுறை மாதத்திற்கு உள்ளதை வாங்குவோம் என்று சொல்லுகிறார்கள். விவரம் தெரிந்தவர்கள் அதுபற்றி அவர்களைக் கேட்கிறார்கள். ஏழை விவசாயிகள் ரெவின்யூ யூனிட்டைத் தேடிப் போக வேண்டும். அப்படிப் போக முடியாதவர்கள் பலர் இருக்கிறார்கள். அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மூன்று மாதத்திற்குச் சேர்ந்தாற்போல் கொடுங்கள் என்று கேட்டால், விவசாயிகளுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. பைசல் பம்ப்செட் வைத்துக்கொண்டிருக்கும்போது, மேலைக் கடன் வாங்கி உபயோகித்துவிட்டு, பிறகு நெல்லை விற்று, அந்தப் பணத்தைக் கட்டிவிடுவார்கள். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை, நான்கு மாதங்களுக்கு ஒரு முறைதான் அறுவடை வருகிறது. அவர்களுக்கு ஒரு போகம் வந்தால்தான், கட்ட முடியும். எனவே அறுவடைக்குப் பிறகு, அவர்கள் கட்டுவதற்கு ஏதாவது செய்ய முடியுமா என்று பார்க்க வேண்டும்.

அடுத்து, ஊராட்சி மன்றங்களில் உள்ள தெரு விளக்குகளுக்கு மீட்டர்கள் வைப்பதுபற்றி அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். ஊராட்சி மன்றங்களினுடைய பணம்தான் மின் வாரியத்திடம் இருக்கிறது. ஊராட்சி மன்றங்கள் எதுவும் பணம் கொடுக்காமல் இல்லை. தஞ்சாவூர் பகுதியில் இருக்கிறதோ என்னவோ தெரியவில்லை. சேலம் மாவட்டத்தில் எல்லா ஊராட்சி மன்றங்களும் மாதா மாதம் கொடுத்து விடுகின்றன. மற்றொன்று, பஞ்சாயத்தில் பணம் இருக்கின்றதோ இல்லையோ, பஞ்சாயத்து யூனியன் ஜெனரல் பண்டிலிருந்து கொடுத்துவிட்டு, பிறகு அட்ஜஸ்ட்மென்ட் செய்து விடுங்கள் என்று தீர்மானம் போட்டுக்கொடுங்கள் என்று கேட்டார்கள். அப்படித் தீர்மானம் போட்டுக் கொடுத்திருக்கிறோம். என்ன பில் வருகிறதென்றுகூட பஞ்சாயத்துக்களுக்குத் தெரியவில்லை. அந்தப் பணத்தை





பஞ்சாயத்து யூனியன் கொடுத்து விடுகிறது. பிறகு அதை அட்ஜஸ்ட் செய்கிறார்கள். எனவே கிராமங்களில் மீட்டர்களை வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பெரிய நகரங்கள், நகரப் பஞ்சாயத்துக்கள் போன்ற இடங்களில் மெர்குரி லைட் போடுகிறார்கள். சின்னப் பஞ்சாயத்துக்களில் ஸ்குரு டைப் பல்ப் போடுகிறார்கள். அது அடிக்கடி ப்யூஸ் போகிறது. அடிக்கடி ப்யூஸ் போவதற்குக் காரணம் இரவு நேரங்களில் அதிக வோல்டேஜ் வருவதுதான். இரவு நேரங்களில் பம்ப்செட்டுகள் அதிகம் இறைக்காவிட்டால், புல் வோல்டேஜ் வருகிறதென்று சொல்லுகிறார்கள். இரவு 10 மணிக்கு மேல் புல் வோல்டேஜ் வரும்போது, ஓவர்-கரன்டினால் பல்புகள் சீக்கிரம் ப்யூஸ் ஆகின்றனவென்று சொல்லுகிறார்கள். மின்சாரம் தாராளமாக வந்துகொண்டிருக்கும்போது, இரவு நேரங்களில் பம்ப்செட்டுகளை ஓட்ட வேண்டியதில்லை. எனவே பூரா வோல்டேஜும் பல்புக்கு வருவதால், அது தாங்குவதில்லை என்றும், அதனால்தான் பல்புகள் ப்யூஸ் போகின்றனவென்றும் சொல்லுகிறார்கள். எனவே அதற்காக டிரான்ஸ்பார்மரைப் பிரித்து, தனியாக இணைப்பு கொடுக்க முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும். அப்படிச் செய்தால் பல்புகள் ப்யூஸ் ஆகாது. பல்புகள் இல்லை, பல்புகள் இல்லை என்ற சத்தம் வராது. எனவே அமைச்சரவர்கள் இதையும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்று மின்சாரம் பரவலாகத் திருடு போகிறது. பகலில் 4 மணி நேரம் அல்லது 6 மணி நேரம் விவசாயத்திற்காக நாம் மின்சாரம் கொடுக்கிறோம். பம்ப்செட் இருக்கிற லைனிலே ரைஸ் மில், பிளவர் மில் எல்லாம் இருக்கின்றன. அவர்களுக்கு ஒரு மாதத்திற்கு இத்தனை யூனிட் என்று தருகிறோம். நான்கு மணி நேரம் அல்லது ஆறு மணி நேரம் விவசாயத்திற்கென்று மின்சாரம் இருந்துகொண்டிருப்பதால், அதில் கொக்கியை மாட்டி ஓட்டுகிறார்கள். அதை சில அதிகாரிகள் பிடிக்கிறார்கள்; சிலர் பிடிப்பதில்லை. இரண்டு தரப்பிலும் தவறு இருக்கின்றது. அப்படி தப்பித் தவறி ஸ்டிரிக்டாக இருக்கிறவர்கள் அவர்களைப் பிடித்தால், அவர்கள் கோர்ட்டுக்குப் போகிறார்கள். கோர்ட்டில் ஒரு கேஸ்கூட ஸ்டான்ட் பண்ணவில்லை. திருடுகிறவனைப் பிடித்து ஜெயிலில் போடுகிறோம். மின்சாரத்தைத் திருடுகிறவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் மின் இணைப்பை 'கட்' பண்ண வேண்டும். மின்சாரம் திருடினால், அவர்களுக்கு மின்சாரம் கிடையாது. வீட்டில் கொள்ளை அடிப்பதும் ஒன்றுதான்; கரன்ட் திருடுவதும் ஒன்றுதான். எனவே அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் மின் இணைப்பைத் துண்டிக்க வேண்டும். அவர்கள் இன்ஜினியர்களிடம் மரியாதை

## தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

---

### புதன்கிழமை, 1974 ஆகஸ்ட் 21.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Bifurcated Courses*

* *Q.*—THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to abolish the Bifurcated Courses in multi-purpose High Schools; and

(*b*) if so, the reason therefor?

**இரு கூறாக்கப்பட்ட பாட முறை.**

**திரு. கே. எஸ். கணபதி :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பல்வேறு நோக்கங்களைக் கொண்ட உயர்நிலைப் பள்ளிகளில் இரு கூறாக்கப்பட்ட பாடமுறையை நீக்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் காரணம் யாது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவரவர்களே, காம்பிரஹென்சிவ் ஸ்கூல்கள் என்று ஒரு புதிய முறைபற்றி தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களிடமிருந்து ஒரு குறிப்பு வெளிவந்திருக்கின்றது. அந்த அடிப்படையிலே

இல்லாமல் பேசுகிறார்கள். (குறுக்கீடு) எனவே அவர்கள் தண்டிக்கப்படக் கூடிய வகையில் சட்டத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து போர்டுகள், ஓவர்ஹெட் டாங்க்ஸ் கட்டியிருக்கின்றன. அதற்கு இணைப்புக் கொடுங்களென்று கேட்கும்போது, சில கஷ்டங்கள் ஏற்படுகின்றன. விவசாயத்திற்கு மின் இணைப்பு கேட்கும்போது, போதுமான ரெவின்யூ வரவில்லை; இன்னும் இரண்டு மூன்று பம்ப்செட்டுகளைச் சேர்க்க வேண்டுமென்று சொல்லுவார்கள். பொதுக் காரியத்திற்காக பஞ்சாயத்தில் ஓவர்ஹெட் டாங்க் கட்டுகிறோம். அதற்கு ரெவின்யூ வரவில்லை, 2 மோட்டார்களை பிடியுங்கள் என்று சொல்கிறார்கள். அதற்குரிய ரெவின்யூ வரவில்லையென்றாலும், அதற்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு நம்முடைய அமைச்சரவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய நண்பர் திரு. பாலு அவர்கள் ஒரு பிரச்சினையைப் பற்றிச் சொன்னார்கள். நாமக்கல்லுக்கு முதலமைச்சரவர்கள் வந்தபோது, விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுக்க முடியாமலிருக்கும் நேரத்தில், இரண்டு மைல், மூன்றுமைல் நீளத்திற்கு விளக்குப் போட்டார்களென்று சொன்னார்கள். அவர் சொன்ன கருத்தை, 'விவசாயத்திற்கு உள்ள கரண்டை நிறுத்தி வைத்து, கலைஞர் வந்ததற்காக விளக்குப் போட்டார்கள்' என்று மற்றவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய அமைச்சர்கள் வரும்போது, ஜெனரேட்டர் வைத்து விழா நடத்துங்கள், அப்போதுதான் வருவோம் என்று சொல்லுகிறார்கள். கும்பகோணம் கூட்டுறவு வங்கியின் பொன் விழாவில் கலந்து கொள்ள நான் போனேன். அப்போது ஜெனரேட்டர் வைத்துத்தான் விழாவுக்கு ஏற்பாடு பண்ணியிருந்தார்கள். சாதாரணமாக இரவு 10 மணிக்குமேல்தான் சப்ளை வரும். 6 மணி முதல் 10 மணி வரை தெரு விளக்குகளுக்கு சப்ளை வருகிறது. அந்தந்தக் கடைகளில் இருக்கிறவர்கள், 'சீரியல் பல்ப்' போட்டிருக்கிறார்கள். விவசாயத்திற்குள்ள கரண்டை விழாவுக்குப் பயன்படுத்தவில்லை. ஒவ்வொருவர் வீட்டிலும் இத்தனை யூனிட்வரை எரியலாம் என்று இருக்கிறது. வீட்டிலுள்ளே இரண்டு விளக்கைக் குறைத்துவிட்டு, அதை வெளியே போட்டிருக்கிறார்கள். இதைச் சொல்லி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முற்றன. அவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 6-10)

பைஃபர்கேடட் கோர்ஸஸ் உள்ள அந்தப் பள்ளிகளிலும் இந்த காம்பிர ஹென்சிவ் முறை புகுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இந்த காம்பிரஹென்சிவ் ஸ்கூல்ஸ் ஏற்படும்போது, கூடுமானவரையில் பைஃபர்கேடட் கோர்ஸஸ் இருக்கிற பள்ளிகளைத் தேர்ந்தெடுப்பது எளிதாகவும், வசதியாகவும் இருக்கிறது என்ற அடிப்படையில் அப்படி வசதி வாய்ப்புகள் இருக்கக்கூடிய பள்ளிக்கூடங்களை படிப்படியாக எடுத்துக்கொள்ளலாம் என்ற நோக்கம் இருக்கின்றது. அந்த அடிப்படையில்தான் இந்த 19, 20 பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற 20 பள்ளிகளிலும் பைஃபர்கேடட் கோர்ஸஸ் புகுத்தப்படும். நாளடைவிலே வசதி வாய்ப்புள்ள இடங்களில் அரசு மெல்ல மெல்ல கொண்டுவரும்.

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவரவர்களே, பள்ளிகளிலே வீவிங் என்ற பாடம் இருக்கிறது. அது பயன்படாத முறையில் 9வது வகுப்புடன் முடிந்து விடுகிறது. இதையும் பெரிய அளவிலே காம்பிரஹென்சிவ் ஸ்கூல்சிலே இணைக்க அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அது பற்றிய விவரமான திட்டங்களுக்கான தகவல் இல்லை. ஆனால் இப்போது என்ஜினியரிங், செக்கரடேரியல் கோர்ஸ், அக்ரிகல்சர் போன்றவற்றைக் கொண்டு வருகின்ற நிலை இருக்கின்றது. வீவிங் எந்த அளவுக்குக் கொண்டுவரலாம் என்பதுபற்றித் தனிக் கேள்வி போட்டால், அந்த காம்பிரஹென்சிவ் ஸகூல்களில் எப்படிப்பட்ட முறையைக் கையாளலாம் என்று அறிந்து அதற்கேற்றபடி செயல்படலாம்.

### *Teachers in Aided Schools in Kanyakumari*

* 62 *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there are several teachers working in Aided Schools in Kanyakumari District who have not been made permanent and given any increment even after 7 or 8 years of service; and

(*b*) if so, whether the Government will take steps to make all such teachers permanent and grant them increments as per **rules?**



### குமரி மாவட்டத்தில் மானிய உதவி பெறும் பள்ளிகளில் ஆசிரியர்கள்.

**திரு. கே. எஸ். கணபதி (திரு. டி. சந்தோஷம் சார்பில்) :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மானிய உதவி பெறும் பள்ளிகளில் 7 அல்லது 8 ஆண்டுகளுக்கு மேல் பணி புரிந்தும் பல ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்படாமலும், ஊதிய உயர்வு அளிக்கப்படாமலும் உள்ளனரா ?

(இ) ஆமெனில், விதிகளின்படி எல்லா ஆசிரியர்களையும், நிரந்தரமாக்கவும் அவர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உதவி பெறும் பள்ளி நிர்வாகத்தினர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறிய காரணத்தால், 7 அல்லது 8 ஆண்டு காலம் பணிபுரிந்த நான்கு ஆசிரியர்களுக்கு பணியை நிரந்தரமாக்கும் ஆணையும், வருடாந்திர ஊதிய உயர்வும் அளிக்கப்படவில்லை.

(இ) அந்நான்கு ஆசிரியர்களின் பணியை நிரந்தரமாக்கவும், வருடாந்திர ஊதிய உயர்வு அளிக்கவும் பயன்தரக்கூடிய நடவடிக்கைகளை எடுக்குமாறு நாகர்கோவில் மாவட்டக் கல்வி அதிகாரிக்கு ஆணையிடப்பட்டுள்ளது.

**திரு. எம். சங்கரலிங்கம் :** மாண்புமிகு தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் எந்தெந்த உயர்நிலைப் பள்ளிகளில் இந்த 4 ஆசிரியர்கள் தொடர்ந்து ஊதிய உயர்வு அளிக்கப்படாமல் இருந்தார்கள் ? அவ்வாறு அளிக்கப்படாமல் அந்த நிலை மேலும் தொடர்ந்து அந்தப் பள்ளிகளில் இருக்கின்றதா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, எல்.எம்.எஸ்; ஹைஸ்கூல், ஜேம்ஸ் டவுன் என்ற இடத்திலே ஒரு ஆசிரியர் ஊதிய உயர்வு அளிக்கப்படாமல் இருந்தார். சால்வேசன் ஆர்மி ஹைஸ்கூல், நாகர்கோவிலிலே 3 பேர்கள் விஷயத்தில் சீனியாரிடி லிஸ்ட் மற்றவைகள் பற்றி கடிதப் போக்குவரத்து நீண்ட நெடு நாட்களாக இருந்துகொண்டிருக்கின்ற காரணமாக காலதாமதம் ஏற்பட்டது. இப்போது மாவட்டக் கல்வி அதிகாரி மூலம் 4 ஆசிரியர்களுடைய கோரிக்கையும் நிறைவேற்றப்பட வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது.

[1974 ஆகஸ்ட் 21

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவரவர்களே, இது போன்ற நிலை உயர்நிலைப் பள்ளிகளில் மாத்திரம் அல்லாமல், கல்லூரிகளிலும்கூட இருக்கிறது. ஆசிரியர்களை நியமிக்கும்போது, ஆகஸ்ட் மாதத்திற்குப் பிறகு அவர்களை நியமனம் செய்து, ஏப்ரல் மாதத்தில் பணி நீக்கம் செய்துவிடுகிறார்கள். எனவே தொடர்ந்து அவர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கின்றார்கள். இது குறித்து அரசு உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதுபற்றி தனியாகத்தான் ஆராய வேண்டும்.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, அந்தத் தனியார் பள்ளிகளிலும், குறிப்பிட்ட மேனேஜ்மெண்டுகளிலும் அநியாயங்கள் நடைபெற்றிருக்கின்றன. நடவடிக்கை எடுக்க, தகுந்த சட்டங்கள் இல்லை. அரசு ஒரு சட்டத்தைக் கொண்டுவந்திருக்கின்றது. சமீபத்திலே இதற்கு ஜனாதிபதி அவர்களும் அங்கீகாரம் தந்திருக்கின்றார்கள். இந்தச் சட்டத்தின் கீழ் விதிமுறைகள் இந்த அவையில் இந்த கூட்டத் தொடரிலே வைக்கப்படவிருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, ஜனாதிபதியின் அங்கீகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கான விதிமுறைகளும் வகுக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் தொடர் கூட்டத்தில் முடிந்தால் வைக்கப்படும். இல்லாவிட்டால் தனியாகத்தான் வைக்க முடியும்.

## *Starting of New High Schools and Colleges.*

* 63 *Q.*—THIRU. M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the details about the criteria adopted to decide about the necessity to start new High Schools and Colleges at the specified place, if applications are received for starting them;

(*b*) whether the existing schools and colleges at such specified places have been affected by sanctioning the opening of new schools and colleges there; and

(*c*) if so, the names of the schools and colleges from whom such representations have been received?



1974 ஆகஸ்ட் 21]

### புதிதாக உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் ஆரம்பித்தல்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) புதிதாக உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் ஆரம்பிக்க விண்ணப்பங்கள் வந்தால், அவை குறிப்பிடும் இடத்தில் தேவைதானா என்று பார்ப்பதற்குக் கையாளப்படும் முறைகள் யாவை?

(இ) குறிப்பிட்ட இடங்களில் பள்ளிகள், கல்லூரிகள் திறப்பதற்கு அனுமதி கொடுப்பதால், அவ்விடங்களில் முன்னரே இயங்கி வருபவை பாதிக்கப்பட்டுள்ளதா?

(உ) ஆமெனில், எந்தெந்தப் பள்ளிகளிடமிருந்து இத்தகைய முறையீடுகள் வந்துள்ளன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஒரு விவர அறிக்கை@ அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

(இ) இல்லை.

(உ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. எம். சங்கரலிங்கம் :** தலைவரவர்களே, ஒரு உயர்நிலைப் பள்ளி ஆரம்பிக்க வேண்டுமென்றால், 3 மைல் சுற்றளவுக்கு பக்கத்தில் வேறு பள்ளிகள் இருக்கக்கூடாது என்று விதி இருக்கின்றது. சில இடங்களில் அந்தந்த ஊர் மக்களுடைய தேவைக்கேற்ப பல பள்ளிகள் தொடங்கியதால் சில பள்ளியாசிரியர்களுக்கு வேலையின்றிப் போகவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடுகின்றது. அரசுப் பள்ளிகளிலே அவ்வாறு ஏற்பட்டுவிட்டால், வேறு அரசுப் பள்ளிகளுக்கு மாற்றிவிடலாம். தனியார் பள்ளிகளில் அவ்வாறு ஏற்பட்டால், அரசுப் பள்ளிகளில் எடுத்துக்கொள்வதற்கு அரசு உத்தரவு வழங்கப்படுமா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இந்த விதிமுறைகளை எல்லாம் இப்போது மிகக் கண்காணிப்பாகப் பார்த்து வருகின்றோம். அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படும்போது, பக்கத்திலே உள்ள பள்ளிகளில் மாணவர்களுடைய எண்ணிக்கை குறைந்ததன் மூலம் ஆசிரியர்கள் வேலை இழக்கும்படியான சூழ்நிலை இருக்குமானால், நாங்கள் இப்போது போட்டிருக்கின்ற நிபந்தனைகளில் ஒன்று, புதிய பள்ளிகள் திறப்பதானால் அப்படி வேலை

---

@ 88 ஆம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1974 ஆகஸ்ட் 21

இழக்கும் ஆசிரியர்களை புதிய பள்ளியில் வைத்துக்கொள்கின்றோம் என்று எழுதிக் கொடுத்தால்தான், அந்த பள்ளிக்கு அங்கீகாரம் வழங்குவது என்பது. அண்மையில் கன்னியாகுமரியிலேகூட ஒரு பள்ளிக்கு அப்படிப்பட்ட நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கின்றது.

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, கல்வி அமைச்சர் அவர்கள் கூறிய இந்த விதிமுறைகள் மைனாரிடி உரிமையின் பெயரால் திறக்கப்பட இருக்கும் மைனாரிடி கம்யூனிடியினரின் பள்ளிகளுக்கும் பொருந்துமா, அது வலியுறுத்தப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதிலே மைனாரிடி, மெஜாரிடி என்று இல்லாமல் விண்ணப்பம் போடுகின்றபோது, அந்த நிபந்தனைகளை வைக்கிறோம். அந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டிருக்கின்ற வர்களுக்கு மட்டும் அனுமதி அளிக்கின்றோம்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவரவர்களே, திருச்சியில் தற்போது நாவலர் நெடுஞ்செழியனுர் கல்லூரி, ரீஜனல் இன்ஜினியரிங் காலேஜ் பக்கத்தில் நடந்து வருகிறதே, அந்தக் கல்லூரிக்கு இந்த விதிமுறைகள் அனுசரிக்கப்பட்டு வருகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இது பள்ளி களைப் பொறுத்தது. கல்லூரிகளைப் பொறுத்து இந்த நிலை ஏற்படாது. கல்லூரிகள் வேண்டுமானால், பொது மக்கள் நன்கொடையாக அரசுக்கு ரூ. 5 லட்சம் கட்ட வேண்டும். கல்லூரி கட்ட 40 ஏக்கர் நிலம் தரப்பட வேண்டும். கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடம் கட்டும் வரை, வாடகையின்றி கட்டடம் தரப் பட வேண்டும். இந்த மூன்று நிபந்தனைகளும் அந்தக் கல்லூரியைப் பொறுத்த வரையில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

(பிற்பகல் 4-10)

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவர் அவர்களே, இந்த நாவலர் நெடுஞ்செழியன் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு, அதில் மாணவர்கள் சரியாகச் சேராததனால், அங்கே உள்ள மாணவர்களின் எண்ணிக்கையைவிட ஆசிரியர்கள் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர் களுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, வகுப்பு களுக்கு ஏற்ற அளவுக்குத்தான் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள். இந்த ஆண்டு 150-க்கு மேற்பட்டவர்கள் வந்திருப்பதாகக் குறிப்பிடுகிறார்கள். காலம்



1974 ஆகஸ்ட் 21]

தாழ்த்தித் துவங்கப்படுகிறபோது, மாணவர்கள் சேர்வது ஓரளவு குறைவாகத் தான் இருக்கும். அடுத்த ஆண்டு பட்டப்படிப்பு வகுப்புகள் எல்லாம் வந்த பிறகு, மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகும்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவர் அவர்களே, அங்கே மாண வர்கள் மிகவும் குறைந்த அளவிலே இருப்பதால், அந்தக் கல்லூரியை பெண்கள் கல்லூரியாக மாற்றியமைக்க அரசுக்கு ஏதாவது உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்தக் கல்லூரியில் பெண்களையும் சேர்ப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆண்களே குறைவாக இருக்கிறார்களே, பெண்கள் எப்படி அதிகமாக வருவார்கள்?

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவர் அவர்களே, இதிலே குறிப்பிட்ட நிபந் தனைகளுக்கு உட்பட்டு கல்லூரிகள் ஏற்படுத்த விண்ணப்பம் செய்தால்கூட, சென்னைப் பல்கலைக் கழகம் ஒரு யூனிவர்சிடி கமிஷன் அனுப்பமாட்டேன் என்கிறது. எனவே அந்த வகையிலே விண்ணப்பம் செய்யும் இடங்களிலெல்லாம் கல்லூரியை அமைக்க யுனிவர்சிடி கமிஷன் அனுப்ப வேண்டும் என்று சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, விண் ணப்பம் செய்கிற அத்தனை கல்லூரிகளுக்கும் அனுப்புகிற சூழ்நிலை ஏற்படாது, ஏனென்றால் அரசாங்கத்தினுடைய நிதி நிலைமை முதலியவைகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டு பல்கலைக் கழகம் குழு நியமிக்க வேண்டும் என்று நாம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். சென்ற ஆண்டு 34 விண்ணப்பங்கள் வந்தன. அவற்றில் 5 புதிய கல்லூரிகள்தான் ஏற்படுத்துகின்ற சூழ்நிலை ஏற்பட்டது. ஆகவே கல்லூரி ஏற்படுத்த இடவசதி, மற்ற வசதி வாய்ப்புகள், தேவைகள் அத்தனையையும் அறிந்து, பல்கலைக் கழகத் துணை வேந்தரின் கருத்தை அறிந்து, அதற்கு ஏற்றாற்போல் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, செயல் நடைபெறுகிறது.

## *Craft Training*

*64 Q.—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the crafts in which training is provided in the Government High Schools for Boys and Girls;

(*b*) the standards in which this training is imparted;

(*c*) whether attendance at these classes is compulsory;

(*d*) whether any examination is conducted to test the progress of the pupils; and

(*e*) whether the marks obtained at these examinations are taken into account for promotion to the next higher standards?

### கைத்தொழில் பயிற்சி.

**திரு. கே. எஸ். கணபதி (திரு. டி. சந்தோஷம் சார்பில்):** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசினர் உயர்நிலைப் பள்ளிகளில் எந்தெந்த கைத்தொழில் பிரிவுகளில் மாணவர்களுக்கும், மாணவியர்க்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது?

(இ) எந்தெந்த வகுப்புகளில் இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது?

(உ) இந்த வகுப்புகளில் வருகைப் பதிவு கட்டாயமானதா?

(எ) மாணவர்களின் முன்னேற்றத்தைச் சோதிக்கத் தேர்வு ஏதும் நடத்தப்படுகிறதா?

(ஐ) இத்தேர்வுகளில் மாணவர்கள் பெறும் மதிப்பெண்கள், அடுத்த உயர் வகுப்புகளுக்கு அனுப்பப்படுவதற்குக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) மரவேலை, வேளாண்மை மற்றும் நெசவு போன்ற பாடங்கள் அரசினர் ஆண்கள் உயர்நிலைப்பள்ளிகளிலும், தையல் வேலை, பூவேலை போன்ற பாடங்கள் அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளிகளிலும் கைத்தொழிற் பாடங்களாகப் பயிற்றுவிக்கப்படுகின்றன. காகிதங்களினால் செய்யப்படும் சுலபமான கைவேலை முதல் வகுப்பில் பயிற்றுவிக்கப்படுகிறது.

(இ) 1-வது முதல் 9-வது வகுப்பு வரை.

(உ) ஆம்.

(எ) இல்லை.

(ஐ) வினாவுக்கு இடமில்லை.





**திரு. கே. எஸ். கணபதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு இடத்திலே பேசும்போது, இதுபோன்ற கைவேலைப் பாடங்கள் அதிகமாகப் பயன்தரவில்லை என்றும், ரேடியோ இன்ஜினியரிங் போன்ற புதிய பாடங்கள் புகுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த முறையிலே மாற்றம் ஏதும் செய்ய அரசு ஆலோசித்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இந்தக் கருத்தைத்தான் பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களை ஆராயும்படி குறிப்பிட்டிருக்கிறேன். பள்ளிகளில் வேலைவாய்ப்புக்காகப் பெறுகின்ற பயிற்சி அவர்கள் பள்ளியைவிட்டு வெளியே செல்கிறபோது உடனே வேலையை ஏற்றுக் கொள்ளும்படி இருக்குமானால், மிக மிக நன்றாக இருக்கும். தாங்களாகவே விரும்பி இத்தகைய கைத்தொழில்களைப் பயில்கின்றவர்கள் கல்லூரிகளுக்குப் போய் படிக்கின்றவர்களாக இருக்கின்றார்களே தவிர, பள்ளிகளிலே படித்த தொழில்களைச் செய்பவர்களாக இல்லை. பள்ளிகளிலே படித்த நேரமெல்லாம் வீணாகின்ற நிலைமைதான் இருக்கின்றது. ஆகவே எந்தப் பாடத்தை எடுத்துப் படித்தால், அந்தத் தொழிலைச் செய்யலாம் என்று பார்த்து அத்தகைய பாடங்களைப் புகுத்துவது என்ற முறையிலே காம்ப்ரஹென்சிவ் ஸ்கூல் ஏற்படுத்தும் கருத்து வந்திருக்கிறது. அந்த அடிப்படையில் ஆராயும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

### *Tamil Colleges*

* 65 Q.—PULAVAR O. ARIVUDAI NAMBI (on behalf of THVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Education be pleased to state.—

(*a*) whether the Government have issued orders to the effect that there may be one Post-Graduate for every three Tamil Pulavars in Tamil Colleges; and

(*b*) if so, whether the Government are aware that, consequently a number of Post-Graduates have lost their employment opportunities?

### தமிழ்க் கல்லூரிகள்.

**புலவர் ஓ. அறிவுடைநம்பி (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்):** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்க் கல்லூரிகளில் மூன்று தமிழ்ப் புலவர்களுக்கு ஒரு முதுநிலைப் பட்டதாரி இருக்கலாம் என்று அரசு ஆணை பிறப்பித்திருப்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் காரணமாக முதுகலைப் பட்டதாரிகள் வேலை வாய்ப்பு இழந்திருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

*66 Q.—PULIVAR O. ARIVUDAI NAMBI (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether any representation has been received by the Government from the Tamil Nadu Tamil College Teachers Association during December, 1973; and

(b) if so, the action taken thereon?

**புலவர் ஓ. அறிவுடைநம்பி (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்).** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத் தமிழ்க் கல்லூரி ஆசிரியர் மன்றத்தினரிடமிருந்து அரசுக்கு 1973 டிசம்பர் மாதத்தில் ஏதேனும் கோரிக்கை வந்ததா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) ஊதிய விகிதங்களை மாற்றி அமைக்க வேண்டுமென்ற இக்கோரிக்கை அரசின் பரிசீலனையிலுள்ளது.

### *Griegg Medals to Sportsmen*

*67 Q.—THIRU M. SANKARALINGAM (on behalf of THIRU K. ARIVAZHAGAN): Will the Hon. the Minister for Education be pleased to state whether the presentation of Griegg Medals to outstanding sportsmen in each district in the State, instituted under the Griegg Endowment during Pre-Independence days, is still in vogue?



### விளையாட்டு வீரர்களுக்கு கிரெய்க் பதக்கங்கள்

**திரு. எம். சங்கரலிங்கம் (திரு. க. அறிவழகன் சார்பில்):** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

நாடு விடுதலை பெறுவதற்கு முந்திய காலத்தில் கிரெய்க் (Griegg) அறநிலையத்தின் கீழ், இம்மாநிலத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு கிரெய்க் பதக்கங்கள் அளிக்கப்பட்டு வந்த நடைமுறை இன்னும் செயலில் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆம்.

### *Secondary Grade Teachers*

*68 Q.—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU K. ARIVAZHAGAN): Will the Hon. the Minister for Education be pleased to state.—

(a) the number of Secondary Grade Teachers appointed after 1st April 1970; and

(b) the number among them, whose services have been regularised?

### இடைநிலை ஆசிரியர்கள்.

**திரு. கே. எஸ். கணபதி (திரு. க. அறிவழகன் சார்பில்):** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1-4-1970-க்குப் பிறகு வேலைக்கு அமர்த்தப்பட்ட இடைநிலைத் தர ஆசிரியர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்களில் எத்தனை பேரின் பணிகள் முறைப்படுத்தப்பட்டுள்ளன ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) 2090.

(இ) 171.

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் குறிப்பு 'ஏ' பிரிவைப் பொருத்ததா அல்லது தனியார் பள்ளிகளையும் சேர்த்ததா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN: The number of Secondary Grade Teachers appointed after 1st April 1970 in 'A' Wing schools is 602 and in 'A' wing posts in 'B' wing schools is 1488 என்று இருக்கிறது.

**திரு. கே. எஸ். கணபதி :** தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளைப்பற்றிக் குறிப்பு இல்லை. 1-4-1970க்குப் பிறகு வேலைக்கு அமர்த்தப்பட்ட இடைநிலைத்தர ஆசிரியர்கள் எத்தனை பேர் என்பது கேள்வி. தனியார் பள்ளிகளைப்பற்றிய வரை பதில் அளிக்கப்படவில்லை என்று எண்ணுகிறேன். அமைச்சர் அவர்கள் இதற்குப் பதிலளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்டிருப்பது ஏ விங், பி விங் பள்ளிகளைப்பற்றித்தான். தனியார் பள்ளிகளைப் பற்றிக் குறிப்பிடவில்லை.

(பிற்பகல் 4-20)

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, 1-4-1970க்குப் பிறகு வேலைக்கு அமர்த்தப்பட்ட செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு இணையான ஊதியம் வாங்குபவர்களுக்கு ஓராண்டு ஏற்கெனவே பணிக்காலம் இருந்தால், அவர்களை வரன்முறைப்படுத்த அரசு உத்தரவிட்டிருக்கிறது. அப்படி இருந்தும், 2090 பேர்களில் 171 பேர்கள் மட்டுமே வரன்முறைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். மீதி உள்ளவர்களின் ஊதியக்காலம் ஓராண்டுக்குக் குறைவா, அல்லது வரன்முறைப் படுத்தப்படாமல் இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** 21-3-1974 அன்று அப்படிப் பட்ட உத்தரவு இடப்பட்டிருக்கிறது. ஆகவே who have completed a service of one year on the date of the order, viz. 21st March 1974 and who satisfy all the qualifications prescribed in the Special Rules for the Tamil Nadu Educational Subordinate Service may be regularised. என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் தான் இந்த வரன்முறைப்படுத்துதல் செய்யப்பட்டிருக்கிறது. 171 பேர் வரன்முறைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். மற்றவர்களுக்கு இல்லாததற்குக் காரணம் அவர்களுக்கு ஓராண்டு இருக்காது என்று கருதுகிறேன். ஆகவே தனிக் கேள்வி போட்டால், விவரமாக அறிந்து சொல்கிறேன்.

**திரு. அ. அய்யணன் அம்பலம் :** தலைவர் அவர்களே, இன்று கேள்வி நேரத்திலே 10 கேள்விகளில், இரண்டு கேள்விகள் தவிர, பாக்கியெல்லாம் கல்வி சம்பந்தப்பட்டவையாக இருக்கின்றன. அதிலும் குறிப்பாக ஒவ்வொரு நாளும் முதலிலிருந்து கல்வி சம்பந்தப்பட்ட கேள்விகள் குழப்படியாக இருக்கின்றன. ஏ விங், பி விங், சம்பளம் கூடுதல், குறைச்சல் என்று இந்தப் பிரச்சினையாகவே இருப்பதால், இதற்கு நிரந்தரமான முடிவு செய்ய அரசுக்கு ஆலோசனை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



**திரு. கே. எஸ். கணபதி :** தலைவர் அவர்களே, கேள்வி நேரம் ஒரு மணி இருக்கிறது. 10 கேள்விகள் போடப்பட்டும், எட்டுக் கேள்விகள் கல்வி பற்றிய தாக இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். மற்ற உறுப்பினர்கள் மற்ற விஷயங்கள் சம்பந்தப்பட்ட வினாக்களை எழுப்பவில்லை என்பதுதான் இதற்குப் பொருள். கேள்விக்குப் பதில் வரவில்லை என்று பொருள். கேள்விகளுக்கு ஒரு மணி நேரம் உண்டு. அதை முழுமையாகப் பயன்படுத்தவில்லை என்று வருத்தப்படலாமே தவிர, ஆசிரியர் பற்றியோ அல்லது கல்வி பற்றியோ இருக்கிறது என்று வருத்தப்படுவது நியாயம் அல்ல.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, அனுப்பப்பட்ட கேள்விகள் என்னுடைய கேள்விகளே 50 அல்லது 60 இருக்கும். ஓராண்டு, இரண்டு ஆண்டு, மூன்று ஆண்டு காலமாகியும் பதில் வராமலிருப்பதைப் பார்க்கிறேன். கேள்விக்கு பதில்கள் 42 நாட்களுக்குள் வராவிட்டால், அந்தக் கேள்விகளை வினாத் தாட்களில் போடுவது என்ற முடிவு விதிகளில் செய்யப்பட்டால் நிச்சயமாக 10 கேள்விகளுக்குப் பதில் 30 ஆவது இருக்கும். அதிலே தாங்கள் ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஒரு கேள்விக்கு பதில் வராமல் அந்தக் கூட்டத் தொடர் முடிந்துவிட்டால், அந்தக் கேள்வி அடுத்த தொடரில் வருகிறது. 42 நாட்களுக்குள் பதில் வாங்குவதற்கு, டிபார்ட்மென்டுக்கு எழுதி சீக்கிரம் பதில் வாங்குங்கள் என்று அமைச்சர்களுக்குச் சொல்லியிருக்கிறேன்.

**திரு. சி. வி. ராஜகோபால் :** தலைவர் அவர்களே, சில கேள்விகளுக்கு பதில் சொல்ல ஏராளமான பணம் செலவாகிறது. சர்க்கார் கஷ்டப்படுகிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அதைப்பற்றி நீங்கள் கவலைப்படா தீர்கள்.

**திரு. சி. வி. ராஜகோபால் :** தேவையில்லாமல் எத்தனையோ கேள்விகள் 10 கேள்விகளில் 8 கேள்விகள் கல்வி சம்பந்தமாக கேட்கப்படுகின்றன. இதனால் உறுப்பினர்களுக்கு இலேசான தலைநோவுகூட இருக்கின்றன. ஆகவே தயவுகூர்ந்து, ஆசிரியர்களுடைய குறையை மட்டு மல்லாமல், நாட்டு மக்களுடைய குறைகளையும் கலந்து கேள்விகள் கொண்டுவர எதிர்காலத்திலே ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கேள்விக்கு பதிலளிக்க அதிகச் செல வாகிறது, ஆகவே கேள்வியை ஒத்துக்கொள்ளமாட்டேன் என்று சொல்வதற்கு நமக்கு அதிகாரம் இல்லை.

[1974 மார்ச் 26

(பிற்பகல் 4-20)

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, 1-4-1970-க்குப் பின்னர் நியமிக்கப் பட்ட இடைநிலை ஆசிரியர்கள் ஏராளமானவர் ஒரு ஆண்டுகாலப் பணிக்கு மேலே உள்ளவர்களாக இருந்தும்கூட நமது தலைமைக் கல்வி அலுவலகங்களிலே உள்ள நடைமுறை காரணமாக வரன்முறைப்படுத்தப்படாமல் இருக்கின்றார்கள் என்ற உண்மையை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, அத்துடன் அந்த அலுவலகங்களிலே போதுமான அலுவலர்கள், கிளார்க்குகள் இல்லாததால்தான் அதைச் செய்ய முடியவில்லை என்று அவர்கள் சொல்லுவதையும் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அவர்களுடைய பணிக்காலம் உடனடியாக வரன்முறைப்படுத்தப்படுமா, அதற்கான உத்திரவினை உடனடியாக அரசு பிறப்பிக்குமா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அந்த நிலைமைகள்பற்றி ஆராய்ந்து அவற்றை நிறைவேற்றுவதற்கான முறையில் எந்தெந்த நடவடிக்கைகளை எடுக்க இயலுமோ அவற்றை எடுப்பதற்கு அரசு முயற்சி செய்யும்.

**திரு. அ. அய்யணன் அம்பலம் :** தலைவரவர்களே, கல்வி இலாகாவில் இப்படி 'ஏ' விங், 'பி' விங் என்றும் 'ஸி' விங் என்றும் பலவிதமான குழப்ப மான நிலைமைகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் போக்குவதற்கான முறையில் ஒரு நிரந்தரமான ஏற்பாட்டைச் செய்து இந்தக் குழப்பங்களைப் போக்குவதற்கு அரசு ஆலோசிக்குமா என்பதுதான் என்னுடைய கேள்வி. அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, கல்வித் துறையில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. அதற்குக் காரணம் வகை வகையான பள்ளிகளும் இருக்கின்றன. நாட்டிலே பல்வேறு விதமான பள்ளிக் கூடங்கள் இருக்கின்றன. அவற்றைக் கூடுமான முறையில் ஒருமுகப்படுத்த முயற்சித்து வருகிறோம். கடந்த ஐந்தாறு ஆண்டுக் காலமாகவே அதற்கு பல்வேறு நேரங்களிலே முயற்சித்து வருகின்றோம். அதற்கு எல்லோருடைய ஒத்துழைப்பும் தேவைப்படுகின்றது. இப்படிப் பிரச்சினைகள் அதிகமாக இருப்பதால்தான் கேள்விகளும் அதிகமாக எழுப்பப்படுகின்றன. கல்வித் துறையில் பல்வேறு விதமான பள்ளிகள், அரசுப் பள்ளிகள், அவற்றில் 'ஏ' விங், 'பி' விங், 'ஸி' விங் என்று பல பிரிவுகள், ஆரம்பப் பள்ளிகள், தனியார் பள்ளிகள், இவற்றைத் தவிர கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பள்ளிகள் ஒரு



1974 ஆகஸ்ட் 21]

தனிச்சபை அமைப்பின் கீழ் இருப்பவை, இப்படி ஏராளமான பிரிவுகள் இருப்பதால், அவற்றை ஒழுங்குமுறைப்படுத்துவதிலும் பல சிக்கல்கள் தோன்று கின்றன. அவற்றைத் தீர்ப்பதற்கு படிப்படியாக முயற்சிகள் செய்து வருகின்றோம்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, நிறைய பிரச்சினைகள் இருப்ப தற்குக் காரணம் பல்வேறு வகையான பள்ளிகள் இருப்பது என்று கூறினார்கள். 'ஏ' விங், 'பி' விங், இப்போது 'ஸி' விங் என்று இருக்கின்றன. இவற்றைப் பற்றிய பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் நீண்டகாலமாக இருந்து வருகின்றன. எனவே இவற்றை மொத்தமாகப் பரிசீலிக்கத்தக்க வகையில் சட்ட மன்ற உறுப் பினர்களைக் கொண்ட ஒரு குழுவினை நியமித்து, அதன் மூலமாகப் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அப்படிப் பட்டதொரு குழுவினைப் போடுவதன் மூலம் பிரச்சினைக்கு தீர்வு கிடைத்து விடும் என்று நினைக்கவில்லை. பிரச்சினைகளின் அடிப்படைத் தன்மையை ஆராய்ந்து அவற்றின்மீது பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க வேண்டி யிருக்கின்றது. பல்வேறு முறைகளை மாற்றியமைக்க வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட முயற்சியில்தான் இப்போது அரசும் பல்வேறு கட்டங்களிலே நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

## *Cattle Wealth*

*69 Q.—THIRU M. SANKARALINGAM (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that the cattle wealth of Tamil Nadu is being taken out to other States; and

(*b*) if so, whether there is any proposal with the Government to prevent this?

### கால்நடைச் செல்வங்கள்

**திரு. எம். சங்கரலிங்கம் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்) :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தின் கால்நடைச் செல்வங்கள் அயல் மாநிலங்களுக்குக் கடத்தப்படுவது உண்மையா?

(இ) ஆமெனில், அதனைத் தடுக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உண்டா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) ஆம்;

(இ) தற்போது அதைத் தடுக்க சட்டம் ஏதுமில்லை. எனவே இது சம்பந்தமாக சட்டம் இயற்றுவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது.

**திரு. எம். சங்கரலிங்கம் :** தலைவரவர்களே, 1943-44லேயே சென்னை மாநிலத்திலிருந்து அண்டை மாநிலமான திருவிதாங்கூர் பிரதேசத்திற்கு மாடு கன்றுகளை ஓட்டிச் செல்லக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருந்தது. நாகர்கோவில் பகுதி, திருவிதாங்கூர் பகுதிகளுக்கு ஓட்டிச் செல்லப்படக் கூடாது என்று தடை இருந்தது. அப்போது இருந்தது. இன்று என்ன நிலை என்று தெரியவில்லை. இப்போது நமது மாநிலத்திலிருந்து கேரளப் பகுதிக்கு இப்படி ஏராளமான மாடு கன்றுகளை ஓட்டிச் சென்று விடுவதால், இங்கே விவசாயத்திற்கு நியாயமான விலையில் மாடுகள் கிடைக்கவில்லை. பாலும் கிடைப்பது கஷ்டமாகிவிட்டது. இதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, இப்படி இந்தக் கால்நடைச் செல்வங்கள் கேரளப் பகுதிக்குக் கடத்தப்படுவதுபற்றி அரசு நன்கு உணர்ந்து, அதன் காரணமாக, அதைத் தடுப்பதற்கான சட்டத்தை நல்ல முறையில் இயற்ற வேண்டும் என்பது அரசின் ஆய்வில் இருக்கின்றது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. எம். ஆறுமுகசாமி :** தலைவரவர்களே, இப்படிக் கடத்திச் செல்லப் படும் கால்நடைச் செல்வங்கள் அங்கே எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன என்று அரசு அறியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, இதைப்பற்றி சென்ற ஆண்டிலே உலக வங்கி ஒரு ஆய்வினை நடத்தியது. அவர்கள் தமிழகத் திலிருந்து 12 கணவாய்கள் வழியாகக் கேரளத்திற்கு இந்த மாடுகள் கடத்தப் படுவதாகவும் அங்கே அவை மனிதருக்கு உணவாகப் பயன்படுத்தப்படுவ தாகவும் சொல்லியிருக்கின்றார்கள்.

**திரு. எல். பலராமன் :** தலைவரவர்களே, இப்படி ஓட்டிச் செல்லப்படும் மாடுகளைக் கணக்கெடுக்க அரசு உத்தரவிட்டிருக்கின்றதா ? ஆண்டொன்றுக்கு இப்படி எவ்வளவு மாடுகள் பக்கத்து மாநிலங்களுக்கு ஓட்டிச் செல்லப்





படுகின்றன ? கர்நாடக மாநிலத்திற்கும் ஓட்டிச் செல்லப்படுகின்றன என்று சொல்லுகின்றார்கள். இதைப்பற்றிய தகவலை அரசு தருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இதைப்பற்றி அரசு தனியாக ஏதும் கணக்கெடுக்கவில்லை. ஆனால் நமது கால்நடை வளம்பற்றிய கணக்கினை உலக வங்கி எடுத்து, அவர்கள் விசாரணை செய்து அவர்கள் தமிழ் நாட்டிலேயிருந்து ஏறத்தாழ ஐந்து லட்சம் கால்நடைகளை ஆண்டுதோறும் பிற மாநிலங்களுக்கு ஓட்டிச்செல்கின்றார்கள் என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவரவர்களே, இப்படி பிற மாநிலங் களுக்கு நமது கால்நடைச் செல்வங்கள் ஓட்டிச் செல்லப்படுகின்றன. அதன் காரணமாக நமது மாநிலத்திலே கால்நடைச் செல்வம் குறைந்து கொண்டே போவதால், விவசாயத்திற்கு வேண்டிய மாடுகள் இங்கே குறைந்து கொண்டே வருகின்றன. பால் உற்பத்தியும் குறைந்துகொண்டே வருகிறது. இதை நாம் விசாரிக்க வேண்டும் என்று சென்ற வருஷமே ஒரு ஒத்திவைப்புத் தீர்மா னத்தை இது சம்பந்தமாக தலைவரவர்களிடம் கொடுத்தேன். ஆனால் தலைவர் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை, அதற்கு அனுமதி கொடுக்கவில்லை. இப்போது ஐந்து லட்சம் மாடுகள் கடத்தப்படுகின்றன என்று சொல்லு கின்றார்கள். இதை அப்போதே ஆய்வு செய்திருந்தால், நன்றாக இருந்திருக்கும். நான் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஏற்று அதிலே ஒரு விவாதத்தை அன்றைக்கே செய்திருந்தால், பல லட்சக்கணக்கான மாடுகள் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கேள்வியைக் கேளுங்கள். நீங்கள் இப்படி லெக்சர் பண்ணக்கூடாது.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** ஆகவே இனியாவது அதைத் தடுக்க அரசு வழி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் தம்முடைய ஒத்திவைப்புத் தீர்மானத்தை தலைவரவர்கள் ஏற்றுக்கொள்ளாமல் அதற்கு அனுமதி மறுத்துவிட்டார் என்றார். அதற்கு தலைவரவர்கள் பதில் சொல்லுவார்கள். ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய்க்கு மாடுகள் விற்கப்படுவதாகக் கூறினார்கள். அது உண்மைதான். ஆனால் இறைச்சிக்கு அதிக விலை கிடைப்பதால், அங்கே கடத்தப்படுகிறது. இதற்காக ஒரு சட்டத்தையே இயற்றலாமா என்று பார்க்க வேண்டியிருக்கிறது.

(இ) ஆமெனில், அதனைத் தடுக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உண்டா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) ஆம்;

(இ) தற்போது அதைத் தடுக்க சட்டம் ஏதுமில்லை. எனவே இது சம்பந்தமாக சட்டம் இயற்றுவது குறித்து அரசு பரிசிலனை செய்து வருகிறது.

**திரு. எம். சங்கரலிங்கம் :** தலைவரவர்களே, 1943-44லேயே சென்னை மாநிலத்திலிருந்து அண்டை மாநிலமான திருவிதாங்கூர் பிரதேசத்திற்கு மாடு கன்றுகளை ஓட்டிச் செல்லக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருந்தது. நாகர்கோவில் பகுதி, திருவிதாங்கூர் பகுதிகளுக்கு ஓட்டிச் செல்லப்படக் கூடாது என்று தடை இருந்தது. அப்போது இருந்தது. இன்று என்ன நிலை என்று தெரியவில்லை. இப்போது நமது மாநிலத்திலிருந்து கேரளப் பகுதிக்கு இப்படி ஏராளமான மாடு கன்றுகளை ஓட்டிச் சென்று விடுவதால், இங்கே விவசாயத்திற்கு நியாயமான விலையில் மாடுகள் கிடைக்கவில்லை. பாலும் கிடைப்பது கஷ்டமாகிவிட்டது. இதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, இப்படி இந்தக் கால்நடைச் செல்வங்கள் கேரளப் பகுதிக்குக் கடத்தப்படுவதுபற்றி அரசு நன்கு உணர்ந்து, அதன் காரணமாக, அதைத் தடுப்பதற்கான சட்டத்தை நல்ல முறையில் இயற்ற வேண்டும் என்பது அரசின் ஆய்வில் இருக்கின்றது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. எம். ஆறுமுகசாமி :** தலைவரவர்களே, இப்படிக் கடத்திச் செல்லப்படும் கால்நடைச் செல்வங்கள் அங்கே எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன என்று அரசு அறியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, இதைப்பற்றி சென்ற ஆண்டிலே உலக வங்கி ஒரு ஆய்வினை நடத்தியது. அவர்கள் தமிழகத்திலிருந்து 12 கணவாய்கள் வழியாகக் கேரளத்திற்கு இந்த மாடுகள் கடத்தப்படுவதாகவும் அங்கே அவை மனிதருக்கு உணவாகப் பயன்படுத்தப்படுவதாகவும் சொல்லியிருக்கின்றார்கள்.

**திரு. எல். பலராமன் :** தலைவரவர்களே, இப்படி ஓட்டிச் செல்லப்படும் மாடுகளைக் கணக்கெடுக்க அரசு உத்தரவிட்டிருக்கின்றதா? ஆண்டொன்றுக்கு இப்படி எவ்வளவு மாடுகள் பக்கத்து மாநிலங்களுக்கு ஓட்டிச் செல்லப்படுகின்றன? கர்நாடக மாநிலத்திற்கும் ஓட்டிச் செல்லப்படுகின்றன என்று சொல்லுகின்றார்கள். இதைப்பற்றிய தகவலை அரசு தருமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இதைப்பற்றி அரசு தனியாக ஏதும் கணக்கெடுக்கவில்லை. ஆனால் நமது கால்நடை வளம்பற்றிய கணக்கினை உலக வங்கி எடுத்து, அவர்கள் விசாரணை செய்து அவர்கள் தமிழ் நாட்டிலேயிருந்து ஏறத்தாழ ஐந்து லட்சம் கால்நடைகளை ஆண்டுதோறும் பிற மாநிலங்களுக்கு ஓட்டிச்செல்கின்றார்கள் என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவரவர்களே, இப்படி பிற மாநிலங்களுக்கு நமது கால்நடைச் செல்வங்கள் ஓட்டிச் செல்லப்படுகின்றன. அதன் காரணமாக நமது மாநிலத்திலே கால்நடைச் செல்வம் குறைந்து கொண்டே போவதால், விவசாயத்திற்கு வேண்டிய மாடுகள் இங்கே குறைந்து கொண்டே வருகின்றன. பால் உற்பத்தியும் குறைந்துகொண்டே வருகிறது. இதை நாம் விசாரிக்க வேண்டும் என்று சென்ற வருஷமே ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை இது சம்பந்தமாக தலைவரவர்களிடம் கொடுத்தேன். ஆனால் தலைவர் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை, அதற்கு அனுமதி கொடுக்கவில்லை. இப்போது ஐந்து லட்சம் மாடுகள் கடத்தப்படுகின்றன என்று சொல்லுகின்றார்கள். இதை அப்போதே ஆய்வு செய்திருந்தால், நன்றாக இருந்திருக்கும். நான் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஏற்று அதிலே ஒரு விவாதத்தை அன்றைக்கே செய்திருந்தால், பல லட்சக்கணக்கான மாடுகள் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கேள்வியைக் கேளுங்கள். நீங்கள் இப்படி லெக்சர் பண்ணக்கூடாது.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** ஆகவே இனியாவது அதைத் தடுக்க அரசு வழி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தம்முடைய ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் தலைவரவர்கள் ஏற்றுக்கொள்ளாமல் அதற்கு அனுமதி மறுத்துவிட்டார் என்றார். [illegible] தலைவரவர்கள் பதில் சொல்லுவார்கள். ஆயிரம் இரண்டாயிரம் ரூபாய்க்கு மாடுகள் விற்கப்படுவதாகக் கூறினார்கள். அது உண்மைதான். [illegible] இறைச்சிக்கு அதிக விலை கிடைப்பதால், அங்கே கடத்தப்படுகிறது. இதற்காக ஒரு சட்டத்தையே இயற்றலாமா என்று பார்க்க வேண்டியிருக்கிறது.

**திரு. எஸ். வி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர் :** தலைவரவர்களே, வேறு மாநிலங்களுக்கு கால்நடைகள் கடத்தப்படுகின்றன என்று சொன்னார்கள். எனக்குத் தெரிந்த வரையில், கோவைப் பகுதிகளிலிருந்து தாராளமாக சாலை வழியாகவே அவை ஓட்டிச் செல்லப்படுகின்றன. அதோடு அமைச்சர் அவர்கள் இதற்காக ஒரு சட்டத்தை நிறைவேற்றலாமா என்று யோசித்து வருகிறோம் என்றார்கள். அப்படி ஒரு சட்டத்தைப் பிறப்பித்து, அல்லது அரசு ஆணை மூலம் ஒரு உத்தரவினைப் பிறப்பித்து, இப்படி வெளி மாநிலங்களுக்கு அவற்றைக் கடத்திச்செல்லாமல் கண்காணிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, இதைப்பற்றி சட்ட இலாகாவில் தனியாக அரசு உத்தரவு, ஜி. ஓ. ஒன்றின் மூலம் இதைத் தடுத்து நிறுத்த முடியுமா என்று ஆய்வு செய்யப்பட்டது. அப்படித் தடை செய்ய முடியாது என்று சட்ட இலாகாவில் கூறிவிட்டார்கள். எனவேதான் இதுபற்றிப் பேரவையில், மேலவையில் கொண்டு வந்து எப்படிச் செய்யலாம் என்று ஆராய்ந்து வருகிறோம்.

**திரு. அ. அய்யணன் அம்பலம் :** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்து இப்படி ஏராளமான மாடுகள் கேரளத்திற்குக் கடத்திச் செல்லப்படுவது உண்மைதான் என்று அரசும் ஓரளவிற்கு ஒப்புக் கொண்டிருக்கின்றது என்று தெரிகிறது. அப்படி இருக்கும்போது, விவசாயத்திற்காகப் பயன்படும் மாடுகளின் விலை ஏராளமாக ஏறிவிட்டது. இதை ஆராய்ந்து இப்போது கறவை மாடுகளை இனவிருத்தி செய்வதுபோல, விவசாயத்திற்கான மாடுகளையும் அரசு இனவிருத்தி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, வினாவானது கால்நடைகள் கடத்தப்படுவதைப்பற்றியது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுவாக இனவிருத்திபற்றிக் கேட்கின்றார்கள். விவசாயத்திற்கானாலும் பால்வளத்தைப் பெருக்குவதானாலும்—அது எந்த மாடானாலும் அது இப்படிக் கடத்திச் செல்லப்படாமல் இருக்க என்ன செய்யலாம் என்று ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

THIRU A. R. DAMODARAN: Sir, Member after Member has stated "கடத்தப்படுகிறது", "கடத்தப்படுகிறது" is done against the law. I do not think there is any law which prevents the movement of cattle from Tamil Nadu. Secondly, I do not consider it



desirable that we should stop this also, because seeing the famine-stricken specimens of our cattle, it is better we export them to States where they may dispose of them in a better manner. May I suggest to the Government that they should drop all ideas of interfering in this matter because we are also importing Sindhi cows, we are also getting cattle from Rajasthan and there is no reason at all for us to say that this is depleting the cattle wealth of Tamil Nadu?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, we are importing Sindhi cows and we are importing cattle from Rajasthan, not for the purpose of eating. The hon. Member said that only famine-stricken cattle were taken across the border. That is not correct because not only lean and hungry animals are taken across the border but the milk-yielding cattle and cattle which will be useful for agriculture are also being taken across the border.

THIRU A. R. DAMODARAN : Sir, may I invite the attention of the Hon. the Minister for Agriculture to the fact that the cost of beef is only Rs. 4 per kilogram? So, normally milk yielding cows will not be taken for eating purposes. Only such cows as do not yield milk and as will not lay calves and bulls which cannot walk will possibly be taken across the border for beef-eating purposes.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, probably the hon. Member mentioned about the price of meat in Tamil Nadu. . .

THIRU A. R. DAMODARAN : Sir, it is not meat; it is beef.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, the price of beef is Rs. 4 per kilogram in Tamil Nadu. As far as I know, the price of beef in Kerala is more than twice that amount. Therefore, these cattle are taken across teh border.

(பிற்பகல் 4-30)

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** தலைவரவர்களே, கால்நடைச் செல்வங்கள் வேறு மாநிலங்களுக்கு அளவிற்கு மீறி கொண்டு செல்லப்படுகின்றன, அதைத் தடுக்க ஆய்வு செய்யப்படுகிறது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினார்கள். அப்படித் தடுக்க சட்டம் இயற்றுவதாக இருந்தால், அது அரசியல் நிர்ணயச் சட்டத்திற்குப் புறம்பாக அமையுமே, ஒரு மாநிலத்திலிருந்து மற்ற மாநிலத்திற்கு கால்நடைகள் செல்ல தடை உத்தரவு போடுவதாக அமையுமே,

[1974 ஆகஸ்ட் 21

அப்படி வந்தால் டில்லி சர்க்காரிடத்தில் உத்தரவு வாங்க வேண்டியிருக்குமே, அப்படி டில்லி சர்க்காருக்கு ஏதாவது எழுதியிருக்கிறார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப் பினர் திரு. தாமோதரன் அவர்கள் எடுத்துக் கூறிய கருத்து அறவே புறக்கணிப்பதற்குரியதல்ல. அதே நேரத்தில் கடத்தப்படுகின்றன என்ற சொல் பொருத்தமுடையதா என்பதும் ஆராய்வதற்குரியதாக இருக்கின்றது. இப்படி கேரளாவிற்குச் செல்கிற கால்நடைகள் எப்படிப்பட்ட நிலைமையில் உள்ளன என்பதையும், அவைகள் உள்ளபடியே கடத்தப்பட்டால் தடுப்பதற்கு காவல்துறையே போதுமானதாக இருக்குமே. சட்டம் தேவையா என்பதைப் பற்றி விரைவிலே சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கூட்டி ஆராய்கிற வகையில் இந்தக் கடத்தல் என்பதை ஒத்தி வைப்பது நல்லது என்று கருதுகிறேன்.

## *Obscene Posters*

* 70 *Q.*—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to ban film posters containing obscene and naked pictures; and

(*b*) if so, the details thereof?

### ஆபாச சுவரொட்டிகள்

**திரு. எம். சங்கரலிங்கம் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திரைப்பட விளம்பரங்களில், ஆபாசப் படங்களும், நிர்வாணப் படங்களும் இடம் பெறுவதைத் தடை செய்யும் நோக்குறிப்பு அரசுக்கு உண்டா?

உ

(இ) ஆமெனில், அதன் விபரம் யாது? லூ

என்

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் :** (அ) ஆம்.

(இ) திரைப்பட விளம்பரங்களாக ஆபாச சுவரொட்டிகளைக் காட்டி வைப்பதை பயனுள்ளவகையில் தடுப்பதற்காக தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு stâ வெளிகள் (களங்கப்படுத்துவதைத் தடுத்தல்) சட்டத்தின் 2-வது law. த்தி அமைக்க அரசு கருதுகிறது. ment of



1974 ஆகஸ்ட் 21]

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவரவர்களே, இந்த ஆபாசப் படங்களில் இந்திப் படங்கள்தான் அதிகமாக தமிழ் நாட்டில் வருகின்றன. பாபி போன்ற இந்திப் படங்கள் நிறைய வந்து கல்லூரி மாணவர்கள் அதைப் போன்ற படங்களைப் பார்த்து, ரொம்பவும் கெட்டுவிடுகிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமாவென்று அறிய விரும்புகிறேன். அதோடு இந்த மாதிரிப் படங்கள் இனிமேலாவது தமிழ் நாட்டில் திரையிடப்படாமலிருக்க நடவடிக்கை எடுக்கப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் :** தலைவரவர்களே, ஆபாசப் படங்கள் எவை என்பதைப் படிப்பதற்கே வெட்கமாக இருக்கிறது. எந்தெந்த வகையிலே ஆபாசம் உள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அது தேவை யில்லை. ஆபாசப் படங்களை நிறுத்தவேண்டுமென்பதற்காக 1959-ம் ஆண்டு திறந்த வெளிகள் (களங்கப்படுத்துவதைத் தடுத்தல்) சட்டத்தின் மூன்றாவது பிரிவு, தண்டனை சட்டத்தின் 292, 292 ஏ, 294 பிரிவுகள் ஆகியவற்றில் விதித் துள்ளவைகளைக் கண்டிப்பான முறையில் செயல்படுத்துமாறு காவல் துறைத் தலைவர், சென்னை காவல் துறை கமிஷனர், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அண்மையில் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. ஆபாசப் சுவரொட்டிகளை தெருக்களில் மற்ற போக்குவரத்து உள்ள இடங்களில் ஒட்டுவதைத் தடுக்கும் பொருட்டு தமிழ் நாடு அரசு 1959-ம் ஆண்டு சட்டத்தின் கீழ் இரண்டாவது பிரிவைத் திருத்தி அமைக்கக் கருதுகிறது.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** தலைவரவர்களே, திரைப்படங்கள் வெளியிடுவது சென்ஸார் செய்யப்படுகிறது. அப்படி சென்ஸார் செய்யப்பட்ட பிறகு போஸ்டர்கள் அச்சடிக்கச் செய்வதற்கு அரசினிடத்தில் ஏதாவது அதிகாரம் இருக்கிறதா? இதுபற்றி சட்டம் கொண்டுவரப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, போஸ்டர்களில் ஆடைகள் மிக அதிகமாக சென்ஸார் செய்யப்படுவதை இன்றைக்குக் கண்டித்துத்தான் காவல் துறையினர் ஆங்காங்கே நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். இதற்குப் புதிதாக சட்டங்கள் தேவையில்லை. இருக்கிற சட்டங்களைக் கடுமையாக்குவதன் மூலம் ஆபாசச் சுவரொட்டிகளைத் தடுக்க முடியுமென்று காவல் துறையினர் நம்புகிறார்கள்.

**திரு. ஏ. பாலசுப்பிரமணியம் :** தலைவரவர்களே, இப்போது ஆபாசச் சுவ ரொட்டிகள்பற்றிச் சொன்னார்கள். சில விடுதிகளில் ஆபாச நடனங்கள் நடப்பது தடை செய்யப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, விடுதிகளைப் பொறுத்த வரை, அவ்வப்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பலர் கைது செய்யப்பட்ட செய்திகள் பத்திரிகைகளில் வருவதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அறிவார்கள் என்று நம்புகிறேன்.

**திரு. எல். பலராமன்:** தலைவரவர்களே, எப்படியிருந்தால் ஆபாசம் என்று கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறது, இதற்கான நிலைகள் என்னவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இவைகளையெல்லாம் அறிய விரும்புவது அவ்வளவு நல்லதல்ல.

**திரு. சி. வி. ராஜகோபால்:** தலைவரவர்களே, ஆபாசம் என்பதற்கு டெஃபனிஷன் என்னவென்று தெரியவில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, டெஃபனிஷன் இல்லாதது தான் ஆபாசம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்.

### (1) ஆளுநரிடமிருந்து செய்தி.

MR. CHAIRMAN : I have received a message from the Governor recommending to the Legislative Council the consideration of the Tamil Nadu Appropriation (No. 3) Bill, 1974.

### (2) பேரவையிலிருந்து செய்தி.

MR. CHAIRMAN : I have also received a message from the Hon. Speaker transmitting a copy of the Tamil Nadu Appropriation (No 3) Bill 1974 (L.A. Bill No 41 of 1974) as passed by the Legislative Assembly and signed by him for the recommendation of the Council and certifying that the Bill is a Money Bill within the meaning of Article 199 of the Constitution of India.





## 3. கவன ஈர்ப்பு.

### அரசினர் 'பி' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து பதவி உயர்வு அளிக்கப்பட்டு, கல்லூரிகளில் பணி புரியும் பட்ட மேற்படிப்புப் பணியாளர்கள் பாதிக்கப் பட்டிருப்பது குறித்து

THIRU G. SWAMINATHAN : Sir, I beg to call the attention of the Hon. the Minister for Education to a matter of urgent public importance, namely, the discrimination by the Department of Collegrate Education between the Post-Graduate staff working in Government Colleges who have been promoted from 'A' and 'B' Wing High Schools, contrary to the Memorandum of the Secretary to Government, Education Department No. 77645, F2/72-9, dated 28th August 1973 since hundreds of Post-Graduate staff working in Government Colleges who have been promoted from the 'B' Wing Government High Schools have been affected in pay protection, regularisation, promotions and Provident Fund benefits.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, தமிழ்நாடு கல்வி சார்புப் பணிகளுக்கான தனிவிதிகளின்படி போதகாசிரியர் மற்றும் செய்முறை விளக்குநர் பதவிகளுக்கு கீழே குறிப்பிட்டவாறு நியமனம் செய்யலாம்: (1) நேரடி நியமனம் அல்லது (2) இதே பணியில் குறைந்த சம்பள விகிதத்தில் உள்ள ஏதாவது ஒரு பதவியிலிருந்து பதவி உயர்வு மூலம், அல்லது (3) வேறு எந்தப் பணியிலிருந்து மாற்ற வாயிலாக நியமனம். இதே போல் உதவிப் பேராசிரியர் பதவிக்கும் கீழே குறிப்பிட்டவாறு நியமனம் செய்யலாம்: (1) நேரடி நியமனம் அல்லது, (2) போதகாசிரியர் மற்றும் செய்முறை விளக்குநர் பதவிகளில் இருந்து பதவி உயர்வு மூலம் அல்லது (3) பத்தி (2)-ல் குறிப்பிட்டுள்ளபடி நியமனம் பெற தகுதியுள்ளவர்கள் இல்லையென்றால் (அ) பயிற்சிக் கல்லூரிகளில் உள்ள உதவிப் பேராசிரியர்கள், மற்றும் பள்ளி துணை ஆய்வாளர்கள், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியைகள் முதல்நிலை அல்லது (இ) பள்ளி துணை ஆய்வாளர்கள், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்கள், தலைமை ஆசிரியைகள் இரண்டாவது நிலை மற்றும் பண்டிதர்கள் மற்றும் முன்ஷி முதல் நிலையிலிருந்து பதவி உயர்வு அல்லது (உ) வேறு எந்தப் பணியிலிருந்தாவது மாற்ற வாயிலாக நியமனம். இப்பதவிகளுக்கு நியமனம் செய்யும் அதிகாரி, கல்லூரிக் கல்வி இணை இயக்குநர். இப்பதவிகளுக்கு முறையான நியமனம் அரசு பணியாளர் தேர்வாணைக்குழு மூலம் செய்யப்படவேண்டும்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 ஆகஸ்ட் 21

மேலே குறிப்பிட்ட விதிகளின்படி, பள்ளி ஆசிரியர்களை போதனாசிரியர்/செய்முறை விளக்குநர்கள், மற்றும் உதவிப் பேராசிரியர் பதவியில் தற்காலிகமாக, தேர்வாணைக் குழுவின் இசைவு பெறும் வரை கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் நியமனம் செய்வதுண்டு. ஏ பிரிவு பள்ளி ஆசிரியர்களுக்குத் தரப்படும் எல்லா சலுகைகளையும், பி பிரிவு பள்ளி ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஏ பிரிவு பள்ளி ஆசிரியர்களுக்குப் பொருந்தும் நிபந்தனைகளின் பேரில்தான், பி பிரிவு ஆசிரியர்களுக்கு கல்லூரிக் கல்வி துறையில் நியமனம் மற்றும் பதவி உயர்வு வரன்முறைப்படுத்தல் போன்ற எல்லா சலுகைகளையும் விதிகளின்படி கொடுக்கவேண்டும்.

பி பிரிவு பள்ளி ஆசிரியர்களை அரசினர் கல்லூரிகளில் முறையாக எடுத்துக் கொள்ள நடவடிக்கை துவங்கப்பட்டுள்ளது. ஏ பிரிவு பள்ளி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் எல்லா சலுகைகளையும் வரன்முறைப்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அரசினர் கல்லூரிகளில் போதனாசிரியர்/செய்முறை விளக்குநர்கள்/உதவிப் பேராசிரியர்களாக நியமனம் பெற்ற பி பிரிவு பள்ளி ஆசிரியர்கள் தாங்கள் ஏற்கெனவே மாவட்ட கழக வருங்கால வைப்பு நிதிக்கு செலுத்தி வந்த முறைப்படி “பொது வைப்பு நிதிக்கு” இவர்களைச் சேர்த்துக் கொள்ளும்படி ஆணையிடும் வரை, தொடர்ந்து செலுத்த அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, இந்த ‘ஏ’ பிரிவு பள்ளிகளிலிருந்தும், ‘பி’ பிரிவு பள்ளிகளிலிருந்தும் முன்பு பணியாற்றியவர்கள் தற்சமயத்தில் கல்லூரிகளில் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களிலே பதவி உயர்வு கொடுக்கிறபோது, ஒரே நாளில், ‘ஏ’ பிரிவு, ‘பி’ பிரிவு ஆகிய இரண்டு பிரிவுகளில், ‘ஏ’ பிரிவிலிருந்து வந்தவர் ஜூனியராக இருந்தாலும் கூட, அவருக்கு இந்த ‘பி’ பிரிவிலிருந்து வந்தவர் சீனியராக இருந்தாலும்கூட, அவருக்குக் கொடுக்காமல், ‘ஏ’ பிரிவிலிருந்து வந்தவருக்குப் பதவி உயர்வு கொடுக்கப்பட்டது என்று சொல்லப்பட்டது. இதுபோல எத்தனை பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று அறிய விரும்புகிறேன். ஜி.ஓ.விற்கு மாறாக ஏன் கொடுக்கப்பட்டது என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



1974 ஆகஸ்ட் 21]

(பிற்பகல் 4-40)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அது பற்றிய விவரங்கள் என்னிடம் இல்லை. ஆனால் அதில் ஏற்பட்ட சங்கடங்களை ஒட்டி, திட்டவட்டமாக இப்போது அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. ‘ஏ’ பிரிவுக்குக் கொள்ளப்படுகிற எல்லாச் சலுகைகளும் ‘பி’ பிரிவிற்கும் கொடுப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

THIRU G. SWAMINATHAN : Sir, I called the attention of the Hon. Minister on the basis of the Government Memorandum which is dated 28th August 1973. The Director of Collegiatee Education has not followed the instructions in that Government Memorandum and that is what I am bringing to the notice of the Hon. Minister. I have been informed that those who are juniors from the ‘A’ wing Schools have been given promotion as Assistant Professors, overlooking the seniority of those from the ‘B’ wing Schools. If they have been given such promotions contrary to the instructions in the Government Memorandum, how many people have been given such promotions? What is the action that the Government are going to take in the matter?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அந்த ஆணைப்படிதான் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அதிலே பல சங்கடங்கள், சந்தேகங்கள் ஏற்பட்டன. அந்த நிலைமைகளைக் கண்டறிய வேண்டுமென்று சொல்லி அரசு உத்தரவிட்டு, ‘ஏ’ பிரிவிற்குக் கொடுக்கப்படுகிற எல்லாச் சலுகைகளும் ‘பி’ பிரிவுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

THIRU G. SWAMINATHAN : Sir, the Government Memorandum clearly says thus—“ The Director of Collegiate Education is also informed that the Government consider that all the concessions applicable to teachers appointed from the A wing to Collegiate Education side should be made applicable equally to all those appointed from the B wing also, B wing persons should be appointed on the same terms and conditions as is done in the case of A wing teachers on their promotion, appointment to the Collegiate Education side and that their services will have to be regularised and all benefits allowed to them according to the rules ”. This Government Memorandum was issued on 28th

[Thiru G. Swaminathan] [1974 ஆகஸ்ட் 21

August 1973. Contrary to this Memorandum, some action has been taken by the Director. Why did he take action contrary to the Government Memorandum and what was the necessity for that? Why has he not followed the Government Memorandum?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இது தான் நடைமுறையில் கடைப்பிடிக்கப்பட வேண்டும். அது சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## 4. அரசின் தீர்மானம்

### கச்சத்தீவு பற்றிய ஒப்பந்தம் குறித்து.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இன்று காலையில் சட்டப்பேரவையில் திருத்தத்துடன் முன்மொழிந்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மேலவையில் நான் இப்போது முன்மொழிகிறேன் :—

"இந்தியாவுக்குச் சொந்தமானதும் தமிழ்நாட்டுக்கு நெருங்கிய உரிமைகள் கொண்டதுமான கச்சத்தீவுப் பிரச்னையில் மத்திய அரசு எடுத்துள்ள முடிவு பற்றி, மேலவை தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, மத்திய அரசு இதனை மறுபரிசீலனை செய்து, கச்சத் தீவின் மீது இந்தியாவிற்கும் அரசுரிமை இருக்கும் வகையில் இலங்கை அரசுடன் செய்துள்ள ஒப்பந்தத்தைத் திருத்தியமைக்க முயற்சி எடுத்து, தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பு அளிக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறது".

தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை நான் இந்த மன்றத்தில் முன்மொழிகிறேன். ஏற்கெனவே, பேரவை மேலவை ஆகிய அவைகளிலுள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்து, இந்தக் கருத்துடைய தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறோம். இப்போது குறிப்பிட்ட அவைகளிலே இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவது நமது உணர்வுகளுக்கும் நியாயங்களுக்கும் மேலும் வலு அளிக்கும் என்கின்ற அடிப்படையில் ஒன்றாக எடுத்துக் கூறி, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை கூறிய பிறகு நான் ஏதாவது கூறவேண்டுமென்று இருந்தால், இறுதியில் கூறுவேன் என்று எடுத்துச் சொல்லி, இந்தத் தீர்மானத்தை முன் மொழிகிறேன். வணக்கம்.



1974 ஆகஸ்ட் 21]

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"இந்தியாவுக்குச் சொந்தமானதும், தமிழ்நாட்டுக்கு நெருங்கிய உரிமைகள் கொண்டதுமான கச்சத்தீவுப் பிரச்னையில் மத்திய அரசு எடுத்துள்ள முடிவு பற்றி, மேலவை தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு, மத்திய அரசு இதனை மறு பரிசீலனை செய்து, கச்சத் தீவின் மீது இந்தியாவிற்கு அரசுரிமை இருக்கும் வகையில் இலங்கை அரசுடன் செய்துள்ள ஒப்பந்தத்தைத் திருத்தியமைக்க முயற்சி எடுத்து, தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பு அளிக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறது".

தீர்மானத்தின் மீது பேசுவதற்கு 12 பேர் பெயர் கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு அப்ரோப்பிரியேஷன் பில், எலெக்டிரிஸிட்டி பட்ஜெட் எல்லாம் இருக்கின்றன. பேசுகிறவர்கள் சுருக்கமாகப் பேச வேண்டும்.

*** திரு. எம். ஆறுமுகசாமி :** தலைவர் அவர்களே, கச்சத் தீவு குறித்து மத்திய அரசு இலங்கையுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தை மாற்றி, புனர்பரிசீலனை செய்து, நம்முடைய நாட்டின் இறையாண்மை அந்தத் தீவின் மீது இருக்கும்படியாகக் கோரும் முதலமைச்சர் அவர்களுடைய இந்தத் தீர்மானத்தின் மீது காங்கிரஸ் கட்சியின் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்தப் பிரச்சினைகள் பெரும்பாலும் மத்திய சர்க்கார், பாராளுமன்றம் ஆகியவைகளின் அதிகாரத்திற்குட்பட்டவையாகும். இருப்பினும் கூட அந்தக் குறிப்பிட்ட தீவில் இந்திய அரசுக்கு எப்படி இறையாண்மை இருக்க வேண்டுமென்று நாம் எண்ணினோமோ, கூறினோமோ, அது போலவே அந்த இறையாண்மை இந்தத் தேசத்திற்குக் கிடைக்கிறபோது, அதன் வாயிலாகத் தமிழ் மாநிலத்திற்குக் கிடைக்கிறது. ஆகவே, அதுபற்றி இந்த அவையிலே நம்முடைய கருத்துக்களைக் கூறுவதில் தவறில்லை என்று நான் கருதுகிறேன். இருப்பினும் கூட, இந்தத் தீர்மானத்தின் மீது, இந்த அவையின் கௌரவத்திற்கேற்ற முறையில் நாம் பாராளுமன்றத்தினையும், மத்திய அரசினையும் விமர்சிக்கும்போது, நம்முடைய எல்லைக்குட்பட்டு விமர்சிக்க வேண்டும் என்றும் நான் முதலாவதாக இந்த அவையைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கச்சத் தீவுப் பிரச்சினை இன்று நேற்றைய பிரச்சினையல்ல. நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகின்ற பிரச்சினை. பிரிட்டிஷார் நம்முடைய தேசத்தை ஆண்டபோது, அவர்களாலே ஸ்ரீலங்காவும், பர்மாவும், இன்னும் பல கீழ்த்திசை நாடுகளும் பாகிஸ்தானையும் சேர்ந்த பழைய இந்தியாவின் ஒரு பகுதியையும் கூட அவர்கள் ஆண்டு வந்தார்கள். எல்லா நாடுகளையும் சேர்த்து அவர்கள் ஆண்டுகொண்டிருந்த காரணத்தால், பல்வேறு நாடுகளின்

[திரு. எம். ஆறுமுகசாமி] [1974 ஆகஸ்ட் 21

எல்லைகளைத் திட்டவட்டமாக வகுக்கத் தவறிவிட்டார்கள். அப்படி வகுக்க வேண்டிய அவசியம் அன்றைக்கு அவர்களுக்கு ஏற்படவில்லை. அதனாலே, இன்று வடக்கே சீனாவுக்கும் நமக்கும் எல்லைத் தகராறு இருக்கிறது. அங்கும் நாம் அளந்து கல் போடவில்லை. யாருமே போகாத பகுதிகளாக பனி மூடியிருந்தால், நாம் நமக்கென்று பழைய புராணங்களிலுள்ள மேற்கோள்களைக் காட்டியபோது, அவர்கள் அதைக் கேட்டு அவர்களுக்கும் உரிமை கொண்டாடி, சீனாவுக்கும் இந்தியாவுக்கும் 'அக்சாய் சின்' பகுதியில் எல்லைத் தகராறு ஏற்பட்டதைப் பார்த்தோம். அதைப்போலவே இந்தக் கச்சத் தீவு யாருக்கும் சொந்தமானதல்ல, அது "நோ மேன்ஸ் லாண்ட்" போல இருந்தது. அதில் மனிதர்கள் வாழ்கின்ற நிலைமை இல்லாததன் காரணமாக அது யாருக்குச் சொந்தம் என்பதில் இரண்டு நாடுகளுக்கும் இடையே தகராறு வந்தது. இந்தப் பிரச்சினையைப் பார்க்கிறபோது, கச்சத் தீவு என்பது இரண்டு நாடுகளும் தங்களுக்கு உரிமை கொண்டாடுகின்ற ஒரு பகுதியாக இருந்ததே தவிர, ஏதாவது ஒரு நாடு அந்தப் பகுதியின் மீது இறையாண்மை செலுத்தி வந்த ஒன்றாக இருந்ததில்லை. எனவே நாம் சில காலம் கழித்த பிறகு, நாம் அனுபவித்து வந்த சில உரிமைகள் தடுக்கப்பட்டபோது, அந்தத் தீவின் மீது இறையாண்மை உரிமை வேண்டுமென்று கோர ஆரம்பித்தோம். அடுத்த நாட்டுக்காரர்களும் அதன் மீது உரிமை கோர ஆரம்பித்தார்கள். இதன் மூலமாக ஒரு தகராறு ஏற்பட்டது. இப்படி அண்டை நாடுகளோடு ஏற்படும் தகராறுகளை, வெளியில் மூன்றாவது நாட்டினுடைய மத்தியஸ்துக்கோ அல்லது வேறு பல சர்வ தேச நீதி மன்றங்களுக்கோ கொண்டு செல்வது நமக்கு அனுபவ ரீதியாக லாபகரமாக இருந்ததில்லை என்று கருதியதாலும், நட்பு அதன் மூலமாகப் பாதிக்கப்படுகிறது என்று கருதியதாலும், நேரடியாக அந்த அண்டை நாடுகளோடு பேசி அவற்றைத் தீர்த்துக்கொள்ளலாம் என்ற கொள்கையை மத்திய அரசு கடைப்பிடித்து வருகிறது.

[பிற்பகல் 4.50]

அதன்படி ஸ்ரீலங்காவுடன் நாம் பேசிக் கொண்டு வந்தோம். நாமும் நம்முடைய தரப்பில் நியாயங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இந்திய அரசு, கச்சத் தீவின் மீதுள்ள இறையாண்மை உரிமைகளை தன்னுடைய ஒப்பந்தத்தின் வாயிலாக ஸ்ரீலங்காவுக்கு அளித்ததென்றால், இந்திய அரசு உரிமையைப்பற்றிக் கூறாமல் இருந்ததென்று பொருளல்ல. இந்திய அரசும் உரிமையைக் கூறியது. இந்திய அரசியல் கட்சிகள் அனைத்தும் கோரின. அந்தக் கோரிக்கை இன்றைக்கு விட்டுக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன்மீது தமிழ் நாட்டிலுள்ள அரசைக் கலந்தாலோசிக்கவில்லை, தமிழ் நாட்டிலுள்ள அரசின் கருத்துக்களை முற்றிலும் கேட்கவில்லை என்பதான ஒரு குற்றச்சாட்டு



1974 ஆகஸ்ட் 21] [திரு. எம். ஆறுமுகசாமி]

இருந்து வந்தது. ஆனால் இப்போது, கலந்தாலோசித்தார்கள்; கேட்டார்கள்; ஆனால் அவர்களுடைய கருத்துக்களை ஏற்றுக்கொண்டு மத்திய அரசு அந்த முடிவை எடுக்கவில்லை என்பதாகக் கூறப்படுகிறது. இந்த இடத்திலே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசுதான் நம்முடைய நேச தேசங்களுடைய உறவுகள்பற்றிய கொள்கைகளை நிர்ணயிக்கும் நிலையில் இருக்கிறது. அது ராணுவ ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் தன்னுடைய தொடர்புகளை எப்படி வைத்துக்கொள்ள வேண்டுமென்று எண்ணும் இடத்தில் இருக்கிறது.

இப்போது இந்தியா ஒரு பெரிய வல்லரசு நாடு என்று சொல்லப்படுகிறது. பங்களா தேச யுத்தத்திற்குப் பிறகு இது வலுவுள்ள நாடாகக் கருதப்படுகிறது. மேலும் அணு ஆயுதச் சோதனைக்குப் பிறகு, இன்றைய தினம் ராணுவ பலம் மிக்க நாடு என்று இந்தியாவைப்பற்றிப் பிரச்சாரம் செய்யப்படுகிறது. இதனை சாக்கிட்டு இந்தியாவின் பக்கத்திலுள்ள அண்டை நாடுகளுக்கு எந்த நேரத்திலும் ஆபத்து ஏற்படலாமென்று பயம், பீதி உண்டாக்கப்பட்டு வருகிறது. அமெரிக்கா இந்து மகாக் கடலில் ராணுவத்தளத்தை அமைக்க வேண்டுமென்று இன்றைக்கு சைனா பிரச்சாரம் செய்கிறது. இந்தியாவினுடைய இடத்தை சைனா பிடித்துக்கொள்ள வேண்டுமென்பதற்காக, இந்தியாவுக்கு விரோதமாகவுள்ள அந்நிய சக்திகளோடு சைனா உறவு கொண்டுள்ள நேரத்தில், இந்திய மகாகடலின் கரையோரம் உள்ள நாடுகளின் நட்பை அதிகமாகக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. பிரதமரவர்கள் கடந்த மாதம் 21-ம் தேதி வாக்கில், நாங்கள் சந்தித்தபோது தனியாகப் பேசும்போது குறிப்பிட்டார்கள். இந்தியா தன்னுடைய ராணுவ பலத்தால் பாகிஸ்தானை கபளிகரம் செய்யுமென்று பாகிஸ்தான் சொல்லுவதுபோல், ஸ்ரீ லங்காவையும் பயமுறுத்தி வைத்திருக்கிறார்கள். இந்தத் தீவை அவர்களுக்குக் கொடுப்பதில் நமக்கு வலுவான சான்றுகள் இல்லை—எந்தப் பாதகமும் நமக்கு ஏற்படாது. நாம் இதுவரை அத்தீவின் போது இறையாண்மை உரிமையைப் பிரயோகிக்கவில்லை; நாம் அங்கே குடியேறவில்லை; அங்கே நம் ராணுவம், சட்டம், போலீஸ் போகவில்லை. அப்படியுள்ள அந்தச் சிறிய பகுதியை அவர்களுக்குக் கொடுப்பதின் மூலமாக இந்திய நாடு அண்டை நாடுகளுடன் சண்டைக்கு வராது; இந்தியாவுக்குப் பக்கத்திலுள்ள நாடுகளுக்கு எந்தவித ஆபத்தும் இந்தியாவால் ஏற்படாது என்ற அபிப்பிராயத்தை அவர்களுக்கு ஏற்படுத்தும். மேலும் இந்த இரு நாடுகளுக்கிடையே நல்லுறவு ஏற்படும். அதற்காகத்தான் இந்த உடன்படிக்கை அவசியமென்று சொன்னார்கள்.

[திரு. எம். ஆறுமுகசாமி] [1974 ஆகஸ்ட் 21

இந்த உடன்படிக்கை மூலம் நாம் சில உரிமைகளைப் பெற்றிருக்கிறோம். நம்முடைய எந்த உரிமைகள் பாதுகாக்கப்படாமல் போய்விடுமென்று கருதினோமோ, அவைகளெல்லாம் உத்தரவாதம் செய்யப்பட்டிருக்கிறது. இன்றைக்கு, ஸ்ரீலங்கா பாஸ்போர்ட் இல்லாமல் இந்தியர்கள் அந்தத் தீவுக்குப் போகலாம்; ஸ்ரீ லங்கா உதவியோடு அல்லது உதவியில்லாமல் அங்கே தொழிலை நாம் செய்யலாம், நமக்கு மீன் பிடிப்பு உரிமை அந்தக் கடலில் உண்டு. ஒருவேளை அவர்கள் இதை மீறினால், இந்த ஷரத்துக்கு மீறிப் போனால், நாம் இறையாண்மையை மாற்றிக்கொள்ளும் வாய்ப்பும் இந்த நிபந்தனைகளின் மூலம் இருப்பதால், இன்றைய தினம், இப்போதுள்ள ஒரு நிலையில், இந்த ஒப்பந்தத்தை வரவேற்பதுதான் நியாயமானது என்று கருதுகிறேன். இந்த ஒப்பந்தத்திற்கு எதிராக இப்போது ஒரு நிலையை எடுத்தோமானால், அது சர்வதேச ரீதியாக மத்திய அரசுக்கு பலகீனத்தை ஏற்படுத்தும். அதே நேரத்தில் நாம் ஆட்சேபணை தெரிவிப்பது மட்டும் போதுமென்று சொன்னால், அதை ஏற்றுக்கொள்கிறேன். அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நான் சொன்னேன். நமது ஆட்சேபணை கருத்துக்களை இந்த ஒப்பந்தத்திற்கு முன்னால் சொன்னால், இன்னும் சில நிபந்தனைகளைக் கூடுதலாகச் சேர்க்கவும் உதவியாக இருக்குமென்று கருதினேன்.

**திரு. ம. பொ. சிவஞானம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு தகவல். முதல்வரவர்கள், கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டிய நேரம், ஒப்பந்தம் முடியாமல் இருந்த நேரமல்ல. ஒப்பந்தம் முடிந்து, அதிகாரபூர்வமாக வெளியாகிய நேரம். அந்த நேரத்தில் ஒப்பந்தம் முடியாததால், தான் வேறுவிதமாக சொன்னதாகச் சொல்லுவது சரியான தகவலல்ல.

**திரு. எம். ஆறுமுகசாமி :** ஒப்பந்தம் நடந்ததாகப் பத்திரிகையில் செய்தி வந்ததே தவிர, ஒப்பந்தத்தில் என்ன முடிவு (குறுக்கீடு) எடுக்கப்பட்டதென்பது தெரியாதென்று அந்தக் கூட்டத்தில் சொல்லப்பட்டது. அன்றைக்கு நாம் எடுத்துக்கொண்ட முடிவெல்லாம் மாநில அரசை இதில் கலந்துகொள்ளவில்லை, கலந்துகொண்டிருக்க வேண்டும் என்பதுதான். இந்த விஷயத்தில் மாநில அரசின் கருத்துக்களை மத்திய அரசு கேட்டிருக்க வேண்டும் என்பதுதான். அதற்கு இன்றைய அளவில்கூட நான் உடன்பாடு உடையவன்தான். ஏனென்றால் அதில் மாநில அரசு சம்பந்தம் உடையது. தமிழ் மாநிலத்தை தமிழக மாநில அரசும் ஆளுகிறது, மத்திய அரசும் ஆளுகிறது. எனவே இரண்டு அரசுக்கும் இறையாண்மை உரிமையுள்ள ஒரு பகுதி இது. அப்படிப்பட்ட ஒரு பகுதி பற்றிய முடிவை எடுக்கும்போது, மாநில அரசையும் கலந்து கொண்டிருக்க வேண்டுமென்பதை ஏற்றுக்கொண்டோம் என்பதை மட்டும் தெரிவித்துக்கொண்டு இந்தத் தீர்மானம் இந்த நிலையில் தேவையில்லாதது என்று ஆட்சேபித்து, முடிக்கிறேன்.



1974 ஆகஸ்ட் 21]

* திரு. ஆர். சக்தி மோகன் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த அவையில் முதல்வரவர்கள் கொண்டு வந்திருக்கிற கச்சத் தீவு பற்றிய தீர்மானத்தை எனது கட்சியின் சார்பிலே தேவையானது, காலத்திற்கு உகந்தது என்ற அடிப்படையில் ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

கச்சத் தீவுப் பிரச்சினை இப்போது தேசியப் பொதுப் பிரச்சினையிலிருந்து ஒரு கட்சிப் பிரச்சினையாக மாறியதற்கு வருந்தாமல் இருக்க முடியாது. சக உறுப்பினர்கள் அவரவர்களுடைய விருப்புகளுக்கு ஏற்றாற்போல் இந்தப் பிரச்சினையைப் பற்றி விமர்சித்தாலும், அது தேசியப் பிரச்சினை என்ற அடிப்படையை விட்டு விலகியிருக்கிறது. ஆளுங் கட்சி, ஆளப்படும் கட்சி என்ற அடிப்படையில், ஆளுங் கட்சியால் செய்யப்பட்ட ஒப்பந்தத்தை நாம் ஆதரித்துத் தீர வேண்டுமென்ற அடிப்படையில் மேலும் கீழும் சில விமர்சனங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. இந்த கச்சத் தீவுப் பிரச்சினை இன்றைக்கு கைவிட்டுப் போய்விட்டது. இது முடிந்துபோன ஒரு பிரச்சினை என்று சொல்வதைவிட, முடித்து வைக்கப்பட்ட பிரச்சினை என்றுதான் சொல்ல வேண்டும். நமக்குள்ள உரிமையைப்பற்றி யோசிக்காமல், நமது கச்சத் தீவு பற்றி நம்மைக் கலந்துகொள்ளாமல், மத்திய அரசு ஒப்பந்தம் செய்து விட்டது. மேலும் பாராளுமன்றத்தை விட, நிர்வாகத்திற்கு அதிக அதிகாரம் இருக்கிறதென்ற புதிய முறையை ஏற்படுத்தி, ஜனநாயகத்திற்கு மாறாக மத்திய அரசு இந்த ஒப்பந்தத்தைச் செய்துகொண்டிருக்கிறது. இது தன் மூப்பான ஒப்பந்தமென்றே நான் கருதுகிறேன். கச்சத் தீவு யாருக்குச் சொந்தம் என்பதைப்பற்றி விளக்கவோ, விமர்சிக்கவோ தேவையில்லை. புராண காலத்திலிருந்தே அந்தத் தீவு தமிழர்களுக்குச் சொந்தம் என்பதை கம்பன் காவியத்திலிருந்து அறியலாம். அதற்கு வாலித் தீவு என்றுகூட பெயர் கொடுத்திருக்கிறார்கள். அந்த இடத்தில்தான் வாலி போராட்டத்திற்

(பிற்பகல் 5-00)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

காகத் தயார் செய்தான் என்று காவியத்தில்கூட வருகிறது. பத்திரம், பட்டா, பாத்தியதை உரிமை எல்லாம் ஏராளமாக இருக்கின்றன. குறிப்பாக அவை வரலாற்று உண்மை மட்டும் அல்ல; சரித்திரபூர்வமாகவே 1603-ல் தலைமன்னார் வரை சேதுபதிக்கு உரிமையாக இருந்தது என செப்பேடு உள்ளது. கம்பெனி வேண்டுகோளைப் புறக்கணித்து சேதுபதி அரசின் உரிமையை ஆங்கில அரசு ஏற்றது. விக்டோரியா பேரரசியாரும் இதனை உறுதிப்படுத்தி உள்ளார்கள். 1880-82 ஆம் ஆண்டு ஆவணங்கள், கடிதங்கள் மற்றும் 1911 ஆம் ஆண்டு சமஸ்தானப்பட்டியலும்: 21—10—1971 கொழும்பு பேச்சு வார்த்தையும்

சேதுபதி அரசின் உரிமையை உறுதிப்படுத்துகின்றன. சேதுபதி அரசுடையது என்றால், அது தமிழ் நாட்டைச் சேர்ந்தது என்றே பொருள். 1880-லிருந்து ஜமீன் ஒழிப்பு வரையில் அந்தக் கச்சத் தீவு சேதுபதி மன்னர்களுக்குச் சொந்தமாக இருந்து வந்திருக்கின்றது. 1954-ல் இலங்கை சர்வே படத்தில் இந்தத் தீவே கிடையாது. 1957-66 ஆம் ஆண்டு இராமநாதபுரம் ஆவணப் பதிவேடுகளில் தனுஷ்கோடியின் உட் கிராமமாக கச்சத் தீவு, ராமனதாடை என்று இரண்டு பகுதிகள் கூறப்பட்டிருக்கின்றன. இராமநாதபுரம் அருகிலுள்ள நம்புதாழைக்காரர்கள்தான் அந்தத் தீவிலுள்ள அந்தோனியார் கோவிலைக் கட்டியதாகக் கூறப்படுகிறது. இதெல்லாம் ரெக்கார்டுகள். பார்லிமெண்டிலே பிரதமர் அவர்கள் கூறும்போது இலங்கைக்குச் சொந்தமானது என்பதை மீறி அதற்கு அதிகமான அழுத்தமான காரணங்களை, ஆதாரங்களை காட்டக்கூடிய அளவுக்கு தமிழகத்திலிருந்து ஆதாரங்கள் வராததால் நாங்கள் கச்சத் தீவை இலங்கைக்கு மாற்றிக் கொடுத்தோம் என்றெல்லாம் சொல்கின்றார்கள். இதில் கச்சத் தீவு தமிழர்களுக்குச் சொந்தமானது என்பதைப்பற்றி ஒரு விரிவான வியாக்கியானத்தையோ விரிவான விமரிசனத்தையோ கூறிக்கொண்டிருப்பதில் பயனில்லை. எப்படியோ ஒப்பந்தத்தை செய்து முடித்துவிட்டார்கள். இதில் ஒரு மாற்று ஏற்பாடு செய்ய முடியுமா என்பதுபற்றி ஆராய வேண்டும். நமது நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் கூறியதுபோல், சர்வ தேசப் பிரச்சினையில் அந்த ஒப்பந்தத்தை மாற்றுவதற்குப் புகுந்தால், பிரதமர் அவர்களுடைய அந்தஸ்து குறையும். நமக்கு உரிமை போகிறது. மத்திய அரசுக்கு இது அந்தஸ்துப் பிரச்சினை. நமக்கு இது உரிமைப் பிரச்சினை. அந்த அந்தஸ்தும் காப்பாற்றப் படவேண்டும். நமது உரிமையும் காப்பாற்றப்பட வேண்டும். இதில் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையிலே, தமிழர்களுடைய ஆட்சியில் எந்த ஒரு பகுதியும் கை மாற்றப் படவில்லை. ஆரம்பத்திலே நாஞ்சில் நாட்டை நாம் கைப்பற்றினோம். அடுத்து, தணிகையை நமது துணைத் தலைவர் ம.பொ.சி. அவர்கள் மூலமாக நமது பகுதிக்கு மாற்றினோம். பிறகு நமது தலைநகரை ராஜாஜி அவர்கள் தலைமையிலே காப்பாற்றிக்கொண்டோம். நம்மைக் கலந்து கொள்ளாமல் கச்சத் தீவு ஒப்பந்தமாகி விட்டதால், இன்றைக்கு துரதிருஷ்டவசமாக கலைஞர் அவர்கள் தலைமையிலே கச்சத் தீவை நாம் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது. உறுப்பினர் அவர்கள் பேசும்போது, ராணுவ ரீதியின் அடிப்படையில் சொன்னார்கள். நாடு விடுதலை அடைந்ததற்குப் பிறகு நமது நாட்டுக்கு வாய்த்த பிரதமர்கள் எந்தெந்தப் பகுதியை நமக்குச் சொந்தமாக்கியிருக்கின்றார்கள் என்று கேட்டால், அப்படிச் சொந்தமாக்கிய பகுதிகளே இல்லை. பறிகொடுத்த பகுதிகள்தான் அதிகம். முன்னொரு காலத்தில் செங்கிஸ்கான் என்பவன் இருந்தான். அவன் உலகமே



என்னுடையதுதான், இந்த உலகத்திற்கு நான்தான் ஜனாதிபதி, சக்ரவர்த்தி என்று சொல்லி தன்னுடைய நாட்டுடன் பல பகுதிகளைச் சேர்த்துக் கொண்டான். அடுத்து, ரஷ்ய மன்னர்கள் சரித்திரத்தைப் பார்த்தால் வந்த மன்னர்கள் எந்தெந்தப் பகுதியை தங்கள் நாட்டிற்குப் புதிதாகச் சேர்த்துக் கொண்டார்கள் என்பதைப் பார்த்து அவர்களுக்கு அதன் மூலம் பெருமையும் பெயரும் கொடுக்கப்பட்டது. இப்படித்தான் ஒவ்வொரு நாடும். ஆனால் நம் நாடு விடுதலை அடைந்த பிறகு பக்கத்து நாடுகளை பலாத்காரம் பண்ணியோ, அல்லது சண்டைக்குப் போயோ பிடிக்காமல் போனாலும், இருக்கின்ற ஒரு பகுதியையாவது இழக்காமல் இருக்கின்றோமா என்றால், அதுவும் கிடையாது. முதலிலே ஒரு பகுதி பாகிஸ்தானுக்கு. அடுத்தாற்போல், சைனாவுக்கு. மூன்றாவதாக நாமாகவே கச்சத் தீவைக் கொடுத்திருக்கிறோம். பிரதமர் இந்திரா காந்தியினுடைய திறமையில், ராஜ தந்திரத்தில், தீர்க்கதரிசனத்தில் நமக்குப் பூரண நம்பிக்கை உண்டு. இருந்தாலும்கூட ஒரு சின்னஞ்சிறிய இலங்கைத் தீவுக்குப் பிரதமரான ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவிடத்திலே நமது திறமையான பிரதமர் ஏமாந்துவிட்டார்களா என்ற ஐயப்பாடு நமக்கு ஏற்படுகிறது. கச்சத் தீவினுடைய ராணுவ முக்கியத்துவம் பற்றியெல்லாம் உறுப்பினர்கள் சொன்னார்கள். அந்த அளவுக்கு ராணுவ முக்கியத்துவம் இருக்கிறது என்று இன்றைக்குத் தெரியாமல் போனாலும், நாளையப்பொழுதில் அது தெரிந்துதான் ஆக வேண்டும். நமது பகுதியை நாம் பறிகொடுத்த மாதிரி ஏதாவது வேறு நாடுகளிலிருந்து சில பகுதிகளைக் கேட்டு வாங்கியாவது சேர்த்திருக்கின்றோமா என்றால், அதுவும் கிடையாது. ஆரம்பத்திலே காஷ்மீர் பிரச்சினை எழுந்தது. பெருமதிப்பிற்குரிய பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர் கூறினார். "நிறத்தாலும், இனத்தாலும், மதத்தாலும் காஷ்மீர் பாகிஸ்தானுக்குச் சொந்தம் என்று சொன்னால், அதை அப்படியே அவர்களுக்குக் கொடுத்துவிட்டு, அடுத்தாற்போல் எல்லா வகையாலும் நமக்குச் சொந்தமான கிழக்கு வங்காளத்தைக் கேளுங்கள். நமக்கு கிழக்கு வங்காளத்தைக் கொடுக்கட்டும். இல்லாவிட்டால் காஷ்மீரைக் கேட்பதை நிறுத்திவிடுங்கள்" என்று பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் கேட்டபோது, அன்றைய பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் அது 'லாலெஸ் அம்பிஷன்' சட்ட சம்மதமற்ற ஆசை என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு பாகிஸ்தானுக்கு பாதி கொடுத்துவிட்டோம். பிறகு சைனாவால் பத்தாயிரம், இருபதாயிரம் சதுர மைல் எடுத்துக்கொள்ளப்பட்டது. நம்முடைய ராணுவம் இருந்தும்கூட அவர்கள் அதை மீறி வந்து எடுத்துக்கொண்டதன் பிறகு, அது 'நோ மேன்ஸ் லாண்ட்', அது நமக்குப் பயன்படாது என்று சொன்னார்கள். பயனற்றது, மனித சஞ்சாரமற்றது என்று சொன்னார்கள். நமக்குப் பயன்படாத அந்தப் பகுதி அவர்களுக்கு மட்டும் எப்படிப் பயன்படும் என்ற

கேள்விகளை எல்லாம் கேட்காமல் தானம் தர்மம் செய்வது மாதிரி விட்டு விட்டார்கள். ஒருகால் தியாகிகளுக்கு 5 ஏக்கர் நிலம் கொடுத்தமாதிரி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா நமது நாட்டிற்காகப் பாடுபட்டார்களோ என்னவோ தெரியவில்லை. கச்சத் தீவைத் தூக்கிக் கொடுத்துவிட்டார்கள். இலங்கையைப் பொறுத்த அளவிலே, அவர்களுக்கு எப்படியோ தெரியாது. நமக்கு அவர்கள்மீது நல்லெண்ணம் இருக்கக் காரணம் இல்லை. அவர்களுக்கும் நம் மீது நல்லெண்ணம் கிடையாது. நாம் இன்றைக்குக் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்திலேகூட ஒரு திருத்தம செய்து கொள்ளலாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். யாழ்பாணத்தையும், கண்டியையும் ஏன் நாம் கேட்கக் கூடாது? யாழ்பாணத்தையும் கண்டியையும் நமது மன்னர்கள்தான் ஆண்டிருக்கின்றார்கள். யாழ்பாணமே தமிழர்களின் பகுதி. ஆதி ஆறுமுக நாவலர் நம்முடையவர். அவர் பிறந்து வாழ்ந்த பகுதி அது. அந்த யாழ்பாணம் தமிழர்களுக்குச் சொந்தம். எனவே யாழ்ப்பாணத்தை நம்மவர்களுக்குக் கொடுக்கட்டும். அடுத்தாற்போல் கண்டியை ஆண்டவர்கள் நாம். கண்டியை ஆண்ட மன்னர் பரம்பரையினர் இன்றைக்கு மதுரை வட்டாரத்திலே நிறைய இருக்கின்றார்கள். கண்டி ராஜாக்கள் என்ற பெயரிலே இருக்கின்றார்கள். என்றாலும் இதுவரை நாம் கண்டியைக் கேட்கவில்லை. நாம் கொடுத்துக் கொடுத்துப் பழகியவர்கள். இதை வைத்து நம்மிடமிருந்து தொடர்ந்து, நமது பகுதியைப் பிறர் எடுப்பதை நாம் ஏற்கலாமா? இலங்கையில் சிவப்பு ரேகை அதிகமாகப் படர்ந்து வருகிறது. இதற்குமேல் விவரமாக நாம் போக வேண்டாம். அது சர்வதேசச் சிக்கலாக மாறிவிடும். இலங்கையில் கம்யூனிஸத்தின் செல்வாக்கு அதிகமாகப் பரவியிருப்பதன் காரணமாக, கச்சத் தீவை நாம் அவர்களுக்கு ஒதுக்கிவிடும்போது, அங்கு சென்சீனர்கள் தமது ராணுவ முகாமை அமைக்க முடியும். இதுவரையிலே உலகத்திலே நடந்த யுத்தம் கிழக்கு முகப்புகளிலே தொடங்கிற்று. இதை நேதாஜியே கூறியுள்ளார். மூன்றாவது உலக யுத்தம் ஒன்று தோன்றுமானால், அது தெற்கே இருந்துதான் தோன்றும் என்று. கச்சத்தீவு மூலம் அது நடந்தாலும் நடக்கலாம். இதுவரை பீரங்கிச் சத்தம், துப்பாக்கித் துளைபாடுகளை நாம் அறிந்ததில்லை. அறிய வேண்டும் என்பதற்காக மத்திய சர்க்கார் கச்சத்தீவை இலங்கைக்குக் கொடுத்து விட்டதோ என்னவோ தெரியவில்லை. எதாவது நாட்டைப் பெருக்குவது என்றால், நமக்கென பல பகுதிகளை நாம் வெளியேயிருந்துதான் உண்டாக்கிக் கொள்ள முடியும். சுதந்திரம் அடைந்த எந்த நாடும் பகுதிகளைப் பெருக்குவது என்பதுதான் மரபு. இதே அடிப்படையையறிந்த நேதாஜி, முதல் சுதந்திர சர்க்கார் அமைத்தவுடன், அந்தமான்-நிக்கோபார் தீவுகளை நமக்கு முதன் முதலில் சொந்தமாக்கினார். பிறகு நாடு முழுதும் சுதந்திரம் அடைந்தபிறகு





நாம் பறிகொடுத்ததுதான் அதிகம். நமக்கென நாம் சேர்த்துக்கொண்ட பகுதிகள் அறவே இல்லை என்று வருத்தத்தோடு கூறிக்கொள்கின்றேன். இலங்கை நமக்குப் புராண காலத்திலிருந்தே எதிர் நாடாகத்தான் இருந்திருக்கிறது. ஆதியில் ஸ்ரீதேவியை ராவணன் கவர்ந்து சென்றுவிட்டான். சீதையை ராவணனிடமிருந்து ராமன் மீட்பதற்கு பெரிய போரே நடந்தது. சீதையை மீட்க ராமன் போராடியதுபோல், கச்சத்திவுக்காக இலங்கையோடு மறுபடியும் போர் தொடுக்கும் நிலை ஏற்படுவதை நாம் விரும்பவில்லை. அதிலே ஏற்கெனவே இருந்த மாதிரி கச்சத் தீவில் நமக்கும், இலங்கைக்கும் பாத்தியதை இருக்கிறமாதிரி புதிய ஏற்பாடு ஒன்றைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தத் தீர்மானத்தை ஆதரித்து அமைகின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. ஜார்ஜ் கோமகன் : தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை வரவேற்றுப் பேசுகின்ற வாய்ப்பு கிட்டியமைக்காக மகிழ்ச்சியடைகிறேன். கச்சத் தீவு பிரச்சினை பற்றி மாண்புமிகு அங்கத்தினர் பலர் தங்கள் கருத்துக்களைச் சொன்னார்கள். கச்சத் தீவை தானமாகத் தந்திருப்பது உள்ளபடியே வருத்தத்தைத் தருகின்ற நிகழ்ச்சி மட்டும் அல்ல, தமிழரின் ஏகோபித்த கண்டனத்திற்கு உரியதாகும் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொண்டு, கச்சத் தீவு பிரச்சினை மண் பிரச்சினையல்ல, மானப் பிரச்சினை. கச்சத் தீவு பிரச்சினை உடைமைப் பிரச்சினை மட்டும் அல்ல, அது ஒரு உரிமைப் பிரச்சினை. அதை நாம் மானப் பிரச்சினையாக, உரிமைப் பிரச்சினையாக அணுகுகின்ற காரணத்தால்தான் தமிழக அரசைக் கலந்து கொள்ளாமல், நமமுடைய முதலமைச்சர் அவர்களைக் கலந்து கொள்ளாமல், கலந்து பேசாமல் கச்சத் தீவை ஸ்ரீ லங்காவுக்கு தானமாகத் தந்திருப்பது உள்ளபடியே தமிழ் சமுதாயத்தின் மான உணர்ச்சியை குத்திக் கிளறுவதாக இருக்கிறது என்பதை நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு அங்கத்தினர் திரு சக்தி மோகன் அவர்கள் குறிப்பிடத்தக்க வரலாற்று ஆதாரங்களையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். உள்ளபடியே கச்சத் தீவு நம்மை விட்டுப் போகின்ற நேரத்தில் நாம் பல உரிமைகளை, வசதிகளை இழக்கின்றோம் என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

(பிற்பகல் 5-10)

கச்சத் தீவைச் சுற்றியுள்ள கடல் நீர்ப்பரப்பை நாம் இழக்கிறோம். அதன் சுற்றுப்புறத்தில் உள்ள கடலின் அடிப்பரப்பை நாம் இழக்கிறோம். அந்த அடிப்பரப்பில் அமைந்துள்ள கனி வளத்தை நாம் இழக்கிறோம். அந்தத்

[திரு. ஜார்ஜ் கோமகன்] [1974 ஆகஸ்ட் 21

திவுக்கு அருகாமையில் உள்ள கடலின் நீர்ப்பரப்பின் கனி வள ஆராய்ச்சி செய்யும் வசதி வாய்ப்புகளை நாம் இழக்கிறோம். கடலின் மேலே உள்ள வான வெளியை நாம் இழக்கிறோம். இவ்வளவையும் இழந்துதான் இந்தக் கச்சத் தீவை தானமாகத் தருவதற்கு உரிய நிலைமையை இந்திய சர்க்கார் உருவாக்கியிருக்கிறார்கள்.

நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் இது சம்பந்தமான தெளிவான, திட்டவட்டமான முடிவை இந்த நாட்டுக்கு அறிவித்திருக்கிறது என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுக் குழுவிலே ஒரு அருமையான தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறோம். அந்தத் தீர்மானத்தை, தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியின் பேரில் நான் இங்கே மொழிய ஆசைப்படுகிறேன்.

"இந்தியாவுக்குச் சொந்தமானதும், தமிழ்நாட்டுடன் நெருங்கிய உரிமை கொண்டதுமான கச்சத் தீவின் மீது இலங்கைக்கு அரசுரிமை வழங்கும் வகையில் இந்திய அரசு செய்துள்ள ஒப்பந்தத்தை இந்தப் பொதுக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

தமிழ்நாட்டு மக்களின் உணர்ச்சிக்கு எதிராக இந்த ஒப்பந்தம் அமைந்து விடக்கூடாது என்று தமிழக அரசு பலமுறை ஆதாரங்களுடன் மத்திய அரசினரை அணுகித் தடுத்தும்கூட, அதனை அலட்சியப் படுத்திவிட்டு, மத்திய அரசு, கச்சத் தீவை இலங்கைக்கு அளித்துவிட்ட செயல், தமிழ்நாட்டு மக்களுக்கு வேதனை தருவதாகும்.

தமிழ்நாட்டு மக்களின் உணர்ச்சிகளை எள்ளி நகையாடுவதுபோல், வலது கம்யூனிஸ்ட் கட்சி, தனது தீர்மான வாசகங்களை அமைத்துக் கொண்டு, கச்சத் தீவு இலங்கைக்கே சொந்தமென்று இலங்கை அரசாங்கத்தைவிட அதிக தீவிரமாக வாதாடுவது என்பது தமிழ்நாட்டு மக்களுக்கு இழைக்கும் மாபெரும் துரோகமாகும் என்று இந்தப் பொதுக்குழு சுட்டிக்காட்டுகிறது.

"கச்சத் தீவுப் பிரச்சினையை முடிந்துவிட்ட பிரச்சினையாகக் கருதாமல் மத்திய அரசு மறுபரிசீலனை செய்து அந்தத் தீவின் மீது இந்திய அரசுக்கு அரசுரிமை இருக்குமாறு ஒப்பந்தத்தைத் திருத்த வழிவகை காணுமாறு இந்திய தலைமை அமைச்சரை இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது"

என்பதை நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய பொதுக்குழுவிலே தீர்மானித்திருக்கிறது. இந்தத் தீர்மானத்தை அந்தப் பொதுக் குழுவினுடைய தீர்மானத்தோடு இணைத்து, கச்சத் தீவு பிரச்சினையை இந்திய அரசு மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொண்டு தீர்மானத்தை ஆதரித்து நான் அமைகின்றேன்.



1974 ஆகஸ்ட் 21]

* THIRU D. V. D'MONTE: Hon. Deputy Chairman, Sir, if any community should feel unhappy about the ceding of Katcha Thiru to Sri Lanka, it is certainly the Christian minority which is the predominant minority in the State. In this barren island, St. Antony's Church was set up some 68 years ago and it has become a holy spot for us, visited by thousands of pilgrims once a year in the month of March both from India and Sri Lanka. Certainly it is the sentiments of the Christian community that have been outraged in this matter. But, Sir, can we allow purely communal views to predominate in a matter like this? This is a matter of national importance. We are first and last Indians of a great country. The settlement of this long-drawn-out dispute through negotiations must certainly be welcomed even if some of our Members feel there has been a sell-out of National interests. The accord between India and Sri Lanka is not primarily on who owns that barren land but on the more vital question of what are the limits of the territorial waters divided by the narrow Palk Straits which is only 18 miles wide. It is true that documents had existed to show that the island was at one time the property of the Zamindari of Ramanathapuram. But Sri Lanka also has been trying to make out certain claims on the basis that Portugal was at one time in possession of Ceylon and also the island of Katcha Thivu. These rival contentions will lead to litigation. Litigation means the International Court. Such litigation will only create bad feelings between the two countries. What will ve the reaction of other countries and what will be our position in the eyes of the world? Fortunately, by means of this harmonious and friendly agreement we have opened the doors to friendship between neighbours. That friendship must be strengthened. Let us not undermine the good-will generated by trying to make an issue of it. As I said before, first of all, we are Indians and national interests are more important than our regional considerations. Let us strengthen the hands of the Government of India by supporting the stand taken by them rather than passing a resolution that can cause irritation in Centre-State relations. I can only request our Chief Minister to pause and consider this plea and not to press this Resolution which stands in his name. Let us show to the rest of the country and the world that we are not a Nation divided and although the sentiments of the people are outraged, we can be magnanimous in the interests of the country. Thank you, Sir.

**திரு. எம். எம். பக்கர் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கச்சத் தீவு பற்றி நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்தத் தீர்மானத்தின்மீது சில வார்த்தைகள் பேசுவதற்காக இங்கே நிற்கின்றேன்.

முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்தத் தீர்மானம் கச்சத்தீவு பற்றி ஸ்ரீலங்கா-இந்தியா ஒப்பந்தத்திற்குப் பிறகு தமிழ்நாட்டிலே எங்கும் கிளர்ந்தெழுந்துள்ள கோப உணர்ச்சியையும், தமிழ் மக்களுடைய ஆத்திர உணர்ச்சியையும் அப்படியே பிரதிபலிப்பதாக இல்லையென்றாலும் கூட, ஒரு பொறுப்புள்ள மாநில அரசின் கண்ணியமுள்ள தலைவர் மத்திய அரசுக்கு எப்படிச் சொல்ல வேண்டுமோ அந்தப் பண்பாடு இந்தத் தீர்மானத்திலே இருக்கிறது என்ற அளவிலே இந்தத் தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள், முக்கியமாக நம்முடைய அருமை நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள், இந்திய நாடு நம்முடைய அண்டை நாடுகளுடன் எல்லாம் நட்புறவோடு இருக்க விரும்புகிறது. அது இந்திய அரசினுடைய கொள்கை. அந்தக் கொள்கையின் அடிப்படையிலேதான் இந்தக் கச்சத் தீவு ஸ்ரீலங்காவுக்குத் தரப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். நட்புறவோடு இருப்பதற்காக நம்முடைய நாட்டிலே ஒரு பகுதியை ஒவ்வொரு நாட்டிற்கும் கொடுத்துக்கொண்டிருந்தால், அந்த நட்புறவு என்பது தேவையேயில்லாத ஒரு நட்புறவு என்றுதான் நான் நினைக்கிறேன்.

மற்றொன்றும் அவர்கள் சொன்னார்கள். நீண்டகாலமாக உள்ள இந்த எல்லைத் தகராறு இந்த அளவிலே தீர்ந்ததற்காக சந்தோஷப்பட வேண்டும் என்று சொன்னார்கள். எங்கே நீண்ட காலமாக இருந்த தகராறு? 1954 ஆம் ஆண்டு வரையிலே ஸ்ரீலங்காவின் வரைபடத்திலே—மேப்பிலே—கச்சத் தீவு என்ற இடமே இல்லை என்று சொல்லுகிறார்கள். அதற்குப் பின்னாலேதான் இலங்கைக்கு ஆசை வந்திருக்க வேண்டும். எப்பொழுது இந்திய அரசினுடைய அந்நிய நாட்டுக் கொள்கையிலே ஒரு தொய்வு, ஒரு பலஹீனமான தன்மை, முதுகெலும்பற்ற ஒரு கொள்கை இருக்கிறது என்று தெரிந்ததோ, உலகத்திலே மிரட்டியவர்களுக்கெல்லாம், குறை சொன்னவர்களுக்கெல்லாம், நாம் ஒவ்வொரு பகுதியாகக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம் என்று ஸ்ரீலங்காவுக்குத் தெரிந்ததோ, அப்பொழுது இந்தக் கச்சத் தீவையும் கேட்கலாம் என்ற ஆசை வந்திருக்கலாம் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது.

முதலில் திபெத்திலே சீனாவுக்கு இருந்த 'சுசேரின்டி' என்பதை 'சாவரின்டி' என்று சீன நாடு மாற்றியபோது, இந்திய நாடு பேசாமல் ஒப்புக்கொண்டது. அது மட்டுமல்ல. காஷ்மீர் என்பது இந்திய நாட்டி





னுடைய பகுதி என்று அறிவித்துவிட்டோம். அதில் ஒரு பகுதியை பாகிஸ்தான்காரனிடம் விட்டு வைத்திருப்பதை இலங்கை பார்த்தது. "ரான் ஆப் கட்ச்" பகுதியை பாகிஸ்தானுக்குக் கொடுத்ததைப் பார்த்தது. பேருபாரியை பங்களாதேஷுக்கு தாரை வார்த்ததைப் பார்த்தது. இதையெல்லாம் பார்த்ததும் இலங்கைக்கு ஆசை வந்திருக்கலாம். "கச்சத் தீவை நாமும் கேட்டு பிடிவாதம் செய்தால் இந்தியா கொடுத்து விடும்" என்ற எண்ணம் அதற்கு வந்திருக்கலாம். நீண்ட நாள் வழக்கு இதிலே என்ன இருக்கிறது? நீண்ட காலமாக இருந்துவந்த பிரச்சினை எது? அதை இப்போது திடீரென்று தமிழ் நாட்டு மக்களுடைய உணர்ச்சியினை மதிக்காமல், இப்படிச் செய்வதென்றால், தமிழ் மக்களுடைய உள்ளத்திலே எப்படிப்பட்ட உணர்வுகள் ஏற்படும் என்பதையே சற்றும் சிந்தித்துப் பார்க்காமல், அவசரம் அவசரமாக கச்சத் தீவினை இலங்கைக்குத் தாரை வார்த்துக் கொடுத்தாகி விட்டது என்று நான் பகிரங்கமாக சொல்ல ஆசைப்படுகிறேன்.

(பிற்பகல் 5-20)

கடந்த மூன்று ஆண்டுகளாக இந்த மாநிலத்தின் முதலமைச்சர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் மேலும் இந்த நாட்டிலுள்ள பல்வேறு கட்சித் தலைவர்களும் கச்சத் தீவினைக் கொடுத்துவிடாதீர்கள் என்று பல்வேறு நேரங்களிலே பெரிய அளவிலே பிரச்சாரம் செய்து வந்திருக்கின்றார்கள். அப்படி இருக்கும்போது, திடீரென்று ஒரு நாள் 'கச்சத் தீவைக் கொடுத்து விட்டோம்' என்று அறிவித்துவிட்டு, அதைப்பற்றி பாராளுமன்றத்தில் கேள்வி வந்த நேரத்திலே, "இதைப்பற்றி தமிழ் நாட்டு முதலமைச்சர் அவர்களைக் கேட்டீர்களா" என்று கேட்டால், "கலந்து கொண்டோம்" என்று சொல்லுகின்றார்கள். "கலந்து கொண்டோம்" என்று சொன்னால், என்ன பொருள்? அராபிய மொழியிலே ஒரு பழமொழி உண்டு. "எல்லாவற்றுக்கும் மனைவியிடம் கலந்து ஆலோசித்துக்கொள். ஆனால் உன் இஷ்டப்படியே நடந்துகொள்" என்று. "கலந்து கொண்டோம்" என்று சொல்லுகின்றார்கள். தமிழக முதல்வர் அவர்கள் என்ன சொன்னார்கள்? "அதைக் கொடுக்கக்கூடாது" என்று சொன்னார்கள். கேட்டார்களா? அதைக் காதில் போட்டுக்கொள்ளாமல், "கலந்து கொண்டோம்" என்று மட்டும் சொன்னால், என்ன பொருள்? "தமிழ் நாட்டு சர்க்கார் சொன்னதை ஏற்றுக்கொள்ளவில்லை, ஆனால் கொடுத்துவிட்டோம்" என்று சொல்லுங்கள். "தமிழக முதல் அமைச்சர் அவர்கள் கச்சத் தீவினைக் கொடுக்கக் கூடாது என்றுதான் சொன்னார்கள். ஆனால் நாங்கள் ஒப்புக் கொள்ளவில்லை. ஆகவே கொடுத்து விட்டோம்" என்று சொல்லுங்கள். உங்களைப் புரிந்து கொள்ளுகிறோம். ஆனால் "கலந்து கொண்டோம்" என்று சொன்னால், என்ன அர்த்தம்? இதைத்தான் நான் கேட்க ஆசைப்படுகிறேன். இப்படியெல்லாம் மக்களை ஏமாற்றுவது சரியில்லை.

இரண்டாவது, நமது நாட்டின் ஒரு பகுதியினை இன்னொரு நாட்டிற்குக் கொடுத்துவிட்டு அந்த நாட்டின் உறவினை விலைக்கு வாங்கும் கொள்கை நல்லது தானா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். சுவெரினிடி, சாவெரினிடி என்று சொல்லிக்கொண்டு கடைசியில் திபெத்தைக் கைவிட்டுவிட்டோம். பின்னர் நாதுலா முதல் அக்சாய் சின் வரையில் சீனாவிடம் கொடுத்து விட்டோம். இப்படிக் கொடுப்பதன் மூலம் அவர்களுடைய நட்புறவு நமக்குக் கிடைத்து விட்டதா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். பாகிஸ்தானிடம் பாதி காஷ்மீரத்தையும் ரான் ஆப் கட்சையும் கொடுத்துவிட்டோம். உறவு ஏற்பட்டிருக்கிறதா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். நம்முடைய பகுதியிலிருந்து ஒரு பகுதியினைக் கொடுத்து அவர்களைத் திருப்தி பண்ணலாம் என்பது உலக அரசியலிலேயே கிடையாது. அப்படி உலக சரித்திரத்திலேயே கிடையாது. ஹிட்லரைக்கூடத் திருப்திப்படுத்த முடியவில்லை. ஒரு நாட்டின் உரிமையை விட்டுக்கொடுத்து யாரையும் திருப்தி பண்ண முடியாது. நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள், "நாம் அவர்களுக்குக் கச்சத் தீவைக் கொடுத்தது மட்டுமல்ல, நாமும் சில அனுகூலங்களைப் பெற்று இருக்கிறோம்" என்று குறிப்பிட்டார்கள். என்னத்தைப் பெற்றோம்? ஒரு கதை உண்டு. ஈரானிலிருந்து நாதிர் ஷா என்ற ஒருவர் டெல்லியின் மீது படையெடுத்தார். அந்த நேரத்திலே டெல்லியை முகமது ஷா என்ற ஒருவர் ஆண்டு வந்தார். படையெடுத்தார்கள். சண்டை ஏற்பட்டது. பிறகு இருவரும் சமாதானம் செய்துகொள்ளலாம் என்று இறுதியில் ஒரு நிலை ஏற்பட்டபோது, நாதிர் ஷா சொன்னார். "எங்கள் நாட்டுச் சம்பிரதாயப்படி சமரசம் பேசுவதற்கு முன்னர் பேசுகின்ற இருவரும் தங்கள் தலைப்பாகையை மாற்றிக்கொள்ள வேண்டும்" என்று. அப்படிச் சொல்லி அப்படியே இரண்டு பேரும் தங்கள் தலைப்பாகையை மாற்றிக் கொண்டார்கள். இங்கே உள்ள முகமது ஷா அவர்களுடைய தலைப் பாகையில் கோஹினூர் வைரம் இருந்தது. மாற்றிய காரணத்தினால் அது ஈரான் மன்னருடைய தலைக்குப் போயிற்று. அதை எடுத்துக்கொண்டு அவர் திரும்பப் போய்விட்டார் என்று கதை. அதேபோல இந்திரா காந்தி அம்மையாரும் திருமதி சிரிமாவோ பண்டாரநாயகா அவர்களும் கூடிப் பேசினார்கள். இந்த அம்மா தூக்கிக் கொடுத்து விட்டார்கள் கச்சத் தீவை. ஆனால் என்னத்தை வாங்கிக்கொண்டு வந்தார்கள் என்றால் ஒன்றும் இல்லை. மீன் பிடிக்கும் உரிமையை வாங்கிக்கொண்டு வந்திருக்கின்றார்கள் என்று சொல்லுகின்றார்கள். ஆனால் என்ன நடக்கப் போகிறது? அந்த உரிமையாவது நிற்கப்போகிறதா அல்லது நமது நாட்டு மக்கள் அந்தப் பகுதிக்குப் போய் மீன் பிடிக்க முடியுமா? என்ன வேடிக்கை? இந்திய அரசின் இப்படிப் பட்ட கொள்கையினால் நாட்டிற்கு எந்தவிதமான பிரயோஜனமும் வரப்போவதில்லை. இந்தக் கொள்கையினால் கடந்த காலத்திலே என்ன நடந்தது?



தென் கிழக்கு ஆசிய நாடுகளிலே இந்திய வம்சாவழியினர் ஏராளமானவர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அந்த நாடுகளிலே அவர்கள் மரியாதையுடன் தன்மானத்துடன் வாழ முடிகிறதா? அவர்கள் பல தொல்லைகளுக்கு உள்ளாகின்றார்களே அவர்களுக்காக நாம் என்ன செய்தோம்? நமது இந்திய அரசு என்ன இதுவரையில் செய்திருக்கின்றது? ஒன்றும்தான் செய்ய முடியவில்லை என்றாலும், சும்மாவாவது இருந்திருக்கிறோமா? நாம் போய் தலையிட்டு அங்குள்ளவர்களை அவர்கள் வெளியேற்றுவது. இணைந்து ஆதரவாக வந்திருக்கிறோம்? இந்திய அரசாங்கத்தின் கொள்கையின் பயன் அதுவாகத் தானே இருந்து வருகிறது? நமது அரசாங்கமே அவர்களிடம் போய், 'பாதிப் பேரைத் திருப்பி அனுப்பிவிடுங்கள், ஏற்றுக்கொள்ளுகிறோம்.' என்று இதைத் தானே செய்து வருகின்றார்கள் மத்திய அரசிலே. பர்மாவிலிருந்து, மலேசியாவிலிருந்து இப்படித்தானே ஏராளமான இந்திய வம்சா வழியினர் திருப்பி அனுப்பப்படுகின்றார்கள்? அந்த நாடுகளிலே உள்ள நமது வம்சா வழியினர் நிம்மதியாக வாழ முடியவில்லை. அதே நாடுகளிலே இன்னும் அதிகமாக சீனர்கள் வாழ்கின்றார்கள். அவர்களில் ஒருவரைக்கூட வெளியே போ என்று சொல்லுவதில்லை. காரணம் தன் நாட்டினர் ஒருவர் பேரிலே கை வைத்தால் சீன தேசத்தின் சர்க்கார் உறுமுகிறது. ஆகவே அவர்களை ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனால் இந்திய வம்சா வழியினர்பற்றி யாரும் கவலைப் படுவதில்லை. இந்திய சர்க்கார் எல்லாவற்றுக்கும் வளைந்து கொடுக்கும் போக்கில் போவதால், தென் கிழக்கு ஆசிய நாடுகளிலே வாழும் லட்சக் கணக்கான இந்திய வம்சா வழியினர் வெளியேற்றப்படுகின்றார்கள். இந்திய சர்க்காருக்கு உறுதியான கொள்கை இல்லை. நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் இந்தியா பெரிய வல்லரசாகிக்கொண்டு வருவதைப் பற்றி மிகப் பெருமையாகப் பேசினார்கள். அப்படி வல்லரசாகி வரும் நாடு பெருந்தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டாமா என்றும் கேட்டார்கள். நமது தேசம் போன்ற பெரிய தேசம் சின்னஞ்சிறிய அண்டை நாடுகளுடன் நட்புறவோடு பெருந் தன்மையோடு பழக வேண்டும் என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் நட்புறவு வேண்டும் என்பதற்காக நமது நாட்டிலிருந்து பகுதி பகுதியாக அண்டை நாடுகளுக்குப் பிய்த்துக்கொடுத்துக்கொண்டே போனால், அதனால் அவர்களைத் திருப்திப் பண்ணி விடலாமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

இப்போது கச்சத் தீவினை இலங்கைக்குத் தாரை வார்த்துக் கொடுத்திருப்பதன் மூலம் மக்களுடைய ஆத்திரம் உச்ச கட்டத்தை அடைந்து விட்டது. குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ளவர்கள் தங்களுடைய அங்கத்தின் ஒரு பகுதியே பறிபோய்விட்டதைப் போல ஆத்திரப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய உணர்ச்சிகளை, எண்ணங்களைப் பிரதிபலிக்கும் முறையில்தான் இந்தத் தீர்மானம் இங்கே வந்திருக்கின்றது. இது ஏற்கனவே

முடிந்து போன விஷயம். இந்தப் பிரச்சினை ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டு முடிந்துபோய் விட்டது, இப்போது இதை மாற்றுவதற்கு இல்லை என்று சொல்லுவதெல்லாம் அரசியலிலே அவசியமில்லாத பேச்சு என்றே கருது கிறேன். எந்த ஒப்பந்தமும் மாற்ற முடியாததல்ல. எந்த ஒப்பந்தத்தையும் உலகில் மாற்ற முடியாத ஒன்று என்று சொல்ல முடியாது. 1924-லே செய்யப்பட்ட காவிரி நீர் ஒப்பந்தத்தை இப்போது மாற்ற வேண்டும் என்று மைசூர் சொல்லுகிறதே? எதை மாற்ற முடியாது? இன்னும் கச்சத் தீவுப் பிரச்சினை தீர்ந்த விஷயம் என்று சொல்ல முடியாது. காரணம் அந்த ஒப்பந்தத்தை 'ரேடிஃபை' செய்ய வேண்டியிருக்கிறது. இப்படி 'ரேடிஃபை' செய்யும் அதிகாரம் பாராளுமன்றத்திடம்தான் இருக்கிறது. தமிழ் நாடு சட்ட மன்றத்திற்கு அந்த அதிகாரம் இருந்திருந்தால், அவர்கள் இவ்வளவு துணிவாக இதைச் செய்திருக்க மாட்டார்கள். மத்திய அரசின் ஆட்சி உரிமையை நாம் மறுக்கவில்லை. அவர்களுக்கு அந்த உரிமை இருக்கின்றது. ஆனால் அதிகாரம் இருக்கின்றது என்பதற்காக தமிழ் நாடு பாதிக்கப்படும் முறையில் ஒரு ஒப்பந்தத்தைச் செய்யும்போது அந்தத் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பிலுள்ள முதல்வரை சரியான முறையில் கலந்துகொண்டு, பேச்சு வார்த்தைகளில் அவரையும் கலந்துகொண்டு எது ஒன்றையும் செய்யாமல், நமது நாட்டு மக்களின் உணர்வுகளை மதிக்காமல் தமிழகத்தின் ஒரு பகுதியை வேறு ஒரு நாட்டிற்கு இப்படி தாரை வார்த்துக் கொடுத்திருப்பது கண்டிக்கத் தக்கதாகும். அதை வன்மையாகக் கண்டிக்கிறேன் என்று சொல்லி இந்தத் தீர்மானத்தை ஆதரித்து, இங்கே பேசப்பட்ட நமது உணர்வுகளை மத்திய அரசு உணர வேண்டும் என்று எடுத்துச் சொல்லி முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

திரு. எஸ். ராமகிருஷ்ண தேவர்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்தக் கச்சத் தீவுப் பிரச்சினையில் இப்போது நமது முதல்வர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானம் நியாயமானது என்று நான் ஒப்புக்கொண்டாலும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

இக் கச்சத் தீவுப் பிரச்சினைபற்றி மாண்புமிகு சிரிமாவோ பண்டாரநாயகா அவர்களும் நமது மாண்புமிகு இந்திரா காந்தி அம்மையார் அவர்களும் கூடிப் பேசப் போவதை இந்தத் தேசம் பூராவும் அறிந்திருந்தது. எல்லோருக்கும் இந்தப் பேச்சுக்கள் நடக்கப் போவது தெரியும்.

அதற்கு முன்பே சிரிமாவோ பண்டாரநாயகா அவர்களும் தம் கலைஞர் அவர்களும் கலந்து பேசியதாக பத்திரிகையில் படித்தோம் (சிரிப்பு). பத்திரிகையில் வந்திருக்கிறது. சென்னையில் வந்து தங்கியதாக பத்திரிகையில்



பார்த்தோம். அப்படி இருக்க அந்த சந்தர்ப்பத்தில் அவர்களையும் கலந்து ஆலோசித்திருக்கலாம். 'இந்தக் கச்சத் தீவு என்பதை நாங்கள் விரும்பு கிறோம். அது எங்களுடையது' என்று கலைஞர் அவர்கள் தெரிவித்திருக்கலாம் என்று நானும் எண்ணுகிறேன். மற்றவர்களும் எண்ணுகிறார்கள் (சிரிப்பு). இவ்வளவு காரியங்களையும் நாம் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு இப்போது விழித்துக் கொண்டால்? நமக்கு உயிர்ப் பிரச்சினை இந்தக் கச்சத் தீவு. மற்ற வர்கள் பேசுகிறதைக் காட்டிலும் எனக்கு ரொம்பச் சமீபத்தில் 14 மைல் தொலைவில்தான் அது இருக்கிறது. அது இல்லாவிட்டால் எங்கள் பகுதி மீன வர்கள் உயிர் இழக்க வேண்டியதைத் தவிர, வேறு வழியே இல்லை. அந்த நிலையி லுள்ள இந்தக் கச்சத் தீவை இப்போது எடுத்துக்கொடுத்துவிட்டார்கள் என்றால், அந்தப் பகுதி மக்கள் வாழவே முடியாது. 1954 ஆம் ஆண்டு வரையில் இராமநாதபுரம் சேதுபதி இராஜாவிற்குச் சொந்தமானதுதான் அது என்று ரெகார்டுகள் இருக்கின்றன. நமது அரசாங்கம் முயற்சித்தால் அந்த ரெகார்டுகளைத் தேடி எடுக்க முடியும். இப்போதும் அந்த ரெகார்டுகள் இருக் கின்றன என்றுதான் தெரிகிறது. இந்த ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்பே இராமநாதபுரம் ராஜாவிற்குச் சொந்தமானது அந்தத் தீவு என்று எடுத்துக் கூறியிருக்கலாம். அப்போது ஒன்றும் செய்யாமல் இருந்துவிட்டு, இப்போது காலாகப் பேசுவதால் எந்தப் பிரயோஜனமும் ஏற்பட்டுவிடாது. அந்த ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்பே நாம் இந்தப் போர்க்கொடியைத் தூக்கி யிருக்க வேண்டும். அப்போது அவர்கள் நம்முடைய வார்த்தைக்குச் செவி சாய்த்து இருப்பார்கள் என்பது என்னுடைய நோக்கம். அந்த நிலைமையை நாம் தவறி விட்டுவிட்டதாகத்தான் நான் கருதுகிறேன். இதெல்லாம் முடிந்த பிறகு, நமது மதிப்பிற்குரிய திரு. ஆறுமுகசாமி அவர்கள் சொல்லுகின்றார்கள் இதிலே ஏதோ ஒரு பெரிய இராஜதந்திரமே இருக்கின்றது, இந்தக் கச்சத் தீவை விட்டுவிட்டதால், பல காரியங்களை நாம் அடைய ஏதுவாக இருக்கும் என்று. அவ்வளவு சுலபமாக இதை விட்டுக்கொடுத்துவிடுவதற்கு இல்லை. விடிந்து எழுந்தால் விவசாயத்திற்குப் போகிற மாதிரி அந்தப் பக்கத்தில் உள்ளவர்கள் அங்கேதான் போய் மீன் பிடிக்கப் போக வேண்டும். இராமநாத புரம் மாவட்டத்திலுள்ள மீனவர்கள் மட்டும் இல்லாமல் தஞ்சாவூர் ஜில்லாவில் வேதாரண்யத்திலிருந்து இங்கே நரிப்பூர் வரையில் உள்ள மீனவர்கள் தினம் தினம் அந்தக் கச்சத் தீவைத்தான் நாடிப் போக வேண்டியவர்கள். அப்பேர்ப் பட்ட இடத்தைப் பறி கொடுத்துவிட்டு இன்றைக்கு என்னவோ நாம் வேதாந்தக் கருத்தை உபயோகப்படுத்துகிறோம். வேதாந்தக் கருத்திற்கும் வயிற்றுப் பசிக்கும் சம்பந்தம் கிடையாது. வயிற்றுப் பசிக்கு உபதேசம் இருக்கிறதென்று சொல்வார்கள். கச்சத் தீவு போனால் எப்படி உபதேசம் இருக்க முடியும்? கச்சத் தீவை நம்பி எத்தனையோ ஆயிரக்கணக்கான

மீனவர்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் சென்னையில் வந்து மாண்புமிகு கலைஞர் அவர்களிடத்தில் நேரில் சொல்லாவிட்டாலும், அத்தகைய பகுதிகளிலெல்லாம் அவருக்கு ஒரு பெரிய எதிர்ப்பை, கஷ்டத்தைக் கொடுப்பார்கள். அவ்வளவு தூரத்திற்கு அவர்களுக்கு இந்தக் கச்சத் தீவு

(பிற்பகல் 5-30)

உயிர்நாடியாக உள்ளது. இந்தத் தீவை விட்டு விட்டு இருப்பதைக் காட்டிலும் இறப்பதே நன்று. ஏனென்றால், முடிந்த கதையை இங்கே சொல்லவேண்டாமென்று சொல்வார்கள். இருப்பினும் அரிசியை நம்பி வாழுகிறவர்களுக்கு அரிசி எவ்வளவு முக்கியமோ அவ்வளவு அந்த மக்களுக்கு சமுத்திரத்தில் உள்ள அந்தப் பொருள்கள் தேவைப்படுகின்றன. இதை விட்டால் அவர்களுக்கு வாழ்வே இருக்க முடியாது. மேலும் அந்தக் கச்சத் தீவில் அந்தோனியார் கோயில் என்று இருக்கிறது. ஒரு காலத்தில் நம்புதாளையிலிருந்து இலங்கைக்குப் போய் தொழில் பண்ணிக் கொண்டிருந்த ஒருவனுக்கு வசதி ஏற்பட்டு, தோட்டத்தில் தொழில் பண்ணிக் கொண்டிருந்ததாகவும் அவன் நல்ல நிலைமைக்கு வந்ததற்குப் பின்னாலே அந்தோனியார் கோயிலைக் கட்டி விட்டதாகவும் பலர் சொல்லக் கேள்விப்படுகிறோம். ரிகார்டு இருக்கிறது என்கிறார்கள். ஆனால் நான் பார்த்ததில்லை. இந்த நிலையிலுள்ள அந்தோனியார் கோயிலுக்கு வருஷத்திற்கு ஒரு முறை இந்தியர்கள் ஏராளமாகப் போகிறார்கள். அதாவது கிருஸ்தவர்கள்தான் போகிறார்கள் என்று இல்லை. முஸ்லிம்கள் போகிறார்கள். இந்துக்கள், இதர மதஸ்தர்களெல்லாம் லட்சக்கணக்கில் போகிறார்கள். இதில் இன்னொரு வாய்ப்பு என்ன இருக்கிறதென்றால், இலங்கையில் நிறைய இராமநாதபுரம், திருநெல்வேலி, தஞ்சாவூர் மாவட்டங்களிலிருந்து நாகப்பட்டணத்திலிருந்து போனவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அங்கே குடும்பமாக இலங்கைப் பிரஜைகளாக இருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் நாடு கடத்தப் பட்டு இங்கே வந்தார்கள். இந்தக் கச்சத் தீவு இருப்பதனால் வருஷம் ஒரு முறை இவர்கள் ஒருவரையொருவர் சந்திக்க வாய்ப்பு ஏற்படுகிறது. சில பேர்கள் தவறான நோக்கத்தோடும் சந்திக்கப் போவார்கள். அவர்களைப்பற்றி நான் சொல்லவில்லை. நியாயமான முறையில் என்னுடைய மாமன், மச்சான் இப்பேர்ப்பட்டவர்கள் அங்கே இருக்கலாம். நானும் இலங்கையில் இருந்தவனாக இருக்கலாம். என்னை நாடு கடத்தி விட்டார்கள். என் பேரில் அங்கே லைசென்ஸ் கூட இருக்கும். அந்தத் தொழிலை அங்கே வைத்துக்கொண்டு அவர்கள் பார்த்துக்கொண்டிருப்பார்கள். பொருளை இழந்து விட்டாலும் உறவை இழக்க முடியாமல் வருஷத்திற்கு ஒரு முறையாவது அவர்களை கச்சத் தீவில் சந்திக்க வாய்ப்பு இருந்தது. மதிப்பிற்குரிய திரு. ஆறுமுகசாமி அவர்கள் இப்போதுகூட எப்பவும்போல போகலாம், வரலாம் என்று சொன்னார்கள். ஆனால் சாவி அவர்களிடம் இருக்கிறது. நாம் அவர்களிடம் போய் சாவி



வாங்கிக்கொண்டு போக வேண்டுமே தவிர, அவர்களிடம் கண்ட்ரோல் இருக்கும் போது, வருஷம் பூராவும் நாம் போய் வர முடியுமா? இங்கே இந்த மன்றத்தில் கண்டவர்களை நுழைய விடுகிறார்களா? எப்படி நுழைய முடியும்? முறையாகக் கேட்டுப் போக வேண்டும். மீனவர்கள் காலையில் எழுந்து போட்டில் போனால், எடுத்துச் சென்ற சாப்பாட்டை அங்கே வைத்துச் சாப்பிட்டு விட்டு, அங்கே இரண்டு நாட்கள், மூன்று நாட்கள் தங்கி மீன் பிடிப்பது வழக்கம். சில சமயங்களில் ஒரு வாரம், பத்து நாட்கள்கூட தங்கி மீன் பிடிப்பார்கள். அப்படிப்பட்ட மீனவர்களுக்குப் பெரிய நிஷ்டம் இழைந்தவர்களாக ஆவோம், நம்மிடமிருந்து கச்சத் தீவு போகுமானால் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முறையாகப் பார்த்தால் இங்கேயும், நம்மிடத்திலும் பல தவறுகள் இருப்பதாகக் கருதுகிறேன். அவர்கள் எந்தவேபோ நாட்கள் இதைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தபோது நாம் மன்டலத் தீர்மானங்கள் போட்டிருக்கலாம். அவர்களுக்கு உரைக்கும்படியான முறையில் எடுத்து உரைத்திருக்கலாம் * * * கச்சத் தீவு என்றைக்கும் நம்மிடம் இருக்க வேண்டும். இதற்கான சகல நடவடிக்கையும் எடுத்துக் கொள்ள வேண்டும். மத்திய சர்க்கார் புனராலோசனை செய்வதற்கான காரியங்களை யெல்லாம் கண்டிப்பாகச் செய்ய வேண்டும். இந்தத் தீவு இராமநாதபுரம் சேதுபதிக்குச் சொந்தமாக இருந்தது என்பதைப் பரிசீலனை பண்ணி, சம்பந்தப்பட்ட ரிகார்டுகளை எல்லாம் வாங்கி, அதற்கு உங்களுக்கு வசதி உண்டு, வாங்கவும் முடியும், இதை கவனிக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டு, இந்த குதிரைப் பந்தயத்தைப்பற்றிச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: கச்சத் தீவுக்கு குதிரையில் போக முடியாது.

திரு. எஸ். ராமகிருஷ்ண தேவர்: குதிரைப் பந்தயம் ஒழிக்கப்பட்டு விடுமென்று சொன்னாலும், சீக்கிரத்தில் வந்துவிடும் என்று சொல்கிறார்கள். ஆகவே கச்சத் தீவைப் பொறுத்த வரை, கச்சத் தீவை எந்தக் காரணம் கொண்டும் விடாமல் அதைக் கைப்பற்றுவதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டு உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இந்தக் கச்சத் தீவுப் பிரச்சினையைப் பொறுத்து, மாநில அரசினுடைய தீர்மானத்தை எனது கட்சியின் சார்பில் ஆதரிப்பதற்காகவே நான் இப்போது பேசுகிறேன். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இப்பிரச்சினைபற்றிப் பல விவரங்களை எடுத்துச் சொல்லி விட்டார்கள். அதுவும் குறிப்பாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பக்கர் அவர்கள் மிகச் சிறப்பாக என்ன காரணத்

* * * expunged as ordered by the chair.

திற்காக இந்தக் கச்சத் தீவை இலங்கைக்குக் கொடுத்திருக்கக் கூடாது என்பதைப்பற்றியெல்லாம் பல உதாரணங்களோடு எடுத்துச் சொன்னார்கள். இதைப்பற்றி நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டத்தை சென்ற மாதத்தில் இங்கே நடத்தினார்கள். அந்தக் கூட்டத்திலே எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டோம் அதிலே மதிப்பிற்குரிய எனது அருமை நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்களும் சட்டப் பேரவையில் இருக்கக் கூடிய புதிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. மாரிமுத்து அவர்களும் கலந்துகொண்டு இங்கே கொடுத்திருக்கக்கூடிய இந்தத் தீர்மானம், அங்கே எழுப்பப்பட்டு, இந்தத் தீர்மானம் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே ஒன்றே ஒன்று தான் சொன்னோம். கொடுத்திருக்கக் கூடிய பிரச்சினையில் என்ன காரணத்திற்காக மத்திய அரசு இலங்கைக்குக் கொடுத்திருக்கலாம் என்ற வாதங்களையெல்லாம் திரு. ஆறுமுகசாமி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதே போல எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட இராமநாதபுரம் சேதுபதி சமஸ்தானத்திற்குச் சொந்தம், இது சம்பந்தமான ரிகார்டுகளை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தினார்கள். இது சம்பந்தப்பட்ட அத்தகைய தடையங்களை எடுத்து நம் மாநில அரசு ஏற்கெனவே மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறது என்பதை சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நாம் பார்த்தோம் என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ளக்

(பிற்பகல் 5-40)

கடமைப்பட்டிருக்கிறேன். அவ்வளவு தடையங்களையும் பார்த்து விட்டு என்ன காரணத்தாலோ மத்திய அரசு, கச்சத் தீவை இலங்கைக்குக் கொடுத்து விட்டது என்பதை நம்மாலே உணர முடிகிறது. எதிர்க் கட்சி வரிசையில் இருக்கிற நாங்கள் எல்லாம் முக்கியமாகத் தெரிவிப்பது, இந்தப் பிரச்சினை பற்றி மாநில அளவில் நம்முடைய முதலமைச்சரைக் கலந்துகொண்டு மத்திய அரசு ஒரு முடிவெடுத்திருக்க வேண்டும் என்பது தான். தமிழக மக்களைக் கலந்துகொள்ளாமல் இவ்வளவு ஒரு முக்கியமான காரியத்தில் மத்திய அரசு முடிவெடுத்திருக்கிறதானது எங்களுக்கு வருத்தத்தை அளிக்கிறது என்று தான் இந்தத் தீர்மானத்தில் எழுதப்பட்டது. இதிலே திரு. ஆறுமுகசாமி ஒன்று சொன்னார்கள். இந்தத் தீர்மானம் போட்டபோது, அவர்கள் ஆதரித்தார்கள். தீர்மானத்தை ஆதரித்துவிட்டு அவர்கள் வெளியே வந்தபிறகு, அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த தலைவர்களும் அதைப்பற்றிப் பத்திரிகையில் எழுதினார்கள். இந்தத் தீர்மானத்தை எப்படி நம்முடைய சட்டமன்றத்தில், பேரவையில் உறுப்பினர்கள் ஆதரித்தார்கள் என்று அவர் கட்சியில் கொஞ்சம் பூசல் எல்லாம் கிளம்பிற்று. அதை உடனடியாக மறுத்து நாங்கள் செய்தது சரி என்று வாதம் செய்திட்ட திரு. ஆறுமுகசாமி அவர்கள் பத்திரிகையில் என்ன சொன்னார்கள்....



திரு. எம். ஆறுமுகசாமி: அவர் சொல்லுவது முற்றிலும் உண்மை.
நாங்கள் கலந்துகொண்டது ஒரு முறையில். அப்போது அந்தத் தீர்மானத்
தில் ஒரு திருத்தத்தை நானே முன்மொழிந்தேன். என்ன சொல்லப்பட்ட
தென்றால், இந்தப் பிரச்சினையில் மாநில அரசு கலந்துகொள்ளப்படவில்லை
என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது என்ன சொல்லுகி
றார்கள் என்றால், மாநில அரசு கலந்துகொள்ளப்பட்டது, ஆனால் மாநில
அரசின் கருத்துக்களை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்று தான்
சொல்கிறார்கள். என்னுடைய கோரிக்கை மத்திய அரசு, மாநில சம்பந்தப்
பட்ட விஷயங்களில் மாநில அரசைக் கலந்துகொண்டிருக்கவேண்டும் என்பது
தான். கலந்துகொள்ளாமல் செய்திருப்பது தவறு என்பதால் வருத்தம் தெரி
வித்தேன். அன்றைக்கு இருந்த நிலையில் புனர் பரிசீலனை செய்யவேண்டு
மென்றும் நாங்கள் கருத்து தெரிவித்தோம். இன்றுபோல் ஒப்பந்தம்
முற்றிலும் முடிந்த நிலை அன்றில்லை. மாநில மக்களது உணர்ச்சிகளைக்
கிளப்பாமல் இருப்பதற்காகவும், மத்திய, மாநில அரசுகளிடையே போதுதலைத்
தவிர்க்கவும், அதிலே அமைதிப்படுத்தவும் விரும்பினோம். அதுபற்றிப் பூசல்
வந்து எல்லாம் அடங்கிப் போய்விட்டது.

திரு. ம. பொ. சிவஞானம்: அடங்கி விட்டதா, இல்லை அடக்கப்பட்டு விட்டதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மாநில அரசு கலந்துகொள்ளப்படவில்லை என்பதற்காக வருத்தம் தெரிவித்தோம் என்று சொன்னார்கள். தீர்மானத்தில் அந்த வாசகம் கிடையாது. மாநில அரசைக் கலந்துகொள்வது என்ற வாசகம் அப்போதும் கிடையாது, இன்றைக்கும் கிடையாது. கலந்துகொள்வது என்பதற்கு என்ன பொருள் என்று புரிந்து கொள்ள வேண்டும். இப்போது எங்கள் கட்சியில் கூட பொதுச் செயலாளர் தலைவரைக் கலந்து கொண்டு ஒரு காரியத்தில் முடிவெடுக்க வேண்டும் என்று இருக்கிறது சட்டதிட்டத்தில். பொதுச் செயலாளர் நாவலர் என்னைக் கலந்து கொண்டு நான் வேண்டாம் என்று சொல்லிய பிறகு, தலைவரைக் கலந்து கொண்டேன் என்று அறிக்கை விட்டால், அது என்னைக் கட்டுப்படுத்தாது. கலந்துகொண்டு என்றால், கலந்து பேசி ஏகமனதாக முடிவு எடுப்பதற்குத் தான் 'கலந்து கொண்டு' என்று பெயர் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகசாமிக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஆறுமுகசாமி: தலைவர் அவர்களே, கலந்துகொள்வது, கலந்து பேசுவது என்றால், ஒருவருடைய கருத்தை இன்னொருவர் ஏற்றுக் கொள்ளாமல், இரண்டு பேருக்கும் முரண்பாடான கருத்துக்கள் நிலவுவது ஆகாதா?

கருத்தை ஏற்றுக்கொண்டால்தான், கலந்துகொள்வது என்று பொருளா? மாநில அரசின் கருத்தை ஏற்றுக்கொண்டால் தான் மத்திய அரசு கலந்து கொண்டதாகப் பொருளா? மத்திய அரசு ஏற்றுக்கொள்ளாவிட்டால்....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பாலும் தண்ணீரும் கலக்கும், ஆனால் எண்ணெயும் தண்ணீரும் கலப்பதில்லை. இரண்டும் கலப்பது போல் இருக்கும், ஆனால் கலக்காது.

திரு. ஜி. சுவாமிநாதன்: நான் இந்தப் பிரச்சினைக்குள் போக விரும்பவில்லை. நம்முடைய நண்பர் திரு. வ. ஆர். மாரிமுத்து அவர்கள் கூட பேரவையில் பேசினார்கள் என்று கேள்விப்பட்டேன். ஒரு கருத்தை அவர்களுடைய கட்சி நண்பர்கள் சொன்னார்கள். அந்தச் சமயத்தில் நாங்கள் ஆதரித்தோம் என்றும், அப்பொழுது இந்திரா அம்மையார் கையெழுத்துப் போட்டார்களா இல்லையா என்பது எங்களுக்குத் தெரியாது. ஆனால் இப்பொழுது கையெழுத்துப்போட்டு நம்முடைய ஜனாதிபதி ஒப்புதல் அளிக்க பாராளுமன்றத்தில் வைத்துவிட்டார்கள், ஆகவே மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். இந்திராகாந்தி அம்மையார் கையெழுத்துப் போட்டு விட்டார்கள், அதை மீறி ஏதாவது நடக்கும் என்று நான் நினைக்கவில்லை. அந்த அளவுக்கு அந்த அம்மையார் அதிகாரம் உள்ளவர்கள் என்ற மரியாதை எனக்கு உண்டு, அவர்களுக்கும் உண்டு. அதிலே ஒரு பெரிய மாறுதல் ஏற்படவில்லை என்று சொல்லிக்கொண்டு, இந்தத் தீர்மானத்தைச் சுதந்திராக் கட்சியின் சார்பில் முழு மனதோடு ஆதரிக்கிறேன் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

• திரு. ம. பொ. சிவஞானம்: மாண்புமிகு தலைவரவர்களே, தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் முன்மொழிந்துள்ள தீர்மானத்தை நான் மனநிறைவோடு ஆதரிக்கிறேன். இந்தத் தீர்மானத்திலே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். எம். பக்கர் அவர்கள் சுட்டிக் காட்டியது போல், வாசகங்கள் மிக எச்சரிக்கையாகப் போடப்பட்டுள்ளன. என்னுடைய கருத்தைக் கேட்டால், 'கண்டனம்' என்ற அளவில் போட்டிருக்க நமக்கு உரிமையுண்டு. 'வேதனை அடைகிறது இந்த அவை' என்று கூறி வெறுப்பைக் காட்டியிருக்கலாம். 'ஆத்திரப்படுகிறது இந்த அவை' என்று கூறி ஆட்சேபணை எழுப்பியிருக்கலாம். அப்படி எல்லாம் இல்லாமல் 'வருத்தப்படுகிறது' என்ற வார்த்தையோடு இந்தத் தீர்மானம் நிற்கிறது. 'இதைக்கூடச் சொல்ல வேண்டாமென்கிறாரா நண்பர் திரு. ஆறுமுகசாமி? இதைச் சொல்வதற்குக்கூட மாநிலத்திற்கு உரிமையில்லை என்று அவர் சொல்லுவாரானால், நாம் கண்டனத் தீர்மானம் போடாததற்காக அவருக்கு என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



அவர் சொன்னார், "நடந்தது நடந்துபோய்விட்டது, அயல் நாட்டுப் பிரச்சினைகளில் மத்திய அரசுக்கு இறையாண்மை இருக்கிறது, ஆகவே, அது தான் முடிவு செய்ய வேண்டும்" என்று. "அவ்வாறு அது முடிவு செய்து விட்ட பிறகு ஆட்சேபணை எழுப்பிக்கொண்டிருப்பது சரியல்ல, எப்படி அதை மாற்றுவது?" என்றும் சொன்னார்கள்.

'ஹைபவர் ரேடியோ ஸ்டேஷன்' இந்தியாவில் வைப்பதற்கு அமெரிக்காவோடு ஆனைப்பட்ட பிரதமர் நேரு இருந்த காலத்தில் இந்தியா ஒரு ஒப்பந்தத்தை செய்துகொண்டது. அதன் பிறகு, ரஷ்யா இலேசாக முணுமுணுத்தது என்று தெரிந்தவுடனே, ஸ்வராஜ்யக்கான பெருமை பெற்று வளர்ந்து வருகிற நம்முடைய பாரத நாடு—ஆசிய ஜோதியாக விளங்கிய நேரு அவர்கள், அமெரிக்காவுடன் நாம் செய்துகொண்ட 'உடன்படிக்கையில் மீண்டும் தலையிட்டு, அந்த உடன்படிக்கையைத் திருத்துவதற்குக் கேட்டுக்கொண்டு, திருத்தியும் விட்டார்கள். ஒரு அயல் நாடு முணு முணுத்ததற்கே ஒரு ஒப்பந்தம் திருத்தப்பட்டதென்றால், கச்சத் தீவு உடன்படிக்கைக்கு எதிராக தன்னுடைய சதையிலே ஒரு பகுதி துடிக்கிறதென்றால், அதைத் திருத்துவதற்கு மறுப்பானேன்? இதற்குத் தகுதியற்ற ஒரு மத்திய அரசு இந்த மாநிலத்தை ஆளுவதற்கு உரிமையற்றது என்பதை உணர்ச்சியோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவர் சொன்னார், "மாநில அரசு கலந்துகொள்ளப்படவில்லை என்பது வேறு; மாநில அரசின் கருத்து ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது வேறு" என்று. இந்த மன்றத்திற்கு வெளியே இன்னொரு மன்றத்தில்கூட, முதல்வர் கலைஞர் ரகசியத்தில் உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டதாகச் சொல்லப்பட்டது. அதுபற்றி ஒன்றை நான் விளக்க விரும்புகிறேன். இந்த அரசு இலேசாக கலக்கப்பட்டிருக்கலாம் அல்லது பேசப்பட்டிருக்கலாம். அதுவல்ல பிரச்சினை. கச்சத் தீவு இந்த மாநிலத்திற்குச் சொந்தமான ஒன்று, உரிமையுடைய ஒன்று. இதிலே, மத்திய அரசு தமிழக முதல்வரைக் கலந்துகொண்டதென்றே வைத்துக் கொள்வோம்—வாதத்திற்காக. அப்படிக் கலந்து பேசியபோது மத்திய அரசின் அரசின் முடிவை ஏற்க மறுத்துவிட்டது இந்த மாநில அரசு என்றால் உடனே மத்திய அரசின் பிரதமர் என்ன செய்திருக்க வேண்டும்? இந்திய அரசின் அயல்நாட்டு அமைச்சரோ, அந்நிய நாட்டுத் துறையின் செயலாளரோ நம்முடைய முதல்வரோடு கலந்து பேசியபோது, முதல்வர் உறுதியாக ஆட்சேபணை தெரிவித்திருக்கிறார் என்பதை அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். அப்படியானால், பிரதமர் நம்முடைய முதல்வரை டில்லிக்கு அழைத்திருக்க வேண்டும். அழைத்து, அதுபற்றி மேலும் தன்னுடைய சங்கடங்களை எடுத்துச் சொல்லி விவாதித்திருக்க வேண்டும். அதுவரை ஒப்பந்த முயற்சியை ஒத்தி வைத்திருக்க வேண்டும். இந்த மாநிலத்தின் சம்மதம் பெறும்வரை இந்தப் பிரச்சினையைத் தள்ளிப் போட்டிருக்க வேண்டுமேயொழிய, 'உன்னைக் கேட்டோம்; நீ மறுத்தாய்; ஆகவே நாங்கள் ஒப்பந்தம் செய்து கொண்டோம்'

என்பது முறையல்ல. 'இனியும் நாம் மறுக்கிறபோது ஒவ்வொன்றிலும் அவர்கள் இஷ்டப்படி எல்லாம் செய்வார்கள் என்றால், 'அடிமை' என்று நமக்குக் காட்டுவதற்கு—அவர்கள் தங்கள் அந்தஸ்தை நமக்கு உணர்த்து வதற்கு எடுத்துக்கொண்ட வாய்ப்பே இது. 'கலந்து கொண்டோம்; நீ மறுத்தாய்; எங்களுக்கு உரிமையிருக்கிறது; நாங்கள் கொடுத்து விட்டோம்' என்கிறார்கள். இப்படித்தான் நாம் மறுக்கிறபோதெல்லாம் அவர்கள் செய் வார்களென்றால், நம்முடைய விதிக்காக 'அழுவது' என்று கூட ஒரு தீர்மானம் போடலாம்.

இன்னொன்று நான் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள், நண்பர் திரு. சக்தி மோகன் அவர்கள் சொன்னது போல், இதை ஒரு கட்சிப் பிரச்சினையாக எடுத்துக்கொண்டார்கள். ஆனால், பழைய காங்கிரஸ் கட்சி அம்மாதிரி எடுத்துக்கொள்ளாததற்கு நான் மகிழ்ச்சி யடைந்து ஆறுதல் அடைகின்றேன். இது ஒருவகையில் இந்த மாநிலத்தின் பிரச்சினை; இன்னொரு வகையில் இந்திய தேசத்தின் பிரச்சினை. கச்சத் தீவு போனதற்கு நான் தமிழன் என்று நினைக்கிறபோது துடிக்கிறேன்; இந்தியன் என்று நினைக்கிறபோது வெட்கப்படுகிறேன். இந்தியன் என்ற உணர்வை விட்டு விட்டு, நானோ, முதல்வரோ, திராவிட முன்னேற்றக் கழகமோ தமிழரசுக் கழகமோ கிளர்ச்சி நடத்துவதாக நினைக்க வேண்டாம். இமாலயப் பகுதி சீனாவிடம் போனபோது எவ்வளவு ஆத்திரப்பட்டேனோ, அந்த அளவுக்கு கச்சத் தீவு போனதற்கும் ஆத்திரப்படுகிறேன்.

அந்தக் கச்சத் தீவு மீது நமக்கு முன்னர் எப்போதும் உரிமையோ, அதிகாரமோ இருந்ததில்லை என்று நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் சொன்னார்கள். தன் கட்சிக்காக வாதிடுவதற்கு எவ்வளவு தலைகீழாகப் பேச முடியுமோ அவ்வளவு பேசுகிறார். இந்த ஒப்பந்தத்திற்கு முன்பு கச்சத் தீவு பற்றி பண்டாரநாயகா என்னவெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தாரோ, அதையே ஆளுங் காங்கிரஸ் கட்சியினரும் இப்போது சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். இந்த ஒப்பந்தத்திற்கு முன் ஆளும் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் கச்சத் தீவு இந்தியாவுக்குத்தான் சொந்தமென்று சொல்லிக்கொண்டிருந்தார் களே, அதை அவர்கள் மனச் சாட்சிக்கு விரோதமாக அப்போது சொல்லிக் கொண்டிருந்தார்களென்று நான் எடுத்துக்கொள்ள வேண்டுமா? உண்மை அப்படித்தானா?

"இதற்கு முன் இரண்டு நாடுகளுக்குமே இறையாண்மையில்லை கச்சத் தீவு மீது" என்று திரு. ஆறுமுகசாமி சொன்னார். அப்படியானால், ஒப்பந்தத் தினால் இரண்டு பேருக்குமே லாபம் இருக்க வேண்டும். ஆனால், அப்படி எதுவும் இந்தியாவுக்கு இல்லை.





இந்த ஒப்பந்தத்தைச் செய்து கொண்ட பிறகு, நாளை ஒரு அயல் நாட்டுக்கு அந்தக் கச்சத் தீவிலே இலங்கை இடம் கொடுக்காதா? இடம் கொடுத்தால், நாம் என்ன ஆவோம்? கச்சத் தீவு ஒரு அயல்நாட்டின் ராணுவ தளமாக்கப்பட மாட்டாதா? அந்நியர் படையெடுக்க இதுவரை பாரதத்தின் வடபுலம்தான் வாய்ப்பாக இருந்தது. இனி, தென்புலம்— தமிழகம் தாக்கப்படுவதற்கு அது படைத்தளமாக உபயோகப்படுமா இல்லையா? அயல் நாட்டுடன் ஒரு உடன்படிக்கையிலுள்ள மத்திய அரசுக்கு உரிமையுண்டு என்பது ஒரு புறம் இருக்கட்டும், ஆனால், அதனுடைய விளைவுகள் என்ன வென்று பார்க்க வேண்டும்.

இந்த ஒப்பந்தம் நாம் திருத்த முடியாததாகிவிட்டது. இறையாண்மை நமக்கில்லை என்பதால், 'சாவரினிட்டி' இந்த மாநிலத்திற்கு இல்லை என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அதற்காக, ஒப்பந்தத்தால் ஏற்படும் விளைவு களுக்காக நான் எப்படி வேதனைப்படாமல் இருக்க முடியும்? கச்சத் தீவு ஒரு அயல் நாட்டு ராணுவ தளம் ஆக்கப்படலாம்—அந்த நாடு எது என்று பெயரைச் சொல்ல நான் விரும்பவில்லை—அதனால் 100க்கு 100 தமிழ்நாடுதான் பாதிக்கப்படுமென்பதனை நினைக்கிறபோது வேதனை ஏற்படுகிறது. இது கற்பனையாக இருக்கலாம். வெறும் அனுமானமாக இருக்கலாம். ஆனால், இதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே நாம் ஆட்சேபிக்கிறோம்.

சேது சமுத்திரத் திட்டம் இதனால் பாதிக்கப்படுமென்று முதல்வரவர்கள் சொன்னார்கள். அதைப்பற்றித் தெளிவான பதில் மத்திய அரசிடமிருந்து வரவில்லை. அந்தத் திட்டத்திற்கு நாங்கள் பாதுகாப்புத் தருகிறோம் என்று மத்திய அரசிடம் இருந்து உத்தரவாதம் கிடைக்கவில்லை.

இந்தப் பிரச்சினையில் நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும். இந்த மாநில அரசு கலந்துகொள்ளப்பட வேண்டுமென்பது மட்டுமல்ல, இந்த மாநில சட்ட சபையும் கலந்து கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

(பிற்பகல் 5.50)

இப்போது, ஒரு மாநிலத்தின் எல்லையிலுள்ள ஒரு பகுதியை மற்றொரு மாநிலத்திற்கு மாற்றுவதானால், கொடுக்கிற மாநிலம், ஏற்கிற மாநிலம் ஆகிய இரண்டு மாநிலங்களின் சட்ட மன்றங்களின் அபிப்பிராயமும் கேட்கப்பட வேண்டும். இரண்டு மாநிலங்களுடைய அரசுகளின், அமைச்சுகளின் அபிப்பிராயம் கேட்க வேண்டுமென்றல்லாமல், இரண்டு மாநில சட்ட மன்றங் களின் அபிப்பிராயம் கேட்கப்படவேண்டுமென்று கான்ஸ்டிடியூஷனில் இருக் கிறது. ஆனால் இதற்கு விதியில் இடம் இல்லாததற்குக் காரணம், நாம் அயல் நாட்டிலிருந்து எடுப்போமேயொழிய, கொடுப்போம் என்று கான்ஸ்டிடியூஷன் எழுதிய கர்த்தாக்கள் நினைக்காமல் இருந்திருக்க வேண்டும். இந்தியா பறி

கொடுக்கவும் செய்யும் என்று கான்ஸ்டிடியூஷன் கர்த்தாக்கள் நினைத்திருந்தால், நிச்சயமாக அதற்கான நிபந்தனைகளை ஏற்படுத்தியிருப்பார்கள். ஒரே நாடு, ஏக இந்தியா என்ற நினைப்பில்தான் இந்திய கான்ஸ்டிடியூஷனை அதன் கர்த்தாக்கள் எழுதினார்கள். அப்படிப்பட்டவர்கள் கூட, ஒரு மாநிலத்திலிருந்து எல்லைப் பகுதியை இன்னொரு மாநிலத்திற்கு மாற்றுகிறபோது அரசு மட்டத்தில்—முதல்வர் மட்டத்தில்—அமைச்சு மட்டத்தில் பேசினால் போதுமென்று கருதாமல் மாநில சட்டமன்றங்களின் அபிப்பிராயம் கோரப்பட வேண்டும்; அதற்கு அப்புறம் தான் ஜனாதிபதி அது சம்பந்தமாக மசோதாவிற்கு அங்கீகாரம் தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மாநில சட்டமன்றங்களின் அபிப்பிராயம் கோரப்பட வேண்டுமென்றுதான் இருக்கிறது. மாநில சட்டசபை ஆட்சேபித்தால் என்ன நிலை என்பது பற்றி அதில் இல்லை. அதை, மத்திய ஆட்சிக்குள்ள இறையாண்மைக்கு விட்டார்கள். இந்தப் பிரச்சினையிலே சட்டம் அப்படியில்லாமல் போனதற்குக் காரணம், அயல் நாட்டுப் பிரச்சினையில் இப்போது நடந்ததுபோன்று நடக்குமென்று அவர்கள் நினைக்காததுதான். நமக்கு அப்போது புதுவை, காரைக்கால், சந்திரநாகூர் இவையெல்லாம் வரவேண்டியிருந்தது. அதற்காக மத்தியில் இறையாண்மையை வைத்தார்கள். இப்போது நிலைமை என்ன? சட்டம் இல்லாத இடத்தில் சம்பிரதாயங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். சட்டத்தை விட சம்பிரதாயத்திற்கு அதிக மதிப்பு உண்டு. இந்தப் பிரச்சினையில் நம்முடைய தமிழக அரசை மத்திய அரசு குறிப்பாக, பிரதமரவர்கள் நமது முதல்வரை டெல்லிக்கு அழைத்துப் பேசி இருக்கலாம். தொலைபேசி மூலம் மேலும் கேட்டிருக்கலாம். கடந்த ஜனாதிபதித் தேர்தலிலே, அதற்கு முன் பல விஷயங்களிலே, பிரதமரவர்கள் எப்படி நமது தலைமை அமைச்சரிடம் அடிக்கடி தொலைபேசி மூலம் ஆலோசனை கேட்டார்கள் என்றெல்லாம் நமக்குத் தெரியும். அப்படி இருக்க, இந்தப் பிரச்சினைபற்றி ஏன் கேட்கவில்லை? சூழ்நிலை மாறிவிட்டதென்ற எண்ணம் போலும். இனியும் இப்படித்தான் நம்மை நடத்தப் போகிறார்களா என்பதை நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள்தான் சொல்ல வேண்டும். நான் அவரைப் போன்று தேச பக்த இந்தியன் என்ற உணர்வோடு சொல்கிறேன். தொடர்ந்து நாம் அவமதிக்கப்பட்டு வருகிறோம். தொடர்ந்து நாம் ஆத்திரமூட்டப்பட்டு வருகிறோம். இந்த நிலை தொடருவது இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு மத்திய அரசு உதவி புரிவதாகாது. அடுத்தபடியாக ஒன்றைக் கவனிக்க வேண்டும். இந்தக் கச்சத் தீவுப் பிரச்சினையிலே நம் மாநிலச் சட்ட மன்றத்திலே ஒரு அபிப்பிராயம் சொல்லப்படுகிறது. முதல்வரவர்கள் கலந்துகொள்ளப்பட்டார்கள். அவர்கள் பிரதமருடன் ஏதோ உடன்படிக்கை செய்து கொண்டார்கள் என்றெல்லாம் கடமையிலிருந்து தப்பித்து ஓடுபவர்கள் சாக்கு சொல்கிறார்கள். இங்கும் நண்பரவர்கள் திரு. இராமகிருஷ்ணத் தேவர் நகைச்சுவையாக அப்படிச் சொன்னார்கள். நான் அவருக்குப் பதில் சொல்லவில்லை.





வெளியே இருப்பவர்களுக்காகச் சொல்கிறேன். இதில் நேரடியாக எந்த விதமான பற்றும் பாசமும் இல்லாமல்—இந்தியன் என்ற சுரணை இல்லாமல்—தமிழன் என்ற உணர்வும் இல்லாமல்—தேச பக்த பாரம்பரியம் இல்லாமல்—தப்பித்துக்கொண்டு ஓடுவதற்காக, 'முதல்வரவர்கள் முன்னாடியே ஒத்துக்கொண்டு விட்டார்கள்' என்று சிலர் சொல்கிறார்கள் இந்த மன்றத்திற்கு வெளியே. இங்கே இருப்பவர்கள் யாரும் அப்படிச் சொல்லவில்லை. சொல்ல மாட்டார்கள் என்ற நம்பிக்கையோடு இருக்கிறேன். இந்தத் தீர்மானத்தின் மீது இன்னும் அதிகம் பேசி, நேரத்தை எடுக்க நான் விரும்பவில்லை. முதல்வரவர்கள் இதில் காலத்தோடு, நேரத்தோடு செயல்பட்டதற்காக, நான் அவரைப் பாராட்டுகிறேன். அவர் இதைவிடத் தீவிரமாகச் செயல்படாதது, ஒருமைப்பாட்டில் அவருக்குச் சமீப காலத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய உறுதிதான் காரணம். மத்திய அரசுக்கும் தமிழக அரசுக்கும் இருக்கும் உறவை முறிந்து விடக்கூடாது என்பதுதான் காரணம். 'பொறுப்பை விட்டுவிட்டு ஓடிவிடப் பார்க்கிறார் முதல்வர்; கடைசி நேரத்தில் ராஜிநாமா செய்துவிட்டு ஓடி ஒரு ஸ்டண்ட் அடிக்கப் பார்க்கிறார்' என்ற ஒரு செய்தியை அடிக்கடி பத்திரிகையில் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்படி ஒரு திடீர் புரட்சி நடத்த வேண்டுமென்றால், இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வரு முன்பே, இதைக் கண்டனப் போராட்டமாக வைத்து மாநில சர்க்கார் ராஜிநாமா செய்து, ஒரு நெருக்கடி நிலைமையைக் கொண்டு வந்திருக்க முடியும். ஆனால், அப்படியெல்லாம் அவசரப்பட்டுக்கொண்டு தமிழக அரசு மத்தியமாநில உறவை முறிக்கத் தயாராக இல்லை. இதை ஒரு சரியான சோதனையாக அமைந்துள்ள இந்தப் பிரச்சினையில் நாம் பார்க்கிறோம். அந்த உறுதிக்காகவும் நான் முதல்வரைப் பாராட்டுகிறேன். அவசரப்பட்டு, இதிலே மத்தியமாநில உறவை முறிக்கும் அளவுக்கு போகாததற்காகவும், அவரை நான் பாராட்டுகிறேன். இந்தத் தீர்மானத்தை நாம் முழு மனதுடன் நிறைவேற்றி அனுப்ப வேண்டும். ஒரு மனப்பட்டு அழுவதற்குக் கூடவா இந்தத் தமிழ் நாட்டில் உணர்வு இல்லாமல் போய் விட்டது! திரும்பவும் நான் நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்களைக் கேட்கிறேன்—இந்தியன் என்ற உணர்வோடும், தமிழன் என்ற உணர்வோடும், அவர் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டவர் என்ற உணர்வோடும் இதற்கு எதிர்ப்பு இல்லாமல் ஏகமனதாக நிறைவேற்றி, இது மேலவைதான் என்பதைக் காட்டுமாறு நான் வேண்டி, இதை ஆதரிக்கிறேன்.

* திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு தலைவரவர்களே, கடந்த ஜூன் மாதம் 30-ம் தேதியன்று தமிழ் நாட்டின் அனைத்துக் கட்சிகளின் தலைவர்களின் கூட்டம் நமது அரசால் கூட்டப்பட்டு, கோட்டையில் நடந்தது. துரதிருஷ்டவசமாக என்னால் கலந்துகொள்ள முடியவில்லை. எனது வீட்டில் ஒரு திருமணம் நடந்ததால், அந்தக் கூட்டத்திற்கு வர இயலாமல் போய்விட்டது.

இருப்பினும், எங்கள் கட்சியின் தலைவராக, பேரவையில் இருக்கும் திரு பொன்னப்ப நாடார் அவர்கள் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள். அதற்காகவே அவர் கன்னியாகுமரியிலிருந்து இங்கே வந்து கூட்டத்தில் கலந்துகொண்டார். அன்று எடுத்த முடிவிலிருந்து பின் வாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை. இந்தத் தீர்மானம் போடுவது ஜனநாயகத்திற்கு உகந்ததுதான். மத்திய அரசும் நம்முடையது தான்; மாநில அரசும் நம்முடையதுதான். ஆகவே நமது அரசை இன்னது செய்ய வேண்டுமென்று கேட்பதற்கு மக்களின் பிரதிநிதிகளாகிய நமக்கு என்றும் உரிமை உண்டு. அவர்கள் செய்துகொண்டிருக்கிற இந்த ஒப்பந்தம் திருத்த முடியாததல்ல. ஆகவே நமது உணர்ச்சியைக் காண்பித்து, ஒரு தீர்மானத்தைச் செய்து முடித்தோம். அதை ஊர்ஜிதப்படுத்துவதற்குப் போதிய காரணங்கள் இருக்கின்றன. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த 15 தினங்களுக்கு முன்னாலே இந்திய அரசின் அந்நிய நாட்டு அமைச்சர் மாண்புமிகு திரு. ஸ்வரண் சிங் அவர்கள் இந்தோனேஷியாவுக்கும் நமது நாட்டுக்கும் உள்ள எல்லையை நிர்ணயித்து, அங்கே சென்று ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருக்கிறார்கள். அது நமது பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டு, அதை ரேடியோ மூலம் கேட்டேன். அது இலங்கை ஒப்பந்தத்திற்குப் பின்னால் நடந்த ஒப்பந்தம். அதில்கூட எல்லை வகுக்கப்பட்டு, அந்த எல்லையில் கிடைக்கக்கூடிய எண்ணெய் வளம், கனி வளம் ஆகியவற்றை இரண்டு அரசுகளும் சொந்தமாக்கிக் கொண்டு, அதை எக்ஸ்பிளாய்ட் செய்வதற்கு வேண்டிய முயற்சிகள் செய்யுமென்றிருக்கிறது. அந்த ஷரத்துக்கூட இந்த ஒப்பந்தத்தில் இல்லை. அதையெல்லாம் பரிசீலிக்க வேண்டும். இலங்கை அரசுக்கு இறையாண்மை உரிமை கொடுத்தது பற்றிப் புனராலோசனை செய்வதற்கு அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. எனவே இதைப் பற்றிப் புனராலோசனை செய்ய வேண்டுமென்று நம்முடைய தீர்மானத்தில் கேட்டிருக்கிறோம். இது வெகு தெளிவான தீர்மானம். இதில் ஆட்சேபிக்க எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்தத் தீர்மானத்தை எங்கள் கட்சியின் சார்பாக முழு மனதுடன் ஆதரிக்கிறேன்.

நமது மாநில அரசைக் கலந்துகொண்டார்கள் என்று சொன்னால், மாநில அரசின் முதலமைச்சரவர்களை மட்டும் கலந்துகொள்வது போதாது. இது பெரிய பிரச்சினை. மாநிலத்திலே ஒரு எஸ்டேட்டாக இருந்த இராமநாதபுரம் ஜமீனுக்குச் சொந்தமாக கச்சத் தீவு இருந்தது. அதற்கான ரிக்கார்டுகளை அரசிடம் கொடுத்தார்கள். அதையெல்லாம் நாம் மத்திய அரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறோம். இன்னும் சற்று ஆழ்ந்து சிந்தித்துப் பார்ப்போமானால், எஸ்டேட் எப்படி மாநில அரசுக்குச் சொந்தம் என்பது தெரியும்; எஸ்டேட் அபாலிஷன் ஆக்டில் அவை மாநில அரசுக்குச் சொந்தமாகிவிட்டன. வெளி



நாட்டோடு ஒப்பந்தம் செய்துகொள்வதற்கு மத்திய அரசுக்கு உரிமை இருக்க லாம். இதையெல்லாம் நன்றாகக் கூடி, கலந்து பேசியிருக்கலாம். முதலமைச் சரவர்களையும், இரண்டு சட்டசபைகளையும் கலந்திருக்க வேண்டும். சட்ட சபைகளில் உள்ள மக்கள் பிரதிநிதிகளைக் கலந்து இதில் முடிவு செய்திருக்க வேண்டும். ஜனநாயக ரீதியில் அப்படி நடந்திருக்க வேண்டும். ஆகவே புனராலோசனை செய்யக் கோரியிருக்கிறோம். இது கட்சிப் பிரச்சினையை ஒதுக்கிவைத்துப் பார்க்க வேண்டிய பிரச்சினை. உதாரணமாக காவேரி பிரச்சினை இருக்கிறது. எங்கள் கட்சியைப்பற்றி மட்டும் பேசுகிறேன். கர்நாடகத்தில் எங்கள் கட்சி இருக்கிறது. அவர்கள் முழுக்க முழுக்க காவேரிப் பிரச்சினையில் நம்மை மிகப் பலமாக எதிர்க்கிறார்கள். நான் மற்ற கட்சிகளைப்பற்றிச் சொல்லத் தயாராக இல்லை. எங்கள் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள், கர்நாடகத்தைச் சேர்ந்தவர்கள் என்ற முறையில், அவர்கள் பாத்தியதையை நிலைநாட்ட வேண்டுமென்ற முறையில் பலமாக வாதாடு கிறார்கள்.

(பிற்பகல் 6-00)

அதே மாதிரி இங்கே நம் மாநிலத்திற்குச் சொந்தமான ஒரு சொத்தாக பூஸ்திதியாக இந்தச் சொத்து இருக்கிறது. இதை நாம இழந்து விடும்போது, அதைப்பற்றி யோசனை கூறவோ அல்லது கலந்து பேசுவதற்கோ கூட நமக்கு உரிமையில்லாது போவது நல்லதல்ல. நம் மாநிலத்தைச் சேர்ந்தது என்ற முறையில், இதில் கட்சி மாட்சரியங்களை மறந்துவிட்டு, நாம் போராடக் கடமைப்பட்டிருக்கிறோம், அதைப்பற்றி வாக்குவாதம் செய்யக் கடமைப்பட் டிருக்கிறோம். அதில் உரிமை கொண்டாட கடமைப்பட்டிருக்கின்றோம். இந்தத் தீர்மானத்திலே ஒன்றும், நம் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதுபோல, தீவிர போராட்டத்திற்கோ, சண்டை போடுவதற்கோ, கண்டிப்பதற்கோ தேவையில்லை. மத்திய அரசு தாம் எடுத்துள்ள முடிவை புனராலோசனை செய்ய வேண்டும். இதைத் தான் நாம் தீர்மானத்திலே சொல்லியிருக்கிறோம். இந்தத் தீர்மானம் நேர்மையான முறையில், கண்ணிய மான முறையில் கொண்டுவரப்பட்டுள்ளது. ஆகவே முழு மனதோடு நான் எங்கள் கட்சியின் சார்பாக இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு முன் மொழிந்த தீர்மானத்தை எதிர்க் கட்சித் தலைவரவர் களும், மற்ற கட்சிகளினுடைய தலைவர்களும், நம்முடைய நண்பர் திரு. ஆறு முகசாமி அவர்களைத் தவிர, அனைவருமே ஆதரித்து நல்ல பல கருத்துக்களை எடுத்துக் கூறியதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தீர்மானம் நிறைவேற்றுகின்ற நேரத்தில், நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்களும் இதை ஆதரித்து மேலவையிலே இந்தத் தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது என்ற ஒரு நிலையை உருவாக்குவார்கள் என்று நம்புகின்றேன்.

இந்தக் கச்சத் தீவுப் பிரச்சினை குறித்து மேலவையில் கடந்த ஜனவரி திங்களில் நான் மிக விளக்கமாகச் சில குறிப்புகளை அளித்திருக்கிறேன். 1973 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் வாக்கில் இந்தியாவின் பிரதமர் மதிப்பிற்குரிய திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இலங்கைக்குச் சென்றார்கள். இலங்கையிலே பல்வேறு பிரச்சினைகள்பற்றி இலங்கைப் பிரதமரோடு அவர்கள் பேச்சு வார்த்தைகள் நடத்துவார்கள் என்ற செய்தி ஏடுகளிலே வெளிவந்தது. அந்த நேரத்தில் அகில இந்திய பழைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் மதிப்பிற்குரிய திரு. அசோக் மேத்தா அவர்கள் சென்னையிலே பத்திரிகை நிருபர்களைச் சந்தித்தபோது, நிருபர்களிடத்திலே ஒன்றைச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் கேட்கின்ற மாநில சுயாட்சிபற்றி அவர்களிடத்திலே கருத்துக்கள் கேட்கிறபோது அவர்கள் சொன்னார்கள். "இலங்கைக்குச் செல்கின்ற இந்தியப் பிரதமரை தமிழக முதல்வர் அவர்கள் சந்தித்து—பெரும்பாலும் இலங்கை-இந்தியர் பிரச்சினை என்பது தமிழர்களுடைய பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தால்—தமிழக முதல்வரோடு கலந்து பேசி கருத்தை அறிந்து அதற்கேற்ப இலங்கையிலே சென்று அவர்கள் செயல்பட்டிருக்க வேண்டும்" என்ற கருத்துக்களை பழைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. அசோக் மேத்தா அவர்கள் தெரிவித்தது ஏடுகளிலெல்லாம் செய்தியாக வெளியாகியிருந்தது. அதற்குப் பிறகு டெல்லிக்குச் சென்றிருந்தேன். நான் டெல்லிக்குச் சென்ற நேரம் இலங்கையிலிருந்து இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் டெல்லிக்குத் திரும்பிய நேரமாகும். திரும்பியது மாத்திரம் அல்ல. அவர்கள் வருகின்றபோது, வழியில் திருமதி இந்திரா காந்தி நிருபர்களைச் சந்தித்தபோது கச்சத் தீவுபற்றி 'அது ஒரு கட்டப்பாறை. அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல' என்ற கருத்துப்பட ஒரு வார்த்தையைச் சொல்லியிருக்கின்றார்கள். நான் பிரதமரிடத்திலே வேறுசில காரியங்கள்பற்றி வாதிக்கப்பட ஏற்பாடு ஆகியிருந்தது என்றாலும், கச்சத் தீவுப் பிரச்சினையைப் பற்றிப் பிரதமரிடத்திலே நான் பேசத் தொடங்கினேன். கச்சத் தீவு ஒரு பாறை என்று சொன்னது தமிழர்களுடைய உள்ளத்தைப் பெரிதும் புண்படுத்தக்கூடியதாக இருக்கிறது என்று பிரதமரிடத்திலே எடுத்துச் சொன்னபோது, அவர்கள் வேறுவிதமாகச் சொன்னார்கள். நான் சொன்னது பத்திரிகையிலே வேறு விதமாக வந்துவிட்டது என்ற விளக்கத்தையும் 30—4—1973ல் அளித்தார். அப்போதே நாங்கள் பிரதமரைச் சந்தித்த பிறகு, நிருபர்கள் என்னைப் பேட்டி கண்டபோது, 'கச்சத் தீவுபற்றி இந்தியப் பிரதமரிடத்தில் வலியுறுத்தியிருக்கிறோம். அவர்கள் கச்சத் தீவை விட்டு விடக்கூடாது என்று சொல்லியிருக்கின்றோம்' என்ற கருத்து நிருபர்களுக்குச் சொல்லப்பட்டு எல்லாப் பத்திரிகைகளிலும் அந்தக் கருத்து வெளி வந்திருக்கிறது. அதற்கு 6 திங்களுக்குப் பிறகு 8—10—1973-ல் இந்தியப் பிரதமர் எனக்கு ஒரு



கடிதத்தை எழுதினார்கள். அந்தக் கடிதத்தில், 1973 ஏப்ரலில் இலங்கைக்கு இந்தியப் பிரதமர் சென்றிருந்தபோது, திருமதி பண்டாரநாயகாவுடன் கச்சத் தீவு பற்றிப் பேசப்பட்டதாகத் தகவல் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நான் பிரதமரைச் சந்தித்த ஆறு திங்களுக்குப் பிறகு பிரதமர் எனக்கு எழுதிய கடிதத்தில் 'அவர் இலங்கைப் பிரதமரோடு பேச சந்தித்த நேரத்திலே கச்சத்தீவு பற்றிப் பேசப்பட்டது' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அது மாத்திரம் அல்ல, அந்தக் கடிதத்தில் கச்சத்தீவு இந்தியாவுக்குச் சொந்தமானதுதான் என்பதற்கான ஆதாரங்கள் தேடப்பட்டு வருவதாகவும், இதுபற்றி இலங்கைப் பிரதமரோடு பேசச் செல்லுகின்ற இந்திய வெளி நாட்டுச் செயலாளர் என்னைச் சந்திக்கக் கூடுமென்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. இது எந்த அளவுக்கு நம்பக்கூடிய விஷயம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். ஆதாரங்கள் தேடப்பட்டு வருகின்றன, ஆகவே நாம் நம்முடைய நம்பிக்கையை இழக்கத் தேவையில்லை என்ற அந்த திடமான நிலையில் தமிழக அரசு இருந்தது. கடிதம் 8—10—73-ல் கிடைத்தது. 13—10—1973 அன்று அலகாபாத்துக்கு செல்லும் வழியில் டெல்லியில் தமிழக அரசு மாளிகையில் நான் தங்கியிருந்தேன். அப்போது பிரதமர் அவர்கள் ஏற்கனவே குறிப்பிட்டிருந்த திரு. கேவல் சிங் என்ற அதிகாரியை அங்கே சந்தித்துவிட்டு நான் அலகாபாத்துக்குச் சென்று மறுபடியும் மறுநாள் காலையிலே பிரதமரைச் சந்தித்தேன். பிரதமரைச் சந்தித்த போது, கேவல் சிங் அவர்களிடம் பேசிய விஷயங்களை எடுத்துச் சொல்லிய போதும் "தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வு கச்சத்தீவை இலங்கைக்குத் தருவதற்கு எதிராகத்தான் இருக்கும். ஆகவே நீங்கள் கச்சத்தீவை இலங்கைக்கு தந்துவிடக்கூடாது" என்று வலியுறுத்திவிட்டு நான் அன்று மாலையிலேயே சென்னை திரும்பினேன். பத்திரிகை நிருபர்கள் இந்தச் செய்தியை வெளியிட்டிருக்கின்றார்கள். இது எல்லாப் பத்திரிகைகளிலும் அப்போதே வெளி வந்திருக்கின்றது.

அதற்குப் பிறகு 2, 3 மாதங்கள் கச்சத் தீவு இந்தியாவுக்கு, தமிழ்நாட்டிற்குச் சொந்தமானது என்பதற்கான எல்லா வகையான ஆதாரங்களையும் திரட்டி அந்த ஆதாரங்களையெல்லாம் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, இன்னின்ன ஆதாரங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன என்கின்ற செய்தியும் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு நான் எழுதிய கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது மாத்திரமல்ல இலங்கைப் பிரதமர் இந்தியாவுக்கு வந்து டெல்லியில் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களைச் சந்திக்கப் போகிறார் என்ற செய்தியைக் கேள்விப்பட்டதும் உடனடியாக இன்னொரு கடிதத்தையும் மதிப்பிற்குரிய பிரதமருக்கு எழுதினேன்.

இவ்வளவு ஆதாரங்களையும் நாங்கள் அனுப்பி வைத்திருக்கிறோம். எல்லா ஆதாரங்களும் கச்சத்தீவு இந்தியாவுக்குத்தான், தமிழ்நாட்டிற்குத்தான் சொந்தம் என்பதை மெய்ப்பித்துக் காட்டுகின்ற ஆதாரங்கள். இந்த ஆதாரங்களை நீங்கள் உங்களைச் சந்திக்க வருகின்ற இலங்கைப் பிரதமரோடு பேசும்போது காட்டுங்கள். கச்சத்தீவை விட்டுக் கொடுத்துவிடக்கூடாது என்கின்ற கடிதத்தை நான் திருமதி இந்திரா காந்தி அவர்களுக்கு எழுதியிருந்தேன். தமிழக அரசின் சார்பில் எந்தவிதமான முயற்சிகளும் எடுக்கப்படவில்லை என்று, இங்கே திரு. ராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் சொன்னதுபோல, வெளியிலே யாராவது பேசுவார்களானால், அது வெறும் அரசியல் நோக்கத்திற்காக, லாபத்திற்காக பேசப்படுகிற பேச்சே தவிர, தமிழக அரசு இந்தப் பிரச்சினையில் தன்னுடைய கடமையை முழுமையாகச் செய்திருக்கின்றது. அது மாத்திரம் அல்ல திடீரென்று 27 ஆம் தேதியன்று செய்தி வருகிறது 'கச்சத் தீவை இலங்கைக்குத் தர மத்திய அரசு சம்மதித்து விட்டது' என்று. அது திடீரென்று வந்த செய்திதான். பேசிக்கொண்டிருக்கிறோம், இப்படி ஒரு ஒப்பந்தம் வரப் போகிறது என்பதற்கான முன்னறிவிப்பு எதுவுமே கிடையாது. நாம் வலியுறுத்திக்கொண்டே இருக்கிறோம். டெல்லி நாடாளுமன்றத்திலே பதில் அளிக்கின்ற மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள் கச்சத் தீவை விட்டுக் கொடுக்க மாட்டோம், கச்சத் தீவை விட்டுக்கொடுக்க மாட்டோம் என்று வன்மையாகப் பேசி வந்தார்கள். திடீரென்று கச்சத் தீவை விட்டுக்கொடுக்க ஒப்பந்தம் நிறைவேறப்போகிறது என்ற செய்தி வந்ததும், 27 ஆம் தேதி செய்தி வருகிறது என்றால் உடனடியாக நம்முடைய தமிழக சட்டப் பேரவையிலே, மேலவையிலே இருக்கின்ற தலைவர்கள் எல்லோருக்கும் தந்தி கொடுத்து வரவழைத்து அன்றே நமது கோட்டையிலே அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி அதிலே தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பி வைத்திருக்கின்றோம். இதற்குப் பிறகும்கூட மத்தியிலே சில அமைச்சர்கள் தருகின்ற தகவலை வைத்து தமிழ்நாட்டிலே தவறான பிரச்சாரத்தைச் செய்தார்கள். மாநிலங்கள் அவையிலே ஒரு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு பதில் சொல்கின்ற நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. லெம்பூரி ஜான் பேசுகின்ற நேரத்தில், அவர்களுக்கு பதில் அளித்த திரு. ஸ்வரண் சிங் அவர்கள், "தமிழ்நாடு அரசைக் கலந்து கொள்ளவில்லை என்று சொல்வது தவறு. தமிழ்நாடு அரசை நாங்கள் ஒரு முறைக்கு இரு முறை கலந்து பேசியிருக்கின்றோம்" என்று சொல்லியிருக்கிறார்கள். கலந்து கொண்டிருக்கலாம், அதற்கு தமிழ்நாடு அரசு சம்மதித்ததா, சம்மதத்தைக் கொடுத்ததா என்ற ஒரு கேள்வியைப் போட்டிருக்கிறார்கள். உடனே மத்திய அமைச்சர் திரு. ஸ்வரண் சிங் அவர்கள் மிகவும் தந்திரமாக, கலந்து கொண்டிருக்கிறதா இல்லையா என்பதுதான் கேள்வி என்று விட்டு விடுகிறார். அதற்கு என்ன அர்த்தம்? நான் சம்மதம் கொடுக்கவில்லை



(பிற்பகல் 6-10)

என்பதை அவர் அங்கு வெளியிடவில்லை. இதை இங்கே இருக்கின்ற பத்திரிகைகள், சில அரசியல்வாதிகள், பெரிதுபடுத்தினார்கள். அது மாத்திரமல்ல. நாம் நிறைவேற்றிய தீர்மானத்தை பிரதமருக்கு அனுப்பிவைத்திருக்கிறோம். அந்தத் தீர்மானத்தை அனுப்புகிற நேரத்தில் நான் முன்னேற்றக் கழகத் தலைவன் என்கின்ற முறையில் சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டியதாகக் குறிப்பிடவில்லை, தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் என்ற முறையிலே இந்த சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டினேன். அந்த சர்வ கட்சிக் கூட்டம் ஏதோ தமிழக திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டசபைக் கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டமல்ல. சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலே நடைபெற்ற கூட்டம். ஆகவே அந்தக் கூட்டத்திலே எடுக்கப்பட்ட முடிவுகள் தமிழக அரசின் முடிவுகளாகும். தமிழக அரசின் முடிவோடு சேர்த்து, சர்வ கட்சித் தலைவர்களின் முடிவை இணைத்து பிரதமர் அவர்களுக்கு—காலையிலே தீர்மானத்தை நிறைவேற்றுகிறோம். அதை உடனடியாக—அனுப்பி வைத்திருக்கிறோம். ஆனால் டெல்லியிலே பெரிய துணை மந்திரி ஒருவர், ஒரு கேள்விக்கு பதிலளிக்கிற நேரத்தில், தமிழக அரசின் சார்பில் அப்படி எந்த விதமான தகவலும் எங்களுக்கு வரவில்லை என்று சொல்லியிருக்கிறார். இன்றைக்கு தமிழ்நாட்டிலே திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு இருக்கிற துர்ப்பாக்கியமே நாங்கள் சொல்வதெல்லாம் மதிப்புக் குறைந்தவையாகவும், மிக மலிவானவையாகவும், மத்திய சர்க்காரிலேயிருந்து யாராவது ஒரு அமைச்சர் சரியான தகவலைச் சொல்லாவிட்டாலும், அது இந்த அரசுக்கு எதிரான தகவலாக இருந்தால், அதைத் தூக்கி வைத்துக்கொண்டு கூத்தாடுவதும் தமிழ்நாட்டு அரசியலரங்கத்திலே சிலபேருடைய வேலையாக ஆகியிருக்கிறது. எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்காருடைய போலீஸ் வர வேண்டும், எதற்கெடுத்தாலும் இங்கே இருக்கிற முதலமைச்சர் பார்க்கப்படவேண்டியவர் அல்ல, தெரிவிக்கப்படவேண்டியவர் அல்ல, கவர்னர் இல்லாவிட்டால் பிரதமர், இல்லாவிட்டால் ஜனாதிபதி என்கின்ற அளவுக்கு நம்முடைய மாநில அரசினுடைய கௌரவத்தை நாமே தாழ்த்திக்கொள்ள முன்வந்திருக்கின்ற அந்த நிலையை ஒட்டித்தான் மத்திய அமைச்சர்கள் சொல்லிவிட்டார்கள், மத்திய அமைச்சர்கள் சொல்லிவிட்டார்கள் என்று கூறப்பட்டது. நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள்கூட 'நீங்கள் கலந்து பேசவில்லை என்று சொன்னீர்களே, அதை நம்பி அல்லவா நாங்கள் தீர்மானத்திலே கையெழுத்துப் போட்டோம்' என்று சொன்னார்கள். நான் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துவைத்து அன்றைக்கே சொன்னேன். யாருடன் பேசினார்கள் என்று சொல்லியிருக்கிறேன். கலந்து பேசினார்கள் என்றால் வெளிநாட்டுத் துறைச் செயலாளர் வந்து பேசிவிட்டால் போதுமா? டெல்லியிலே நடந்த விருந்தொன்றில்,

இரண்டு நிமிஷம் நானே வெளிநாட்டு அமைச்சர் ஸ்வரன் சிங் அவர்களைச் சந்தித்து ஒருவருக்கொருவர் நலம் விசாரித்தோம். அப்பொழுது அவர் திரு. கேவல் சிங் உங்களைப் பார்த்தாரா என்று கேட்டார். இல்லை என்றேன். காலையில் பார்ப்பார் என்றார். இவ்வளவுதான். நான் அப்பொழுதும், கச்சத்தீவுப் பிரச்சினையில் நாங்கள் விட்டுக்கொடுக்கத் தயாராயில்லை என்று சொன்னேன். நீங்கள் கேவல் சிங்கோடு பேசுங்கள் என்றார். அவ்வளவுதான். விருந்து மண்டபத்திலே இரண்டு பேரும் கையிலே சாப்பாட்டை வைத்துக்கொண்டு நலம் விசாரிக்கிறபோது போட்ட பேச்செல்லாம் ஆலோசனைகள் என்று அர்த்தமல்ல. வெளிநாட்டுத் துறைச் செயலாளர் பேசினாரா? நான் மறுத்திருக்கிறேன். நமது தமிழரசுக் கழகத் தலைவர் சிலம்புச் செல்வர் அவர்களும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மற்றவர்களும் எடுத்துக் காட்டியதுபோல் நம்முடைய மறுப்பு வெளியிடப்பட்ட பிறகு, அந்த மறுப்பை அடிப்படையாக வைத்து, என்ன செய்யலாம் என்று கடைசி நிமிஷத்திலே ஒரு தந்தி கொடுத்து, அழைப்பு விடுத்து, என் டெல்லிக்கு என்னை அழைத்திருக்கக் கூடாது; அங்கே பேசியிருக்கக் கூடாது? நான் மாத்திரமல்ல. தமிழ்நாட்டினுடைய தலையெழுத்தை நிர்ணயிக்கக்கூடிய வேறு கட்சியினுடைய தலைவர்கள் பலர் இருக்கிறார்கள். தமிழகத்தின் முதல்வராக இருக்கிற காரணத்தாலேயே, எல்லா விவகாரங்களுக்கும் நானே பிரதிநிதி என்ற அகம்பாவத்தோடு, ஆணவத்தோடு எடுத்துக்கூற நான் இங்கே வரவில்லை. பல தலைவர்கள் இருக்கிறார்கள். முன்னாள் முதலமைச்சர்களாக இருந்தவர்கள் இருக்கிறார்கள். இன்றைக்கும் தமிழ்நாட்டிலே அரசியல் கட்சியிலே வீற்றிருக்கின்ற பெருந்தலைவர் காமராஜரைப் போன்றவர்கள் இருக்கின்றார்கள். தமிழ் உணர்ச்சியை இன்றைக்கு நாட்டிலே பரப்பிக்கொண்டிருக்கின்ற கச்சத்தீவுப் பிரச்சினையிலே அக்கறை கொண்டிருக்குமாக இருக்கின்ற நம்முடைய சிலம்புச் செல்வரைப் போன்றவர்கள் இருக்கின்றார்கள். இன்னும் இராமநாதபுரம் மாவட்டத்திலே இந்தப் பிரச்சினை தொடக்கவிட்டு எரிகின்ற பிரச்சினை என்று எடுத்துக் கூறக்கூடிய பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் திரு மூக்கையா தேவர் போன்றவர்கள் எல்லாம் பாராளுமன்றத்திலே இருக்கின்றார்கள். இராமநாதபுரம் மாவட்டத்திலே இருக்கின்ற பிரச்சினை என்கின்ற காரணத்தால், அடிக்கடி எடுத்துச் சொல்லும் முஸ்லீம் லீக் பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கே இருக்கின்றார்கள். அந்தப் பாராளுமன்ற உறுப்பினர்களாவது கலந்து கொள்ளப்பட்டார்களா என்றால், இல்லை. தமிழ்நாட்டு அளவிலே உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்காவது தகவல் தெரிவிக்கப்பட்டதா என்றால், இல்லை. திடீரென்று நாமே பத்திரிகையிலே செய்தி பார்க்கிறோம். பார்த்து பதைக்கிறோம். துடிக்கிறோம். அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தைக் கூட்டுகிறோம். அனைவரும் சேர்ந்தபோது, அன்றைக்கு ஏற்பட்ட உணர்ச்சி



உண்மையான உணர்ச்சி. திரு. ஆறுமுகசாமி உட்பட, ஆளுங் காங்கிரஸ் கட்சி உட்பட, அத்தனை பேருக்கும் ஏற்பட்ட உண்மையான உணர்ச்சியின் பிரதிபலிப்புத்தான் நாம் அன்றைக்கு நிறைவேற்றிய தீர்மானமாகும். அதைத்தான் இன்றைக்கும் இங்கே முன்மொழிந்து அனைவரும் வழிமொழிந்து பேசியிருக்கின்றார்கள். ஆகவே இந்தத் தீர்மானம் தமிழ்நாட்டு மக்களுடைய உரிமையை நிலைப்படுத்துகின்ற, இன்றைக்கில்லாவிட்டால் என்றைக்காவது ஒரு நாள் இந்த உரிமைக்காகப் போராடுவோம் என்பதை நிலைநிறுத்துகின்ற தீர்மானமாகும். இதை மறுபரிசிலனை செய்யவே முடியாது. முடிந்த கதை என்று யாரும் விட்டுவிடக்கூடாது. எத்தனையோ பிரச்சினைகள் திரும்பக் கிளறப்பட்டு, நல்ல முன்னேற்றமான முடிவுகளுக்கு அவைகளெல்லாம் ஆட்பட்டிருக்கின்றன. அதைப் போலவே இந்தப் பிரச்சினையிலும் மறுபடியும் தமிழ்நாட்டு மக்களுடைய கொதிப்பை எடுத்துச் சொல்லி, மத்திய அரசு இந்த ஒப்பந்தத்தைத் திருத்துவதற்கு வழிவகை காண மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்றுதான் கேட்டிருக்கின்றோம். நான் காலையிலேகூட இதைத்தான் சொன்னேன். மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்கின்ற இந்தத் தீர்மானத்தை அனைவரும் ஒருமனதாக ஆதரிப்பதில் எந்தத் தவறும் கிடையாது. ஒருவேளை திருமதி இந்திரா காந்தி அம்மையார் இதை மறுபரிசீலனை செய்ய முன்வந்துவிடுவார்களேயானால், பிறகு இதை எதிர்த்தவர்களெல்லாம் தனித்து வைக்கப்பட்டுவிடுவார்கள், தமிழ் நாட்டு மக்களால். ஆகவே முன்னெச்சரிக்கையாகவே அனைவரும் ஏகோபித்து இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுங்கள் என்று நான் காலையிலே கேட்டுக்கொண்டேன். சிலர் வெளிநடப்புச் செய்தார்கள். சிலர் அதை ஆதரிக்கத் தயங்கினார்கள். ஆனாலுங்கூட, தமிழ் நாட்டின் துரதிர்ஷ்டம் அது, தமிழ் நாட்டுக்கு ஏற்பட்டிருக்கின்ற சாபக்கேடு அது என்று நம்மை நாமே நொந்துகொள்வதைத் தவிர, வேறு வழியில்லை என்று எடுத்துக் கூறி, இந்த முக்கியமான தீர்மானம், நம்முடைய இந்திய நாட்டின் உரிமையை, தமிழ் நாட்டின் உரிமையைப் பாதுகாக்கின்ற தீர்மானம் என்கின்ற அளவிலே அனைவரும் ஏகோபித்து இதை ஆதரித்து அனுப்பிவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய அனைவருக்கும் நன்றி கூறுவதோடு, ஆதரிக்க இருக்கின்ற நண்பர் திரு. ஆறுமுகசாமிக்கும் நன்றிகூறி இந்த அளவில் அமைகின்றேன். வணக்கம்.

திரு. எம். ஆறுமுகசாமி: தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தில் மிகுந்த உணர்ச்சியைத் தூண்டும் வகையிலே நம்முடைய மாண்புமிகு அவையின் துணைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் வேண்டுகோள் விடுத்தார்கள். இந்த உடன்பாட்டை சிறிது காலத்திற்காவது நடைமுறையில் அமுலில் பார்த்த பிறகு மறுபரிசீலனை செய்யுங்கள் என்று சொல்வதிலாவது பொருள் இருக்கிறது. உடன்பாடு ஏற்பட்ட ஒரு மாதத்திற்குள்ளா

களை மறுபரிசிலனை செய்யுங்கள் என்றால், நம்முடைய உடன்பாட்டிற்கே மரியாதை இல்லாமல் போய்விடும் என்ற வகையில் நான் தற்போதைக்கு இந்தப் பிரச்சினையில் இந்த அவையில் முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை எதிர்க்கிறேன் என்று கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவையின் முன் உள்ள பிரச்சினை :

"இந்தியாவுக்குச் சொந்தமானதும், தமிழ் நாட்டுக்கு நெருங்கிய உரிமைகள் கொண்டதுமான கச்சத் தீவுப் பிரச்சினையில் மத்திய அரசு எடுத்துள்ள முடிவுபற்றி, மேலவை தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, மத்திய அரசு இதனை மறுபரிசிலனை செய்து, கச்சத் தீவின் மீது இந்தியாவிற்கு அரசுரிமை இருக்கும் வகையில் இலங்கை அரசுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தைத் திருத்தி அமைக்க முயற்சி எடுத்து, தமிழ் நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பு அளிக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறது."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

5. அரசின் சட்ட முன்வடிவு.

**தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (3 ஆம் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1974).**

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (3 ஆம் எண்) சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1974) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (3 ஆம் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1974) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கீட்டுச் சட்ட முன்வடிவின் மீது பேசுவதற்கான வாய்ப்பை அளித்தமைக்கு முதலிலே நான் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்.

---

@ 151-153 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



(பிற்பகல் 6.20)

இன்றைக்கு நாட்டிலே உணவுப் பிரச்சினையைப் பற்றி, உணவுப் பொருள்களின் விலை ஏறியதைப்பற்றி இங்கே தெளிவாக அவையிலே நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். இந்த நேரத்திலே தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் மத்தியிலே இருக்கக்கூடிய ஒரு நிலைமையைப்பற்றி இந்த அவையிலே தெளிவாக விளக்க வேண்டியது என்னுடைய கடமையாகும்.

பகல் உணவுத் திட்டம் என்று மதிய உணவு மாணவர்களுக்கு வழங்கும் திட்டம் 1957 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தமிழ் நாட்டிலே தொடக்கப் பள்ளிகளிலே தொடங்கப்பட்டது. அன்றைக்கு ஆறு பைசா அரசு மானியம் என்றும், நான்கு பைசா மக்களிடத்திலே வசூல் செய்ய வேண்டும் என்றும், அந்த 10 பைசா கணக்குக் காட்டினால்தான் ஆறு பைசா மானியம் கொடுக்கப் படுமென்றும், மதிய உணவுத் திட்டம் தொடங்கப்பட்டது. சில நேரங்களிலே வசூல் செய்யப்பட்டது. சில நேரங்களிலே வசூல் செய்யப்படாமல், பொய்க் கணக்கு எழுதிக்காட்டப்பட்டு வந்தது என்பதை நான் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வசூல் ஆனாலும் ஆகாவிட்டாலும் கணக்கு எழுதித்தான் ஆக வேண்டும், எழுதினால்தான் கொடுப்போம் என்று பள்ளித் துணை ஆய்வாளர்கள் இந்தத் திட்டம் பற்றித் தெளிவாக எடுத்துச் சொல்லி அதை எழுதி வந்த ஒரு நிலைமையையும் இந்த அமைச்சரவை நன்கு அறிந்திருக்கும் என்றே கருதுகிறேன். இந்த மதிய உணவுத் திட்டம் 1962லே நடந்துவந்த காலத்திலே, இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலுள்ள அமைச்சர் பெருமக்கள் அன்றைக்கு ஆளும் பொறுப்பில் இல்லாமல் எதிர்க் கட்சியிலே அமர்ந்திருந்த காலத்திலே "இன்றைக்கு ஆசிரியர் பெருமக்களை மதிய உணவிற்காகப் பிச்சை எடுக்கச் சொல்லுகின்றார்கள்" என்று பேசிய நிலைமை நாட்டிலே இருந்து வந்தது. "பள்ளிக்கூடமா அல்லது சமையல்கூடமா" என்றும், "பாடசாலையா அல்லது பாகசாலையா" என்றும் இன்றைக்கு நமது மன்றத்தில் ஆளும் பொறுப்பில் உள்ளவர்கள் அன்று எதிர்க் கட்சியினராக இருந்த நேரத்திலே பேசியதை நான் அறிவேன்.

1962 ஆம் வருடம் ஜூலை 17 ஆம் தேதியிலே இன்று மாண்புமிகு கல்வி அமைச்சராக உள்ளவர் எதிர்க் கட்சித் தலைவராக இருந்து பேசிய அந்தப் பேச்சுக்களை நான் சட்ட மன்ற நடவடிக்கைக் குறிப்புகளிலே பார்த்தேன். அது பற்றி அன்றைக்கு அவர்கள் சொல்லும்போது, "இந்த மதிய உணவுத் திட்டத்திலே ஊழல்கள் இருக்கின்றன. இந்த ஊழல் மிக்க திட்டத்தைக் கைவிட வேண்டும். கை விட்டு விட்டு, பெற்ற பிள்ளைகளுக்கு தாயாரோ தந்தையாரோ

யாரும் உணவு போடுவதற்கு யாருமே மறுக்க மாட்டார்கள். தாய்கள் பட்டினி கிடந்தாவது பிள்ளைகளுக்கு உணவளிக்க முன்வருவார்கள். எனவே இந்தத் திட்டத்தைக் கை விட்டு விட்டு, பள்ளிக் கட்டணத்திலே ஆரம்ப காலத்திலே பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு 15 ரூபாய், 20 ரூபாய், 25 ரூபாய் என்று செலவாகும் நிர்ப்பந்தம் இருக்கின்றது. எனவே அந்த வகையில் தாய் தந்தையர்களுக்கு உதவிகரமாக இருக்கத்தக்க வகையில் இந்தத் திட்டத்திற்கு ஆகும் செலவினை அவர்களுக்குப் பிரித்துக் கொடுத்துவிட வேண்டும்" என்ற கருத்தினை ஆலோசனையாகச் சொல்லியிருக்கின்றார்கள்.

அதுமட்டுமல்ல. 1967 மார்ச் 6 ஆம் தேதியன்று மாண்புமிகு பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் இந்த அரசு ஆட்சிப் பொறுப்பினை ஏற்றது. முன்னர் எதிர்க் கட்சித் தலைவராக இருந்து 1962-ல் பேசியவாறு [illegible] பேசியவர் மாண்புமிகு கல்வி அமைச்சராக பொறுப்பு ஏற்றவுடன் மிக நல்ல நோக்கத்தோடு, நல்ல எண்ணத்தோடு 1967 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் தேதியன்று உதகமண்டலத்திலே ஒரு மாநாட்டினைக் கூட்டினார்கள். அப்படிக் கூட்டிய மாநாட்டிலே தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு என்று ஒரு நாளை ஒதுக்கி நாடு முழுவதும் உள்ள தொடக்கப் பள்ளி ஆசிரியர்களை அழைத்து, ஒவ்வொரு திட்டம் பற்றியும் அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டறிந்தார்கள். அந்த முறையில் மதிய உணவு பற்றிய கருத்துக்களைக் கேட்ட நேரத்திலே ஆசிரியர்கள், "மதிய உணவு திட்டத்தின் பொறுப்பிலிருந்து எங்களை நீக்கிவிட வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்கள். அப்போது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் "உங்களுடைய கோரிக்கை நியாயமானதுதான். ஆனால் இன்றைக்கு அதைச் செய்ய முடியாது. [illegible] அதை அரசியல் பிரச்சினையாக ஆக்கிவிடுவார்கள். எனவே ஆசிரியர் பெருமக்கள் இன்னும் கொஞ்ச நாளைக்கு அதைத் தொடர்ந்து நடத்திக்கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்" என்றும், "அரசாங்கம் மேலும் "மதிய உணவுத் திட்டத்தில் இப்போது புதுமையான திட்டம் என்ற வகையில் இச்சென்— மத்திய சமையல் கூடம் ஒன்று அமைக்கும் திட்டம் இருக்கின்றது. அதைப் படிப்படியாக நாடு முழுவதும் [illegible] விஸ்தரிக்க இருக்கிறோம். அப்போது இந்த சிரமங்கள் எல்லாம் இராது. ஆகவே அதுவரையில் இதைத் தொடர்ந்து செய்யுங்கள்" என்றார். ஆசிரியர் பெருமக்களும் ஆசிரியர் பிரதிநிதிகளும் அதை ஒப்புக்கொண்டார்கள். பின்னர் 1967 ஆம் ஆண்டிலிருந்து 1972 ஆம் ஆண்டு வரையில் அந்த நிலைதான் தொடர்ந்துகொண்டு இருந்ததே தவிர, வேறு எந்த விதமான மாற்று ஏற்பாடும் செய்யப்படவில்லை.



பிறகு 1972 ஆம் ஆண்டில் ஆசிரியர் பெருமக்கள் ஒரு பத்து கோரிக்கைகளை வைத்துப் போராட வேண்டிய ஒரு கால கட்டம் வந்தது என்பதை நாடு அறியும். அவர்கள் வைத்த பத்து கோரிக்கைகளிலே "மதிய உணவினை வழங்கும் பொறுப்புகளிலிருந்து ஆசிரியர்களை, தலைமை ஆசிரியர்களை விடுவிக்க வேண்டும்" என்ற கோரிக்கையும் ஒன்றாகும். பின்னர் போராட்டம் முடிந்த அந்த நேரத்திலே 1972 ஆம் ஆண்டு மே மாதம் 22-ம் நாளன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களும் தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும்—இவர்களும் கல்வி இயக்குநர் அவர்களும் கல்வித் துறைச் செயலாளர் அவர்களும் பேசிய நேரத்திலே, இன்னும் ஓரிரு ஆண்டுக் காலம் தொடர்ந்து செய்யுங்கள். அதற்குப் பிறகு நாங்கள் மாற்று ஏற்பாட்டினைச் செய்து விடுகிறோம் என்று சொன்னார்கள். அந்த நேரத்திலே "ஆறு பைசா தான் கிடைக்கின்றது. நான்கு பைசா பொய்க் கணக்கு எழுத வேண்டியிருக்கின்றது" என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் சொன்னோம். பொய்க் கணக்கு எழுத வேண்டியிருக்கின்றதே என்று குறிப்பிட்ட அந்த நேரத்திலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், "அது எங்களுக்குத் தெரிந்தது தான். நீங்கள் உண்மையான கணக்கினை எழுதுங்கள். பொய்க் கணக்கினை எழுத வேண்டாம். பஞ்சாயத்துகள் இரண்டு பைசாக்கள் வீதம் கொடுத்தால் கணக்கெழுதுங்கள். இல்லையென்றால் எழுத வேண்டாம். உண்மையாகக் கிடைக்கும் பணத்திற்கு கணக்கு எழுதினால் போதும். அதற்கான உத்திரவுகளை உடனே பிறப்பிக்கிறோம்" என்று பேச்சு வார்த்தைகளிலே ஒப்புக்கொண்டார்கள். அது மட்டுமில்லை. இதற்கான ஒரு மாற்றுத் திட்டத்தினை, மாற்று ஏற்பாட்டைச் செய்துவிடுகிறோம் இரண்டாண்டு காலத்திலே என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய முன்னிலையில் ஒப்புக்கொண்டார்கள். அதற்கும் ஆசிரியர் பெருமக்களின் பிரதிநிதிகள் ஒப்புக்கொண்டு சென்றார்கள். ஆனால் 1974 ஆம் ஆண்டு மே மாதம் வரையில் எந்த விதமான மாற்று ஏற்பாடும் செய்யப்படவில்லை என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, ஏற்கெனவே மதிய உணவுத் திட்டம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதை நிறைவேற்றும் பொறுப்பினை ஆசிரியர்கள் ஏற்றுக்கொண்டு, அதை மேற்பார்வையிடும் [illegible] இருந்தது. அந்தப் பொறுப்புக்களைக் குறைப்பதற்காகத்தான் மத்திய சமையற் கூடங்கள் என்ற திட்டத்தின் மூலம் பல்வேறு ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் இதை நிறைவேற்றி வருகிறோம். 'கேர்' நிறுவனத்தார் அளிக்கும்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 ஆகஸ்ட் 21

பல்வேறு உதவிகளுடன் இந்தத் திட்டத்தைச் செயற்படுத்திவரும்போது மேற்பார்வையிடும் பொறுப்பினைக்கூட ஆசிரியர்கள் எடுத்துக்கொள்ள மாட்டார்கள் என்று கூட்டணி ஆசிரியர்களும் ?பொதுச் செயலாளரும் சொல்லுவது எப்படிப் பொறுப்புடன் கடமையாற்றுவதாகும்? மேற்பார்வைகூடச் செய்ய மாட்டார்கள் என்று சொல்லி அந்தப் பொறுப்பிலிருந்து தங்களை விடுவிக்க வேண்டும் என்றால், என்ன பொருள்? ஆசிரியர்களை சமைக்கச் சொல்லவில்லை, வேறு எதையும் செய்யச் சொல்லவில்லை. மாணவர்களுக்கு மதிய உணவினை வழங்கும் இந்தத் திட்டத்தில் இந்தச் சிறு தொண்டைக்கூடச் செய்ய மாட்டோம் என்று சொல்லுவது எப்படிப் பொருத்தமுடையதாக இருக்கும்?

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவர்களுக்குத் தெரிந்த தகவலை தவறான தகவலை அவைக்குக் கொடுக்கின்றார்கள். ஆசிரியர்களோ, கூட்டணி ஆசிரியர்களோ, இந்த நாட்டிலுள்ள தொடக்கப் பள்ளி ஆசிரியர்களோ அப்படி எதையும் சொல்லவில்லை. அப்படி எந்தத் தீர்மானத்தையும் போடவில்லை. 1972 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் தேதியன்று நாங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய முன்னிலையில், நாங்கள் சூபர்விஷன் செய்வதற்கும் அட்டெண்டன்ஸ் எடுப்பதற்கும் ஒப்புக்கொண்டோம். அன்றைக்கு ஒப்புக்கொண்ட நிலையில்தான் நாங்கள் இன்றைக்கும் இருக்கிறோம் என்பதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்குத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் திட்டத்தில் பணியாற்ற எங்களை ஈடுபடுத்திக் கொண்டோம் என்றால், அதை நாங்கள் தொண்டாகத்தான் ஏற்றோம். ஆனால் இன்றைக்கு அது ஒரு தொழிலாகும் நிலைமையில், அதிலும் அதைத் திணிக்கும் விதத்தில் கட்டாயப்படுத்தி, இதைச் செய்யாவிட்டால் நடவடிக்கை எடுப்போம், கிரிமினல் நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லும் நிலைமை ஏற்பட்டிருக்கக் கூடியதை . . .

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆசிரியர்கள் இந்தப் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளாவிட்டால், வேறு யார் ஏற்றுக்கொள்ளுவார்கள்? தலைமை ஆசிரியர்களும், ஆசிரியர்களும் மாணவர்களுடைய நலனில், கல்வியில், அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை என்று சொன்னால், வேறு யார் அதை ஏற்றுக்கொள்ளுவார்கள்?

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, மாணவர்களுக்கு மதியச் சோறு போடும் பொறுப்பினை ஆசிரியர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும், அது அவர்களுடைய கடமை என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கருதுகின்றார்களா என்று கேட்க விரும்புகிறேன்.



1974 ஆகஸ்ட் 21]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, ஆசிரியர் களைச் சமைத்துப் போடும்படிச் சொல்லவில்லை. அதற்கான கணக்குகளைப் பார்ப்பது, சமைத்து வரும் உணவினை அவர்களிடையே பகிர்ந்தளிப்பது போன்ற மேற்பார்வை செய்கின்ற தொண்டுகளைக்கூட ஆசிரியர்கள் செய்ய முன்வர மாட்டார்கள், பள்ளி ஆசிரியர்கள், கூட்டணி ஆசிரியர்கள் முன்வர மாட்டார்கள் என்றால், என்ன பொருள்? பல ஆசிரியர்கள் முன்வருகின்றார்கள். ஆனால் கூட்டணி ஆசிரியர்கள் முன்வர மாட்டார்களா?

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, பல ஆசிரியர்கள் முன் வருகின்றார்கள் என்று சொல்லுகின்றார்கள், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள். என்னிடம் புள்ளி விவரங்கள் இல்லை. அவர்களிடம் உள்ள புள்ளி விவரங்களை தயவு செய்து என்னிடம் கொடுப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அப்படிப்பட்ட புள்ளி விவரங்கள் எவ்வளவு இருக்கின்றன என்பது அரசு நடவடிக்கை எடுத்த பிறகு தெரியும்.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கும்போது தெரியும் என்று சொல்லு கின்றார்கள். இந்த நாட்டிலே புண்ணியமாகச் செய்யும் ஒரு தொழிலுக்கு, கடந்த பதினேழு ஆண்டுக் காலம் இதிலே தங்களை ஈடுபடுத்திக்கொண்டு செய்து வந்தமைக்கு நடவடிக்கை ஒன்றுதான் பரிசு என்ற முறையில் அரசாங்கத்திடம் இருக்கும் அதிகாரம் பயன்படுத்தப்பட்டு, அது ஒன்றுதான் வழி என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருதுவார்களானால் . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஏழை மாணவர்களுக்கு மதிய உணவு போடுவது புனிதமான காரியம் என்று அது காங்கிரஸ் காலத்திலிருந்து தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. முன்பிருந்த அரசு அதை ஆரம்பித்து, இந்த அரசு அதைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றது. அப்போதிலிருந்தே ஆசிரியர்கள் அதை மேற்பார்வை பார்த்து வருகின்றார்கள். ஆனால் இப்போது அதை நாங்கள் பார்க்க மாட்டோம் ஏழை மாணவர்களுக்கு மதிய உணவு அளிப்பதை மேற்பார்வையிட எங்களால் முடியாது என்றால், அதைக் கூடச் செய்ய மாட்டோம் என்றால், அதில் என்ன புனிதம், என்ன புண்ணியம் என்று எனக்குத் தெரியவில்லை.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்படித் திசை திருப்பும் முயற்சியில் பேசினார் களானால், அதற்கு நான் பதில் சொல்லத் தயாராயில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, மேற்பார்வை செய்கின்றதைப்பற்றி மிகத் தெளிவாக ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன். கல்வி அமைச்சர் அவர்கள், கணக்கினை மேற்பார்வையிட வேண்டும், சமையலை மேற்பார்வையிட வேண்டும், உணவு வழங்குகிறதை மேற்பார்வையிட வேண்டும் என்று சொல்லுகின்றார்கள். ஆசிரியர்களிடம் இவ்வளவும் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்பார்வையிடுகிற காரியத்தைக்கூடச் செய்ய முடியாதா என்று கேட்கின்றார்கள்.

மேற்பார்வையிடுவதைப் பொறுத்த வரையில் 1972 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் தேதியன்று ஒப்புக்கொண்டிருந்த நிலையிலிருந்து, ஆசிரியர்கள் பின் வாங்க மாட்டார்கள் என்பதை மட்டும் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கணக்கு எழுதுவது, அதையொட்டி போஸ்ட் ஆபீஸுக்குச் செல்லுவது, கேர் நிறுவனத்தார் அளிக்கும் பொருள்களை எடுத்துவருவது—இப்படிப்பட்ட பணிகள் சம்பந்தமாக அவர்கள் வெளியே செல்ல வேண்டியிருக்கின்றது. அதே நேரத்திலே இப்போது ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய பாடத் திட்டங்களின்கீழ், புதிய கணிதம், புதிய சயன்ஸ் இவற்றை மாணவர்களுக்கு அதிகமாக எடுத்துச் சொல்லி உணர்த்த வேண்டிய நிலையில் அவற்றையும் எடுத்துக்கொண்டால், இந்தப் பணிகளைச் சரியாகச் செயலாற்ற முடியுமா என்பதைத்தான் யோசிக்க வேண்டும். இவ்வளவையும் வைத்துக்கொண்டு, அதை மேற்பார்வை செய்வதில் உங்களுக்கு என்ன சங்கடம் இருக்க முடியும் என்று கேட்கின்றார்கள் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள். கல்வி அமைச்சர் அவர்கள் சற்று வேகமாகவே கேட்கின்றார்கள். அவர்கள் அடிக்கடி கேட்கின்றார்கள், ஆசிரியர்களே இதை ஏற்கவில்லையென்றால், வேறு யார் ஏற்க முன்வருவார்கள் என்று. நான் கேட்க விரும்புவது, அதைப் பார்க்க இந்த நாட்டிலே வேறு யாருமே இல்லையா? கணக்கெழுத இந்த நாட்டிலே வேறு யாருமே இல்லையா? இன்று சேரணியின் கீழ் இருக்கின்றார்கள். பஞ்சாயத்து யூனியனில் 120 ரூபாய், 150 ரூபாய் சம்பளத்தில் நாம் பலரைப் போட்டு வைத்திருக்கிறோம். அதுவும் இல்லாமல் இந்த நாட்டிலே வேலையின்றி ஏராளமானவர்கள் இருக்கின்றார்கள். ஒவ்வொரு பஞ்சாயத்திலே நான்கு பள்ளிகள், ஐந்து பள்ளிகள் என்று இருக்கின்றன. அவற்றுக்கான மதிய உணவுத் திட்டம் பற்றிய கணக்குகளை அவர்களிடம் கொடுத்து கணக்குகளைப் பார்க்க முடியாதா? பஞ்சாயத்துத் தலைவர்கள்தான் அந்தக் கபிட்டிப் பொறுப்பில் இருக்கின்றார்கள். ஆசிரியர்கள் சிலர் பொறுப் பேற்றிருக்கின்றார்கள், அதற்கென்றே சில ஆசிரியர்களை வேண்டுமானாலும்



எடுத்துக் கொள்ளுங்கள். அவர்களிடமே அந்தப் பணிகளை 'என்ட்ரஸ்ட்' செய்து விடுங்கள் என்றுதான் கேட்டுக்கொள்ளுகிறேன். இதிலே நாங்கள் கேட்டுக்கொள்ளுவதெல்லாம், கல்வித் துறையில் நாளுக்கு நாள் ஆசிரியர்களின் பொறுப்பும் பங்கும் பெருகிவரும் நேரத்திலே அவர்களிடமிருந்து இந்தப் பொறுப்புக்களை எடுத்து விடுங்கள் என்பதுதான். (மாண்புமிகு மேலவைத் தலைவர் மணியடித்தார்.) இரண்டு மூன்று விஷயங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுவிட்ட காரணத்தினால் நான் சற்று தெளிவாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஆசிரியர்கள் இந்தத் திட்டத்தைப் போடக்கூடாது என்றோ அல்லது இது தேவையல்ல என்றோ சொல்லவில்லை. மாறாக கிராமங்களிலே படிக்கும் ஏழை எளிய மாணவர்களும் பெரிய நகர்ப்புறங்களிலே படிக்கும் மாணவர்களுக்கு, கான்வென்டுகளிலே படிக்கும் பிள்ளைகளுக்குச் சமமாக போட்டியிடத் தக்க வகையில் கல்வி போதிப்பதற்கு ஆசிரியர்களை ஊக்கப் படுத்த வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேதான் இந்தத் திட்டத்திற்கு மாற்றுத் திட்டத்தை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வரவேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளுகிறேன். ஆசிரியர்களிடம் இத்தகைய பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கும் காரணத்தினால், அவர்கள் அதிலே அதிக கவனத்தையும் நேரத்தையும் செலவிட வேண்டிய நெருக்கடியில் இருக்கின்றார்கள்.

(பிற்பகல் 6-30)

நான் இன்னும்கூட ஒன்றைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றைக்குச் சட்டப் பேரவைத் தலைவராக வீற்றிருப்பவர் அன்றைக்குத் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள். அதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பள்ளிகள் நடக்கிறதென்று சொன்னால், அப்படி நடக்கிற பள்ளிகள் நன்றாக நடக்கிறதா இல்லையா என்று பார்ப்பதற்கு ஒரு கண்காணிப்பு அமைப்பு இருக்கிறது. இன்ஸ்பெக்டர்கள் பள்ளிக்கூடங்களுக்கு வந்தால், பள்ளிக்கூடங்களில் மதிய உணவு போடுகிறார்களா, சீருடை வழங்குகிறார்களா, கணக்கு சரியாக வைத்துக்கொண்டிருக்கிறார்களா, மாதாமாதம் கணக்கைச் சரியாக அனுப்புகிறார்களா என்பவைகளில்தான் அவர்கள் கவனம் செலுத்துகிறார்கள். ஆசிரியர்கள் மாணவர்களுக்கு எந்த அளவிற்குப் பாடம் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள் என்று ஆராய்வதில்லை. இந்த நிலை இன்றைக்கும் நடக்கிறது என்பதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கவனத்திற்கும் கொண்டு வருகிறேன். இது மட்டுமல்ல, இந்த மதிய உணவுப் பொறுப்பைப்பற்றி மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள், அவர் அமைச்சராக வந்த பிறகு சட்டப்

பேரவையில் 8—7—67-ல் திரு. பி. வேலுசாமி என்பவர் ஒரு கேள்வி கேட்டிருக்கிறார். மதிய உணவுப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற பள்ளி ஆசிரியர்களுக்கு ஏதாவது அலவன்ஸ் கொடுக்கப்படுமா, அப்படியானால் எவ்வளவு என்று கேள்வி கேட்டிருக்கிறார்கள். அதற்கு கல்வியமைச்சரவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். "இந்தப் பொறுப்பே ஆசிரியர்களுக்கு விடப்படவில்லை என்று சொல்லும்போது அலவன்ஸ் பற்றிய கேள்வி எழவில்லை" என்று மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் சட்டப் பேரவையில் சொல்லியிருக்கிறார்கள். இந்த பதிலை ஏடுகளிலிருந்து இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இப்படி கொள்கையைத் தெளிவாகச் சொல்லிய கல்வியமைச்சரவர்களுக்கு மாற்று ஏற்பாடு செய்வதில் என்ன சங்கடம் இருக்கும்? ஆசிரியர்கள் இதை ஒரு சங்கடம் என்று கருதுவதைவிட, உண்மையாகவே நினைப்பது ஏழை மாணவர்கள் கிராமப்புற மாணவர்கள் முன்னேற வேண்டுமென்ற அடிப்படையில்தான் இதைச் சொல்கிறோம். ஆசிரியர்களை இன்னும் அதிகமாக கல்விப் பொறுப்பில் ஈடுபடுத்துங்கள் என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன். ஆசிரியர்கள் இந்த மதிய உணவு சம்பந்தமாக ஒரு நாள் 'கோர்'-க்குச் செல்கிறார்கள், ஒரு நாள் டெபாசிட்டுக்காகச் செல்கிறார்கள், ஒரு நாள் விநட்டாயலுக்காகச் செல்கிறார்கள். இப்படி சில நாட்கள் பள்ளி வேலை அல்லாத பணிகள் காரணமாக கடந்து விடுகின்றன. ஆகவேதான் ஆசிரியர்களுக்கு மேற்பார்வை மட்டும் இருந்தால் போதும் என்கிறோம். அட்டெண்டன்ஸ் மட்டும் இருப்பதனால் ஆசிரியர்கள் கல்விப் பணிகளைச் செய்ய முடியும். சென்ட்ரல் கிச்சன் ஸ்கீமில் ஆசிரியர்கள் இதைத்தானே செய்கிறார்கள். அந்தப் பொறுப்பை எங்களுக்கும் தரும்படி கேட்கிறோம். மூன்று மாவட்டங்களில் மட்டும் ஆசிரியர்கள் இதைச் செய்ய வேண்டும். மற்ற மாவட்டங்களில் ஆசிரியர்கள் 6 பைசாவிலே உணவு போட வேண்டுமென்றால், இது எப்படி சரியாகும்? ஒரு சிறிய கடலை உருண்டை 10 பைசாவிற்கு விற்கிறது. அந்த நிலையில் 6 பைசாவிற்கு உணவு போட வேண்டுமென்றால் எப்படி முடியும்? மாணவனுக்கு 6 பைசாவில் குறைந்த அளவுதான் அரிசிச் சோறு போட முடிகிறது. அவர்கள் அதைச் சாப்பிட்டு, போதாமல் கையை நக்கி நக்கிச் சாப்பிடும்போது, வேதனையாக இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, நிதி ஒதுக்கீட்டில் இந்தப் பிரச்சினை வரவில்லை என்றாலும், மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இருக்கிற நிலைமைகளை, மற்ற நிலைமைகளைப் பார்க்க வேண்டும். சில மாவட்டங்களுக்குக் கொண்டு வந்திருக்கிறோம் என்றால், அப்படியே திடீரென்று 374 ஒன்றியங்களுக்கும் கொண்டுவர



முடியாது. நிதிகளை, இருக்கிற தன்மைகளை அத்தனையையும் கவனிக்க வேண்டும். ஏழை எளிய மாணவர்களுடைய கல்வி நலனைப் பார்க்க வேண்டும். மதிய உணவுத் திட்டத்தையும் நிறைவேற்ற வேண்டும். எல்லா ஆசிரியர்களும், அக்கறை உடையவர்களும், ஒத்துழைக்க வேண்டும். இருக்கிற கஷ்டங்களைச் சமாளிக்க வேண்டுமே தவிர, நாம் மற்ற நாடுகளைப் போல, அமெரிக்கா மாதிரி எல்லா வசதிகளோடும் இருக்கவில்லை. பல பொறுப்புகள் இருக்கும்போது ஒரு பொறுப்பை விட்டால் நன்றாகத்தான் இருக்கும். இதில் சில சங்கடங்கள் இருக்கின்றன என்பது தெரிகிறது. இதைப் போக்குவது எப்படி, நோக்கங்களை நிறைவேற்றுவது எப்படி என்று பார்க்க வேண்டும். ஒரேயடியாக 374 ஒன்றியங்களுக்கும் மைய சமையற்கூடம் வேண்டுமென்றால், எப்படி முடியும்? மெல்ல மெல்லத்தான் கொண்டுவர முடியும். இது 'கேர்' நிறுவனம் செய்யக் கூடியது. அவர்கள் நடத்தக்கூடிய ஒன்று. அவர்கள் எவ்வளவு ஒதுக்கு கிறார்களோ அவ்வளவுதான் செய்ய முடியும். எடுத்த எடுப்பில் 374 ஒன்றியங் களுக்கும் கொண்டு வாருங்கள் என்று அவர்களிடம் நாம் அதிகாரத்தைச் செலுத்த முடியாது. மெல்ல மெல்ல வரும். இருக்கிற கஷ்டங்களைத் தாங்கிக் கொண்டு, பணிகளை நிறைவேற்ற வேண்டும். மதிய உணவைப் பொறுத்தவரை, ஆசிரியர்களுக்கு இல்லாத அக்கறை மற்றவர்களுக்கு வராது. ஆசிரியர்கள் இந்தப் பொறுப்பை ஏற்று தொண்டுள்ளத்தோடு செய்யாவிட்டால், ஊரிலுள்ள வர்களுக்கு அக்கறை எப்படி இருக்க முடியும் என்று தான் குறிப்பிட்டேன். ஆசிரியர்கள் இது வரையில் செய்த அடிப்படையில், தொண்டுள்ளத்தின் அடிப் படையில் இனியும் செய்ய வேண்டும். சங்கடங்கள், மற்றவைகளை மெல்ல மெல்ல எப்படித் தீர்க்கலாம் என்று அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது. ஆசிரியர்கள் அடுத்த முதல் தேதியிலிருந்து செய்ய மாட்டோம் என்ற நிலைமையை உருவாக்குவது நாட்டிற்கு நல்லதல்ல, ஆசிரியர் உலகத்திற்கு, கல்விக்கு நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் வேறு எதிலோ இதைப் பேச வேண்டும். பேசிக் கொண்டிருக்கிறார்கள். முடிக்க மாட்டேன் என்கிறார்கள். இன்னும் மின்சார வாரியத்தைப்பற்றிப் பலர் பேச வேண்டும். நேரத்தை 'அட்ஜஸ்ட்' பண்ண வேண்டாமா?

**திரு. செ. முத்துசாமி:** தலைவரவர்களே, கல்வியமைச்சரவர்கள் பிரச்சினையைப்பற்றிக் கேட்கிறார்கள். பதில் சொல்ல வேண்டாமா?

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** பிரச்சினை வருகிற போது பேச வேண்டும்.

**திரு. செ. முத்துசாமி :** இன்றைக்கு இந்த நாட்டில் வறுமை இருக்கிறது என்கிறார்கள். ஒப்புக்கொள்கிறேன். விளைவு இல்லையா என்றால் இருக்கிறது. மற்ற மாநிலங்களுக்கு அரிசியை நம் மாநிலம் வழங்கியிருக்கிறது என்பது பெருமைக்குரியது. இவ்வளவு விளைவுகள் இருந்தும், அரிசி விளைந்தும், வந்தாரை வாழவைத்த தமிழ்நாட்டில் நம் பிள்ளைகளுக்கு இன்னும் கொஞ்சம் சாப்பாடு போட்டு இந்த மதிய உணவு திட்டத்தின் மூலம் அதிகமாகச் சாப்பாடு போட்டால் மாணவர்கள் உண்மையாக கல்வியைக் கவனிக்க முடியும். இப்போது போதுவது கொஞ்சம். மாணவர்கள் மதிய உணவைச் சாப்பிட்டு விட்டுப் போகிறார்கள். ஆனால் பிற்பகலில் பிள்ளைகள் வருகை குறைகிறது. இதை கல்வித் துணை ஆய்வாளர் மூலம் அறியலாம். அல்லது நேரில் பள்ளிகளுக்குச் சென்று பார்த்தால் அறியலாம். கல்வியமைச்சரவர்கள் சட்ட மன்றத்தில் நடந்த விவாதத்தில் சரியாகவே சொன்னார்கள். 1967-ல் கல்வியமைச்சரவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இரண்டாண்டுகளில் மாற்று ஏற்பாடு செய்வதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆசிரியப் பெருமக்கள் ஏதோ திடீரென்று அரசாங்கத்தின் மீது விரோதப் போக்கு கொண்டு இப்படி முடிவெடுத்ததல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, 1967-ல் மைய சமையற்கூடம் குறைவாக இருந்தது. இப்போது 97 ஆக உயர்ந்திருக்கிறது. அரசு ஒன்றுமே நடவடிக்கை எடுக்கவில்லையென்று எப்படிச் சொல்ல முடியும்? ஆண்டிற்கு 20, 30 மைய சமையற்கூடங்கள் என்ற அடிப்படையில் எடுத்துக் கொண்டு வருகிறோம். இந்த முயற்சியை ஓரளவிற்குச் செய்து வருகிறோம். விலைவாசி ஏற்றம், மற்றவைகளின் அடிப்படையில் 6 காசு என்பதை எந்த அளவிற்கு உயர்த்தலாம் என்று நிதியமைச்சரவர்களோடு கலந்து யோசித்துக் கொண்டிருக்கிறேன். சங்கடங்களைச் சொல்வது என்பது ஒன்று. சங்கடங்களை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வது என்பது ஒன்று. இதிலிருந்து விடுவிக்கப்பட வேண்டுமென்று சொல்வது வேறு.

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, தீர்மானம் மிகத் தெளிவாகவே இருக்கிறது. ஆசிரியப் பெருமக்கள் மாற்று ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தை முதலில் வேண்டிக்கொண்டு ஒரு தேதி நிர்ணயித்து, அந்தத் தேதிக்குள் செய்ய முடியாவிட்டால், ஆசிரியப் பெருமக்கள் இந்தப் பணியிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்கிறார்கள் என்றுதான் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது என்பதை கல்வியமைச்சரவர்கள் கவனத்திற்குக் கொண்டுவந்து,



செல்விடத்துக் காப்பான் சிலங்காப்பான் என்று சொல்கிற அளவில் ஊழியர்கள் பணியாற்றுகிறோம். இந்த அரசு திருக்குறளைப்பற்றிச் சொல்லக் கூடிய அரசு. ஆசிரியப் பெருமக்கள் தங்கள் சங்கடங்களைச் சொல்கிறார்கள். இதைத் தவிர்க்க திட்டங்களைச் சொல்லவும் நடவடிக்கை எடுக்கவும் ஆற்றலுடைய அரசு இதைச் செய்ய வேண்டுமே தவிர, ஆசிரியப் பெருமக்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சியில் ஈடுபடக்கூடாது. எந்த நோத்திலும் நடவடிக்கை எடுக்க அரசுக்கு சக்தி இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் திறமைக்குரியவராக இருக்கிறார்கள். ஆசிரியப் பெருமக்கள் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் திறமையில் என்றைக்குமே நம்பிக்கை வைத்திருக்கக்கூடியவர்கள். ஆகவே அவர்கள் இந்த மதிய உணவிற்கு மாற்று ஏற்பாடு கண்டுபிடித்துச் செய்ய முடியுமாவென்ற வினைவைக் கேட்டு, தமிழகத்தில் 17 ஆண்டுக் காலம் ஆசிரியப் பெருமக்கள் செய்து வந்த இந்தப் பணிக்காக, அலவன்ஸ் என்று ஒரு பைசா கூட வாங்காமல் செய்து வந்ததற்காக நீங்கள் இதைப் பாராட்ட வேண்டும். ஆகவே மாற்று ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த வாய்ப்பை அளித்தமைக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

(பிற்பகல் 6-40)

THIRU P. R. THOMAS : Hon. Chairman, I consider it a great pleasure and privilege and a rare opportunity to stand before the Hon. the Chief Minister, Dr. Kalaignar Karunanidhi and the galaxy of Hon. Ministers of the Cabinet and other hon. Members of this House. I am speaking for the first time as the representative of the teaching community duly elected from the Madurai-Ramanathapuram Teachers Constituency.

I thank you very much, Hon. Chairman, for having given me this opportunity to speak. I shall be very short. Of course, I take the place of late Thiru Rajah Iyer who, by his valuable services, talents and constructive role, has earned appreciation, goodwill and recognition from each and every quarter of this House. While paying glorious tribute for his constructive role and moderation. I assure you that I shall ventilate the feelings of the teaching community to the best of my ability for the attention of Government and for redressal.

[Thiru P. R. Thomas] [1974 ஆகஸ்ட் 21

I really congratulate the Government on introducing and initiating the Regulation Act for the purpose of controlling the erring private schools and affording protection to the teachers serving in the private schools. Here, I would like to request the Government not to exempt any agency from these rules and the Regulation Act because some managements adopt wrong methods in penalising the teachers. As far as the Regulation Act is concerned, I hope and trust that it would be extended to the teachers serving in the Colleges also because a lot of teachers serving under erring managements of Colleges are suffering. If the Hon. the Minister for Education will be pleased to bring in a legislation on those lines, it will be greatly welcome and it will be the beginning of a golden era and will also be an achievement in the field of education for years to come.

I really congratulate the Hon. the Chief Minister on introducing welfare schemes in the State for the uplift of the people and the welfare scheme lately introduced for the benefit of the handicapped is really welcome and will be appreciated by each and everyone. I think it is my pleasant duty to mention here about the important measures of introduction of Prohibition and abolition of horse-racing. These measures will definitely uplife the people. They will also relieve the sufferings of the women-folk and will also protect future generations from this ordeal, in spite of the heavy loss in the finances of this State.

The country is definitely undergoing a revolution and education cannot be an exception to it. It is the duty of each and everyone—the Government, the Department and the teacher—to see that the educational standard improves and that the improved standard is maintained uniformly. To make the teachers do their work efficiently and effectively to the best of their ability, their needs are to be considered and remedial measures are to be implemented without unnecessary delay. In certain managements, the teachers are subjected to unauthorised and compulsory deductions: a word of resentment ends only in termination and rescue is never in sight. I would like to point out a school in Madurai, the Sundarambal Elementary School, where 31 teachers have been thrown into the streets and they are trying to put forth their



1974 ஆகஸ்ட் 21] [Thiru P. R. Thomas]

grievance by way of agitation on the 5th September. I hope the Government will look into it and do something to see that they are not thrown into the streets and put to a lot of difficulties.

I also congratulate the Government on introducing Selection Grade and also on issuing Government Orders on those lines. But there are so many anomalies in this thing and I want to point out one or two here. From 1st January 1971, Selection Grade was applied on the basis of percentage; from 1st April 1973 Selection Grade was applied to Tamil Pandits First Grade and also to B.T. Assistants on the basis of ten years' service; from 1st January 1974 Secondary Grade Tamil Pandits were promoted to the First Grade and given that scale and from 1st April 1974 all the remaining teachers were given Selection Grade. For uniformity and for the sake of fairness I feel that Selection Grade should be given on the basis of ten years' service from 1st April 1973 and that will remove the disparity and ill-feeling that is very prevalent among different categories of teachers. Selection Grade has been sanctioned for the Physical Education Teachers but, unfortunately, no scale has so far been fixed in spite of the fact that from 1st January 1971 Selection Grade has been sanctioned for all categories of that post on the basis of percentage. The Physical Education Teachers have not yet been promoted to the scale and no information has been received about that.

Regarding the Headmasters, prior to 2nd October 1970, the Headmasters were given Duty Allowance but subsequently it has been stopped. I hope the Government would consider and revive that also. The Headmasters have not been given Selection Grade and I hope the Government will consider that also and see that something is done for them.

The integration of 'A' wing and 'B' wing is under the consideration of Government and it is pending for a long time. It is high time that some action is taken so as to provide equality of opportunity and create greater confidence among the teachers serving in the 'B' wing schools.

**திரு. கே. ராஜாராம் :** தலைவர் அவர்களே, திரு. முத்துசாமி அவர்கள் கூறியது ஒரு குறிப்பிட்ட தேதியிலிருந்து அதைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் என்பது மாதிரி இருக்கிறது. ஆகவே, இதை ஒரு கோரிக்கையாகத்தான் வைக்கிறேன். ஆசிரியர் கூட்டணி தங்களது முடிவை புனராலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**புலவர் ஓ. அறிவுடைநம்பி :** தலைவர் அவர்களே, ஆசிரியர்களிலே, சில பேர் அப்படிப்பட்ட முடிவுக்கு வந்திருக்கலாமேயொழிய, மற்ற ஆசிரியப் பெருமக்கள் இதைத் தொண்டாகக் கருதி விரும்பிச் செய்வார்கள் என்பதை ஆசிரியப் பிரதிநிதி என்ற முறையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. ராஜாராம் :** நன்றி. திரு. முத்துசாமியைச் செயலாளராகக் கொண்டிருக்கின்ற ஆசிரியக் கூட்டணியிடத்தில் கோரிக்கை விட்டேன். ஏதோ நல்ல காரியம் என்பதால் சொல்லுகிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, விரும்பிச் செய்வதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். கல்வி அமைச்சர் அவர்கள் ஏற்கனவே எதிர்க் கட்சித் தலைவராக இருந்தபோது, இந்தத் திட்டத்தில் ஊழல் இருக்கிறது, இதை மாற்ற வேண்டுமென்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கும் தொடர்ந்து அது போல்தான் நடக்கிறது. இதை மாற்றியமைக்க வேண்டும். எங்களைப் பொறுப்பிலேயிருந்து விடுவிக்க வேண்டும். இதை மாற்றியமைக்க வேண்டுமென்று கல்வி அமைச்சர் கூறிய அதே கருத்தைத்தான், அமைச்சர் பொறுப்புக்கு வந்த பிறகு தொடர்ந்து கேட்டு, இன்றைக்கும் கேட்கிறோம். அவர்கள் வேகப்படாமல் மாற்றியமைக்க வழிவகைகளைச் செய்ய வேண்டும்.

(பிற்பகல் 6-50)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இன்றைக்கும் கூட தொடர்ந்து ஊழல்கள் இருக்கக்கூடும். அதை இப்போதுகூட ஒத்துக் கொள்கிறேன். ஆகவே இந்தத் திட்டமே முழுக்க முழுக்க ஊழல்; இதில் ஈடுபட்டுள்ள அத்தனை பேரும் ஊழல் மிக்கவர்களென்ற முடிவுக்கு நான் என்றைக்கும் வந்ததில்லை. இன்றைக்குங்கூட அரசாங்கம் கொடுக்கக்கூடிய உணவுப் பொருள்களிலே ஆசிரியர்கள் ஏமாற்றியிருக்கிறார்கள். அப்படி சில வழக்குகள்கூட இருக்கின்றன. சில ஆசிரியர்களை வேலையை விட்டு நீக்கியிருக்கிறோம். ஆசிரியர்கள் அல்லாதவர்களும் திருடியிருக்கிறார்கள். 'கேர்' நிறுவனம் தரும் உணவுப் பொருள்களைக் கடையில் விற்றவர்களும் உண்டு.



அப்படிப்பட்ட அதிகாரிகள் மீதும்கூட நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஊழல் இருக்கிறது. அந்த ஊழல்களையெல்லாம் நீக்க வேண்டுமென்ற தன்மை இருக்கிறது. அதற்காக, இந்தத் திட்டமே போய்விட வேண்டுமென்ற நிலையில்லை. இந்தத் திட்டம் சீர்திருத்தப்பட வேண்டும். இருக்கும் கஷ்டங்களை ஓரளவுக்குப் பொறுத்துக்கொண்டு, அதைப் போக்குகிற முயற்சியில் இந்த அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறதென்றுதான் நான் திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்கிறேன்.

**திரு. கே. ராஜாராம் :** நம்மைக் கொஞ்சம் . . .

(திரு. முத்துசாமி பேச எழுந்தார்)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கொஞ்சம் பொறுமையாக இருங்கள். ஏன் அவசரப்படுகிறீர்கள் ; இப்போது என்ன முடிந்துவிட்டது?

**திரு. கே. ராஜாராம் :** கல்வி அமைச்சரவர்கள் கேட்டுக்கொண்டபடி, ஆசிரியப் பெருமக்கள் இந்தத் திட்டத்தில் ஒத்துழைப்பு தர வேண்டும். ஏற்கெனவே இந்தியா பூராவும், ஏன் வெளி நாட்டிலிருந்து வருகிறவர்கள்கூட இந்தத் திட்டம் குறித்து நம்மைப் புகழ்ந்து பேசுகிறார்கள். எனவே இந்தத் திட்டத்திற்குப் பங்கம் வராமல், அனைவரும் சேர்ந்து பாதுகாக்க வேண்டுமென்ற கோரிக்கையைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழாசிரியர்கள் 10 ஆண்டுக் காலம் இரண்டாம் நிலையில் பணி புரிந்திருந்தால், அவர்கள் முதல்நிலை ஆசிரியர்களாகிறார்கள் என்று 17—1—74-ல் அரசு ஆணை விடுத்தது. அப்படியிருந்தும் இன்னும் பலர் முதல்நிலை ஆசிரியர்களாக ஆக்கப்படவில்லையென்ற செய்தி எனக்கு வந்திருக்கிறது. அதை அரசு கவனித்து, அவர்களை முதல்நிலைத் தமிழாசிரியர்களாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழாசிரியர்கள் சிலர் வித்வான் பரீட்சையில் தேறி பதவி வகித்து வருகிறார்கள். அவர்கள் பண்டிட் பயிற்சிக்குச் செல்லும் போது அரைச் சம்பளம் உண்டென்று ஜி.ஓ. போடப்பட்டிருந்தது. அவர்கள் பயிற்சிக்குச் சென்று முடித்துவிட்டு வந்த பிறகு, ஆடிட் அப்ஜெக்ஷன் வந்திருக்கிறதென்று சொல்லி அவர்கள் வாங்கிய சம்பளத்தைக் கட்டச் சொல்லி உத்தரவிட்டிருப்பதாக புகார் கடிதம் எங்கள் காரியாலயத்திற்கு வந்திருக்கிறது. அதையும் பரிசீலிக்க வேண்டும். ஆடிட்டில் சட்டபூர்வமான கஷ்டங்கள் இருந்தால், அதை நிவர்த்தி செய்ய ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் அந்தப் பணத்தைத் திரும்ப வாங்க வேண்டாமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே. ராஜாராம்] [1974 ஆகஸ்ட் 21

அடுத்தபடியாக, நடுநிலைப் பள்ளிகளில், 6, 7, 8 வகுப்புகளுக்கு என தமிழாசிரியர்கள் தனியாக நியமிக்கப்பட வேண்டுமென்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. ஆனால் பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில், அநேகமாக எல்லாப் பள்ளிகளிலும் தமிழாசிரியர்கள் தனியாக இல்லை. அந்தப் பள்ளிகளில் அவசியம் தமிழாசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும். தனியார் பள்ளியில் அந்த ஜி.ஓ.-வை மேற்கொண்டு ஆசிரியர்கள் போடவில்லையென்றால், நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தனியார் பள்ளிகளில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவசியம் அவர்கள் தமிழாசிரியர்களை வைத்துக்கொள்ள வேண்டுமென்று உத்தரவு போடுகிறார்கள். ஆனால் பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில், அதைப் பற்றிக் கவனிப்பவர்கள் கிடையாது. எனவே பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் தமிழாசிரியர்களைக் கண்டிப்பாக நியமிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கல்வியைப்பற்றி எங்களுக்கும் அக்கறை இருக்கிறது. ஆதலால் சொல்கிறேன்.

'டீ-லிமிடேஷன்' தொகுதிகள் பிரிவினை விஷயமாக சில தினங்களுக்கு முன்னால் ஒரு தீர்மானம் போட்டு, நாம் அனுப்பியிருக்கிறோம். இன்றைக்கு டெல்லியிலிருந்து வந்த தகவலைப் பார்த்தால், நேற்று, முந்தாநாள் கூடிப் பேசியவர்கள் நம் தீர்மானத்திற்கு விரோதமாக, பழைய மாதிரியாக ஒரு பாராளுமன்றத் தொகுதிக்கு 6 உறுப்பினர்கள்தான் இருக்க வேண்டுமென்று முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது. இரண்டு சபைகளும் சேர்ந்து—இத்தனை குழப்பங்கள், இத்தனை கட்சிகள் இருக்கக்கூடிய நேரத்தில்—ஏகமனதாகப் போட்ட அந்தத் தீர்மானத்தை அவ்வளவு லேசாக விட்டுவிடக் கூடாதென்று கேட்டுக்கொள்கிறேன். முதலமைச்சரவர்களுடன் அதுபற்றி நேரடியாகப் பேசினேன். 25-ம் தேதி அவர் டெல்லி போவதாக இருக்கிறார்கள். அப்போது அதுபற்றிப் பேசுவதாகவும், முடிந்தால் பிரதமரவர்களுடன் பேசி, நமது கோரிக்கையை முடித்து விடுவதாகவும் கூறியிருக்கிறார்கள். அவசியம் இதைச் செய்ய வேண்டும். ஒரு பார்லிமெண்ட் ஸ்தானத்துக்கு 7 அசெம்பிளி ஸ்தானங்கள் இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக 'அப்ரோப்பிரியேஷன் பில்'பற்றி இந்தச் சபையில் விவாதம் நடப்பது வழக்கமல்ல. இரண்டு, மூன்று பேர்கள்தான் பேசினாலும், அது பெரும் விவாதமாகிவிட்டது. ஆகவே, இனிமேல் நாம் 'அப்ரோப்பிரியேஷன் பில்'-ல் அதிகமாகப் பேசாமல் வழக்கமாக இருக்கும் நிலையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.



1974 ஆகஸ்ட் 21]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தலைவரவர்களே, இந்த நிதி ஒதுக்கீட்டு மசோதாவின் மீது மாண்புமிகு உறுப்பினர்களும், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களும் பல கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். இது நிதி ஒதுக்கீடு மசோதா என்றாலும், கல்வி மானியக் கோரிக்கை மாதிரி விவாதத்தில் கலந்துகொண்டு, அதுபற்றிய கருத்துக்களை இங்கே வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு புதிய உறுப்பினரவர்களும் கலந்துகொண்டு, இங்கே கல்வி சம்பந்தமான பல்வேறு கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். ஆகவே சட்ட நுணுக்கத்தின் அடிப்படையிலேயும், விதி முறைகளின் அடிப்படையிலேயும் அமைந்த கருத்துக்களெல்லாம் கவனிக்கப்பட்டு, முறைப்படி அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமோ அவற்றை அரசு மேற்கொள்ளும் என்பதை இந்த வாய்ப்பிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மதிய உணவுபற்றி மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்டார்கள். அதில் சங்கடங்கள் இருக்கின்றன. அதை நாம் ஓரளவுக்குத் தாங்கிக்கொள்ள வேண்டும். மதிய உணவுத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு ஆசிரியப் பெருமக்களின் ஒத்துழைப்பு இதுவரையிலும் தொடர்ந்து இருந்து வந்ததை நான் பாராட்டுகிறேன் ; போற்றுகிறேன் ; அவர்களை வாழ்த்துகிறேன் ; வரவேற்கிறேன். இன்றைக்கும் பல கூட்டங்களில் வரவேற்றுக்கொண்டிருக்கிறேன். இது தொண்டின் அடிப்படையிலே செய்ய வேண்டிய ஒன்றாக இருக்கிறது. ஆகையால் நம்முடைய நாட்டிலே இருக்கக்கூடிய அத்தனை மக்களுடைய பங்காக 2 காசுகள் வர வேண்டுமென்று சொன்னாலும், ஆரம்பத்திலே துவக்க விழா நடந்தபோது, ஊர் மக்கள் காட்டிய அக்கறையும், ஆர்வமும், பிறகு இல்லை. அதுபோல ஊராட்சி மன்றங்கள் தங்கள் பங்காக 2 காசுகள் தர வேண்டுமென்று சொன்னாலும்கூட, அதுவும் பல இடங்களில் வருவதில்லை. அப்படிப்பட்ட சங்கடங்களெல்லாம் இருக்கின்றன. ஒவ்வொரு ஊரிலுமுள்ள மக்கள் இன்றைக்கு ஆர்வமில்லாத நிலையில் இருக்கிறார்கள். அந்த மக்களுக்கு அறிவுரை கூறி, அந்த மக்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கி, அவர்களை வளப்படுத்த வேண்டிய பொறுப்பு பல ஊர்களிலே ஆசிரியப் பெருமக்களைச் சார்ந்ததாக இருக்கிறது. நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையிலும், வேறு பல நாடுகளில் வெவ்வேறு துறைகளை இயக்கிச் செல்ல, அந்தந்தத் துறைகளுக்குரியவர்கள் இருக்கிறார்கள். நம்முடைய நாட்டிலே ஊருக்கு வழி காட்டக்கூடிய திறமை படைத்தவர்களாகவும், ஊரிலே இருப்பவர்களுக்குத் தெளிவுப்படுத்த வேண்டியவர்களாகவும் இருப்பவர்கள் யாரென்று அந்தந்த ஊரிலே கேட்டால், அந்தந்த ஊரிலே இருக்கிற கர்ணத்தை

விட, பட்டாமணியத்தைவிட, வேறு பல அலுவலர்களைவிட, அந்த ஊரிலே இருக்கிற ஆசிரியப் பெருமக்கள் என்றுதான் பதில் வரும். ஆசிரியப் பெருமக்கள் தங்களுடைய பணியைவிட, ஊர் மக்களுக்கு பொதுத் தொண்டு ஆற்றக் கூடிய நிலையில்தான் நாடு இருக்கிறது என்பதை நாம் நன்றாக உணர்வோம். அந்த அடிப்படையில்தான் மதிய உணவுத் திட்டம் கொண்டுவரப்பட்டது. எனவே, அந்தத் திட்டம் சரிவர நிறைவேற வேண்டுமென்றால், எல்லோருடைய ஒத்துழைப்பும் ஆதரவும் இருக்க வேண்டும். ஆசிரியப் பெருமக்களுடைய ஒத்துழைப்பு மட்டுமல்ல; பள்ளிக் கூடத்தை நிர்வகிக்கக்கூடியவர்களுடைய ஒத்துழைப்பு, ஊராட்சி மன்றங்களைச் சேர்ந்தவர்களுடைய ஒத்துழைப்பு, ஊராட்சி ஒன்றியங்களுடைய ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. பல நல்லவர்கள்கூட முன்வந்து, மதிய உணவுத் திட்டத்திற்காகவென்று சில நிலங்களை வழங்கி, அதிலிருந்து வரும் வருமானத்தை அந்தத் திட்டத்திற்குப் பயன்படுத்த வேண்டுமென்று கொடுத்திருக்கிறார்கள். ஆங்காங்கே சிலபல இடங்களில் அந்த நன்கொடைகளை வாங்கி, உரிய அதிகாரிகளிடத்தில் நான் ஒப்படைத்திருக்கிறேன். இப்படிப்பட்ட நன்கொடையாளர்கள்கூட இருக்கிறார்கள். சில இடங்களில், சில சென்ட் நிலங்களைக்கூட எழுதிவைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட பொது மக்களுடைய ஒத்துழைப்பும் இருக்கிறது. இது தவிர, 'கேர்' நிறுவனம் உதவி செய்கிறது. இப்பொழுது மதிய உணவு தருகிறோம். நாம் கொடுக்கும் 6 அல்லது 10 காசுகளில் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியாது. 'கேர்' நிறுவனம் மட்டும் ஆண்டு ஒன்றுக்கு நமது மதிய உணவுத் திட்டத்திற்கு 6 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்களைத் தருகிறார்கள். நம்முடைய அரசு இந்தத் திட்டத்தினை நிறைவேற்றுவதற்காக 2 கோடியே சில்லரை ரூபாயை ஆண்டு ஒன்றுக்கு பட்ஜெட்டில் ஒதுக்கியிருக்கிறோம். இப்போதிருக்கிற நிலையில், அவர்கள் கொடுக்கின்ற பொருள்களோடு, நாம் கொடுக்கின்ற தொகையையும் வைத்துத்தான், சரிக்கட்டி வருகிறோம்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிற்கு மட்டும் ஆறு கோடி ரூபாய் உதவி தரப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** ஆம். முன்பு தனித்தனியாக கோதுமை, பால், மாவு என்று தந்தார்கள். அது கெட்டு போகிற காரணத்தால், இப்போது 'மிக்சர்'-ஆகத் தருகிறார்கள். இப்போது மைய உணவுக் கூடங்கள் வந்த பிறகு, ஆசிரியர்களுடைய வேலைகூட குறைந்திருக்கிறது. ஆசிரியர்களுடைய வேலையைக் குறைக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான்



மைய உணவுக் கூடங்கள் பயன்பட்டு வருகின்றன. அப்படி வேறு பல இடங்களுக்கும் அமைய வரும் நிலைமைகள் இருக்கின்றன. நான் முதலில் குறிப்பிட்ட மாதிரி பல காலமாக இருக்கும் இந்த 6 காசை உயர்த்த வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம்.

(பிற்பகல் 7.00)

**திரு. செ. முத்துசாமி:** தலைவரவர்களே, 'கேர்' நிறுவனத்திலிருந்து ஆறு கோடி ரூபாய்க்கு வருகிறது என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒரு மாதத்தில் எவ்வளவு நாட்களுக்கு உணவு 'கேர்' ஸ்தாபனத்தால் வழங்கப்படுகின்றது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அதற்குத் தனிக் கணக்குக் கேட்டால்தான் சொல்ல முடியும். இப்போது பொதுவாகத்தான் சொல்ல முடியுமே தவிர, தனியாகச் சொல்ல முடியாது. எல்லா வகைக்கும் அவர்கள் கொடுப்பதைத்தான் நான் பொதுவாகச் சேர்த்துச் சொல்ல முடியும். ஏனென்றால் பொதுக் கணக்குத்தான் எனக்கு வருகின்றது. அது தான் காரணம். அதையும் வைத்துக்கொண்டு ஓரளவுக்குச் சமாளிக்கிறோம் என்பதற்காகச் சொல்லுகின்றேன். ஒரு நாளைக்கு சமாளிக்க முடியாதுதான். இது போதுமா என்று கேட்டால் போதாதுதான். 6 காசு, 10 காசு என்று இருப்பதைக் கொண்டு சமாளிக்க முடியாதுதான். 17 காசு, 20 காசு என்று வைத்திருந்தாலும் போதுமா என்று கேட்கலாம். இப்போது இருக்கின்ற நிலைமையில் கொஞ்சம் சங்கடம்தான். அதற்காகத்தான் பொது மக்களிடத்திலே நன்கொடையாகவும், வேறு பல வகைகளிலேயும் இதைச் சேர்க்கவேண்டும் என்று வைத்து இதை நிறைவேற்ற வேண்டும் என்று நாம் எண்ணிக்கொண்டிருக்கின்றோம். இதை ஓரளவுக்காவது உயர்த்தித் தரவேண்டும். இதே மாதிரி பொதுமக்களுடைய பங்கு, ஊராட்சிகளுடைய பங்கு, இவைகளை ஓரளவுக்கு உயர்த்தி, அரசாங்கம் கொடுக்கும் பங்கையும் உயர்த்திக் கொடுக்கலாமா என்பதுபற்றி நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டிருக்கின்றேன். இதற்கிடையில் இருக்கின்ற சங்கடங்களை ஒரு தொண்டாகக் கருதி அதைச் செய்ய வேண்டுமென்றுதான் நான் வேண்டுகோள் விடுக்கிறேன். நான் ஆசிரியர்கள் உலகத்திற்கு வேண்டுகோள் விடுக்கின்றேன். பல ஆசிரியர்கள் அதைத் தொண்டாகக் கருதி செய்துகொண்டு வருகிறார்கள். அவர்கள் ஆர்வத்தைப் பாராட்டுகிறேன். இந்த வேண்டுகோளை திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்கிறேன். பொறுப்பிலிருந்து தழுவுவது நாட்டிற்கும் மற்றவைகளுக்கும் கேடு விளைவிக்கும். ஆகவே அந்தச் சங்கடத்தைக் கருதாது இருக்க வேண்டும்.

MR. CHAIRMAN : Time is extended.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அரசாங்கம் கூடுமானவரையில் சங்கடங்களைக் குறைக்க, எல்லோருடைய ஒத்துழைப்புடன் திட்டமிட்டுத் திட்டமிட்டுத்தான் பணியாற்றுகிறோம் என்பதைக் குறிப்பிட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள்பற்றிக் குறிப்பிட்டார்கள். இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள். நாம் இப்போது விதித்திருக்கின்ற விதிப்படி, 10 ஆண்டுக் காலம் பணியாற்றி முடிப்பார்களானால், முதல் நிலைத் தகுதியைப் பெறுகிறார்கள். இதற்கிடையில் முதல் நிலை தமிழாசிரியர்களுடைய தகுதியைப் பெற்றிருப்பார்களானால், முதல் நிலை தமிழாசிரியர்கள் ஆகலாம். அந்தத் தகுதி பெறாமலிருந்தால், அவர்கள் 10 ஆண்டுகளுக்கு இரண்டாம் நிலை ஆசிரியராகவேதான் இருக்கிறார்கள். பல தடவை கேள்வி நேரங்களிலே பதில் சொல்லும்போது, குறிப்பிட்டிருக்கின்றேன்.

உயர் துவக்கப் பள்ளிகளிலே தமிழாசிரியர்களைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அதற்கு என்று வரை முறைகளும் விதி முறைகளும் வகுத்துக்கொண்டிருக்கின்றோம். ஆனால் அதை நிதி ஆதாரங்களைப் பொறுத்து, ஆங்காங்கே நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. உயர் துவக்கப் பள்ளிகளிலே தமிழைப் பயிற்றுவிக்க, சிறந்த தமிழாசிரியர்கள் அமர்த்தப்பட வேண்டும். அப்படி அமர்த்தினால் நன்றாக இருக்கும் என்ற கருத்து அரசாங்கத்திற்கு உண்டு. அதைப் படிப்படியாக நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

தொகுதி வரையறைக் குழுவினுடைய கருத்துக்களைப்பற்றியும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அந்தத் தொகுதி வரையறைக் குழுவைப்பற்றி நாம் இங்கே விரிவாக விவாதித்திருக்கின்றோம். நம் கணக்குப்படி நாம் கொடுத்திருக்கின்ற புள்ளி விவரங்கள்படி 39 பாராளுமன்ற இடங்களுக்குப் பதிலாக 40 இடங்களாக ஆக்க வேண்டும். ஒரு பாராளுமன்ற இடத்திற்கு 6 ஆக இருக்கின்ற சட்டமன்ற இடங்களை 7 ஆக ஆக்க வேண்டுமென்ற கருத்தைத்தான் நாம் ஏகமனதாக தீர்மானமாக நிறைவேற்றி அனுப்பி வைத்திருக்கின்றோம். வேறு பல மாநிலங்களிலே, 8, 7, 6 இடங்கள் என்று இருக்கின்றன. அதே தன்மையில் தர வேண்டுமென்று கேட்டாலும்கூட, உங்களுக்குக் கொடுத்தால், மற்றவர்களுக்கும் தர வேண்டும் என்று ஒரு சாக்குச் சொல்லுகின்றார்கள். முதலமைச்சர் அவர்களுக்கும் கூறப்பட்டது. 25 ஆம் தேதி இதைப்பற்றிப் பேச வேண்டும்



என்று அவர்கள் இருக்கின்றார்கள். இந்தக் கருத்தை நாம் வலியுறுத்துகின்ற சூழ்நிலை இருக்கும் என்றும் இந்த வாய்ப்பிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்தக் கருத்துப்படி தொகுதி ஓரளவுக்குச் சிறிதாக அமையுமானால், சட்டமன்ற உறுப்பினர்கள் பணியாற்ற ஒரு வாய்ப்பாக இருக்கும். அதை மீண்டும் மீண்டும் வலியுறுத்தலாம். அதிலே ஒன்றும் சங்கடங்கள் இல்லை. பல மாநிலங்களிலேயும் அந்தச் சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையிலேதான் நமது முதலமைச்சர் அவர்கள் வற்புறுத்தியிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்த மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களை . . . .

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, ஒரு விவரம் அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகின்றேன். 'இந்தப் பொறுப்பிலிருந்து நழுவி விடுவது சரி அல்ல, முறையல்ல' என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இவர்களுக்கு அலவன்ஸ் கொடுக்கப்படுமா என்ற கேள்வி எழுந்தபோது, 'இந்தப் பொறுப்பே விடப்படவில்லை' என்று சொல்லும்போது, பிரச்சினையே எழவில்லை. அப்படி இருக்கும்போது இப்போது 'பொறுப்பிலிருந்து நழுவி' என்று அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே சொல்லியிருக்கின்றார்கள். இப்படி நினைப்பது சரியல்ல என்று சொல்லி, முன்னுக்குப்பின் முரணாக இருப்பது இந்த அவையிலே கொடுக்கப்பட்ட ஸ்டேட்மெண்ட் அல்லவா என்பதைப்பற்றி அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அப்போது என்ன சொன்னேன் என்று மறுபடியும் நான் திருப்பித்தான் பார்க்க வேண்டும். அப்படிச் சொல்லியிருந்தால், இப்போது திருப்பி நான் தெளிவாக எடுத்துச் சொல்கின்றேன். ஆசிரியர்கள் மேற்பார்வையில் விடுவது பொறுப்பில்லாமல் எப்படி ஆகும்? மாணவர்கள் அட்டெண்டன்ஸ் வைத்துக் கொள்வது என்னவாகும்? கணக்கு வைத்துக்கொள்வது எப்படி பொறுப்பில்லாதது ஆகும்? தலைமை ஆசிரியர் கணக்கு வைத்திருக்காவிட்டால், வேறு யார் கணக்கு வைத்திருப்பார்கள்? அதற்காக தனியாக ஆட்கள் கிடைக்கமாட்டார்களா என்று கேட்கிறார்கள். அதற்கு நிதி வேண்டும். இப்போதே 6 காசு, 8 காசு, 10 காசு என்று உயர்த்துவதற்கு பணம் இல்லையென்று கருதிக்கொண்டிருக்கும்போது, ஒரு ஆசாமி நியமிக்க முடியாதா என்று அங்கத்தினர் அவர்கள் கேட்கின்றார்கள். நமக்கு நியமிக்க ஆட்கள் இருக்கின்றார்கள். ஏராளமாகப் பணம் கொடுத்தால் வருகிறார்கள். அதற்குப் பணம் இருந்தால் 6 காசு, 8 காசு, 10 காசு என்று ஆக்குவானேன்? இருக்கின்ற சங்கடங்களைக் கவனித்து

அதற்கேற்றபடி தான் நடந்துகொள்ள வேண்டும். இந்தப் பொறுப்பு என்று நான் எடுத்துச் சொன்னேனே தவிர, பொறுப்பிலிருந்து நழுவுவதாக இல்லை. அவர்களே நாங்கள் விலகிக்கொண்டோம், விலகிக் கொள்வோம் என்றபோது, இதுவரை பார்த்த பொறுப்பை இனிமேல் செய்ய மாட்டோம் என்பதிலிருந்து, விலகுகிறார்கள் என்பதுதான் பொருள். இல்லையென்றால், விலக வேண்டிய அவசியமே ஏற்படாதே. ஆகையினால் இதைத் தொண்டாகக் கருதிச் செய்ய வேண்டும். இதைச் செய்தால்தான் ஏழை எளிய மாணவர்கள் படும் சங்கடங்களை நீக்க முடியும். சங்கடங்களை நீக்குவதை அரசாங்கம் அதன் எண்ணத்திலே வைத்திருக்கின்றது. அவைகளை மெல்லமெல்ல தீர்ப்பதிலே ஈடுபடும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதற்கான சங்கடங்கள் தீர்க்கப்படும் வரையில் இதைத் தொண்டாகக் கருதி மதிய உணவுத் திட்டம் சீர்கேடு அடையாமலிருக்க, தொடர்ந்து நடைபெறுவதற்கான ஒத்துழைப்பைத் தான் ஆசிரியர்களிடமிருந்து வரவேற்கின்றேன். எல்லா ஆசிரியர்களும் தர வேண்டும். தொடர்ந்து நடக்கும் சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். எனவே அந்த மதிய உணவுத் திட்டத்தை வெற்றிகரமாக ஆக்குவதற்கு தலைமையாசிரியர்கள் எல்லாப் பள்ளிகளிலும் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்தப் பொறுப்பினுடைய அடிப்படையில் இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றுதான் இந்த அரசின் கல்வித் துறை இதைக் கொண்டுவந்திருக்கின்றது. அதை நிறைவேற்ற வேண்டுமென்ற வேண்டுகோளைத்தான் நான் விடுத்திருக்கின்றேன்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, அந்தச் சங்கடங்கள் எப்போது நீக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதற்கான காலவரையறையை எப்படிச் சொல்ல முடியும்? ஆகவே சங்கடங்களை நீக்குவதற்கான வாய்ப்பு வசதிகள் எவ்வெப்போது ஏற்படுகிறதோ, அப்போது அவைகளைப் பயன்படுத்தி நடைமுறைப்படுத்த அரசு முயற்சி மேற்கொள்ளும். காலவரையறை சொல்ல முடியாது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (3 ஆம் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1974) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".



தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (3 ஆம் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1974) திருப்பி அனுப்பப்பட வேண்டும்".

என்று முன்மொழிகின்றேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (3 ஆம் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1974) திருப்பி அனுப்பப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை பிற்பகல் நான்கு மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 7-07)

### 6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

75. Notifications issued with G.O. Ms. No. 283, Public (Elections-IV), dated the 28th January 1974 in regard to date of commencement of the Tamil Nadu Payment of Salaries (Second Amendment) Act, 1973 and amendments to the Rules for Maintenance and Repairs of Government Cars allotted to Ministers, Speaker, Legislative Assembly and Chairman, Legislative Council, 1952. [Laid on the table of the House under section 25 (4) of the Tamil Nadu Payment of Salaries Act, 1951 (Tamil Nadu Act XX of 1951).]

76. Notifications issued with G.O. Ms. No. 2, Rural Development and Local Administration, dated the 2nd January 1974 relating to the reservation of seats and division of wards for

Scheduled Castes and Women in the Arni Municipal Council of North Arcot district with effect on and from the date of the next ordinary elections to the Arni Municipality. [Laid on the table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

77. Order issued with G. O. Rt. No. 564, Revenue, dated the 5th April 1974 exempting from liability to entertainments tax, show tax and additional surcharge, one cinematograph film show proposed to be held by the Mangayarkarasi Mahalir Mandram, Shastri Nagar, Madras-20, on 5th April 1974 at Devi Theatre, Mount Road, Madras to raise funds for the starting of a free clinic to serve the poor people of the locality. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

78. Order issued with G.O. Rt. No. 683, Revenue, dated the 26th April 1974 exempting from liability to Entertainments Tax, show tax and additional surcharge one cinematograph film show proposed to be held by the Principal, Breeks Memorial School, Ootacamund on 14th April 1974 at Liberty Theatre, Ooty, to raise funds for the building fund of the School. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

B. *Reports, Notifications and Other Papers.*

* 49. Notification issued with G. O. Ms. No. 972, Revenue, dated the 6th March 1974 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the mortgage deed to be executed by the Tamil Nadu Electricity Board for taking a loan of Rs. four crores (Rupees four crores only) from the Life Insurance Corporation of India during the current year 1973–74.

50. Notification issued with G. O. Ms. No. 877, Revenue, dated the 27th February 1974 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of a sale deed to be executed by the persons mentioned in the schedule in favour of the Trustees of Gandhi Ashram, Tiruchengode taluk, Salem district.



* 51. The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Fifth Amendment) Bill, 1974 (L.A. Bill No. 26 of 1974), as passed by the Assembly.

* 52. The Tamil Nadu Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1974 (L.A. Bill No. 27 of 1974), as passed by the Assembly.

* 53. The Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and Extension of term of office) Third Amendment Bill, 1974 (L.A. Bill No. 28 of 1974), as passed by the Assembly.

* 54. The Madurai City Municipal Corporation (Amendment Extension of term of office) Second Amendment Bill, 1974 (L.A. Bill No. 29 of 1974), as passed by the Assembly.

55. The Tamil Nadu Appropriation (No. 3) Bill, 1974 (L.A. Bill No. 41 of 1974), as passed by the Assembly.

---

* Circulated to all M.L.Cs. on 19th August 1974.

## இணைப்பு I

[65 ஆம் பக்கத்தில் 63 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

**உயர்நிலைப் பள்ளிகள் :—**

ஒரு குறிப்பிட்ட இடத்தில் புதிய உயர்நிலைப் பள்ளி தேவைதானா என்பதை கீழ்க்கண்ட அடிப்படையில் பரிசீலித்து முடிவெடுக்கப்படுகிறது :—

(1) பள்ளி அமைக்கப்பட வேண்டிய இடம் மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கை.

(2) பள்ளி துவங்க இருக்கும் இடத்திலிருந்து 3 அல்லது 5 மைல் சுற்றளவில் இருக்கும் நடுநிலை மற்றும் உயர் துவக்கப்பள்ளிகளின் எண்ணிக்கை. மேற்படி பள்ளிகளில் 6-லிருந்து 8 ஆவது வகுப்புகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை.

(3) பள்ளி துவக்க வேண்டிய இடத்திலிருந்து 3 அல்லது 5 மைல் சுற்றளவில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை மற்றும் அப்பள்ளிகளின் இடவசதி.

(4) பள்ளி துவக்க இருக்கும் இடத்தில் கல்வித் தேவை.

(5) பள்ளி துவங்க அனுமதி கோரும் நிர்வாகத்தின் நிதி நிலைமை மற்றும் கட்டடத் தொகையைக் கட்ட உறுதியான நிலை.

(6) பள்ளிக்குப் போதுமான இடம், தளவாடச் சாமான்கள், அறைகலன்கள், விளையாட்டுத் திடல் போன்ற வசதிகள் செய்தல்.

(7) பள்ளி துவக்க வேண்டிய இடத்தினைச் சுற்றி உள்ள பள்ளி நிர்வாகிகள் எழுப்பும் ஆட்சேபணைகள்.





**கல்லூரிகள் :—**

கல்லூரி ஒன்று ஒரு குறிப்பிட்ட இடத்தில் தேவைதானா என்பதை சம்பந்தப்பட்ட பல்கலைக் கழகம்தான் முடிவு செய்கிறது. அரசுக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டும் என்றால், பொதுவாக கீழ்க்கண்ட மூன்று நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் :—

(1) பொது மக்கள் நன்கொடையாக அரசுக்கு ரூ. 5.00 லட்சம் கட்ட வேண்டும்.

(2) கல்லூரி கட்ட 40 ஏக்கர் நிலம் தரப்பட வேண்டும்.

(3) கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடம் கட்டும் வரை, வாடகையின்றி கட்டடம் தரப்பட வேண்டும். மேற்கண்ட மூன்று நிபந்தனைகள் நிறைவு செய்யப்பட்டால், அரசுக் கல்லூரிகள் ஆரம்பிக்கலாம்.

## இணைப்பு II

(122 ஆம் பக்கத்தில் இனம் 5-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

### L. A. Bill No. 41 of 1974.

(As passed by the Assembly)

*A Bill to provide for the appropriation of certain further moneys out of the Consolidated Fund of the State for the service of the financial year which commenced on the 1st April* **1974.**

**Be** it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-fifth Year of the Republic of India as follows :—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Appropriation (No. 3) Act, 1974.

2. *Supplementary appropriation out of the Consolidated Fund for the financial year which commenced on the 1st April* 1974.—The State Government may appropriate out of the Consolidated Fund of the State for the financial year which commenced on the 1st April 1974, a further sum not exceeding six crores, five lakhs eligity six thousand and nine hunderd rupees, being moneys required to meet—

(*a*) the supplementary grants made by the Tamil Nadu Legislative Assembly for that period, as set forth in column (3) of the Schedule; and

(*b*) the supplementary expenditure charged on the Consolidated Fund of the State for that period, as set forth in column (4) of the Schedule.

## THE SCHEDULE.

(*See* Section 2.)

| *Demand number.* | *Services and purposes.* | *Sums not exceeding.* | | |
|---|---|---|---|---|
| | | *Voted by the Legislative Assembly,* | *Charged on the Consolidated Fund of the State.* | *Total.* |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | RS. | RS. | RS. |
| 9 | Head of State, Ministers and Headquarters Staff. | 34,29,200 | 100 | 34,29,300 |
| 11 | District Administration .. | 100 | .. | 100 |
| 12 | Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959. | 3,00,000 | .. | 3,00,000 |
| 13 | Administration of Justice. | 1,08,300 | 200 | 1,08,500 |
| 15 | Police .. .. .. | .. | 14,000 | 14,000 |
| 16 | Fire Services .. .. | 6,21,700 | .. | 6,21,700 |
| 17 | Education .. .. | 7,26,600 | 23,000 | 7,49,600 |
| 18 | Medical .. .. .. | 8,90,100 | .. | 8,90,100 |
| 19 | Public Health .. .. | 20,00,000 | .. | 20,00,000 |
| 20 | Agriculture .. .. | 21,87,500 | .. | 21,87,500 |
| 28 | Community Development Projects, etc. | 1,02,94,300 | .. | 1,02,94,300 |
| 29 | Labour including Factories. | 6,60,200 | — | 6,60,200 |
| 30 | Welfare of the Scheduled Tribes and Castes, etc. | 17,26,000 | .. | 17,26,000 |
| 31 | Welfare of the Backward Classes, etc. | 500 | .. | 500 |
| 33 | Urban Development .. | 54,00,000 | .. | 54,00,000 |
| 36 | Public Works—Buildings. | .. | 2,400 | 2,400 |
| 38 | Roads and Bridges .. | 2,88,900 | .. | 2,88,900 |
| 39 | Road Transport Schemes. | 1,50,000 | .. | 1,50,000 |
| 40 | Relief on account of Natural Calamities. | 53,99,100 | .. | 53,99,100 |
| 41 | Pensions and other Retirement Benefits. | 3,57,000 | .. | 3,57,000 |
| 42 | Miscellaneous .. .. | 1,00,000 | .. | 1,00,000 |
| 44 | Forest Department .. | 100 | 37,300 | 37,400 |
| 49 | Capital Outlay on Industrial Development. | .. | 4,24,900 | 4,24,900 |



| *Demand Number.* | *Services and purposes.* | *Sums not exceeding.* | | |
|---|---|---|---|---|
| | | *Voted by the Legislative Assembly.* | *Charged on the Consolidated Fund of the State.* | *Total.* |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | RS. | RS. | RS. |
| 50 | Capital Outlay on Irrigation. | 200 | .. | 200 |
| 5[illegible] | Capital Outlay on Public Works—Buildings. | 1,00,000 | 2,61,100 | 3,61,100 |
| 53 | Capital Outlay on Road Transport Schemes. | 70,00,000 | .. | 70,00,000 |
| 55 | Miscellaneous Capital Outlay. | 32,59,100 | .. | 32,59,100 |
| 56 | Loans and Advances by the State Government. | 1,48,25,000 | .. | 1,48,25,000 |
| | Grand Total .. | 5,98,23,900 | 7,63,000 | 6,05,86,900 |

I Certify that this is a Money Bill.

Fort St. George,
Madras,
Dated, 21–8–1974

K. GOVINDAN,
SPEAKER
*Tamil Nadu Legislative Assembly.*

தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

---

**வியாழக்கிழமை, 1974 ஆகஸ்ட் 22.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு அவர்கள் தலைமையில் மேலவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

* உடுக்குறியிட்ட வினாக்கள்

### *Jallikattu Game*

*71. *Q.*—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether Jallikattu Game was conducted in Madurai City in January 1973, in connection with the Pongal Tourist Festival in the State; and

(*b*) if so, the details thereof?

### ஜல்லிக்கட்டு விளையாட்டு

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்):** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் பொங்கல் விழா தொடர்பாக சுற்றுலாப் பயணிகளுக்கென மதுரை மாநகரில் 1973, ஜனவரியில் ஜல்லிக்கட்டு விளையாட்டு நடத்தப்பட்டதா?

(ஆ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(ஆ) 1970-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் நடைபெற்ற அனைத்திந்திய சுற்றுலா வளர்ச்சிக் குழுவின் 14-வது கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவையொட்டி, தமிழ்நாடு அரசு, 1973 ஆம் ஆண்டில் பொங்கல் சுற்றுலா விழாவைக் கொண்டாடியது. பொங்கல் சுற்றுலா விழா கொண்டாட்டத்தின் ஒரு சிறப்பு நிகழ்ச்சியாக ஜல்லிக்கட்டு என்னும் புகழ் பெற்ற கிராமிய விளையாட்டைத் மதுரையில் மாவட்ட சுற்றுலா ஆலோசனைக்குழு மாவட்ட

ஆட்சித் தலைவரின் தலைமையில் ஏற்பாடு செய்தது. கால்நடை கண்காட்சிக்கும் ஜல்லிக்கட்டு விளையாட்டிற்கும் தென்னிந்திய பெட்ரோலிய இரசாயனப் பொருள்கள் கழகம் (ஸ்பிக்) சுமார் ரூ. 1,000 மதிப்புள்ள பரிசுப் பொருள்களை வழங்கியது. பல லட்சம் மக்கள் அந்த விளையாட்டைக் கண்டு களித்தனர். ஜல்லிக்கட்டில் பங்கு கொள்ள வந்தவர்களில் 51 பேர் அந்த விளையாட்டின் போது காயமுற்றனர். கடும் விபத்துக்கள் நேர்ந்ததாகத் தகவல் இல்லை.

**திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்:** தலைவர் அவர்களே, ஜல்லிக்கட்டு என்பது மாட்டைத் தொழுவிலே அடைத்து, வேட்டியைக் கட்டிவிடுவது. எங்கள் இராமநாதபுரம் மாவட்டப் பகுதியிலே எருதுக்கட்டு என்று சொல்வார்கள். இதை மஞ்சுவிரட்டு என்றும் சொல்வதுண்டு. எருதுக்கட்டு என்பது மாட்டின் கயிற்றைக் கட்டி, இழுப்பார்கள். பின்னாலே விரட்டிப் பிடிப்பார்கள். இதை ஒரு பெரிய பொழுதுபோக்காக நடத்துகிறார்கள். ஆகவே இந்த எருதுக்கட்டுக்கும் அனுமதி தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இப்பொழுதே அனுமதியோடு ஆங்காங்கே நடைபெற்று வருகின்றன. தக்க பாதுகாப்போடு நடைபெறுவதற்கான முயற்சிகள் மேற்கொண்டிருக்கின்றோம். ஆனால் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினர் இதனை பொங்கல் விழாவினுடைய ஒரு கூறாக சென்னையிலும் மதுரையிலும் சென்ற ஆண்டு கொண்டாடினார்கள். சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இந்த இரண்டு இடங்களிலேயும் நடத்துகின்ற பொறுப்பை ஏற்றுக்கொண்டது. ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு போன்ற விளையாட்டுகள் தென் மாவட்டங்களிலே கிராமங்களிலே ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

**திரு. எம். ஆறுமுகசாமி:** தலைவர் அவர்களே, இந்த ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு போன்ற விளையாட்டுகள் ரொம்பப் பழமையானவை. அவை ரொம்ப முரட்டுத்தனம் மிகுந்தவையாகவும் இருப்பதாலும், அவை மனிதர்களின் உயிருக்கு ஆபத்தாக இருப்பதாலும், அந்த விளையாட்டுகளுக்கு ஒப்புதல் அளிக்காமலிருக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அவை வீர விளையாட்டுகள்தான். துணிந்தவர்கள்தான் அதில் இறங்க வேண்டும். துணியாதவர்கள் எட்டியிருந்து வேடிக்கை பார்க்கத்தான் வேண்டும். ஆனால் அபாயம் என்பது எல்லாவற்றிலுமே ஏற்படுகிறது. சாலை ஓரங்களிலே நடக்கிறபொழுதுகூட ஆபத்து ஏற்படும். கிரிக்கட் விளையாட்டிலே ஆபத்து இருக்கிறது. கால்பந்தாட்டத்திலே ஆபத்து இருக்கிறது. ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு போன்றவை வீர விளையாட்டுகள்தான். இதிலே துணிந்தவர்கள்





இறங்குகிறார்கள். உயிருக்கு ஆபத்து ஏற்பட்டாலும்கூட, அது தங்களுடைய பொறுப்பு என்று முதலில் எழுதிக் கொடுத்துவிட்டு, அதற்குப் பிறகு தான் இறங்குகிறார்கள். ஆகவே அதிகமான அளவுக்கு இதில் உயிர்ச் சேதம் ஏற்படுவதற்கு இடமிருக்குமானால், அதைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகளை எடுத்து தக்க பாதுகாப்போடு நடத்துவதை ஏற்றுக்கொள்ளலாம்.

**திரு. கே. ராஜாராம்:** தலைவர் அவர்களே, சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னால், இம்மாதிரி ஜல்லிக்கட்டுகள், மதுரை மாவட்டத்தில் திருமங்கலம் தாலுகாவில், தென் பகுதிகளில், அதிகமாக முக்குலத்து சமூகத்தினர் வசிக்கும்படியான பகுதிகளில், கிராமந்தோறும், நடந்துவந்தன. மாட்டை விரட்டி, வீரத்தோடு அதைப் பிடிப்பதோடு அல்லாமல், ஏற்கெனவே சண்டை உள்ள கிராமங்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, சண்டை போடுகிற இடங்களில் கொடிகட்டி போராடி சண்டைகள் நடந்தன. அதனால் ஏராளமான கொலைகளும் சண்டைகளும் நடந்ததால், அன்று ஜல்லிக்கட்டையே தடை செய்துவிட்டார்கள். இப்பொழுது ஜல்லிக்கட்டை மீண்டும் நடத்த வகுத்து ஏற்பாடு செய்தால், போதுமான பாதுகாப்போடு நடத்த வேண்டும். இம்மாதிரி ஒரு ஊருக்கும் மற்றொரு ஊருக்கும் சண்டை வராமல், அதற்கான பாதுகாப்போடு இந்த ஜல்லிக்கட்டு விளையாட்டை நடத்துவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறியதுபோன்று, ஒரு ஊருக்கும் இன்னொரு ஊருக்கும், ஒரு வகுப்புக்கும் இன்னொரு வகுப்புக்கும், ஒரு குடும்பத்துக்கும் இன்னொரு குடும்பத்துக்கும் சண்டை ஏற்படுகிற அளவுக்கு ஜல்லிக்கட்டு நடைபெறுமேயானால், அங்கெல்லாம் தடுத்து நிறுத்தப்படவேண்டிய அவசியம் ஏற்படும். சில சமயங்களிலே திருவிழாக்களிலே தேர் வடம் பிடிப்பதிலே யார் முதலிலே பிடிப்பது என்று தகராறு ஏற்படும்போது, அரசாங்கம் தலையிட்டு தடுத்து நிறுத்தவேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களிலே மட்டும் காவல் துறையினரும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும், தக்க நடவடிக்கை எடுத்து தடுத்து நிறுத்துவார்கள். இந்த விளையாட்டு ஒரு வீர விளையாட்டு. வீர உணர்ச்சியோடு விளையாடுகிற விளையாட்டு. இது மாதிரி ஸ்பெயின் நாட்டிலேயும் நடைபெறுகிறது. ஆனால் ஸ்பெயின் நாட்டிலே நடைபெறுவதற்கும், நமது நாட்டிலே நடைபெறுவதற்கும் வேறுபாடு உண்டு. அங்கே உலகப் புகழ்பெற்ற மாடு விரட்டு நடைபெறுகிறது. அதைப் பிடிப்பதற்கு நல்ல பாதுகாப்பு இருக்கிறது. கையிலே Rag—படுதா—ஒன்று தருகின்றார்கள். மற்றொரு கையிலே கத்தியும் தருகின்றார்கள். கடைசியில் அந்த மாட்டைப் பிடிப்பவர்கள் அதைக் குத்திக்கூட கொன்று விடலாம். ஆனால் நம்முடைய நாட்டிலே கையிலே எந்தவித ஆயுதமும்

இல்லாமல் மாட்டைப் பிடித்து அடக்க வேண்டும். அது மற்றவர்கள்கூட பாராட்டத்தக்க அளவுக்கு அமைந்திருக்கிறது. ஆனால் விளையாட்டிலே ஈடுபடுகின்றவர்கள் சில பல சட்ட திட்டங்களையும், ஒழுங்கு முறைகளையும் வரையறுத்து, அதிக ஆபத்து ஏற்படாத அளவுக்கு இந்த விளையாட்டைக் கொண்டு வரத்தக்க வழிமுறையை வகுத்துத் தந்தால், அதை நடைமுறைப்படுத்திக் கட்டுப்படுத்துகிற அளவுக்குச் செயல்படுத்தலாம்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** தலைவர் அவர்களே, இந்த ஜல்லிக் கட்டு வருஷா வருஷம் பெரிய ஊர்களிலும், நடக்கிறது, சிறிய கிராமங்களிலும் நடக்கிறது. இந்த ஆண்டு சுற்றுலா வாரியத்தின் மூலம் இரண்டு ஊர்களிலே நடத்தப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த இரண்டு ஊர்களிலே ஒவ்வொரு ஊருக்கும் எவ்வளவு செலவாகும்? இந்தத் திட்டத்தை சுற்றுலா வாரியத்தின் மூலம் இன்னும் விரிவாக்கக்கூடிய ஆலோசனை ஏதாவது அரசுக்கு இருக்கின்றதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, 1974-ம் ஆண்டு மதுரைக்குப் பக்கத்திலே இருக்கிற அலங்காநல்லூரிலே நடைபெற்றது. சென்ற ஆண்டு மதுரை நகரிலே நடைபெற்றது. அலங்காநல்லூரில் வழக்கமாக நடைபெறுகிறது. சென்னையிலே நேரு ஸ்டேடியத்திலே சிறப்பான பாதுகாப்போடு நடைபெற்றது. அதனுடைய பெருஞ்செலவை ஸ்பிக் என்று சொல்லப்படுகிற தென்னிந்திய பெட்ரோலிய இரசாயனப் பொருள்கள் கழகத்தினர் ஏற்றுக்கொண்டார்கள். பரிசுகள் வழங்குவது, மாடுகளைக் கொண்டு வருகிற செலவு போன்ற செலவுகளையெல்லாம் அவர்களே ஏற்றுக்கொண்டதன் காரணமாக, சுற்றுலா வாரியத்திற்கு அதிகச் செலவு இல்லை. அதனுடைய கணக்கு வேண்டுமென்றால், தனியாகக் கேட்டால் சொல்லலாம்.

**திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் :** தலைவர் அவர்களே, இந்த விளையாட்டை கிராமங்களிலே மிகவும் ரசித்து நடத்துகிறார்கள். இதை ஒரு பெரிய விளையாட்டாகவே கருதுகிறார்கள். எப்படி கிரிக்கட் போன்ற விளையாட்டுகளுக்கு மதிப்புக் கொடுத்து பாராட்டுகிறார்களோ, அதேமாதிரி இந்த ஜல்லிக் கட்டு, மஞ்சுவிரட்டு, எருதுக்கட்டு போன்றவைகள் பெருமிதமாகப் பாராட்டி, சபதம் போட்டு நடத்தப்படுகின்றன. எங்கள் தலைவர் திரு. ராஜாராம் நாயுடு அவர்களுடைய காளையை • ஒருவர் பிடித்துவிட்டால், அவருக்கு மாப்பிள்ளையாகி விடலாம். நான் வாழ்க்கைப்படுவேன் என்று பெண்கள் சபதங்கள்கூட செய்வார்கள். மதுரை ஜில்லாவிலே உள்ள உறங்கான்பட்டியிலே இதை மிக விமரிசையாக நடத்துகிறார்கள். பல லட்சக்கணக்கான மக்கள் கூடி இதைப் பார்க்கிறார்கள். இதே போல இராமநாதபுரம் ஜில்லாவிலே திருப்பத்தூருக்குக் கிழக்கே உள்ள ஒரு ஊரிலே இதை நடத்துவார்கள். பல லட்சக்கணக்கான மக்கள் கூடுவார்கள்.





**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கேள்வி சுருக்கமாக இருக்க வேண்டும். பிரசங்கம் செய்யக்கூடாது.

**திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் :** ஆகவே, அதை ஒழிக்கத் திட்டம் வகுக்க வேண்டாம் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 4-10)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அப்படிப் பட்ட உத்தேசமில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஐம்பது பவுன் நகையைப் போட்டு பெண்ணைக் கட்டுகிறதைவிட மாட்டைப் பிடித்துவிட்டு கட்டிக் கொள்ளலாம் போலிருக்கிறது.

**திரு. எல், பலராமன் :** தலைவரவர்களே, சுற்றுலா வாரியத்தின் மூலம் பண்டைய வீர விளையாட்டுக்களை ஊக்குவிக்க வேண்டும் என்ற முறையில் என்னென்ன நிகழ்ச்சிகள் அரசினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன? இந்திந்த விளையாட்டுக்களை விளையாடலாம் என்று அரசு ஏதாவது பரிந்துரை கூறியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இந்தப் பொங்கல் விழாவினையொட்டி, சுற்றுலா வாரியத்தின் மூலமாக தமிழ் நாட்டிலே ஐந்தாறு இடங்களிலே, மதுரை, திருச்சி, தஞ்சாவூர், இராமேஸ்வரம், காஞ்சீபுரம் மற்றும் சென்னை போன்ற இடங்களிலே கரகம், காவடிகள், பொய்க் கால் குதிரை, பரத நாட்டியம், ஜல்லிக்கட்டு போன்ற விளையாட்டுகளுக்கு, நிகழ்ச்சிகளுக்கு அதிக ஊக்கம் கொடுத்து அவற்றை நமது நாட்டினர் கண்டு களிப்பதோடு மட்டுமில்லாமல், வெளிநாடுகளிலிருந்து வரும் பயணிகளும் பார்ப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவரவர்களே, இந்த ஜல்லிக்கட்டு விளையாட்டுகளுக்கென ஏதாவது டிக்கெட்டுகள் போட்டு கட்டணம் வசூல் செய்யப்பட்டதா? மேலும் அதிலே கலந்துகொள்ளும் விளையாட்டு வீரர்களுக்கு ஏதாவது விபத்து ஏற்பட்டால், அந்தப் பணத்தின் மூலமோ அல்லது அரசின் மூலமோ அவர்களுக்கு ஏதாவது நிவாரணம் அளிக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, கிராமப் புறங்களிலே நடத்தப்படும் இத்தகைய நிகழ்ச்சிகளுக்கு நுழைவுக் கட்டணம் என்று எதும் வசூலிப்பதில்லை. சில தனி ஸ்தாபனங்கள் கொடுக்கும் நன்கொடைகள் மூலம் இத்தகைய விழாக்களை, வீர விளையாட்டுக்களை நடத்து

கின்றார்கள். இந்த நிகழ்ச்சிகளில் பங்கு ஏற்போருக்கு அந்தந்த ஊருக்குத் தகுந்தபடி பரிசுகளைக் கொடுக்கின்றார்கள். கலந்துகொள்ளுவோருக்கு ஏதாவது ஏற்பட்டால் முறைப்படி அவர்களுக்கு மருத்துவ உதவி அளிக்கப் படுகிறது.

**திரு. அ. பாலசுப்பிரமணியம்:** தலைவரவர்களே, இப்படிப்பட்ட அபாயம் நிறைந்த விளையாட்டுக்களில் கலந்துகொள்ளுவோருக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டால், அவர்கள் உயிரிழந்து விட்டால், அவர்களுக்கு ஏதேனும் நஷ்ட ஈட்டுத் தொகை என்று கொடுக்கப்படுகிறதா? அதை நடத்துகின்றவர்கள் அவர்களுக்கு ஏதாவது நஷ்ட ஈடு என்று கொடுக்கின்றார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அப்படிப் பட்ட பேராபாயம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. பாதுகாப்பு முறைகளைக் காவல் துறையினர் வேண்டிய அளவிற்கு அந்தந்த நேரங்களிலே செய்து கொடுக்கின்றார்கள். சென்ற ஆண்டு அதாவது 1973 ஆம் ஆண்டிலே இப்படிப் பட்டதொரு நிகழ்ச்சியில் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்துகொண்டார்கள். அதிலே ஐம்பதுக்கும் மேற்பட்டவர்களுக்குக் காயம் ஏற்பட்டது. ஆனால் கடுமையான விபத்து என்று எதும் ஏற்படவில்லை. அப்படிக் காயம் அடைந்த வர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனால் அவர்களுக்கு என்ன நிதி உதவி அளித்தார்கள் என்ற விவரம் இல்லை. தனிக் கேள்வியாகக் கேட்டால், விவரத்தைச் சேகரித்துக் கொடுக்க முடியும்.

**திரு. எல். பலராமன்:** தலைவரவர்களே, கிராமியக் கலை நிகழ்ச்சிகளுக்கு ஊக்கம் கொடுக்கப்படுகின்றது என்று சொல்லும்போது, தெருக்கூத்திற்கு அப்படிப்பட்ட ஊக்கம் கொடுக்கப்பட்டு வருகிறதா? அமைச்சர் அவர்கள் சொன்னவற்றில் தெருக்கூத்து இடம் பெறவில்லை. இதை அரசு ஊக்குவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, தெருக் கூத்து போன்ற அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் இந்த விளையாட்டுகளின் அடிப் படையில் வரவில்லை. ஆனாலும் தெருக் கூத்துகள் ஆங்காங்கு நடைபெற்று வருகின்றன. இப்படிப்பட்ட தெருக் கூத்துக்களில் ஈடுபட்டு வரும் கலைஞர் களுக்கு பல்வேறு விதங்களிலே ஊக்கம் கொடுக்கப்பட்டு வருகின்றது. தமிழ் நாட்டின் இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் முதுமை வாய்ந்த கலைஞர் களுக்கு பல்வேறு உதவிகளைச் செய்து வருகின்றார்கள்.



*Local Library Authority, Tiruchirappalli*

* 72 Q.—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that no Chairman has been appointed for the Local Library Authority, Tiruchirappalli District during the last 15 months; and

(b) if so, the action taken therefor?

**உள்ளூர் நூலக ஆணைக் குழு, திருச்சிராப்பள்ளி.**

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்):** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கடந்த 15 திங்கள்களாக திருச்சிராப்பள்ளி மாவட்ட உள்ளூர் நூலக ஆணைக் குழுவிற்குத் தலைவர் யாரும் நியமிக்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) & (இ) கடந்த 15 மாதங்களாகத் திருச்சிராப்பள்ளி நூலக ஆணைக்குழுத் தலைவர் பதவி காலி யாக உள்ளது என்ற கூற்று சரியில்லை. 23—9—1973 முதல் தான் தலைவர் பதவி காலியாக உள்ளது. திருச்சிராப்பள்ளி நூலக ஆணைக்குழுத் தலைவருக் காகத் தேர்தலை நடத்தத் தேவையான நடவடிக்கைகள் பொது நூலக இயக்கு நரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** மாண்புமிகு தலைவரவர்களே, திருச்சி ராப்பள்ளி நூலக ஆணைக் குழுத் தலைவர் பதவி காலியாக உள்ளது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தப் பதவி நியமன முறையில் பூர்த்தி செய்யப்படுமா அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டு பூர்த்தி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இப்போது உள்ள சட்ட திட்டப்படி பல உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள். சிலர் நியமனம் செய்யப்படுகின்றார்கள். ஆனால் தலைவரை அவ்வளவு உறுப் பினர்களும் சேர்ந்து தேர்ந்தெடுக்க வேண்டும். இப்போது நூலக ஆணைக் குழுவின் தன்மையையே திருத்தி அமைப்பதற்காகக் குழு ஒன்று திரு. வி. என். சுப்பராயன் அவர்கள் தலைமையில் நியமிக்கப்பட்டிருக்கின்றது.

அவர்கள் பல இடங்களுக்குச் சென்று ஆராய்ந்து அந்த நூலக ஆணைக் குழுவின் தன்மையை எப்படி எப்படி மாற்றியமைக்கலாம் என்று பார்த்து அளிக்கப்படும் அறிக்கையினை சென்ற ஆண்டு இறுதியிலேயே எதிர் பார்த்தோம். ஆனால் மேலும் பல இடங்களுக்குச் சென்று பார்த்து வரவேண்டும் என்று அந்தக் குழு கேட்டுக்கொண்ட காரணத்தினால், அறிக்கை இன்னும் வரவில்லை. அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. அறிக்கை வந்து விட்டால், என்னென்ன சீர்திருத்தங்களை மேற்கொள்ளலாம் என்று பார்ப்பதற்கு வசதியாக இருக்கும். அதற்குப் பிறகு வேண்டிய நடவடிக்கைகளை நூலக ஆணைக் குழு எடுக்கும் என்று தெரியப்படுத்திக்கொள்ளுகிறேன்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** தலைவரவர்களே, திருச்சியில் தலைவர் பதவி காலியாக இருக்கின்றது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். வேறு எந்தெந்த மாவட்டங்களில் தலைவர் பதவிகள் காலியாக இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

## *Appointment of Elementary School Teachers as Tamil Pandits*

* 73 Q.—THIRU S. MUTHUSWAMY (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Government are aware that many of the Elementary School Teachers, who have acquired Pulavar Degree, have not been appointed as Tamil Pandits;

(*b*) if so, whether there is any proposal with the Government to post them as Tamil Pandits; and

(*c*) whether Tamil Pandits will be appointed in all the Elementary Schools to teach Tamil?

## தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு தமிழாசிரியர் வேலை

**திரு. செ. முத்துசாமி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களில் தமிழார்வத்தால் புலவர் பட்டம் பெற்றுள்ள பலருக்கு தமிழாசிரியர் பணி கிடைக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?



(இ) ஆமெனில், அவர்களுக்குத் தமிழாசிரியர் பணி கொடுக்க அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(உ) எல்லாத் தொடக்கப் பள்ளிகளிலும், தமிழைக் கற்பிக்க தமிழாசிரியர் நியமனம் செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) அதுபற்றிய தகவல் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) ஆரம்பப் பள்ளிகளில் தமிழாசிரியர்களை நியமனம் செய்ய விதிமுறைகளில்லை. ஆனால் உயர், ஆரம்பப் பள்ளிகளில் 6 முதல் 8 வகுப்புகளில் 4 அல்லது அதற்கு மேற்பட்ட பிரிவுகளிருந்தால் அப்படிப்பட்ட பள்ளிகளில் தமிழாசிரியர் ஒருவரைக் கூடுதலாக நியமனம் செய்யலாம். இது தவிர உயர், ஆரம்பப் பள்ளிகளில் ஒவ்வோராண்டும் மாணவர்களின் கூடுதல் வருகைப்படி அளிக்கப்படும் பணியிடங்களில், மேற்படி பள்ளிகளில் 6 முதல் 8 வகுப்புகளில் 4 அல்லது அதற்கு மேற்பட்ட பிரிவுகளிருப்பின், தமிழாசிரியர் போன்ற சிறப்பாசிரியர் ஒருவரை நியமனம் செய்துகொள்ளலாம். எனினும், இடைநிலை, இளநிலைப் பணியிடங்கள் ஒதுக்கீட்டில் உபயோகப்படுத்தாமல் மீதமிருக்கும் பட்சத்திலேயே சிறப்பாசிரியர் பணியிடம் அளிக்கப்படுகிறது.

ஆரம்பப் பள்ளிகளில் தமிழ் கற்றுக் கொடுக்க இளநிலை, இடைநிலை ஆசிரியர்கள் பணியாற்றுவது போதுமானது. தமிழாசிரியர் போன்ற சிறப்பாசிரியர்கள் துவக்கப் பள்ளிக்குத் தேவையில்லை. ஆனால் உயர்துவக்கப் பள்ளிகளுக்குத்தான் தேவைப்படுகிறது.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, உயர்நிலைப் பள்ளிகளில் ஆறாவது, ஏழாவது, எட்டாவது வகுப்புகளில் எவ்வளவு செக்ஷன்கள் என்று பாராமல் தமிழ் ஆசிரியர்கள் தமிழ் போதிப்பதற்காக நியமிக்கப்படுவதைப் போல இடை நிலைப் பள்ளிகளிலே நான்கு செக்ஷன்கள் என்பதை நீக்கி, இரண்டு அல்லது மூன்று செக்ஷன்களாக இருந்தாலும், தமிழ் ஆசிரியர்களை நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இப்போதுள்ள விதிமுறைப்படி பல இடங்களுக்கு தமிழ் ஆசிரியர்களை நியமிக்கப்படும் சூழ்நிலை ஏற்படவில்லை. ஆகவே அதைக் குறைப்பதால் இப்போது பலனேதும் ஏற்படாது.

*Rajah Serfoji (Government) College, Thanjavur*

* 74 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that a sum of Rs. 2.21 lakhs was sanctioned to the Rajah Serfoji (Government) College, Thanjavur, under G.O. Ms. No. 1007, dated 19th June 1971 for building a Post-Graduate Block;

(b) whether it has been completed; and

(c) if not, the reasons therefor?

**இராசா சரபோஜி (அரசினர்) கல்லூரி, தஞ்சாவூர்**

**திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்)**: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) பட்ட மேற்படிப்புக் கட்டிடம் ஒன்றைக் கட்டுவதற்காக தஞ்சாவூர், இராசா சரபோஜி (அரசினர்) கல்லூரிக்கு, 19—6—1971-ம் நாளிட்ட, 1007-ம் எண்ணுள்ள அரசாணையின்படி 2.21 இலட்சம் ரூபாய் ஒப்பளிப்பு வழங்கப் பட்டது உண்மையா?

(இ) அக்கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு விட்டதா?

(உ) இல்லையெனில், அதன் காரணங்கள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) இத்திட்டத்தைத் திருத்தியமைப்பதுபற்றிப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

*Annual Grant to Madurai University*

* 75 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the Senate of the Madurai University has, by its resolution requested the Government to increase the annual grant to Rs. 25 lakhs; and

(b) if so, the action taken thereon?



**மதுரை பல்கலைக்கழகத்திற்கு ஆண்டு மானியம்.**

**திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்)**: மாண்புமிகு ல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு )றேன்—

(அ) ஆண்டு மானியத்தை ரூ. 25 லட்சமாக உயர்த்துமாறு மதுரைப் ால்கலைக் கழக ஆட்சிக் குழு தனது தீர்மானத்தின் மூலம் அரசைக் கேட் )ள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: (அ) ஆம்.

(இ) இப்பொருள் பரிசீலனையில் உள்ளது.

*Pension to non-teaching staff in private Colleges*

* 76 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU ). SANTOSHAM): Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether (i) Librarians and (ii) other non-teaching staff n private colleges are being paid any pension on their retirement and

(b) if not, whether there is any proposal to extend pension benefits to them also?

**தனியார் கல்லூரிகளில் ஆசிரியர் அல்லாத பிற பணியாளர்க்கு ஓய்வூதியம்**

**திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்)**: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) தனியார் கல்லூரிகளில் (i) நூலகர்களும், (ii) ஆசிரியர்கள் அல்லாத பிற பணியாளர்களும் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் அவர்களுக்கு ஓய்வூதியம் எதுவும் வழங்கப்படுகின்றதா?

(இ) இல்லையெனில், அவர்களுக்கும் ஓய்வூதிய நலன்களை நீட்டிக்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: (அ) இல்லை.

(இ) இது அரசின் ஆய்வில் உள்ளது.

## *Escaped Prisoners*

* 77 *Q*.—PULAVAR O. ARIVUDAI NAMBI (on behalf of THIRU V. THANGAPANDIAN): Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether the 8 prisoners, who escaped from the Sub-Jail, Sathur, were re-arrested; and

(*b*) if so, the details thereof?

### தப்பியோடிய கைதிகள்

***புலவர் ஓ. அறிவுடைநம்பி (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்) :*** *மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) சாத்தூர் சப்-ஜெயிலில் இருந்து, தப்பியோடிய 8 கைதிகள் மீண்டும் பிடிக்கப்பட்டு விட்டார்களா ?*

*(இ) ஆமெனில், அதன் விபரம் யாது ?*

***மாண்புமிகு திரு. செ. மாதவன் :*** *(அ) & (இ) 3—6—1974 அன்று சாத்தூர் கிளைச் சிறையில் வைக்கப்பட்டிருந்த கைதிகளில் ஒரு தண்டனைக் கைதியும், ஏழு விசாரணைக் கைதிகளும் தப்பியோடினர். அவர்களில் மூன்று பேர் மீண்டும் பிடிக்கப்பட்டுள்ளார்கள். மற்றவர்களைப் பிடிக்கத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.*

***திரு. எல். பலராமன் :*** *தலைவரவர்களே, இதுபோன்று சப்-ஜெயில்களிலெல்லாம் பாதுகாப்பற்ற நிலை இருப்பதை நிவர்த்திப்பதற்கு மாநில அளவில் அரசு ஏதாவது திட்டம் வகுத்திருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.*

***மாண்புமிகு திரு. செ. மாதவன் :*** *தலைவரவர்களே, நாட்டிலுள்ள சப்-ஜெயில்கள் அனைத்தும் போதிய பாதுகாப்புடன்தான் இருக்கின்றன. என்ன பாதுகாப்பு இருந்தாலும் சில வேளைகளில் தப்பிக்கலாம். தப்பித்தால் மறுபடியும் பிடித்துப் போடுவோம்.*

***திரு. அ. பாலசுப்பிரமணியம் :*** *தலைவரவர்களே, தப்பி ஓடிவிட்டார்கள் என்று சொன்னார்கள். அப்படி ஓடவிட்ட அதிகாரிகள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.*

***மாண்புமிகு திரு. செ. மாதவன் :*** *தலைவரவர்களே, அந்த வார்டர் மீதும் சம்பந்தப்பட்ட காவல் துறையினர் மீதும் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு*



## *Maruthuva Community Students admitted in Agricultural College*

* 78 *Q*.—THIRU A. DRAVIDAMANI : (on behalf of THIRU M. MASILAMANI) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the number of students belonging to the Maruthuva Community admitted in the Agricultural College during 1972-73?

### விவசாயக் கல்லூரியில் மருத்துவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்

***திரு. அ. திராவிடமணி (திரு. மு. மாசிலாமணி சார்பில்) :*** *மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*1972-73 ஆம் ஆண்டில், விவசாயக் கல்லூரியில், மருத்துவச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் இடம் பெற்றுள்ளனர் ?*

***மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :*** *3 பேர்கள்.*

***திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :*** *தலைவரவர்களே, மருத்துவக் கல்லூரிகளிலே மருத்துவச் சமுதாயத்தினருக்கு அதிக சீட்டுகளை ஒதுக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.*

***மாண்புமிகு மேலவைத் தலைவர் :*** *உங்களுக்கே சந்தேகம் வருகிறது. சந்தேகத்தைச் சரியாகக் கேளுங்கள். என்ன உங்களுடைய துணைக் கேள்வி ?*

***திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :*** *மருத்துவக் கல்லூரிகளிலே மருத்துவச் சமுதாயத்தினருக்கு அதிகமான ஸீட்டுகளை ஒதுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.*

***மாண்புமிகு மேலவைத் தலைவர் :*** *விவசாயக் கல்லூரிபற்றிப் பேசிக் கொண்டிருக்கும்போது மருத்துவக் கல்லூரிபற்றிக் கேட்டால் ? அமைச்சர் வந்திருக்கின்றாரா ?*

***திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :*** *மருத்துவக் குலத்தோருக்கு மருத்துவக் கல்லூரிதான் முக்கியம்.*

***திரு. எல். பலராமன் :*** *விவசாயக் கல்லூரியில் இடம் பெற்றவர்களிலே, தமிழ் நாட்டிலுள்ள மற்ற சமுதாயத்தினர் எவ்வளவு பேர் என்ற பட்டியல் அமைச்சர் அவர்களிடம் இருந்தால் அந்தக் தகவல்களைத் தெரிவிப்பாரா ?*

***மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :*** *தனிக் கேள்வி தேவை.*

MR. CHAIRMAN : Questions are over.

*[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]*

(பிற்பகல் 4-20)

**2. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1974–75 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை, 1973–74 ஆம் ஆண்டு துணை நிதிநிலை அறிக்கை ஆகியவற்றின் மீது விவாதம்**—தொடர்ச்சி.

**திரு. என். சுந்தரேசத் தேவர்:** மாண்புமிகு தலைவரவர்களே, தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1974-75 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். அரசாங்கம் 1967-க்குப் பிறகு இந்த மின்சாரத் துறையிலே புதிய திட்டங்களைப் போட்டு மின்சாரத்தை உற்பத்தி பண்ணுவதற்குத் தவறியதன் காரணமாக, கடந்த சில ஆண்டுகளாக, தமிழகத்தில் எங்கு பார்த்தாலும் மின்சாரப் பற்றாக்குறையும் தொழில் துறைக்கு மின்சாரம் கொடுக்கப்படாத நிலையும் ஏற்பட்டிருக்கிறதென்பது அரசாங்கப் புள்ளிவிவரங்களிலிருந்து நன்றாகத் தெரிகிறது. இந்த அரசாங்கம் உற்பத்தியில் கவனம் செலுத்தாமல் வினியோகத்திலேயே அதிகக் கவனம் செலுத்தியிருக்கிறது. வினியோகத்தில் ஆடம்பரமான செலவுகளை அதிகமாகச் செய்திருக்கிறார்கள் என்ற குறிப்பினைக் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். உற்பத்தி வேகம் அதிகரித்திருக்கிறதன் காரணமாக சமாளித்திருப்பதாக அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. 1967-க்குப் பிறகு உற்பத்தி வேகம் அதிகமாக இல்லை என்பது புள்ளிவிவரம் மூலமாகத் தெள்ளத் தெளியத் தெரிகிறது. பைகாரா, மேட்டூர், பாபநாசம், போன்ற மின்சார நிலையங்கள் வெள்ளையர் காலத்தில் கட்டப்பட்டவை. அதற்குப் பிறகு 1952-லே மோயார் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. 1958-ல் பெரியார் திட்டம், 1959-ல் குந்தா முதல் திட்டம் உருவாக்கப்பட்டது. 1960-ல் குந்தா இரண்டாவது திட்டம் உருவாக்கப்பட்டது. 1963-ல் குந்தா மூன்றாவது திட்டம் வேலை செய்யத் தொடங்கியது. 1965-ல் குந்தா நான்காவது திட்டம் வேலை செய்யத் தொடங்கியது. 1965-ல் மேட்டூர் டன்னல் ஸ்கீம் உருவாக்கப்பட்டது. 1966-ல் சர்க்கார்பதி 30 மெகாவாட் திட்டம் உருவாக்கப்பட்டது. இவைகள் அல்லாமல் ஆளியாறு, சோலையாறு, கோதையாறு ஒன்று, இரண்டு திட்டங்களெல்லாம் 1968 ஆம் ஆண்டு முடிவு பெறவேண்டுமென்று காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் திட்டங்கள் போடப்பட்டன. இந்த அரசாங்கம் வந்த பிறகு, 1967–74-ல் இவர்கள் ஏற்படுத்திய திட்டம் ஒன்றாவது இருக்கிறதாவென்று கேட்க விரும்புகிறேன். வேண்டுமானால் காங்கிரஸ்காரர்கள் ஆரம்பித்த திட்டங்களின் மூலம் உற்பத்தி இந்த ஆட்சியில் தொடங்கியிருக்கலாமே தவிர, இவர்கள் ஆரம்பித்த திட்டம் எதுவும் கிடையாது. இப்போது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வரக்கூடிய திட்டங்கள்தான் இந்த அரசாங்கத்தால் போடப்பட்டிருக்கின்றன. இந்த அரசாங்கம் ஆரம்பத்தில் கவனம் செலுத்தியிருந்தால், இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



அதுமட்டுமல்லாமல், இந்த மின்சார நிலையங்களைச் சரியான முறையில் கவனித்து பராமரிப்பு செய்யாத காரணத்தினால், பெரிய இழப்பு ஏற்பட்டிருக்கிறதென்பதைப் புள்ளிவிவரம் மூலம் கூற ஆசைப்படுகிறேன். பைகாரா உற்பத்தித் திறன் 70 மெகாவாட் என்றால் 60 சதவிகிதம் தான் உற்பத்தி செய்கிறார்கள்—அதாவது 47 மெகாவாட். மேட்டூர் 40 மெகாவாட் உற்பத்தித் திறன் என்றால் 38 சதவிகிதம் தான்—அதாவது 15 மெகாவாட் தான் உற்பத்தி செய்கிறார்கள். பாபநாசம் 28 மெகாவாட் உற்பத்தித் திறன் என்றால், 45 சதவிகிதம் தான் உற்பத்தி செய்கிறார்கள். மோயாறு 36 மெகாவாட் உற்பத்தித் திறன் என்றால், 56 சதவிகிதம் தான் உற்பத்தி செய்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, ஒரு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். மேட்டூரைப் பொறுத்தவரை 40 மெகாவாட் உற்பத்தித் திறன் என்று குறிப்பில் தவறாகப் போடப்பட்டிருக்கிறது. அதன் உற்பத்தித் திறன் 240 மெகாவாட். இருந்தாலும், நீர் மின்சாரத்தைப் பொறுத்த அளவில், எத்தனை மெகாவாட் உற்பத்தித் திறன் இருக்கிறதோ, அவ்வளவையும் உற்பத்தி செய்ய முடியும் என்று சொல்ல முடியாது. இருக்கிற தண்ணீருக்குத் தகுந்த மாதிரிதான் உற்பத்தி செய்ய முடியும். மேட்டூரில் 240 மெகாவாட் இன்ஸ்டால்ட் கபாசிடி என்றாலும், தண்ணீர் உள்ள அளவிற்குத்தான் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். நீர் மின்சாரம் தண்ணீர் இருக்கிறபோது தான் உற்பத்தி செய்ய முடியும். தண்ணீர் இல்லாதபோது மெஷின்கள் ஐடிலாகத் தான் இருக்கும். ஆகவே இந்தக் கணக்கை வைத்துக்கொண்டு பேசினால், வேறு அர்த்தம் கொடுக்கும்.

**திரு. என். சுந்தரேசத் தேவர்:** நான் பருவ மழை தவறியதன் காரணமாக நீர் மின்சார நிலையங்களில் உற்பத்தி ஓரளவு குறைகிறது என்பதை ஒத்துக் கொள்கிறேன். இல்லையென்று சொல்லவில்லை. சில திட்டங்களைப் பொறுத்த வரை, 30 மெகாவாட் உற்பத்தித் திறன் என்றால், 23 சதவீதம் தான் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் மீண்டும் தவறுதலாகப் பேசக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். நீர் மின்சார உற்பத்தியைப் பொறுத்து மெஷின்கள் நல்ல நிலைமையில் உள்ளன. தண்ணீர் இருக்கிறவரை மின்சாரத்தை எடுத்து விடலாம். தண்ணீர் இருந்த அளவிற்கு உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. உற்பத்தி குறைவாக இருக்கிறதென்றால், இயந்திரங்கள் வேலை செய்யவில்லை என்று பொருள் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1974 ஆகஸ்ட் 22

**திரு. என். சுந்தரேசத் தேவர்:** தலைவரவர்களே, அனல் மின்சார நிலையத்தை எடுத்துக்கொண்டாலும், இதே நிலைமை. என்ன காரணம் என்றால் நிலக்கரி பற்றாக்குறை என்று சொல்வார்கள். பேசின் பிரிட்ஜ் நிலையத்தில் 117 மெகாவாட் உற்பத்தி செய்யக்கூடும் என்றால், 49 மெகாவாட் தான் போன ஆண்டு உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. எண்ணூரில் 120 மெகாவாட் உற்பத்தித் திறன் என்றால், 14 மெகாவாட் தான் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. நெய்வேலியில் 600 மெகாவாட் உற்பத்தித் திறன் என்றால், 168 மெகாவாட் தான் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. அது நம்முடைய நிர்வாகத்தின் கீழ் இல்லாவிட்டாலும் கூட, அதில் 168 மெகாவாட் தான் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. இப்படியாக உற்பத்தியாகும் மின்சாரம் உற்பத்தித் திறனை விட மிக மிகக் குறைவான அளவில் இருக்கிறதற்குக் காரணம், பருவ மழை என்பதை ஓரளவிற்கு ஏற்றுக்கொண்டாலும் கூட, அனல் மின் நிலையங்களைப் பொறுத்தவரை, அதிகமான உற்பத்திக் குறைவைப் பார்க்கும்போது, பருவ மழை காரணமாக உற்பத்திக் குறைவு என்று சொல்வது சரியாகாது என்று கூறிக்கொள்கிறேன். உற்பத்திக் குறைவைப் பொறுத்தவரை, அது மெஷின்களில் உள்ள கோளாறாக இருந்தாலும் சரி, நிர்வாகத்தில் உள்ள கோளாறாக இருந்தாலும் சரி, சரிப்படுத்துவதற்கான நிலையை ஏற்படுத்த வேண்டும். இதற்காக ஒரு குழு நியமித்தாலும் கூட நல்லது என்று கூறிக் கொள்வேன். இவ்வளவு மோசமான பர்செண்டேஜ், வித்தியாசம் இருக்கிற காரணத்தினால், இதைத் தெளிவுபடுத்துவதற்கு ஒரு குழு அமைத்து, என்னென்ன காரணத்தினால் உற்பத்தி குறைகிறது என்று அறிவதற்கு வாய்ப்பு அளித்தால் உதவிகரமாக இருக்குமென்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 1967-க்குப் பிறகு இந்தத் திட்டங்களெல்லாம், போடப் பட்ட திட்டங்களெல்லாம் சரியான முறையில் செயல்படுத்தப்பட்டிருக்குமானால், மின்சாரத்தில் கஷ்டமான நிலைமை ஏற்பட்டிருக்க முடியாது. அதில் இந்த அமைச்சரவை தவறியது என்று குறிப்பிட ஆசைப்படுகிறேன். மொத்தம் 2,254 மெகாவாட் மின்சார உற்பத்தித் திறன் நம் மாநிலத்திலுள்ள மின்சார நிலையங்களில் இருந்தபோதிலும், 1,287 மெகாவாட் தான் உற்பத்தி செய்யப் பட்டிருக்கிறது. எண்பது சதவீத உற்பத்தியாவது செய்திருக்கலாம். அந்த நிலை கூட கிடையாது. வாங்கிய மின்சாரத்தைப்பற்றி கணக்குக் கொடுத்திருக் கிறார்கள். மின்சாரம் எந்த மாநிலத்திலிருந்து வாங்கினார்கள், பண்ட மாற்று முறையில் எந்தப் பண்டம் கொடுத்தார்கள், விலை என்ன என்ற விவரங்கள் அறிக்கையில் கிடையாது. இந்த அறிக்கையைப் பொறுத்த மட்டிலும், இது தேய்ந்து கொண்டே வருகிறது. ஒரு மின்சார உற்பத்தி நிலையம் இருக்கிற





தென்றால், அதன் கபாசிடி எவ்வளவு, உற்பத்தித் திறன் எவ்வளவு, எவ்வளவு உற்பத்தி செய்யப்படுகிறது என்ற விவரங்களைத் தெளிவாகத் தரலாம். அப்படிப்பட்ட விவரங்கள் இந்தப் புத்தகத்தில் காணோம். பினான்ஷியல் ஸ்டேட்மெண்டும், அமைச்சரவர்களின் அறிக்கையும் தான் இருக்கிறதே தவிர, வேறு ஒன்றுமே காணோம். இது விவரங்களைப் புரிந்துகொள்ள வசதியாக இல்லை. திரு. ராஜகோபால் அவர்கள், சிலவற்றில் மெகாவாட் என்றும் சிலவற்றில் மில்லியன் யூனிட் கணக்கிலும் போட்டு, ஒரு வித்தியாசமான கணக்கு இருப்பதைச் சுட்டிக் காட்டினார்கள். நான் அதையும் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். வெளி மாநிலங்களிலே எவ்வளவு மின்சாரம் வாங்கப்பட்டது, அதற்காக பண்ட மாற்று முறையில் என்ன பண்டங்கள் கொடுக்கப்பட்டன, அளவு என்ன, விலை என்ன என்பவைகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

அடுத்தபடியாக, ஐந்தாவது திட்டத்தில் 3,020 மெகாவாட் உற்பத்தித் திறனை எட்ட வேண்டுமென்று அறிக்கையில் கொடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றி விவரமாகக் கொடுத்திருக்கிறார்கள். துரிதமாக வேலை செய்தா லொழிய இந்த மின்சாரத் தட்டுப்பாடு நிவர்த்தி என்பது முடியாத காரியமாக இருக்குமென்பதில் சந்தேகமில்லை. ஆகவே இந்தப் புதிய திட்டங்களில் கவனம் செலுத்த வேண்டும். நாங்கள் குறை கூறுவதாக எண்ணக் கூடாது. மின்சார வாரிய ஊழியர்கள் நியமனங்களைப் பார்க்கிறபோது, புதிய திட்டங்களைவிட இருக்கிற நிர்வாகத்திற்கு அதிகமாகச் செலவாகிறது. இந்த நிலையை மாற்றி புதிய திட்டங்களுக்கு அதிகமான ஊக்கத்தைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-30)

அனல் மின்சார நிலையங்களுக்கு நிலக்கரி தேவையாக இருக்கிறது. நிலக்கரி போக்குவரத்தைப் பொறுத்தவரை, கஷ்டமான நிலை இருக்கிறது. இரயில் மூலமாக வருவதில் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. நாம் பூம்புகார் கப்பல் கழகத்தை ஏற்படுத்தியிருக்கிறோம். அனல் மின் நிலையங்களை துறைமுகப் பகுதிகளில் ஏற்படுத்தினால், இந்தக் கஷ்டங்கள் நிவர்த்தியாகக் கூடும்; கப்பல் மூலமாக நிலக்கரி கொண்டுவருவதற்கு உதவிகரமாக இருக்கும். செலவைப் பொறுத்தவரை அதிகமாகப் போய்க்கொண்டிருக்கிறது. சென்ற ஆண்டு 10 கோடி ரூபாய் நஷ்டம். இந்த ஆண்டு அது 18 கோடி ரூபாயாக உயர்ந் திருக்கிறது. இவ்வளவு நஷ்டம் ஏன் என்று பார்க்க வேண்டும். இதையெல்லாம் அரசாங்கம் தான் ஏற்க வேண்டியதாயிருக்கிறது. மத்திய அரசாங்கத்தின் பட்ஜெட்டைப் பார்த்தால் ரயில்வேயில் நஷ்டம், நம் அரசாங்கத்தில் மின்சார

வாரியத்தில் நஷ்டம் என்ற நிலைதான் இருக்கிறது. இதற்காக ரயில் பிரயாணம் செய்யாமல் இருக்க முடியாது, மின்சாரத்தை உபயோகிக்காமல் இருக்க முடியாது. இதற்குக் காரணம் நிர்வாகத்திலுள்ள குறைபாடுதான். அதனால் தான் இவ்வளவு பெரிய நஷ்டம் வருகிறது. மின்சார வாரியத்தில் எங்கு பார்த்தாலும் மோசமான நிர்வாகம் இருக்கிறது; வேலை செய்பவர்கள் சரியாக வேலை செய்வதில்லை; அதனால் ஏகப்பட்ட நஷ்டம் வருகிறது. பல்ப், மற்ற பொருட்கள் எல்லாம் திருடு போகின்றன. செப்புக் கம்பி திருடு போகிறது. சரியாக வேலை செய்யாமல் ஊதியம் பெறுகிறார்கள். இத்தகைய காரணங்களால்தான் 18 கோடி ரூபாய் வரையில் நஷ்டம் வருகிறது. நிர்வாகம் செம்மையாக இருந்தால், இவ்வளவு நஷ்டம் வருவதற்குக் காரணமில்லை. இதற்காக, மத்திய சர்க்கார் ரயில் கட்டணத்தை உயர்த்தியதுபோல், மின்சார அமைச்சர் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தக்கூடாது. ஏற்கெனவே மின்சாரக் கட்டணம் உச்ச கட்டத்தில் இருக்கிறது என்று போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகவில்லை என்று சமீபத்தில் போராட்டம் நடந்தது; மேலும் அமைச்சர் கட்டணத்தை உயர்த்த விரும்பினால், அதை மக்களின் துரதிருஷ்டம் என்று தான் கூற வேண்டும். ஆகவே, நிர்வாகத்தைச் சரியாக நடத்தி, சிறப்பாக நடத்தி, நல்ல நிர்வாகம் நடத்தி, இந்த நஷ்டத்தைச் சரிக்கட்டுவதோடு மின்சாரக் கட்டண உயர்வு ஏற்படாமலும் தடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு, அத்தகைய கட்டண உயர்வு யோசனையை ஏற்றுக்கொள்ளாமல் இருக்கும்படியும் கேட்டுக்கொள்கிறேன்.

மீட்டர்களில் பெரிய மோசடி ஏற்படுவதாக நம்முடைய நண்பர் திரு. கணபதி சொன்னார். பல உறுப்பினர்களும் குறிப்பிட்டார்கள். மீட்டரில் காந்தத்தை வைத்து மீட்டர் ஓடாமல் செய்து விடுகிறதாகச் சொல்லு கிறார்கள். பல இடங்களிலே மின்சார வாரிய ஊழியர்களே 'டிஸ்கனெக்ட்' பண்ணி பெரிய ஃபாக்டரிகளும், மில்களும் ஓடிக்கொண்டிருப்பதாகச் சொல்லு கிறார்கள். இப்படிப் பலவிதமான குற்றங்கள் மின்சார வாரியத்தில் நடை பெறுவதாக வதந்திகள் இருக்கின்றன. உண்மையில் அப்படி இருக்கிறதா என்றால், இருக்கிறது. இதைக் கவனத்தில் கொண்டு நிர்வாகத்தை நல்ல விதமாகச் செப்பனிட்டு, மீட்டரில் நஷ்டம் ஏற்படாமல் தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், தெருக்களுக்கு அதிகமாக மின்சாரம் கொடுக்கிறோம் என்று சொன்னாலும், அதில் பற்றாக்குறை இருக்கிறது. மின்சாரம் இருந்தால் தான், வீட்டு உபயோகத்திற்கும், விவசாய உபயோகத்திற்கும், தொழில்



உற்பத்திக்கும் சாதகமாக இருக்கும். விவசாயத்திற்கு மின்சாரம் இன்றியமை யாததாக இருக்கிறது. ஆகவே அதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் வருத்தப்படக்கூடாது. முக்கியமாக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கிறவர்கள், அமைச்சர்களாக இருந்தாலும் சரி, உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, அவர்களுடைய வீட்டுக் கல்யாணத்திலோ, பொதுக்கூட்டங்களிலோ மின்சாரம் உபயோகப் படுத்துவதைப் பார்த்தால், தமிழகத்தில் மின்சார வெட்டு இருக்கிறதா என்று சந்தேகப்படுகின்ற அளவுக்கு 'ஜெகஜ்ஜோதியாக' இருக்கிறது. ஆகவே, அமைச்சர்களோ, உறுப்பினர்களோ, மற்றவர்களோ ஆடம்பரக் காரியங்களில் சற்று நிதானமாக மின்சாரத்தை உபயோகிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். விழாக்களிலே உபயோகிக்கின்ற மின்சாரத்தால் அதிகமான செலவு வாராது என்று கூறலாம். அதிகமான செலவு வருகிறதா இல்லையா என்பதல்ல, அதன் மூலம் பொது மக்களுக்கு ஒரு எரிச்சல், கட்டுப்பாடற்ற தன்மை ஏற்படுகிறது; இவைகளையெல்லாம், அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று, தலைவர் அவர்களே, உங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

முக்கியமாக, பஞ்சாயத்துத் தெரு விளக்குகளுக்கு மீட்டர் வைக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களிடம் இந்தச் சபையில் 1970-ல் சொன்னேன். அடுத்த ஆண்டு செய்கிறேன் என்று சொன்னார்கள். 1971-வது ஆண்டில் குறிப்பிட்டேன், அடுத்த ஆண்டில் செய்கிறேன் என்று சொன்னார்கள். 1972-ல் கேட்டேன், அடுத்த ஆண்டில் செய்கிறேன் என்று சொன்னார்கள். 1973-ஆம் ஆண்டிலும் குறிப்பிட்டேன். அடுத்த ஆண்டில் செய்கிறேன் என்று சொன்னார்கள். இப்போது 1974-ஆம் ஆண்டிலும் குறிப்பிடுகிறேன். நண்பர் திரு. பல்ராமன் பேசும்போது, மீட்டர் பொருத்த வேண்டுமென்று சொல்லு கிறீர்களா, அப்படியானால் நான் கொடுத்து விடுகிறேன் என்று சொன்னார்கள். இப்படி அமைச்சர் வருஷா வருஷம் காலதாமதம் செய்துகொண்டு போவது சரியல்ல. மீட்டர்கள் இல்லாத நிலையில், அரசாங்கத்திற்கு வருடந்தோறும் பஞ்சாயத்துக்களிலிருந்து கோடிக்கணக்கான ரூபாய் தெரு விளக்குகளுக்காகக் கொடுக்கப்படுகிறது. இதிலே மோசடி நடக்கிறது என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறேன். பஞ்சாயத்துக்களில் சரியாக லைட் எரிவதில்லை. எரியாத லைட்டுக்குக் காசு வாங்குவது சரியல்ல. ஒரு பஞ்சாயத்து யூனியனில் சாதாரணமாக 10 லைட், 20 லைட் தான் எரியும். அதற்கு 1,000, 500 ரூபாய் என்று பில் வருகிறது. முதல் மாதத்தில் 100 ரூபாய் என்று பில் வந்தால், லைட் எரியாமல் இருக்கும்போது குறைவாக பில் வருவதில்லை. இதுபற்றி டி.டி.சி.-யில் ஒரு முறையைக் கையாளத் தீர்மானித்தோம். இந்தப் பஞ்சாயத்தில் இவ்வளவு லைட் எரியாமல் இருக்கிறது என்று பஞ்சாயத்து

யூனியன் கமிஷனர், கிராம சேவக் ஆகியவர்களை வைத்து உடனடியாக
சூப்பிரண்டிங் இஞ்சினியர், டிவிஷனல் இஞ்சினியர் ஆகியோருக்கு எழுதுவது
என்று ஏற்பாடு செய்தோம். முதல் மாதம் 250, 300, 400 என்று பில்
அனுப்பினால், அடுத்தமாதம், பாதி லைட் எரியாமல் இருந்தாலும், அதே
தொகைக்குத்தான் பில் அனுப்புகிறார்கள். அது சரியல்ல என்று
'கரெஸ்பாண்டென்ஸ்' நடத்திக்கொண்டிருக்கிறோம். இந்தக் குறையைப்
போக்க வேண்டுமென்று தான் மீட்டர் வைக்க வேண்டுமென்று சொல்லுகிறோம்.
அதிலே என்ன தவறு இருக்க முடியும்? ஒவ்வொரு ரைஸ் மில்லுக்கும்
இவ்வளவுதான் மின்சார ஒதுக்கீடு என்று இருக்கிறது. ஆனால் லைனில் வேலை
செய்கிறவர்கள் மீட்டரைக் கழட்டி விடுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள்.
அறுபது சதவிகித 'கட்' இருக்கும்போது, அந்த அளவுக்கு மில்கள் ஓடும்
நாள் குறைய வேண்டும். அப்படியல்ல, முன்பு ஓடிய நாட்களின் அளவுக்கு
ஓடுகிறது. அவ்வாறு ஓட்டுவதற்கு பல விதமான காரியங்களைப் பெற்றுக்
கொண்டு, மீட்டரை 'டிஸ்கனெக்ட்' பண்ணிவிட்டு ஓட்டவிடுகிறார்கள்.
இன்னும் மற்ற விதங்களில் தவறுகள் செய்கிறார்கள். எல்லாவற்றையும்
பஞ்சாயத்துக்களின் தலையில் வைத்து விடுகிறார்கள். அது மட்டுமல்ல,
மீட்டர்களிலே பெரிய மோசடி எல்லாம் நடக்கிறது. சில இடங்களில் மீட்டரை
ஓடாமல் செய்து விடுகிறார்கள். ஒரு சப்-ஸ்டேஷனுக்கு இவ்வளவு யூனிட்
மின்சாரம் ஒதுக்கப்படுகிறது என்றால், அதில் ஏற்படும் தவறைச் சரிக்கட்டு
வதற்காக, 'லைன் லாஸ்' என்று சொல்லி விடுகிறார்கள்; அல்லது 70, 80 யூனிட்
எரிந்தது என்றால், 120 யூனிட் என்று எழுதி விடுகிறார்கள். மீட்டர் நம்பர்
போடுவதில்லை. சென்ற மாதம் இந்த நம்பரில் முடிந்தது, இந்த மாதம் இந்த
நம்பரில் முடிந்தது என்று நம்பர் போட்டு, அதற்கான தொகையைப்
போடுவதில்லை. மொத்தமாக இத்தனை யூனிட் என்று போட்டு, இவ்வளவு
தொகை என்று பில் போட்டு விடுகிறார்கள். அதனால் ஒரு மாதத்தில் எத்தனை
யூனிட் மின்சாரம் எரிந்திருக்கிறது என்று கண்டுபிடிக்க முடியவில்லை.
பொதுவாக, விவசாயிகளும் நடுத்தர மக்களும் தாங்கள் எவ்வளவு யூனிட்
மின்சாரம் செலவழித்தார்களோ அதற்கு மேலேயே பணம் செலுத்துகின்ற
நிலை ஏற்படுகிறது. இந்த நிலைமைகளை எல்லாம் அமைச்சர் அவர்கள் கவனிக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக மின்சார வாரியத்தைப்
பார்க்கும்போது, அதில் நிறையத் தவறுகள் ஏற்பட்டுக்கொண்டே போகின்றன.
இதை ஒரு முடிவுக்குக் கொண்டுவர முடியாத நிலை இருக்கிறது. இது
மனதிற்குக் கஷ்டமாக இருக்கிறது. ஏதோ எதிர்க்க வேண்டுமென்ற நிலையில்
குறை சொல்லுவதாக நினைத்துக்கொண்டு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லக்
கூடாது. இவைகளையெல்லாம் போக்க வேண்டும். இந்தக் குறைகள் எல்லாம்—





மீட்டர் ஓடவிடாமல் செய்வது, அதிகமாகப் பணம் வசூல் செய்வது, தெரு விளக்குகள் எரியாமலேயே பணம் வசூலிப்பது—புதிய குறைகள் அல்ல. இவைகளுக்கெல்லாம் ஒரு முடிவு கட்ட வேண்டாமா? அவற்றுக்கெல்லாம் ஒரு முடிவு கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-40)

சாதாரணமாக ஒரு வேலையை முன்னிட்டு மின்சார வாரியத்திற்குப் போனால் அங்கே கண்ணியம் இருப்பதில்லை. தனியார் நிறுவனங்கள் நடக்கிற போது கொடுக்கப்பட்ட ஒரு கௌரவம், அவர்களிடையே காணப்பட்ட சுறுசுறுப்பு இப்போது மின்சார வாரியத்தில் கிடையாது. விளக்கு எரியவில்லை என்றால், 15 நாட்கள், ஒரு மாதம் கழித்துத்தான் சரி செய்கிறார்கள். மின்சார வாரியத்தில் நிறைய உத்தியோகஸ்தர்களை நியமனம் செய்கிறோம். ஜூனியர் இன்ஜினியர்கள், அசிஸ்டன்ட் இன்ஜினியர்கள் போன்றவர்களை நிறைய நியமனம் செய்கிறோம். லைனில் வேலை செய்கிறவர்களுக்குக் கணக்கு வழக்கு இல்லை. எங்கு பார்த்தாலும் பணியாளர்கள் இருக்கிறார்கள். மின்சார வாரியத்திலே வேலை செய்கிறவர்கள் உருப்படியாக வேலை செய்கிறார்களா என்று பார்த்தால், எங்குமில்லை. இந்த நிலைமையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் அவர்கள் அசிரத்தையுடன் பேசுகிறார்கள். இணைப்புக் கொடுப்பதில் கஷ்டம் ஏற்படுகிறது. முக்கியமாக விவசாயத்திற்கு இணைப்புக் கொடுக்க வேண்டும். இன்றைக்கு நாட்டிலே உணவுத் தட்டுப்பாடு இருக்கிறது. விவசாய பம்ப்செட்டுகளுக்கு இணைப்பு வேண்டுமென்று மின்சார வாரியத்திடம் கேட்டால், கொடுப்பது கிடையாது. அந்த இணைப்பைப் போராடிப் பெற வேண்டியிருக்கிறது. எட்டு வருஷங்களுக்கு முன்னால் லாண்ட் மார்ட்கேஜ் பாங்கில் கடன் வாங்கி பம்ப்செட் போட்ட விவசாயிகளுக்கு இன்னும் மின்சார இணைப்பு கிடைக்காமல் இருக்கிறது. மோட்டார்களுக்கு இணைப்புக் கொடுப்பது லாபகரமாக இல்லையென்று சொல்லுகிறார்கள். டொமஸ்டிக் கனெக்ஷன் சுலபமாக வாங்கிவிடுகிறார்கள். அப்படி வாங்குவதற்கு விவசாயிகளுக்குத் தெரியவில்லை. அவர்கள் லைன் இழுப்பதை மட்டும் கணக்கிட்டு, நஷ்டம் வருகிறதென்று சொல்லுகிறார்கள். கிராமங்களிலே விவசாயத்திற்கும், தொழிலுக்கும் முதலிடம் கொடுத்து விட்டு, அதற்குப் பிறகுதான் டொமஸ்டிக் கனெக்ஷன் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிராமங்களுக்கு மீட்டர் பொருத்துவதாக அமைச்சரவர்கள் போன வருஷம் வாக்குறுதி கொடுத்தார்கள். போன ஆண்டு பேசிவிட்டு, மீண்டும் இந்த ஆண்டு பேசுகிறேன். அதை அவசியம் நிவர்த்தி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

[1974 ஆகஸ்ட் 22

**திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம்:** மேலவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1974-75 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்தும், 1973-74 ஆம் ஆண்டு துணை நிதிநிலை அறிக்கை குறித்தும் என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். குறிப்பாக கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட மின்சார வெட்டை மிகத் திறமையான முறையில் சமாளித்த மின் வாரியத்திற்கு என்னுடைய பாராட்டுதல்களை முதன்முதலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்தில் மின் இணைப்பு கொடுப்பதுபற்றிக்கூட எனக்கு முன்பு பேசிய இந்த மன்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் எடுத்துக்கூறினார்கள். இந்தியாவிலே மூன்றில் ஒரு பங்கு மின் விசை ஏற்றங்களுக்கு தமிழகத்திலேதான் இணைப்பு கொடுத்திருக்கிறார்கள். 1967-ல் 2½ லட்சம் பம்ப்செட்டுகளாக இருந்தது இன்றையதினம் 7 லட்சம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு மிகத் துரிதமான முறையிலே மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. தமிழகத்திலே உள்ள 62,487 கிராமங்களில் 61,138 கிராமங்களுக்கு மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 98 சதவிகிதம் கிராமங்களுக்கு தெரு விளக்குகள் கொடுக்கக்கூடிய அளவுக்கு மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. 24,799 அரிசனக் குடியிருப்புகளில் 23,800 அரிசனக் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இன்னும் ஆயிரம் அல்லது 500 என்று சொல்லக்கூடிய அளவிலேதான் கிராமங்கள் மின் இணைப்பு கொடுக்கப்படாமல் உள்ளன. இந்த அளவுக்கு கடந்த 7 ஆண்டுகளிலே மிகத் துரிதமாக மின் இணைப்புகளைக் கொடுத்த தமிழக மின்சார வாரியத்தை மனதாரப் பாராட்டுகிறேன்.

அடுத்து, கடந்த 7 ஆண்டுகளில் புதிய திட்டங்கள் எதுவும் நிறைவேற வில்லை என்று எனக்கு முன்பு பேசிய திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் கூறினார்கள். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட திட்டங்கள்தான் நிறைவேறியிருக்கின்றன என்றும், அதற்குப் பின்னால் எந்தத் திட்டமும் நிறைவேறவில்லை என்றும் சொன்னார்கள். இங்குள்ள மின்சார உற்பத்தித் திட்டமாக இருந்தாலும், அணைக்கட்டுத் திட்டமாக இருந்தாலும், பிரிட்டிஷார் ஆட்சிக் காலத்தில் அவர்கள் சர்வே செய்து, இந்தந்த இடத்தில் செய்யலா மென்று திட்டங்களைப் போட்டார்கள். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் புதிதாக எந்தத் திட்டத்தையும் தமிழகத்தில் போடவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





அடுத்து, சேதாரங்கள் ஏற்படுவதைக் கவனிப்பதில் என்ன காரணத்தால் மின்சார வாரியம் பின்வாங்கி இருக்கிறதென்பதைப் புரிந்துகொள்ள முடிய வில்லை. ஒவ்வொரு ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும் லைன் லாஸ் தவிர்க்கப்பட வேண்டுமென்பதற்காக பல யோசனைகளை உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியும், இன்றைய வரையில் அந்த லைன் லாசைக் குறைப்பதிலே போதிய அளவுக்கு முயற்சிகள் நடைபெறவில்லை. மின்சாரத் திருட்டுகள் கிராமப் பகுதிகளில் விவசாயத்திற்கும், நகரப் பகுதிகளில் தொழிற்சாலை களுக்கும் ஏராளமான அளவில் நடந்துகொண்டிருக்கிறது. இதை எந்த அளவிலாவது கவனித்து, உடனடியாக லைன் லாசைத் தடுத்து நிறுத்துவதற்கு நல்ல முயற்சிகளைச் செய்தால், கோடிக்கணக்கான ரூபாய்களை ஒவ்வொரு ஆண்டும் நஷ்டமாகக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லாமல் போகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், ஒவ்வொரு டிரான்ஸ் பார்மருக்கும் வரக்கூடிய மின்சாரம் எவ்வளவு, அந்த டிரான்ஸ்பார்மர் மூலம் விநியோகிக்கக்கூடியது எவ்வளவு என்ற கணக்கை ஒவ்வொரு டிரான்ஸ்பார்மர் அல்லது சப்-ஸ்டேஷனில் முழுமையாக எடுக்க வேண்டும். அதற்காகச் சிறிது செலவானாலும் பரவாயில்லை. அதற்கான ஏற்பாடுகளை மின்சார வாரியம் உடனடியாகச் செய்தாலொழிய, லைன் லாசைத் தவிர்க்க முடியாது. இதற்கு இன்னொரு காரணம் லைன்மேன். அவர்கள் யாரையும் அவ்வளவு சுலபமாக மாற்றிவிட முடியாது. இன்றைக்கு, தமிழக மின்சார வாரியத்தில் உள்ள நிலைமை எந்த நாட்டிலும் இல்லாத நிலைமையாக இருக்கிறது. அங்கே உள்ள தொழிற் சங்கத்தைக் கேட்காமல் எந்த குமாஸ்தாவையும், எந்த பியூனையும், எந்த இன்ஜினியரையும் மாற்ற முடியாதென்ற துர்ப்பாக்கியமான நிலைமை தமிழ் நாடு மின்சார வாரியத்தில் ஏற்பட்டுவிட்டது. இதைத் தவிர்ப்பதற்கு மின்சார வாரியம் உடனடியாக முயற்சி செய்ய வேண்டும். உலகத்திலுள்ள எந்த நாட்டிலும் தொழிற் சங்கத்தைக் கேட்டுக்கொண்டு, அங்கேயுள்ள சிப்பந்திகளை மாற்ற வேண்டுமென்ற நிலையில்லை. நம்முடைய மின்சார வாரியத்திலே அப்படிப்பட்ட நிலை இருக்கிறது. இதனால், தொழிலாளர்கள் தங்களை யாரும் கட்டுப்படுத்த முடியாதென்ற கட்டுப்பாடற்ற நிலைமையில் நடந்து வருகிறார்கள். மவுன்ட் ரோடிலுள்ள மின் வாரியத்தின் அலுவலகத் திற்குப் போனால், அது மின் வாரியமா அல்லது தொழிற் சங்க அலுவலகமா என்று புரியவில்லை. எப்போது பார்த்தாலும் ஏதாவது போராட்டம், உண்ணாவிரதம் என்று பல அரசியல் கட்சிகளின் கொடிகளைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார்கள். உள்ளபடியே அங்கேயுள்ள தொழிலாளர்கள் எந்தவிதக் கட்டுப்பாட்டுக்கும் அடங்குவதில்லை. மேலேயுள்ள அதிகாரிகள் அவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவர்கள்மேல் ஒழுங்கு நடவடிக்கை

[திரு. எஸ். ஏ. ராஜுமாணிக்கம்] [1974 ஆகஸ்ட் 22

எடுக்க முடியவில்லை. பல எஸ்.ஈ.-க்களை பல இடங்களிலே கேரோ செய்து விட்டார்கள். அப்படிச் செய்தால், மேலேயுள்ள அதிகாரிகள் எப்படியாவது நடக்கட்டுமென்று பேசாமல் விட்டுவிடுகிறார்கள். சீப்-இன்ஜினியர் இந்தப் பிரச்னையிலே நடவடிக்கை எடுக்கிறார்கள் என்றால், உடனடியாகக் கேரோ செய்வது என்ற துர்ப்பாக்கியமான நிலைமை இருக்கிறது.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

அவர்கள் பில்களையும் ஒழுங்காகப் போடுவதில்லை. பணம் வசூலிப்பதும் ஒழுங்காக இல்லை. இவையும் சென்னையில், 3 மாதங்கள், 4 மாதங்கள் பில்கள் வராத நிலைமை இருக்கிறது. அவர்கள் ஓவர்டைம் வாங்குகிறார்கள். ஓவர்டைம் அலவன்ஸ் வாங்குவதையும்கூட அவர்கள் ஒழுங்காக வேலை செய்வதில்லை. இங்கேயுள்ள தொழிலாளர்களைக் கட்டுப்படுத்துவதற்கு ஏதாவது ஒரு முறையை இந்த அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ள வேண்டும். இல்லையென்றால் அந்த நிர்வாகம் இன்னும் ஒன்றிரண்டு ஆண்டுகளில் சீர்குலைந்த நிர்வாகமாக மாறிவிடும். அரசு உடனடியாக இதில் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஒரு செக்ஷனை விட்டு இன்னொரு செக்ஷனுக்கு நிர்வாக வசதி குறித்து மாற்ற முடியவில்லை. மேலேயுள்ள சீப்-இன்ஜினியரைக் கேட்டால், "நாங்கள் என்ன செய்ய முடியும்; தொழிற் சங்கத்தினர் தகராறு செய்கிறார்கள்" என்று சொல்கிறார். அவர்களைக் குறை சொல்லுவதில் பிரயோசனமில்லை. அந்த அளவுக்கு தொழிற்சங்கத்தின் அட்டகாசம் அதிகமாகப் போய்விட்டது. நான் தொழிலாளர்களுக்கு விரோதமாகப் பேசுகிறேன் என்று கருதக் கூடாது. எப்போது பார்த்தாலும், அங்கே இதே வேலையாக இருக்கிறது. அரசாங்க அலுவலர்கள்கூட தங்களுக்கு ஊதிய உயர்வு போன்றவை வேண்டும் என்பதற்காக கூட்டம் கூடிச் சொல்கிறார்கள். சதா, இந்த வேலையை அவர்கள் செய்துகொண்டிருப்பதில்லை. தயவு செய்து கொஞ்சம் கண்டிப்பாக உள்ளவர்களைச் சேர்மனாகப் போட்டு, கண்டிப்பாக நடவடிக்கை எடுத்தால் நன்றாக இருக்கும். 27 லட்சம் பேர்கள் தமிழகத்தில் மின்சாரத்தை உபயோகிக்கிறார்கள். இந்த 27 லட்சம் பேர்களுடைய மின்சார இணைப்புகளுக்கான சகல கணக்குகளும் மேற்பார்வைக்கு சென்னைக்கு வந்து, அங்கிருந்து கணக்குகள் ஒழுங்கான முறையிலே செல்லக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. எனவே இந்த உற்பத்தி, விநியோகம் இரண்டையும் நம்முடைய அரசு தனித்தனியாகப் பிரித்து விட்டால்தான், இந்தக் காரியங்களைச் சுலபமாகச் செய்வதற்கு வசதியாக இருக்கும். கேரளத்திலிருந்து எவ்வளவு மின்சாரம் வருகிறது என்றும், மைசூரிலிருந்து எவ்வளவு மின்சாரம் வருகிறது என்றும்



1974 ஆகஸ்ட் 22] [திரு. எஸ். ஏ. ராஜுமாணிக்கம்]

நம்மிடத்தில் கணக்கு இருக்கின்றது. அப்படி வருகின்ற மின்சாரம் முழுமையாக விநியோகிக்கப்பட்டிருக்கிறதா அல்லது குறைவாகத் தான் விநியோகிக்கப்படுகிறதா என்ற கணக்கே இல்லை. இந்த உற்பத்திப் பிரிவைத் தனியாக ஏற்படுத்தி, ஒவ்வொரு சிஸ்டத்திற்கும் தனி விநியோகமாக வைக்க வேண்டும். தமிழ் நாடு பூராவும் ஒரே 'கிரிட்' என்றாலும் ஒவ்வொரு சிஸ்டத்திற்கும் மின்சாரம் எவ்வளவு யூனிட் அனுப்பப்பட்டது, உபயோகப்படுத்தப் பட்டதா இல்லையா என்ற கணக்கு இருக்க வேண்டும். போக்குவரத்து இலாகாவிலே தனித்தனியாக அமைப்புகள் இருப்பது போல இதிலும் தனித் தனியாக ஏற்படுத்தினால், சேதாரத்தைத் தவிர்க்க முடியும்.

[பிற்பகல் 4-50]

தொழிலாளர்களை ஒரு கட்டுப்பாட்டிலே கொண்டு வருவதற்கு வசதியாக நமது மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் இந்தத் தொழிற் சங்கங்களை முறைப்படுத்தி அவர்கள் கட்டுப்பாடு உள்ளவர்களாக வேலை செய்கின்ற நிலைமையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தப் பணிவான வேண்டுகோளை அவர்களுக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, புதிய திட்டங்களைப் பொறுத்தவரையில், 1975-76க்கு முன்பாக மின்சாரம் அதிகப்படக்கூடிய நிலைமை இல்லை. இருந்தாலும் இருக்கின்ற மின் திட்டங்களை வைத்துக்கொண்டு இன்னும் 2, 3 ஆண்டுகளுக்கு நமக்கு மின் வெட்டு இருந்துகொண்டுதான் இருக்கும். இந்த நிலைமையை நல்ல முறையிலே சமாளிக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். புதிய திட்டங்களைத் துரிதமாக நிறைவேற்றக்கூடிய அளவுக்குக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அறிக்கையிலே நடுவட்டம் திட்டம் என்று இருக்கிறது. கடந்த 6, 7 ஆண்டுகளாக, நடுவட்டம் டைவர்சன் திட்டம் என்று போட்டுக்கொண்டிருக்கிறார்களே தவிர, வேறு ஒன்றுமில்லை. மிகச் சிறிய திட்டம் தான். பெரிய இயந்திரங்கள்கூட அதற்குத் தேவையில்லை. தண்ணீரைத் திருப்பி விடுவதுதான். வருடத்திற்கு 10 லட்சம், 15 லட்சம் என்று செலவு செய்துகொண்டிருக்கிறார்கள். அப்படிச் செலவு செய்து தண்ணீரைத் திருப்பிக்கொண்டிருக்கிறார்களே தவிர, வேறல்ல. அந்தத் திட்டம் பெரிய திட்டமாகக் கூட இல்லை. அதை வெகு விரைவிலே நிறைவேற்றினால், நமக்கு இன்னும் கொஞ்சம் மின் உற்பத்தி செய்வதற்கு அதிகமான வசதி ஏற்படும்.

நேற்று முன்தினம் நமது உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் கூட கூறினார்கள். பவானிசாகரிலே அணைக்கட்டு கட்டக்கூடிய காலத்திலே மின்சார உற்பத்தி செய்வதற்காக என்று தனியாக ஒரு பைப் லைன் போட்டு

வைத்திருக்கின்றார்கள் என்று சொன்னார்கள். அதிலே மின்சார உற்பத்தி தொடங்க ஏற்பாடுகள் செய்யுங்கள் என்று கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னால் நானும் கூட ஒரு கடிதத்தை எழுதிக்கொடுத்தேன். அங்கே இருக்கின்ற அதிகாரிகளைக் கேட்டால், இந்தத் திட்டத்திலே மிகக் குறைந்த அளவிலேதான் மின்சாரம் கிடைக்கும் என்று பதில் சொல்லித் தப்பித்துக்கொள்கிறார்கள்.

அடுத்து பாபநாசம் திட்டத்திலே மொத்தம் 21 மெகாவாட் உற்பத்தியாகின்றது. அங்கு 7 மெகாவாட் உற்பத்தி செய்கின்ற 3 இயந்திரங்கள் பணியாற்றிக்கொண்டிருக்கின்றன. 6 மெகாவாட், 8 மெகாவாட், 10 மெகாவாட் என்று கிடைக்கட்டும். அதைச் சுற்றியுள்ள 15, 20 கிராமங்களுக்கோ, அருகிலுள்ள நகரங்களுக்கோ உற்பத்தியாகின்ற மின்சாரம் போதுமானதாக இருக்கக்கூடும். அதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். 500 மெகாவாட், ஆயிரம் மெகாவாட் என்ற பெரிய அளவிலே இருக்கக்கூடிய திட்டங்களிலேதான் மின்சார இலாக்காவில் அதிகாரிகள் அதிகக் கவனம் செலுத்துகின்றார்கள்.

அடுத்து, தமிழ் நாட்டிலுள்ள பவானி ஆறு வருடத்தில் 12 மாதங்களும் பாசனத்திற்குத் தண்ணீர் வரக்கூடிய ஒரே ஆறு. இந்த பவானி ஆற்றிலே குந்தா பகுதியிலிருந்து ஓரளவுக்கு மின்சாரம் எடுக்கப்பட்டு நீரே தண்ணீர் விடப்படுகிறது. பைக்காரா, மோயாறு இவைகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கப்பட்டு தண்ணீர் விடப்படுகிறது. பவானி ஆற்றிலிருந்து வரக்கூடிய தண்ணீர் நேராக வருகிறது. அந்தத் தண்ணீர் மின்சாரத் திட்டத்திற்குப் பயன்படுவதில்லை. இப்படி ஆண்டில் 12 மாதங்களும் வரக்கூடிய பவானி ஆற்றுத் தண்ணீரை முறைப்படுத்தி, அதிலே மின்சாரம் தயாரிப்பதற்கு முயற்சிக்க வேண்டும். எந்தெந்த இடங்களிலிருந்து மின்சாரம் கிடைக்கும் என்றாலும் மிகக் குறைந்த அளவுதான் என்றாலும், சர்வே செய்து பார்த்து, அந்தத் திட்டத்தைத் தயாரித்தால், அதிலே 12 மாதங்களுக்கும் மின்சாரம் கிடைப்பதற்குச் சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப் போலவே மேற்குத் தொடர்ச்சி மலைகளிலே விவசாயத்திற்குத் தண்ணீர் விடுகின்ற பருவங்கள் வேறு, சாத்தனூரிலிருந்து விவசாயத்திற்குத் தண்ணீர் விடுகின்ற பருவங்கள் வேறு. இப்படி சாத்தனூர் அணை—பெண்ணை ஆற்றிலிருந்தும் நல்ல மேடான பகுதிகளிலிருந்தும் ஆற்றங்கரை ஓரமாகவே வருகின்ற தண்ணீர் பாசனத்திற்குப் பயன்படுகிறது. அதனாலே



சாத்தனூருக்கும், கிருஷ்ணகிரிக்கும் மத்தியிலே இருக்கின்ற ஏதாவது ஓரிடத்தில் ஒரு மின்சாரத் திட்டத்தினை உருவாக்கினால், அதிலும் தண்ணீர் கிடைக்க வசதியாக இருக்கும்.

நாமக்கல் உறுப்பினர் திரு. பாலு அவர்கள் இங்கே கூறியது போல, கொல்லி மலையிலும் கூட சில திட்டங்களை, இரண்டொரு திட்டங்களை மேற்கொள்வது நமக்கு வசதியாக இருக்கும். கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் பெய்கின்ற மழைத் தண்ணீர் பூராவும் வீணாகவே போய்விடுகின்றது. அதிலும் ஏதாவது திட்டங்கள் நிறைவேற்ற முடியுமா என்பதையும் மின்சார வாரியம் பரிசீலிக்க, நம்முடைய அனல் மின் திட்டங்களாக இருந்தாலும் சரி, அடுத்து வரவிருக்கின்ற அணு மின்சாரத் திட்டங்களாக இருந்தாலும் சரி, அதனுடைய உற்பத்திச் செலவு கணிசமான அளவில் உயர்ந்து வரக்கூடியதாக இருக்கிறது. சிறுசிறு திட்டங்களாக அமைத்து, நீர் மின் திட்டங்களை நிறைவேற்றினால், நமக்குக் குறைந்த செலவிலே மின்சாரம் கிடைக்க வசதியாக இருக்கும். அதிலேயும், நம் மின்சார வாரியத்தைச் சேர்ந்த அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும். 100, 200 மெகாவாட் என்றில்லாமல், 5, 10, 15 மெகாவாட் என்ற அளவிலே கூட நீர் மின்சாரம் கிடைக்கும் திட்டங்களைத் தயாரிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். இந்தத் திட்டங்களுக்கு இயந்திரங்கள் செய்வதற்கு 2, 3 வருடங்கள் பிடிக்காது. 6 மாதம் அல்லது ஒரு வருடத்தில் அதற்கு வேண்டுமென்ற இயந்திரங்களை இங்கே செய்து கொள்ள முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதிலே அவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் தொழிற் சங்கங்கள் விஷயத்திலும் அரசாங்கம் முழு முயற்சி எடுக்க வேண்டும். மின்சார உற்பத்தி, விநியோகம் இரண்டையும் தனித் தனியாகப் பிரித்து உற்பத்தி எவ்வளவு ஆகிறது என்பதையும், ஒவ்வொரு சிஸ்டத்திலும் எவ்வளவு விநியோகிக்கப்படுகிறது என்பதையும் பார்த்து, அதற்கு ஏற்ற அளவுக்கு பில்கள் வசூலிக்கப்படுகின்றனவா என்ற கணக்குகளை எடுப்பதற்கு உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும். இல்லையென்றால், இன்னும் இரண்டு, மூன்று ஆண்டுகளிலே ஒரு நிலை குலைந்த நிர்வாகமாக இந்த மின்சார வாரியம் மாறிவிடும். ஆகவே அரசு இதிலே தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

திரு. எல். பலராமன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்த மின்சார வாரியத்தின் வரவு-செலவுத் திட்டத்தின் மீது பேச சந்தர்ப்பம் கொடுத்தமைக்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம்] [1974 ஆகஸ்ட் 22

இந்த மின்சார வாரியம் பொது மக்களுக்கு, தொழிலாளர்களுக்கு, விவசாயப் பெருமக்களுக்கு ஒரு அத்தியாவசியமான தேவை. ஆங்கிலேயன் காலத்தில் புறக்கணிக்கப்பட்டு வந்தும், காங்கிரஸ் ஆட்சி நல்ல முறையில் மக்களுக்குத் தேவையான உணவு உற்பத்தியையும், மற்றும் தொழில் வளத்தையும் ஏற்படுத்த வேண்டும் என்று பல நல்ல திட்டங்களைத் திட்டியுள்ளது என்பதை நாடு அறியும். ஆனால் எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு அங்கத்தினர் திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம் அவர்கள் ஆங்கிலேயர்களைப் புகழ்ந்தும், காங்கிரஸ் கட்சிக்காரர்கள் செய்யவில்லை என்ற அளவிலும் பேசினார்கள.

திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம்: துணைத் தலைவரவர்களே, ஆங்கிலேயர்களைப் புகழ்ந்துவிடவில்லை. எல்லா சர்வேயும் பிரிட்டிஷார் காலத்தில் செய்யப்பட்ட சர்வேதான் என்று சொன்னேன். புதிதாக எந்த சர்வேயும் இப்போது நடைபெறுவதில்லை என்று சொன்னேன்.

திரு. எல். பலராமன்: துணைத் தலைவரவர்களே, அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. ஓரளவிற்கு ஒத்துக்கொண்டதற்கு நன்றி. அவர்கள் பின்னர் பேசியபோது மிகவும் சாடினார்கள். எதிர்க் கட்சியில் உள்ளவர்கள் எந்த அளவுக்கு நிர்வாக ஊழலைப்பற்றிச் சொல்வார்களோ அந்த அளவுக்கு நிர்வாக ஊழலைப்பற்றி விமர்சித்தார்கள். அந்த அளவுக்கு மின்சார வாரியம் ஒரு மோசமான, ஊழல் மிக்க ஒரு நிர்வாகமாக இருக்கின்றது என்பதை இந்த அவைக்கு நினைவூட்ட ஆசைப்படுகிறேன். அதற்கெல்லாம் பல காரணங்கள் கூறினார்கள். தொழிலாளர்கள் மரியாதையுடனும், கட்டுக்கோப்பாகவும் வேலை செய்யவில்லை. அதையெல்லாம் பார்க்கும்போது, பொது மக்களுக்குத் தேவையான ஒரு நிர்வாகம், காங்கிரஸ் ஆட்சியால் ஏற்படுத்தப்பட்ட மின் வாரியம் இன்று ஒரு சீர்கேடான நிலையில் இருக்கிறது என்றால், அதனால் நாட்டு மக்களுக்கும் மற்றவைகளுக்கும் பயனில்லை என்பதை நான் மிக்க வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு முன்னால் பேசிய எங்கள் கட்சிப் பெரியவர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள், ஆண்டுக்காண்டு கொடுத்த வாக்குறுதிகளையெல்லாம் இந்த ஆண்டும் புதுப்பித்துக்கொள்ளக் கூடிய நிலையிலேதான் நமது அமைச்சர் அவர்கள் இருந்துகொண்டிருக்கின்றார்கள் என்று கூறினார்கள். அந்த அளவுக்குத்தான் இந்த நிர்வாகம்

(பிற்பகல் 5.00)

இருக்கிறதே தவிர, இந்த ஆண்டு சொன்னதை மறு ஆண்டுக்குள் நிவர்த்திப் பதில்லை. எந்தப் பயனும் இல்லாமல், சீர்கேடான நிர்வாகம், ஊழல் மிக்க நிர்வாகம் என்று இருக்கிறது என்றால், அது மின்சார வாரியம்தான் என்பதை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



1974 ஆகஸ்ட் 22] [திரு. எல். பலராமன்]

இன்றைக்கு பல திருட்டுகளுக்கு ஆளாகி மின்சார வாரியமே நஷ்டத்தில் நடக்கக்கூடிய ஒரு துர்பாக்கியமான நிலையை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். பல மைல் நீளமுள்ள செப்புக் கம்பிகளெல்லாம் திருடப்படுகின்றன. கடந்த வாரம் அரக்கோணம் தாலுகா தணிகைப்போளூர் என்ற கிராமத்தில் பல மைல் நீளமுள்ள செப்புக் கம்பிகள் திருடப்பட்டிருக்கின்றன. அதனால் மின்சார இணைப்புக்கூட துண்டிக்கப்பட்டு, விவசாயம் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அவ்வளவு நீளமுள்ள கம்பியை ஒருவர் இருவரால் திருட முடியாது. பலபேர் கூடி திருடி ஒரு லாரியில் எடுத்துக்கொண்டு போயிருக்க வேண்டும். அந்த அளவு திருடுகள் நடக்கக்கூடிய ஒரு நிர்வாகமாக மின்சார வாரியம் இன்றைக்கு இருக்கிறது என்றால், அது மிகவும் வருத்தத்தைக் கொடுக்கிறது. இங்கே ஆளுங்கட்சி உறுப்பினர் திரு. சி. வி. இராஜகோபால்கூட, திருடர்கள் எல்லாம் அமைச்சர் மத்தியிலே இருப்பதால்தான் திருட்டுகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்ற உண்மையை ஒப்புக்கொண்டார்கள். அந்த அளவுக்கு அந்த நிர்வாகத்திலே உள்ளவர்கள், அதிலே பணியாற்றுபவர்கள் இருப்பதால் தான் அந்த நிர்வாகத்தில் சீர்கேடு இருக்கிறது என்பதைக் கூறி அந்த நிர்வாகத்தை வன்மையாகக் கண்டிக்க ஆசைப்படுகிறேன். இந்த நிலைமையைப் போக்குவதற்கான நடவடிக்கைகளை மின்சார அமைச்சர் அவர்கள் துரிதமாக எடுத்தாலொழிய, இந்த மின்சார வாரியம் என்பதே இருக்குமா இருக்காதா என்ற நிலை இன்றைக்கு இருக்கிறது என்பதைத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். பொதுமக்களுக்கு மிகவும் தேவையான நிறுவனத்தில் தூய்மையான நிர்வாகம் இருக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆக்கப்பூர்வமாகச் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மின்சார உற்பத்திக்கு ஆக்கபூர்வமான திட்டப்பணிகள் ஏதும் செய்யவில்லை. குறைந்த செலவில் அதிக அளவு மின்சாரம் தரக்கூடிய ஓகனேக்கல் திட்டம் ஆண்டுதோறும் சொல்லப்படுகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் எதிர்க் கட்சி வரிசையிலே இருந்தபோதே சொல்லிய திட்டம் அது. அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, அந்த ஓகனேக்கல் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அந்தத் திட்டத்தைச் செய்யலாம், செய்யலாம் என்று அறிக்கைதான் விடுகிறார்களே தவிர, அந்தத் திட்டத்திற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவில்லை என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மின்சாரம் பாதிக்கப்பட்டால், அதை நம்பியிருக்கக்கூடிய விவசாயிகள், தொழிலாளர்கள் எல்லாம் பாதிக்கப்படுவார்கள் என்று கூறினார்கள். ஆனால் மின்சாரம் இல்லையென்றால், இயக்கமே இல்லை என்ற நிலை ஏற்படும். அந்த நிலை தமிழ் நாட்டில் ஏற்படாமலிருக்க மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

எனக்கு முன்னால் பேசியவர்கள், ஆளும் கட்சியிலே இருக்கிறவர்கள்கூட, தொழிலாளர்கள் மத்தியிலே உள்ள ஒழுங்கீனங்களைப்பற்றி குறிப்பிட்டார்கள். அவற்றையெல்லாம் நிவர்த்திப்பதற்கு அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. கடந்த ஆண்டும் இந்தக் குற்றச்சாட்டைச் சொன்னார்கள். இந்த ஆண்டும் அந்த குற்றச்சாட்டைச் சொல்கிறார்கள். ஆகவே அவைகளெல்லாம் என்றைக்கு நிவர்த்திக்கப்படுமோ? அது கேள்விக்குறியாகவே இருந்து கொண்டிருக்கிறது.

மின்சாரத்தை உபயோகித்தவர்களுக்கு அந்தப் பணத்தைக் கட்டுவதற்கு பில்கள் வருவதில்லை. கடந்த ஆறு மாத காலமாக பில்லே அனுப்புவதில்லை. ஒரு பழமொழி சொல்வார்கள். கொடுத்த கடனைக் கேட்காதவன் வாங்கிய கடனைக் கொடுப்பானா என்பார்கள். அந்த அளவுக்கு மின்சார வாரியத்திற்கு வரவேண்டிய பணம் வசூல் செய்யப்படாமலிருக்கிறது. கிராமவாசிகள் எல்லாம் இதைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் காலாகாலத்தில் பணத்தைக் கட்ட வேண்டுமென்ற பொறுப்புடன் இருக்கிறார்கள். ஆனால் மாதக்கணக்கில் பில்லும் கொடுக்காமல், வசூலும் செய்யாமல் இருக்கிறார்கள். இந்த மாதிரி நிலைமையைப் போக்குவதற்காக இந்த நிறுவனம் பாடுபட வேண்டும். ஆனால் அப்படிச் செய்யுமா என்ற ஐய உணர்வுதான் ஏற்படுகிறது.

அடுத்தபடியாக, மின் இணைப்பு கேட்டால், மின்சார வாரியத்தினர் பைப் இல்லை என்கிறார்கள். பைப் இருந்தால் போர்டு இல்லை என்கிறார்கள். போர்டு இருந்தால் ஃபியூஸ் கேரியர் இல்லை என்கிறார்கள். இதையெல்லாம் விவசாயிகள் வாங்கிக் கொடுக்கவேண்டிய நிலை இருக்கிறது. இதையெல்லாம் வாங்கிக் கொடுத்தால்கூட, சரியாக மோட்டார் ஓடுவதில்லை. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், என்னுடைய மோட்டாரேகூட கடந்த பத்து பதினைந்து நாட்களாக ஓடவில்லை என்று கடிதம் வருகிறது. டெயில் எண்டு என்று கூறக்கூடிய, கடைசியிலே இருக்கக்கூடிய இடத்திற்கு, சரியாக





மின்சாரம் வரவில்லை என்ற நிலை இருப்பதைப் பார்க்கிறோம். இதனால் விவசாயிகள் பெருவாரியாகப் பாதிக்கப்படுகிறார்கள். இதையெல்லாம் ஆக்க பூர்வமாகப் பணிசெய்து போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்துகளிலே மின்சார மீட்டர் வைக்க வேண்டும் என்று கோரிக்கைகள் வருகின்றன. அதைத் தருவதற்கு அமைச்சர் அவர்கள் வாக்குறுதி தந்தும் அந்த வாக்குறுதிக்கு மரியாதையில்லாமல் இருக்கக்கூடிய நிலை இருக்கிறது. இப்போதாவது அந்த வாக்குறுதியை நிறைவேற்றி, ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் மீட்டர் அடிப்படையில் கட்டணம் வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் மாவட்டத்திலே அரக்கோணத்திலே இன்றைக்குக் கூட தெரு விளக்குகளுக்கு இணைப்பு இல்லாமல் இருக்கின்றது. ஆளும் கட்சிக்காரர்கள்கூட அறிக்கை விட்டிருக்கிறார்கள். இந்தத் தேதிக்குள் தெரு விளக்குகளுக்கு மின்சார இணைப்பு தரவில்லை என்றால், உண்ணாவிரதம் இருப்போம் என்று திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களே சொல்லியிருக்கிறார்கள். அப்படிக்கூட தெரு விளக்குகளுக்கு இணைப்புக் கொடுப்பதைக் கூடச் செய்யாமல் இருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கொடுக்கின்ற மின்சாரத்திற்கு நல்ல முறையில் கட்டணம் வசூலிக்காமல் பஞ்சாயத்துகளிலும், நகராட்சிகளிலும் அதிகமாக வசூலிக்கிறார்கள். இதைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெரிய நகராட்சிகளில், மதுரை போன்ற மாதகராட்சிகளில் அவர்களுடைய விளக்குகளுக்கு அவர்களே பல்புகளை வாங்கிக்கொள்கிற வேலையை விட்டுவிட வேண்டும். அப்படி அவர்களே 'மெயின்டெய்ன்' செய்துகொள்கிறோம் என்று சொல்லும் நகர மன்றங்களையும் அப்படியே செய்து கொள்ளுங்கள் என்று சொல்லிவிட வேண்டும்.

மேலும், பவர் கார்ப்பரேஷன் வைக்கப்போகிறோம் என்று சொல்கிறார்கள். அது சொல்வதற்கு எளிதாக இருக்கிறது. ஆனால் அது நல்ல முறையிலே இயங்குமா என்பது சந்தேகமாக இருக்கிறது. அப்படிப்பட்ட ஐயம் இருக்கும்போது, அந்தக் கார்ப்பரேஷன் இருக்க வேண்டுமா, வேண்டாமா என்பதைப் பரிசீலிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார வாரியத்தில் இருக்கும் பொறியாளர்கள் எல்லாம் நல்லவர்கள். அவர்களை நல்ல முறையிலே பயன்படுத்த வேண்டும். அவர்களை நல்ல முறையில் பயன்படுத்தாத காரணத்தால்தான்; அந்த வாரியத்திலே இவ்வளவு சீர்கேடுகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஏ. ராஜு

மாணிக்கம் அவர்கள் எடுத்துக்கூறினார்கள். தொழிலாளர்கள் நன்றாக வேலை செய்யவில்லை என்று பொறியாளர்கள் சொன்னால், பொறியாளர்களை கேரோ செய்கிறார்கள். விழுப்புரத்தில் என்று நினைக்கிறேன், அங்கே ஒரு பொறியாளரை கேரோ செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமைக்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழகம்தான். ஆளும் கட்சி ரீதியாக, கட்சி சார்பாக ஒரு தொழிற்சங்கத்தை ஆரம்பித்து, ஆளும் கட்சிக் காரர்களுக்கே முக்கியத்துவம் தரப்படுவதால்தான், இந்த அளவுக்கு நிர்வாகச் சீர்கேடு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்று கூறி, அதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இது போன்ற நிலைமைகள் இல்லாமல் பார்த்துக்கொண்டு, மின்சார வாரியம் நல்ல முறையில் செயல்பட ஆக்கபூர்வமான திட்டங்களைச் செயல் படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு, மின்சார வாரியத்திலே நன்றாகப் பணியாற்றும் பொறியாளர்களுக்கு நன்றி கூறி, எல்லோரும் நாட்டுக்குச் சேவைசெய்கிறோம் என்ற உணர்வுடன் பணி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. இராம சுப்பையா: அவைத் துணைத் தலைவர் அவர்களே, 1974-75-ஆம் ஆண்டு மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கை குறித்தும், 1973-74-ஆம் ஆண்டு துணை நிதிநிலை அறிக்கை குறித்தும் நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

நாம் விடுதலை அடைந்து பல ஆண்டுகள் ஆகியும், கடந்த 7, 8 ஆண்டு களாகத்தான் தமிழ்நாட்டிலே மின்சார விநியோகம் ஏராளமான கிராமங் களுக்குச் செய்திருக்கிறார்கள். இந்த அளவுக்கு நம்முடைய அண்டை மாநிலங்களான ஆந்திரம், கேரளம், கர்நாடகம் போன்ற மாநிலங்களில் செய்ய வில்லை. இப்பொழுது மின்சாரத் துறையில் அதிக வளர்ச்சி ஏற்பட்டிருந் தாலும், இன்னும் அதிகமான வளர்ச்சியை ஏற்படுத்தி, மின் உற்பத்தியை அதிகமாக்குவதற்கு வேண்டிய உதவிகளை மத்திய சர்க்கார் நமக்குத் தரு வதற்கு ஒத்துழைக்கமாட்டேன் என்கிறார்கள். அவர்களுக்கு நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களும் எவ்வளவு எழுத முடியுமோ அவ்வளவு எழுதிக் கேட்டுங் கூட, அவர்கள் நமக்கு உதவி செய்ய மறுத்து வருகிறார்கள்.





அது மட்டுமல்லாமல், இந்த நாட்டிற்கான உணவு விஷயத்திலும் சரி, மின் உற்பத்தித் திட்டத்திலும் சரி, மத்திய சர்க்கார் நமக்கு வேண்டிய உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நமது நாட்டிலே மின்சாரத் துறையிலே கடந்த எட்டு ஆண்டு காலமாகத்தான் முன்னேற்றம் சிறப்பாக நடந்திருக்கிறது என்று கூறி அமர்கின்றேன். வணக்கம்.

(பிற்பகல் 5.10)

திரு. வி. வெங்கா: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் 1974-75-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையையும் 1973–74-ஆம் ஆண்டுக்கான துணை நிதி நிலை அறிக்கையையும் இந்த மன்றத்தில் சமர்ப்பித்திருக்கின்றார்கள். அவற்றின் மீது என் கருத்துக் களைக் கூற வாய்ப்பினை அளித்தமைக்காக தங்களுக்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமது அறிக்கையில் இந்த அரசு சாதித்த சாதனைகளைத் தெரிவித்துள்ள அதே நேரத்திலே வேதனைக்குரிய சில தகவல்களையும் சமர்ப்பித்திருக்கின்றார்கள். அந்த அறிக்கையின் முதல் கட்டத்தில் கழக அரசின் சாதனைகளை மிகத் திறம்பட எடுத்துச்சொல்லியிருப் பதோடு கழக அரசு எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை யாக உள்ள சிலவற்றையும் வேதனையோடு எடுத்துச்சொல்லியிருக்கின்றார்கள்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், 27 லட்சம் மக்கள் கன்ஸ்யூமர்ஸ், மின்சாரத்தைப் பயன்படுத்துகின்றார்கள் என்ற புள்ளிவிவரங்களைப் பார்க்கும் போது, மின்சார வாரியத்தினைப் பாராட்டக் கடமைப்பட்டவர்களாக இருக் கிறோம். அது மட்டுமில்லாமல், தமிழக மின்சார வாரியமானது 2.75 இலட்சம் கிலோமீட்டர் நீளத்திற்கு கம்பித் தொடர்களை நீட்டியிருப்பதானது நாட்டின் மொத்த நீளத்தில் 20 சதவிகிதமாக உள்ளதைப் பார்க்கும்போது, உள்ளபடியே தமிழக மின்வாரியத்தின் சாதனையைப் பாராட்டாமலிருக்க முடியாது. அதே நேரத்திலே தமிழகத்தில் உள்ள 62,487 கிராமங்களிலே 61,138 கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் 1974 ஜூன்மாதம் வரையில் மின் வசதி கொடுக்கப்பட்டிருக்கின்றது; தமிழகத்திலுள்ள கிராமங்களிலே 98 சத வீத கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருக்கின்றது என்ற கணக்கினைப் பார்க்கும்போது, மின்சார வாரியத்தையும் அந்த வாரியத்திலுள்ள பொறியாளர்களையும் அவர்களை நல்ல முறையில் பணிபுரியச் செய்யும் தமிழக அரசையும் நாம் பாராட்டாது இருக்க முடியாது. அதிலும் குறிப்பாக் தமிழ கத்திலுள்ள 24,799 அரிசனக் குடியிருப்புகளில் 23,800 அரிசனக் குடியிருப்பு

களுக்கு, அதாவது 96 சதவிகிதக் குடியிருப்புகளுக்கு வெளிச்சத்தை அளித்திருக்கின்றார்கள் என்று சொன்னால் உள்ளபடியே கழக அரசு இன்றைக்குச் சமுதாயத்திலே அடி மட்டத்திலே உள்ளவர்கள் படும் வேதனையை உணர்ந்து, அவர்களுடைய வேதனையைப் போக்க வேண்டுமென்று, நமது கலைஞர் அவர்கள் இட்ட உத்தரவின் மூலம், அதை நல்லமுறையில் செய்திருக்கின்றார்கள் என்று அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அது மட்டுமில்லை. தமிழகத்திலே பசுமைப் புரட்சி ஏற்பட்டது என்றால், அதற்கு இந்த மின்சார இலாகாதான் பெரிதும் காரணமாகும். இன்றைக்கு இந்திய உபகண்டத்திலுள்ள மின் ஏற்றங்களில் மூன்றில் ஒரு பங்கு மின் ஏற்றங்கள்—ஏறத்தாழ ஏழு லட்சம் மின் ஏற்ற மோட்டார்களுக்கு மின் இணைப்பு கொடுத்திருக்கின்றார்கள் என்று சொன்னால், அது உண்மையிலேயே மிகப் பெரியதொரு சாதனை என்று ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். இன்றைக்கு கிராமப்புறங்களிலே மிகப் பெரியதொரு மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றார்கள் இத்துறையினர். கிராமப் புறங்களிலே உள்ள நிலங்களை நஞ்சை என்றும் புஞ்சை என்றும் இரண்டு விதமாகப் பிரிப்பார்கள். நஞ்சை நிலங்களுக்குப் பாசன வசதி இருக்கும், ஆனால் புஞ்சை நிலங்களுக்குப் பாசன வசதி இராது. அந்த நிலங்களிலே விளைச்சல், கண்டுமுதலும் குறைவாகத்தான் இருக்கும். ஆனால் இன்றைக்கு செங்கற்பட்டு மாவட்டத்திலே, மின்சார இணைப்புக்களைக் கொடுத்து, கீழிருந்து நீரை மேலே கொண்டுவந்து, புஞ்சை நிலங்களிலே பெருமளவில் வணிகப் பயிர்களைப் பயிர் செய்துவருவதன் காரணமாக, நஞ்சை நிலங்களைக் காட்டிலும் புஞ்சை நிலங்களின் மதிப்பு அதிகமாகப் போயிருப்பதைப் பார்க்கிறோம். இதற்காக மின்சார இலாகாவினரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இவற்றையெல்லாம் எடுத்துச் சொல்லும் நேரத்திலே, பொதுவாக என்ன சொல்லுகின்றார்கள்? 'எங்கே பார்த்தாலும் கம்பியை இழுத்து விட்டார்கள். ஆனால் அதிலே மின்சாரம் எங்கே வருகின்றது? மின் சக்தியை உற்பத்தி செய்ய முயற்சி எடுத்துக் கொண்டார்களா?' என்றெல்லாம் கேட்கின்றார்கள். அது உள்ளபடியே நியாயமான கேள்விதான். ஆனால் மின் சக்தியை உற்பத்தி செய்வது என்பது தமிழக அரசின் கையில் மட்டும்தான் இருக்கிறதா என்று பார்க்கும்போது, அமைச்சர் அவர்களுடைய அறிக்கையின் பின் பகுதியினைப் பார்க்க வேண்டியிருக்கிறது. அவர்கள் பல விவரங்களைக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இது சம்பந்தமாக அநேக திட்டங்களைத் தீட்டி நாம் டெல்லிக்கு அனுப்பியிருக்கிறோம். ஆனால் டெல்லியிலிருந்து வரவேண்டிய அனுமதி வரவில்லை. நெய்வேலியில் இரண்டாவது சுரங்கத்தை வெட்டுவதற்கான அனுமதி இன்னும் கிடைத்தபாடில்லை. 1974-ல் முடிந்திருக்கவேண்டிய



கல்பாக்கம் திட்டமானது இன்னும் முடிவு பெறாமல் இருக்கின்றது. இப்போது 1976-க்குத் தள்ளிப் போட்டிருக்கின்றார்கள். இன்றைக்கு இந்திய உபகண்டத்திற்கும் கனடா தேசத்திற்கும் இடையிலுள்ள உறவுகள் காரணமாக, 1976-ஆம் ஆண்டிலாவது ஒப்பந்தப்படி கல்பாக்கம் அணு மின் திட்டம் நிறைவேறுமா என்று அச்சம் கொள்ள வேண்டியிருக்கின்றது. அது மட்டுமில்லை. மேட்டூரில் அனல் மின்நிலையம் ஒன்றையும் உருவாக்க வேண்டும் என்று நமது அரசு திட்டமிட்டு மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கின்றது. இவ்வளவிற்கும் இதுவரையில் முறையாக பதில் வந்தபாடில்லை. அது மட்டுமில்லை. கல்பாக்கம் அணு மின் திட்டத்தைப் போல, வேறு இரண்டு அணு மின் திட்டங்களும் இந்தியாவில் உருவாக வேண்டும் என்று முறையாக மத்திய அரசிற்கு நமது அரசு எடுத்துக்காட்டியிருக்கிறது. இது வரையிலும் செய்த முறையீடுகள் அனைத்தும் முற்றிலும் நியாயமானவை யாகவே இருக்கின்றன. ஆனால் மத்தியிலிருந்து வரவேண்டிய உத்தரவுகள் வேகமாக வராத காரணத்தினால்தான், மின்சார உற்பத்தியில் தவக்கம் ஏற்பட்டிருக்கிறதே தவிர மின்சார உற்பத்தியில்லை என்று நாம் சொல்லிவிட முடியாது. 'எங்கள் காலத்திலே அதைச் செய்தோம், இதைச் செய்தோம்' என்று சொன்னால் செய்யவேண்டியது அனைத்தையும் பிரிட்டிஷ் அரசாங்கம் திட்டமிட்டுவிட்டு, அதற்குப் பிறகு வந்த காங்கிரஸ் அரசு அவ்வளவு திட்டங்களையும் 1967-க்கு முன்பே செய்து முடித்துவிட்டார்கள். இன்று விடப்பட்டுள்ள திட்டங்கள் அனைத்தும் மிக மிகச் சிறிய திட்டங்கள்தான். எனவேதான் இப்போது நாம் நீர்மின் நிலையத் திட்டங்களை மட்டும் நம்பி யிராமல் பல்வேறு திட்டங்கள் பற்றியும் யோசித்தாகவேண்டிய நிலையில் இருக்கிறோம். இன்றுள்ள நிலையில் தமிழகம் நீர் மின் நிலையங்களைத்தான் பெரிதும் நம்பியிருக்கிறது. அமைச்சர் அவர்கள் மழை பெய்தால்தான் உற்பத்தியைப் பெருக்கிட முடியும் என்று சொன்னார்கள். ஆனால் மழை பெய்தாலும்கூட, கண்ட நேரத்திலே மின்சாரத்தை நாம் உற்பத்தி செய்துவிட முடியாது. காரணம் நமது திட்டங்கள் அனைத்தும் பாசனத்தோடு இணைக்கப்பட்ட திட்டங்கள். பாசனத்திற்கு என்று அதிக அளவிற்கு அணைக்கட்டுகளிலிருந்து நீரைத் திறந்துவிடும்போதுதான் அதிக அளவிற்கு மின்சக்தியையும் உற்பத்தி செய்ய முடியும். அணைக்கட்டில் தண்ணீர் இருப்பதாலேயே திறந்துவிட முடியாது. என்றைக்கு மேட்டூர் அணைக் கட்டைத் திறந்துவிடுகிறோமோ அப்போதுதான் மின் சக்தியை உற்பத்தி செய்ய முடியும். எனவேதான் பல்வேறு திட்டங்களை நமது அரசு யோசித்து அத்திட்டங்களை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறது. ஆனால் மத்தியிலுள்ள மந்தப் போக்கு காரணமாக, அவர்கள் காலம் கடத்திக்

கொண்டே போவதால்தான் இந்த நேரத்தில் மாநில சுயாட்சிபற்றியும் சிந்திக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. காரணம் நமது மின் சக்தித் தேவைகளை யோசித்து கூடுதலாக 925 மெகாவாட்டுகள் வேண்டும் என்று நம்மது அமைச்சர் அவர்கள் ஐந்தாவது திட்டவரையில் அதற்கான திட்டங்களைத் தீட்டினார்கள், புள்ளி விவரங்களைக் கொடுத்திருக்கின்றார்கள், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில், 1978–79 இறுதியில், நம்முடைய தேவை 3020 மெகாவாட்டாகும் என்று. யூனிட் கணக்கில் சொல்லப்போனால், அந்தக் கால கட்டத்தில் நமது தேவை 15,490 மில்லியன் யூனிட்டுகள் என்று கணக்கிட்டிருக்கின்றார்கள். ஆனால் உள்ள நிலைமைகளைப் பார்த்தால், அந்த கால கட்டத்தில் பற்றாக்குறைதான் இருக்கும் என்றும், அது 5,183 மில்லியன் யூனிட்டுகளாகும் என்றும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆக நமது தேவையில் சுமார் 33 சதவிகிதம் பற்றாக்குறை என்றால், இதைச் சற்று சிந்திக்க வேண்டும். இப்படிப்பட்ட பற்றாக்குறை தொடர்ந்து 10 ஆண்டுகள் நீடித்தால், தமிழகத்தின் விவசாய, மற்றும் தொழிற் துறைகள் எந்த அளவிற்குப் பாதிக்கப்படும் என்று எண்ணினால், அதிலும் குறிப்பாக மத்திய அரசு இதைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் இருக்கும்போது, மீண்டும் முன்பு சொன்னதையே சொல்லவேண்டியிருக்கிறது; நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லும் மாநில சுயாட்சிபற்றித் தான் எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறது. காரணம் இந்த நிலை தொடர்ந்தால், தமிழகத்தின் எதிர்காலம் மிக மிக இருண்டதாகத்தான் இருக்கும். தொடர்ந்து நமது தேவைகளைப் புறக்கணித்து அவர்கள் பத்தப் போக்கில் செல்லுவதால் தான் நாம் இதைச் சிந்திக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். ஏதோ இங்கே நாம் இதைச் செய்யவில்லை, அதைச் செய்ய வில்லை, கம்பத்தை நட்டுவிட்டு கம்பியை மட்டும் நீட்டி விட்டார்கள், ஆனால் மின்சாரம் கிடையாது என்று பேசுவதெல்லாம் பழைய சித்தாந்தத்தைப் பேசுவதாகத்தான் இருக்கும். இன்று மின் சக்தியே போதுமானதாக இல்லாத நேரத்திலே மேலும் புதிய புதிய இணைப்புகளுக்கு கம்பிகளை இழுத்து விடுகின்றார்களே என்று சிலர் சொல்லுகின்றார்கள். அவர்களுக்குச் சொல்லிக் கொள்ளுவேன், உதாரணமாக சாப்பிடுவதற்குப் பத்து பேர் இருக்கின்றார்கள்; ஆனால் இருக்கும் சாப்பாடோ எட்டுப் பேருக்குத்தான் போதுமானதாக இருக்கின்றது என்றால், தினம் தினம் சாப்பிட்டுப் பழக்கப்பட்டுப் போன அந்த எட்டுப்பேர், 'என் பத்துப் பேருக்குப் போட வேண்டும், இரண்டு பேர் பட்டினி கிடக்கட்டும்' என்று சொல்லுவதைப் போலத்தான், இன்றைக்கு உள்ள மின் சக்தியைத் தாங்களேதான் உபயோகித்துக்கொள்ள வேண்டும், மேலும் புதிதாக யாருக்கும் கொடுக்கக்கூடாது என்கிறார்கள். இது வரையில் வசதி படைத்தவர்கள்தான் மின் சக்தியின் அனுகூலத்தை அனுபவித்து





வந்தார்கள். வசதியற்றவர்களுக்கு சமுதாயத்தின் கீழ்த்தளத்தில் இருப்பவர்களுக்கு அது மறுக்கப்பட்டு வந்தது. கழக ஆட்சியில் அந்த நிலைமை மாற்றி, இருப்பதை அனைவருக்குமே முறையாகப் பங்கிட வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு மேலும் மேலும் பல கிராமங்களுக்கு இணைப்புகளைக் கொடுத்து மேலும் மேலும் பல மின் ஏற்றங்களுக்கு மின் இணைப்பினைக் கொடுத்து வருகின்றார்கள். இத்துறையில் பணியாற்றும் பொறியாளர்களும் நல்ல மனப்பான்மையோடு அதை வேகமாகச் செயல்படுத்தி வருகின்றார்கள். அவர்களை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

கடைசியாக ஒன்றை மட்டும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஊராட்சியிலுள்ள விளக்குகள் சரியாக எரிவதில்லை என்று நண்பர் திரு. சந்தரேசத்தேவர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். உண்மைதான், ஏற்றுக்கொள்ளுகிறேன். அதைச் சீர் செய்து விடலாம். அதே நேரத்திலே இன்னும் ஒன்றைக் குறிப்பிட்டார்கள், மீட்டர்களைப் பொருத்த வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். இதையும் அரசு ஆலோசித்து வருகின்றது என்று எண்ண இடமிருக்கிறது. காரணம் நான் 1970லிருந்து அங்கத்தினராக இருக்கின்றேன். அதைப்பற்றி அப்போது சொன்ன நேரத்திலே அமைச்சர் அவர்கள், அன்றுள்ள நிலையில் அதைப் பொருத்துவதற்கான சாத்தியக்கூறு இல்லை என்றார்கள். ஆனால் இப்போது அதை ஆலோசித்து வருகின்றார்கள்

(பிற்பகல் 5-20)

என்று தெரிகின்றது. ஆனால் என்னைப் பொறுத்த மட்டில் இந்த ஆண்டில் பொருத்துவார்களா என்று பார்க்கிற நேரத்தில், நம்பிக்கை ஏற்படவில்லை. காரணம் என்னவென்றால் கடந்த ஆண்டு வெளி மாநிலங்களில் மின்சாரம் 18 கோடி ரூபாய் அளவிற்கு வாங்கப்பட்டது என்றால், இந்த ஆண்டு 29 கோடி ரூபாய் அளவிற்கு வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. கடந்த ஆண்டு 10 கோடி ரூபாய் நஷ்டம் என்றால், இந்த ஆண்டு பவர் கட் காரணமாக 18 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. மின்சார வாரியத்தின் நிதி நிலைமை மோசமாக இருக்கிற நேரத்தில், இந்த ஆண்டு மீட்டர்களைப் பொருத்துகிறோம் என்று சொல்வது ஏற்றுக்கொள்ள முடியாத வாதமாக இருக்கிறது. அமைச்சரவர்கள் கொள்கையளவிலே ஏற்றுக்கொண்டார்கள். பண வசதி இல்லை. ஊராட்சியைச் சேர்ந்த நாங்களெல்லாம் மின்சார வாரியத்தோடு, அரசாங்கத்தோடு ஒத்துழைக்கிறோம். எங்கள் செலவில் மீட்டர்களைப் பொருத்திக் கொள்ளச் சம்மதிக்கிறோம். தயவு செய்து மின்சார அமைச்சரவர்களும், வாரியமும் முன்வரவேண்டும். அவர்கள் நிதிநிலை இவ்வாறு இருக்கிற காரணத்தினால், இதை ஒத்துக்கொள்ளவில்லையென்றால்,

திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் சொல்லியது போன்று, அடுத்த ஆண்டும் இதே நிலைமைதான் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆகவே எங்கள் செலவில் மீட்டர்களைப் பொருத்திக் கொள்கிறோம். அதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றை திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் சொன்னார்கள். எங்கோ திருடு போகிறது, யாரோ திருடுகிறார்கள், அதை எங்கள் தலைமேல் வைத்து எரியாத விளக்குகளுக்குப் பணம் வாங்குகிறார்கள் என்றார்கள். பணம் வாங்குவது உண்மை. ஆனால் நடைமுறை என்னவென்றால், ஊராட்சித் தலைவர்கள் ஒரு கிராமத்தில் 100 விளக்குகளில் 10 விளக்குகள் எரியவில்லை யென்று சொன்னால், அங்கே இருக்கக்கூடிய ரெவின்யூ அக்கவுண்டிங் யூனிட்டுக்கு ரிப்போர்ட் செய்ய வேண்டும். அவர்களே இதைச் சரி பார்த்துக் கழித்து விடுகிறார்கள். எங்கெங்கு ரிப்போர்ட் செய்யவில்லையோ, எந்தெந்த ஊராட்சித் தலைவர்கள் ரிப்போர்ட் செய்யவில்லையோ அங்கே தான் மின்சார வாரியம் முழுமையாக விதிக்கிறது. நாம் ரிப்போர்ட் செய்தால் குறைத்துக் கொள்கிறார்கள்.

திரு. என். சுந்தரேசத் தேவர் : துணைத் தலைவரவர்களே, ஊராட்சி மன்றத் தலைவர்கள் ரிப்போர்ட் செய்தும், தஞ்சை மாவட்டத்திலே குறைப்பதற்கு ஆட்சேபிக்கிறார்கள். ரிப்போர்ட் செய்யவில்லையென்ற குற்றச்சாட்டு சரியல்ல. செய்பவர்களின் தரத்தைப் பொருத்திருக்கிறது. ஆளும் கட்சிக்காரர்கள் செய்தால் ஒப்புக் கொள்ளுகிறார்கள், வேறு கட்சிக்காரர்கள் செய்தால் ஒப்புக் கொள்ளாமல் இருக்கலாம். சில இடங்களில் இப்படி ஒப்புக் கொள்ளாமல் இருக்கிறார்கள். ஆகையினாலே பஞ்சாயத்துத் தலைவர்கள் எரியாத விளக்குகள்பற்றி ரிப்போர்ட் செய்வதில்லை என்று சொல்வதைவிட அவர்கள் குறைக்கவில்லை என்பதுதான் நியாயமாக இருக்கும்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

திரு. வி. வெங்கா : தலைவரவர்களே, எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த மட்டில், கட்சி வித்தியாசம் இல்லாமல் ரிப்போர்ட் செய்யக்கூடிய தலைவர்களும் இருக்கிறார்கள், செய்யாத தலைவர்களும் இருக்கிறார்கள். செய்த தலைவர்களுக்கு குறைத்துக் கொடுத்திருக்கிறார்கள். ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்ற முறையில் பேசவில்லை. மேலும், மின்சார உபயோகத்தைப் பொறுத்து எத்தனையாவது யூனிட்டிலிருந்து எத்தனையாவது யூனிட் வரை ஆயிற்று என்று குறிப்பிடுவதில்லை என்று சொன்னார்கள். எங்கள் செங்கற்பட்டு மாவட்



டத்தைப் பொறுத்தவரை, மீட்டர் அருகாமையில் கார்டு வைத்திருக்கிறோம். ரீடிங் எடுக்க வருகிறார்கள். இத்தனை யூனிட் ஓடியிருக்கிறது என்று குறிப்பிடுகிறார்கள். பார்த்துக்கொள்ள வேண்டியதுதான். எவ்வளவு யூனிட்டுகள் என்பதை பில்லில் போட்டுக் கொண்டிருப்பது என்பது கஷ்டமான காரியம். காரணம் ஏற்கெனவே நிர்வாகத்தில் இருக்கக்கூடியவர்களுக்கு இது சங்கடமாக இருக்கும். அப்படி கார்டு இல்லாமல் இருந்தால், நாம் தான் சரியான முறையில் ரீடிங் கணக்கு எடுக்கிறார்களாவென்று பார்க்க வேண்டும். அவர்கள் தவறுதலாக 100 யூனிட்டு உபயோகப்படுத்தியதற்கு 200 யூனிட் என்று பில் போட்டு அப்படி பில் வந்தால் இப்படித் தவறு இருக்கிறதே என்று நாம் கேட்கலாம். ரீடிங் புக் அலுவலகத்தில் வைத்து 'மெயின்டெயின்' செய்து வருகிறார்கள். இதே மாதிரி சிஸ்டம்தான் தஞ்சை மாவட்டத்திலும் இருக்குமென்று நினைக்கிறேன். மின்சார வாரியம் எங்கோ ஏற்படக்கூடிய நஷ்டத்தினை வசூலிக்கிறார்கள் என்று சொல்வது பொருத்தமுடையதாக இருக்காது என்று நான் கருதுகிறேன்.

திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். பம்பு செட் வைத்திருப்பவர்கள் மின்சாரம் திருடுகிறார்கள், ரைஸ் மில் வைத்திருப்பவர்கள் திருடுகிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் விவசாயிகள் தான். பம்பு-செட் வைத்திருப்பவர்களும், ரைஸ் மில் வைத்திருப்பவர்களும் விவசாயிகள் தான். இப்படி விவசாயப் பெருமக்களே செய்கிற நோத்தில் இலாகா என்ன செய்யும் என்று பார்க்க வேண்டும். ஒவ்வொரு தனி மனிதனும் தான் செய்யக்கூடிய காரியம் தேசத்திற்கு விரோதமானது, தேச நலனுக்கு விரோதமானது என்று உணர்கிறவரையில் எந்த சர்க்காராக இருந்தாலும், தவறுகள் நடந்து கொண்டுதான் இருக்கும். தனி மனிதன் திருந்துகிற நோத்தில்தான் நிலைமைகள் மாறும்.

அடுத்தபடியாக, வாரியத்தில் இருக்கும் தொழிலாளர்களுக்கும், அலுவலர்களுக்கும் இடையே இருக்கக்கூடிய உறவு முறைகளைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். நியாயமானது தான். 1967-க்கு முன்பாக இந்தப் பிரச்சினை இல்லை. நாம் தொழிலாளர்களை ஆதரிக்கக்கூடிய நிலை காரணமாக சில சலுகைகளை அவர்களுக்குக் கொடுக்க முன்வந்தோம். அப்படிக் கொடுக்கப்பட்ட சலுகைகளை அதிகமாகப் பயன்படுத்திக்கொண்டு அதிகாரிகளை மிரட்டிக் கொண்டு, டிசிப்ளின் இல்லாமல், மிக மோசமாக ஆகி விட்டார்கள். இதன் விளைவு ஒரு யூனிட்டைப் பார்த்து இன்னொரு யூனிட், அந்த இன்னொரு யூனிட்டைப் பார்த்து வேறு ஒரு யூனிட் என்று இந்த டிசிப்ளின் இல்லாத நிலை மேன்மேலும் பெருகிக் கொண்டிருக்கிறது. நல்ல முறையில் கொடுக்கப்பட்ட சலுகைகள் இன்றைய தினம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருக்கின்றன. இதன்

விலேவாகத்தான் இதுபோன்ற நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த நிலைமை மாற்றப்பட வேண்டுமானால், கூடிய விரைவிலே இந்த மின்சார இலாகாவை எசென்சியல் சர்வீஸ் என்று ஆக்கி, தொழிற்சங்க உரிமையை தயவுசெய்து தவிர்த்து விட்டால், அது சாலச் சிறந்ததாக இருக்குமென்று நான் கருதுகிறேன். டிசிப்ளின் இல்லாத நிலைமை வேகமாக வளர்ந்துகொண்டிருக்கிறது. ஒரு சாதாரண ஹெல்பர் ஒரு எஸ்.இ.-யைப் போய் மிரட்டக்கூடிய நிலைமை இருக்கிறது. இது வேதனைப்படக்கூடிய நிலைமைதான். இருக்கக்கூடிய குறைகளைச் சரி செய்யவேண்டியது நிர்வாகத்தின் கடமைதான். இதைச் சொல்லி, மின்சாரத் துறையில் ஊழல் என்று சொன்னால், என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. நிர்வாகத்தில் உள்ள சீர்கேடுகளை நீக்குவது அரசின் கடமையாகும், வாரியத் தலைவரின் கடமையாகும். நிச்சயமாக அமைச்சரவர்கள் மிகத் தீவிரமாக தயவு தாட்சண்யத்திற்கு இடம் கொடுக்காமல் நடவடிக்கை எடுத்தால், டிசிப்ளின் அற்ற தன்மையை அடக்க முடியும். நிலைமை கொழுந்து விட்டெரியக்கூடிய அளவிற்கு வந்திருக்கிறது. உடனே தணிப்பது கஷ்டமாக இருக்கும். அதே சமயம் தொழிற் சங்க உரிமையை அவர்களுக்குத் தவிர்த்தாக வேண்டும்;

அடுத்து, இன்னொன்று, அரசின் கவனத்தில் இருப்பதாக நான் அறிகிறேன், அதாவது உற்பத்தி குறைந்துவிட்ட காரணத்தினால் புதிய இணைப்புகள் தேவையில்லை என்று அறிவித்து விடலாமா என்று அமைச்சரவர்கள் நினைப்பதாக நான் அறிகிறேன். அப்படி அறிவித்து விட்டால், விவசாயத்திற்கு மட்டுமாவது விதிவிலக்கு அளிக்க வேண்டும். இன்றையதினம் உள்ள சூழ்நிலையில் மின்சார பம்புசெட்டுகளுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும். மழை பொய்த்தால் கூட, பம்புசெட்டு வைத்துக்கொண்டு ஒரு போக நெல்லையாவது சாகுபடி செய்து தமிழகத்தின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும். புதிய இணைப்புகளைக் கொடுக்காவிட்டால், பசுமைப் புரட்சி பாதிக்கப்படும். ஆகவே பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பது என்பதற்கு பிரயாரிட்டி கொடுக்க வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, மின்சார வாரியமும், இலாகாவும், அமைச்சரவர்களும் சரிய முறையில் பணியாற்றியிருக்கிறார்கள். அதற்காக செங்கற்பட்டு மாவட்ட மக்களின் சார்பாக நன்றி தெரிவித்து விடைபெற்றுக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு தலைவரவர்களே, மின்சார வாரியம் நமது மாநிலத்தின் வளர்ச்சிக்கு மிகப் பெரும்பான்மையான பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள ஒரு ஸ்தாபனமாகும். அரசாங்கத்தை நடத்துபவர்கள் இன்று ஒருவர் இருக்கலாம், நாளை வேறு ஒருவர் வரலாம். இன்று ஒரு



கட்சி இருக்கலாம். நாளை ஒரு கட்சி வரலாம். ஆனால் வாரியம் நல்ல முறையில் செயல்பட்டால்தான் மாநிலத்தின் வளர்ச்சி நன்றாக இருக்கும். இந்த வருஷம் மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கையைப்பற்றி மேலவையில் அபிப்பிராயம் சொல்லக் கூடிய உறுப்பினர்கள் கட்சி வித்தியாசம் இல்லாமல் நல்லெண்ணத்தோடு வாரியத்தின் வளர்ச்சியை மனதில் கொண்டு, அதிலுள்ள குறைகளை ஆளும் கட்சி அல்லது எதிர்க் கட்சி என்ற வித்தியாசம் இல்லாமல், குறிப்பிட்டு, ஆக்கபூர்வமான யோசனைகளைச் சொல்வதைக் கண்டு உண்மையில் நான் பெருமைப்படுகிறேன். எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்வதைக் காட்டிலும், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் இன்னும் அழுத்தமாகக் குறைகளை நன்றாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்தக் குறைகளைப் போக்க வேண்டியது வாரியத்தை நடத்தும் அதிகாரிகளின் முக்கிய கடமையாகும். நான் முதற்கண் சொல்ல விரும்புவது அதிகாரிகள் அல்லது வாரியத்தை நடத்தும் உறுப்பினர்கள், மெம்பர்கள், சேர்மன் போன்றவர்கள் இன்னும் கொஞ்சம் தைரியமாக நல்ல முறையில் ஊக்கமாகச் செயல்படுவதற்கு அரசாங்கம் அவர்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

(பிற்பகல் 5-30)

அரசாங்கம் அந்த அளவு அவர்களுக்குத் தைரியமும் ஊக்கமும் கொடுப்பதாக நான் எண்ணவில்லை. வாரியத்தை நடத்தும் அதிகாரிகளும் உறுப்பினர்களும் அங்குள்ள சிப்பந்திகளால் மிரட்டப்படுகிறார்கள். இதையெல்லாம், அண்மையில் மத்திய அரசு கையாண்டதைப் போல் மாநில அரசும் நடந்து கொண்டு சமாளிக்க வேண்டும். ஆகவே நிர்வாகத்தை நல்ல முறையில் திருத்தியமைப்பதற்கு மாநில அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில், ஒரு காலத்தில் மின்சாரம் என்பது ஒரு ஆடம்பர வசதியாக இருந்தது. ஆனால், அது இன்றைக்கு ஒரு இன்றியமையாத பொருளாகிவிட்டது. சிறிய குடிசைகளில் வாழ்கின்றவர்கள்கூட அரை ஏக்கர், ஒரு ஏக்கர் என்று வைத்திருக்கின்ற விவசாயிகள் முதல் பெரிய பணக்காரர்கள், நிலச்சுவான்தார்கள் வரை எல்லோரும் மின்சாரம் இல்லாமல் வாழ்க்கை நடத்த முடியாது என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு நமக்கு உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டதற்கு முக்கிய காரணமே மின்சாரப் பற்றாக்குறைதான் என்று சொன்னால் மிகையாகாது. இந்த மாநிலத்திற்கு ஏராளமான அரிசியை தஞ்சை மாவட்டம் கொடுத்தாலும் கூட, வட ஆற்காடு, செங்கற்பட்டு போன்ற ஜில்லாக்களில் உள்ள இறைப்பு பாசனத்தின் மூலமும் நமக்கு ஏராளமாக அரிசி கிடைத்துக்கொண்டிருக்கிறது. அந்த மாவட்டங்களும் இந்த வருஷம் மின்சாரப் பற்றாக்குறையினால் அதிகமான உணவு நமக்கு அளிக்க முடியாத நிலைமை ஏற்பட்டது. அர

சாங்கத்தையும் மின்சார வாரியத்தையும் உறுப்பினர்கள் குறைகூறிப் பேசுகிறார்கள் என்றால், இது தான் காரணம். உற்பத்திக்குத் தகுந்தபடி வினியோகத்தைக் கவனிக்கவில்லை. உற்பத்திக்குத் தகுந்தபடி வினியோகம் செய்திருந்தால், இந்தக் கஷ்டம் நமக்கு வந்திருக்காது. எல்லாக் கிராம மக்களுக்கும் மின்சாரம் அளிக்க வேண்டும், கேட்பவர்களுக்கெல்லாம் கொடுக்க வேண்டும் என்ற ஆர்வம் அரசுக்கு ஏற்பட்டதை பொதுவாகப் பாராட்ட வேண்டியது தான். ஆனால், சட்டியில் இருந்தால் தானே, அகப்பைக்கு வரும். எத்தனை மெகாவாட், எத்தனை மில்லியன் யூனிட் நாம் உற்பத்தி செய்கிறோமோ அதற்குத் தகுந்தபடி வினியோகத்திற்கு ஏற்பாடு செய்திருந்தால், இந்தக் கஷ்டம் வந்திருக்காது, இம்மாதிரி 'பவர் கட்' வந்திருக்காது. இனிமேலாவது அரசாங்கம் இந்த விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிர்வாக அறிக்கை சரியாக சமர்ப்பிக்கப்படுவதில்லை. மூன்று ஆண்டுகள், நான்கு ஆண்டுகள் வரை நிர்வாக அறிக்கைகள் அவை முன் வைக்கப்படவில்லை என்றால், நிர்வாகம்பற்றிய குறிப்பை எடுத்துக் கொண்டு எப்படி நாங்கள் பேச முடியும்? மின்சார வாரியத்தில் நஷ்டம் நாளுக்கு நாள், வருஷத்திற்கு வருஷம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது என்றால், அதற்கும் நான் முதலிலே சொன்னதுதான் காரணம். தைரியமாக, ஒழுங்கு, கட்டுப்பாடு இவற்றை நிர்வாகத்தில் நிலைநிறுத்துவதற்கு அதிகாரிகளுக்குப் போதுமான பின்பலமாக அரசாங்கம் இருக்க வேண்டும். ஒரு சூப்பிரண்டிங் இஞ்சினியர், அல்லது டிவிஷனல் இஞ்சினியர் ஏதாவது நடவடிக்கை எடுக்கிறபோது, அங்கு கீழேயுள்ள ஊழியர்கள் அந்த அதிகாரிகளுக்கு இம்சை கொடுத்தால், அந்த அதிகாரிகளைக் 'கெரோ' செய்தால், அத்தகைய ஊழியர்கள் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன். இப்படியிருந்தால், அந்த அதிகாரிகள் எப்படி வேலை செய்வார்கள்? கிராமப்பகுதிகளில் கொச்சையாகச் சொல்லுவார்கள் "பாப்பாத்தி அம்மாள் மாடு வந்தது. . ." என்று. ஏதோ மாதம் முடிந்து, முதல் தேதி வந்தால் நமக்குச் சம்பளம் வருகிறது என்ற அளவில் அதிகாரிகள் மனம் உடைந்து போகும்படி அரசாங்கத்தை நடத்துகிறவர்கள் விடக்கூடாது. அத்தகைய அதிகாரிகளுக்குப் பின்பலமாக இருக்க வேண்டும், நல்ல நிர்வாகத்தை நடத்துவதற்கு வேண்டிய தைரியத்தை அவர்களுக்கு அளிக்க வேண்டும். ஆளுகின்றவர்களுக்கு என்ன குறை? அந்த அவையில் 234 பேருக்கு 180 பேர் இருக்கிறார்கள், இந்த அவையில் 63 பேருக்கு 40 பேர்கள் கிட்டத்தட்ட இருக்கிறார்கள். இரண்டு சபையிலும்



போதிய மெஜாரிட்டியை வைத்துக் கொண்டுள்ள ஒரு அரசாங்கம் தைரியமாக நிர்வாகம் நடக்க உத்தியோகஸ்தர்களுக்கு உதவியாக இருந்து, நிர்வாகம் திறம்பட நடத்துவதற்குப் பின்பலமாக இருந்து ஊக்குவிக்க வேண்டும். அதை இந்த அரசாங்கம் செய்யத் தவறியது என்றுதான் வருத்தத்தோடு சொல்ல வேண்டியிருக்கிறது.

அடுத்தபடியாக, மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஹோகனேக்கல் நீர் மின் விசைத்திட்டத்தைத் தாமதமில்லாமல் எடுத்துக்கொள்ள வேண்டும். கர்நாடகாவிலிருந்து இந்த மாநிலத்திற்கு வந்த அமைச்சர் ஒன்றைக் கூறி விட்டுச் சென்றார். ஹோகனேக்கல் மின்சார உற்பத்திக்கு இரண்டு அரசாங்கங்களும் சேர்ந்து வேலை செய்ய வேண்டுமென்று சொன்னார். அவர் அங்கே கர்நாடக சட்டசபையிலும் பேசினார். இனியும் தாமதம் செய்யாது, இரு அரசாங்கங்களும் ஹோகனேக்கல் புராஜெக்ட் சம்பந்தமாக இணக்கத்தோடு பணியாற்ற முன்வர வேண்டும். டில்லிக்குப் போய், ஹோகனேக்கல் புராஜெக்ட்டுக்கான சாங்ஷன் வாங்கிக்கொண்டு வந்தால், குறைந்த செலவில் அதிக மின் சக்தி உற்பத்தி செய்யலாம். இரண்டு மாநிலங்களும் ஒத்துழைத்து தாமதிக்காமல் இந்த புராஜெக்ட்டுக்கு சாங்ஷன் வாங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, நெய்வேலி மின்சக்தியின் விலை நமக்குக் கொஞ்சம் அதிகமாகிறது. எண்ணெயின் மூலம் உற்பத்தி செய்யப்படுவதால், செலவு அதிகமாகி, ஒரு யூனிட்டுக்கு 27 பைசா செலவாகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களின் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், கஷ்டகாலத்தில் விலையைப் பார்க்காமல் கிடைப்பதை வாங்கியிருக்க வேண்டும். அதிகமாக மின்சக்தியை உற்பத்தி செய்ய வேண்டாம், ஒரு குறிப்பிட்ட அளவு மட்டும் செய்தால் போதும் என்று அரசாங்கம் சொன்னதாக பொதுவாக ஒரு தகவலைத் தருகிறார்கள். இது உண்மையோ இல்லையோ, நம்முடைய மாநில அரசும், மின்சார வாரியமும் இந்த அளவுக்கு மேல் நெய்வேலி மின்சார உற்பத்தி தேவையில்லை என்று கூறியதாகச் சொல்லப்படுகிறது. அதை வசிஸ்டர் வாயால் பிரம்ம ரிஷி என்று சொல்லுவது போன்று அமைச்சர் அவர்கள் கூற வேண்டும். இந்த அரசு வேண்டாம் என்று சொல்லிவிட்டது என்று பொதுவாகப் பேசப்படுகிறது. அது எந்த அளவுக்கு உண்மை என்பதைச் சொல்லும்படி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்திற்கு மின் சப்ளையில் முன்னுரிமை கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்; ஏனெனில் உணவுக்குப் பின் தான் எந்த விஷயமும் என்று வைத்துக்கொள்ள வேண்டும். மக்களுக்கு உணவுதான் பிரதானம். உணவு

உற்பத்திக்கு முன்னுரிமை அளித்து மின்சாரம் வழங்கப்பட வேண்டும். அதுவும் தவிர, திடீர் திடீரென்று மின்சக்தியின் வால்யூம் குறைவதானல் ஏராளமான பம்ப்செட்டுகள் எரிந்து விடுகின்றன. பர்ன் ஆகிவிட்டால் என்றால் 300, 400 ரூபாய் வரை அதைப் பழுதுபார்க்கச் செலவழிக்க வேண்டியிருக்கிறது. இது பெரும் தொல்லையாக இருக்கிறது. ஆகையினால், விவசாயிகளுக்கு அம்மாதிரி வால்யூம் குறையாமல் குறிப்பிட்ட நேரத்தில் கொடுப்பதோடு, பகல் நேரத்திலேயே கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். தொழிற்சாலைகள் இரவில் ஓடினாலும் பரவாயில்லை. ஆனால் விவசாயிகளுக்கு இரவில் பம்ப்செட்டுகளுக்கு மின்சாரம் கொடுப்பதால், நண்பர் நாமக்கல் உறுப்பினர் திரு பெரியண்ணன் அவர்கள் கூறியது மாதிரி, ஒரே நாளில் இரண்டு சகோதரர்கள், இரவில் தண்ணீர் பாய்ச்சப் போனவர்கள், ஒரு தோட்டத்தில் பாம்பு கடித்து இறந்தார்கள். இது பரிதாபத்திற்குரிய விஷயம். இம்மாதிரி பல இடங்களில் நடக்கிறது. அவ்வாறு நடைபெறாமல் தடுப்பதற்கு மின்சாரத்தைப் பகலில் விவசாயத்திற்குக் கொடுத்து விட்டு, இரவில் தொழிற்சாலைகளுக்குக் கொடுப்பதில் தவறு இல்லை. ஒரே இடத்தில் உட்கார்ந்துகொண்டு இரவு எல்லாம் வேலை செய்யலாம். மின்சாரக் கஷ்டம் இருக்கிற காலத்தில், மின்சாரவெட்டு இருக்கிற காலத்தில், அம்மாதிரிச் செய்யலாம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5.40)

நமக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய நஷ்டத்திற்கெல்லாம் இன்னொரு முக்கிய காரணம் லைன் லாஸ் என்பது ஒரு புறமிருக்க—அதைப்பற்றி வருஷா வருஷம் பேசிக் கொண்டிருக்கிறோம்; எல்லா இடங்களிலும் இந்த லைன் லாஸ் இருக்கிறது, இதைக் குறைக்க வேண்டுமென்று நல்லெண்ணத்தோடு சொல்கிறோம்—திருடு அளவிற்கு மீறிப்போய்க்கொண்டிருப்பது. சென்னை நகரத்தில் பட்டப் பகலில் மின்சாரக் கம்பத்தின் மேல் ஏறி ஒருவன் டியூப்பை கழற்றிக் கொண்டிருக்கிறான். வெங்கடகிருஷ்ண அய்யர் ரோடில் நடந்துள்ளது. அங்கிருக்கிறவன் கண்டுபிடித்துச் சொல்ல போலீஸ் ஸ்டேஷனுக்கு எம். பி. தாமோதரன் அவர்கள் வீட்டிலிருந்து போன் பண்ணியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நேரங்களில் போலீசார் மின்சார வாரியத்தோடு ஒத்துழைக்க வேண்டும். பட்டப்பகலில் பல்பைக் கழற்றிக்கொண்டிருக்கிறார்கள், இப்படித் தான் கம்பிகளை வெட்டி எடுத்துக்கொண்டு போகிறார்கள். தெருவில் இருப்பவர்கள் என்ன நினைக்கிறார்கள்? வாரியத்தைச் சேர்ந்தவர்கள் ரிப்பேர் செய்கிறார்கள் என்று நினைப்பார்கள். ஆனால் இம்மாதிரித் திருடுகள் நடக்கின்றன. சென்னையிலிருந்து வரும் ஒரு முக்கியமான பத்திரிகையில் ஒரு மனிதன் கம்பியை வெட்டிக்கொண்டிருக்கும்போது [illegible]



கொண்டிருப்பதை படம் எடுத்துப் போடப்பட்டிருக்கிறது. இம்மாதிரி பல விஷயங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. ஆகவே இந்த மாதிரித் திருட்டைக் கட்டுப்படுத்தினால் போதும். இன்னும் மீட்டருக்கு வெளியிலேயே பவரைத் திருடி, பேக்டரிக்கு உபயோகிக்கிறார்கள் என்று புகார் வருகிறது. இதற்கு விஜிலன்ஸ் ஸ்க்வாட் போட்டு கவனித்தால் நல்லது. ஒரு சில லட்ச ரூபாய் இதற்காகச் செலவானாலும் பரவாயில்லை. இதனால் கோடிக்கணக்கான ரூபாய்களை மிச்சம் பிடிக்க முடியும். லைன் லாஸ் என்பது பெரும்பாலும் இது தான். மீட்டருக்கு வந்தது தான் கணக்குக்கு வந்து சேரும். மீட்டருக்கு முன்னாலேயே அதிலிருந்து திருடி பேக்டரிக்கு எடுத்துக்கொள்கிறார்கள் என்று சொன்னால், லைன் லாஸில் தான் போய்ச் சேரும். [illegible] இருப்பிலிருந்து குறைந்து விட்டதாகத் தான் கணக்குச் சொல்ல வேண்டி வரும். ஆகவே விஜிலன்ஸ் ஸ்க்வாட் ஏற்படுத்தி மின்சாரம் திருடுபவர்களைக் கண்டு பிடித்து தண்டிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

இந்த வெங்கடகிருஷ்ண அய்யர் ரோடில் பல்பு திருடியவனை போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோய் நிறுத்தி, கோர்ட்டில் நிறுத்தி, கேஸ் சரியாக நடத்தப்படாததால் அவனை விடுதலை செய்து விட்டார்கள் என்று நேற்று இரவு நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னார்கள். இம்மாதிரி கேள்விப்பட்டதால் தெரிகிறது. தெரியாமல் எத்தனையோ திருடுகள் நடக்கின்றன. எவ்வளவு திருடு நடக்கிறதோ தெரியவில்லை. சில லட்ச ரூபாய் செலவானாலும் பரவாயில்லை, விஜிலன்ஸ் ஸ்க்வாட் ஏற்படுத்த வேண்டும். திருடுகளைக் கண்டுபிடித்தால், கட்டணத்தை உயர்த்த வேண்டிய அவசியமில்லை. இப்படித் திருடுகளைக் கண்டுபிடித்தால் நஷ்டம் வராது, நஷ்டம் வரவேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நஷ்டத்திற்காக மின் கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்ற யோசனை அரசாங்கத்திற்கு இருப்பதாக அமைச்சரவர்கள் பேச்சிலிருந்து தெரிகிறது. இந்த யோசனையைக் கைவிட்டு விட வேண்டும். சீக்கிரமாக இப்படி ஸ்க்வாட் ஏற்படுத்தி இந்த நஷ்டத்தைக் குறைக்கவும், நிர்வாகத்தில் [illegible] உள்ள அதிகச் செலவை குறைத்தும் நஷ்டமில்லாமல் செய்ய [illegible] வேண்டும். அப்படியும் போதவில்லையென்றால், பிறகு பார்த்துக்கொள்ளலாம். [illegible] கூடிய அதிகச் செலவைக் குறைத்து, ஒழுங்கை [illegible], காலாகாலத்தில் ஆகும் ஒழுங்காக வேலை செய்தால், நஷ்டம் வராமல் [illegible] லாம். இப்படி நஷ்டத்தைக் குறைக்க எவ்வளவு [illegible] அவ்வளவு நடவடிக்கைகளையும் எடுத்து, நஷ்டத்தைக் குறைக்க [illegible] வந்தால் இந்தச் சபை தாராளமாக அதிக [illegible] [illegible] தொகையைக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் [illegible]

இல்லாமல் இயந்திரத்தைத் திருத்தியமைத்த பின்னும் நஷ்டம் வருமாயின், சபை முன் வந்து கேட்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே இந்த மின்சார வாரியம் நன்றாகச் செயல்படுவதற்கு இப்போது இருப்பதைக் காட்டிலும் அதிகமான ஒரு கவனத்தை வாரியத்தின் பால் அரசு செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரையில் 15 லட்ச ரூபாய்க்கான சாமான்கள் காணாமல் போய்விட்டன என்று தெரிகிறது. நாளாவட்டத்தில் இந்தச் சாமான்களையெல்லாம் திருடிக் கொண்டு போய்விட்டார்கள். வேலை செய்பவர்களே சாமான்களை எடுப்பதற்கான சீட்டைக் கொடுத்து விட்டு, சாமான்கள் வெளியே கொண்டுவரப்பட்டு எங்கோ மறைந்து விட்டன. முன்பொரு சமயம் இதே மதுரையில் தான் டிரான்ஸ்போர்ட் பஸ்களுக்குக் கட்டணம் செலுத்துவதாகச் சொல்லி பொய் சலான்கள் எழுதி வாங்கி மோசம் செய்தார்கள். இது 10 வருஷங்களுக்கு முன்பு நடந்தது. அப்போது கேஸ் போட்டு, தண்டிக்கப்பட்டது. அதே மாதிரி நடவடிக்கை எடுக்க வேண்டும். 15 லட்ச ரூபாய்க்கான சாமான்கள் திருடு போயிருக்கின்றன. திருடு போனவை கம்பிகளும், மற்றும் உள்ள சாமான்களும் என்பதைப் பத்திரிகையில் பார்த்தோம். இதில் அதிகாரிகளுக்குச் சம்பந்தம் இருக்கிறது; பெரிய அதிகாரிகளுக்கும் சம்பந்தம் இருக்கிறதென்று சொல்கிறார்கள். இதைத் தெளிவாக விளக்க வேண்டும். பொறுப்பற்ற முறையில் குற்றஞ்சாட்ட நான் தயாராக இல்லை. சரியானபடி விசாரித்துக் கடுமையான தண்டனை விதிக்க வேண்டும். 15 லட்ச ரூபாய் ஒரு கிளையில், மதுரையில், திருடு போவதென்றால், இது நன்றாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயமாகும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அமைச்சரவர்கள் மேலும் அதிக உற்சாகத்துடன் வேலை செய்து இந்தக் குறைகள் இல்லாமல் வாரியத்தின் நல்ல பெயர் மேலும் அதிகரிக்கவும் அது நல்ல முறையில் செயல்படவும் உதவவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்து, முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** மாண்புமிகு தலைவரவர்களே, தமிழ்நாடு மின்சார வாரிய நிதி நிலை அறிக்கை மீது இரண்டு, மூன்று நாட்கள் விவாதம் நடைபெற்று நமது மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களும், உறுப்பினர்களும், நல்ல கருத்துரைகளை வாரியம் சிறப்போடு விளங்க வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையில் அளித்திருப்பதாகக் கருதுகிறேன். எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பேசும்போது, இன்றைக்கு மின்சாரம் மனிதனுக்கு அத்தியாவசியத் தேவையாகிவிட்டது, இந்தக் காரணத்தினால் கட்சி சார்பற்ற முறையில் பொதுநல நோக்கோடு அணுக வேண்டுமென்ற நல்ல கருத்தின் அடிப்படையில் எடுத்துச் சொல்லி, வாரியத்தில் பல்வேறு நல்ல காரியங்கள்



நடைபெற்றிருக்கின்றன, இருந்தாலும் குறைபாடுகளையெல்லாம் போக்க வேண்டுமென்பதையும் எடுத்துச் சொன்னார்கள். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையை முழுமையாக படித்துப் பார்த்தவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். ஒவ்வொரு ஆண்டும் கொடுக்கிற விளக்கங்களைக் குறைத்துக் கொண்டு எதிர்நோக்கியிருக்கிற பிரச்சினைகளை மட்டும் தான் என்னுடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறேன். பொதுவாக இன்றைக்கு, தமிழ் நாட்டில் மட்டுமல்லாது, இந்திய உப கண்டத்தில் ஓரிரு மாநிலங்களைத் தவிர மற்ற எல்லா மாநிலங்களிலும் மின்சார வெட்டினை ஏற்கக் கூடிய நிலைமை பரவலாக இருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே, எல்லா ஊர்களுக்கும் மின்சாரத்தை விஸ்தரித்துவிட்டார்கள், உற்பத்தியைப் பெருக்காமல் மின்சாரம் கொடுத்தது தவறு, இல்லாவிட்டால் இவ்வளவு தூரம் மின்சார வெட்டு வந்திருக்காது என்று குற்றம் சாட்டுகிறார்கள். ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்தின் தவறுதலான போக்கின் காரணமாக மின்சார வெட்டு வந்து விட்டது என்று கருதுவார்களானால், அது தவறு. ஏதோ இந்த நாட்டில் ஒரு இடத்தில்தான், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி நடக்கிற மாநிலத்தில் தான் இன்றைக்கு இந்த நிலை என்பதில்லை. பெரும்பாலும் எல்லா மாநிலங்களிலும் மின்சார வெட்டு இருக்கிறது. நாமாவது மின்சார வெட்டினைச் சற்றுக் குறைத்திருக்கிறோம். காங்கிரஸ் கட்சி ஆளும் மாநிலங்களில் 60 சதவீத வெட்டு இன்றைக்கும் இருந்துகொண்டிருக்கிறது. மின்சாரப் பற்றாக்குறை என்பது நாடு முழுவதும் இருக்கிறது. இது மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறதென்பதை உணர்ந்திட வேண்டும். நாடு முழுவதும் எவ்வளவு மின்சாரம் பயன்படுத்தப்படும் என்று கணக்கிட்டு, அந்தத் திட்டங்களை எல்லா மாநில அரசுகளும் சேர்ந்து நிறைவேற்றியிருந்தால், இந்த 27 ஆண்டுகளுக்குப் பின்னாலே நல்ல வேலை வாய்ப்பினை, விவசாய உற்பத்தியினை, தொழில் அபிவிருத்தியினை நாம் பெற்றிருக்க முடியும். இன்றைக்கு நாடு முழுவதும் இப்படிப்பட்ட பிரச்சினை ஏற்பட்டதற்குக் காரணம் இது தான். நான் ஏதோ குற்றச்சாட்டு சாட்டுகிறேன் என்று எண்ணக் கூடாது. இந்த அரசைப் பொறுத்த அளவிலே, வாரியத்தைப் பொறுத்த அளவிலே, குற்றச் சாட்டுகள் உண்மையிலேயே இருக்குமானால், தலைவணங்கி விடை சொல்வதற்குக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

(பிற்பகல் 5-50)

இன்று இருக்கின்ற நிலைமைக்கு அல்லது சூழ்நிலைக்கு யார் காரணம் என்பதை நம் எதிர்க்கட்சித் தலைவரவர்கள் அறியாமல் இல்லை. ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலமாகவும் ஒவ்வொரு மாநிலத்திலும் எந்த அளவுக்கு விவசாய உற்பத்தியை அதிகமாக்க முடியும், தொழில் அபிவிருத்தியை எந்த அளவுக்குச்

செய்ய முடியும், அவைகளுக்கு எவ்வளவு மின்சாரம் தேவைப் படுகிறது என்பதையெல்லாம் கணக்கிட்டு, ஐந்தாண்டுத் திட்டங்கள் பிளான் ஸ்கிம் என்று சொல்வார்களே, அவற்றின் மூலமாக, மத்திய அரசு மூலமாக ஒவ்வொரு மாநிலத்திற்கும் தொகை ஒதுக்கப்பட்டு நிர்ணயிக்கப்படுகிறது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், ஏன் மற்ற மாநிலங்களைப் பொறுத்த அளவிலும் கூட, டெல்லி தீர்மானத்தின் அடிப்படையிலே மாநிலத்தின் சிறப்பான திட்டங்களை ஆராய்ந்து, மாநிலங்களில் இருக்கின்ற சாத்தியக் கூறுகளை மனதில் கொண்டு, எந்தெந்தத் திட்டங்களுக்குப் பணம் ஒதுக்க வேண்டும், எந்தெந்தத் திட்டங்களை நிறைவேற்ற எவ்வளவு தொகை தர வேண்டும் என்று வாதத்திற்கு வைத்துப் பேசுகின்றோம். தமிழ் நாட்டைப் பொறுத்த அளவில், அங்கத்தினர்கள் 'எல்லாம் காங்கிரஸ்காரர்கள் காலத்திலே போட்டுவிட்ட திட்டம். அதைத்தான் நீங்கள் நிறைவேற்றினீர்கள். நீங்கள் ஒன்றும் புதிதாகத் திட்டம் போடவில்லை, நிறைவேற்றவில்லை' என்று சொன்னார்கள். ஒவ்வொரு திட்டமும் நிறைவேற எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதையும் நாம் தெளிவாகச் சொல்லியிருக்கின்றோம். அது அவர்களுக்குத் தெரியாதது அல்ல. இதற்குப் பின்னர் கூட பல்வேறு திட்டங்களை நாம் முடித்திருந்தாலும், மாநிலங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவில், பிளான் அளவிலே, திட்டத்திலே எந்த வழிவகையும் செய்யப்படவில்லை என்பதுதான், நம் திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் இருப்பதற்கு முக்கிய காரணமாகும். நாம் இதை உணர்ந்தாக வேண்டும். இன்றைக்கு அப்படிப்பட்ட சூழ்நிலைதான் இருக்கிறது. தமிழ் நாட்டிலே மட்டும்தான் மின்சாரப் பற்றுக்குறை என்பதல்ல. இந்தியாவிலுள்ள மற்ற எல்லா மாநிலங்களிலும் பொருளாதாரத்தை நசுக்கக்கூடிய அளவுக்கு சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது என்பதை நாட்டு மக்கள் உணர்ந்த பின்னரும், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது வரக்கூடிய திட்டங்களில், 10 ஆண்டுக் காலத்தில் இந்தச் சிரமத்தைப் போக்கக்கூடிய அளவுக்கு, மின்சாரத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றதா என்று சொன்னால், வேண்டிய அளவிலே ஒதுக்கப்படவில்லை. இன்றைக்கு இருக்கின்ற நிலை என்ன? உணவுப் பற்றுக்குறை நம் நாட்டில் இருக்கின்றது. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டுமென்று பேசிக்கொண்டிருக்கின்றோம். இன்றைக்குத் தொழிற்சாலைகள் வளர முடியவில்லை, எல்லா மாநிலங்களிலும் மின்வெட்டு இருக்கிறது என்று சொல்லி வருகின்றோம். இன்றைக்குப் போடப்படுகின்ற திட்டத்திலாவது மற்றச் செலவுகளைக் குறைத்து, நமது பொருளாதாரம் சீர்குலையாமல் இருக்க, பொருள்கள் உற்பத்தி, உண்பதற்கு உணவு உற்பத்தி இவைகளைச் செய்ய வேண்டுமென்றும், மின்சாரத்தின் மூலமாகத்தான் செய்ய முடியும், விவசாய முன்னேற்றம் காண முடியும் என்று தெரிந்த பின்னரும் கூட, இந்த ஐந்தாண்டுத் திட்டத்திலே மின்சார உற்பத்திக்காக அவர்கள் போதிய தொகை ஒதுக்குவதாக இல்லை. தமிழ் நாட்டைப்



பொறுத்த அளவிலே சொல்கின்றேன். தமிழ் நாடுதான் இன்று மின் உற்பத்தி
யிலே முன்னணியில் இருக்கிறது. 2000 மெகாவாட்டுக்கு மேல், 'இன்ஸ்டால்ட்
கேபாசிடி' என்று சொல்கின்றார்கள். அது உற்பத்தித் திறன் என்பது. உற்பத்
தித் திறன் என்பது வேறு. 'எபக்டிவ் கெபாசிடி', உற்பத்தி செய்யக்கூடிய
திறன் என்பது வேறு. உற்பத்தித் திறன் என்று சொன்னால் மின்சாரம் உண்
டாக்குவது. 220 மெகாவாட் பெரிய டன்னல் ஸ்கீமில். மேட்டூரிலே 200 மெகா
வாட் இருக்கிறது. அதுதான் உற்பத்தித்திறன். ஆனால் ஓட்டுகின்றபோது
எவ்வளவு ஓட்ட முடியும் என்பதுதான் 'எபக்டிவ் கெபாசிடி' என்று
சொல்வது. 'எபக்டிவ் கெபாசிடி' என்று சொல்வது 'செல் திறன்'. அந்த
அளவுக்குப் பார்க்கின்றபோது, அதிகமாக இன்ஸ்டால்ட் கெபாசிடி தமிழ்
நாட்டில் இருக்கிறது. பெரும்பாலான மின்சாரம் நல்ல மின் நிலையங்களின்
மூலமாக உற்பத்தி செய்யப்படுகிறது.

இரண்டாவது அனல் மின்சாரம். அனல் இருந்தால்தான் மின்சாரம்
எடுக்க முடியும். அதைப் பொறுத்த அளவிலே, பேசின் பிரிட்ஜ் ஆனாலும் சரி,
எண்ணூர் ஆக இருந்தாலும் சரி, நெய்வேலி ஆனாலும் சரி, அங்குள்ள உற்பத்
தியை இன்னும் அதிகமாக்க வேண்டுமென்ற கருத்திலிருந்து நாங்கள் கொஞ்
சம் கூட மாறி நினைக்கவில்லை. இருக்கின்ற உற்பத்தியைச் சற்று அதிகப்படுத்த
வேண்டும். நடைமுறைச் சூழ்நிலையில் உள்ள குறைகளைத் தவிர்க்க வேண்டும்.
பல்வேறு விதமான குறைகளைப் போக்க வேண்டும் என்ற அளவில் பொதுவாக
அறிவுரைகள் சொல்லியிருப்பதை நான் உள்ளபடியே வரவேற்கின்றேன். ஏதா
வது செய்து இன்னும் சில யூனிட்டுகள் அதிகமாக உற்பத்தி செய்ய முடியுமா
என்பதற்காக உள்ளபடியே நாங்கள் கவனம் எடுத்துக்கொண்டிருக்கின்றோம்.
அதைத் தீவிரமாகச் செய்வோம் என்றும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.
ஆனால் நிலைமை என்ன? இன்று எப்படி இருக்கின்றது? தமிழ் நாட்டைப்
பொறுத்த அளவில், 'ஊரெல்லாம் ஒளி மயம்' என்ற திட்டத்தினை, நமது முத
லமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலேயே
இங்கு அறிவித்தார்கள். 'அகலக் கால் வைத்து விட்டீர்கள், அதனாலேதான்
மின்சார வெட்டு ஏற்பட்டுவிட்டது' என்று சொல்கின்றார்கள். இன்றைக்கும்
சொல்கின்றேன். இந்தியாவிலேயே இருக்கின்ற நிலைமை இதுதான். ஆனால்
சரியாக 600 மெகாவாட் நமது அனல் மின் நிலையங்கள் மூலமாகப் பெற்று,
சுமாராக நல்ல மழையும் பெய்யுமேயானால், இன்றிருக்கின்ற நிலைமையை
வைத்துக்கொண்டு ஓரளவுக்கு நாம் தன்னைக் கட்டிக்கொள்ள முடியும், தம்
தேவையைப் பூர்த்திசெய்து கொள்ளமுடியும். இன்னும் 200 மெகாவாட், 400
மெகாவாட் மின்சாரம் கூட உபரியாக இரவு நேரங்களில் பயன்படுத்த
முடியாமல் சில சமயங்களில் இருந்து வருகின்றது. இதுவரையில் எந்த

அளவுக்கு நாம் மின்சாரத்தை புத்திசாலித்தனமாகப் பயன்படுத்த முடியுமோ அந்த அளவு பயன்படுத்துகிறோம். எல்லா விவரங்களையும் நான் சொல்லவில்லை. இந்த மாநிலம் இப்படி, அந்த மாநிலம் அப்படி என்பதையெல்லாம் சொல்லலாம் அதையெல்லாம் கணக்கிட்டுப் பார்த்தால், உற்பத்தியில் தமிழ் நாடுதான் முன்னணியில் இருக்கிறது என்பதைப் பல கட்டங்களிலே சொல்லியிருக்கின்றேன். அதையெல்லாம் சொல்லிக்காட்ட நான் விரும்பவில்லை. மின்சாரத்தைப் பயன்படுத்தி, 1967-ல் கிட்டத்தட்ட 2,60,000 பம்பு செட்டுகள் தமிழ் நாட்டில் இருந்தன. தஞ்சையில் மட்டும் உணவு தானிய உற்பத்தி என்று பொருள் அல்ல, வைகையில் மட்டும் உணவு தான்ய உற்பத்தி என்று பொருள் அல்ல. இன்றைக்குத் தமிழ்நாட்டைப் பார்த்தால் 7 லட்சம் மின்விசை ஏற்றங்கள் மூலமாக உணவு தானிய உற்பத்தி செய்யப்பட்டு பல்வேறு மாவட்டங்கள் தன்னிறைவு பெற்றிருக்கின்றன. 1967-க்குப் பின்னர் ஒரு விரைவுத் திட்டம் போட்டோம். சமத்துவப் பொருளாதாரம் உருவாவதற்கு அந்த விரைவுத் திட்டம் எப்படிப் பயன்பட்டது என்று பார்க்க வேண்டும். சில மாவட்டங்களிலே, சில கிராமப் புறங்களிலே, நகர்ப்புறங்களிலே, வசதியான இடங்களிலே, மின்சாரக் கம்பி இருந்த காரணத்தால் தான், நாம் விசையேற்றங்களுக்குப் பயன்படுத்த முடியும் என்ற நிலைமை போய்விட்டது. இன்றைக்கு இந்தக் கிராம மக்கள் வசதித் திட்டம் மூலமாக நாடு முழுவதும் மின்சாரம் கொடுக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. பரவலாக விவசாயிகளுக்கும் உற்பத்தியைப் பெருக்குகின்ற அளவிலே, சம வாய்ப்பினை அளிக்கின்ற அளவிலே விசையேற்றங்களைக் கொடுக்கக் கூடிய அளவுக்கு ஒரு நல்ல முற்போக்கான சூழ்நிலை உருவாக்கப்பட்டிருப்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். ஏதோ கிராமங்களில் மின்சாரம் போடுவதனாலேயே மின்சாரம் செலவழிந்து விட்டது என்று சொல்வது முற்றிலும் பொருந்தாத விஷயமாகும். அதனால்தான், மின்சார வெட்டு வந்துவிட்டது என்று சொல்வதும் பொருந்தாததாகும். நான் இது குறித்து கணக்குகளையெல்லாம் சொல்லியிருக்கிறேன். மாநிலம் முழுவதும் விளக்குகள் இருந்தாலும், ஒரு பர்செண்ட் கூட மின்சாரம் செலவாகாது என்ற கணக்கையும் சொல்லியிருக்கிறேன். மற்ற கணக்குகளும் சொல்லியிருக்கிறேன். பொருள்கள் உற்பத்திக்காக தொழிற்சாலைகளுக்கெல்லாம் 50 சதவிகிதம் பயன்படுகிறது. விவசாயிகளுக்கு இருக்கின்ற விசையேற்றங்களுக்காக 25 சதவிகிதம் பயன்படுகிறது. ஆகவே கிராமங்களுக்கு மின்சாரம் கொடுத்ததால்தான் மின்சாரப் பற்றாக்குறை வந்துவிட்டது என்று சொல்வது பொருத்தமற்ற கருத்தாகும் என்பதையும் சொல்லிக்கொள்கின்றேன். தமிழ் நாட்டைப் பொறுத்த அளவில், இந்த நிலைமைகளையெல்லாம் சரி செய்து இன்னும் சீராக எந்த அளவுக்கு நாம் மின்சார வாரியத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாமோ அந்த அளவுக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம். நம் நாட்டு மக்களுக்குச் சேவை செய்யவேண்டும்



என்பதைப் பொறுத்து எந்த ஆட்சேபனையும் இல்லை. செய்வதற்குத் தயாராக இருக்கின்றோம். ஆனால் நிலைமை என்ன? இன்று இருக்கக்கூடிய நிலைமை, விலை ஏற்றம். நிலக்கரி விலை அதிகமாகிவிட்டது. நிலக்கரி வட மாநிலங்களிலிருந்து வரவேண்டியதாக இருக்கின்றது. அதுதான் 'லேமண்டேஷன்' என்பது. அந்த வார்த்தை 'சோகக் கதை' என்பதைக் குறிக்கிறது. இதை மன வருத்தத்தோடு நமது மதிப்பிற்குரிய அங்கத்தினர் திரு. தாமோதரன் அவர்கள்தான் சொன்னார்கள். அந்த நிலைமையில்தான் தமிழ்நாடு இருக்கிறது என்று சொன்னார்கள். நிதி நிலைமை மோசமாகத்தான் இருக்கின்றது. ஏதாவது டாரிஃபை மாற்றிப் போட்டால் தான் முடியும் என்பதை நான் உணர்கின்றேன். எந்தவிதத்தில் 'அதைச் செய்யப்போகிறீர்கள்? அதையெல்லாம் கலந்தாலோசித்துச் செய்ய வேண்டும்' என்ற ஒரு நல்ல ஆலோசனையை அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு இருக்கின்ற நிலைமையில் மின்சாரக் கட்டண உயர்வு இல்லாமல், எந்த விதத்தில் நிதிப் பற்றாக்குறையை போக்க முடியும் என்பதற்கு அறிக்கையைப் படித்துப் பார்த்து யாராவது நல்ல ஆலோசனையைச் சொல்லியிருந்தால், நான் அந்தப் பிரச்சினைக்கு போகாத அளவுக்கு இருந்திருப்பேன். எனக்கும் நன்றாக இருக்கும். அகலக்கால் வைத்து விட்டீர்கள் என்று சொல்கின்றவர்களே, கிராமங்களில் பம்புசெட்டுக்கு மின்சாரம் கொடுக்க வேண்டும் என்று சொல்கின்றார்கள். அவர்களே மின்சாரம் பம்புசெட்டுக்கு அதிகமாகக் கொடுக்கவேண்டும் என்று சொல்கின்றார்கள். கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று ஒரு பக்கம் கேட்கிறார்கள். மறுபக்கம் கொடுத்ததால் பற்றாக்குறை வந்துவிட்டது என்கின்றார்கள். இதே சமயத்தில் மின்சாரக் கட்டணத்தையும் உயர்த்தக்கூடாது என்று சொல்கின்றார்கள். ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்தாக இருக்கின்றது. மின்சாரத்தை அதிகமாக விஸ்தரிக்கக்கூடாது என்று சொல்லிவிட்டு மின்சாரக் கட்டணத்தையும் அதிகரிக்கக்கூடாது என்று சொல்வது இன்றிருக்கின்ற நிலைமையில் எப்படிப் பொருந்தும் என்பதை நாம் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும்.

கேரளா அல்லது மைசூரை எடுத்துக்கொண்டால், நீர் மின்சாரம், தண்ணீரிலே மின்சார உற்பத்தி செய்வது. பல சமயங்களில் மன்றத்திலே கூட சொல்லியிருக்கின்றேன் என்று கருதுகிறேன். தண்ணீர் மூலமாக எடுக்கின்ற மின்சாரம் விலை மிகக் குறைவாக இருக்கும் என்று தெரியும். இந்த மாதம் ஒரு டன்னுக்கு ரூ. 100 விலை கூட்டியிருக்கின்றார்கள். 'ரெயில்வே பிரெயிட்' அதிகமாகியிருக்கின்றது. நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து நிலக்கரி வர வேண்டும். நிலக்கரி வருவதிலேகூட. பல்வேறு இடர்ப்பாடுகள் இருக்கின்றன. இதையெல்லாம் பார்த்துத்தான், தமிழ் நாட்டிலே உன்னதமான, எல்லோரும் எதிர்

பார்க்கக்கூடிய, தமிழ் நாட்டினுடைய வருங்காலப் பொருளாதாரத்தை நல்ல முறையிலே உருவாக்கக்கூடிய எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு திட்டம் இரு மன்றங்களிலும் தீர்மானமாகப் போடப்பட்டது. அந்த மாதிரியான சாத்தியக்கூறுகள் உள்ள திட்டம் இன்றைக்கு இந்தியாவிலே இல்லை என்று சொல்ல முடியும்.

அடுத்து, நெய்வேலி இரண்டாவது நிலக்கரிச் சுரங்கம். நாம் அதைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கின்றோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆனாலும் சரி, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் ஆனாலும் சரி, நானா னாலும் சரி, டெல்லிக்குச் சென்று கேட்டால், அவர்கள் என்ன சொல்கின்றார்கள்? It is a quite feasible scheme. We agree with you" என்று சொல்லிவிட்டு கடைசியிலே பணம் தான் இல்லை என்கின்றார்கள். அவர்கள் இப்படித்தான் பேசிக்கொண்டிருக்கின்றார்கள். இன்றைக்கு நாடு இருக்கின்ற நிலைமையில், பல்வேறு நீர் மின்சாரத் திட்டங்களையெல்லாம் நாம் முடித்துவிட்டோம். அனல் மின்சாரம்பற்றிச் சொல்லும்போது, இதைப் பின்னாலே பார்த்துக்கொள்ள வேண்டியதுதானே என்று சொல்கின்றார்கள். உடனடியாகக் காலதாமதமின்றி செய்ய வேண்டிய ஒரு திட்டம். நம் பொருளாதாரம் சீர்படுவதற்கு, தமிழ் நாட்டிற்கு மட்டும் அல்ல, இந்தியாவுக்கும் பலன் அளிக்கக்கூடிய 1,600 மெகாவாட் உற்பத்தியாகும் ஒரு பெரிய தேசியத் திட்டம்; தேசப் பொருளாதாரம் வளரக்கூடிய அளவுக்கு மிகப் பெரிய சாத்தியக்கூறுகள் உள்ள ஒரு திட்டம் தான் நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத் திட்டம். அதைப் பற்றி நாம் பல ஆண்டுக் காலமாகப் பேசிக்கொண்டிருக்கின்றோம். நான்தான் சொன்னேன் என்று பெருமையாகக் கூட சொல்லிக்கொள்ள விரும்பவில்லை. காங்கிரஸ்காரர்கள் காலத்திலே இருந்த மாண்புமிகு திரு. பக்தவத்சலம் அவர்களே இந்த நெய்வேலி சுரங்கத்தைப்பற்றிப் பேசியிருக்கின்றார்கள். 10 ஆண்டுகளுக்கு முன்னரே. தமிழ் நாட்டிலிருந்து இந்த அபாயச்சங்கை ஊதி யிருக்கின்றோம். ஆனால் அபாயமே ஏற்பட்ட பின்னரும், அந்த ஆபத்தைத் தடுத்துக்கொள்கின்ற நிலைமையிலேகூட, இந்தத் திட்டத்தினை நிறைவேற்று வதற்கான அமைப்போ வசதியோ இல்லை. என்னைப் பொறுத்த அளவிலே, தான் மிகவும் மனவேதனைப்படுகின்றேன். தமிழ் நாட்டைப் பொறுத்த அளவில், பல்வேறு திட்டங்களை, புதுக் திட்டங்களை அனுமதித்திருக்கின்றார்கள். இருக்கின்ற திட்டங்களை மிகமிக வேகமாக நிறைவேற்றி, உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதற்காக, சென்ற ஆண்டு தனியாக 'உற்பத்திக் கழகம்' 'பவர் ஜெனரேஷன் கார்ப்பரேஷன்' என்ற ஒன்று அமைப்பதற்கான உத்தரவெல்லாம் போடப்பட்டது. அதன் மூலமாக புதிதாக இருக்கக்கூடிய திட்டங்களை நிறை வேற்றலாம். இப்போது கன்ஸ்ட்ரக்‌ஷனை மட்டும் எடுத்துக்கொள்ளலாம் என்று



நினைக்கின்றேன். விநியோகத்தைத் தனியாகப் பிரித்து விட்டால், நிர்வாகத்திற்குக்கூட பல்வேறு சீர்திருத்தங்களைச் செய்வதற்கு நல்ல வசதியாக இருக்கும் என்ற கருத்தின் அடிப்படையில்தான், 'பவர் ஜெனரேஷன் கார்ப்பொரேஷன்' ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. அதன் பணி விரைவிலே தொடங்கவிருக்கின்றது.

(பிற்பகல் 6.00)

சேர்வலாறு, நெல்லித்துறை, தூத்துக்குடி, சுருளியாறு போன்ற, நாம் அனுமதி பெற்றிருக்கிற திட்டங்களை உடனடியாக, இப்பொழுது புதிதாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற இந்தக் கழகத்தின் வாயிலாக, எடுத்து வேலை செய்யத் தொடங்க இருக்கிறோம் என்பதையும் நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. கே. ராஜாராம்:** தலைவர் அவர்களே, புதிதாக ஆரம்பிக்க இருக்கும் இந்த பவர் ஜெனரேஷன் கார்ப்பரேஷனிடம் ஏற்கெனவே இருக்கக்கூடிய மின்சார உற்பத்தி நிலையங்களையும் ஒப்படைப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவர் அவர்களே, தேசிய வங்கிகளிடமும், எல்.ஐ.சி. போன்ற நிறுவனங்களிடமும் கடன் வாங்கவேண்டுமென்றால், திட்டங்கள் லாபகரமானதாக இருக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். ஜெனரேஷனைத் தனியாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பது இந்திய அரசின் ஆலோசனையும் ஆகும். மைசூரிலே அப்படி வைத்திருக்கிறார்கள். இப்பொழுது இருக்கின்ற மின்சாரச் சட்டத்தின்படி, ஏற்கெனவே இருக்கின்ற மின்சாரம் உற்பத்தி செய்யும் நிலையங்களை இந்தக் கழகத்திற்கு மாற்றிவிட முடியாது. அந்தச் சட்டத்திற்கு பாராளுமன்றத்தில் திருத்தம் செய்ய வேண்டும். அதற்குப் பிறகுதான் எடுக்க முடியும். ஆகவே சட்டத்தில் இடமில்லாத காரணத்தால், உடனடியாக புதிய வேலைத் திட்டங்களை எடுக்கத் தான் உத்தேசம். பின்னாலே சட்டம் கொண்டுவருவதாக மத்திய அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்குப் பிறகு ஜெனரேஷனைத் தனியாக வைத்து, ஏற்றுக்கொள்ளலாம் என்று இருக்கிறோம்.

அடுத்தபடியாக, இன்டர்-ஸ்டேட் ஸ்கீம் என்று ஹொகனேக்கல் திட்டத்திற்கு முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குப் போகிறபோது உடனடியாக அனுமதி பெற்று வரவேண்டும் என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். இந்தத் திட்டம் இருமாநிலத் திட்டம். நமது மாநில அமைச்சர்களும், கர்நாடக மாநில அமைச்சர்களும் சந்தித்துப்பேசி, எப்படி முடிக்கலாம் என்று பார்த்தாலும், முடிகின்ற தருவாயில் நிலைமை இல்லை. 'நீங்கள் ஒரு திட்டத்தைத் தனியாகத் தீட்டுங்கள். நாங்கள் ஒரு திட்டத்தைத் தயார் செய்கிறோம்.—

இரண்டையும் ஒப்பிட்டு, எதைக் கூடிய சீக்கிரம் முடிக்க முடியுமோ அதை ஒரு சமரசத் திட்டமாக எடுத்துக்கொள்ளலாம்' என்று பேசி, அவர்கள் ஒரு தனித் திட்டம் தயாரிக்கின்றார்கள். நமது மாநிலத்திலே ஒரு திட்டத்தைத் தயாரிக்கின்றோம். இரண்டும் தயாரான பிறகு, இரண்டு பேரும் உட்கார்ந்து பேசி, முடிவான கருத்தை எடுக்க இருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தெரு விளக்குகளைப்பற்றிச் சொன்னார்கள். பலவிடங்களிலே தெருவிளக்குகள் எரியவில்லை, அவற்றை நன்றாகப் பராமரிக்க வேண்டும் என்று சொல்கிற பொது அம்சத்தை அப்படியே ஏற்றுக்கொள்கிறேன். அதற்காக எல்லா இடங்களிலும் நிலைமை இப்படி இருக்கிறது என்று சொல்வது சரியல்ல. மீட்டர் வேண்டும் என்று சொன்னார்கள். சென்ற ஆண்டு மீட்டர் வாங்கிக் கொடுக்க உத்தரவு போடவில்லை. அதற்குக் காரணங்கள் பல. மீட்டர் வைத்தால், ஒரு யூனிட்டுக்கு எவ்வளவு சார்ஜ் விதிப்பது என்ற தகராறு இருக்கிறது. அதைப்பற்றி உள்ளாட்சித் துறை அமைச்சரும் நானும் பேசிக்கொண்டிருக்கிறோம். கொள்கை அளவில் ஒப்புக்கொண்டால், ஏற்கெனவே கொடுத்த கட்டணத்தைவிட அதிகமாகப் போகும் என்கிறார்கள், சிலர் குறையும் என்கிறார்கள். மீட்டர் வைப்பதிலே சிக்கல் இல்லை. கட்டுப்பாடு இருந்தால், வேண்டிய அளவு உற்பத்தி செய்து தருகிறோம் என்கிறார்கள். எவ்வளவு கட்டணத்தை வைத்துக்கொள்ள வேண்டும் என்பது பற்றிய குறிப்பிட்ட ஃபைல் அவர்களிடத்திலே இருக்கிறது. வெருளிரைவிலே பேசி கட்டணத்தைத் தீர்மானித்தவுடனே, மீட்டர் வைத்துக்கொள்ளக்கூடிய பணியும் மேற்கொள்ளப் படும். இல்லாவிட்டால் மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கா அவர்கள் சொன்னதுபோல், மீட்டரை அவர்களே வைத்துக்கொள்வது என்றாலும் வைத்துக்கொள்ளலாம் என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, இழப்பு ஏற்படுவதைச் சரிக்கட்டினால், மின்சார வாரியத்தின் நிதி நிலைமை சரியாகிவிடும் என்று சொல்வது சரியான கூற்று அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், இழப்பைக் குறைக்க வேண்டும் என்பதை நான் உள்ளபடியே ஏற்றுக்கொள்கிறேன். இழப்பு முழுவதும் திருட்டிலே போய்விடுகிறது என்பதும், அதை நிறுத்தினால் இழப்பே குன்றந்துவிடும் என்று சொல்வதும் தவறான கருத்தாகும். இப்பொழுது நிலைமை என்ன? நல்ல முறையிலே இருக்கக்கூடிய நிர்வாகத்திலே இழப்புகள் 10, 15 சதவிகிதம் தவிர்க்க முடியாத அளவுக்கு இருக்கின்றன. இந்தியா முழுவதிலும் உள்ள நிலைமை என்ன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். இரண்டு மாதத்திற்கு முன்பு டெல்லியிலே தீர்ப்பாசன, மின்சார அமைச்சர்கள் மாநாட்டிலே கேட்டி



ருக்கிறேன். அங்கே எல்.ஐ.சி. சேர்மன் 15 சதவீதத்துக்கு மேலாக இழப்பு இருந்தால் அதற்கு எல்.ஐ.சி. கடன் வழங்கத் தயாராக இல்லை என்றார்கள். அப்பொழுது நான் சொன்னேன் '15 சதவீதத்துக்குக் குறைவாக யாராவது இந்தியாவிலே இழப்பு வைத்திருக்கிறார்களா? கடன் கொடுக்கக்கூடாது என்பதற்காக இப்படி யோசனை சொல்கிறீர்களா?' என்றேன். மேலும் சொன்னேன், தமிழ் நாட்டிலே 2.75 லட்சம் கிலோமீட்டர் நீளம் கம்பி இருக்கிறது. இந்தக் கம்பி நீளத்தை ஒப்பிட்டுப் பார்த்தால், இந்தியாவிலே மிகவும் குறைவான இழப்பை உடையது தமிழ் நாடு தான். உத்தரப் பிரதேசத்தில் 26 சதவிகிதம் இழப்பு. பஞ்சாபிலே—அது அதிகமாக மின்சாரம் பயன்படுத்தக்கூடிய மாநிலம்—அதிகம் இழப்பு இருக்கிறது. அதிகமான மின்சாரத்தைப் பயன்படுத்தக்கூடிய மாநிலங்கள் நான்கைந்து இருக்கின்றன. பஞ்சாப், அரியானா, உத்தரப்பிரதேசம், ஆந்திரா, தமிழ்நாடு போன்றவைகள்தான் அவை. அரியானாவிலே 28 சதவிகிதம் இழப்பு. ஆனால் அங்கே கம்பி நீளம் 66 ஆயிரம் கிலோமீட்டர். இழப்பு 28.52 சதவிகிதம், ஆந்திராவிலே 1,65,000 இழப்பு, 20 சதவிகிதம். தமிழ் நாட்டிலே கிட்டத்தட்ட 18 சதவிகிதம் இழப்புதான். ஆனால் கம்பி நீளம் 2.75 லட்சம் கிலோ மீட்டர். இதைப் பார்க்க வேண்டும். வாய்க்காலிலே தண்ணீர் வந்தால் தரை கொஞ்சம் தண்ணீரை உறிஞ்சிக்கொள்ளும். இந்த 2.75 லட்சம் கிலோமீட்டர் வாய்க்காலில் 27 லட்சம் மடைகள் வைத்திருக்கிறோம். மடையிலே சிலர் எடுத்துக்கொள்ளலாம். இல்லை என்று சொல்லவில்லை. இவர்களில், சாதாரணமானவர்கள், தொழிலதிபர்கள், விவசாயிகள் போன்றவர்கள் இருக்கிறார்கள். களவு போகிறது என்றால் இவர்கள்தான் எடுக்கிறார்கள். இதைக் குறைப்பதற்கு மார்க்கம், வழிமுறைகள் ஆகியவற்றை இதுபோன்ற விவாதத்திலே சொல்லி, அதன்படி நடவடிக்கை எடுத்தீர்களா என்றால், அதற்குப் பதில் சொல்வேன். சென்ற ஆண்டு இதில் தனியாக கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். நான் அதற்கு உறுதி அளித்தேன். அதன்படி ஒவ்வொரு மாவட்டத்திலேயும் ஒரு 'சர்ப்ரைஸ் இன்ஸ்பெக்ஷன் ஸ்குவாட்' போட்டு, இரண்டு இன்ஜினியர்கள், நான்கு டெஸ்டர்கள், இரண்டு ஹெல்பர்கள் போடப் பட்டிருக்கிறார்கள். அதன்மூலம் சென்ற ஆண்டு மாநிலம் முழுவதும் 'சர்ப்ரைஸ் இன்ஸ்பெக்ஷன்' என்று திடீரென்று போய் பரிசீலனை செய்து 31,800 இடங்கள்—சர்வீஸ்கள்—சோதனை செய்யப்பட்டன. எத்தனை இடங்களிலே திருடுகிறார்கள், மீட்டர்களை மாற்றி வைத்திருக்கிறார்கள், தவறுதலாகப் பயன்படுத்துகிறார்கள் என்று பார்த்திருக்கிறார்கள். 204 பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. 31,800 கன்ஸ்யூமர்களை—உபயோகிப்பவர்களை திடீரென்று பரிசோதனை செய்ததன் விளைவாக, 107 இல்லிசிட் டேப்பிங், மின்சாரத்தைத் திருட்டு செய்தவர்கள்; மீட்டரிலே கோளாறு செய்து அதை

இயற்கையாக நேர்ந்துவிட்டதுபோன்று டேம்ப்ரிங் செய்தவர்கள் 97 பேர். இதன் மூலம் அபாராதத் தொகையாக 1.6 லட்ச ரூபாய் 204 பேர்களிடம் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு இன்றைக்குள்ள கிரிமினல் சட்டப்படி என்ன செய்ய முடியும் என்ற சாத்தியக்கூற்றைப் பார்க்க வேண்டும். 79 பேர் மேலே தான் கேஸ் போடமுடிகிறது. வீட்டிற்குள்ளே செய்துகொள்கிறார்கள். மீட்டரை ஓட்டை செய்கிறார்கள். அதற்கு சாட்சி தேவை. அந்த வீட்டிலேயே நமக்கு சாட்சி சொல்ல யார் தயாராக இருப்பார்கள்? சாட்சி இல்லாமல் வழக்குப்போட்டால், நீதிமன்றத்திலே நிற்குமா என்பது போன்ற சங்கடங்கள் பல இருக்கின்றன. இப்பொழுது இன்ஸ்பெக்ஷன் ஸ்குவாட் 31,800 இடங்களில் பரிசோதனை செய்திருக்கிறார்கள். இதை அதிகம் செய்ய முடியுமா என்று பார்க்கிறேன். இப்படிச் செய்தால், திடீரென்று வருகிறார்கள், இரவிலே வருகிறார்கள், பகலிலே வருகிறார்கள், என்று இந்த அவையில் பிறகு மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லக்கூடாது. சில நல்ல மனிதர்கள் வீட்டுக்கும் தான் போக வேண்டியிருக்கும். யார் கெட்டவர் என்று தெரியாது. ஹாராஸ்மெண்ட் செய்கிறார்கள் என்று சொல்லவேண்டிவரும். இதை 'டிரைவ்' செய்ய வேண்டும், வேகமாகச் செய்ய வேண்டும் என்கிறபோது, பொதுமக்களுக்குச் சில அசௌகரியங்கள் வந்தாலும் வரும். அப்படி வரும்போது நீங்களெல்லாம் ஒத்துழைப்புத் தருவீர்கள் என்பதற்காக இதைச் சொல்கிறேன்.

. அடுத்தபடியாக, இன்றைக்கு இருக்கிற இந்த இழப்பைக் குறைப்பதற்கு ஏற்கெனவே 82 கோடி ரூபாயில் ஒரு மாஸ்டர் பிளான் தயாரிக்கப்பட்டது. அதில் இப்பொழுது 12 கோடி ரூபாய் செலவு செய்யப்படுகிறது. Replacement of service wires, renewal of damaged insulators, fuse units, additional sub-stations, sun-capacitors. இதுபோன்ற பல்வேறுவிதமான உறுப்புக்களை ஆங்காங்கே ஏற்படுத்துவதன் மூலம் இழப்புக்களைக் குறைக்க முடியும் என்ற நல்ல யோசனைகள் கொண்ட ஒரு மாஸ்டர் பிளானை 82 கோடி ரூபாய்க்குப் போட்டு, இதை உடனடியாகச் செய்ய முடியாது. அதற்கு ஓராண்டு காலமாவது ஆகும் என்று கருதி ஒரு

(பிற்பகல் 6-10)

10, 12 கோடி ரூபாயில் நிதி ஆதாரங்களைக் கணக்கில் கொண்டு செய்யலாம் என்று கருதிக்கொண்டிருக்கிறோம். அதைச் செய்த பிறகு இன்றுள்ள நிலைமையில் அப்படிப்பட்ட இழப்பு ஓரளவிற்குக் குறையும் என்று கருதுகிறேன். தமிழக மின் வாரியத்தின் கீழ் இயங்கும் நமது மின் இணைப்புகளிலே இழப்பு அதிகமாகி வருகின்றது என்று பொதுப்படையாகப் பேசிவிடுவது நியாயமானதல்ல. காரணம் இன்றைக்கு இந்தியாவிலேயே வேறு எந்த மாநில மின் வாரியத்திலாவது புதிதாக ஒன்றை அறிந்துகொள்ள வேண்டும் என்றால்,



தமிழகத்திற்கு வந்துதான் அறிந்து செல்லுகின்றார்கள். மத்திய அவர்கள் தமிழகத்திற்கு வந்துதான் அறிந்து செல்லுகின்றார்கள், இழப்பினைப் பொறுத்த மட்டில் அமைச்சர் அவர்களே சொல்லியிருக்கின்றார்கள், இழப்பினைப் பொறுத்த மட்டில் தமிழகத்தில் அது மிகக் குறைவு என்றுதான் சொல்லியிருக்கின்றார்கள். இனி நாம் ஏதாவதொன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்றால, நமது அதிகாரிகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி அங்கிருந்துதான் எதையாவது கற்று அல்லது அறிந்து வரக்கூடிய நிலையிருக்கிறதே தவிர, பிற மாநிலங்களுக்குச் சென்று அறிந்துகொள்ளக்கூடிய நிலையில் நாம் இல்லை. அந்த அளவிற்கு நாம் நமது மாநிலத்திலே முன்னேற்றம் கண்டிருக்கிறோம.

அடுத்து, மின்சார வரிவிதிப்பினைப் பொறுத்த வரையில், மின் கட்டணத்தைப் பொறுத்த வரையில், நிலைமை எப்படி இருக்கின்றது என்று பார்க்க வேண்டும். இன்றைக்கு தமிழகத்திலே அனல் மின் சக்தி, நீர் மின் சக்தி இரண்டையும் நாம் உற்பத்தி செய்து உபயோகித்து வருகிறோம். இதன் செலவு மேலும் மேலும் உயர்ந்துகொண்டே போகின்றது. ரூ. 29 கோடிக்கு மின்சாரத்தை வாங்க வேண்டியிருக்கின்றது. அது டிஸட்ரிப்யூஷன் பாயிண்டில் 31 பைசா விலையாகிறது. இன்னும் எண்ணெய் மூலம் உற்பத்தி செய்யும் மின்சக்திக்கு மேலும் விலை கூடுதலாகிறது. சென்ற ஆண்டு ரூ. 18 கோடி ஆயிற்று, மின்சாரம் வாங்குவதற்கு. இந்த ஆண்டு 29 கோடி ரூபாய்க்கு வாங்க வேண்டியிருக்கிறது. அது மட்டுமில்லை. மின் வெட்டின் மூலம் ஏற்படும் இழப்பு கிட்டத்தட்ட ரூ. 18 கோடியாகிறது. இதை யோசித்துப் பார்க்க வேண்டும். மின்சார வாரியத்தின் நிதி நிலைமைகளை எடுத்துச் சொல்லுவதற்காக இதைச் சொல்லுகிறேன். நிதி நிலைமைகளைச் சீர்திருத்துவதற்கு நீங்கள் நல்ல நல்ல யோசனைகளைத் தெரிவித்தால், அதை உடனடியாக ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கிறேன். ஆலோசனை சொல்லுங்கள். எப்படி எப்படிச் செலவுகளைக் குறைக்கலாம் என்று யோசனை சொல்லுங்கள். எப்படி எப்படி இழப்பைச் சரிக் கட்டலாம் என்று சொல்லுங்கள். ஏற்றுக்கொள்ளுகிறேன். இன்றைக்கு இந்தியாவிலுள்ள அவ்வளவு மின்சார வாரியங்களையும் பார்த்தால், நமது வாரியம்தான் திறம்பட நடைபெறுகின்றது. அந்த முறையில் வெளி மாநிலங்களிலிருந்து இங்கே வந்துதான் பார்த்துக்கொண்டு போக வேண்டிய நிலை இருக்கிறதே தவிர நாம் போவதில்லை. உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கின்றது என்று சொல்லுகின்றார்கள். ஆந்திரத்தில் குறைவாக இருக்கின்றது வட மாநிலங்களிலே சற்றுக் குறைவாக இருக்கின்றது என்கின்றார்கள், காரணம் அங்கே நிலக்கரி பக்கத்திலேயே இருக்கின்றது. செலவு சற்றுக் குறைவாக இருக்கிறது. ஆனால் நாம் நமக்கு வேண்டிய நிலக்கரியை வெகு தூரத்திலிருந்து கொண்டுவர வேண்டியிருக்கிறது. ரயில் மூலமாகவும் இன்னும் கப்பல் மூலமாகவும் கொண்டுவர வேண்டியிருக்கிறது, செலவாகிறது. கப்பல் செலவு எவ்வளவு ஆகும் என்று யோசித்துப் பாருங்கள். ரெயில்வே கட்டணம்

உயர்ந்து விட்டது. குறிப்பாக கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளிலே செலவு வெகுவாகக் கூடிவிட்டது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். திரு. சித்தா நாராயணசாமி அவர்கள் இங்கு இல்லை. ஆனால் திரு. தாமோதரன் அவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் இதையெல்லாம் யோசித்துப் பார்ப்பார்கள் என்று எண்ணுகிறேன். நல்ல ஆலோசனையைச் சொல்லுங்கள். அதை உடனடியாக ஏற்றுக்கொள்ளுகிறேன். நாளுக்கு நாள் மின்சாரத்தின் தேவை அதிகரித்து வருகிறது. விவசாயத்திற்கானாலும். தொழிற்சாலைகளுக்கு ஆனாலும் மேலும் மேலும் அதிகமாக சப்ளை செய்யவேண்டியிருக்கிறது. உற்பத்திச் செலவு அதிகமாகிறது. இந்த நிலையில் கேட்கும் அளவிற்கு பம்புசெட்டுகளுக்கும் மின் இணைப்பு கொடுக்க வேண்டும், தொழிற்சாலைகளுக்குப் வேண்டிய இணைப்புகளைக் கொடுக்க வேண்டும், ஆனால் விலையை உயர்த்தக்கூடாது என்றால், என்ன செய்வது? வேண்டுமானால் அப்படிச் சொல்லுவது நன்றாக இருக்கலாம். மின்சாரத்தைப் பொறுத்தவரையில் கட்சி மனோபாவம் இல்லாது பார்க்க வேண்டும் என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொன்னார்கள். மின்சாரப் பிரச்சினை என்பது தேசியப் பிரச்சினை என்றார்கள். அவர் அதை மிக அழகாகச் சொல்லிவிட்டார்கள். அவர்கள் நல்ல ஆலோசனைகளைச் சொல்ல வேண்டும்.

லைன் லாஸில் ஒரு சதவிகிதத்தைக் குறைத்துவிடுவதால் நிலைமை சரியாகப் போய்விடுமா? யோசித்துப் பார்க்க வேண்டும். நிலைமை அப்படி இல்லை. 31 பைசா விலையாகிறது வினியோகம் செய்யும் கடைசிக் கட்டத்தில். அதை எப்படி அதிகம் என்று சொல்ல முடியும்? யோசித்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு நாம் தொழிற்சாலைகளுக்குக் கொடுக்கிறோம். ஆனால் தொழிலுக்குக் கொடுக்கின்றதைவிடக் கூடுதலாக உணவு உற்பத்திக்கு என்று கொடுக்கிறோம். உணவுதான் முக்கியம். ஒரு வருஷம் ஐம்பதாயிரம் பம்புசெட்டுகளுக்கு இணைப்புக் கொடுத்திருக்கிறோம். ஆனால் அதிலும் மின்வெட்டு என்று வரும் போது பாதிக்கப்பட்டாலும் கூடியவரையில் விவசாயம் பாதிக்கப்படாமல் இணைப்புக்களை மாற்றி மாற்றிக் கொடுத்து வருகிறோம். உள்ள மின்சக்தியைக் கொண்டு எப்படியோ சமாளிக்கும் சூழ்நிலை இருக்கிறது. ஆனால் இனி என்ன செய்வது என்று யோசித்துப் பார்க்க வேண்டும். விசை ஏற்றத்தைப் பொறுத்த வரையில், இந்த ஆண்டுக்கு 30 ஆயிரம்தான் கொடுக்க முடியும். ஆண்டுக்கு ஆண்டு மின் இணைப்பு கொடுத்து வருவது அதிகப்படுத்தான் வருகிறது. ஆண்டு தோறும் 15 சதவிகிதம் என்ற அளவிற்கு விஸ்தரிப்புச் செய்து வருகிறோம். இதை வைத்து கணக்குகளைப் போட்டு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் எவ்வளவு பற்றாக்குறை என்று பார்த்தால் கிட்டத்தட்ட 2,600 மெகாவாட் என்று இருக்கும். இதை எப்படி நிவர்த்தி செய்வது என்று





யோசித்துப் பார்த்தால், நெய்வேலியைத்தான் நாம் பெரிதும் நம்பவேண்டியிருக்
கின்றது. இரண்டாவது மட்டுமில்லை, மூன்றாவது சுரங்கத்தையும் உடனடியாக
வெட்ட வேண்டும் என்றார்கள். அதிலே கருத்து வேறுபாடு இல்லை. உடனடியாக
அது ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய திட்டம். அதை நமது அரசும் தீவிரமாகச்
சிந்தித்து வருகிறது. மத்திய அரசிலே ரூ. 150 கோடி செலவாகும் என்று
சொல்லுகின்றார்கள். அப்படிச் சொன்னால் நிலைமை என்ன? இதற்கு ஒரு
மார்க்கம் கண்டுபிடித்தாக வேண்டும். இதைப்பற்றி பல முறை அவர்களிடம்
வற்புறுத்தி வந்திருக்கிறோம். இரண்டு அரசாங்கமும் பேசி ஒரு முடிவிற்கு
வர வேண்டும் என்ற கருத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டு ஒரு நல்ல முடிவிற்கு
உடனடியாக வர வேண்டும். காரணம் இது தமிழ் நாட்டின் ஜீவாதாரமான
பிரச்சினை. நெய்வேலித் திட்டத்திற்குத்தான் எதிர்காலத்திலே தமிழ் நாட்டிற்கு
வேண்டிய மின் சக்தியைக் கொடுக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அடுத்து,
தூத்துக்குடி அனல் திட்டம் வருகிறது. ஆறு ஆண்டு காலத்தில் முடிக்க
வேண்டிய திட்டத்தை மூன்று ஆண்டுக்காலத்தில் முடிக்க வேண்டும் என்று
சொல்லுகின்றார்கள். அப்படியானால் என்ன செய்ய வேண்டும்? ஒதுக்கிய
பணத்தை உடனடியாகக் கொடுத்துவிட்டால், பரவாயில்லை. ஆனால் பணம்
வருகிறதா என்று பார்த்தால், இல்லை. மின்சாரத்தைப் பொறுத்தமட்டிலே,
நாட்டிலே ஒரு நெருக்கடியான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. கடந்த 25, 27
ஆண்டுகளிலே வேலை வாய்ப்பு, தொழில் விவசாய உற்பத்தி இவற்றைப்
பொறுத்த வரையில்; சுயதேவையைப் பூர்த்தி செய்வதற்கு இடம் தராததால்
தான் பெரும் குறை ஏற்பட்டிருக்கிறது. இதிலே கட்சி உணர்வு தேவையில்லை.
உண்மை நிலையை எல்லோரும் புரிந்து கொள்ளலாம். நாம் பல திட்டங்களைத்
தீட்டி மத்திய அரசுக்கு அனுப்புகிறோம். ஐந்தாவது திட்ட வரைவில் 925
மெகாவாட்டுகள் கிடைக்க வேண்டும் என்று ஐந்து திட்டங்களைப் போட்டு
அனுப்பியிருக்கிறோம். கொடுக்கிறோம் என்கின்றார்கள். ஆனால் நிதிப் பற்றாக்
குறை என்றும் சொல்லிவிடுகின்றார்கள். இதற்காகத்தான் திரு. பலராமன்
அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல, சிறு சிறு திட்டங்களை அனுப்பி
வைக்கிறோம். சாத்தியக்கூறான திட்டங்களைத்தான் அவர்களுக்கு அனுப்பி
வைக்கிறோம். அந்த முறையில் ஏழு திட்டங்களை அனுப்பி வைத்திருக்கிறோம்.
இந்த ஐந்தாண்டுத் திட்ட காலத்திலேயே உற்பத்தியைக் கொடுக்க வேண்டிய
கல்பாக்கம் அணு மின் நிலையத் திட்டம், அதற்குப் பின்னால்தான் அனுமதி
கிடைக்கிறது. 235 235 என்று 470 மெகாவாட்டுகள் கிடைத்திருக்க வேண்டும்.
அது நேரத்தில் வந்திருந்தால், தமிழ் நாட்டின் பொருளாதாரத்தில் இந்த
அளவிற்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்காது. மிகச் சிறப்பாக இருந்திருக்கும்.
ஐந்து வருஷ ஷெட்யூலில் முடித்திருக்க வேண்டும். ஆனால் பின்னால் போய்
விட்டது. கேட்டால் அதில் பல சிக்கல்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள்.

கனடா நாட்டிற்கும் நமது நாட்டிற்கும் உள்ள உறவு முறையை ஒட்டித்தான் அது துர்திப்பட வேண்டும். அந்தளவுக்கு சிக்கல்கள் இருக்கின்றன. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், எந்தத் திட்டமானாலும் வாரியத்தில் பணி யாற்றும் பொறியாளர்கள் மிகத் திறமைசாலிகள், முடித்துவிடக்கூடியவர்கள். ஆனால் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்தால்தானே முடியும்? வாரியத்தில் பணியாற்றுகின்றவர்கள் களங்கம் அற்றவர்கள் என்று சொல்லவில்லை. சிறு குறைகள் இருக்கக்கூடும். ஆனால் அதற்காக அனைத்துமே சரியில்லை என்றும் சொல்லிவிட முடியாது. தொழிலாளர்கள் மத்தியில் நல்ல சூழ்நிலை இல்லை என்று கூடச் சொன்னார்கள். அவர்களிடையே குறைபாடுகள் இருந்தால், வேதனைப்பட வேண்டியதுதான். அவர்களும் பல கோரிக்கைகளை வைக்கின் றார்கள். தொழிலாளர்களைப் பொறுத்த மட்டில், சம்பளம் வரும் 12-ம் மாதத்தில் வேஜ் போர்டு ரெகமெண்டேஷன் வந்துவிடக் கூடிய காரணத்தினால், அதை அறிவிக்க வேண்டியிருக்கிறது. அதற்கும் அதிக நிதி தேவைப்படும். பில் போடுவதில்—இப்போது 700 பில் போடுகின்றார்கள். இதைத் தவிர அவர்களிடையே வேறு பிரச்சினை இல்லை. மொத்தம் 27 லட்சம் பில்களிலே இப்போது ஆறு ஏழு லட்சம் பில்கள் பாக்கி நிற்கின்றன. இந்த பாக்கிகூட சென்ற தடவை நடந்த வேலை நிறுத்தத்தில ஏற்படவில்லை. வருஷா வருஷம் ஆறு ஏழு லட்சம் பில்கள் போடவேண்டியிருக்கிறது. ஆனால் சில நேரங்களிலே சம்பந்தப்பட்ட அலுவலர் இல்லாமலிருக்கலாம், அல்லது சிறு விடுப்பிலோ அல்லது நீள்விடுப்பிலோ போயிருக்கலாம். 700 பில்களைப் போடுவதில் பாக்கி நின்று விடுகிறது. இப்படி மாதா மாதம் தேங்கி நின்றுவிடும் பில்கள் தான் இறுதியில் 6, 7 லட்சம் பில்களாகப் பெருகிவிட்டதே தவிர, பில்களே கொடுக்க வில்லை என்ற குற்றச்சாட்டு உண்மையில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இப்போது ஐந்து மாத, ஆறு மாத பில்களை ஒன்றாகச் சேர்த்துப் போட்டு அனுப்புகின்றார்கள். அண்ணா நகரில் இன்றைக்கு ரகளை நடக்கிறது. ஆறு மாத பில்லையும் ஒன்றாகப் போட்டு பணத்தையும் ஒன்றாகக் கட்ட வேண்டும் என்று சொல்லுகின்றார்கள்.

I request the Hon. Minister to speed up the delivery of bills and the collection of money.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** இடையிலே அந்த நிலைமை இருந்தது. இப்போது நடைபெறும் முறையில் நிலைமை மாறியிருக்கின்றது. தலைவரவர்கள் சொல்லும் நிலைமை இருந்ததை ஒப்புக்கொள்ளுகிறேன்.





**MR. CHAIRMAN:** I had that experience in respect of my own daughter's home.

(பிற்பகல் 6-20)

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** மாதம் 27 லட்சம் பில்களைப் போடும் நிலையில் ஆண்டு இறுதியில் ஆறு ஏழு லட்சம் பில்கள் தேங்கி நிற்கின்றன என்றால் என்ன பண்ணுவது? அதைத்தான் சொல்ல வேண்டியிருக்கிறது. எவ்வளவு தொகை நின்றுவிடுகிறதென்று பார்க்க வேண்டும். ஆண்டு ஒன்றுக்கு கிட்டத்தட்ட 80 அல்லது 82 கோடி ரூபாய்க்கு மேலே வரவு வருகிறது. இந்த மொத்த வருமானத்திலே கிட்டத்தட்ட 1½ கோடி ரூபாய் வசூலாகாமல் இருக்கிறது. 1½ கோடி ரூபாயில், 92 லட்சம் ரூபாய் நமக்கு மின்சார நிறுவனங்களை எடுத்ததன் மூலம் நிலுவையாக இருக்கிறது. ரூ. 82 கோடியில் ஒரு கோடி ரூபாய் அளவுக்குக்கூட தொய்வு இல்லை என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மின் விசை வெட்டு. இன்றைக்கு இருக்கும் நிலையைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இரண்டு, மூன்று வருடங்களாக மாண்புமிகு முதலமைச்சரவர்களும், மாண்புமிகு தொழிலமைச்சரவர்களும் மின்சார விசை வெட்டு இருந்த காலங்களில் அப்போதைக்கப்போது அழைத்து, தொழில்கள் பாதிக்கப்படாத அளவுக்கு ஆலோசனைகளை அளித்தார்கள். அதற்காக தனியாக ஒரு குழு அமைத்து எத்தனை சதவிகிதம் வெட்டு வைத்துக்கொள்வது, எந்த முறையில் வைத்துக்கொள்வது, அத்தியாவசியத் தேவைகளுக்கு எப்படி மின்சாரம் தருவது என்பதுபற்றி அப்போதைக்கப்போது நிர்க்கமாகப் பேசி பிறகு முடிவு எடுத்து, கடந்த இரண்டு ஆண்டுகளாகச் செய்து வருகிறோம். அந்த அடிப்படையிலேதான் மின்சார விசை வெட்டு 60 சதவிகிதமாக இருந்து, 40 சதவிகிதமாகி, இன்றைக்கு 30 சதவிகிதமாகியிருக்கிறது. நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. நாராயணசாமி அவர்கள் வீடுகளுக்கு 150 யூனிட்டுகள்தான் கொடுத்திருக்கிறீர்கள், அதைக் கூட்ட வேண்டுமென்று சொன்னார்கள். அவருடைய அந்த ஆலோசனையை ஏற்றுக்கொண்டு, எவ்வளவு கூட்டலாமென் பதைப்பற்றி இன்னும் மூன்று அல்லது நான்கு தினங்களில் ஆலோசித்துக் கூறு மாறு அதிகாரிகளிடம் சொல்லியிருக்கிறேன். இப்போது நெய்வேலியும் உற்பத்தியைத் தொடங்க ஆரம்பித்துவிட்ட காரணத்தால், எவ்வளவு தூரம் மின்சார விசை வெட்டைக் குறைக்க முடியும் என்பதுபற்றியும் ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம். எவ்வளவு குறைக்க முடியும் என்பதைப்பற்றி இந்தத் தொடர் கூட்டம் முடிவதற்குள் கணக்கிட வேண்டும். நீர் நிலைகளை வைத்து, ஆண்டுக்கு ஒரு திட்டம் போட்டு வைக்க வேண்டும். ஏனென்றால் திடீரென்று அதிக மின் வெட்டு வந்துவிடக் கூடாது. சீரானதொரு திட்டம் இருக்க வேண்டும். துவக்கத்திலிருந்தே குறைந்த அளவுக்கு வைக்க வேண்டுமென்று

தான் தொழில் நிபுணர்களும், விவசாயிகளும் ஆலோசனை சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். செப்டம்பர் மாதக் கடைசியில்தான் தென் மேற்குப் பருவக் காற்றின் இறுதிக் கட்டம் நமக்குத் தெரியும். அப்போதுதான் நீர் நிலைகளில் எவ்வளவு தண்ணீர் இருக்கிறதென்ற நிலைமை தெரியும். எத்தனை லட்சம் யூனிட்டுகள் எடுக்க முடியும் என்பது தெரியும்; அதை எந்த சதவிகிதத்தில் கொடுக்க முடியும் என்பதும் தெரியும். செப்டம்பர் மாதக் கடைசியில்தான் இறுதியாக ஆய்வு செய்து, குறைந்த அளவுக்கு மின்சார விசை வெட்டை வைத்துக்கொள்ள முடியும். இடையில் ஏதாவது சலுகை கொடுக்க முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும். இந்த வாரத்தில் அதிகாரிகளுடன் கலந்து பேசி, அறிவிக்க விரும்புகிறேன்.

பொதுவாக நிர்வாகத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். நிர்வாகத்தை எவ்வாறு சீரமைக்க வேண்டும் என்பதற்காகச் சொன்ன ஆலோசனைகளை ஏற்றுக் கொள்கிறேன். அது குறித்து ஆட்சேபனை சொல்லத் தயாராக இல்லை. பொதுவாகக் குறைகளைச் சொல்கிறார்கள். பல்லைக் கழட்டிக்கொண்டு போகிறார்கள், அதிகாரிகள் தவறு செய்கிறார்கள் என்கிறார்கள். குறிப்பாகச் சொல்லாமல் பொதுவாகச் சொல்லுகிறார்கள். மொத்தமாக தொழிலாளர்கள் என்று சொல்லுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பலராமன் அவர்கள் மின்சார வாரியம் கெட்டுவிட்டது என்று சொன்னார்கள். ஆனால் இன்ஜினியர்களைப் பார்த்துவிட்டு, இன்ஜினியர்கள் பாத்திரம் நன்றாக வேலை செய்கிறார்களென்று சொன்னார்கள். அவர்களைப் பார்த்த காரணத்தால், அப்படிச் சொன்னார்களோ என்னவோ தெரியவில்லை.

**திரு. எல். பலராமன் :** தலைவரவர்களே, ஏற்கெனவே நல்ல முறையில் பணியாற்றக்கூடிய திறமையுள்ள பொறியாளர்களை மேலும் ஊக்குவிக்காமல், அவர்களே அந்தத் தவறுகளைச் செய்யக் கூடிய சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டிருப்பதன் காரணமாகவும், நிர்வாகத் திறமை இல்லாததன் காரணமாகவும் தான் அந்த நிலைமை ஏற்பட்டது என்பதைத்தான் சுட்டிக்காட்டினேன். அந்தப் பொறியாளர்கள் நல்லவர்கள், வல்லவர்கள் என்பதை மீண்டும் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** பொறியாளர்கள் மட்டுமல்ல; நல்ல முறையில் வேலை செய்யக் கூடியவர்கள் பலர் இருக்கிறார்கள். உறுப்பினரவர்கள் பொறியாளர்களை மட்டும் பாராட்டினார்கள். எல்லாப் பிரிவிலும் நல்லவர்கள் இருக்கிறார்கள். கெட்டவர்கள் எங்கேயும் இருக்கிறார்கள். 20 லட்சம் ரூபாய்க்கு பொருள்கள் காணவில்லை என்று எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொன்னார்கள். உண்மை நிலையை விசாரித்தேன். ஒரு லட்சம் அல்லது





1½ லட்சம் மதிப்புள்ள பொருள்கள்—ஸ்கிராப் மெடீரியல்ஸ்—வெட்டுத் துண்டு கள், உதிரி சாமான்கள் தவறுதலாக எடுக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு இன்ஜி னியர்கள் அதில் ஈடுபட்டிருக்கிறார்கள்; இரண்டு கிளார்க்குகள் அதில் ஈடு பட்டிருக்கிறார்கள்; ஹெல்ப்பர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். ஏழு பேர்களை உடன்டியாக சஸ்பெண்ட் செய்திருக்கிறோம். உடனடியாக வழக்கு தொடரப் பட்டிருக்கிறது. எல்லாவற்றிலும் கெட்டவர்கள் இருக்கிறார்கள். இன்றைக்கு மின்சார வாரியத்தில் 1 லட்சம் பேர்கள் வேலை செய்கிறார்கள். யாரும் செய்ய முடியாத அளவுக்கு நாம் சவால் விட்டு காரியங்களைச் செய்திருக்கிறோம் இந்த மாநிலத்தில். இவ்வளவு அற்புதமான காரியங்களை நாம் செய்திருக்கிறோம். மொத்தமாக லஞ்சம், ஊழல் இருக்கிறது; நிர்வாகம் கெட்டுவிட்டது' என்று சொல்வதை ஒரு ஆலோசனையாக நான் ஏற்றுக்கொள்கிறேன். எந்தெந்த இடங்களில், எவ்வளவு தூரம் சீர்திருத்த முடியுமோ, அந்த அளவுக்குச் சீர் திருத்த நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு இருக்கிற மின்சார வாரியம் நல்ல பயன் பெறுகின்ற அளவிலே, மேலும் உற்சாகமாக ஈடுபடுகின்ற. பாடுபடுகின்ற அளவிலே பெரியவர்கள் எல்லாம் ஆலோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் நல்லதொரு யோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். அது குறித்து மாண்புமிகு முதலமைச்சரவர்களையும், தொழிலமைச்சரவர் களையும் கலந்துகொண்டு இந்த நிலைமையைச் சீர் செய்வதற்கு என்ன செய்ய வேண்டுமென்பதை, ஏனைய மாநிலங்களோடு ஒப்பிட்டுப்பார்த்து, அந்த அளவுக்கு முடியுமா என்பதைப் பரிசீலிக்க கடமைப்பட்டிருக்கிறேன். மின்சார வெட்டு வந்துவிட்டதல்லாமல், இப்போது அதிகமாகக் கட்டணத்தை ஏற்றப் போகிறார்கள் என்று பத்திரிகையில் போட்டார்கள். நிலைமைக்குத் தகுந்தாற் போல் ஆக்கபூர்வமான நல்ல காரியங்களைச் செய்வதற்கு. நல்லவர்கள் ஒப்புக் கொள்ளுகின்ற நியாயப்படி என்ன செய்ய வேண்டுமோ அவற்றைத்தான் இந்த அரசு செய்யுமென்பதைத் தெளிவாக நம்பலாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். முடிவாக நல்ல அறிவுரைகள் கூறியதற்கு என்னுடைய நல்ல வணக்கங்களைச் சொல்லிக்கொண்டு, மின்சார வாரியம் மேலும் நல்ல பயன் அடைகிற வகையில் நீங்களெல்லாம் ஆலோசனைகளை அப்போதைக்கப்போது தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். வாரியத்தில் பணியாற்றுகிற திறமை யான தொழிலாளர்களுக்கும் என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசியல் மாச்சரியமற்ற முறையில் நீங்கள் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். இவ்வளவு வேலை செய்ய வேண்டுமென்ற ஒப்பந்தம் இருக்கிறது. சம்பளம் வேண்டும்; வேலை கூடாது என்ற சோம்பேறித் தனமான

நிலைமை ஏற்படக் கூடாது. இப்போது வேலை குறைவு, சம்பளம் அதிகமென்ற கருத்து இருக்கிறது. அந்தக் கருத்துக்களின் அடிப்படையில், ஏனைய மாநிலங்களில் வேலைப் பளு எப்படி வைத்திருக்கிறார்கள் என்பதை ஒப்பிட்டுப் பார்த்து, ஏற்கெனவே செய்துகொண்டுள்ள ஒப்பந்தப்படி குறைந்த வேலைப் பளு உள்ளதாகக் கருதப்பட்டால், அதை ரத்து செய்துவிட்டு, அதிகமான வேலைப் பளுவைக் கொண்டுவரலாம். ஆனால் இந்த வேலைப் பளுதான் எல்லா மாநிலங்களிலும் இருந்தால், அது பரிசிலிக்கப்படுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். குறைந்த வேலைப் பளு இருப்பதால்தான் நிர்வாகத்தில் அதிகச் செலவு ஏற்படுகிறதென்று சொல்லுகிறார்கள். அதைப் பரிசீலிக்கச் சொல்லியிருக்கிறேன். அவர்களுக்கு 12-வது மாதத்தில் சம்பள உயர்வு கொடுக்க வேண்டியிருப்பதால், அதைப்பற்றி தீர்க்கமாகப் பரிசிலனை செய்து எந்த அளவுக்கு வேலைப் பளு வைத்துக் கொள்வது, எந்த அளவுக்கு சம்பள உயர்வு கொடுப்பது என்பதைப் பரிசிலிக்கச் சொல்லியிருக்கிறேன்.

லேபர் செல் நல்ல முறையில் சீர்திருத்தப்பட வேண்டுமென்று திரு. தாமோதரன் அவர்கள் சொன்னார்கள். உள்ளபடியே அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்கிறேன். எந்த அளவில் சீரமைத்து, அந்த லேபர் செல்லை நல்ல முறையில் ஆக்கலாமென்பதுபற்றி என்னுடைய நண்பர்களைக் கலந்தாலோசித்து, அதற்கு ஆக்கபூர்வமான நல்ல நடவடிக்கைகளை எடுப்போமென்ற உறுதியைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த வாரியத்தினுடைய நிதி நிலை அறிக்கையின் மீது நல்ல ஆலோசனைகளைச் சொன்ன அனைவருக்கும் என்னுடைய நன்றியைக் கூறி, இந்த ஆலோசனைகளை ஏற்று, இந்தியாவுக்கு வழி காட்டுகின்ற அளவிலே மின்சார வாரியம் மீண்டும் உழைக்கும் என்ற நல்லுறுதியைச் சொல்லி முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. மீண்டும் அவை நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

[பிற்பகல் 6-28]

### 3. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders*

79. Notification issued with G.O. Ms. No. 669, Home, dated the 25th March 1974 in regard to amendment to rule 431 of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [*Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).*]



80. Notification issued with G.O. Ms. No. 110, Excise and Prohibition, dated the 10th June 1974 in regard to amendments to the Tamil Nadu Foreign Liquor and Indian-made Foreign Liquor (Storage-in-Bond) Rules, 1971. [*Laid on the table of the House under section 34 (5) of the Tamil Nadu Excise Act, 1971 (Tamil Nadu Act 34 of 1971).*]

### B. *Reports, Notifications and Other Papers.*

Nil

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

---

**வெள்ளிக்கிழமை, 1974 ஆகஸ்ட் 23.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில், பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Tamil as Official Language*

* 79 Q.—THIRU S. MUTHUSWAMY (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Education be pleased to state the names of Departments and the level to which the Scheme of introducing Tamil as official language has been implemented?

### ஆட்சி மொழியாக தமிழ்

திரு. செ. முத்துசாமி (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழ் ஆட்சி மொழித் திட்டம் எந்தெந்த அலுவலகங்களில் எந்தெந்த அளவில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தமிழ் ஆட்சி மொழித் திட்டம், முழு அளவில் தலைமைச் செயலக நிதி, சட்டம் ஆகிய துறைகள் தவிர்த்து, பிற அனைத்துத் துறைகளில் 27—12—69 முதலும், அனைத்துத் துறைத் தலைமை மற்றும் மண்டல அலுவலகங்களில் 2—12--71 முதலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது.

தலைமைச் செயலக நிதி, சட்ட துறைகளில் தமிழ்த் திட்டத்தின் முதல் நிலை —4—1970 முதலும். உயர்நீதி மன்றத்தின் கீழுள்ள உரிமையியல் (Civil Courts) நீதி மன்றம், குற்றவியல் (Criminal Courts) நீதி மன்றம்

மற்றும் தீர்ப்பாயங்களில் (Tribunals) தமிழ் மொழித் திட்டத்தினைக் கொண்டுவர முதற்கட்டமாக சாட்சியங்களை தமிழில் பதிவு செய்ய வேண்டும் என்று அறிக்கை செய்யப்பட்டு, 14—1—1970 முதல் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ் ஆட்சி மொழியாக்கப்பட்ட பிறகு, இன்னும் கல்வித் துறையிலும், உள்ளாட்சித் துறையிலும் தமிழில் ஆணைகள் பிறப்பிக்கப்படாமல் இருக்கின்றன. இவையாவது தமிழில் வருவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தமிழ் ஆட்சி மொழித் திட்டம் பல்வேறு கட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆகவே அறவே இல்லை என்று சொல்லுவதற்கில்லை. படிப்படியாக பல்வேறு கட்டங்களைத் தாண்டி வரவேண்டியிருக்கிறது. ஆகவே, முதல் நிலையாக, தமிழில் வரும் கடிதங்களுக்கு தமிழிலேயே பதில் அனுப்ப வேண்டும் என்று இருக்கிறது. இரண்டாவதாக, தத்தம் சார்பு நிலை அலுவலகங்களுடன் ஒன்றுக் கொன்று தமிழிலே தொடர்பு கொள்ள வேண்டும். மூன்றாவதாக, துறைத் தலைமை அலுவலகங்கள் ஒன்றோடொன்று தமிழிலே தொடர்பு கொள்ள வேண்டும். நான்காவதாக, துறைத் தலைமை அலுவலகங்கள் தங்கள் சார்பு நிலை அலுவலகங்களோடு தமிழிலே தொடர்பு கொள்ள வேண்டும். இவ்வாறு வலியுறுத்தி பல கட்டங்களில் செய்துகொண்டு வருகிறோம். ஆகவே நாளுக்கு நாள் அதிகப்படுத்த வேண்டும் என்கின்ற அளவில் ஆணை எல்லாத் துறைகளுக்கும் தரப்பட்டிருக்கின்றது.

**திரு. ம. பொ. சிவஞானம் :** தலைவர் அவர்களே, கல்வி அமைச்சர் அவர்கள் கொடுத்த தகவலிலிருந்து ஆங்கிலத்தோடு தமிழும் கையாளப்படுகிறது என்பதைத்தான் தெரிந்துகொள்ள முடிகிறது. ஆட்சி மொழிச் சட்டத்தின் குறிக்கோள், ஆங்கிலத்தைக் கைவிட்டு அதற்கு மாற்று மொழியாக தமிழைக் கடைப்பிடிப்பதுதான். அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு 10 ஆண்டு களுக்குள் அது முழுமையாக அமுல் நடத்தப்படும் என்று அப்போதைய கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது எத்தனை அலுவலகங் களில் ஆங்கிலம் அகற்றப்பட்டு, அதற்கு மாற்று மொழியாக தமிழ் கையாளப் படுகிறது என்பதை அமைச்சர் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அந்தப் புள்ளி விவரங்களைக் குறிப்பிடுவதற்கில்லை. அறவே ஆங்கிலம் அகற்றப்பட்டு முழுவதும் தமிழ் மேற்கொள்ளப்பட்டுவிட்டது என்ற முறைகள் இல்லை.



இப்போது, 'நன்று', 'சுமார்', 'குறைவு' என்ற அளவில்தான் இருக்கிறது. சென்ற திங்களில்கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நானும் எல்லாத் துறைத் தலைவர்களையும் கூட்டி, அதிலே தமிழ் மேலும் கையாளப்பட வேண்டு மென்று சொன்னோம். மூன்று நான்கு துறைகளில் மிகவும் சிறப்பாக தமிழ் ஆட்சி மொழியாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. குறிப்பாக, தொல்பொருள் ஆராய்ச்சித் துறையில் முழுவதும் தமிழ் கையாளப்படுகிறது. வேறு பல துறைகளில் 'நன்று' என்று சொல்லும் அளவுக்கு இருக்கிறது. பல துறை களில் 'சுமார்' என்றும், இன்னும் பல துறைகளில் 'குறைவு' என்ற அளவிலும் இருக்கிறது. மாவட்டந்தோறும், இப்போது ஆய்வு செய்கின்ற தனி அதிகாரிகளை நியமித்திருக்கிறோம். அதற்கு வேண்டிய வசதி வாய்ப்புக் களைக் கொடுப்பதில் அரசு ஈடுபட்டிருக்கிறது. முழுமையாக அகற்றப்பட்டு விட்டது என்று சொல்லுகின்ற அளவில் இல்லை. மெள்ள மெள்ளத்தான் அகற்ற வேண்டும் என்ற நிலை இருக்கிறது.

**திரு. வே. தங்கபாண்டியன் :** தலைவர் அவர்களே, கோர்ட்டுகளிலிருந்து வரும் சம்மன்கள் பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே இருக்கின்றன. அதோடு தமிழில் வரும் தாக்கீதுகளில்கூட, சமஸ்கிருதம் அதிகமாகக் கலந்திருக்கிற நிலை இருக்கிறது. முழுமையாக தமிழில் வருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாவட்ட அளவில் இருக்கின்ற நீதி மன்றங்கள், மற்றவைகள் எல்லாம்கூட தமிழைக் கொண்டுவர வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இப்போது சில மாவட்ட நீதி மன்றங்களில்கூட, தீர்ப்பு அளிப்பதில், தமிழில் ஆர்வமும் திறமையும் உடைய வல்லுநர்கள், தமிழில் தீர்ப்பு அளிக்கத் தொடங்கியிருக் கிறார்கள். அந்த முயற்சி திருப்திகரமாக இருக்கிறது என்று கூறவில்லை. ஆனால் மேலும் தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக எல்லாத் துறைத் தலைவர்களும் சிறப்பாகக் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கி றார்கள்.

**திரு. ம. பொ. சிவஞானம் :** தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலும்கூட, நான் அறிந்த வரையிலும் மொழிபெயர்ப்பாகத்தான் தமிழ் வைக்கப்படுகிறது. தமிழ் முதல் மொழியாகவும், ஆங்கிலம் இரண்டாவது மொழியாகவும் இருக் கின்ற நிலைகூட இல்லை. இங்கு கொண்டு வருகின்ற மசோதாகூட, அதாவது சட்ட முன்வரைவுகூட ஆங்கிலத்தில் மட்டும்தான் இருக்கிறது. தமிழில் இதுவரை தரப்பட்டதாகத் தெரியவில்லை. இந்த மன்றத்தில்கூட தமிழை ஆட்சி மொழியாக்குவதற்கு என்ன தடையிருக்கிறது என்று அறிய விரும்பு கிறேன்.

[1974 ஆகஸ்ட் 23

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, முன்பு சிலபல ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததோடு ஒப்பிட்டுப் பார்ப்போமானால் நாளுக்கு நாள் தமிழ்மயமாகிக்கொண்டு வருகிறது என்பது தெரியும். அடி மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரையிலும், எல்லோரும் தமிழ் ஆர்வம், தமிழ்ப் பயிற்சி உடையவர்களாக இருக்க வேண்டும். தமிழில் எழுதிக்கொண்டு வாருங்கள், ஆங்கில வார்த்தைக்குத் தமிழ் தெரியாவிட்டாலும், அந்த ஆங்கிலச் சொல்லை தமிழிலேயே எழுதிவிடுங்கள், காலப்போக்கில் அதற்கு நல்ல, தூய தமிழைக் கண்டுபிடிக்கலாம் என்று சொல்லியிருக்கிறோம். ஆகவே, தூய, தனி யான, இனிய தமிழ் வார்த்தையைக் கொடுக்க வேண்டும் என்பதல்ல. புரிந்து கொள்கின்ற தமிழ் இருந்தாலே போதும், சிறிய சிறிய வாக்கியங்களாக இருந்தால்கூட போதும் என்று துறைத் தலைவர்களுக்குச் சொல்லியிருக் கிறோம். மேலவையில்கூட முன்பு இருந்த நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, வரவர ஓரளவுக்கு தமிழிலேயே கொடுக்க வேண்டுமென்று முயற்சி நடக்கிறது. மேலும் கொண்டுவருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. கே. ராஜாராம் :** தலைவர் அவர்களே, முற்றிலும் தமிழ் ஆக்கும் விஷ யத்தில் அரசாங்கம் துரிதமாக இருக்க வேண்டும் என்று எல்லோரும் விரும்பு கிறார்கள். அப்படித் துரிதமாக மாற்றுவிட்டாலும், தமிழிலே நடவடிக்கை எடுக்கும்போது, கூடிய வரையில் பழக்கத்தில் இருக்கும் வார்த்தைகளைக் கையாளும்படி அரசு கவனிக்குமா ? அப்படிப் பழக்கத்தில் இருக்கும் வார்த்தைகள் இருக்கும்போது, அர்த்தமே புரியாத வார்த்தைகளைப் போட்டு, அவைகள் தமிழ் தானா, வேறு ஏதாவது மொழியா என்றுகூட சந்தேகப்படும் படியாக இல்லாமல், பழக்கத்தில் இருக்கின்ற வார்த்தைகளை குறிப்புகளில், நடவடிக்கைகளில் போடுமாறு அரசாங்கம் செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, முதலில் சொல்லியபடி கூடியவரையில் பழக்கத்தில் இருக்கின்ற சொற்களையே பயன் படுத்த வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. சில சொற்கள் நாளடைவில் பழக்கத்திற்கு வந்து அறிமுகமாகி விடுகின்றன. எனக்கு வருகின்ற பல்வேறு கோப்புகள், மற்றவைகளில்கூட, அதற்குத் தீர்ப்பு வழங்குவதிலும்கூட, தமிழி லேயே எழுத வேண்டும் என்று செய்திருக்கிறோம். ஒரு சிலருக்குத் தமிழ் தெரிகிறது. சிலருக்குத் தெரியவில்லை. தவருக எழுதினாலும் பரவாயில்லை. ஆங்கிலத்தில் எழுதினாலும் தவறு இருக்கத்தான் செய்கிறது. எல்லோரும் ஆங்கிலத்தில் தெளிவாகவும் இலக்கணத்தோடும் எழுதுகிறார்கள் என்று சொல்லு வதற்கில்லை. அதிலேயும் திருத்துவதற்கு அவசியம் வருகிறது. அந்த முறையில் பழக்கத்தில் உள்ள சொற்களையே போடச் சொல்லியிருக்கிறோம். ஆங்கிலச்



1974 ஆகஸ்ட் 23]

சொற்களுக்குத் தேவையான தமிழ்ச் சொல் தெரியவில்லை என்று தவிக்க வேண்டாம், தமிழில் போட்டு விட்டு 'பிராக்கெட்டில்' ஆங்கில வார்த்தையைப் போட்டு விடுங்கள் என்று சொல்லியிருக்கிறோம். நாளடைவில் அந்த நிலையைக்கூடத் தீர்ப்பதற்கு வழி ஏற்படும்.

(பிற்பகல் 4-10)

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** தலைவரவர்களே, தமிழ் ஆட்சி மொழி ஆக்கப்படுவது 10 ஆண்டுகளிலே முழுமை பெறுமென்று அறிவிக்கப்பட்டிருக் கிறது. இந்த அறிவிப்பு வெளியாகி எத்தனை ஆண்டுகள் ஆயின, எத்தனை சதவிகிதம் அலுவலகங்களில் தமிழ் ஆட்சி மொழியாக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தலைவரவர்களே, தீர்மானம் போட்டு 10 ஆண்டுகள்கூட ஆகவில்லை. தமிழ், ஆட்சி மொழியாக ஐந்து ஆண்டுகளுக்குள் வர வேண்டுமென்று 1968-ல் தீர்மானம் போட்டோம். அதற்குக் காரணம், எல்லாத் துறைகளிலும் விரைவாகப் பணி நடைபெற வேண்டும். ஊக்கத்தோடு பணியாற்ற வேண்டுமென்பதுதான். ஆனால் தமிழ் ஓரளவுக்குத்தான் ஆட்சி மொழியாக வந்திருக்கிறதே தவிர, பெரும் பகுதி தமிழ்மயம் ஆக்கப்படவில்லை. அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, இங்கு சட்டங்களைக் கொண்டுவருவதிலே சில சிக்கல்கள் இருக்கின்றன என்பதால், அவற்றை மெது வாகக் கொண்டுவருவதாகச் சொல்லுகிறார்கள். அதைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் கல்வித் துறையிலே ஒரு அரசாணைகூட தமிழில் வரவில்லை. நல்ல தமிழ் தெரிந்தவர்தான் இன்றைக்குச் செயலாளராக இருக் கிறார். அப்படி இருக்கும்போதுகூட, ஒரேயொரு ஆணையாவது, தமிழ் ஆட்சி மொழியாக்கப்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பதற்காக, கல்வித் துறையி லிருந்து தமிழில் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, என்னிடத் திலிருந்து செல்லுகின்றவை எல்லாம் தமிழில்தான் சென்றுகொண்டிருக்கின்றன. துறைத் தலைமையிலிருந்தும் தமிழில்தான் செல்ல வேண்டுமென்று கோரப் பட்டிருக்கிறது. அதைக் கவனித்து, தமிழில் கொண்டுவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

[1974 ஆகஸ்ட் 23

**திரு. ஜார்ஜ் கோமகன் :** மாண்புமிகு தலைவரவர்களே, ஆங்கிலச் சொற்களுக்குச் சரியான தமிழ் சொற்களைக் கொண்ட அரசாங்க வெளியீட்டுப் புத்தகம் சட்டப் பேரவை, மேலவை உறுப்பினர்களுக்கு வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அப்படிப்பட்ட அகராதிகள் எல்லாத் துறையினருக்கும் வழங்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் வேண்டுவார்களானால், தருவதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** மாண்புமிகு தலைவரவர்களே, கல்வித் துறையிலே பணியாற்ற வருகிறவர்கள், ஓரளவுக்குப் படித்துவிட்டுத்தான் வருகிறார்கள். ஆனால் ஊராட்சி மன்றத் தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், நகராட்சித் தலைவர்கள் ஆகியோருக்கு படிப்பு ரொம்பக் குறைவாக இருப்பதால், அந்த மட்டத்திலிருந்து அரசாங்கத்துக்கு தமிழில் அனுப்ப அரசாங்கம் ஏற்பாடு செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்கள் ஆகியவற்றின் அளவிலேகூட தமிழில் ஆணைகளை வெளியிடக்கூடிய சூழ்நிலைகள் இருக்கின்றன. துறைத் தலைமையிலிருந்தும், தலைமைச் செயலகத்திலிருந்தும் செல்லுகின்ற அறிக்கைகள் பெரும்பகுதி ஆங்கிலத்தில் இருக்கின்றன. அதைத் தமிழ்ப்படுத்த வேண்டுமென்ற முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. இங்கிருந்து செல்லுகின்ற அறிக்கைகள் தமிழில் இருந்தால், எல்லா இடங்களுக்கும் தமிழில் செல்லும்; இங்கிருந்து செல்லுகின்றவை ஆங்கிலத்தில் இருப்பதால், அந்த ஆங்கில அறிக்கை அல்லது ஆணைகளை அப்படியே மற்ற இடங்களுக்கு அனுப்புகிறார்கள். ஆனால் ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி மன்றங்கள் ஆகியவற்றில் பல நடவடிக்கைகள் தமிழில் இருக்கின்றன. எனவே இங்கிருந்து செல்லும் ஆணைகள், மற்றவைகள் தமிழில் இருக்க வேண்டுமென்பதைத்தான் இப்போது வற்புறுத்தி வருகிறோம்.

**திரு. கு.மா. பாலசுப்பிரமணியம் :** தலைவரவர்களே, ஆட்சி மொழிச் சட்டம் திட்டப்படி 1968-ஆம் ஆண்டிலிருந்து 5 ஆண்டுகளுக்குள் முற்றிலும் நிறைவேற்றப்படுமென்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி பார்த்தால், 1973 ஆம் ஆண்டிற்குள் 'எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்' என்ற நிலை ஏற்பட்டிருக்க வேண்டும். மெதுமெதுவாக அந்தக் காரியம் தொடர்ந்து நடந்து கொண்டிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இப்படியே மெதுவாகப் போவதென்றால், எவ்வளவு காலமும் தள்ளிக்கொண்டு போகலாம்; ஆகையால்



1974 ஆகஸ்ட் 23]

'எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்' என்ற நிலையைக் கொண்டுவருவதற்கு ஒரு இறுதியான கால கட்டத்தை நிர்ணயிக்க அரசுக்கு எண்ணமுண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, எல்லோரும் நிலையாக இருப்பார்களானால், நாம் நிலையாகச் சொல்லிவிட முடியும். நிலையற்ற நிலையிலே நாம் எதையும் நிலையாகச் சொல்லுவதற்கான நிலைமைகள் இல்லை. ஊக்கம் தருகின்ற வகையிலேதான் நாம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

**திரு. ம. பொ. சிவஞானம் :** தலைவரவர்களே, பேருந்து வண்டிகளிலே தரப்படுகிற பயணச் சீட்டுகள்கூட தமிழில் இல்லாத நிலையை சாதாரண மக்கள் கூட எள்ளி நகையாடுகிறார்கள். ஏழு ஆண்டுகளாக தமிழில் பற்றுள்ளவர்கள் ஆட்சி வந்தும்கூட, இந்தப் பேருந்து பயணச் சீட்டுகள் தமிழில் வரவில்லையே என்று சாதாரணமாக எழுதப் படிக்கத் தெரிந்த அளவுக்குள்ள மக்கள் குறை சொல்லுகிறார்கள். அதைக்கூட திருத்துவதில் இந்த ஆட்சிக்கு ஏன் இவ்வளவு தாமதம் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இவையெல்லாம் தவிர்க்கப்பட வேண்டிய குறைபாடுகள்தான். இப்படி பல்வேறு துறைகளில் இருக்கின்றன. அவற்றையெல்லாம் நாளடைவில் போக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, இதுவரை செய்யப்படவில்லை என்ற குறைபாட்டை கல்வி அமைச்சரவர்கள் ஒத்துக்கொண்டார்கள். அது பரிசீலிக்கப்படுமென்றும், விரைவில் செய்யப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்படுமென்றும் கல்வி அமைச்சரவர்கள் சொல்லுகிறார்கள். இதற்கு ஒரு கால கட்டத்தை அவர்கள் முடிவு செய்துகொள்ள வேண்டுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தமிழிலே ஆர்வம் மிக்கவரும், இந்த நாட்டு மக்களாலே 'நாவலர்' என்று பாராட்டப்படக்கூடியவருமாகிய கல்வி அமைச்சரவர்கள் இருக்கக்கூடிய இந்த நேரத்திலேகூட அரசாணைகள் தமிழில் வரவில்லை. "தமிழிலே கையெழுத்துப் போட்டு அனுப்பியிருக்கிறேன். தமிழில் ஆணை போட்டிருக்கிறேன்" என்று அமைச்சர் சொல்லுகிறார். ஆனால் அதிகாரிகள் ஆணைகளை ஆங்கிலத்தில் எழுதுகிறார்கள். ஆதலால் உடனடியாக அரசு ஆணைகளைத் தமிழில் அனுப்புவதற்கான உத்தரவுகளை கல்வி அமைச்சரவர்கள் போடுவார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன். ஒரு மாத காலத்திற்குள் அல்லது இரண்டு மாத காலத்திற்குள் என்று குறிப்பிட்டு அதில் ஒரு முடிவு செய்வார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

[1974 ஆகஸ்ட் 23

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, நான் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அவர்களே குறிப்பிட்டிருப்பது மாதிரி, நான் இருந்தே இப்படி நடக்கிறதென்றால், எப்படிப்பட்ட சங்கடங்கள் இருக்கின்றன என்பதை நீங்கள் நன்றாக உணர்ந்துகொள்ள வேண்டும். ஆகவேதான் அதில் மெள்ள மெள்ள நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருக்கிறது. பரிசிலனை செய்து, முறைப்படி செய்ய வேண்டியிருக்கிறது. இத்தனை தேதிக்குள் இதுபற்றி முடிவு எடுத்துவிட முடியுமென்று சொல்லுமளவுக்கு எல்லோரும் இருப்பார்களானால் சரி. இங்கே இருக்கும் செயலாளர்கள், துணைச் செயலாளர்கள், இணைச் செயலாளர்கள், முதுநிலை எழுத்தர்கள்—அத்தனை பேரும் இதில் ஆர்வத்தோடு ஒத்துழைப்பு தந்தால் தான், இந்தச் செயல்கள் சரிவர நடைபெறும். அதற்கு எவ்வளவு ஊக்கம் தர முடியுமோ அவ்வளவு ஊக்கம் தருகிறோம். ஆகையால்தான் இந்த முயற்சியை விரைவுபடுத்துவதற்கு, சென்ற திங்களில் எல்லாத் துறைத் தலைவர்களுடைய கூட்டத்தைக் கூட்டி, நான் மட்டும் சொன்னால் போதாதென்று, நம்முடைய முதலமைச்சரவர்களையும் வைத்து சொல்லப்பட்டிருக்கிறது. சிறந்த முறையில் தமிழைக் கையாள்கிறவர்களுக்குப் பரிசுகள் வழங்குவதென்று வைத்திருக்கிறோம். சிறந்த முறையில் எழுதுகிறவர்களுக்கு 500 ரூபாய், 300 ரூபாய் என்று மாவட்டந்தோறும் இரண்டு பரிசுகள் வழங்கி வருகிறோம். சென்னை மாவட்டத்திற்கு 4 பரிசுகள் வழங்கி வருகிறோம். அதற்காகப் பல்வேறு வகைகளில் ஊக்கமளித்து வருகிறோம். இதை நடைமுறைப் படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமென்ற வகையிலேதான் என்னால் சொல்ல இயலும்.

**திரு. செ. முத்துசாமி:** தலைவரவர்களே, இங்கே அமைச்சராக இருப்பவர்கள் நல்ல தமிழ் அறிந்தவர்கள்; செயலாளராக இருப்பவரும் தமிழ் அறிந்தவர்; துணைச் செயலாளராக இருக்கக்கூடியவர் தமிழர்; இங்கே இருக்கக்கூடிய உதவிச் செயலாளர்கள், கல்வித் துறையிலே இருக்கக்கூடிய இயக்குநர்கள் எல்லோரும் தமிழர்கள். எல்லோரும் தமிழில் படித்தவர்கள். இவர்கள் தமிழில் அரசாணை இடுவதற்கு ஒத்துழைக்காமல், ஏன் விரோதமாக இருக்கிறார்கள் என்பதை அவைக்குத் தெரிவித்தால், அதற்கு வேண்டிய முடிவை எடுக்க வசதியாக இருக்கும். இதில் என்ன கஷ்டம் என்பதை யாவது அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** 'விரோதமாக இருக்கிறார்கள்' என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தக்கூடாது. அவர்கள் விரோதமாக இருக்கிறார்களென்று உறுப்பினர் அவர்களுக்கு எப்படித் தெரியும்?



1974 ஆகஸ்ட் 23]

**திரு. செ. முத்துசாமி:** தலைவரவர்களே, 'விரோதமாக இருக்கிறார்களா' என்றுதான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** யாரும் விரோதமாக இருக்கிறார்களென்று சொல்ல முடியாது. இயலாமல் இருக்கிறார்களென்றுதான் சொல்ல வேண்டும்.

## *Nationalisation of all Aided Colleges*

*80 Q.—THIRU S. MUTHUSWAMY (on behalf of THIRU K. S. GANAPATHI): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that the President of the Association of College Teachers (Tamil Nadu), has suggested to the Government, the nationalisation of all Aided Colleges, and also immediate direct payment of salary by the Government to the teachers; and

(b) if so, the details thereof?

## அரசு உதவி பெறும் கல்லூரிகளை அரசுக் கல்லூரிகளாக்குதல்

**திரு. செ. முத்துசாமி (திரு. கே. எஸ் கணபதி சார்பில்):** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு உதவி பெறும் கல்லூரிகள் அனைத்தையும் அரசுக் கல்லூரிகளாக்கி, ஆசிரியர்களுக்கு அரசு உடனடியாகவும், நேரடியாகவும், சம்பளம் வழங்கலாம் என்று, தமிழ்நாடு கல்லூரி ஆசிரியர்கள் சங்கத் தலைவர் கருத்து தெரிவித்துள்ளது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. செ. முத்துசாமி:** தலைவரவர்களே, தனியார் கல்லூரிகளிலே பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுக்கு தற்போது சட்ட ரீதியாகப் பாதுகாப்பு எதுவுமில்லை. ஆதலால், கல்லூரி நிர்வாகிகளால் ஆசிரியர்கள் வெளியேற்றப்படும் போது, பாதுகாப்பு அற்றவர்களாக இருக்கிறார்கள். எனவே அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கு, உடனடியாக ஒரு அவசரச் சட்டத்தை அரசு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1974 ஆகஸ்ட் 23

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, கல்லூரிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுடைய பணி முறைகள், மற்றவைகளைக் கட்டுப்படுத்துகின்ற பொறுப்பு பல்கலைக் கழகங்களைச் சார்ந்ததாக இருக்கிறது. ஆகவே, இதுபற்றி பல்கலைக் கழகங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டியனவாக இருக்கின்றன. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், கல்லூரிகளைக் கட்டுப்படுத்துவதற்கு, அவைகளுக்குக் கொடுக்கின்ற மானியத்தை வேண்டுமென்றால் நிறுத்திக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. சரியாக இயங்காத கல்லூரிகள், முறைப்படி நடக்காத கல்லூரிகள் ஆகியவற்றை அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால், அதற்காக நாம் தனிச் சட்டம் செய்ய வேண்டும். பள்ளிகளைப் பொறுத்த அளவுக்கு என்ன சட்டம் கொண்டுவந்திருக்கிறோமோ அதனை நடைமுறைப்படுத்தியதற்குப் பிறகு, பல்கலைக் கழகங்களையும் கலந்துகொண்டு அப்படிப்பட்டதொரு சட்டத்தை கல்லூரி அளவுக்குக் கொண்டுவர முடியுமா என்று அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, அரசுக் கல்லூரிகளிலே கடந்த பல ஆண்டுகளாக, 10 (ஏ) (1) விதியின்கீழ், தற்காலிகமாகப் பலர் துணைப் பேராசிரியர்களாகப் பணி புரிந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் அரசுக்கு பலமுறை விண்ணப்பம் அளித்தும், அவர்கள் நிரந்தரம் ஆக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. அதை மாற்ற ஏதாவது நடவடிக்கையை அரசு எடுக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

THIRU A. R. DAMODARAN : Sir, the Hon. Minister mentioned that there was no law at present which would enable the Government to take over such private aided institutions which did not treat their staff properly. May I ask him, Sir, why similar legislation as the Shop Act which is meant to protect employees in the private sector could not be passed by this Government so as to protect the service conditions of the employees in the private shops are protected from dismissal without notice, etc. May I know why similar legislation may not be introduced to protect the members of the Faculty?



1974 ஆகஸ்ட் 23]

(பிற்பகல் 4-20)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, "ஷாப் ஆக்ட்" போன்றவைகள் எல்லாம் அரசாங்கத்தின் நேரடியான ஆணையின்கீழ் அதிகாரத்தின் கீழ் வருகின்றன. கல்லூரிகளிலெல்லாம், பணி நிலை மற்றவைகள் பல்கலைக் கழக நிர்வாகத்தின் கீழ் வருகின்றன. பல்கலைக் கழகம் ஒரு 'அட்டானமி' பெற்று இயங்குகிறது. ஆகவே, பல்கலைக் கழக இசைவோடு, அரசாங்கம் அதனுடன் கலந்து ஆய்ந்து, அதற்கேற்றபடி ஒரு சட்டம் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் இருக்கின்றது. பள்ளிகளைப் பொறுத்து எப்படி ஒரு பாதுகாப்புச் சட்டம் கொண்டு வந்திருக்கின்றோமோ, அதே அடிப்படையில் கொண்டுவர வேண்டும் என்பதுதான் குறிக்கோள். பல்கலைக் கழகத்தோடு கலந்துகொண்டு சட்டம் கொண்டு வருவதற்கான முயற்சிகளை அரசாங்கம் எடுத்து வருகின்றது.

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, சமீபத்திலே ஈரோட்டிலே; கல்லூரி நிர்வாகத்தினர் ஆசிரியர்களை நீக்கிவிட்டார்கள். அந்த நீக்கப்பட்ட ஆசிரியப் பெருமக்களும், ஆசிரியப் பிரதிநிதிகளும் கல்வி அமைச்சர் அவர்களைப் பார்த்திருக்கின்றார்கள். பல்கலைக் கழகத் துணை வேந்தரைப் பார்த்திருக்கின்றார்கள். கல்லூரி டைரக்டரைப் பார்த்திருக்கின்றார்கள். பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்குச் சட்டம், மற்ற தொழிலாளர்கள் பாதுகாப்புச் சட்டம் என்று பலதரப்பட்டவர்களுக்குச் சட்டம் கொண்டுவந்திருக்கிறோம். இப்படி எல்லோருக்கும் பாதுகாப்புச் சட்டம் இருக்கின்றபோது, கல்லூரிப் பேராசிரியர்களுக்கு இல்லாமலிருக்கின்றது. அன்றைக்குப் பேராசிரியர்களாகப் பணியாற்றிக்கொண்டிருந்தவர்கள் இன்றைக்கு அமைச்சர் அவையிலே இருந்தும்கூட அந்தப் பாதுகாப்பு நிலைமை வரவில்லை. அவர்கள் காலத்திலிருந்து இன்று வரையிலும்கூட அந்த நிலைமை நீடித்துக் கொண்டிருக்கிறது. உடனடியாக பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதைப் பற்றித்தான் அரசாங்கம் பரிசீலித்துக்கொண்டிருக்கின்றது என்று குறிப்பிட்டேன். 127க்கு மேற்பட்ட தனியார் கல்லூரிகள் இருந்தாலும், இப்படிப்பட்ட நிலைமைகள் ஒரு சில கல்லூரிகளில்தான் ஏற்படுகின்றன. அதுவும் ஒரு சில பொழுதுதான் ஏற்படுகின்றன. இந்த நிலைமையை, பள்ளிக்கல்வி இயக்குநர், பல்கலைக் கழகம் மற்றவர்களும் இருந்து நியாயமான அடிப்படையிலே, கூடுமானவரையில் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை அரசு எடுத்துக்கொள்ளவிருக்கின்றது. இப்போது ஈரோட்டைப் பொறுத்த

அளவில்கூட, சமரசமான முறையில் அதை முடித்து தீர்வுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சியைக் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள் மேற்கொண்டிருக்கின்றார்கள். அந்த முயற்சிகளைப்பற்றித்தான் நான் மேலே குறிப்பிட்டேன். அரசாங்கம் பல்கலைக் கழகத்தைக் கலந்துகொண்டு அதனுடைய இசைவோடு சட்டம் கொண்டுவருவதற்காகப் பரிசீலித்துக்கொண்டிருக்கின்றது.

### *Representations from Fishermen*

* 81 Q.—THIRU K. ARIVAZHAGAN (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Valaiyars (Fishermen) belonging to Amaravathipudur and Siravayal Villages in Ramanathapuram District have applied to the Government for the allotment of house-sites and the assignment of lands; and

(*b*) if so, the action taken thereon by the Government?

**வலையர்களின் கோரிக்கைகள்**

**திரு. க. அறிவழகன் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்):** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், அமராவதி புதூர், சிறுவயல் ஆகிய கிராமங்களைச் சார்ந்த வலையர்கள் முறையே நில ஒப்படைப்பு கோரியும், குடியிருப்பு மனை கேட்டும், அரசுக்கு விண்ணப்பம் செய்திருக்கிறார்களா?

(இ) ஆமெனில், அரசு அவற்றின் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### *Power from other States*

* 82 Q.—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the details of the total power (i) supplied to and (ii) purchased from other States during the calendar years 1970, 1971 and 1972;



(*b*) the rates at which power was supplied and purchased for the above period; and

(*c*) the total amount for which power was supplied and purchased, for the above period?

**வெளி மாநிலங்களிலிருந்து மின்சக்தி.**

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்):** மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1970, 1971, 1972 ஆம் காலண்டர் ஆண்டுகளில் (Calendar years) (i) வெளி மாநிலங்களுக்கு வழங்கிய (ii) வெளி மாநிலங்களிலிருந்து வாங்கியமொத்த மின் சக்தியின் விவரங்கள் யாவை?

(இ) மேற்கூறிய கால அளவில், வழங்கிய, வாங்கிய மின்சக்திக்கான கட்டண வீதம் யாது?

(உ) மேற்கூறிய கால அளவில், மொத்தம் எவ்வளவு ரூபாய்க்கு மின் சக்தி வழங்கப்பட்டது, வாங்கப்பட்டது?

**மாண்புமிகு திரு ஓ. பி. இராமன்:** (அ), (இ) & (உ) விவர அறிக்கை@ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

### *Spot Billing of Power consumptions*

* 83 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether it is a fact that the Electricity Board is examining the feasibility of 'Spot Billing' of power consumption; and

(*b*) if so, the stage at which the matter now stands?

**மின்சாரம் பயன்படுத்தும் இடங்களுக்குச் சென்று மின் கட்டணம் வசூலித்தல்.**

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மின்சாரம் பயன்படுத்துவது தொடர்பாக 'மின்சாரம் பயன்படுத்தப்படும்' இடங்களுக்கே சென்று மின் கட்டணம் விதித்து வசூலிக்கும் சாத்தியக்கூறு பற்றி, மின்சார வாரியம் ஆய்வு செய்து வருகிறதா?

(இ) ஆமெனில், இத்திட்டம் எந்நிலையிலுள்ளது?

---

@ 276-278 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1974 ஆகஸ்ட் 23

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) & (இ) தலைவரவர்களே, இது பற்றி தமிழ் நாடு மின்சார வாரியம் ஆராய்ந்து வருகிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, இதை எந்த முறையில் நடத்தலாம் என்று மின்சார வாரியம் ஆராய்ந்து வருகிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, 'ஸ்பாட் பில்லிங்' என்பதுபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இந்த முறையைக் கையாளுவதால், வேலை கொஞ்சம் அதிகமாக இருக்கின்றது என்று சொல்கின்றார்கள். ஆனால் அதே சமயத்தில் மின்சாரம் உபயோகிக்கின்றவர்களுக்குச் சற்று சுலபமான முறையில் பயன்தரும், பொது மக்களுக்கு அனுகூலமாக இருக்கின்றது என்ற காரணத்தால் அதைப் பொது மக்களுக்குச் சாதகமாகவே இருக்கும்படியாக வாரியம் பரிசீலனை செய்து கொண்டிருக்கின்றது. இது என்ன முறை என்பது அங்கத்தினர் அவர்களுக்கும் தெரியும். நேரடியாக அந்த இடத்திற்குச் சென்று, அந்த இடத்திலேயே பில்லை போட்டுக் கொடுத்து விடுவது. இதை இன்னும் கொஞ்சம் ஆராய்ந்து பார்த்து எந்த அளவுக்கு சாத்தியக்கூறு இருக்கின்றதோ அந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ளலாம் என்று இருக்கின்றார்கள்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, நேரடியாக அந்த மீட்டரைப் பார்த்து, மீட்டரில் எவ்வளவு யூனிட்டுகள் என்று அந்த வீட்டுக்காரரா அல்லது சார்புடையவர்களா என்று பார்த்து உடனே பில் போட்டுக் கொடுத்து விடுகிறார்கள். இது ஒன்றும் புதியது அல்ல. வேலூரில் அங்கே இருக்கக்கூடிய எலக்ட்ரிக் கார்ப்போரேஷன் கூட, பல ஆண்டுகளாக இதைக் கடைப்பிடித்து வந்திருக்கின்றது என்று அமைச்சர் அவர்களுக்குக் குறிப்பிட்டுக்கொள்ளுகின்றேன். பத்திரிகையிலே பார்த்தேன், கிட்டத்தட்ட 1 கோடி ரூபாய் அளவுக்கு அந்த பில்கள் போடப்பட்டதன் காரணத்ாலே வசூலிக்க முடியவில்லை என்று சொன்னார்கள். இது மின்சார வாரியத்திற்கு நல்லது என்ற காரணத்தால் சொல்கின்றேனே தவிர, தனிப்பட்ட வீட்டுச் சொந்தக்காரர்களுக்காக நான் பரிந்து பேசியதுபோல அமைச்சர் அவர்கள் பதிலில் சொன்னார்கள். அப்படிப்பட்ட கருத்தில் நான் சொல்லவில்லை. அதுவும் பில் போடுகின்றபோது, நான் முன்னர் சொன்னது போல், ரொம்பக் குறைவாகப் போடுகின்றார்கள் என்று சொல்லுகின்றார்கள். அதையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு, இந்த முறையை அனுசரிக்க அமைச்சர் அவர்கள் ஆதரவு தருவார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, பில்லை அதிகப் படுத்திப் போடுவதாகவும் சொல்லுகிறார்கள். குறைவாகப் போடுவதாகவும் புகார் சொல்கின்றார்கள். நேரடியாக அனுமதிதாரர்களிடம் போகிறபோது



1974 ஆகஸ்ட் 23]

இரண்டு பேரும் பேசிக்கொண்டு தவறுதலாக நடந்துகொள்வார்கள் என்றும் சொல்கின்றார்கள். இவைகளையெல்லாம் யோசித்துப் பார்த்து, நல்ல முறையில் ஆய்வு செய்து, ஏற்றுக்கொள்ளலாம் என்றுதான் பரிசீலனை செய்து கொண்டிருக்கின்றோம்.

**திரு. எல். பலராமன் :** தலைவரவர்களே, வேலூரில் மின் கழகத்தின் சார்பாக தனியார் நிறுவனங்கள் சார்பாக நல்ல முறையில் இயங்கி வந்த அந்த செயல் திட்டம் தற்போது நம் வாரியம் ஏற்றுக்கொண்ட பின்னரும் இரண்டொரு மாதங்களாக நடந்தது. ஆனால் வாரியம் ஏற்றுக்கொண்ட பின்னர், அங்கே வேலை நிறுத்தம் என்ற பெயரால் கடந்த 5, 6 மாத காலமாக அந்தச் செயல்திட்டம் தடைப்பட்டிருக்கிறது. அந்தச் செயல் திட்டம் நல்ல முறையில் இருப்பதனால், அதிலே எந்தவிதமான பாதகமும் இருக்காது என்பதனால், அதை வாரியம் பரிசீலித்து அதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, எடுக்கப்பட்ட தனிப்பட்ட மின்சார நிறுவனங்கள் எல்லாம் மின்சார வாரியத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றனவே தவிர, அதன் நிறுவனங்கள் எல்லாம் அப்படியேதான், தனியாகத்தான் பிரித்து வைக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. ஆட்சி முறையிலே எந்தவிதமான மாற்றமும் இல்லை என்றுதான் சொல்கின்றார்கள். அது சீரான முறையிலே இயங்குவதாகக்கூடச் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். அதிலே உள்ள முற்போக்கான திட்டத்தை ஏற்றுக்கொள்ளலாம் என்று பரிசீலனை செய்துகொண்டிருக்கின்றோம். அதுபற்றி யோசித்து விரைவிலே ஒரு முடிவு செய்யலாம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, இப்போது நடத்தப்படுகிற தனியார் நிறுவனங்கள் முன்பு இருந்த முறையிலேயே செய்துகொண்டிருந்தால், இப்போதும் அந்த முறையையே நமது மின்வாரியம் பின்பற்றுமா என்பதைப் பற்றி அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, அப்படித்தான் செய்ய வேண்டும் என்பதல்ல. ஒவ்வொரு இடத்திலேயும் உள்ள நிறுவனங்களை தனித் தனி ஸிஸ்டமாக, நிர்வாக வசதிக்காக, பிரித்து வைத்துவிடலாம் என்று சொல்கின்றார்கள். ஸ்ரீரங்கம் எலக்ட்ரிக் கார்ப்போரேஷனைப் பொறுத்த அளவிலே, ஒரு சிறிய யூனிட்டாகத் தான் இருக்கின்றது. அது எல்லா முடிவுகளையும் அங்கேயே எடுத்துச் செய்துவிடுகின்றது. நிர்வாகமும் சிறிய அளவிலே இருக்கின்ற காரணத்தால், சீராக நடப்பதற்கு சாத்தியக்கூறு இருப்பதாகச்

சொல்லுகின்றார்கள். மொத்தமாக மின்சார வாரியம் இருக்கிறது. என்றாலும், தனித்தனியாக நிர்வாக வசதிக்காகப் பிரித்துக்கொள்ளலாமா என்பதுபற்றிக் கூட யோசித்துக்கொண்டிருக்கின்றார்கள். இதில் நல்ல முறையில் இருக்கின்ற வைகள் எல்லாவற்றையும் பரிசீலனை செய்து, அந்தத் தனிப்பட்ட நிறுவனங்களில் கையாளப்படுகின்ற நல்ல முறைகளைத் தேர்ந்தெடுத்து அதை நாம் ஏற்றுக்கொள்ளலாம். இப்போது இருக்கின்ற முறையில் எந்தவிதமான மாற்றமும் நடைமுறை ஆட்சி முறைகளிலே புகுத்தவில்லை. எந்த முறையில் நடத்தி வந்தார்களோ அந்த முறை நிர்வாகம் தான் இருக்கின்றது. பொறுப்புத் தான் மின்சார வாரியத்திற்கு வந்திருக்கின்றது.

**திரு. எஸ். சி. செங்கோட்டுவேலப்ப கவுண்டர் :** தலைவரவர்களே, பில் போடுவதுபற்றிச் சொன்னார்கள். வசூல் முறையிலே கிராமப் பகுதிகளிலே, 5 பஞ்சாயத்துக்களுக்கு, 6 பஞ்சாயத்துக்களுக்கு ஒரு இடத்திலே வசூல் செய்வதற்கு ஒரு சென்டர் வைத்திருக்கின்றார்கள். கூடுமான வரையில் கிராமப் புறங்களில் ஒரு பஞ்சாயத்து அலுவலகத்தில் வசூல் செய்யும் முறை ஏற்படச் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, இப்போதே மின் வாரியத்திலே அதிகமாக வேலை ஆட்கள் இருப்பதாகப் புகார்தான் வருகின்றது. அந்த யோசனையை ஏற்றுக்கொண்டால் இன்னும் அதிகமாக ஆட்களைப் போட வேண்டிய நிலை வரும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, இந்தத் தனிப்பட்ட நிறுவனங்களைத் தனியாக நடத்தலாமா என்று யோசனை செய்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவைகள் தனியாக நடப்பதானால் இந்த மின்சாரத்தை வாங்கி முன்பு செய்தது போல விநியோகம் செய்யுமா? எந்த முறையிலே தனித்தனியாக நடக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவார்களா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, தேசிய மயம் ஆக்கப்பட்டிருக்கிறது. அரசுடைமையாக்கப்பட்டு மின் வாரியத்தில்தான் இருக்கின்றது. ஒரே அங்கமாக இருக்கின்றது. தனியாக, செபரேட்டாக, ஒரு 'அட்டானமஸ் பாடி' மாதிரி இருக்கின்றது. தனித்தனியாக ஆக்கிவிடலாமா என்றுதான் நினைத்துக்கொண்டிருக்கிறோம். இதற்காக பவர் ஜெனரேஷன் கார்ப்போரேஷன் ஆரம்பித்திருக்கின்றோம். உற்பத்தியை எல்லாம் ஒரு பகுதியாக வைத்துக்கொண்டு, விற்பனை அதாவது 'டிஸ்ட்டிரிபியூஷன்' ஐ மட்டும் தனித்தனியா[illegible]காங்கே வைத்துக்கொள்ளலாமா என்று ஆராய்ந்து





கொண்டிருக்கின்றோம். பவர் கார்ப்போரேஷன் இப்போது ஒரு புதிய திட்டத்தை எடுத்துக்கொண்டிருக்கின்றது. ஜெனரேஷனை நாம் எடுத்துக் கொண்ட பின்னாலேதான் அதுபற்றித் தெளிவான ஒரு முடிவுக்கு வர முடியும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, அதை அட்டானமஸ் கார்ப்பரேஷனாக நடத்தலாம் என்று சொன்னார்கள். அரசாங்க அளவிலே கூட நடத்தலாம். அப்படி நடத்துவதானால், மின் வாரியத்திலிருந்து மின்சாரத்தை வெளியே வாங்கிச் செய்வார்களா? எந்த முறையில் அவர்கள் செய்வார்கள்? அவர்களுடைய கணக்குப் பிரகாரம் எப்படிச் செய்வார்கள் என்று அறிய விரும்புகிறேன். நான் இதே கேள்வியை இதைப்பற்றிப் பேசும்போதும் எழுப்பினேன். ஜெனரேஷன் கார்ப்பரேஷன் வைத்தால், மின்சார வாரியமே அந்த மின்சாரத்தை வாங்கிக் கொடுக்குமா என்று கேட்டேன். அதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, தனி யூனிட்டாக ஜெனரேஷனை வைத்துவிட்டோம். இப்போது வங்கிகளிலிருந்து கடன் வாங்குவதற்கு வசதியாக இருக்கும் என்று தான் ஜெனரேஷனைத் தனியாகப் பிரிக்க வேண்டும் என்கின்றார்கள். ஜெனரேஷன் இருந்தால், அதிலிருந்து 'பர்சேஸ்' பண்ணித்தான் வாரியம் அவர்களுக்குக் கொடுக்க முடியும். அந்த முறையிலே தான் கையாளப்படும்.

**திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவரவர்களே, தனியாக எடுத்துக் கொண்ட 7 கம்பெனிகளிலே முக்கியமாக 'எஸ்.எம்.ஈ. எஸ்.ஈ. கார்ப்போரேஷன்' மின்சாரத்தை வாங்கி வியாபார முறையிலேதான் நடத்திக் கொண்டிருந்தது. எந்தவிதமான மின்சார வெட்டு இருந்தபோதும் சரி, எந்த விதமான கஷ்டத்திலே இருக்கும்போதும் சரி, அது நல்ல முறையிலே லாபகரமானதாகத்தான் நடந்து வந்தது. ஆகையால் அந்த கம்பெனிகள் நடத்திக்கொண்டிருந்த விதத்திலே, நகராட்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களுக்கு மின்சார வாரியத்திலிருந்து மின்சாரத்தை மொத்தமாகத் தந்து, அந்த வியாபார முறையை ஏற்படுத்தி, அதிலே லாபத்தை அடைவதற்கு சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, தனியார் நிறுவனங்கள் லாபம் அடைந்தன என்பதற்கே காரணம் வேறு. இந்தியாவிலேயே எந்த வாரியத்திலும் லாபம் வந்ததாக இதுவரையிலும் கணக்குகள் இல்லை. பொதுமக்கள் சௌகரியத்திற்காக என்று விநியோகம் பண்ணும்போது நஷ்டம் தான் வருகின்றது. திருச்சினப் பெற்றுத்தலைவரிலே, அவர்கள் சொல்லுகின்றார்கள் என்று கருதுகிறேன். கிராமங்களிலே மின்சாரம்

அதிகமாகக் கட்டுமானம் ஆன அளவிலே தான் போட்டிருக்கின்றார்கள். பல்வேறு கிராமங்களில், குக்கிராமங்களில், அரிஜன காலனிகளில் தனிப்பட்ட கம்பெனியில் எங்கேயுமே மின்சாரத்தை அளிக்கவில்லை. நாம் எடுத்த பின்னர், நாம் மின்சாரக் கம்பி போட முயற்சி செய்கிறோம். எந்த அளவுக்கு லாபம் பெறமுடியும் என்ற நோக்கத்தில் தனிப்பட்ட வியாபாரிகள் நீட்டிப்பு செய்திருக்கின்றார்கள். ஆனால் மின் வாரியத்தைப் பொறுத்த வரையில், அப்படி அல்ல. எல்லாப் பகுதிகளுக்கும் மின்சாரம் செல்ல வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையிலேதான் நாம் செய்துகொண்டு வருகின்றோம். இதுவே சில இழப்புகளுக்கும் காரணம் ஆகலாம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, அண்மையிலே ரிசர்வ் வங்கியும் மத்திய அரசும் இதை லாபகரமாக நடத்தவேண்டும் என்று அரசுக்கும் மின்சார வாரியத்திற்கும் ஆலோசனை சொல்லியுள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, நல்ல பல யோசனைகளை அங்கத்தினர்கள் சொல்ல வேண்டும் என்றுதான் இருக்கின்ற இடர்ப்பாடுகளையெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கின்றேன். மாண்புமிகு அங்கத்தினர் திரு. தாமோதரன் போன்றவர்கள் எல்லாம் யோசனை சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் இப்போதும் சொல்லலாம், ஏற்றுக் கொள்கிறோம். எப்படிச் செய்தால் வாரியத்திற்கு நன்மை கிடைக்கும் என்று யோசனை எவ்வளவு சொன்னாலும், ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றோம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்).

## 2. அறிவிப்பு.

### பேரவையிலிருந்து செய்தி.

MR. CHAIRMAN : I have received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the motion as passed by the Assembly on 22nd August 1974, by the Tamil Nadu Legislative Assembly, desiring to obtain the concurrence of the Council in setting up a Joint Select Committee of both the Houses consisting of 30 Members (20 Members from the Legislative Assembly and 10 Members from the Legislative Council) to reconsider the Tamil Nadu Cultivating Tenants (Right to Purchase Land



Owners' Rights) Bill, 1973 (L.A. Bill No. 11 of 1973) as passed by the Legislature in the light of the recommendations contained in the Message, dated 7th August 1974, eceived from the Governor and that the following Members of the Legislative Assembly be selected to serve on such a Joint Select Committee :

1. Hon. Thiru S. J. Sadiq Pasha.
2. Thiru Kovai Chezhiyan.
3. Thiru J. James.
4. Thiru M. Muthiah.
5. Thiru. K. A. Wahab.
6. Thiru B. Venkataswamy.
7. Thiru A. R. Marimuthu.
8. Thiru S. Alagarsamy.
9. Thiru Manali C. Kandasamy.
10. Thiru E. S. Thayagarajan.
11. Thiru A. Chinnasamy.
12. Thiru M. Panneerselvam.
13. Thiru A. S. Kumarasamy.
14. Thiru A. Paranthaman.
15. Thiru M. Palanisamy.
16. Dr. K. Nagarajan.
17. Thiru V. Malaikannan.
18. Thiru P S. Muthuselvan.
19. Thiru N. Kittappa.
20. Thiru A. R. Subbiah.

I have also received messages from the Hon. Speaker, Legislative Assembly, transmitting copies of the following Bills as passed by the Assembly and signed by him for the recommendation of the Council and certifying that the Bills are Money Bills within the meaning of Article 199 of the Constitution of India :

1. The Tamli Nadu Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 33 of 1974).

2. The Tamil Nadu General Sales Tax (Second Amendment) Bill, 1974 (L.A. Bill No. 35 of 1974).

[Mr. Chairman] [1974 ஆகஸ்ட் 23

3. The Tamil Nadu General Sales Tax (Third Amendment) Bill, 1974 (L.A. Bill No. 40 of 1974).

I have further received messages from the Hon. Speaker, Legislative Assembly, transmitting copies of the following Bills as passed by the Assembly and signed by him for the concurrence of the Council :

1. The Motor Vehicles (Tamil Nadu Amendment) Bill, 1974 (L.A. Bill No. 32 of 1974).

2. The Tamil Nadu Prohibition (Revival of Operation and Amendment) Bill, 1974 (L.A. Bill No. 38 of 1974).

(பிற்பகல் 4-30)

### 3. தகவல் கோரல்.

### வினாக்களுக்கு விடை வருவதில் காலதாமதம் குறித்து.

**திரு. கே. ராஜாராம் :** தலைவரவர்களே, இன்று 5 கேள்விகள்தான் வந்திருக்கின்றன. ஏராளமான கேள்விகள் உறுப்பினர்களால் போட்டு அனுப்பப்பட்டிருந்தும்கூட, 5 கேள்விகளே அவைமுன் வைக்கப்பட்டிருக்கின்றன. தலைவர் அவர்கள் இதில் கொஞ்சம் அமைச்சர்களுக்குச் சொல்லி, பதில்கள் தாமதமின்றி கிடைப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா? சபை ஒரு மணி நேரம் கேள்விக்காக ஒதுக்கியும், கால் மணி நேரத்தில் கேள்வி நேரம் முடியும் துர்பாக்கியமான நிலைமை ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது. ஆகவே அமைச்சர்கள் அவர்களுடைய செக்ரடேரியட்டுகளுக்குச் சொல்லி, பதில்கள் சீக்கிரம் கிடைக்க முயற்சிக்க வேண்டும் என்று உங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன். அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இரண்டு மூன்று தரம் இதற்காக முயற்சி செய்யுங்கள் என்று அமைச்சர்களுக்குச் சொன்னேன். அமைச்சர்கள் டிபார்ட்மெண்டுக்குச் சொல்லி பதில்கள் வாங்க முயற்சி செய்தார்கள். முந்தா நாள் ஒரு தீவிரமான முடிவுக்கே வந்திருக்கிறோம். கேள்விகளுக்கு உடனுக்குடன் பதில்கள் வரவில்லையென்றால், 42வது நாள் இருக்கிற கேள்விகளையெல்லாம் போட்டுவிடுவது. அதற்குமேலே, எந்தக் கேள்விகளையுமே பெண்டிங்கில் வைக்காமல், நாற்பதாவது நாளோ, நாற்பத்தோராவது நாளோ போட்டுவிடுவது. போட்டிருக்கிறோம் என்று டிபார்ட்மெண்டுக்குச் சொல்லிவிடுவது



1974 ஆகஸ்ட் 23]

என்று முடிவெடுத்திருக்கிறோம். இரண்டு மூன்று நாட்கள் நடைமுறையிலே அதைப் பார்ப்போம். கல்வி டிபார்ட்மெண்டைப் பொறுத்த வரையில் கேள்விகள் இருக்கின்றன. பதில்களும் தயாராக இருக்கின்றன. மற்ற டிபரர்ட்மெண்டுகளிலிருந்து பதில்கள் வருவதில்லை. மற்ற டிபார்ட்மெண்ட்கள் சம்பந்தமான கேள்விகள் இல்லையா என்றால், இருக்கின்றன. டிபார்ட்மெண்ட்களை 'ஸ்பீட் அப்' செய்யுங்கள் என்று அமைச்சர்களைக் கேட்டாகிவிட்டது. இரண்டு மூன்று தடவைகளுக்குப் பிறகு, நாமே ஒரு வழிக்குத் தீவிரமாக வந்தாலொழிய முடியாது என்று நானே ஒரு தீவிரமான முடிவுக்கு முந்தா நாள் வந்திருக்கின்றேன். 42 நாட்களுக்கு மேலே எந்தக் கேள்விக்கும் பதில் கொடுக்காமல் இருக்க முடியாத நிலையை உண்டாக்க வேண்டும். இதற்கான வழிமுறைகளைக் காண சட்டங்களை ஆராய்ந்துகொண்டிருக்கின்றோம். இந்த செஷன் போகட்டும். இன்னும் இரண்டு மூன்று நாட்கள் கழித்து கரெக்ட்டாகக் கொண்டுவந்துவிடுவோம். அது ஒன்றும் கஷ்டமில்லை. அமைச்சர்கள்கூட ஒத்துழைக்கிறார்கள். டிபார்ட்மென்ட்தான் ஒத்துழைக்கிறதில்லை.

**திரு. கே. இராஜாராம் :** அமைச்சர்கள்தான் அதைக் கவனிக்க வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** டிபார்ட்மென்டை அவர்கள்தான் கேட்க வேண்டும். சீஃப் செக்ரடரியே ஒரு மாநாட்டிலே சொல்கிற அளவுக்கு நிலைமை இருக்கிறது. அதிகாரிகள் சரியாக வேலை செய்வதில்லை, சரியாக ஒத்துழைப்பதில்லை, 'slow' ஆகப் போகிறார்கள் என்று சீஃப் செக்ரடரியே சொல்கிறார் என்றால், நாம் என்ன செய்வது? டிபார்ட்மெண்டை ' 'Speed up' செய்தால் வந்துவிடும். 42 நாட்களுக்கு மேலே எந்தக் கேள்விக்கும் பதில் கொடுக்காமல் இருக்க முடியாது என்ற நிலைமையை கட்டாயமாக உண்டாக்க வேண்டும். அதிலே எனக்கோ, மற்றவர்களுக்கோ எந்தக் கெட்ட பெயர் வந்தாலும் நாம் கவலைப்படப் போவதில்லை என்று முடிவு சொல்லிவிட்டேன். தயவுசெய்து இரண்டு மூன்று நாள் பொறுத்துக்கொள்ளுங்கள். 10 கேள்விகள் தான் வருகின்றன. ஒரு அரை மணி நேரத்தில் முடிந்துவிட்டால் என்ன செய்வது? அதற்குப் பிறகு நடவடிக்கையிலே இறங்குகிறோம். ஒருநாள் 6 மணிக்கே கூட்டம் முடிந்து போய்விட்டது. முந்தாநாள் ஏழு மணி நான்கு நிமிடமாயிற்று. தயவு செய்து 5, 6 நாள் பொறுத்துக்கொண்டிருங்கள். இந்த செஷன் முடிந்தபிறகு கரெக்ட் செய்வோம் என்று மாண்புமிகு அங்கத்தினர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

[Mr. Chairman] [1974 ஆகஸ்ட் 23

3. The Tamil Nadu General Sales Tax (Third Amendment) Bill, 1974 (L.A. Bill No. 40 of 1974).

I have further received messages from the Hon. Speaker, Legislative Assembly, transmitting copies of the following Bills as passed by the Assembly and signed by him for the concurrence of the Council :

1. The Motor Vehicles (Tamil Nadu Amendment) Bill, 1974 (L.A. Bill No. 32 of 1974).

2. The Tamil Nadu Prohibition (Revival of Operation and Amendment) Bill, 1974 (L.A. Bill No. 38 of 1974).

(பிற்பகல் 4-30)

### 3. தகவல் கோரல்.

### வினாக்களுக்கு விடை வருவதில் காலதாமதம் குறித்து.

**திரு. கே. ராஜாராம் :** தலைவரவர்களே, இன்று 5 கேள்விகள்தான் வந்திருக்கின்றன. ஏராளமான கேள்விகள் உறுப்பினர்களால் போட்டு அனுப்பப்பட்டிருந்தும்கூட, 5 கேள்விகளே அவைமுன் வைக்கப்பட்டிருக்கின்றன. தலைவர் அவர்கள் இதில் கொஞ்சம் அமைச்சர்களுக்குச் சொல்லி, பதில்கள் தாமதமின்றி கிடைப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா? சபை ஒரு மணி நேரம் கேள்விக்காக ஒதுக்கியும், கால் மணி நேரத்தில் கேள்வி நேரம் முடியும் துர்பாக்கியமான நிலைமை ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது. ஆகவே அமைச்சர்கள் அவர்களுடைய செக்ரடேரியட்டுகளுக்குச் சொல்லி, பதில்கள் சீக்கிரம் கிடைக்க முயற்சிக்க வேண்டும் என்று உங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன். அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இரண்டு மூன்று தரம் இதற்காக முயற்சி செய்யுங்கள் என்று அமைச்சர்களுக்குச் சொன்னேன். அமைச்சர்கள் டிபார்ட்மெண்டுக்குச் சொல்லி பதில்கள் வாங்க முயற்சி செய்தார்கள். முந்தா நாள் ஒரு தீவிரமான முடிவுக்கே வந்திருக்கிறோம். கேள்விகளுக்கு உடனுக்குடன் பதில்கள் வரவில்லையென்றால், 42வது நாள் இருக்கிற கேள்விகளையெல்லாம் போட்டுவிடுவது. அதற்குமேலே, எந்தக் கேள்விகளையுமே பெண்டிங்கில் வைக்காமல், நாற்பதாவது நாளோ, நாற்பத்தோராவது நாளோ போட்டுவிடுவது. போட்டிருக்கிறோம் என்று டிபார்ட்மெண்டுக்குச் சொல்லிவிடுவது



1974 ஆகஸ்ட் 23]

என்று முடிவெடுத்திருக்கிறோம். இரண்டு மூன்று நாட்கள் நடைமுறையிலே அதைப் பார்ப்போம். கல்வி டிபார்ட்மெண்டைப் பொறுத்த வரையில் கேள்விகள் இருக்கின்றன. பதில்களும் தயாராக இருக்கின்றன. மற்ற டிபார்ட்மெண்டுகளிலிருந்து பதில்கள் வருவதில்லை. மற்ற டிபார்ட்மெண்ட்கள் சம்பந்தமான கேள்விகள் இல்லையா என்றால், இருக்கின்றன. டிபார்ட்மெண்ட்களை 'ஸ்பீட் அப்' செய்யுங்கள் என்று அமைச்சர்களைக் கேட்டாகிவிட்டது. இரண்டு மூன்று தடவைகளுக்குப் பிறகு, நாமே ஒரு வழிக்குத் தீவிரமாக வந்தாலொழிய முடியாது என்று நானே ஒரு தீவிரமான முடிவுக்கு முந்தா நாள் வந்திருக்கின்றேன். 42 நாட்களுக்கு மேலே எந்தக் கேள்விக்கும் பதில் கொடுக்காமல் இருக்க முடியாத நிலையை உண்டாக்க வேண்டும். இதற்கான வழிமுறைகளைக் காண சட்டங்களை ஆராய்ந்துகொண்டிருக்கின்றோம். இந்த செஷன் போகட்டும். இன்னும் இரண்டு மூன்று நாட்கள் கழித்து கரெக்ட்டாகக் கொண்டுவந்துவிடுவோம். அது ஒன்றும் கஷ்டமில்லை. அமைச்சர்கள்கூட ஒத்துழைக்கிறார்கள். டிபார்ட்மென்ட்தான் ஒத்துழைக்கிறதில்லை.

**திரு. கே. இராஜாராம் :** அமைச்சர்கள்தான் அதைக் கவனிக்க வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** டிபார்ட்மென்டை அவர்கள்தான் கேட்க வேண்டும். சீஃப் செக்ரடரியே ஒரு மாநாட்டிலே சொல்கிற அளவுக்கு நிலைமை இருக்கிறது. அதிகாரிகள் சரியாக வேலை செய்வதில்லை, சரியாக ஒத்துழைப்பதில்லை, 'slow' ஆகப் போகிறார்கள் என்று சீஃப் செக்ரடரியே சொல்கிறார் என்றால், நாம் என்ன செய்வது? டிபார்ட்மெண்டை 'Speed up' செய்தால் வந்துவிடும். 42 நாட்களுக்கு மேலே எந்தக் கேள்விக்கும் பதில் கொடுக்காமல் இருக்க முடியாது என்ற நிலைமையை கட்டாயமாக உண்டாக்க வேண்டும். அதிலே எனக்கோ, மற்றவர்களுக்கோ எந்தக் கெட்ட பெயர் வந்தாலும் நாம் கவலைப்படப் போவதில்லை என்று முடிவு சொல்லிவிட்டேன். தயவுசெய்து இரண்டு மூன்று நாள் பொறுத்துக்கொள்ளுங்கள். 10 கேள்விகள் தான் வருகின்றன. ஒரு அரை மணி நேரத்தில் முடிந்துவிட்டால் என்ன செய்வது? அதற்குப் பிறகு நடவடிக்கையிலே இறங்குகிறோம். ஒருநாள் 6 மணிக்கே கூட்டம் முடிந்து போய்விட்டது. முந்தாநாள் ஏழு மணி நான்கு நிமிடமாயிற்று. தயவு செய்து 5, 6 நாள் பொறுத்துக்கொண்டிருங்கள். இந்த செஷன் முடிந்தபிறகு கரெக்ட் செய்வோம் என்று மாண்புமிகு அங்கத்தினர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

## 4. கவன ஈர்ப்பு.

**தஞ்சாவூர், இராஜா சரபோஜி (அரசினர்) கல்லூரிப் பணியாளர்களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்காதது குறித்து.**

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்:—

"தஞ்சாவூர், இராஜா சரபோஜி (அரசினர்) கல்லூரிப் பணியாளர்களுக்கு 1—3—1973 ஆம் நாளிலிருந்து 30—11—1973 ஆம் நாள் வரையிலான கால அளவிற்குரிய வீட்டு வாடகைப்படி வழங்காததையும், அதனால் அவர்களுக்கு ஏற்பட்ட இன்னல்களையும் குறித்து".

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, தஞ்சாவூரில் உள்ள சரபோஜி மன்னர் கல்லூரி தனியார் நிறுவனமாக 30—6—1965 வரை இயங்கி வந்தது. இக்கல்லூரியை 1—7—1965-ல் அரசு ஏற்றுக்கொண்டுள்ளதால், அரசினர் கல்லூரியாக இயங்கி வருகின்றது. இக் கல்லூரியில் பணி புரிபவர்களுக்கு, 1—7—1965 முதல் வீட்டு வாடகைப்படியை அரசு விதிகளின்படி கொடுக்க பொதுவான ஆணை வெளியிடப்பட்டது. இவ்வாணையின்படி வீட்டு வாடகைப்படி, இக் கல்லூரியில் பணிபுரிபவர்களுக்கு 1—7—1965 முதல் 28—2—73 வரை கொடுக்கப்பட்டு வந்தது. இக்கல்லூரியின் பெயர், நிதித் துறை வெளியிட்ட அரசாணை நிலை எண் 224, நாள் 8—2—1971-ல் இடம் பெறுததாலும், இக்கல்லூரி தஞ்சாவூர் நகராட்சி எல்லைக்குச் சற்று அப்பால் இருப்பதாலும் வீட்டு வாடகைப்படி 1—3—1973 முதல் கொடுக்கப்படாமல் தஞ்சாவூர் கருவூல அலுவலரால் நிறுத்தி வைக்கப்பட்டது.

சரபோஜி மன்னர் அரசு கல்லூரியைச் சுற்றி மக்கள் வாழ்வதற்கு வசதியில்லாத காரணத்தால் அக்கல்லூரியைச் சார்ந்த எல்லா அரசு ஊழியர்களும், தஞ்சாவூர் நகராட்சி எல்லையினுள்தான் குடியிருக்கவேண்டியிருக்கிறது. ஆகையால், 1—12—1973 முதல் இக்கல்லூரியில் பணிபுரியும் அனைத்து அலுவலர்களுக்கும், இதர அரசு ஊழியர்களுக்குப் பொருந்தும் விகிதத்தில் அவர்கள் தஞ்சாவூர் நகராட்சி எல்லைக்குள் குடியிருக்கும் நிபந்தனையின் பேரில் வீட்டு வாடகைப்படி கொடுக்க ஆணையிடப்பட்டது.

இக்கல்லூரி ஊழியர்களுக்கு 1—3—1973 முதல் 30—11—1973 வரை கொடுக்கப்படாமல் விட்டுவிடப்பட்ட வீட்டு வாடகைப்படியையும் அவர்கள் நகராட்சி எல்லைக்குள் குடியிருந்ததால் கொடுக்கும்படி, 14—8—1974-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



(பிற்பகல் 4-40)

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, இந்தக் கணக்குப்படி 1—3—1973 லிருந்து 30—11—1973 வரையில் கொடுக்கப்படவில்லை. 1—3—1973 வரையில் கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் இந்த இடைக் காலத்தில் அதாவது 1—3—1973 முதல் 30—11—1973 வரையில் கொடுக்கப்படவில்லை.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை.)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** துணைத் தலைவரவர்களே, அந்த இடைக்காலத்தில் கொடுக்கப்படாமல் விட்டுவிடப்பட்டது குறித்துத்தான், அவர்கள் அந்தக் கால கட்டத்தில் நகராட்சி எல்லைக்குள் குடியிருந்திருந்தால் அவர்களுக்குக் கொடுக்கப்படலாம் என்று 14—8—1974 அன்று ஆணையிடப்பட்டது.

## 5. அரசின் சட்ட முன்வடிவுகள்.

**(1) தமிழ்நாடு, 1973-ஆம் ஆண்டு, பயிரிடும் குத்தகைதாரர்கள் (நிலவுடைமையாளர்களின் உரிமைகளை வாங்கும் உரிமை) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1973) சட்ட மன்ற அவைகளால் நிறைவேற்றப்பட்டவாறு.**

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்ற அவைகளால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நிலவுடைமையாளர்களின் உரிமைகளை வாங்கும் உரிமை) சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1973) ஆளுநர் அவர்களிடமிருந்து 7—8—1974 ஆம் நாளிட்டு வரப்பெற்ற செய்தியில் கண்டுள்ள பரிந்துரைகளுக்கிணங்க, மறு ஆய்வு செய்வதற்கென 30 உறுப்பினர்கள் அடங்கிய (20 சட்டப் பேரவை உறுப்பினர்களும் 10 சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களும்) கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைப்பதில், சட்டப் பேரவைக்கு, மேலவை தனது இசைவைத் தெரிவிக்கின்றது.

மேற்படி குழுவில் பணியாற்றுமாறு, கீழ்க்கண்ட மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்:—

1. திரு. கோ. சி. மணி,
2. திரு. வி. ஆர். பெரியண்ணன்
3. திரு. டி. வி. முத்துகிருஷ்ணன்

4. திரு. இரா. சாம்பசிவம்

5. திரு. வே. தங்கப்பாண்டியன்

6. திரு. கே. எஸ். அப்துல் வஹாப்

7. திரு. ஜி. சுவாமிநாதன்

8. திரு. வ. ஆர் தாமோதரன்

9. திரு. கே. ராஜாராம்

10. திரு. என். சுந்தரேசத் தேவர்".

என்ற இந்தத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நில உடைமையாளர்களின் உரிமைகளை வாங்குதல்) சட்ட வரைவு, 1973, ஏப்ரல் 3 ஆம் நாளன்று சட்ட மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னர், குடியரசுத் தலைவரின் இசைவைப் பெறுவதற்கென, இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. இதற்கு இடையில் இந்திய அரசு, இச்சட்ட வரைவின் விதித் துறைகளுக்கு மாற்றங்களைத் தெரிவித்து, தனக்கு வந்துள்ள சில முறையீடுகளை மாநில அரசுக்கு அனுப்பி, அவை பற்றிய கருத்துக்களை அறிவிக்குமாறு கேட்டுக்கொண்டது: சட்ட வரைவில் உள்ள விதித்துறைகளை தற்போதுள்ள வடிவிலேயே செயற்படுத்தின், பல்வேறு நபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் ஏற்படக்கூடிய இடையூறுகளைக் குறிப்பிட்டு பொது மக்களிடமிருந்து, நேரடியாகவும், செய்தித்தாள்கள் மூலமும் பல முறையீடுகள் மாநில அரசுக்கும் வந்துள்ளன. முறையீடுகளில் குறிப்பிட்ட கருத்துக்கள், இச்சட்ட வரைவில் அடிப்படைக் கொள்கைகளைக் கொண்டுள்ள முக்கியமான விதித்துறைகளை மாற்றியமைப்பதாக உள்ளன. எனவே, இச்சட்ட வரைவு பரிசீலனைக்காக மீண்டும் முழுமையாகச் சட்ட மன்றத்தில் வைக்கப்படுவதின் மூலம் இந்த முறையீடுகள் தொடர்பாக சட்ட மன்றத்தின் கருத்துக்கள் அறியப்பட வேண்டும் என்று அரசு கருதியது. இச்சட்ட வரைவு முழுவதையும் மறு பரிசீலனை செய்வதற்காக சட்ட மன்றத்தின் இரு அவைகளுக்கும் அதைத் திருப்பி அனுப்புமாறு தமிழ் நாட்டு ஆளுநரைக் கேட்டுக்கொள்ளும்படி குடியரசுத் தலைவரை வேண்டிக் கொள்ளுமாறு இந்திய அரசிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. சமய நிறுவனங்களிடமிருந்தும் அற நிலையங்களிடமிருந்தும் பொது மக்களிடமிருந்தும் வரப்பெற்ற பல்வேறு முறையீடுகளின் அடிப்படையில், இந்தச் சட்ட வரைவு முழுவதையும், குறிப்பாக 15-வது பகுதியின் 2-வது வரம்பு நிபந்தனையையும் 26-வது பகுதி



யையும் இரு அவைகளும் மறு பரிசீலனை செய்து, மேற்சொன்ன நிறுவனங்கள் எவ்வித நிதி இடர்ப்பாடும் இன்றி முறையான தங்களது அலுவல்களை நிறைவேற்றுவதற்கு இயலும் வகையில் அவசியமெனக் கருதக்கூடிய திருத்தங்களைச் செய்யலாம் என்ற கட்டளைக் குறிப்புடன் மாநிலச் சட்ட மன்ற அவைகளுக்கு இந்தச் சட்ட வரைவைத் திருப்பி அனுப்பலாம் என்று இந்திய அரசியலமைப்பின் 201-வது பிரிவின் வரம்பு நிபந்தனையையொட்டி குடியரசுத் தலைவர் கட்டளை பிறப்பித்துள்ளார். குடியரசுத் தலைவரிடமிருந்து வரப்பெற்ற இக் கட்டளைக்கிணங்க தமிழ் நாட்டு ஆளுநர், சட்ட மன்றப் பேரவைத் தலைவருக்கும் மேலவைத் தலைவருக்கும் எழுதிய 7—8—74 நாளிட்ட தமது செய்திக் குறிப்பில் இந்தச் சட்ட வரைவு முழுவதையும், குறிப்பாக 15-வது பகுதியின் 2-வது வரம்பு நிபந்தனையையும், 26-வது பகுதியையும் மறு பரிசீலனை செய்து, குடியரசுத் தலைவரது கட்டளையில் சுட்டிக்காட்டியவாறு இந்தச் சட்ட வரைவில் அவசியமெனக் கருதக்கூடிய திருத்தங்களைச் செய்வதற்காக இந்தச் சட்ட வரைவை சட்ட மன்ற இரு அவைகளுக்கும் திருப்பி அனுப்பியுள்ளார். இந்தச் சட்ட வரைவிற்குத் திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்று கருத்து தெரிவித்து வரப்பெற்ற பல்வேறு முறையீடுகளை முன்னிட்டு விரிவாகப் பரிசீலனை செய்வதற்காக சட்ட மன்ற இரு அவைகளைச் சேர்ந்த இணை ஆய்வுக் குழு ஒன்றுக்கு இந்தச் சட்ட வரைவு அனுப்பப்படுவது விரும்பத் தக்கதெனக் கருதப்படுகிறது. இதனை இம்மன்றம் ஏற்குமாறு நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்**: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நிலவுடைமையாளர்களின் உரிமைகளை வாங்கும் உரிமை) பற்றிய இந்த மசோதாவை மறு ஆய்வு செய்வதற்காக சட்ட மன்ற உறுப்பினர்களுடைய ஒரு கூட்டு ஆய்வுக் குழுவிற்கு அனுப்பி அவர்களுடைய ஆலோசனையைப் பெறுவது என்பது குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

நமது அவையில் இந்த மசோதாவினை எடுத்துக்கொண்ட அன்றே கிட்டத்தட்ட மூன்று மணிநேர அளவிற்கு விவாதித்து, பல திருத்தங்களை நானும் மதிப்பிற்குரிய திரு. தாமோதரன் அவர்களும் மற்றவர்களும் கொடுத்து, அநேகமாக எதிர்க் கட்சியிலிருந்த அவ்வளவு உறுப்பினர்களும் இது ஒரு கூட்டாய்வுக் குழுவிற்கு அனுப்பப்பட வேண்டும் என்று வற்புறுத்தினோம். ஆனால் அன்றைக்கு

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1974 ஆகஸ்ட் 23

அவ்வளவு தூரம் எதிர்க் கட்சியில் நாங்கள் சொல்லியதற்கு அரசு செவி சாய்க்காமல் இருந்துவிட்டதற்காக நாங்கள் உண்மையிலேயே மிகவும் வருந்துகிறோம் என்றாலும்கூட, இது நமது குடியரசுத் தலைவரவர்களுக்கு அனுப்பப்பட்ட பிறகு அதுபற்றிச் சொல்லப்பட்ட பல கருத்துக்களுக்கு, பத்திரிகைகளிலும் வெளியிலும் சொல்லப்பட்ட கருத்துக்களுக்கு மதிப்பளித்து, இப்போது மீண்டும் அது நமக்கே திருப்பியனுப்பப்பட்டுள்ளதைப் பார்க்கிறோம். அந்த மசோதாவினை நாம் நிதானமாக யோசிக்க வேண்டும், அவசரப்பட்டு ஒன்றையும் செய்துவிடக்கூடாது என்று அன்றைக்கே நாம் எடுத்துக்காட்டி இதை ஒரு கூட்டாய்வுக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்று சொன்னதைக் கேட்காமல், அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு நாம [illegible] ஆளுநர் அவர்களுக்கும் குடியரசுத் தலைவரவர்களுக்கும் அனுப்பப்பட்டது. அப்போதே நாம் கோரியபடி இதை ஒரு கூட்டாய்வுக் குழுவிற்கு அனுப்பியிருந்தால், இன்று இப்படிப்பட்டதொரு துர்பாக்கியமான நிலைமை வந்திருக்காது. நாம் ஒரு தீர்மானம் போட்ட பிறகு, அவர்கள் அது சரியில்லை என்று சொன்னால், அது அரசுக்குக் கூட அவ்வளவு கௌரவமான ஒன்று, சட்டப் பேரவைக்குக் கௌரவமான ஒன்று என்று நினைக்கவில்லை. என்றாலும் இப்போது இதைக் கூட்டாய்வுக் குழுவிற்கு அனுப்பும்போது, நாம் கொஞ்சம் அவசரப்படாமல் யோசிக்க வேண்டும். மிகவும் முற்போக்கு என்று சொல்லக்கூடியவர்கள் சொல்லக்கூடிய ஒரே கருத்தை ஏற்றுக்கொண்டால், இப்படிப்பட்ட பல இடையூறுகள் வரும் என்பதை அரசு இப்போது உணர்ந்திருப்பதால், இதை மீண்டும் நிதானமாக ஆராய்ந்து நல்ல முறையில் அதற்கான சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இதை இப்போது கூட்டாய்வுக் குழுவிற்கு விடுவது பற்றி எதிர்க் கட்சியினர் மகிழ்ச்சியினைத் தெரிவித்துக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

“சட்ட மன்ற அவைகளால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1973 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நிலவுடைமையாளர்களின் உரிமைகளை வாங்கும் உரிமை) சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1973) ஆளுநர் அவர்களிடமிருந்து 7—8—1974-ம் நாளிட்டு வரப் பெற்ற செய்தியில் கண்டுள்ள பரிந்துரைகளுக்கிணங்க, மறு ஆய்வு செய்வதற்கென 30 உறுப்பினர்கள் அடங்கிய (20 சட்டப் பேரவை உறுப்பினர்களும் 10 சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களும்) கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைப்பதில், சட்டப் பேரவைக்கு மேலவை தனது இசைவைத் தெரிவிக்கின்றது.



1974 ஆகஸ்ட் 23] [மேலவைத் துணைத் தலைவர்]

மேற்படி குழுவில் பணியாற்றுமாறு, கீழ்க்கண்ட மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள் :—

1. திரு. கோ. சி. மணி
2. திரு. வி. ஆர். பெரியண்ணன்
3. திரு. டி. வி. முத்துகிருஷ்ணன்
4. திரு. இரா. சாம்பசிவம்
5. திரு. வே. தங்கப்பாண்டியன்.
6. திரு. கே. எஸ். அப்துல் வஹாப்
7. திரு. ஜி. சுவாமிநாதன்
8. திரு. ஏ. ஆர். தாமோதரன்
9. திரு. கே. ராஜாராம்
10. திரு. என். சுந்தரேசத் தேவர்”.

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, எனக்கு ஒரு சந்தேகம். இந்த மசோதாவைக் கொடுக்கும்போது, அத்துடன் ஆளுநர் அவர்களுடைய முழுப் பரிந்துரைகளையும் கொடுக்க வேண்டும் என்று அரசியல் சட்டம் சொல்லுகின்றது. எங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள மசோதாவில் ஆளுநர் அவர்களுடைய பரிந்துரைகள் என்ன என்று கொடுக்கப்படவில்லை.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, மசோதா நிறைவேறிவிட்டது. எனவே அந்தப் பிரச்சினை பற்றிப் பேச இடமில்லை.

(பிற்பகல் 4-50)

**(2) தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு, எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1974).**

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே,

“சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு, எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1974) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்”

என்று முன்மொழிகிறேன்.

---

@ 278–280 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. எம். ஜே. சாதிக் பாட்சா] [1974 ஆகஸ்ட் 23

தமிழ் நாடு, 1948-ஆம் ஆண்டு எஸ்டேட்டுகள் (ஒழித்தல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் XXVI 1948) 3 (h) பிரிவின் கீழ், ஏனையவற்றுடன், ஏரிகள், பாசனப் பணிகள் உட்பட எஸ்டேட்டு முழுவதும் அரசுக்கு மாற்றப்பட்டு, வில்லங்கம் எதுமின்றி அவை அரசிடம் நிலைபெறும். நிலச் சொந்தக்காரரின் தனி உடைமையாகிய ஏரி ஒன்று அரசிடம் நிலைபெறாது என்று, மாநில அரசுக்கும், பழனியாண்டிக்கும், ஏனையோருக்குமிடையேயான வழக்கில் (அரசு மேல்முறையீடு எண் 1645/1966) உயர் நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. தனியார் ஏரிகள் உட்பட ஏரிகளனைத்தும் அரசிடம் நிலை பெற்றிருக்க வேண்டியது அவசியம் என்று கருதப்படுகிறது. அப்போது தான் பொது மக்களின் பயனுக்காக அவற்றை அரசு பராமரிக்க முடியும். எனவே, எஸ்டேட் ஒன்றில் உள்ள தனியார் ஏரிகள் உட்பட ஏரிகளனைத்தும் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து அரசிடம் நிலைபெற்றுள்ளதாகக் கருதப்படவேண்டும் என்றும், அத்தகைய தனியார் ஏரி குறித்து ரயத்துவாரிப் பட்டா எதுவும் வழங்கப்படக்கூடாது என்றும், அத்தகைய தனியார் ஏரி குறித்து முன்னர் வழங்கப்பட்ட பட்டா ரத்தாகுமென்றும், அத்தகைய எஸ்டேட் குறித்து இழப்பீட்டுத் தொகை மாற்றி வரையறுக்கப்படவேண்டுமென்றும் அரசு முடிவு செய்துள்ளது. இச்சட்டவரைவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

ஏரிகள் என்பதில் ஊருணிகள் அடங்கும் என்ற நிலையை விளக்கும் வகையில் சட்ட மன்றப் பேரவையில் அரசுத் திருத்தம் ஒன்று கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இதனை ஏற்று நிறைவேற்றித் தருமாறு நான் இம்மேலவையைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1974-ஆம் ஆண்டு, எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1974) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்".

**தீர்மானம்.** அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.



974 ஆகஸ்ட் 23]

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1974-ஆம் ண்டு, எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்தச் சட்ட ன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1974) நிறைவேற்றப் டவேண்டும்".
ன்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை.

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1974-ஆம் ண்டு, எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்தச் சட்ட ன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1974) நிறைவேற்றப் டவேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

### (3) தமிழ் நாடு, 1974-ஆம் ஆண்டு, மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1974).

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1974-ஆம் ஆண்டு, மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1974) @ பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

கூடுதல் வரி வருவாய் வாயில்களைத் திரட்டும் பொருட்டு, அரசு, தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு மோட்டார் எண்ணெய் விற்பனைகளுக்கு வரி விதித்தல் (தமிழ் நாடு சட்டம் 6/1939) சட்டத்தின் கீழ், பெட்ரோல், விமான எரி எண்ணெய் மீதான வரியை லிட்டர் ஒன்றுக்கு பதினைந்து காசிலிருந்து இருபத்தொரு காசு வரையிலும், டீசல் எண்ணெய் மீதான வரியை லிட்டர் ஒன்றுக்கு பதின்மூன்று காசிலிருந்து பதினைந்து காசு வரையிலும் உயர்த்துவதென்று முடிவு செய்துள்ளது. உத்தேச அதிகரிப்புக்குப் பிறகும் கூட, தமிழ் நாட்டில் பெட்ரோல், விமான எரியெண்ணெய் மீதான வரி விகிதங்கள் அண்டை மாநிலங்களில் நிலவும் வரி வீதங்களைக் காட்டிலும் மிகக் குறைவாகவே இருக்கும்.

---

@ 280 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1974 ஆகஸ்ட் 23

மேற்சொன்ன செயற்குறிப்பிற்குச் செயல்வடிவம் கொடுக்கும் பொருட்டு, தமிழ் நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் எண்ணெய் வரி (திருத்தச்) சட்ட முன்வடிவுக்கு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1974) பேரவையால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்ட முன்வடிவு ஆலோசனைக்காக மேலவை முன் வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரேரணையை இம்மாமன்றம் ஏற்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு, மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1974) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

* THIRU A. R. DAMODARAN : Sir, in the Supplementary Demands, we were informed by the Hon. the Chief Minister and Finance Minister that the tax on Petrol and High Speed Diesel Sales Tax would be increased and this Bill is being brought forth by the Hon. the Minister for Revenue in keeping with what has been mentioned in the Supplementary Budget.

Sir, generally in introducing these taxes the Government usually shelter themselves on the ground that the amount of tax is so very small and that it is not likely to affect consumers, that it is not likely to push up costs of essential commodities, etc. Therefore, Sir, I should like to inform the Members of the House of the very heavy incidence of taxes on petroleum products and also to invite their attention to the fact that there is, after all, a definite burden which petroleum products can bear, and to keep on increasing this burden without going into the past burden that has been inflicted on these commodities is not taking a very realistic view of the matter.

In the year 1973–74, the sales tax which the Tamil Nadu Government have collected by way of Sales of Motor Spirit Taxation Act is of the order of Rs. 12 crores. By these new



1974 ஆகஸ்ட் 23] [Thiru A. R. Damodaran]

levies, my estimate is that on motor spirit they will make Rs. 1.5 crores in a full year and Rs. 1.2 crores on High Speed Diesel in a full year and that means that collections by these taxes will come to nearly Rs. 15 crores. Further, there is another side of the story in that petroleum products are not only subjected to sales tax but also subjected to very heavy excise duties at the hands of the Government of India. During the year 1974–75, the excise duty collection on High Speed Diesel, which is sought to be taxed by the Hon. Minister today, will be Rs. 252 crores and on motor spirit will be Rs. 410 crores. Now, Sir, when the Hon. Minister says that in keeping with the taxation in the surrounding States, Tamil Nadu sales tax is comparatively less in so far as motor spirit is concerned, I am prepared to concede his point. I agree that the price of motor spirit is cheaper in Tamil Nadu than in Karnataka, Kerala and Andhra. But, there are very good reasons for this and one of the best reasons is that the consumption of motor spirit is very much higher in Tamil Nadu than in other States because of the advanced industrialisation and commercial activity of our State. If past administrators have deliberately kept this tax a little low, it was because they wanted to encourage increased trade and commerce and that was one of the historical reasons why the tax on motor spirit was kept at a very low level. But, as for the tax on High Speed Diesel, by the introduction of an additional tax of Rs. 20 per kilolitre, the price in Tamil Nadu has now gone up over the prices in Karnataka, Kerala and Andhra. I think, Sir, the rate of tax in Karnataka and Andhra is about 11 to 12 per cent and taking into account the cost price of High Speed Diesel which is Rs. 1,000 per kilolitre, the tax in those States is of the order of 12 paise or 13 paise per litre. Therefore, the commercial vehicle owners, the lorry operators and the bus transport people in our State will have to bear a greater burden in so far as the price of High Speed Diesel is concerned. I remember the Hon. the Minister for Transport, during the Budget Session, was very upset when he heard of the levies on High Speed Diesel because it would upset the Budget of his various Transport Corporations and what the Hon. the Minister for Revenue is now doing is merely to transfer money from one pocket of the Government to another pocket and thereby increase the cost of bus transport. I would like the Government

to consider this aspect because High Speed Diesel is not a commodity that is used as a luxury item of consumers. Ninety-nine per cent of the High Speed Diesel that is used is used for the carriage of goods and passengers; it is used in agriculture, in tractors; it is used in diesel pump sets. Therefore, when the Government of India have informed the Government of Tamil Nadu—as the Hon. the Minister for Transport mentioned only the other day when I was asking for figures of allocation of High Speed Diesel—the question of imposing a cut on the consumption of High Speed Diesel is a very dangerous thought as it is likely to cripple development activity in a very big way.

I wish to take this opportunity of informing the Government that the allocation of High Speed Diesel to our State is being cut very drastically and if the position continues, as it is at present, I am afraid neither agriculturists nor lorry operators nor bus operators will be able to get their requirements. Sir, last year, during the first six months of 1973, the average receipt of High Speed Diesel in Tamil Nadu was of the order of 60,000 kilolitres. The Hon. the Minister for Transport mentioned only day before yesterd — that during the months of October, November, December, January and February, the allocation was of the order of 50,000 kilolitres and I understand from very reliable quarters that the allocation in the coming months is going to be cut by at least 20 per cent over the figures of 1973. Even if they maintain the 1973 allocation, it is going to be extremely difficult because the consumption of High Speed Diesel has been increasing at the rate of 14 to 15 per cent per annum and taking into account the switchover from kerosene to High Speed Diesel, another 15 per cent demand has to be satisfied and the minimum quantity that should be allocated to Tamil Nadu would be of the order of 40 per cent over the allocation in 1973.

(பிற்பகல் 5.00)

I am mentioning this because all over the districts, great difficulty is being experienced by lorry operators and agriculturists in obtaining High Speed Diesel Oil and I believe, Sir, as was done in the case of kerosene, if the Tamil Nadu Government could make



a vigorous representation to the Government of India in Delhi, perhaps some relief might be afforded. All of us know that in Bombay when there was a severe cut in kerosene supply, the ladies of Bombay took their kettles and pans and started playing a musical chorus in front of the place of the Civil Supplies Minister demanding more kerosene and the Minister for Civil Supplies made a frantic telephone call to Mr. Barooah who was kind enough to give additional allocation of kerosene. I hope the Ministers here will not invite a similar type of demonstration because it can be very noisy and irksome. But if that is required to impress upon them the necessity, the persons along with the lorries may very well march to Fort St. George to indicate the serious difficulty that is experienced by them in obtaining supplies. The Government of India want to cut down the consumption of all petroleum products. When they want us to cut down the consumption of kerosene, is there any person who has told the ordinary housewives the alternative that they should use instead of kerosene? If they can tell us that we have a really good alternative, it will be good. They want us to buy firewood but that is not available in Madras City. They want us to use cooking coal; there is no cooking coal. The only other alternative is gas which is also in short supply. Before telling us, the Ministers should remain in their houses and try to cook in their homes to find out the serious difficulty that is likely to result if this essential fuel is not given. I only wanted to mention this because sometimes very misleading statements have been made in Parliament and elsewhere giving the impression that considerable quantity of oil has been given to the State of Tamil Nadu and that somehow this oil has disappeared somewhere into the Bay of Bengal. Similarly High Speed Diesel Oil cannot disappear and cannot be stored in plenty because the tank capacities are very small. It is an oil that is being consumed by all those engaged in development activities. If there is any disruption in the supply of such an essential commodity, we will be in for a period of serious difficulties because the prices of all essential commodities would increase. I hope, therefore, that while levying such sales tax, the Government of Tamil Nadu would also bear in mind that this is a very sensitive commodity. I do not mind the increase in levy by Rs. 60 on motor spirit although the consumption of the same will go down, as it has already gone down by 30 per cent and the Minister for Revenue will have to come

with further proposals of taxation, because he is not going to get the revenue as expected from this tax. As far as High Speed Diesel Oil is concerned, I would request him to bear in mind that this commodity is being used by a very sensitive section of the transport industry—by lorries and buses—and we cannot afford to increase the taxation to a very high level so as to make it practically impossible for them to work economically. As a matter of interest, I think, the Hon. Ministers may not be aware of the price of this commodity because nowadays their allowance has been fixed on litre basis and so the amount that one would have spent on petrol cannot be known to them. But, I would like to indicate that in Madras City, the price of one litre of petrol is Rs. 3-14 and the excise duty and sale tax and Motor Spirit Tax come to Rs. 2.27. So, actually, the consumer is paying only 77 P. per litre for petrol and the balance is only tax which indicates that 72.5 per cent of the price goes by way of excise duties and sales tax. I wanted this information to go on record, because generally traders will be blamed for the increase in prices which is not the case and I think the consumers are entitled to know that the high price that we are now paying for this product is exclusively due to high taxation.

One more plea and I have done, Sir. I have referred to the shortage of High Speed Diesel Oil and I would like the Hon. the Minister for Transport also to consider as he has done in the case of passenger buses, whether, to save fuel, he could not relax the load limit in lorries. In Bombay and other States, they are actively considering whether a ten per cent relaxation in the loading limit could not be given to lorries, because, as there is a shortage of fuel, if you increase the capacity, then it would be possible for us to economise in the use of fuel. The Hon. the Minister for Transport may kindly consider the suggestion as this would alos help in the conservation of this fuel. Thank you, Sir.

**திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பெட்ரோல், டீசல் முதலியவைகளுக்கு வரி விதிக்கப்பட்டிருப்பதற்கு ஒரு விளக்கத்தை மட்டும் கேட்டுக்கொள்கிறேன். பெட்ரோல் பங்கில், டீசல், பெட்ரோல் விற்கும்போது, அரசு விதித்துள்ள வரி தவிர





விற்பனையாளர்கள், சர்வீஸ் சார்ஜ் என்று சொல்லி 2 பைசா, 5 பைசா என்று வசூல் செய்கிறார்கள். அது முறையா? அம்மாதிரி வசூல் செய்யலாமா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்று தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** துணைத் தலைவர் அவர்களே, தனியாகப் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டால் விளக்கம் தருவார்கள். நான் சம்பந்தப்பட்டவரை, எனக்கு வரிதான். அப்படி ஏதாவது குறை இருந்தால், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இப்போது அல்ல, தனியாக—கொண்டு வந்தால், அது முறையா இல்லையா என்று பதில் கூறுவார்கள்.

**திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்:** துணைத் தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் வரி, மாநில சர்க்கார் வரி என்பதோடு விற்பனையாளர் வரி என்று வருகிறது என்பதற்காகத்தான் சொல்லுகிறேன்.

**திரு. கே. ராஜாராம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவை முன் வந்திருக்கும் வரிப் பிரேரணையும், இன்னும் இரண்டு வரிப் பிரேரணைகளும் ஒரு நல்ல காரியத்திற்காக ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்வதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன என்று அரசு சொல்லுகிறது. நல்ல காரியத்திற்காகக் கொண்டு வந்திருந்தபோதிலும் கூட, அதை எதிர்க்கும்படியான துர்பாக்கியமான நிலைமை ஏற்பட்டிருப்பதற்காக நான் வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இந்த அரசு கடைப்பிடித்த தவறான கொள்கையினால்தான் இன்று இந்த வரிப் பிரேரணைகள் அவை முன் வந்திருக்கின்றன. இந்த சபையில் அநேகமாக எல்லா எதிர்க் கட்சிகளும் மதுவிலக்கை ரத்து செய்யக்கூடாது, அல்லது ஒத்தி வைக்கக்கூடாது, மதுவிலக்குச் சட்டத்தைக் கைவிடுவது தவறான காரியம் என்று எவ்வளவோ சொன்னோம். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு நாங்கள் சொன்னதை, எவ்வளவு அழுத்தமாகச் சொன்னோமோ, அவ்வளவு அழுத்தமாகச் சொல்லிக்கொண்டு, அதே அரசு இப்போது காந்தி வழி, அண்ணா வழியைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லிக்கொண்டு மதுவிலக்கை மீண்டும் கொண்டு வந்திருக்கிறது. அன்றே காந்தி வழி, அண்ணா வழி என்று சொல்லித்தான் மதுவிலக்கைக் கைவிட வேண்டாம் என்று கேட்டுக்கொண்டோம். அதையும் மீறி, அன்றைக்கு உறைக்காமல் இன்று அவர்கள் பெயரைச் சொல்லிக்கொண்டு மீண்டும் மதுவிலக்கைக்

கொண்டு வந்ததால், இடையில் கிடைத்து வந்த வருமானம் குறைகிறது. இடையில் வந்த வருமானத்தை வைத்து, அதிகமான செலவை மாநில அரசு உண்டு பண்ணிக்கொண்டதால், இப்போதைக்குச் செலவைக் குறைக்க முடிய வில்லை. அதை ஈடுசெய்வதற்கு புதிய வரிகள் போடுகிறோம் என்று சொல்லு கிறார்கள். நாங்கள் சொன்னபடி கேட்டிருந்தால், இப்போது புதிய வரிகள் போடவேண்டிய அவசியமில்லை. இப்படி தூரதிருஷ்டியுடன்கூடிய கருத்து, கொள்கை இல்லாததால் அரசாங்கத்தைக் கண்டிக்க வேண்டியிருக்கிறது என் பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-10)

அதோடு, பொதுவாகவே நமது மாநிலத்தில் விற்பனை வரியினுடைய ஆரம்ப நிலையை, தலைவரவர்களே, நீங்கள் பார்ப்பீர்களானால், மது விலக்கைக் கொண்டுவருவதற்காக விற்பனை வரி வந்தது. 1938 ஆம் வருஷம் ராஜாஜி— பிரைம் மினிஸ்டர் என்றுதான் அந்தக் காலத்தில் சொல்வார்கள்—பிரைம் மினிஸ்டராக இருந்த அந்தக் காலத்தில், மது விலக்குச் சட்டத்தை இரண் டொரு ஜில்லாக்களுக்கு மட்டும் அறிமுகம் செய்தபோதிலும்கூட, ஈடு செய்வதற்காக விற்பனை வரியை—1 பைசா வரி என்று சொல்வார்கள்—அந்த ஒரு பைசா வரியைக் கொண்டுவந்து அதன் மூலம் ஈடு செய்துகொண்டு வந்தார்கள். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அது வளர்ந்து இன்றைய தினம் 150 கோடி ரூபாய் அளவிற்கு வருகிறது என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் வாயாலேயே சொல்லக் கூடிய அளவிற்கு வளர்ச்சியடைந்திருக்கிறது. இந்த மாநில மக்கள் 150 கோடி ரூபாய் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மது விலக்கை அமுலுக்குக் கொண்டு வந்ததால், நஷ்டம் ஏற்படவில்லை. 150 கோடி ரூபாய் விற்பனை வரி மூலம் வருகிறது. மது விலக்கை அமுலுக்குக் கொண்டுவந்ததன் மூலம் அதில் வருவதைப் போன்று 3 மடங்கு, 4 மடங்கு அதிகமாக விற்பனை வரி மூலம் வந்துகொண்டிருக்கும்போது, மதுவிலக்கிற்காக வரியைக் கொண்டு வந்திருக் கிறோம் என்று சொல்வது சரியான வாதம் என்று ஏற்றுக்கொள்ள முடியாத விஷயம். ஆகவே இந்த வரியையும், இதற்குப் பின்னால் வரவிருக்கிற இரண்டு வரி மசோதாக்களையும் நான் ஒப்புக்கொள்வதற்கில்லை. அவைகளைப் பலமாக எதிர்க்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறேன் என்று தெரிவித்துக்கொண்டு, இந்த அரசு வரிப் பிரேரணையை திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவரவர்களே, எதிர்க் கட்சித் தலைவரவர்கள் மது விலக்குத் திட்டத்தைக் கொண்டு வருவதால், இந்த வரி கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். முன்பு நிதி ஆதாரங்கள் தேவை என்ற காரணத்திற்காகத்தான் மது விலக்கு ஒத்தி வைக்கப்பட்டது. அன்று ஒரு வேளை மது விலக்கு ஒத்தி வைக்கப்படாமல் இருந்திருந்தால், இந்த வரிகள் அன்றைக்கே வந்திருக்கும். அரசாங்கத்திற்கு நிதி தேவை என்றுதான் மது விலக்கு அன்றைய தினம் ஒத்தி வைக்கப் பட்டது.

**திரு. கே. ராஜாராம்:** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் தான் ஒரு வழக்குரைஞர் என்பதால் வாதத்திற்கு இப்படிச் சொல்ல ஆரம்பித்திருக் கிறார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவரவர்களே, மது விலக்கு ஒத்தி வைக்கப்படும்போது, நிதி ஆதாரங்கள் தேவையாக இருக்கிற தென்று ஒத்தி வைக்கப்பட்டது. அந்த இடைப்பட்ட காலத்திலே மது விலக்கை ஒத்தி வைத்ததால் அரசாங்கத்திற்கு மேலும் நிதி கிடைத்து காரியங்கள் செய்யப்பட்டன. மீண்டும் மது விலக்கைக் கொண்டு வருவதால் நிதி தேவைப்படுகிறது. இப்படி ஒரு நல்ல காரியத்தைச் செய்கிற நோக்கில் சின்ன காரியத்திற்கெல்லாம் எதிர்ப்பு தெரிவிக்கவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். இவைகள் சின்ன வரிகள்தான். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னது போல ரூ. 400 கோடி அளவில் மத்தியில் வரி போடுகிறார்கள். நாங்கள் ரூ. 5 கோடி, ரூ. 10 கோடி அளவில் தான் வரி போடுகிறோம். ஆகவே இதற்குப் பலமான எதிர்ப்பு தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை. 400 கோடி ரூபாய்க்கு வரி போடும்போது பலமான எதிர்ப்பு தெரிவித்து அதை ரத்து செய்திருந்தால், இந்தச் சின்ன வரி போடும்போதும் எதிர்ப்பு தெரிவித்திருக்கலாம். பெட்ரோலுக்கு வரி அதிகப்படியாகப் போடவில்லை. மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிற போது, இது அதிகமில்லை. வரி உட்பட பெட்ரோலுக்கு வரி குறைவாகவே இருக்கிறது. டீசலைப் பொறுத்தவரையில், இரண்டு பைசா அதிகப்படுத்தி யிருக்கிறோமே தவிர வேறு அல்ல. லாரிகளுக்கெல்லாம் அதிகச் செலவு என்றார்கள். லாரி வாடகையை ஏற்கெனவே ஏற்றிவிட்டார்கள். டீசலுக்கு வரி போட்டாலும் போடாவிட்டாலும் அவர்கள் வாடகையை ஏற்றிக்கொண் டிருக்கின்றனர். ஆகவே இரண்டு பைசா கொடுப்பதில் கஷ்டம் இருக்காது. விவசாயிகள் விளை விவசாயிகளுக்குக் கஷ்டம் என்று சொன்னார்கள்.

பொருள்களுக்கு ஏற்கெனவே விலை ஏறிவிட்டது. முன்பு மக்காச் சோளம் 40 ரூபாய்க்கு எங்கள் பகுதியில் போகாது. இப்போது 80 ரூபாய் அளவிற்கு விலை போகிறது. ஆகவே இந்த மசோதாவை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். தாமோதரன் :** தலைவரவர்களே, சிறிது சிறிதாக வரிகளை ஏற்றுவதால் விலைவாசிகள் கூடுகின்றன.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

" சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1974-ஆம் ஆண்டு, மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிப்பு (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1974) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. பரிந்துரை ஏதுமில்லை.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே,

" சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1974-ஆம் ஆண்டு, மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிப்பு (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1974) திருப்பி அனுப்பப் படவேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

" சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1974-ஆம் ஆண்டு, மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிப்பு (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1974) திருப்பி அனுப்பப் படவேண்டும் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



**(4) தமிழ் நாடு, 1974-ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1974).**

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே,

" சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1974 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு@ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1974), பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

கூடுதல் நிதி திரட்டுவதற்காக, அரசு, தமிழ் நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 3 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் விதிக்கப்படும் பலமுனை வரி வீதத்தையும், 5-வது பிரிவைச் சேர்ந்த (b) பகுதியின் கீழ் விதிக்கப்படும் வரி வீதத்தையும் 3½ சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக உயர்த்த முடிவு செய்துள்ளது. அண்டை மாநிலங்களான ஆந்திரப் பிரதேசம், கேரளா மாநிலங்கள், ஏற்கெனவே, பலமுனை வரிப் பொருள்கள் மீது 4 சதவீத வரி விதிக்கின்றன. மேற்படி சட்டத்தைச் சேர்ந்த முதல் விவர அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் கரும்பு தவிர்த்த இனங்களுக்கு விதிக்கப்படும் ஒரு முனை வரியை 8 சதவீதமாக உயர்த்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இவற்றிக்கு தற்பொழுது 7 சதவீத ஒரு முனை வரி விதிக்கப்படுகிறது. கரும்புக்கான ஒரு முனை வரியை 12 சதவீதமாக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி செயற்குறிப்புகளுக்குச் செயல்வடிவம் கொடுக்க, தமிழ் நாடு 1974-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன் வடிவு கொண்டு வரப்பட்டு அச்சட்ட முன்வடிவு பரிசீலனைக்காக மேலவை முன் வைக்கப்பட்டுள்ளது.

இப்பிரேரணையை ஏற்குமாறு இம் மாமன்றத்தை நான் கேட்டுக்கொள் கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம் :

" சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1974-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1974), பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் "

---

@ 281 ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

THIRU S. NARAYANASWAMY: Hon. Deputy Chairman, I am very grateful for the opportunity to speak again on this subject of increase in general sales tax. I was just now, listening to the very skilful argument of the lawyer—Minister for Revenue when he said that the Central Government should be questioned for having levied Rs. 400 crores and Rs. 200 crores of tax and that the small levies of the State Government should not be questioned. Therefore, the Hon. Minister is against the Central Government's tax. I am glad he said this for various reasons. The increase in multi-point tax from 3½ per cent to 4 per cent is, I will repeat, not a mere ½ per cent increase. The generality of goods suffer tax at four points and then it will be a 2 per cent increase in sales tax. The goods which suffer sales tax at 3 points or 4 points now pay something like 11½ per cent or 12 per cent or even 16 per cent. It may be 14 per cent to 16 per cent. In the case of goods which suffer sales tax at four points, it is very harsh. Within one month we have had three budgets—the Central Supplementary Budget for an increased revenue of Rs 160 crores for the portion of the year and Rs. 220 crores in a full year. Then we had the State Supplementary Budget which increased substantially our State revenues and then we have this Railway Budget which has increased railway freights and fares by about Rs. 140 crores which will be Rs. 200 crores in a full year. Only yesterday, a statistical friend of mine and I sat down and calculated the impact of such taxation. Now, the Hon. the Minister for Revenue was kind enough to say: "Why don't you ask them to reduce the excise duties?". If I ask them to reduce, the State Governments have a share in the collection of excise duty and then you will say "My revenue has fallen as a result of the Centre's reduction of excise duty and I am going to bring fresh taxation proposals". Therefore, if the excise duty is reduced by the Central Government, within six months the State Government will find that there is shortfall in income by reason of its share in excise duty. I hope and trust the Hon. Minister will not adduce such arguments for a reduction in Central excise duty in which they have a vested interest.

The Hon. THIRU. S. J. SADIQ PASHA: Then, does the hon Member support the excise duty of the Central Government?



THIRU S. NARAYANASWAMY: I am speaking nothing of that kind. I am only saying that the ordinary consumer is suffering from the taxes levied by the State Government and the Central Government, from the increase in railway freight and also the increase in electricity tariff which is proposed by the State Electricity Board and I am only asking whether it is fair to impose so much tax on the common man. When the Government say that he is a poor man, how can they impose on him so much tax? If they are serious in saying that they are poor, they cannot go on increasing the tax. Even the increase in single point tax causes him very great hardship. Why did we ask for a single point tax?

(பிற்பகல் 5.20)

As one who waged this battle from Rajaji's time onwards, I can assure you that it has a very interesting story behind it. You have called this 'Kamadhenu' and every Revenue Minister is called so. Why call it 'Kamadhenu'? What a name for the Revenue Minister and what a good name for a bad tax! Government have been going on increasing this tax. It started with 1/200 per cent and it went up to 15 or 16 per cent on a typewriter which is called a luxury article. When every Government office uses it, why is a typewriter called a luxury and then brought under the luxury class? 15 or 16 per cent sales tax is indeed very, very harsh on small people. This increase from 3½ per cent to 4 per cent is not a ½ per cent tax at all. It is a degree of camouflage; that is what is being done. The levy is not really 2 per cent to 2½ per cent for goods which suffer taxation at five points. This is very harsh because it comes on top of higher railway freight, higher excise duties and other higher things at the Centre. If somebody comes and asks me "Do you permit these higher levies by the Centre?", my answer is "No". I am not permitting anybody and I have objected to it. I have spoken against excise duties in three conferences in the last three weeks and I am writing special articles on that matter. It is very harsh and excise duties are the most monumental and conclusive proof of Central Government's insincerity in their consideration for the small man. I have said this and I have given statistics to prove how it has gone by 4,400 per cent over a period of 20 years. I do not believe they are interested in the small man; if they are so interested, they would not do it.

[Thiru S. Narayanaswamy] [1974 ஆகஸ்ட் 23

Sir, it is said that the increase is only ½ per cent. It is not ½ per cent but it is 2 to 2½ per cent. In the case of Central Sales Tax and also in the case of single point sales tax, the levy is harsh. The idea of single point is to spare the poor trader harassment at a number of points. That is all what is meant and that does not mean that two different formulae can be adopted for doing this. I know that I am speaking at the Bill stage; the Bill is printed and a motion is going to be moved. I think it is very wrong to let this go without a protest on behalf of the small man. It is not the trader who is going to pay it. I am speaking for the consumer and I am not speaking for the trader. The trader is a tax-collector for the Government and nothing else. He is going to squeal and he is going to complain, but ultimately, he is going to collect. But the paymaster is the consumer. If Government are really interested in the consumer, I do not think they would levy these taxes and go on increasing them on a number of fronts—on the entertainment front, on the general consumption front, on the petrol front, on the kerosene front—in such a way that he feels pervasively taxed. I feel it is harsh and I feel bound to oppose these taxes. Thank you.

* THIRU A. R. DAMODARAN: Sir, I wish to support my hon. Friend Thiru Narayanaswamy in the very learned remarks that he has made regarding the General Sales Tax Act. The Hon. the Minister for Revenue has generalised and said that these are all very small taxes and that he is unable to prevent the lorry operator from increasing his freight and the agriculturist from increasing the prices of his produce. I would like to say that the general sales tax, being an indirect tax, is a highly inflationary tax. Whether the ½ per cent will result in a further increase of 4 annas or 6 annas per measure of rice or other articles, in general sympathy with the general inflation, I am not prepared to forecast at the present moment, but I would like to tell the Hon. Minister that the general sales tax has a multiplier effect and an increase of ½ per cent at this level can very well result in an increase at 5 per cent at the retail level. The sales tax revenue of the Government of Tamil Nadu, according to the Budget documents, was estimated at Rs. 140 crores, out of which Rs. 20 crores would come from Central Sales Tax, about Rs. 12 crores from the Motor



1974 ஆகஸ்ட் 23] [Thiru A. R. Damodaran]

Spirit Taxes and Rs. 108 crores from this tax which has been levied at the rate of 3½ per cent and 8, 9, 10 and up to 15 per cent on various commodities. There are two ways of increasing the income of a Government. One is to produce more, to encourage the production of wealth and income and to levy the taxes at a lower rate. The other thing is what all Governments—not only the Government of Tamil Nadu but other State Governments and the Central Government—have been systematically doing for the past 12 years and the reason why the people have been crying hoarse that prices have increased is the terrible increase in indirect levies that have been resorted to by the Government of India as well as the State Governments. The excise revenue of the Government of India in the year 1960-61 was of the order of Rs. 600 crores; today the excise revenue is Rs. 3,400 crores. When this Government came into power in 1966-67, the sales tax revenue was Rs. 46 crores; today, it is Rs. 140 crores. From where does all this money come from? Does the Hon. Minister think that this money is coming only because of the larger increase in the production of goods or services? No, Sir. The reason why prices have increased is the indirect levies both of the State Government and the Central Government. The Hon. Minister has my sympathy in that he does not have such an elastic source of revenue as the excise duty. We have ourselves requested that a larger share of corporation taxes and income-tax should be passed on to the State Government and we have argued that if a larger share of the corporation taxes and income-tax is passed on, we might have some relief in the incidence of general sales tax which goes directly into the cost of living.

The Hon. the Minister for Revenue mentioned that agriculturists were increasing the prices of their produce. The Hon. the Minister for Food says that these increase should not be permitted and he wants to control the prices of agricultural commodities. The two Ministers cannot agree—one says "You can increase the agricultural prices because I am introducing a small tax" and the other gentleman says "You should not increase the prices because they are essential commodities". It is this absence of a coherent, co-ordinated policy of taxation that has resulted in the situation that we are seeing in our country to-day. We realise that State Governments do not have elastic sources of revenue, but that does

[Thiru A. R. Damodaran] [1974 ஆகஸ்ட் 23

not mean that we should keep on increasing indirect levies which directly go into the cost of living which will make the position of the wage-earner extremely difficult. The average household budget amounts to about Rs. 500. If you analyse this budget, 75 per cent of this budget is spent in buying essential articles like foodgrains, edible oils, milk and other commodities which we cannot do without. Therefore, it is the duty of every Government, now at least for a period of one year, to cry halt to such massive taxation which will only contribute to further the inflationary spiral. The hon. Member Thiru Narayanaswamy mentioned that over the past one year, Rs. 1,000 crores of taxation had been indulged in by the Central Government and the total tax effort of the States alone was of the order of Rs. 380 to Rs. 400 crores. Rs. 1,400 crores of indirect taxation is directly responsible for the increase in the cost of living and if the Hon. Minister is prepared to accept responsibility for this inflation, then, to that extent, we will say that we will not oppose this tax, but arguing as we have been that we should try to control inflation, I am afraid it will not be possible for any person who knows something of the economy to support any such tax until we are able to get a firm grip over the economy. I would, therefore, like to state that I very strongly disapprove of this increase from $3\frac{1}{2}$ per cent to 4 per cent. The $\frac{1}{2}$ per cent may be arithmetically very small, but when you count the balance available in an average householder's budget, this $\frac{1}{2}$ per cent is going to make a dent of at least Rs. 20 to Rs. 25 per month in the case of a man who earns Rs. 300 or Rs. 400. It is from that point of view that I am opposing this and not from the point of view of traders. Traders are only collecting agencies and although they will object, their objection will be to the additional difficulties that they are likely to have from the point of view of calculation and remitting of taxes. But my point is that the consumer has to be saved. The time has come for Governments to realise that instead of cutting down expenditure—whether it is non-development expenditure or expenditure in other fields where a great deal goes to waste—if we are merely thinking of balancing budgets by increasing taxes, we are in for a period where the rupee will have to be devalued and demonetised, new notes will have to be issued and hundred-rupee notes will be worth only Rs. 20 thereby inflicting a heavy damage on the economy and it will be very difficult for us to function. On all these grounds, I



1974 ஆகஸ்ட் 23] [Thiru A. R. Damodaran]

express my very strong opposition to the enhancement of the general sales tax from $3\frac{1}{2}$ per cent to 4 per cent and from 7 to 8 per cent in the case of other commodities. Thank you, Sir.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர்கள் திரு. நாராயணசாமி அவர்களும், திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களும் சொன்ன கருத்துக்களை ஏற்றுக்கொள்ள இயலவில்லை என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன். இந்த வரி விதித்ததனால் பெருமளவுக்கு பாதிக்கப்படுவதாகவோ, விவசாயிகள் விலைவாசியை அதிகப்படுத்தி விற்கலாம் என்பதோ இல்லை. இப்போதே சில பொருள்கள் அதிக விலைக்குத் தான் விற்கப்படுகின்றன. லாரி ஓனர்கள் அதிகமாக வாடகை வாங்குகின்றார்கள். இப்போது இந்த இரண்டு பைசா போடுவதனால் மட்டும் அதிகமாகப் பாதிக்கப்படுவதாகச் சொல்ல முடியாது. இதனால் உணவு அமைச்சருக்கும் எனக்கும் கருத்து வேறுபாடு இருப்பதாகச் சொல்லக்கூடாது. உணவு தானியங்களுக்கு வரியே கிடையாது. ஆந்திராவிலே அரிசிக்கு சேல்ஸ் டாக்ஸ் ஒரு பர்செண்ட் இருப்பதாகச் சொல்கின்றார்கள். நம் மாநிலத்திலே இல்லை

(பிற்பகல் 5-30)

இந்த வரி விதித்தாலே விலைவாசி ஏறி விற்கவேண்டும் என்று சொல்லவில்லை. அதிகமாக விற்கிற விலைவாசியிலே இந்த வரி அவ்வளவு கஷ்டமாக இருக்காது என்றுதான் சொன்னேனே தவிர வேறு அல்ல.

**திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** தலைவரவர்களே, லாரி வாடகையிலே . . . .

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். அவர்கள் உட்கார்ந்து இருக்கிற இடம் வேறு. அவர்கள் நின்று பேசுகிற இடம் வேறு.

**திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** தலைவர் அவர்களே, அங்கே மைக் ரிப்போராக இருப்பதனாலே இங்கே வந்தேன். இந்த லாரி வாடகையைப் பொறுத்த வரைக்கும் எந்தவிதக் கட்டுப்பாடும் கிடையாது. இந்த வரியைப் பொறுத்தவரை, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னமாதிரி, வியாபாரிகள் எல்லாம் பில் கலெக்டர்கள் மாதிரி வரியை வசூல் செய்து அரசுக்குக் கொடுக்கின்றவர்கள்தான். லாரிகளுக்கு வாடகை வசூலிக்க கண்ட்ரோல் கிடையாது. சமீபத்தில் தஞ்சாவூரிலேயிருந்து லெவியை எடுத்தவுடன், மூட்டைக்கு 10 ரூபாய், 15 ரூபாய் என்று மிக அதிகமான அளவிலே வாங்கினார்கள்.

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்] [1974 ஆகஸ்ட் 23

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் விளக்கம் கேட்கிறார்களா அல்லது சொற்பொழிவாற்றுகிறார்களா? விளக்கம் கேட்பது சுருக்கமாக இருக்க வேண்டும். சொற்பொழிவாற்றக்கூடாது.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** உணவு தானியத்திற்கு வாரி வாடகைக்குக் கட்டுப்பாடு கொண்டுவரவில்லையென்றால், யாருமே தாக்குப் பிடிக்க முடியாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தீக்ஷிதர் அவர்களுடைய வாதம் எனக்கு வலுவூட்டுவதாக இருக்கிறது. நிறைய வாடகை வாங்கும்போது, இந்த இரண்டு பைசா செலுத்தக்கூடாதா என்பதுதான் என்னுடைய வாதம். மாண்புமிகு உறுப்பினர் திரு. நாராயணசாமி அவர்கள், இந்த ½ % ஐந்தாறு கட்டங்களாக விதிக்கப்படும் என்கிறார்கள். இரண்டு மூன்று கட்டங்களுக்கு மேல் போக வாய்ப்பில்லை என்றுதான் நினைக்கிறேன். மல்டி பாயிண்ட் டாக்சை சிங்கிள் பாயிண்ட் டாக்சாக ஆக்கி, ஏழு சதவிகிதம் எட்டு சதவிகிதமாக ஆக்கப்பட்டிருக்கிறது. ஆகவே நான்கு ஐந்து கட்டம் என்ற அளவுக்குப் போகவில்லை. இந்த வரி விகிதங்கள் தேவை என்ற முறையிலே போடப்படுகின்றன. ஆகவே இந்த வரி விகிதங்களை ஏற்றுக்கொண்டு நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN: Sir, I want a clarification. The Hon. Minister mentioned that foodgrains were exempt from sales tax. May I ask him if bengalgram powder, chilli powder, and tamarind are also exempt from sales tax and whether these articles are not used by the poor people?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: By foodgrains, I only meant paddy and rice.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1974), திருப்பி அனுப்பப்பட ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன்வடிவு பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பரிந்துரை ஏதுவுமில்லை.



1974 ஆகஸ்ட் 23]

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1974 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1974) திருப்பி அனுப்பப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவையின் முன் உள்ள பிரச்சினை:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1974 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1974) திருப்பி அனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(5) தமிழ்நாடு, 1974-ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1974).**

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** துணைத் தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முனவடிவு@ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1974), பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

தமிழ் நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 3வது விவர அட்டவணையில் 4ஆவது பதிவின் கீழ், அதில் விளக்கப்பட்டுள்ளவாறு எல்லா வகைத் துணிகளும் அச்சட்டத்தின் கீழ் வரி விதிக்கப்படுவதினின்றும் விலக்களிக்கப்பட்டன. பலவகைத் துணிகளுக்கும் பொருந்துகிற வகையில் "துணிகள்" என்னும் சொல் பயன்படுத்தப்படுவதால், பதனிட்ட துணி, ரப்பர் துணி, பி.வி.சி. துணி, ரெக்சின் துணி

@ 282 ஆம் பக்கத்தில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

போன்ற சிலவகைத் துணிகளுக்கும் இதனைப் பொருத்தி பொருள் விளக்கம் காண்பதில் சில ஐயங்களும் இடர்ப்பாடுகளும் தோன்றியுள்ளன. 1957 ஆம் ஆண்டு கூடுதல் ஆயத் தீர்வைகள் (சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்த பொருள்கள்) சட்டத்தின் கீழ் (மத்தியச் சட்டம் 58/1957) துணிகளுக்கு கூடுதல் ஆயத் தீர்வை விதிக்கப்படுவதன் காரணமாக துணிகளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டது. கூடுதல் ஆயத் தீர்வையினால் கிடைக்கும் தொகையில் ஒரு பங்கு மாநிலங்களால் பகிர்ந்து கொள்ளப்படுவதால் மத்திய அரசினால் கூடுதல் ஆயத்தீர்வை விதிக்கப்பட்டுள்ள பொருள்களுக்கு, மாநிலங்கள் விற்பனை வரி விதிக்கக்கூடாது என்னும் பொது உடன்பாட்டைக் கருத்தில் கொண்டு, அவைகளைப் பொறுத்த வரையில் விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்டது. எனவே தமிழ்நாடு, 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 3 ஆவது விவர அட்டவணையில், 4-ஆவது பதிவில் கண்டுள்ள பொருளின் பொருள் விளக்கம், 1944 ஆம் ஆண்டு மத்திய ஆயத் தீர்வைகள், உப்புச் சட்டத்தில் (மத்தியச் சட்டம் 1/1944) காணும் பொருள் விளக்கத்தை ஒத்திருக்க வேண்டியது அவசியம் என கருதப் பட்டுள்ளது. அரசு, அதற்கேற்ப தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் 3ஆவது விவர அட்டவணையிலுள்ள 4 ஆவது பதிவைத் திருத்த முடிவு செய்துள்ளது. இது, தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 59 (1) பிரிவின் கீழ், 1974-ஆம் ஆண்டு மே 16ஆம் நாளன்று பிறப்பிக்கப்பட்ட ஓர் அறிவிப்பின் மூலம் திருத்தப்பட்டது.

பி.வி.சி. துணி, ரெக்சின், பதனிட்ட துணி, ரப்பர் துணி ஆகியவற்றைப் பொறுத்தவரையில், ஒற்றைய வரி விதிப்புகளைத் திருத்தி அமைப்பது கைவிடப்பட வேண்டும் என்றும், ஏற்கனவே, வரி விதிக்கப்பட்டு விட்டிருந்தால், வணிகர்கள் வரியை வசூலித்திருக்காவிட்டால் வரி வசூலிப்பைத் தள்ளிவிடவேண்டுமென்றும் 1974-ஆம் ஆண்டு ஏப்ரல் 15-ஆம் நாளன்று அரசு உத்தரவிட்டது. இவ்வாறு வரி வசூலிப்பைத் தள்ளிவிடுவது 1974-ஆம் ஆண்டு ஏப்ரல் 15 வரையில் செய்யப்பட்ட எல்லா விற்பனைகளுக்கும் பொருந்துகிறது. ஆனால் பொது விற்பனை வரிச்சட்டத்தின் 3-ஆவது அட்டவணை 4-ஆவது பதிவின் கீழ் பொருள் விளக்கம் 1944 ஆம் ஆண்டு மத்திய ஆயத் தீர்வைகள், உப்புச் சட்டத்தில் கண்டுள்ள பொருள் விளக்கத்தை ஒத்திருக்கும் வகையில் அப்பதிவைத் திருத்தி, 1974-ஆம் ஆண்டு மே 16-ஆம் நாளன்று பிறப்பிக்கப்பட்ட அறிவிப்பு, 1974 ஆம் ஆண்டு மே 22 ஆம் நாளன்று வெளியிடப்பட்டது. எனவே அது 1974 ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் நாளன்றுதான் செயலுக்கு வந்தது. 1974-ஆம் ஆண்டு ஏப்ரல் 16க்கும் 1974 ஆம் ஆண்டு மே 21-க்கும் இடைப்பட்ட கால அளவு இந்த அறிவிப்பின் கீழ் வாராததால், அக்கால அளவுக்



ான வரியைத் தள்ளிவிடுவது பற்றிய பிரச்சினை எழலாம். இதனால் வீணான ...ழுத்துப்பணிகள் ஏற்படும். நிதியாண்டில் தொடக்கத்திலிருந்தே இத் ...ருத்தத்தைச் செயலுக்குக் கொண்டுவருவதன் மூலம் இதைத் தவிர்க்கலாம். ...னவே இத்திருத்தத்திற்கு 1974-ம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் நாளிலிருந்தே செயல் ...டிவம் கொடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாடு 1959-ஆம் ஆண்டு 1ஆவது சட்டத்தைச் சேர்த்து முதல் விவர அட்டவணையில் 40 ஆவது இனத்தின் கீழ், 9 சதவீத உயர்ந்த வீத வரி விதிப்புக்குத் தற்போது உட்படுத்தப்படுகின்ற ரப்பர் பொருள்கள், நுரை ரப்பர் விரிப்புகள், நுரை ரப்பர் மெத்தைகள், நுரை ரப்பர் தலையணைகள் ஆகியவை, 5 சதவீதத்தில் வரி விதிக்கத் தக்க 74-ஆவது இனத்தில் "ரப்பர்" என்னும் பதிவின் கீழ் வருவதாகப் பொருள் விளக்கம் கொடுக்கப்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, 74-ஆவது பதிவின் கீழ் "ரப்பர்" என்னும் சொல்லின் பொருள் வரம்பு, பக்குவப்படுத்தப்படாத நிலையில் அதாவது ரப்பர் பாலாக உழவர்களால் விற்கப்படுகின்ற ரப்பரை மட்டும் குறிக்கும் வண்ணம் வரையறுக்கப்பட வேண்டும் என அரசு முடிவு செய்துள்ளது. மேற்படி சட்டத்தின் கீழ் 59 (1) ஆவது பிரிவின் கீழ் பிறப்பிக்கப்பட்ட ஓர் அறிவிப்பின் மூலம் இந்த முடிவுக்கும் செயல் வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது.

அறிவிப்பு வெளியிடப்படுகின்ற நாளைத் தொடர்ந்து சட்ட மன்றத்தின் அடுத்த கூட்டத் தொடரில், தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு 1 ஆவது சட்டத்தின் 59 (2) ஆவது பிரிவின் கீழ், மேற்படி அறிவிப்புகளை ரத்து செய்து அவற்றிற்கு பதிலான சட்ட முன் வடிவு ஒன்று கொண்டு வரப்படவிருக்கிறது. எனவே, இந்தச் சட்ட முன்வடிவு அவை முன் கொண்டு வரப்பட்டுள்ளது.

இப் பிரேரணையை, இம்மாமன்றம் ஏற்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானம்:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1974 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1974), பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

THIRU S. NARAYANASWAMY: This Amending Bill, Mr. Deputy Chairman, has been brought with a view to clarifying the articles on which sales tax is to be levied, particularly with regard to textiles and rubber goods. The statement that accompanies the

[Thiru S. Narayanaswamy] [1974 ஆகஸ்ட் 23

Bill—the Statement of Objects and Reasons—I do not know why it has been scored out in ink—is substantially the statement read by the Hon. the Minister for Revenue. I, therefore, think the Statement, which has been scored out, is valid. The only point I want to make—and I would like the Hon. Minister to listen to me carefully—is this. Just five minutes ago, he said: "You appeal to the Central Government to reduce the excise duties." The very amendment here is done with a view to seeing that there is maximum co-operation between the Centre and the States in regard to areas where one levies excise duties and the other levies sales tax. There is nothing more conclusive than the Statement of Objects and Reasons for this. Paragraph 1 shows that this is done for a very intelligent co-operation between the Centre and the State Government, which we all want for purposes of smooth administration. Nevertheless, this is a question of each giving the other the area in which it will make the levy. We are interested in seeing that there is co-operation between the Centre and the States. We, therefore, do not know what the Hon. Minister means when he said "You go and appeal to them to reduce excise duties."

Therefore, such a statement should not be taken very seriously by persons like me, because here, by reason of this amendment. the State Government are clearing certain areas to enable the Central Government to levy excise duty and, therefore, the definition of ' textiles ' is changed so that it will be clear what are the goods that come within the ' cotton fabrics ' etc. The spirit of the amendment found in this Bill is certainly to be welcomed but not in the circumstances just now stated by the Hon. the Revenue Minister. I do not think the Hon. Minister was correct when he said: "If you want the prices to be reduced, you talk to the Centre". The Amending Bill seeks to define certain articles like cotton fabrics and rubber. I am not opposing this Bill so much as to say that the statement that he made earlier is not borne out by the Objects and Reasons.

THIRU A. R. DAMODARAN: Sir, I only wish to mention that while I do not oppose the levy of tax at 9 per cent on foam rubber sheets, because they are not used by a large section of the community, I do not understand the idea in introducing this Bill with retrospective effect from the 1st of April. A taxation measure



74 ஆகஸ்ட் 23] [Thiru A. R. Damodaran]

hich seeks to give retrospective effect causes a great deal of hardnip to the traders. I am sorry that although it has been stated n the Statement of Objects and Reasons that a notification under ection 59 has been issued, the date of such notification has not een given for us to judge whether people who are dealing in these ommodities know the date from which it will take effect. I am ot opposed to the clarification given to raw rubber, latex. But I ertanily think that retrospective effect to any piece of taxation gislation is not desirable as it will cause a great deal of difficulty o trade and commerce.

THE HON. THIRU S. J. SADIQ PASHA: On the 15th April 974, the Government have ordered that in the case of P.V.C. loth, Rexine, Processed cloth, Rubberised cloth, etc., revision of ast assessment be dropped and in cases where assessments have een made, the collection of tax be waived. The dealers have not ollected taxes. The waiver in this case applies to all sales up o the 15th April 1974. But the notification issued on the 16th May 1974 amending Entry 4 of the III Schedule so as to be in onformity with the definition as found in the Central Excise and Salt Act, 1944 was published on the 22nd May 1974 and, therefore, it came into force only on the 22nd May 1974. As the period etween 16th April 1974 and 21st May 1974 is not covered by the notification, the question of granting waiver for that period may arise and this may involve a lot of infructuous paper work. This could be avoided by giving effect to the amendment from the commencement of the financial year. It is, therefore, proposed to give retrospective effect to this amendment from the 1st April, 1974.

(பிற்பகல் 5-40)

THIRU S. NARAYANASWAMY: May I ask the Hon. Minister to tell us what will happen to the tax collected on goods which are presently exempted and what will happen to those goods on which sales tax should have been levied but was not levied from the 1st of April up to the present date ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: This is only for the purpose of giving waiver to the traders who have not collected tax. The tax which they have collected will have to be paid to the Government. Otherwise, they will be taken to task. This amend-

ment has been brought to see that the past assessments are not re-opened, when they have not collected the tax, and to give them waiver. It is for the benefit of the merchants.

THIRU A. R. DAMODARAN : Am I to understand, Sir, that from April 1 to May 22, if a trader has not collected this rate of tax, no demand will be made by the Government for this sales tax from such a trader ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : That is what I said in my statement which I read extensively. I shall read the same again for the information of the hon. Member.

On the 15th of April, 1974, the Government have ordered that in the case of P.V.C. cloth, Rexine, Processed cloth, Rubberised cloth, etc., revision of past assessment be dropped and in cases where assessments have been made, the collection of tax be waived. The dealers have not collected taxes. The waiver in this case applies to all sales up to the 15th April 1974. But the notification issued on the 16th May 1974 amending Entry 4 of the III Schedule so as to be in conformity with the definition as found in the Central Excise and Salt Act, 1944 was published on the 22nd May 1974 and therefore it came into force only on the 22nd May 1974. As the period between 16th April 1974 and 21st May 1974 is not covered by the notification, the question of granting waiver for that period may arise and this may involve a lot of infructuous paper work. This could be avoided by giving effect to the amendment from the commencement of the financial year. It is, therefore, proposed to give retrospective effect to this amendment from the 1st April, 1974.

THIRU S. NARAYANASWAMY : Sir, if this is going to avoid harassment to the trader, then we welcome the giving of retrospective effect.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** எனவே இந்தச் சட்ட முன்வடிவை அவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வேண்டுகிறேன்.



**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1974), பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பரிந்துரை எதுமில்லை.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1974) திருப்பி அனுப்பப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1974) திருப்பி அனுப்பப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(6) 1974-ஆம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1974)**

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** துணைத் தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

---

@ (283 - 2 ஆம் பக்கத்தில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.)

[1974 ஆகஸ்ட் 23

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் யாரேனும் பேசுகின்றார்களா ?

(மாண்புமிகு உறுப்பினர்கள் எவரும் பேச எழுந்திருக்கவில்லை.)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1974) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** துணைத் தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1974) நிறைவேற்றப்பட வேண்டும்". என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1974) நிறைவேற்றப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 5.48)





## 6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

NIL.

### *B. Reports, Notifications and Other Papers.*

£ 56. The Motor Vehicles (Tamil Nadu Amendment) Bill, 1974 (L.A.Bill No. 32 of 1974), as passed by the Assembly.

£ 57. The Tamil Nadu Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 33 of 1974), as passed by the Assembly.

£ 58. The Tamil Nadu General Sales Tax (Second Amendment) Bill, 1974. (L.A. Bill No. 35 of 1974), as passed by the Assembly.

£ 59. The Tamil Nadu Prohibition (Revival of Operation and Amendment) Bill, 1974 (L.A. Bill No.38 of 1974), as passed by the Assembly.

£ 60. The Tamil Nadu General Sales Tax (Third Amendment) Bill, 1974 (L.A. Bill No. 40 of 1974), as passed by the Assembly.

£ 61. The Tamil Nadu Cultivating Tenants (Right to Purchase Land Owners ' Rights) Bill, 1973 (L.A. Bill No. 11 of 1973) as passed by the Legislature.

£ Circulated to all M.L.Cs on 22nd August 1974.

## இணைப்பு I

[ 233 ஆம் பக்கத்தில் 82-ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க]

(அ) (i) கீழ்க்கண்ட மாநிலங்களுக்கு வழங்கப்பட்ட மொத்த மின்சாரம் பற்றிய விவரங்கள் :—

| | | 1970. | 1971. | 1972. |
|---|---|---|---|---|
| | | மி.யூ. | மி.யூ. | மி.யூ. |
| 1. | புதுச்சேரி .. . | 93·346 | 97·077 | 102·823 |
| 2. | கேரளா .. .. | 12·189 | 2·886 | 4·280 |
| 3. | ஆந்திரப்பிரதேசம் .. | 12·249 | 7·406 | 45·876 |

(ii) கீழ்க்கண்ட மாநிலங்களிலிருந்து வாங்கப்பட்ட மொத்த மின்சாரம் பற்றிய விவரங்கள் :—

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | கருநாடகம் .. . | 668·622 | 422·918 | 17,157·70 |
| 2. | கேரளா .. . | 335·787 | 384·458 | 409·864 |
| 3. | ஆந்திரப்பிரதேசம்* | .. .. | 2·085 | 4·891 |

(இ) மணல்மேடு மின் நிலையம், வில்லியனூர் மின் நிலையம், வேலங்குடி மின் நிலையம், வெஞ்சியூர் மின் நிலையம் ஆகியவற்றிலிருந்து புதுச்சேரிக்கு வழங்கப்பட்ட மின்சாரத்திற்கான கட்டணம்—முதல் 500 KVA-க்கு, KVA ஒன்றுக்கு ரூ. 8; அடுத்த 500 KVA-க்கு, KVA ஒன்றுக்கு ரூ. 7; 1,000 KVA-க்கு மேற்படும் ஒவ்வொரு KVA-க்கும் ரூ. 6; அத்துடன், முதல் 1 லட்சம் யூனிட்டுக்கு, யூனிட் ஒன்றுக்கு 5·75 காசு; அடுத்த 2 லட்சம் யூனிட்டுக்கு, யூனிட் ஒன்றுக்கு 5·00 காசு; அடுத்த 5 லட்சம் யூனிட்டுக்கு, யூனிட் ஒன்றுக்கு 4·25 காசு; 8 லட்சம் யூனிட்டுக்கு மேற்பட்டு, ஒவ்வொரு யூனிட்டுக்கும் 3·75 காசு.

குப்பம் மின் நிலையம், வெலூர் மின் நிலையம், சிம்மாஜபுரம் மின் நிலையம் ஆகியவற்றிலிருந்து ஆந்திரப்பிரதேசத்திற்கு வழங்கப்பட்ட மின்சாரத்திற்கான கட்டணம்—முதல் 500 KVA-க்கு, KVA ஒன்றுக்கு ரூ. 8; அடுத்த 500 KVA-க்கு, KVA ஒன்றுக்கு ரூ. 7; 1,000 KVA-க்கு மேற்படும் ஒவ்வொரு KVA-க்கும் ரூ. 6; இத்துடன் முதல் 1 லட்சம் யூனிட்டுக்கு, யூனிட் ஒன்றுக்கு 5·75 காசு; அடுத்த 2 லட்சம் யூனிட்டுக்கு யூனிட் ஒன்றுக்கு 5·00 காசு; 8 லட்சத்திற்கு மேற்படும் ஒவ்வொரு யூனிட்டுக்கும் 3·75 காசு.

திருவலம் மின் நிலையம்—திருவலத்திற்கான III-வது கட்டண வீதங்களின் படிக்கான தனிக்கட்டணம் அதாவது நாள் ஒன்றுக்கு மெ.வா. ஒன்றுக்கு ரூ. 70; அத்துடன் 1972–73-ஆம் ஆண்டுக்கு யூனிட் ஒன்றுக்கு 7 காசு.

---

* பகலில் பெறப்பட்ட மின்சாரத்தை இரவில் திருப்பிக்கொடுத்தல் என்னும் ஒப்பந்தத்தின் பேரில் ஆந்திரப்பிரதேசத்திலிருந்து வாங்கப்பட்ட மின்சாரத்தில் அவசர காலத்தில் வாங்கப்பட்ட மின்சாரமும், சோதனை நடவடிக்கைக்காகப் பெறப்பட்ட மின்சாரமும் அடங்கும்.



தக்கலை ஆகிய இடங்களி
வாலயாறு, உப்பட்டி, மதுக்கரை, புனலூர், தக்கலை ஆகிய இடங்களிலிருந்து கேரளாவிற்கு வழங்கப்பட்ட மின்சாரத்திற்கான கட்டணம்—முதல் 500 KVA-க்கு, KVA ஒன்றுக்கு ரூ. 8; அடுத்த 500 KVA-க்கு, KVA ஒன்றுக்கு ரூபாய் 7; 1,000-க்கு மேற்படும் ஒவ்வொரு KVA-க்கும், யூனிட் ஒன்றுக்கு ரூ. 6; அத்துடன் முதல் ஒரு லட்சம் யூனிட்டுக்கு 5·75 காசு; அடுத்த 2 லட்சம் யூனிட்டுக்கு, யூனிட் ஒன்றுக்கு 5·00 காசு; அடுத்த 5 லட்சம் யூனிட்டுக்கு, யூனிட் ஒன்றுக்கு 4·25 காசு; 8 லட்சம் யூனிட்டுக்கு மேற்படும் ஒவ்வொரு யூனிட்டுக்கும் 3·75 காசு.

ஆணைக்கட்டி மின் நிலையம் 1–11–1969-லிருந்து.—முதல் 1 லட்சம் யூனிட்டுக்கு, யூனிட் ஒன்றுக்கு திங்கள் ஒன்றுக்கு 6·50 காசு; அடுத்த 2 லட்சம் யூனிட்டுக்கு, யூனிட் ஒன்றுக்கு 6 காசு; அதற்கு மேற்படும் ஒவ்வொரு யூனிட்டுக்கும் 5·35 காசு; அத்துடன் முதல் 500 KVA-க்கு, KVA ஒன்றுக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 10; அதற்கு மேற்படும் ஒவ்வொரு KVA-க்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 9.

1–2–1972 முதல்—முதல் ஒரு லட்சம் யூனிட்டுக்கு, யூனிட் ஒன்றுக்கு 9·25 காசு; 10 காசு; அடுத்த இரண்டு லட்சம் யூனிட்டுக்கு, யூனிட் ஒன்றுக்கு 8·00 காசு; அதற்கு மேற்படும் ஒவ்வொரு யூனிட்டுக்கும், யூனிட் ஒன்றுக்கு ரூ. 15; அதற்கு மேற்படும் அத்துடன் முதல் 500 KVA-க்கு, KVA ஒன்றுக்கு ரூ. 15; அதற்கு மேற்படும் KVA ஒவ்வொன்றுக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 14.

### கீழ்க்கண்ட மாநிலங்களிலிருந்து வாங்கிய மின்சாரத்திற்கான கட்டணங்கள்.

கருநாடகம்.—1–1–1969 முதல் 31–3–1970 வரை முதல் 500 மி. யூனிட்டுக்கு, யூனிட் ஒன்றுக்கு 5 காசு. அதற்கு மேற்படும் ஒவ்வொரு யூனிட்டுக்கும் 4·75 காசு; 1–4–1970 முதல் 31–1–1972 வரை முதல் 150 யூனிட்டுக்கு, யூனிட் ஒன்றுக்கு 5·25 காசு; 150 மி. யூனிட்டுக்கு மேற்படும் ஒவ்வொரு யூனிட்டுக்கும் 5 காசு; 5–2–1972 முதல் 30–6–1972 வரையில் அதிக மின்சாரம் பயன்படுத்தப்படும். நாள் ஒன்றுக்கு கி. வா. ஒன்றுக்கு 5 காசு. 1–7–1972-ஆம் நாளன்றுக்கு தமிழ் நாடு மின்சார வாரியத்தினால் பெறப்பட்ட அதிக மின் உதவிக்கு நாள் ஒன்றுக்கு மெ. ஒன்றுக்கு ரூ. 50 கேட்புத்தொகை.

கேரளா.—ஓராண்டில், முதல் 150 மி. யூனிட்டுக்கு, யூனிட் ஒன்றுக்கு 5·25 காசு; அடுத்த 150 மி. யூனிட்டுக்கு, யூனிட் ஒன்றுக்கு 5·00 காசு; 300 மி. யூனிட்டுக்கு மேற்படும் ஒவ்வொரு யூனிட்டுக்கும் 5·25 காசு; 1970–71 1971–72 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கு.

23—5—1972 முதல்.—ஓராண்டில், முதல் 150 மி. யூனிட்டுக்கு, யூனிட், ஒன்றுக்கு 6·25 காசு; அதற்கு மேற்படும் ஒவ்வொரு யூனிட்டுக்கும் 6·00 காசு; மாதந்தோறும் செலவாகும் மின்சாரத்தின் அளவு 70 ம. யூனிட்டுக்கு மேற்படக்கூடாது. அதற்கு மேற்படும் ஒவ்வொரு யூனிட்டுக்கும் 4.00 காசு; 110 MVA-க்கு மேற்படும் ஒவ்வொரு MVA-க்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 7,000.

(e) கீழ்க்கண்ட மாநிலங்களுக்கு வழங்கப்பட்ட மின்சாரத்திற்கான மொத்தத் தொகை :—

| | 1970. | 1971. | 1972. |
|---|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| 1. புதுச்சேரி .. .. | 67·77 | 71·17 | 75·07 |
| 2. கேரளா .. .. | 11·03 | 5·86 | 5·79 |
| 3. ஆந்திரப்பிரதேசம் .. | 22·06 | 11·81 | 39·31 |

கீழ்க்கண்ட மாநிலங்களிலிருந்து வாங்கப்பட்ட மின்சாரத்திற்கான மொத்தத் தொகை:—

| | 1970. | 1971. | 1972. |
|---|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| 1. கருநாடகம் .. .. | 331·80 | 215·21 | 8·58 |
| 2. கேரளா .. .. | 153·59 | 197·14 | 226·60 |
| 3. ஆந்திரப் பிரதேசம் .. | .. | .. | |

## இணைப்பு II

*[247ஆம் பக்கத்தில் இனம் 5 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]*

L.A. Bill No. 27 of 1974.

(As passed by the Assembly)

*A Bill further to amend the Tamil Nadu Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-fifth Year of the Republic of India as follows :—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Act, 1974.

2. *Amendment of section* 3, *Tamil Nadu Act XXVI of* 1948.—In clause (b) of section 3 of the Tamil Nadu Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Tamil Nadu Act XXVI of 1948) (hereinafter referred to as the principal Act), for the words " tanks and irrigation works " the words and brackets " tanks and ooranies (including private tanks and ooranies) and irrigation works " shall be substituted and shall be deemed always to have been substituted.





3. *Insertion of new section* 14- *in Tamil Nadu Act XXVI of* 1948.—After section 14 of the principal Act, the following section shall be inserted and shall be deemed always to have been inserted, namely :—

" 14-A. *Ryotwari patta not to be granted in respect of private tank or ooranies.*—(1) Notwithstanding anything contained in this Act, no ryotwari patta shall be granted in respect of any private tank or oorani.

(2) Any ryotwari patta granted in respect of any private tank or oorani under this Act before the date of the publication of the Tamil Nadu Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Act, 1974, in the *Tamil Nadu Government Gazette*, shall stand cancelled, and for purposes of compensation under this Act, the private tank or oorani shall be deemed to be land in respect of which neither the landholder nor any other person is entitled to ryotwari patta under this Act. ".

4. *Compensation to be re-determined in certain cases.*—Where any compensation has been determined under the principal Act for an estate as a whole before the date of the publication of this Act in the *Tamil Nadu Government Gazette*, the amount of such compensation shall be re-determined in accordance with the provisions of the Principal Act as amended by this Act.

5. *Act to override other laws, contracts, etc.*—The provisions of this Act shall have effect notwithstanding anything inconsistent therewith contained in any other law for the time being in force, or any custom, usage or contract or decree or order of a court or other authority.

இணைப்பு III

[249 ஆம் பக்கத்தில் இனம் 5 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. Bill No. 33 of 1974.

(As passed by the Assembly)

*A Bill further to amend the Tamil Nadu Sales of Motor Spirit Taxation Act*, 1939.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-fifth Year of the Republic of India as follows :—

1. *Short title and comencement.*—(1) This Act may be called the Tamil Nadu Sales of Motor Spirit Taxation (Amendment) Act, 1974.

(2) It shall be deemed to have come into force on the 15th August 1974.

2. *Amendment of section* 3, *Tamil Nadu Act VI of* 1939.—In Sub-section (1) of section 3 of the Tamil Nadu Sales of Motor Spirit Taxation Act, 1939 (Tamil Nadu Act VI of 1939), for the words " fifteen paise per litre ", the words " twenty-one paise per litre " and for the words " thirteen paise per litre ", the words " fifteen paise per litre " shall be substituted.

I certify that this a Money Bill.

Fort St. George,
Madras.
22nd August 1974.

K. Govindan,
Speaker,
Tamil Nadu Legislative Assembly.





இணைப்பு IV

[259 ஆம் பக்கத்தில் இனம் 5 (4)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. Bill No. 35 of 1974.

(As passed by the Assembly)

*A Bill further to amend the Tamil Nadu General Sales Tax Act*, 1959.

BE in enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-fifth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu General Sales Tax (Second Amendment) Act, 1974.

(2) It shall be deemed to have come into force on the 15th August 1974.

2. *Amendment of section* 3 *Tamil Nadu Act* 1 *of* 1959.—In section 3 of the Tamil Nadu General Sales Tax Act 1959) Tamil Nadu Act 1 of 1959) (hereinafter referred as the principal Act), in sub-section (1), for the words " three and a half per cent ", the words " four per cent " shall be substituted.

3. *Amendment of section* 5, *Tamil Nadu Act* 1 *of* 1959.—In section 5 of the principal Act, in clause (*b*), for the words " three and a half per cent ", the words " four per cent " shall be substituted.

4. *Amendment of the First Schedule to Tamil Nadu Act* 1 *of* 1959.—In the First Schedule to the principal Act,—

(i) in items 43, 45, 47, 47-A, 50, 53, 57, 67, 72, 73, 95, 96, 97, 98, 99, 100 (*b*), 101, 102, 103, 104, 105, 106, 107, 108, 109, 110, 111, 112, 113, 114, 115, 116, 117, 118, 119, 120, 121, 122 and 123, in column (4), for the figure " 7 ", the figure " 8 " shall be substituted.

(ii) in item 62, in column (4), for the figure " 7 ", the figures " 12 " shall be substituted.

I certify that this a Money Bill.

Fort St. George,
Madras.
22nd August 1974.

K. Govindan,
Speaker,
Tamil Nadu Legislative Assembly.

## இணைப்பு V

[267 ஆம் பக்கத்தில் இனம் 5 (5)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

## L.A. Bill No. 40 of 1974.

(As passed by the Assembly)

*A Bill further to amend the Tamil Nadu General Sales Tax Act*, 1959.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-fifth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu General Sales Tax (Third Amendment) Act, 1974.

(2) Section 2 shall be deemed to have come into force on the 19th June 1974 and section 3 shall be deemed to have come into force on the 1st April 1974.

2. *Amendment of the First Schedule to Tamil Nadu Act* 1 *of* 1959.—In the First Schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959), (hereinafter referred to as the principal Act), in item 74, in column (2), for the word "Rubber", the words "Raw rubber, namely latex" shall be substituted.

3. *Amendment of the Third Schedule to Tamil Nadu Act* 1 *of* 1959.—In the Third Schedule to the principal Act, for item 4 and the entries relating thereto, the following item and entries shall be substituted, namely :—

"4. Cotton fabrics, woollen fabrics and rayon or artificial silk fabrics, as defined in items 19, 21 and 22 respectively of the First Schedule to the Central Excises and Salt Act, 1944 (Central Act I of 1944)".

I certify that this a Money Bill.

Fort St. George,
Madras
22nd August 1974.

K. Govindan,
Speaker,
Tamil Nadu Legislative Assembly.





## இணைப்பு VI

[273ஆம் பக்கத்தில் இனம் 5 (6)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

## L.A. Bill No. 32 of 1974.

(As passed by the Assembly)

*A Bill further to amend the Motor Vehicles Act*, 1939, *in its application to the State of Tamil Nadu.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-fifth Year of the Republic of India as follows :—

1. *Short title, extent and commencement.*—(1) This Act may be called the Motor Vehicles (Tamil Nadu Amendment) Act, 1974.

(2) It extends to the whole of the State of Tamil Nadu.

(3) It shall come into force on such date as the State Government may, by notification, appoint.

2. *Amendment of section* 47, *Central Act IV of* 1939.—In section 47 of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939) hereinafter referred to as the principal Act),—

(1) in sub-section (1), in the proviso, for the words "a co-operative society", the words "any State Transport Undertaking or a co-operative society" shall be substituted;

(2) after sub-section (3), the following *Explanation* shall be added, namely :—

"*Explanation.*—For the purposes of this section and section 62-DD, the expression 'State Transport Undertaking' shall mean the State Government or any transport corporation or company owned or controlled by the State Government".

3. *Insertion of new section 62-DD in Central Act IV of* 1939.—After section 62-D of the principal Act, the following section shall be inserted, namely :—

"62-DD. *Permission to be granted to transfer permits to State Transport Undertaking.*—Notwithstanding anything contained in section 62-D, where the holder of stage carriage permit

in excess of ten, applies to the transport authority for permission to transfer to any State Transport Undertaking any stage carriage permit under sub-section (1) of section 59, the transport authority shall grant such permission."

4. *Amendment of section* 130, *Central Act IV of* 1939.- In section 130 of the prinipal Act,—

(1) in sub-section (1), in clause (ii),—

(i) in sub-clause (*b*), the word "or" shall be added at the end;

(ii) after sub-clause (b), the following sub-clause shall be added namely :—

"(c) may, by a specified date, prior to the hearing of the charge, remit to the court, by money order, such sum (not exceeding the maximum fine that may be imposed for the offence) as the court may specify and plead guilty to the charge in the money order coupon itself : ";

(2) in sub-section (2), after the words "with the letter", the words "or the money order, as the case may be" shall be inserted.

5. *Amendment of section* 133, *Central Act IV of* 1939.— In section 133 of the principal Act, sub-section (1) shall be omitted.

6. *Amendment of Fifth Schedule to Central Act IV of* 1939.— In the Fifth Schedule to the principal Act, in Part B items 1, 5, 6, 7, 8, 9, 10 and 13 and the entries relating thereto shall be omitted.

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

**சனிக்கிழமை, 1974 ஆகஸ்ட் 24.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில், பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

#### உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Kidnapping of Children*

*84 Q.—THIRU V. THANGAPANDIAN (on behalf of THIRU M. SANKARALINGAM). Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) the number of persons arrested for kidnapping the children during the last three years in Tamil Nadu; and

(*b*) the steps taken against them?

பிள்ளைகளைக் கடத்திச் செல்லுதல்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் (திரு. எம். சங்கரலிங்கம் சார்பில்)** : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ்நாட்டில் கழிந்த மூன்று வருடங்களில் பிள்ளை பிடிக்கும் கூட்டத்தைச் சேர்ந்த எத்தனை பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்?

(இ) அவர்கள் மீது எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : தலைவரவர்களே, 3 வருஷங்களில் கைது செய்யப்பட்டவர்கள் என்ற அளவில் 1971-ல் யாரும் இல்லை, 1972-ல் யாரும் இல்லை, 1973-ல் 3 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். 3 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு வழக்கு தொடரப்பட்டு ஒவ்வொருவருக்கும் 6 மாத சிறை தண்டனை அளிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. வே. தங்கப்பாண்டியன்** : தலைவரவர்களே, இந்தப் பிள்ளை பிடிக்கும் பயம் அடிக்கடி தமிழ் நாடு முழுவதும் இருக்கிறது. இதைச் செய்கிறவர்கள் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களா அல்லது அயல் மாநிலத்தைச் சேர்ந்தவர்களா என்று அறிய விரும்புகிறேன். இவர்கள் நகைக்காகப் பிள்ளைகளைப் பிடிக்கிறார்களா அல்லது கெட்ட வேலைக்குப் பயன்படுத்துகிறார்களா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

[1974 ஆகஸ்ட் 24

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, நகைகளுக்காகப் பிடிப்பதில்லை. அவர்கள் பிடித்த இந்தப் பிள்ளைகளை பிச்சை எடுப்பதற்குப் பழக்கி, 5, 6 பிள்ளைகளை வைத்துக்கொண்டு அவர்களை நகரின் பல பகுதிகளுக்கும் பிச்சையெடுக்க அனுப்பி அதன் மூலமாகப் பணம் திரட்டுகிறார்கள். மேலும் எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்று கேட்டார்கள். கைது செய்யப்பட்ட இந்த 3 பேர்களும், ஒருவர் மார்தாலா ராமரெட்டி, ஆந்திரத்தைச் சேர்ந்தவர் ; இன்னொருவர் ராமுலு, ஆந்திரத்தைச் சேர்ந்தவர் ; மூன்றாமவர் குலாப்சிங், அலகாபாத்தைச் சேர்ந்தவர்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** தலைவரவர்களே, இந்தப் பிள்ளை பிடிக்கக் கூடிய சம்பவங்கள் எந்தெந்த மாவட்டங்களில் நடந்தனவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, கோவை மாவட்டத்தில் கஸ்தூரிநாயக்கன்பாளையத்தில் நஞ்சன் என்பவர் மகன் குப்புசாமியையும், பிறகு சேலம் மாவட்டத்தில் மேட்டூரில் பாலாஜி என்பவருடைய மகன் மகேந்திரன், 13 வயதுப் பையன், அந்தப் பையனையும் கேரள மாநிலத்தில் ஷோரனூர் என்ற ஊரில் சங்கரன் என்பவரின் 14 வயது மகன் குமார் என்ற பையனையும், கோவை மாவட்டத்தில் கஸ்தூரிநாயக்கன் பாளையத்தில் ராஜன் என்பவரின் மகன் செல்வராஜ் என்ற பையனையும், கோவை மாவட்டத்தில் ரங்கன் என்பவரின் மகன் பழனிச்சாமியையும், சேலம் மாவட்டத்தில் பொன்னன் என்பவரின் மகன் ஆறுமுகத்தையும் கேரள மாநிலத்தில் சசிதரன், 16 வயதுடைய பையனையும் இப்படிப்பட்டவர்கள் பிடித்தார்கள்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவரவர்களே, இப்படிப் பிடிக்கப்பட்ட குழந்தைகள் அனைவரும் நல்ல முறையில் அவர்கள் பெற்றோர்களிடம் திருப்பியனுப்பப்பட்டார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, நான் முதலில் 7 பேர்களைக் குறிப்பிட்டேன். இவர்களன்னியில் மேலும் 5 பிள்ளைகள் பிடிக்கப்பட்டார்கள். முதலில் குறிப்பிட்ட 7 பேர்களில் 6 பேர்கள் சட்டப்படி அவர்களுடைய பெற்றோர்கள் அல்லது அவர்களுடைய பாதுகாப்பாளர்களிடத்தில் திரும்பவும் ஒப்படைக்கப்பட்டார்கள். 7-ஆவது நபராகிய கேரள மாநிலத்தைச் சேர்ந்த சசிதரன் என்ற பையனுக்குத் தந்தை உயிரோடு இல்லை. அவன் தாயும் புத்தி சுவாதீனமற்ற நிலைமையில் இருக்கிற காரணத்தினால், அனாதை இல்லத்திலே போலீஸ் பாதுகாப்பில் இருந்து வருகிறான். இது போலவே அடுத்தபடியாகச் சொல்லப்பட்ட 5 பேர்களில் 4 பிள்ளைகள் அவர்கள் பெற்றோர்களிடம்



24 ஆகஸ்ட் 1974]

ஒப்படைக்கப்பட்டுவிட்டனர். பாபு என்ற ஒரு சிறுவனுக்கு பெற்றோர் முகவரி சரியாகத் தெரியவில்லை. ஆகவே அவன் போலீஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கிறான்.

**திரு. அ. அய்யணன் அம்பலம் :** தலைவரவர்களே, இந்தப் பிள்ளை பிடிப்பவர்கள் மந்திர சக்தியால் பிடிக்கிறார்களா அல்லது வேறு எந்த முறையைக் கையாண்டு பிள்ளைகளைப் பிடிக்கிறார்கள் ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, ஏற்கெனவே இந்தக் குழந்தைகளுடைய பெற்றோர்கள் ஏழைகளாக இருந்து, இந்தக் குழந்தைகள் எப்போதும் தெருவில் அலைந்துகொண்டிருக்கிற காரணத்தினால், இவர்கள் சுலபமாகப் பிடித்துக்கொண்டு போகிறார்கள். இப்போது தரப்பட்டிருக்கிற பட்டியலைப் பார்க்கும்போது இப்படிப் பிடிக்கப்பட்ட பிள்ளைகள் எல்லாம் வசதியற்றோர் பிள்ளைகளாக இருக்கின்றன.

THIRU G. VASANTHA PAI : Sir, will the Hon. the Chief Minister be pleased to state whether there have been complaints from several schools in Madras City that there were kidnapping instances in 1973-74 and if so, whether the culprits have been apprehended in those cases?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, இது பிள்ளை பிடிக்கிற விஷயம் அல்ல, வேறு விவகாரம்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** தலைவரவர்களே, பிள்ளை பிடிக்கப்பட்டது என்று பிராது கொடுக்கப்பட்டு கண்டுபிடிக்காமல் விடப்பட்ட குழந்தைகள் ஏதாவது உண்டென்றால் அப்படி எத்தனை பேர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, இந்த மூன்று வழக்குகள் தவிர வேறு எந்த வழக்குகளும் 1973 ஆம் ஆண்டில் நடைபெறவில்லை. 3 வழக்குகளிலும் 3 பேர்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். பிடிக்கப்பட்ட பிள்ளைகள் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறார்கள். ஒப்படைக்கப்படாதவர்கள் போலீஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. எல். பலராமன் :** தலைவரவர்களே, இது சமுதாயத்தில் சீர்கேடான ஒரு நிலை என்று கருதி அரசாங்கம் இதற்கென சட்டத்தைத் திருத்தி, மேலும் அதிகக் கடுமையான தண்டனையை விதிக்க நடவடிக்கை எடுக்கவிருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன். மேலும், பிள்ளை பிடிக்கும் வேலையில் ஈடுபட்டவர்களுக்கு எத்தனை ஆண்டுகள் சிறை தண்டனையோ, வேறு தண்டனையோ தரப்பட்டது என்பதை அரசு விரைவாகத் தெரிவிக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, 1973 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்ட 3 குற்றவாளிகளுக்கும் 10-7-1974-ல் 6 மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு இப்போது குற்றவாளிகள் கோவைச் சிறைச்சாலையில் தண்டனை அனுபவிக்கிறார்கள். இப்போதிருக்கின்ற சட்டமே இப்படிப்பட்ட காரியங்களைத் தடுப்பதற்குப் போதுமானதாக இருக்கிறதென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## *Arrest of Hindus*

*85. Q.—THIRU K. ARIVAZHAGAN (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Chief Minister be pleased to state :

(a) whether the Government are aware of the fact that some Hindus were arrested on 25th January 1974, in Irulappapuram, Kanyakumari district; and

(b) if so, the details thereof?

## இந்துக்கள் கைது.

**திரு. க. அறிவழகன்** (**தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்**) **:** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) குமரி மாவட்டம், இருளப்புரத்தில் 25-1-1974-ஆம் நாளன்று சில இந்துக்கள் கைது செய்யப்பட்டது அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள இருளப்புரம் என்ற இடத்தில் 21-1-1974 அன்று இரவு கோயில் திருவிழாவையொட்டி நடைபெற்ற நாடகத்தின் நடுவே மின்சாரம் நின்றுவிட்டதால் கூட்டத்தினரிடையே சிறிது குழப்பம் ஏற்பட்டது. கூட்டத்தில் இருந்த சிலர் மின்சாரம் தடைப்பட்டதற்குக் காரணம் வேலாயுத நாடார் என்பவர்தான் என்று நினைத்து அவருடைய வீட்டைத் தாக்கினார்கள். இதனையொட்டி 5 பேர் மீது கோட்டார் காவல் நிலையத்தில் வழக்கு தொடரப்பட்டு நீதிமன்றத்தில் 5 பேருக்கும் ஒவ்வொருவருக்கும் 10 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.





## *Representation from Tiruchirappalli District Barbers' Association*

*86. Q.—THIRU M. MASILAMANI : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether any representation has been received by the Government from the Tiruchirappalli District Barbers' Association, objecting to the collection of licence fees from the barbers shops in Vaiyampatti Panchayat Union, Kadavur Constituency, Tiruchirappalli district; and

(b) if so, the action taken thereon?

## திருச்சிராப்பள்ளி மாவட்ட முடிதிருத்துவோர் சங்கத்திடமிருந்து முறையீடு

**திரு. மு. மாசிலாமணி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், கடவூர் தொகுதி வையம்பட்டி ஒன்றியத்திலுள்ள முடிதிருத்துவோர் கடைகளில் உரிமம் கட்டணம் வசூலித்து வருவதை ஆட்சேபித்து திருச்சிராப்பள்ளி மாவட்ட முடிதிருத்துவோர் சங்கச் சார்பில் அரசுக்கு முறையீடு ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) ஆம்.

(இ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. மு. மாசிலாமணி :** தலைவரவர்களே, திருச்சி மாவட்டத்தில் பல இடங்களில் பல ஊராட்சி ஒன்றியங்களில் உரிமம் கட்டணம் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. இதைப் போன்று பல மாவட்டங்களில் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. ஆதலால் தமிழ் நாடு பூராவும் உள்ள முடி திருத்தும் கடைகளுடைய உரிமம் கட்டணத்தை ரத்து செய்ய அரசு உத்தரவு பிறப்பிக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, கட்டணம் இன்றி உரிமம் வழங்குவதற்கு ஊராட்சி ஒன்றியங்களைத் தீர்மானம் நிறைவேற்ற அறிவுறுத்தலாம் என்று மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் யோசனை கூறியுள்ளார்கள். பல்வேறு மாவட்டங்களில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இக்கட்டணம் எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அபாயகரமான அல்லது அருவருக்கத்தக்க தொழில்கள் என்று கருதப்படுபவைகளுக்கு உரிமம் கட்டணம் விதிக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளது. இதன் காரணமாகத்தான் இது வழங்கப்பட்டு வருகிறது. பல்வேறு நகராட்சிகளில்,

[1974 ஆகஸ்ட் 24

**மாண்புமிகு திரு. ஓ. பி; இராமன் :** தலைவர் அவர்களே, சென்ற இரண்டு ஆண்டுகளாக மின்விசை வெட்டு இருந்ததாலும், அதோடு பொறியாளர்கள் உதவியாளர்களைத் தேர்ந்தெடுக்கின்ற வேலையில் ஈடுபட்டிருந்ததாலும், இத்தகைய கால தாமதம் ஏற்பட்டது. பில்கள் பாக்கி விழுந்த காரணத்தால், அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டு, அப்பதவிகள் நிரப்பப்பட்டவுடனே, எல்லாப் பகுதிகளிலும் பாக்கி இருந்த பில்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. குறைந்த அளவு ஒருவர் 700 பில்கள் போடவேண்டும் என்ற அளவில், இடங்கள் நிரப்பப்பட்டு விட்டன. வரவிருக்கின்ற சம்பளப் பேச்சு வார்த்தையின்போது, 'ஓர்க் லோட் யார்ட்ஸ்டிக்கை' அதிகரிக்கலாம் என்று கூறியிருக்கிறார்கள். அப்போது அதுபற்றிக் கவனிக்கப்படும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, 6 மாதங்கள் வரை பில் போடாமல், ஒரே சமயத்தில் கொண்டுவந்து கொடுத்து பணம் கட்ட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதனால் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. பில்லுக்குப் பணம் கட்டவில்லை என்று கூறி கரண்ட் சப்ளையைத் துண்டித்து விடுகிறார்கள். அவ்வாறு செய்வதைத் தடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி இராமன் :** தலைவர் அவர்களே, உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, பில்கள் தொடர்ச்சியாக வந்தால், எத்தனை மாதங்கள் பில் கட்டவில்லையோ, அதை அனுசரித்து காலம் தாழ்த்திக் கட்டலாம் என்று அறிவித்து, அதன்படி தான் பணம் பெறுவதற்கு உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

**திரு. சி. வி. ராஜகோபால் :** தலைவர் அவர்களே, கணக்காயர் என்று சொல்லப்படுகிறவரை மாற்றிவிட்டால், இந்த இடத்திலிருந்து நான் ரிலீவ் ஆகமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்துக் கொண்டு பல மாதங்களாக ஒருவர் காஞ்சீபுரத்தில் இருக்கிறார். அதுபற்றி அரசுக்குத் தெரியுமா ? யார் வந்தாலும் ரிக்கார்டு முதலியவற்றைக் கொடுக்கமாட்டேன், ரிலீவ் ஆகமாட்டேன் என்கிறார். அவர் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி பில்லைப் பற்றியதாகும். காஞ்சீபுரம் கணக்காயர்பற்றித் தகவல் இல்லை. தனியாகக் கேட்டால் அதுபற்றிக் கவனிக்கலாம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, சில மாதங்கள் பில்கள் போடாமல் இருந்தார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த மாதங்களுக்கு அந்த அலுவலர்களுக்குச் சம்பளம் வழங்கப்பட்டதா ?



1974 ஆகஸ்ட் 24]

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, பில் போடாமல் இருந்ததற்குக் காரணம், இடங்கள் நிரப்பப்படாமல் இருந்ததுதான் என்று சொன்னேன். இடங்கள் நிரப்பப்பட்டு விட்டதால், புதிதாக வந்து சேர்ந்தவர்கள் போட்டிருக்கிறார்கள். அவர்களின் 'ஓர்க் லோட் யார்ட்ஸ்டிக்கை' மாற்றியமைக்க வேண்டுமென்று யோசனை கூறப்படுகிறது. அதைப்பற்றிப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம்.

**திரு. சி. வி. ராஜகோபால் :** தலைவர் அவர்களே, சூப்பிரண்டெண்டிங் இஞ்சினியர் அவர்களை, பணிமனையில் வேலை செய்பவர்கள் எல்லோரும் சேர்ந்துகொண்டு, மடக்கி 'கேரோ' செய்திருக்கிறார்கள். அதற்குப் பயந்துகொண்டு அவர்கள் 'லட்ரின்' பக்கம் ஓடுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

**திரு. சி. வி. ராஜகோபால் :** தலைவர் அவர்களே, அங்கே வேலை செய்பவர்கள்பற்றித்தான் குறிப்பிடுகிறேன். பில் ஒழுங்காக வருவதில்லை என்ற கேள்வியை ஒட்டித்தான் கேட்கிறேன். அவர்கள் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, எந்த எஸ்;ஈ; எந்த ஊரில் என்று சொன்னால்தான், அதுபற்றித் தெரிந்து பதில் சொல்ல முடியும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** பல சூப்பிரண்டெண்டிங் இஞ்சினியர்கள், வேலூரில், தஞ்சாவூரில், மேட்டூரில் இன்னும் பல இடங்களில் கேரோ செய்யப்பட்டிருக்கிறார்கள். கேரோ செய்தவர்கள் மீது போலீஸ் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மின்சார வாரியமும் நடவடிக்கை எடுக்காமல் போய்க்கொண்டிருந்தால், நிலைமை மோசமாகப் போகும்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, தொழிற் சங்கப் பேச்சுவார்த்தையின் காரணமாக, தொழிற்சங்கச் சட்டத்தில் ஒத்துக்கொண்ட காரியங்களை நிறைவேற்றவில்லை என்று தொழிலாளர்கள் சொல்கிறார்கள். நிர்வாகத்தில் இருக்கின்ற எஸ்.ஈ. போன்றவர்கள் அதிகமாக வேலை வாங்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதன் காரணமாக சில இடங்களில் அசம்பாவித சம்பவங்கள் நடந்து, நடவடிக்கை எடுக்கப்பட்டு, சிலர் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். தண்டிக்கப்பட்டவர்களுக்கு மன்னிப்புக் கொடுக்க வேண்டும் என்று கோரிக் கொண்டிருக்கிறார்கள்.

[1974 ஆகஸ்ட் 24

*Acquisition of land for Tamil Nadu Electricity Board.*

* 88 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Electricity be pleased to state:

(a) whether land has been acquired by the State Electricity Board in Nanjikottai Road, Thanjavur;

(b) if so, the extent and the purpose for which the land has been acquired; and

(c) the amount that has been paid for the same?

**தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காக நிலம் கையகப்படுத்தல்.**

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர், நாஞ்சிக் கோட்டை சாலையில் மாநில மின்சாரவாரியம் நிலம் கையகப்படுத்தியுள்ளதா ?

(இ) ஆமெனில், எவ்வளவு பரப்பளவு நிலம் எந்த நோக்கத்துடன் கையகப்படுத்தப்பட்டுள்ளது ?

(உ) அதற்காகச் செலுத்தப்பட்டுள்ள தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** (அ) & (இ): தமிழ் நாடு மின் வாரியத்திற்கு நிலையான அலுவலகக் கட்டிடங்கள் கட்டவும், மத்தியப் பண்டக சாலை கட்டிடங்கள் கொட்டகைகள் கட்டவும் தஞ்சாவூர் வட்டம், நாஞ்சிக் கோட்டை கிராமத்தில் 223/2-ஆம் வருவாய் சர்வே எண்ணில் உள்ள 10.41 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னரே தொடங்கப்பட்டுள்ளன. நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தைச் சேர்ந்த 4(1) பிரிவின் படிக்கான அறிவிப்பும் மேற்படி சட்டத்தின் 6-வது பிரிவின்படிக்கான அறிக்கையும் அரசால் முன்னரே ஏற்பளிக்கப்பட்டு, **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்பட்டுள்ளன. நிலம் கையகப்படுத்தும் அதிகாரியால் இன்னும் தீர்ப்பு வழங்கப்படவில்லை.

(உ) தீர்ப்பு அளிக்கப்பட்ட பின்னர் இழப்பீட்டுத் தொகை கொடுக்கப் படும்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, அந்த நிலம் முன்னாலேயே சர்க்காரால் எடுக்கப்பட்டு விட்டதா, எவ்வளவு நிலத்திற்குப் பணம் கொடுக்கப் படவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1974 ஆகஸ்ட் 24]

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவர் அவர்களே, 6-7-1971-ஆம் தேதி எடுக்கப்பட்டது. அந்த இடம் 10 ஏக்கர் ஆகும். நிலத்தின் மதிப்பு இதிலே இருக்கிற குறிப்புப்படி, ஒரு ஏக்கருக்கு 700 ரூபாய் என்று போட்டிருக்கிறது. அதுபற்றி அறிவிக்காத காரணத்தால், solatium சேர்த்து அறிவிக்கப் பட்ட பின்னாலேதான் பணம் கொடுக்க வேண்டும்.

MR. CHAIRMAN: Now, further supplementaries cn Question No. 28 put by THIRU G. SWAMINATHAN.

*Fertilizer distribution.*

* 28 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(a) whether it is a fact that the former Minister for Co-operation, Hon'ble Thiru Si. Pa. Aditanar, has stated in the month of July 1973, that embezzlement to the tune of crores of rupees has taken place in the distribution of fertilizers through Panchayat Unions and Taluk Co-operative Societies;

(b) if so, the names of the Panchayat Unions and Taluk Co-operative Societies, which indulged in black-marketing of fertilizers; and

(c) the action taken thereon?

(பிற்பகல் 4-20)

**உர விநியோகம்.**

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) ஊராட்சி ஒன்றியங்கள், தாலுகா கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உர விநியோகம், செய்ததில் சென்ற ஆண்டு கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு ஊழல் நடந்துள்ளதாக முன்னாள் கூட்டுறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் 1973 ஜூலை மாதத்தில் கூறியுள்ளது உண்மையா ?

(இ) ஆமெனில், கள்ளச் சந்தை நடத்திய ஊராட்சி ஒன்றியங்கள், தாலுகா கூட்டுறவுச் சங்கங்கள் எவை ?

(உ) அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. THIRU SI. PA. ADITANAR: Mr. Chairman, Sir, I have already answered on Clause (a) of the main question that the statement is not correct and that what the Minister said w^^

that many fertiliser dealers had indulged in large-scale black-marketing. As regards clause (b) and clause (c), the question about panchayat unions does not arise, as they are not fertiliser dealers. Complaints were received against the dealers including Taluk Co-operative Marketing Societies that they were not distributing the fertilisers properly and were indulging in black-marketing. Action was taken against the following Taluk Co-operative Marketing Societies :—

1. Madurai Co-operative Marketing Society;
2. Ponneri Co-operative Marketing Society;
3. Saidapet Co-operative Marketing Society;
4. Ulundurpet Co-operative Marketing Society;
5. Kallakurichi Co-operative Marketing Society;
6. Lalgudi Sivagnanam Co-operative Marketing Society;
7. Tiruchi Co-operative Marketing Society;
8. Thellar Co-operative Marketing Society;
9. Chingleput Co-operative Marketing Society;
10. Tiruvellore Co-operative Marketin Society;
11. Sriperumbudur Co-operative Marketing Society;
12. Tindivanam Co-operative Marketing Society.

As a result of the action taken, all the twelve Taluk Co-operative Marketing Societies were superseded. Further, the Government have ordered that the handling of fertilisers should be taken away from the Taluk Marketing Co-operative Societies.

THIRU G. SWAMINATHAN : Sir, what is the extent of black-marketing done by these societies ? I mean the extent of black-marketing.

THE HON. THIRU SI. PA. ADITANAR : The other day, what the hon. Member said was this. All that he wanted to know was the names. I certainly require a separate question, if the amount also has to be stated.

THIRU G. SWAMINATHAN : Sir, what was the action taken against the persons who have indulged in black-marketing? Though, the co-operative societies have been superseded, what is the further action taken against the people who were in the management of those co-operative societies ?



THE HON. THIRU SI. PA. ADITANAR : Sir, the most severe action which can be taken against a Co-operative Society is supersession and that has been done.

THIRU G. SWAMINATHAN : Sir, superseding of the co-operative societies has been done. But some people who were in the management of these co-operative societies were responsible for the black-marketing of this fertiliser. By mere supersession of the societies, they have been let off freely. What was the action taken against those individuals who were in the management of the co-operative societies ?

THE HON. THIRU SI. PA. ADITANAR : Sir, when a Co-operative Society is superseded, certain disqualifications are attached to the Members of the Committee of that Co-operative Society. Further action is also open to the Government. Now the Government have ordered that the handling of the fertilisers should be taken away from the hands of the Taluk Co-operative Societies. I do not know what further action should be taken against any individual.

THIRU G. SWAMINATHAN : Sir, it is left to the Government to take action. May I know the reason why no action was taken against the individuals?

THE HON. THIRU SI. PA. ADITANAR : Sir, I did not say whether any action was or was not taken against any individual. I have got the notes of the other day's supplementary questions It reads like this :—

"THIRU G. SWAMINATHAN : Sir, I do not want all the names, I only want the names of the panchayat unions and the Taluk Co-operative Societies." Sir, I have given the names seriatim and the action taken. Any further information in this subject should be obtained on a separate question.

THIRU A. R. DAMODARAN : Sir, the Hon. Minister has said that the Presidents or the co-operative societies' managements were superseded and that is the punishment that has been meted out. May I know if in the case of a private dealer or a partnership firm, such an offence has been committed and the partner withdraws from the partnership firm, whether that will be considered as sufficient punishment or whether action will be taken by the Government by way of prosecution?

The Hon. Thiru SI. PA. ADITANAR : Sir, there was no question about action taken against the dealers. It was specifically stated that they did not require any facts relating to the action taken against the dealers. The hon. Member was not very right in saying that the President alone was superseded; but, on the other hand, the entire Committee of that Society is superseded and we cannot think or imagine of a higher punishment to any Co-operative Society than its supersession.

Thiru G. SWAMINATHAN : Sir, it is only a punishment to the Co-operative Societies. We are worried about the punishment meted out to the individuals who have been managing the Co-operative Societies. The Hon. Minister was the Minister for Co-operation at that time. May I know what action he took, and why this kind of black-marketing occurred when he was the Minister for Co-operation at that time, how it happened and how he allowed it to happen?

The Hon. Thiru SI. PA. ADITANAR : Sir, 'allowing this blackmarketing to happens'—What is meant by that? I have taken the severest action against all the co-operatives in spite of the fact that they were Co-operatives and were meant to be quasi-public institutions. Action against Co-operative Societies is generally of various kinds. The severest form of punishment provided for in the Act is the supersession of that particular society.

Thiru G. VASANTHA PAI : Sir, in view of the serious charge that has been made and the black-marketing which has been admitted on behalf of some 12 or 13 co-operative societies, will the Hon. Minister, at least now, order action to be taken against these individuals who were responsible for this black-marketing? Sir, it is for this reason When many other articles like millets, rice, etc., are being handed over to the co-operative societies for distribution, if the co-operative societies themselves are run in this way, it will be very difficult for the Government to distribute rations through these societies.

Thiru Hon. Thiru SI. PA. ADITANAR : Sir, is it the information of the hon. Member that millets and rice are handed over to these Societies?



Thiru G. VASANTHA PAI : Sir, when millets, rice and sugar are being handed over to the Co-operative Societies for distribution to card-holders and if these Co-operative Societies and the persons in management of those societies are to belet off so lightly, by the mere supersession of the society, they will get away without any serious consequences. Therefore, will the Hon. Minister give some serious thought to this and see that the persons responsible are prosecuted ?

The Hon. Thiru SI. PA. ADITANAR : Sir, I do not agree with the statement that either the Societies or Members of the Committees of those societies are let off lightly. The first action taken is against the Committee, namely, dissolution or supersession. There are other provisions also in the Co-operative Societies Act which might be taken recourse to according to the circumstances.

Thiru G. SWAMINATHAN : Sir, what are the other provisions in the Co-operative Societies Act ?

The Hon. Thiru SI. PA. ADITANAR : Section 28 provides for disqualification of Members of the Societies which have been superseded. Probably they can proceed against the persons individually under that section, if they want to.

Thiru G. VASANTHA PAI : Sir, if a private individual violates the law and indulges in black-marketing in respect of articles given to him for distribution, he will be punishable under the Defence of India Act. Will the Hon. Minister consider taking such action against these officers of the Co-operative Societies and see that such punishments as in the case of private individuals are meted out to them?

The Hon. Thiru SI. PA. ADITANAR : Sir, I do not agree for a moment that the punishment of supersession is in any way less severe than the punishment meted out to individuals. So far as the action against the Co-operative Society is concerned, it is more or less a death sentence. Supersession is death sentence and I regard that sentence is quite enough. I do not know what more the hon. Member wants.

Mr. CHAIRMAN : If it is death sentence, do you hang convicts? All right. The hon. the Leader of the Opposition.

**திரு. கே. ராஜாராம்:** மாண்புமிகு தலைவரவர்களே, கோவாபரேடிவ் மார்க்கடிங் சொசைடி என்று சொன்னால், அதில் நூற்றுக்கணக்கான, ஏன், ஆயிரம் கணக்கான உறுப்பினர்கள்கூட இருப்பார்கள். நிர்வாகத்தை நடத்துகிறவர்கள் 5 அல்லது 6 பேர்கள்தான். 5, 6 பேர்கள் நிர்வாகத்தை நடத்தி இம்மாதிரி கிரிமினல் குற்றங்களைச் செய்கிறார்களென்றால் மிகையாகாது. அந்த 5, 6 பேர்கள் செய்த குற்றங்களுக்கு, ஆயிரக்கணக்கான உறுப்பினர்களைக் கொண்ட அந்த சொசைடியை 'சூப்பர்சீட்' செய்வது என்பது பெரிய தண்டனை என்று சொல்கிறார்கள். அது சரிதானா? அந்தக் குற்றம் செய்த 5 அல்லது 6 பேர்களையும் தனிப்பட்ட முறையில் அரெஸ்ட் செய்து, கிரிமினல் நடவடிக்கை எடுப்பதற்கு அரசு ஏதாவது ஏற்பாடு செய்திருக்கிறதா? இல்லையென்றால் இனிமேல் அப்படிச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். அப்படிச் செய்தால் மற்ற கோவாபரேடிவ் சொசைடிகளில் உள்ள நிர்வாகிகளுக்கு அது படிப்பினையாக இருக்கும். இந்த 12 சொசைடிகளில் அப்படி குற்றம் செய்த தனி நபர்களின் பேரில் ஏதாவது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU SI. PA. ADITANAR: Sir, what further action should be taken against these individuals who were on the Managing Committee of these particular Societies at the time of supersession is left to the Minister who is now in charge. But, so far as I am concerned, the first step is to supersede the Society and put it in the hands of a proper officer who can run the society as best as he can.

(பிற்பகல் 4-30)

THIRU A. R. DAMODARAN: Sir, a private dealer in Villupuram ..............

Sir, I would like the Hon. Minister to kindly note this. A private dealer in Villupuram who was found to have committed an offence under the Fertiliser Control Order was prosecuted and sentenced to three months' imprisonment under the Fertiliser Control Order. Since the Hon. Minister is insisting that supersession is the very wonderful punishment and says that it is probable that under section 28 of the Co-operative Societies Act, further action might be taken, may I know, Sir, from the Government whether they are really anxious to take action against some culprits or whether they wish to avoid the issue altogether?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, இது மார்க்கெட்டிங் சொசைட்டிகள் பலவற்றில் ஏற்பட்டிருக்கின்றது. இப்போது இந்த 12 சொசைட்டிகளில் நடந்த சிக்கல்கள் எல்லாம் நடவடிக்கையில் இருக்கின்றன.



விதிப்படி சூப்பர்சீட் பண்ணுவதுதான் முதல் நடவடிக்கை. இதுபோல் திருச்சியிலே சிவஞானம் சொசைட்டி என்று ஒரு சொசைட்டி இருக்கின்றது. இதே மாதிரி குற்றத்திற்காக நடவடிக்கை எடுத்தோம். அதிலே எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும் கூட தவறு செய்திருக்கின்றார்கள். வேண்டுமென்றே ஆக்ஷன் எடுக்கின்றார்கள் என்றுகூடச் சொன்னார்கள். அதற்காக விட்டுவிடவில்லை. அது போல 12 சொசைட்டிகளில் சில குற்றங்கள் நடந்திருக்கின்றன; சிலவற்றில் இருப்பு குறைந்திருக்கிறது என்று பார்க்கிறோம். சிலவற்றிலே தவறுகளும் செய்து மூட்டைகளை வேறு திசைக்குத் திருப்பியிருக்கின்றார்கள். அது போலீஸ் இன்வெஸ்டிகேஷனில் இருந்துகொண்டிருக்கின்றது. முதல்படியாக சொசைட்டியை சூப்பர்சீட் பண்ணுவது என்பது. அப்படி சூப்பர்சீட் பண்ணுவதால் மெம்பர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் கிடையாது: நடவடிக்கைகள் நடந்துகொண்டிருக்கும். எந்தெந்த சொசைட்டியை சூப்பர்சீட் செய்கின்றோமோ அந்த சொசைட்டியின் தகுதிக்கு ஏற்ப, ஒரு ஜாயின்ட் ரிஜிஸ்ட்ராரை அல்லது ஒரு டிபுடி ரிஜிஸ்ட்ராரை ஸ்பெஷல் ஆபீஸராகப் போட்டு கோவாப்பரேடிவ் இன்ஸ்பெக்டரைப் போட்டு நடத்துவதினால் சொசைட்டியினுடைய வேலை நிலைமைகள் எதுவும் நிச்சயமாகப் பாதிக்கப்படாது. ஆனால் தவறு செய்த எந்தத் தலைவரையும், உறுப்பினர்களையும் நடவடிக்கை எடுக்காமல் இதுவரை விட்டதுமில்லை. இப்போதும் எல்லோர் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. பல வழக்குகள் நடந்துகொண்டிருக்கின்றன. பலர் சிறையிலேகூட இருக்கின்றார்கள்.

THIRU A. R. DAMODARAN: Sir, I am very happy at the Hon Minister's assurance. May I know, Sir, whether all these Presidents and Office-bearers who are members of the Board of Management have been debarred from membership of any Co-operative Society pending the action that is proposed to be taken by the Government? I ask this, because in my district, unfortunately, I find from the list read out, Ulundurpet, Tindivanam and Kallakurichi—three wholesale societies are being prosecuted. So, in the interests of proper administration, may I know if these persons will be debarred from participating in any co-operative activity until the charge against them is disposed of? If they are innocent, by all means, let them be taken.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, அவர்கள் குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் அவர்கள் நிச்சயமாக இதுவரையில் வேறு எந்த கூட்டுறவு ஸ்தாபனங்களில் இருந்தாலும், தொடர்ந்து இருக்க முடியாது. அதுமாதிரி இருக்கக்கூடாது என்று செய்கின்ற அதிகாரம் இன்னும் சட்ட திட்டத்திலே இடம் பெறவில்லை என்ற காரணத்தினால், அது அதோடு நிற்கிறது.

THIRU G. VASANTHA PAI : In view of this large scale involvement of Co-operative Societies in black-marketing, will the Government in future consider the claims of an individual trader to be a distributor for card holders on the same basis as any other without giving preference to Co-operative Societies?

THE HON. THIRU SI. PA. ADITANAR : Sir, the hon. Member has not waited to see the list of individual dealers.

(Interruption)

If the number of the Taluk Co-operative Societies is 12, I gave an indication, even last year the number of individual dealers involved in black-marketing is nearly 900. Therefore, it is not as though we can change over from the Co-operative Societies to the private individual dealers, because it will be like jumping from the frying pan into the fire.

THIRU G. VASANTHA PAI : Sir, I am not holding brief for the 900 recalcitrants among the individuals. If they have done it, they must be punished. Will the Hon. Minister undertake to punish all these 12 co-operative societies and every one of them who is involved in it?

THIRU G. SWAMINATHAN : The Hon. Minister has said the other day as follows :—"Sir, the 900 prosecutions mentioned by me relate to a subsequent period and not to 1972-73 ". From this, Sir, I understand that there have been so many prosecutions after 1972-73 also. I think, according to the answer of the Hon. Minister, Co-operative Societies have also been involved after this period. May I know whether Co-operative Societies have indulged in black-marketing after the period 1972-73 also and if so, their names?

THE HON. THIRU SI. PA. ADITANAR : I am sorry the hon. Member of the calibre of Thiru Swaminathan did not follow what I said. I also read in my answer that the Government had ordered that the handling of fertilisers should be taken away from the Taluk Co-operative Marketing Societies. Therefore, they could not have committed further mistakes in regard to distribution of fertilisers.



THIRU G. SWAMINATHAN : Sir, I only read the transcript copy given to us by the Council Department. It says as follows : The Hon. Minister. " Sir, the 900 prosecutions mentioned by me relate to a subsequent period and not to 1972-73. " This is according to the copy that has been given to us. I hope the statement relates only to 1972-73 and not to a subsequent period.

THE HON. THIRU SI. PA. ADITANAR : The hon. Member may please read it. It says that the individual prosecutions, which I mentioned related to a period after 1973. I read to-day that some time in 1973, the handling of the fertilisers had been taken away from the Taluk Marketing Societies. They cannot have been guilty of something which they did not do.

THIRU G. SWAMINATHAN : Sir, either the statement is wrong, or the Hon. Minister has mentioned the other way about the other day.

THE HON. THIRU SI. PA. ADITANAR : I have mentioned that the position is different from that which existed in 1972-73. In 1972-73 the Taluk Marketing Societies were also in the picture. After they were removed from the picture, they could not be held guilty of anything which might have gone wrong and they could not have committed an error in matters which they did not deal in.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, கோவாப்பரேடிவ் மார்க்கெட்டிங் சொசைட்டிகள் என்று சொன்னால், நூற்றுக்கணக்கான கோவாப்பரேடிவ் சொசைட்டிகள், தாலுக்கா மார்க்கெட்டிங் சொசைட்டிகள் மாநிலத்தில் இருக்கின்றன. இந்த 12 சொசைட்டிகளை நிர்வகித்த தனி நபர்கள் செய்த குற்றத்திற்காக மற்ற நூற்றுக்கணக்கான சொசைட்டிகளையும் கறைப்படுத்தி அவைகள் அத்தனையும் குற்றம் செய்ததுபோல அரசாங்கமே படம் பிடித்துக் காட்டுவது சரியா? அந்த சொசைட்டிகளையும் தொழில் செய்யவிடாமல் செய்வது சரியா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, மற்ற சொசைட்டிகளைக் கலைத்ததாக நான் சொல்லவே இல்லை.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, பணியைக் கொடுக்காமல் நிறுத்தி விட்டதாகச் சொன்னார்கள். உர விநியோகத்தை நிறுத்திவிட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஏதோ ஒரு சில தவறு செய்திருப்பதற்காக 200 தாலுக்கா சொசைட்டிகளில் . . .

[1974 ஆகஸ்ட் 24

*மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:* தலைவரவர்களே, தெரிந்தால் சொல்ல வேண்டும். தாலுக்கா மார்க்கெட்டிங் சொசைட்டிகள் மொத்தம் 126. அதிலே கம்ப்ளெயிண்ட் வந்ததன்பேரில் ஆக்ஷன் எடுத்து சூப்பர்சீட் செய்யப் பட்டது, 12. இவைகளில், ஆக்ஷன் பெண்டிங்காக இருப்பவைகள் வேறு இருக்கின்றன. சாத்தூர் மார்க்கெட்டிங் சொசைட்டி பற்றிய விஷயத்தில்கூட, ஆக்ஷன் பெண்டிங்காக இருக்கின்றது.

THIRU G. SWAMINATHAN: How many Societies are there against whom action is pending?

MR. CHAIRMAN: If there is any further doubt, a separate question may be put. The hon. Members may not please go beyond the scope of the question.

MR. CHAIRMAN: Questions are over.

### 2. அறிவிப்பு.

### அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து.

MR. CHAIRMAN: I have to announce to the House that at a meeting of the Business Advisory Committee held at 3-30 p.m. to-day, the following further programme of business has been decided:—

| | |
|---|---|
| 25-8-1974 (Sunday) | Holiday |
| 26-8-1974 (Monday) | No meeting |
| 27-8-1974 (Tuesday) | Official Bills |
| 28-8-1974 (Wednesday) | If necessary |

### 2. கவன ஈர்ப்பு.

### புதிய கிணறுகள் வெட்டுவதற்கும் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் கடன்களை நிறுத்திவைத்ததால் விவசாயிகளின் சிரமங்கள் குறித்து.

*திரு. வே. தங்கப்பாண்டியன்:* தலைவரவர்களே, "பிரதம நிலவள வங்கிகளின் மூலம் புதிய கிணறுகள் வெட்டுவதற்கான கடன்கள் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளன; வேளாண்மை மறுநிதிக் கழகத் திட்டத்தின் மூலம் கொடுத்து வந்த கிணறுகள் ஆழப்படுத்துவதற்கான கடன்களும் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளன; இதனால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்கள் குறித்து" மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



24 ஆகஸ்ட் 1974]

*மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:* தலைவரவர்களே, உழவர்கள் கிணறுகளையும் விசையேற்றங்களையும் பயன்படுத்தி நிலத்துக்கு மேம்பாடு செய்த பின்னர் உழவர்களுக்குக் கிடைக்கும் கூடுதல் வீத வருவாயை அடிப் படையாகக் கொண்டு, நிலவள வங்கிகள், கிணறுகள் தோண்டுதல் விசை யேற்றங்களை நிறுவுதல் போன்ற சிறுபாசனக் காரியங்களுக்குக் கடன்கள் வழங்கி வந்தன. மின் விசையில் கடும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள காரணத்தால் ஏராளமான விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு அளிக்க முடியாமல் உள்ளது. இத்தகைய சூழ்நிலைகளில் மாநில மின் வாரியம், மாநில நிலவள வங்கி, நிதித் துறை, வேளாண்மைத் துறை, பொதுப்பணித் துறை ஆகியவற்றுடன் கலந்து ஆலோசனை செய்து, மின் விசையேற்றங்களைப் பயன்படுத்தி சிறு பாசனம் மேற்கொள்வதற்குக் கடன் வழங்குவதை நிறுத்துமாறு நிலவள வங்கிகளுக்கு உத்தரவுகள் பிறப்பிக்க முடிவு செய்யப்பட்டது.

அதனையடுத்து, கடும் எண்ணெய் நெருக்கடி ஏற்பட்டதன் விளைவாக, டீசல் எண்ணெயின் விலை மிகவும் உயர்ந்து போனதுமட்டுமல்லாமல், நமது தேவைகளுக்கு உரிய அளவுக்கும் குறைவாகவே டீசல் எண்ணெய் கிடைக்கிறது. மேலும், டீசல் எண்ணெய் வழங்கல் நிலைமை உறுதியில்லாதிருப்பதையொட்டி, புதிதாக டீசல் எண்ணெய் பயன்படுத்தும் திட்டங்களை மேற்கொள்வது சரியன்று என இந்திய அரசு ஆலோசனை நல்கியது. தற்போது நிலவும் டீசல் எண்ணெய் பற்றாக்குறை நிலைமையையொட்டி டீசல் விசையேற்றங் களுக்குக் கடன் வழங்குவது என்பது மெய்ப்பாட்டு நிலைமைக்குப் பொருந்தாத ஒன்றென அரசு கருதியது. எனவே, 1974 மார்ச் திங்களிலிருந்து டீசல் விசையேற்றங்களுக்கு வழங்கப்படும் கடன்கள் நிறுத்தப்பட்டுள்ளன. இந்த அரசு டீசல் விசையேற்றங்களுக்கு அளித்துவந்த உதவித் தொகையை இதே சூழ்நிலையில், இதே காரணத்திற்காக ரத்து செய்துள்ளது.

மின்விசையோ டீசல் எண்ணெயோ போதுமான அளவுக்குக் கிடைக்காத நிலைமையில், உழவர் தமது விசையேற்றங்களைப் பயனுள்ள முறையில் பயன் படுத்திக் கடனைத் திருப்பிச் செலுத்துகின்ற அளவுக்குத் திட்டமிட்ட அளவு கூடுதல் வருவாய் பெறுவதென்பது இயலாது. எனவே, மின் விசை நிலைமையில் அல்லது டீசல் எண்ணெய் வழங்கல் நிலைமையில் பற்றாக்குறை நீங்கி அது எளிதாகக் கிடைக்கின்ற வரையில் உழவர்களுக்கு இத்தகைய கடன்களை வழங்கி அவர்கள் மீது கடன் சுமையை ஏற்றுவதில் எவ்விதப் பொருளும் இல்லை.

எனினும், நிலத்தடி நீர் தொடர்பான அனுமதி கிடைத்து காளைகளைக் கொண்டு நீர் இறைப்பதற்கு இடம் இருந்தால், புதிய கிணறுகளை தோண்டுவதற்குக் கடன்கள் வழங்குவது அனுமதிக்கப்படுகிறது. அன்றியும், ஏற்கனவே கிணறுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டிருந்தால் அக் கிணறுகளை ஆழப்

படுத்துவதற்கும் கடன்கள் வழங்கப்படுகின்றன. மேலும், கூடுதலாக நிறுவப்படவிருக்கின்ற விசையேற்றங்களுக்குப் பாசன வசதிக்கு உயர் முன்னுரிமை அளித்து, கூடுதல் டீசல் எண்ணெய் வழங்குவது பற்றிப் பரிசீலனை செய்யுமாறு இந்திய அரசிடம் வேண்டப்பட்டுள்ளது. மத்திய அரசின் பெட்ரோலியம்-இரசாயனப் பொருள்கள் அமைச்சர் இம் மாநிலத்தில் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள விசையேற்றங்களுக்கு மட்டுமின்றி இனி நிறுவக் கருதப்பட்டுள்ள விசையேற்றங்களுக்கும் பயன்படுத்துவதற்காகப் போதுமான டீசல் எண்ணெய் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தும் கருத்துடன் இப்பொருள் பற்றி மிக அவசரமாகப் பரிசிலனை செய்விப்பதாக உறுதிமொழி அளித்துள்ளார். அப்படிப் பரிசீலனை செய்த பின்னர் போதுமான டீசல் எண்ணெய் வழங்கப்படுமாயின் நாம் நமது மாநிலத்தில் மீண்டும் டீசல் விசையேற்றங்களுக்குக் கடன் வழங்குவது இயலக்கூடும்.

(பிற்பகல் 4.40)

**திரு. வே. தங்கப்பாண்டியன்**: தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையை நாம் தொலை தூர நோக்கோடு பார்க்க வேண்டும். பிரதம நிலவள வங்கிகள் கிணற்றுப் பாசனம் மூலம் தமிழ் நாட்டு உணவு உற்பத்திக்கு வசதிகளும் வாய்ப்புகளும் தந்துகொண்டிருக்கின்றன. தற்போது மக்கள் தொகையில் ஆண்டு ஒன்றுக்கு 10 லட்சம் கூடும் கணக்கு இருக்கிற காரணத்தால், ஏற்கெனவே நீர் வசதி இருக்கும்போது, இப்படி நீர் ஏற்றம் மூலம்தான் பாசனம் செய்ய வேண்டியிருக்கிறது. முகவை போன்ற வறண்ட மாவட்டங்களில் விவசாயத்திற்கு கிணற்றுப் பாசனத்தைத் தவிர வேறு வழியே இல்லை. ஆகவே, டீசல் எண்ணெயைப் பயன்படுத்தும் விசையேற்றங்களுக்கு பிரதம நிலவள வங்கியில் கடன் வாங்கும் திட்டத்தை உருவாக்கி, மத்திய அரசோடு இதுபற்றிப் பேச்சு வார்த்தை நடத்தி, இதற்கு வகை செய்யவேண்டும். லாரிகளுக்கெல்லாம் கூடுதலாக டீசல் எண்ணெய் நிறையக் கிடைக்கின்றபோது, உணவு உற்பத்திக்குக் கிடைக்கவில்லை என்றால், அதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே, இந்தப் பிரச்சினையை உடனடியாகத் தீர்க்க மத்திய அரசோடு நமது அரசு பேச்சு நடத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி**: தலைவர் அவர்களே, லாரிகளுக்கும் பஸ்களுக்கும் டீசெல் எண்ணெய் தாராளமாகக் கிடைக்கிறது என்று யாரும் சொல்லவில்லை. அதற்கும் பற்றுக்குறை ஏற்பட்டிருக்கிற காரணத்தாலே, இப்போது புதிய பஸ் ரூட்களையே கொடுக்கக்கூடாது என்று மத்திய அரசு உத்தரவு பிறப்பித்திருப்பதாகக்கூட பேரவையிலே நமது மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு நாம் 30 ஆயிரம் கிணறுகளுக்குத் தயார் செய்து வைத்திருந்தோம்.





அதில் 9000 கிணறுகளுக்கு பம்ப்செட் இருந்தாலும், அதற்காக மின் இலாகா
வையும் மற்ற இலாகாக்களையும் கூட்டி, மாநில ஆணைக்குழு கூட்டத்திலே,
இதைப்பற்றியெல்லாம் பேசினோம். மின் இணைப்பு கொடுப்பதற்கு மின்சாரம்
பற்றுக்குறையாக இருப்பதால், ஜூன் மாதம் வரையில் 5000 பம்ப்செட்களுக்கு
மின் இணைப்பு கொடுக்கின்றோம் என்று உறுதி அளித்தார்கள். ஆனால், பெரு
முயற்சி எடுத்து எல்லாவற்றுக்கும் கொடுக்க வேண்டும் என்றாலும், 2000 பம்ப்
செட்டுகளுக்குத்தான் கொடுக்க முடிந்தது. இந்தத் திட்டம் கைகூடவில்லை
என்ற பிறகுதான், டீசல் இன்ஜினுக்கு ஆயிரம் ரூபாய் சப்ஸிடி கொடுத்து,
அதை ஊக்குவிக்கச் செய்வது என்று திட்டம் போட்டோம். அந்தத் திட்டத்
தின்படி கிட்டத்தட்ட ஆயிரக்கணக்கான பம்ப்செட்டுகளுக்குக் கொடுக்கப்
பட்டது. டீசல் எண்ணெய்க்குப் பற்றுக்குறை திடீரென்று வந்துவிட்ட கார
ணத்தால், மத்திய சர்க்காரிடமிருந்து, டீசல் எண்ணெய்ப் பற்றுக்குறை இருப்
பதாலும், தட்டுப்பாடு இருப்பதாலும், இன்னும் சிறிது காலத்திற்கு பம்ப்செட்
டுகளுக்கு டீசல் வழங்க உறுதி அளிக்க முடியாது என்று தந்தி வந்திருக்
கிறது. ஆகவே டீசல் பம்ப்செட் நிறுவும் திட்டத்தை மாநில அரசு ஒத்தி
வைக்க வேண்டும் என்றும் அந்தத் தந்தியிலே சொல்லியிருக்கிறார்கள். இப்படி
டீசல் எண்ணெய் பற்றுக்குறையாக இருக்கும்போது, நாம் விவசாயிகளுக்குக்
கடன் கொடுத்து, அவர்கள் கிணறு வெட்டி, டீசல் பம்ப்செட் வைத்து விதை
யிட்டு பயிர் செய்கிறபோது டீசல் எண்ணெய் கிடைக்காத நிலைமை
வருமேயானால், என்ன ஆகும் என்று யோசித்தோம். பஸ், லாரி முதலிய
வற்றில் தனியார் முதலீடு செய்து வாங்குகின்றார்கள். அவை ஓடியவரை
யில் லாபம். டீசல் கிடைக்காவிட்டால் நின்றுவிடும். ஆனால் இது அப்படி
அல்ல. கூட்டுறவுத் துறையிலேயிருந்து விவசாயத்திற்கு எந்தக் கடனைக்
கொடுத்தாலும், அது 'ஷார்ட் டெர்ம்' கடனாக இருந்தால், மூன்றுமாதத்தில்
அவர்களிடமிருந்து வசூல் செய்கிறோம், நீண்டகாலக் கடனாக இருந்தால், 10, 19
ஆண்டுகளில் வாங்குகிறோம். எனவே; பணத்தைக் கடனாகக் கொடுத்து,
கிணற்றையும் வெட்டச் சொல்லி, தண்ணீர் வந்துவிட்ட பிறகு, அதை இறைக்க
மோட்டாரையும் வைக்கச் சொல்லி, டீசல் எண்ணெய் கிடைக்காததால் அந்த
மோட்டார்-பம்ப்செட் ஓடாது இருக்கும்போது, நாம் வசூலிக்கப் போய்
நின்றால், விவசாயிகளால் பணம் கொடுக்க முடியாது. மத்திய சர்க்கார் உத்தரவு
போட்டுவிட்டார்கள், ஆகவே, கொடுக்க முடியாது என்று சொன்னால் ரிசர்வ்
பேங்க் அதை ஒப்புக்கொள்ளுமா? பணத்தை ரிசர்வ் பாங்கிலே இருந்து
வாங்குகிறோம். எனவே, அவர்களும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள்.
கூட்டுறவுத் துறையில் வசூல் செய்யப் போகும்போது ஏழை விவசாயிகள்
எல்லாம் இரண்டு ஆண்டுகள் தள்ளிக் கொடுங்கள் என்பார்கள். ஆனால் அப்படித்
தள்ளிக் கொடுக்கும் அதிகாரம் நம்மிடம் இல்லை. ரிசர்வ் பேங்குக்குத்தான்
இருக்கிறது. அவர்கள்தான் தர வேண்டும். அவர்களிடம் கேட்டால், மத்திய

அரசு சொல்லிய பிறகும் ரிஸ்க் எடுத்துக் கொடுத்தால், நாங்கள் ஜவாப்தாரி இல்லை என்பார்கள். வேறு கடனை வசூலிக்க நடவடிக்கை எடுக்கச் சென்றாலும், டீசல் எண்ணெய் கிடைக்காது என்று தெரிந்தும்கூட, கடன் கொடுத்தது தவறு என்று அவர்களே எங்கள் மேல் தாவா செய்தாலும் செய்யலாம். 30 ஆயிரம் பம்ப்செட்களுக்குக் கடன் கொடுத்து, கிணறு வெட்டி தண்ணீர் இல்லை என்கிற நிலையில் அவர்களிடம் பணத்தை வசூல் செய்வதை கொஞ்சம் ஒத்திப் போடுங்கள் என்கின்ற வேண்டுகோளை ரெஜிஸ்டிரார் அவர்கள்கூட செய்திருக்கிறார்கள். எனவே, இதற்கு நிலவள வங்கிகள் வேறு ஏதாவது செய்யலாமா, கவலை ஏற்றம் வைத்திருப்பவர்களுக்குக் கொடுக்கலாமா என்றால், அவர்களுக்குக் கொடுக்கக்கூடாது என்ற நிலைமையை உலக வங்கி ஏற்படுத்தியிருக்கிறது. உலக வங்கிக்காரர்கள் 26 கோடி ரூபாய்க்குமேல் கொடுத்து ஒரு திட்டத்தைத் தந்திருக்கிறார்கள். ஒரு கிணற்றிலிருந்து 600 அடிக்கு உள்ளாக மற்றொரு கிணறு வெட்டக்கூடாது என்று ஒரு நிபந்தனை. இது முன்னாலே இருந்த திட்டம். இதை வோர்ல்டு பேங்க் செய்ததால் அவர்களே சட்டதிட்டத்தை உண்டாக்கினார்கள். என் வயலுக்குப் பக்கத்திலே தம்பி வயல் இருக்கிறது, அங்கே கொடுக்கக்கூடாது என்று சொல்கிறார்கள் என்ற கூக்குரல் இருந்தது. உலக வங்கி நல்ல முறையிலே இறைவைக்கு தண்ணீர் வேண்டும் என்று அந்த நிபந்தனையைப் போட்டார்கள். 600 அடிக்குள் ஒரு கேணிதான் இருக்க வேண்டும் என்று விதித்துவிட்டார்கள். அந்தத் திட்டத்தில் 'ஓப்பன் வெல்லுக்கு' கடன் கொடுக்க வகையில்லை. அதை உலக வங்கியுடனும், ரிசர்வ் வங்கியுடனும் பேசி இப்பொழுது அனுமதி வாங்கியிருக்கிறோம். மின்சாரம், டீசல் எண்ணெய் இரண்டும் கிடைக்காத காரணத்தால், மாட்டுக்கவலை வைத்துப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற திட்டத்தை நில வள வங்கி ஏற்படுத்த வேண்டும் என்று அதற்கும் திட்டம் தயாரிக்கப்பட்டு, இரண்டாயிரம் கிணறுகளுக்கு மேலே அதன்படி பயன்பெற ஏற்பாடு செய்திருக்கிறோம். ஆகவே, டீசல் எண்ணெய் பம்ப்செட்டை தேவைப்பட்டவர்கள் சொந்த முறையிலே வாங்கி வைத்துக்கொள்ளலாம். அரியானா, பஞ்சாப் மாநிலங்களில் மார்ச், ஏப்ரல் இரண்டு மாதங்களில் டீசல் எண்ணெய் கிடைக்காமல், டிராக்டர் டீசல் பம்ப்செட் பயன்படுத்த முடியாமல், நடவு நட்டபிறகு இந்த நிலைமை ஏற்பட்டு, பயிர் எல்லாம் பாழாய்ப் போனது என்பது பத்திரிகையைப் பார்த்தவர்களுக்குத் தெரியும். இந்த எண்ணெய்ப் பிரச்சினைபற்றி நாங்கள் மத்திய சர்க்காருக்குக் கடிதம் எழுதினோம். இங்கு மழை பெய்யாத காரணத்தால் தண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கிறது. டீசல் பம்ப்செட் போட்டாகிலும் நாங்கள் வேளாண்மை செய்யவேண்டியிருக்கிறது என்று எழுதியதற்கு, நாங்கள் அதுபற்றி ஆராய்ந்துகொண்டிருக்கிறோம், டீசல் எண்ணெய் கிடைக்கின்ற நிலைமை வரும்போது உங்களுக்கு ஒத்துழைப்





புத் தருகிறோம் என்று பத்து பதினைந்து நாட்களுக்கு முன்னாலே அந்தக் கடிதத்திற்கு பதில் வந்தது. ஆகவே, எவ்வளவு அதிகமாக முயற்சி செய்ய வேண்டுமோ அவ்வளவு முயற்சிகளும் செய்கிறோம். விவசாயிகளுக்குக் கடன் கொடுத்து, அவர்களைக் கடன்காரர்களாக்கி, நாம் வசூல் செய்யப் போகின்றபோது, அவர்கள் படும் கஷ்டங்களையும் நாம் யோசித்துத்தான் இப்படிப்பட்ட முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன்.

(பிற்பகல் 4.50)

4. அரசின் தீர்மானம்.

தனி உறுப்பினர் அலுவல் நாளன்று அரசு அலுவலை மேற்கொள்ளுதல்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே,

"தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 23 (1) ஆவது விதி தளர்த்தப்பட்டு இந்த அவை 1974 ஆம் ஆண்டு, ஆகஸ்டு திங்கள், 24 ஆம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 23(1) ஆவது விதி தளர்த்தப்பட்டு, இந்த அவை, 1974 ஆம் ஆண்டு, ஆகஸ்டு திங்கள், 24 ஆம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

5. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ்நாடு, 1974-ஆம் ஆண்டு, மதுவிலக்கு (மீண்டும் அமல் படுத்துதலும், திருத்தமும்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1974).

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** துணைத் தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு மதுவிலக்கு (மீண்டும் அமல்படுத்துதலும், திருத்தமும்) சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகின்றேன்.

---

@ 355-358 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1974 ஆகஸ்ட் 24

தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1937) அரசியலமைப்புச் சட்டத்தின் ஏழாவது விவர அட்டவணையின் மாநிலப் பட்டியலிலுள்ள 8, 51, 64, 65, 66 ஆகிய பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவையும், அரசியலமைப்புச் சட்டத்தின் 246 (3) பிரிவின்கீழ் அது குறித்து சட்டமியற்ற மாநிலச் சட்ட மன்றத்திற்குப் பிரத்தியோக அதிகாரம் உள்ளதுமான பொருள்களுக்குத் தொடர்புள்ளவரையில் அச் சட்டம் தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு மதுவிலக்குச் (செயல்திறனை நிறுத்தி வைத்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1971) 2-ஆவது பிரிவினால், 1971 ஆகஸ்ட் 30-ஆம் நாளிலிருந்து செல்திறனில் இருப்பது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 47 ஆவது பிரிவில் கூறப்பட்டுள்ள நெறிமுறைக் கோட்பாட்டின்படி இம்மாநிலத்தில் மதுவிலக்கைப் படிப்படியாக மீண்டும் செயலுக்குக் கொண்டுவர இவ்வரசு முடிவு செய்தது. முதற்படியாக, 1973 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து தமிழ் நாட்டிலிருந்த கள்ளுக்கடைகள் அனைத்தும் மூடப்பட்டன. அதற்கிணங்க, தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டின் 10 ஆவது சட்டம், கள்ளைப் பொறுத்தவரையில் மேற்சொன்ன நாளிலிருந்து மீண்டும் செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. கடைசிக் கட்டமாக 1974 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து தமிழ்நாட்டில் மீண்டும் முழு மதுவிலக்கைச் செயலுக்குக் கொண்டுவர தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன முடிவின் விளைவாக தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு மதுவிலக்குச் (செல் திறனை நிறுத்தி வைத்தல்) சட்டத்தையும் (தமிழ்நாடு சட்டம் 33/1971), தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு ஆயத் தீர்வைச் சட்டத்தையும் (தமிழ்நாடு சட்டம் 34/1971) ரத்துச் செய்ய வேண்டியதும், தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 10/1937) மீண்டும் செயலுக்குக் கொண்டுவர வேண்டியதும் அவசியமாகிறது.

இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவுக்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

இத் தீர்மானத்தை மேலவை ஏற்றுக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மதுவிலக்கு (மீண்டும் அமல்படுத்துதலும், திருத்தமும்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 38/1974) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."



24 ஆகஸ்ட் 1974]

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மது விலக்கினை மீண்டும் தமிழகத்திலே அமுல்படுத்தும் சட்ட முன்வடிவினை ஆதரிக்கும் நேரத்திலே சில கருத்துக்களையும் கூற விரும்புகிறேன்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு மதுவிலக்கு தமிழ்நாட்டிலே தற்காலிகமாக ரத்து செய்யப்படும் நேரத்திலே பெருமக்கள் பலர் இதன் விளைவாக நமது சமுதாயம் எந்த அளவிற்குச் சீர்கேடடையும் என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் அந்த நேரத்திலே வேறு வழி கிடையாது, நமது வருமானம் பெருகிட வேண்டும் என்ற காரணம் கூறப்பட்டு, தமிழகத்திலே மதுவிலக்கினைத் தற்காலிகமாக ரத்து செய்தது நமது அரசு. உண்மையிலேயே ரத்து செய்த நேரத்திலே நான் மிகவும் வருத்தப்பட்டேன். ஏனென்றால் அன்றுள்ள நிலையில் 22 அல்லது 23 வயதடைந்த இளைஞர்கள் மதுவினை ருசிக்காதவர்கள், மதுவின் தீமைகளை அறியாதவர்கள். ஆனால் மூன்றாண்டு காலம் அச்சட்டம் ரத்து செய்யப்பட்டிருந்த நிலையில் அவர்களுடைய நிலை மாறிவிட்டது என்றே சொல்ல வேண்டும். இன்றைக்கு அனைவரும் மதுவின் ருசியினை அறிந்து கொண்டிருக்கின்றார்கள், சிலர் அதிலே மிகவும் பழக்கப்படுத்திக்கொண்டு விட்டவர்களாக இருக்கின்றார்கள். இன்று மீண்டும் மதுவிலக்கினைக் கொண்டு வரும் போது, இப்படிப் பழக்கப்பட்டுப் போன இளைஞர்கள் அதைக் கைவிட முடியாதவர்களாக வேறு சில போதைப் பொருள்களை அல்லது போதை தரும் பானங்களை அருந்தக்கூடிய அபாயம் இருக்கின்றது. மேலை நாடுகளிலே எல். எஸ். டி. ஹிராயின், மார்ச்வானா போன்ற போதை தரும் பொருள்களையெல்லாம் கல்லூரி மாணவர்கள் கூட அடிக்கடி உண்டு பழகிக்கொண்டுவிட்டார்கள் என்று நாம் கேள்விப்படுகிறோம். நமது மாநிலத்திலேகூட ஒரு சில இடங்களிலே உள்ள கடைகளிலே அப்படிப்பட்ட போதை தரும் பொருள்கள் விற்பனை செய்யப்படுவதாகவும் சொல்லுகின்றார்கள். இப்படிப்பட்ட போதைப் பொருள்களை வாங்கி உண்டு பழக்கப்பட்டுவிட்டு, அதனால் ஏற்படும் நிலையை— அது இன்பமா அல்லது துன்பமான நிலையா என்று எனக்குச் சொல்லத் தெரியாது—அடைய விரும்புகின்றவர்கள், இப்போது மீண்டும் மதுவிலக்கு வரும் நிலைமையில், அந்தப் பழக்கத்தில் தொடர்ந்து தங்கள். . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொல்லுவது அப்படிப்பட்டவர்களுக்கு மாற்று யோசனையைச் சொல்லுவதைப் போல இருக்கின்றது. தயவுசெய்து வேறு வழியில் பேசுவது நல்லது. ஏனென்றால் மதுவிலக்கினைக் கொண்டுவரும் காரணத்தினால், இப்படிப்பட்ட போதைப் பொருள்களைச் சாப்பிடலாம் என்று அவர்களுக்கு யோசனை சொல்லுவதைப் போல் பேச்சு அமைந்துவிடக்கூடாது.

**திரு. கே. எஸ். கணபதி :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியதை முழுதும் ஏற்றுக்கொள்ளுகிறேன். ஆனால் இளைஞர் சமுதாயம் இன்று நமக்குக் கற்றுக் கொடுக்கும் நிலைமையில்தான் இருக்கின்றார்களே தவிர, அவர்களுக்கு நாம் சொல்லித் தரவேண்டிய நிலைமையில் இல்லை.

இப்படிப்பட்ட பொருள்கள் கடைகளிலே விற்பனை செய்யப்படுவது தடுக்கப்பட வேண்டும். இந்தச் சட்டம் சரியான முறையில் அமுல்செய்யப்பட வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் நான் அதைக் குறிப்பிட்டேன். எனவே இதுபோன்ற தவறுகள் மீண்டும் ஏற்படாது தடுக்கப்பட வேண்டும், அதற்கான முயற்சிகளை அரசு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

துணைத் தலைவரவர்களே, இப்போது மதுவிலக்கை தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டதை மீண்டும் அமுல்படுத்தும் நேரத்திலே பல விளைவுகள் கடந்த மூன்று ஆண்டுகளில் ஏற்பட்டிருப்பதை நாம் இந்த நேரத்திலே மறந்துவிடுவதற்கில்லை. பலர் கடன் வாங்கி இப்படிப்பட்ட போதைப் பொருள்களை விற்பனை செய்வதற்காக கடைகளை வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். மதுவிலக்குச் சட்டம் வருவது நாட்டின் நன்மைக்காகத்தான் என்பதை யாரும் மறுக்க முடியாது. இருந்தாலும் பலர் கடன்பட்டு அதன் வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கின்றார்கள், அவர்கள் இதனால் இப்போது பாதிக்கப்படுகின்றார்கள். அவர்களுடைய மறுவாழ்விற்காக அரசு மாற்றுத் திட்டம் எதையாவது செயல்படுத்தி அவர்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டும் என்று கூறி இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து அமருகின்றேன்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மதுவிலக்கு அமுலிலிருந்ததை ரத்துச் செய்த தீர்மானத்தை ரத்து செய்வதற்காக இப்போது இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கின்றது. இதை நான் மனமார வரவேற்கிறேன்.

மதுவிலக்கை அமுல்படுத்த வேண்டும் என்ற கொள்கையைத் தொடர்ந்து முஸ்லீம் லீக் வற்புறுத்திக்கொண்டு வந்தது. முஸ்லீம் லீகின் கருத்தை மதிக்கத்தக்க வகையில் இந்த மசோதா இந்தச் சபையில் இன்றைக்குக் கொண்டு வரப்பட்டிருப்பதை முஸ்லீம் லீக் கட்சியின் சார்பிலே பாராட்டுகிறேன்; அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டும் என்ற தீர்மானம் முன்பு இங்கே வந்த சமயத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோழமைக் கட்சியாக இருந்த முஸ்லீம் லீக் அந்த ரத்துத் தீர்மானத்தை வன்மையாக எதிர்த்தது, கண்டித்துப் பேசியது. எந்த அளவிற்கு எதிர்த்தது என்று சொன்னால்,



தோழமை முறியக்கூடிய அளவிற்கு அதை எதிர்த்தது. தோழமை என்பதில் திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டுவரும் தீர்மானங்களையெல்லாம் நாம் ஆதரித்து வரவேற்கின்றவர்களாக இருந்தாலும்கூட, எங்கள் மனச்சாட்சிக்குத் தவறான தீர்மானம் என்று நினைக்கும் சில தீர்மானங்களை நாங்கள் எதிர்க்கத்தான் செய்கிறோம். அந்த மாபின் அடிப்படையில்தான் மதுவிலக்கை ரத்து செய்யக் கோரிய தீர்மானத்தை அன்றைக்கு நாங்கள் எதிர்த்தோம். இன்றைக்கு இந்தத் தீர்மானம் மதுவிலக்கை ரத்துச் செய்த தீர்மானத்தை ரத்துச் செய்யும் தீர்மானமாக இருக்கின்றது.

(பிற்பகல் 5-00)

மதுவிலக்கு ரத்துத் தீர்மானத்தின் மீது நான் பேசிய நேரத்தில் ஒன்று சொன்னேன். இதை எதிர்ப்பதற்கு அடிப்படைக் காரணம் எங்களைப் பொறுத்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் பால் மக்கள் கொண்டிருக்கும் அன்பு, அபிமானம் விலகும் என்பது. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய செல்வாக்கு மக்களிடையே குறைவதற்கு இது காரணமாக அமையுமென்று நான் பேசினேன். அதைத் தொடர்ந்து திண்டுக்கல்லில் தேர்தல் நடந்தது, கோவையில் தேர்தல் நடந்தது. இரண்டு தேர்தல்களிலும் திராவிட முன்னேற்ற கழக வேட்பாளர்கள் தோற்றுப் போனார்கள். இந்தத் தோல்விக்கு—நான் சொல்வேன்—நிச்சயமாக மது விலக்கு ரத்து ஒரு முக்கியமான காரணமாகும். தோல்விக்கு பல காரணங்கள் உண்டு என்றாலும், அடிப்படைக் காரணம் மது விலக்கு ரத்து தான் என்பதை நான் முன்பும் சொன்னேன். இப்போதும் சொல்கிறேன். இந்தத் தோல்வி வேறு வார்த்தையில் சொல்ல வேண்டுமென்றால், blessing in disguise என்று சொல்வேன். தோல்வியும் ஒரு நன்மையாகவே மாறக்கூடிய வகையில்தான் அமைந்திருக்கிறது. ஆகவே மது விலக்கை மீண்டும் அமுல்படுத்தக்கூடிய வகையில் இந்தத் தீர்மானம் வந்ததற்குப் பிறகு மக்களுடைய ஆதரவு நிச்சயமாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கூடுதலாக இருக்கும். கூடுதலான ஆதரவு கிடைக்கும். ஆனால் திடீரென்று ஒரு மாதத்தில், இரண்டு மாதங்களில் ஆதரவு கிடைத்து விடுமென்று சொல்ல மாட்டேன், கொஞ்சம் அவகாசம் வேண்டும். ஆறு மாதங்கள் அல்லது ஒரு வருஷத்திற்குப் பிறகுதான் முந்திய நிலையை அடைய முடியுமே தவிர்த்து, இரண்டு, மூன்று மாதங்களில் திடீரென்று பழைய நிலைக்கு ஆதரவு வந்து விடும் என்று நான் நினைக்கவில்லை. எப்படியிருந்தாலும் பொதுத் தேர்தல் 1976 ஆம் ஆண்டில் வரக்கூடிய நிலை இருப்பதனால் சுமார் 1½ ஆண்டு நமக்கு அவகாசம் இருக்கிறது. இது போதுமான அவகாசம், மக்களுடைய ஆதரவு முந்திய நிலைக்கு நமக்குக் கிடைக்கும். ஆண்டவன் அருளால் 1976 தேர்தலில் இந்தத் தீர்மானத்தின் காரணமாக மீண்டும் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்று அரசு அமைக்குமென்று நான் உறுதியாக

சுலபமான காரியமல்ல. எனக்குத் தெரிந்த வரையில் இந்த சாராயத்தை உற்பத்தி செய்யக்கூடிய டிஸ்டில்லரீஸ்—தொழிற்சாலைகள், நான்கு தொழிற்சாலைகள் என்ற அளவிலே இருக்கின்றன என்று கருதுகிறேன். இந்த நான்கு தொழிற்சாலைகளுக்கு உரியவர்களும் இந்தச் சாராயத்தின் அடிப்படையில் கெமிகல் தயாரிப்பதற்கான ஒரு தொழிற்சாலையை கிட்டத்தட்ட ஆறு கோடியிலிருந்து 10 கோடி ரூபாய் வரையில் அமைக்க முனைந்துள்ளார்கள் என்று கேள்விப்படுகிறேன். இப்படிப்பட்ட தொழிற்சாலை தமிழகத்தில் உருவாக்கப்பட வேண்டுமானால் அதற்குக் கிட்டத்தட்ட 2 ஆண்டுகள் ஆகும் என்று அறிகிறேன். இந்த இரண்டாண்டு காலத்திற்குள்ளாக தேவையான லைசென்சை மத்திய அரசிடமிருந்து பெற்றால்தான், இங்கே இந்த மாதிரி சாராயத்தின் அடிப்படையில் உள்ள தொழிற்சாலையை அமைக்க முடியும். மத்திய அரசு தொழிற்சாலைக்குரிய லைசென்சை அளிக்கப் போகிறதா, இல்லையா என்று தெரியவில்லை. ஆனால் இந்தச் சமயத்தில் ஒன்றைச் சொல்லிக்கொள்வேன். இந்தச் சாராயத்தின் அடிப்படையில் பொருள்கள் தயாரிக்கக்கூடிய தொழிற்சாலையை அமைக்க மத்திய அரசை அணுகி, அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு இதற்கான லைசென்சை எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவாகப் பெற்றுத்தர வேண்டியது மாநில அரசின் கடமை. இன்னொன்று, இந்த உபரி 20 மில்லியன் லிட்டர் சாராயத்தை உடனடியாக அவர்கள் வினியோகிக்க முடியாத நிலைமை ஏற்படுமானால், 40 மில்லியன் லிட்டர் என்பது 20 மில்லியன் லிட்டராகி அதன் காரணமாக தொழில் துறை மந்தமாகக் கூடிய நிலைமை உருவாகக் கூடும். ஆனால் வெளி மாநிலங்களில் இந்தச் சாராயத்திற்கு மிகவும் அதிக கிராக்கி இருக்கிறதென்று நான் கேள்விப்படுகிறேன். மஹாராஷ்டிரா மாநிலத்தில், ஆந்திர மாநிலத்தில், மேற்கு வங்கத்தில் இந்தச் சாராயத்திற்குக் கிராக்கி இருக்கிறதென்று சொல்கிறார்கள். ஆகவே நம்முடைய தேவைக்குப் போக இன்னும் 20 மில்லியன் லிட்டர் அளவு இருப்பதை நாம் அவர்களுக்கு அனுப்பினால், அவர்கள் அதை எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறார்களென்று அறிகிறேன்.

(பிற்பகல் 5-10)

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவது, இண்டஸ்ட்ரியல் ஆல்கஹால் பற்றியா மற்றது பற்றியா?

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தமிழகத்தில் இண்டஸ்ட்ரியல் ஆல்கஹால் செய்கின்ற தொழிற்சாலைகள் இருக்கின்றன. சாப்பிடுகின்ற சாராயம் காய்ச்சுகின்ற தொழிற்சாலைகளும் இருக்கின்றன. நாம் மீண்டும் மதுவிலக்குக் கொள்கையை அமுல்படுத்துகின்ற காலத்தில் நம்முடைய மாநிலத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு சாராயம் காய்ச்சி அனுப்பிவைக்கின்ற கொள்கையைப் பின்பற்று



வதில் தவறு எதுவும் இல்லை என்று கருதுகிறேன். அந்த மாநிலங்களில் இருப்பவர்கள் மது அருந்த தடையேதும் இல்லை. நம்முடைய மாநிலத்தில் நம்முடைய மக்கள் அருந்துவதற்கு 3 ஆண்டுகள் அனுமதி கொடுத்து விட்டோம். ஆகவே, அவர்களுக்கு அனுப்புவதில் தவறு எதுவும் இல்லை. 20 மில்லியன் லிட்டர் சாராயத்தை வெளி மாநிலங்களுக்கு அனுப்பினால், இரண்டு ஆண்டுக் காலத்திற்கு இங்குள்ள தொழிற்சாலைகள், சிறந்த முறையில் நடக்க முடியும். தொழிலாளர்களுக்கு பாதகம், தொழில் மந்தம் ஏற்படாமல் இருக்கும். நம்முடைய மாநில அரசு இங்கிருந்து வெளி மாநிலங்களுக்கு அனுப்பக்கூடாது என்ற கொள்கையைப் பின்பற்றினால், இங்கிருந்து வெளி மாநிலங்களுக்கு அத்தொழிற்சாலையை எடுத்துக் கொண்டு போய் அங்கு அமைப்பதற்கு அதிகச் செலவாகும். அப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமல், 2 ஆண்டுக் காலத்திற்கு நம்முடைய மாநிலத்தில் அந்தத் தொழிற்சாலைகளுக்குத் தகுந்த ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, கடந்த மூன்று ஆண்டுக் காலத்தில் ஐ.எம்.எப்.எல். என்று சொல்லுகின்ற "இண்டியன் மேட் பாரின் லிக்கர்" தொழிற்சாலைகள் ஐந்து தொழிற்சாலைகள், நம்முடைய தமிழகத்தில் சுமார் 50 லட்சம் ரூபாயில் இருந்து ஒரு கோடி ரூபாய் வரை செலவிட்டு பல தொழிலதிபர்கள் ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமை என்னவாகும் என்பதை நம்முடைய தமிழக அரசு கொஞ்சம் ஆலோசித்துப் பார்க்க வேண்டும்.

அப்படிப்பட்ட தொழிற்சாலைகள் முண்டியம்பாக்கத்தில் சிதம்பரம் அவர்களாலும், ஈ.ஐ.டி. பாரி இன்னும் மற்றவர்களாலும் ஆரம்பித்து நடத்தி வரப்படுகின்றன. மதுவிலக்கை ரத்து செய்வது என்று இந்த அரசு எடுத்த முடிவின் அடிப்படையில் அந்தத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டன. இப்போது மீண்டும் மதுவிலக்கைக் கொண்டு வந்துவிட்டோம்; ஆகவே நீங்கள் அந்தத் தொழிற்சாலைகளை நடத்தக்கூடாது என்று சொல்லுவது சரியான முடிவு அல்ல என்பது என்னுடைய கருத்தாகும். அந்தத் தொழிற்சாலைகள் தயாரிக்கின்ற பொருளுக்கு வெளி மாநிலங்களில் நல்ல வரவேற்பு இருக்கிறது. அந்தத் தொழிற்சாலைகள் மூலமாக பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பிழைக்கின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே அந்தத் தொழிற்சாலைகள் நல்ல முறையில் நடக்க உதவ வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** துணைத் தலைவரவர்களே, ராஜாஜி பிறந்த நாட்டில் மதுவிலக்குக் கொள்கையை அமுல்படுத்த வேண்டுமென்று சொல்லிவிட்டு, மற்ற மாநிலங்களில் உள்ளவர்கள் கெட்டுப் போவதற்கு இங்கேயிருந்து தயாரித்து அனுப்புவது எந்த அளவுக்கு ஏற்புடையதாக இருக்கும்?

சுலபமான காரியமல்ல. எனக்குத் தெரிந்த வரையில் இந்த சாராயத்தை உற்பத்தி செய்யக்கூடிய டிஸ்டில்லரீஸ்—தொழிற்சாலைகள், நான்கு தொழிற்சாலைகள் என்ற அளவிலே இருக்கின்றன என்று கருதுகிறேன். இந்த நான்கு தொழிற்சாலைகளுக்கு உரியவர்களும் இந்தச் சாராயத்தின் அடிப்படையில் கெமிகல் தயாரிப்பதற்கான ஒரு தொழிற்சாலையை கிட்டத்தட்ட ஆறு கோடியிலிருந்து 10 கோடி ரூபாய் வரையில் அமைக்க முனைந்துள்ளார்கள் என்று கேள்விப்படுகிறேன். இப்படிப்பட்ட தொழிற்சாலை தமிழகத்தில் உருவாக்கப்பட வேண்டுமானால் அதற்குக் கிட்டத்தட்ட 2 ஆண்டுகள் ஆகும் என்று அறிகிறேன். இந்த இரண்டாண்டு காலத்திற்குள்ளாக தேவையான லைசென்சை மத்திய அரசிடமிருந்து பெற்றால்தான், இங்கே இந்த மாதிரி சாராயத்தின் அடிப்படையில் உள்ள தொழிற்சாலையை அமைக்க முடியும். மத்திய அரசு தொழிற்சாலைக்குரிய லைசென்சை அளிக்கப் போகிறதா இல்லையா என்று தெரியவில்லை. ஆனால் இந்தச் சமயத்தில் ஒன்றைச் சொல்லிக்கொள்வேன். இந்தச் சாராயத்தின் அடிப்படையில் பொருள்கள் தயாரிக்கக்கூடிய தொழிற்சாலையை அமைக்க மத்திய அரசை அணுகி, அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு இதற்கான லைசென்சை எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவாகப் பெற்றுத்தர வேண்டியது மாநில அரசின் கடமை. இன்னொன்று, இந்த உபரி 20 மில்லியன் லிட்டர் சாராயத்தை உடனடியாக அவர்கள் வினியோகிக்க முடியாத நிலைமை ஏற்படுமானால், 40 மில்லியன் லிட்டர் என்பது 20 மில்லியன் லிட்டராகி அதன் காரணமாக தொழில் துறை மந்தமாகக் கூடிய நிலைமை உருவாகக் கூடும். ஆனால் வெளி மாநிலங்களில் இந்தச் சாராயத்திற்கு மிகவும் அதிக கிராக்கி இருக்கிறதென்று நான் கேள்விப்படுகிறேன். மஹாராஷ்டிரா மாநிலத்தில், ஆந்திர மாநிலத்தில், மேற்கு வங்கத்தில் இந்தச் சாராயத்திற்குக் கிராக்கி இருக்கிறதென்று சொல்கிறார்கள். ஆகவே நம்முடைய தேவைக்குப் போக இன்னும் 20 மில்லியன் லிட்டர் அளவு இருப்பதை நாம் அவர்களுக்கு அனுப்பினால், அவர்கள் அதை எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறார்களென்று அறிகிறேன்.

(பிற்பகல் 5-10)

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவது, இண்டஸ்ட்ரியல் ஆல்கஹால் பற்றியா மற்றது பற்றியா?

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தமிழகத்தில் இண்டஸ்ட்ரியல் ஆல்கஹால் செய்கின்ற தொழிற்சாலைகள் இருக்கின்றன. சாப்பிடுகின்ற சாராயம் காய்ச்சுகின்ற தொழிற்சாலைகளும் இருக்கின்றன. நாம் மீண்டும் மதுவிலக்குக் கொள்கையை அமுல்படுத்துகின்ற காலத்தில் நம்முடைய மாநிலத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு சாராயம் காய்ச்சி அனுப்பிவைக்கின்ற கொள்கையைப் பின்பற்று



வதில் தவறு எதுவும் இல்லை என்று கருதுகிறேன். அந்த மாநிலங்களில் இருப்பவர்கள் மது அருந்த தடையேதும் இல்லை. நம்முடைய மாநிலத்தில் நம்முடைய மக்கள் அருந்துவதற்கு 3 ஆண்டுகள் அனுமதி கொடுத்து விட்டோம். ஆகவே, அவர்களுக்கு அனுப்புவதில் தவறு எதுவும் இல்லை. 20 மில்லியன் லிட்டர் சாராயத்தை வெளி மாநிலங்களுக்கு அனுப்பினால், இரண்டு ஆண்டுக் காலத்திற்கு இங்குள்ள தொழிற்சாலைகள், சிறந்த முறையில் நடக்க முடியும். தொழிலாளர்களுக்கு பாதகம், தொழில் மந்தம் ஏற்படாமல் இருக்கும். நம்முடைய மாநில அரசு இங்கிருந்து வெளி மாநிலங்களுக்கு அனுப்பக்கூடாது என்ற கொள்கையைப் பின்பற்றினால், இங்கிருந்து வெளி மாநிலங்களுக்கு அத்தொழிற்சாலையை எடுத்துக் கொண்டு போய் அங்கு அமைப்பதற்கு அதிகச் செலவாகும். அப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமல், 2 ஆண்டுக் காலத்திற்கு நம்முடைய மாநிலத்தில் அந்தத் தொழிற்சாலைகளுக்குத் தகுந்த ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, கடந்த மூன்று ஆண்டுக் காலத்தில் ஐ.எம்.எப்.எல். என்று சொல்லுகின்ற "இண்டியன் மேட் பாரின் லிக்கர்" தொழிற்சாலைகள் ஐந்து தொழிற்சாலைகள், நம்முடைய தமிழகத்தில் சுமார் 50 லட்சம் ரூபாயில் இருந்து ஒரு கோடி ரூபாய் வரை செலவிட்டு பல தொழிலதிபர்கள் ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமை என்னவாகும் என்பதை நம்முடைய தமிழக அரசு கொஞ்சம் ஆலோசித்துப் பார்க்க வேண்டும்.

அப்படிப்பட்ட தொழிற்சாலைகள் முண்டியம்பாக்கத்தில் சிதம்பரம் அவர்களாலும், ஈ.ஐ.டி. பாரி இன்னும் மற்றவர்களாலும் ஆரம்பித்து நடத்திவரப்படுகின்றன. மதுவிலக்கை ரத்து செய்வது என்று இந்த அரசு எடுத்த முடிவின் அடிப்படையில் அந்தத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டன. இப்போது மீண்டும் மதுவிலக்கைக் கொண்டு வந்துவிட்டோம்; ஆகவே நீங்கள் அந்தத் தொழிற்சாலைகளை நடத்தக்கூடாது என்று சொல்லுவது சரியான முடிவு அல்ல என்பது என்னுடைய கருத்தாகும். அந்தத் தொழிற்சாலைகள் தயாரிக்கின்ற பொருளுக்கு வெளி மாநிலங்களில் நல்ல வரவேற்பு இருக்கிறது. அந்தத் தொழிற்சாலைகள் மூலமாக பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பிழைக்கின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே அந்தத் தொழிற்சாலைகள் நல்ல முறையில் நடக்க உதவ வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** துணைத் தலைவரவர்களே, ராஜாஜி பிறந்த நாட்டில் மதுவிலக்குக் கொள்கையை அமுல்படுத்த வேண்டுமென்று சொல்லிவிட்டு, மற்ற மாநிலங்களில் உள்ளவர்கள் கெட்டுப் போவதற்கு இங்கேயிருந்து தயாரித்து அனுப்புவது எந்த அளவுக்கு ஏற்புடையதாக இருக்கும்?

திரு. ஜி. சுவாமிநாதன்: இதுபற்றி விவாதத்தில் இறங்குவது நல்லதல்ல. விவாதத்தில் இறங்கினால், இரண்டு பக்கமும் பேசலாம். நாம் எதற்காக மதுவிலக்கை ரத்துச் செய்து விட்டு, மீண்டும் கொண்டு வந்தோம் என்பதற்கு எவ்வளவோ காரணங்கள் இருக்கின்றன. 'மாரல் ஆட்டிடியூட்' என்ற அளவில் பார்ப்பது என்றால், அது வேறு. முதல் அமைச்சர் அவர்கள் மது விலக்கை ரத்து செய்யும்போது தெளிவாகச் சொன்னார்கள். சுற்றிலும் நெருப்புப் பந்தங்கள் இருக்கும்போது, நடுவில் கற்பூரத்தை வைத்தால், எவ்வளவு நாள் எரியாமல் பாதுகாக்க முடியும் என்று கேட்டார்கள். புலிகள் உலாவுகின்ற இடத்தில் புள்ளிமான் பயமில்லாமல் உலாவ முடியுமா என்று அழகாகச் சொன்னார்கள். ஆகவே அப்படிப்பட்ட காரியங்களைப் பேச ஆரம்பித்தால், அது சரியாகாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: துணைத் தலைவரவர்களே, அந்தக் காரண காரியங்களை நான் மதுவிலக்கை ஒத்திவைத்த போது சொன்னேன். மறுபடியும் கொண்டுவருகின்ற நேரத்தில் அதை மறந்து விடவில்லை. மறக்கவில்லை என்பதற்கு அடையாளமாகத்தான் துணை மானியக் கோரிக்கையைச் சமர்ப்பிக்கும்போதும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டிலும், அந்தக் காரணங்கள் அப்படியே இருக்கின்றன; அதற்கான நியாய வாதங்களுக்கு அப்பாற்பட்டு, ஏதோ ஒரு முள் நம்முடைய நெஞ்சில் குத்திக்கொண்டிருக்கிறது; அந்த முள்ளை அக்ற்ற வேண்டும் என்பதற்காகத்தான் இப்போது மதுவிலக்கைக் கொண்டுவந்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறேன். நண்பர் திரு. சுவாமிநாதன் அந்த முள் தமிழ் நாட்டிலே குத்தாமல் இருக்கட்டும், மற்ற மாநிலங்களில் குத்தட்டும் என்கிறாரா? ஆகவே ஐ.எம்.எப்.எல். தொழிற்சாலைகளில், தமிழகத்தில் தயாரித்து, மற்ற மாநிலங்களுக்கு அனுப்பலாம் என்கிறாரா, அதை மூதறிஞர் ராஜாஜியின் ஆன்மா ஒத்துக்கொள்ளுமா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: துணைத் தலைவரவர்களே, மூதறிஞர் ராஜாஜி ப்போது நம்மிடையே இல்லை. அவர்கள் கண்ணீர் வடித்தது இவ்வளவு லமும் மதுவிலக்கு இருந்ததை ரத்து செய்ததால் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்களே என்பதற்காகத்தான். இப்போது நாம் குடிக்காமல் இருக்கப் ர்வதற்காக, மற்ற மாநிலங்களில் அதைத் தயார் செய்யாமல் இருக்கப் ாவதில்லை. அவர்களுக்கு இன்னும் அதிகமாகத் தேவைப்படுவதால் அதிகப் யான தொழிற்சாலை போட்டு தயாரிக்கப் போகிறார்கள். ஆகவே நம்முடைய ாழிற்சாலைகளிலிருந்து அனுப்புவது தவறில்லை என்று நினைக்கிறேன். மற்ற



Now, Sir, there is one point, very delicate point, to which my Hon. Friend Thiru Swaminathan adverted and which became a point of debate between him and the Hon. the Chief Minister and





that is the question of investment made in potable alcohol plants making exotic alcohol within the State. Well, I do not think it is going to be a very perplexing phenomenon. There is one thing that we must not do. We must not lead people on the garden path, make them invest precious money in plant, machinery and building and at the end of it, tell them "Nothing doing, you have to shut down". There is no means to do it because the potable alcohol is drunk at very high levels—it being a very expensive wine. I do not drink it. I do not know the difference between the horses and mules so far as drinks are concerned, though I have been travelling a lot. I have never in my life taken even a bottle of beer. So, I do not know the difference between one another. But what is important is that we should see that this plant and machinery is not wasted and that something is done; and, if necessary, we can export what we produce here. It is not a question of being loyal to Gandhi or Rajaji. It is a question of seeing that this State does not commit breach of faith with those who are led up to the garden path to put up industries. If you do this thing with one, the entrepreneur will not come out with fresh proposals in respect of other products which do not involve industrial alcohol. Therefore, it is vitally important that something should be done.

The next point I want to refer to is this, namely, tourism. I have already spoken about it in the context of abolition of horse races which, according to me, looks a very, very impulsive step and on that I shall not dwell. What is important is that we have got five 'five-star' Hotels coming; already three are there and two more are coming. These are dependent in a fair measure on drink revenue. They are going to be prevented from providing it except to tourists. But I do want that while you cripple the revenues of these hotels, you should not do anything which will affect tourist traffic to the State. Fifteen per cent of the total number of tourists who come to Bombay and Delhi are the tourists who visit the southern region. I am mentioning this to those who flatter themselves that a large number of tourists are coming here. This is not my figure. This figure is prepared by the Department of Tourism of the Government of India. If we want to augment or increase this number, if we want the tourists to come and see our temples, if we want the tourists to come and see our beautiful places in the south, what we must do is to make it possible for

them to get quick permits for drinks. Who are we to sit in judgment on what is good for them and what is not good for them? If, as they did earlier, some of us are put to extreme humiliation there is going to be trouble. Therefore, in streamlining not only policing procedure but also the permit procedure, something should be done to see that those who want permits because they are tourists, must get them easily.

A very, very fine points was made by my Hon. Friend Thiru Swaminathan. There is no important visitor or guest of the Government of India who is deputed by them to visit Madras who is not accompanied by a Deputy Secretary or a Member of the Foreign Affairs Ministry. When they come here, I do not think, they should be denied their right to take a peg of whisky if they want. Who are we to moralise them? This is a point which also should be taken care of though it is a small point.

Finally, I come to one point. I understand that the loss of revenue is so great that sundry measures are being sought to augment revenue. One of the best ways of seeing that at least further avenues are not lost is to see that at least racing is not abolished. But that is not the point I want to make now. We are thinking of a gallonage fee on industrial alcohol. What is this gallonage fee? It may be even Rs. 50 per kilolitre, whatever it may be. But it is going to increase the price of industrial products when the same products are being made in other States and sold at lower prices. The difference in the price of polivenyle chloride manufactured will be between Rs. 650 and Rs. 750 per ton and such difference will operate to the disadvantage of this State if you levy a gallonage fee, which in the ultimate resort may give you less than a crore of rupees against 45 or 50 crores of rupees which you are losing. Therefore, let us develop a sense of proportion in trying to retrieve the revenue loss on Prohibition. It is very important. We should not do things which hurt the industries, we should not do things which hurt the people who have been made to start an industry after making investment in this State, because you tell them temperamentally, "You have to shut down and you have to obey the Government". Of course, we have to obey the Government and the regulations which they introduce, if we are law-abiding citizens. That does not mean that I should start an industry and close it. I have not only put



ny money but a large number of people's money and I have got he money from the institutions like I.C. I.C.I. and others to nvest in it. Therefore it is that whatever we do, I welcome Prohibition as a policy, and the Government have done a very, very sensible thing, a very, very courageous thing, because they lose a lot of revenue. That has given them a tremendous amount of responsibility because policing required to see that it is properly implemented is very formidable, very much more formidable than perhaps, the Police Department and the Home Department are still believing it is. I know there is going to be much more involvement. I welcome it, all the more for that reason. But let us be guarded in what we do with industries, what we do with industrial alcohol, what we do with gallonage fees, what we do with tourists; and let us not say: "Here is a good hotel; but we do not mind if it is closed down, for the reason that the working of it has become uneconomic." I welcome the measure and I hope what I have stated will be taken in proper spirit and care would be taken to see that the economic dislocations attendant on Prohibition are minimised and the consequences and hardships reduced. Thank you, Mr. Chairman.

Mr. CHAIRMAN: There are three sentences even in civilised countries. Man drinks, drink drinks and drink drinks man.

Thiru S. NARAYANASWAMY: It is an actual statement, Sir. The first stage is "man takes the drink", the second stage is "dring takes the drink", and the third stage is "drink takes the man".

* திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு தலைவரவர்களே, இரண்டு மூன்று வருஷங்களாகக் கைவிடப்பட்ட மதுவிலக்கு மீண்டும் அமுலுக்கு வருமென்று நாம் அன்று எதிர்பார்க்கவில்லை. ஆனால், பின்னால் ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் இந்த அரசை மீண்டும் மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டுவரும்படியாகச் செய்துவிட்டன. அதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். வெறும் வாட்டு ஜம்பத்தைப் பார்க்காமல் நடந்துகொண்டுள்ளனர். நாம் பிடிவாதமாக இருக்க வேண்டுமென்று நிர்வாகத்தை நடத்துபவர்கள் எண்ணுவது சகஜம். அப்படியெல்லாம் எண்ணாமல் முதல்வரவர்கள் நாட்டிலுள்ள நிலைமையை நன்றாக உணர்ந்து, பல கோடிக்கணக்கான ரூபாய் மாநிலத்திற்கு நஷ்டம் ஏற்பட்டாலும் பரவாயில்லை என்று நினைத்து, மீண்டும் மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டுவருவேன் என்று கொண்டுவந்ததற்காக, உண்மையில்

அண்ணல் காந்தியடிகளின் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நாங்கள், அவருடைய கொள்கையை இந்த நாட்டில் கைவிட்டதற்காக வருந்திக்

(பிற்பகல் 6-10)

கொண்டிருந்த நாங்கள், அதை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்பதற்காக ஒரு இயக்கமே நடத்தி, அதற்காக 35,000 பேர்கள் சிறைக்குச் சென்ற ஸ்தாபனத்தைச் சேர்ந்த நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைவதோடு, அதற்குக் காரணமாக இவ்வளவு தைரியத்தைக் காண்பித்த இந்த அரசைப் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆனால், இந்த மூன்று ஆண்டுகளில், பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள், சாராயம், கள் என்றால் என்னவென்று முன்பு தெரியாமல் இருந்தவர்கள், தங்களைத் தாங்களே அழித்துக் கொண்டதுமட்டுமல்லாமல் தங்களுடைய எதிர்காலத்தையும், தங்களுடைய குடும்பத்தின் எதிர்காலத்தையும் அழித்துக் கொள்ளும்படியான ஒரு நிலைமையை, இந்த மதுவிலக்கை நிறுத்தி வைத்தது ஏற்படுத்தி விட்டது; அது வருந்தத்தக்க காரியமாகும். அந்த இளைஞர்கள் எப்படி எதிர்காலத்தில் சமாளிக்கப் போகிறார்கள் என்று நமக்குத் தெரியவில்லை. அது தான் இந்த அரசு சமாளிக்க வேண்டிய விஷயம். பணத்தைப்பற்றி பல பேர் அடிக்கடி பேசுகிறார்கள் நாற்பது, ஐம்பது கோடி ரூபாய் வருமானம் வருகிறதே, அதை ஏன் கைவிட வேண்டும் என்று பேசினார்கள். இன்றும் 50 கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு நஷ்டம், ஆகவே ஏன் இதை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவரவேண்டும் என்று விவாதிப்பவர்கள் உண்டு. ஆனால், அரசாங்கம் என்பது ஒரு போலீஸ் ராஜ்யம் அல்ல, இது ஒரு 'வெல்ஃபேர் கவர்ன்மெண்ட்'. இது மக்கள் நலனுக்காக, நல்வாழ்வுக்காக ஸ்தாபிக்கப்பட்ட அரசாங்கமாக இருக்க வேண்டும். ஏற்கெனவே மத்திய அரசுக்கு பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் வரி செலுத்துகிறோம். இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் கிட்டத்தட்ட 500 கோடி ரூபாய் வரை வரி செலுத்துகிறோம். அது எல்லாம் ஏழை மக்களின் நலனுக்காகத் தான் செலவழிக்கப்படுகிறது. அதில் 50 கோடி ரூபாய் குறைந்துவிட்டால், ஒன்றும் ஏற்பட்டு விடப்போவதில்லை. ஆகவே 50 கோடி ரூபாய் வருவாய் குறைந்து விடப்போகிறதே என்று பேசுவது எல்லாம் நல்ல வாதம் அல்ல, ஒரு வெல்ஃபேர் சர்க்கார் நடக்கிற நாட்டில்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இளம்பரிதி அவர்கள் தன் மனதில் பட்டதைக் கூறினார்கள். அவர் இந்த மதுவிலக்கை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவருவதை எதிர்க்கவில்லை என்று சொன்னதாகத்தான் நான் கருதுகிறேன். இருக்கின்ற கஷ்டத்தை அவர்களுடைய பாணியில் விளக்கிக் கூறினார்கள். இதை அமுல்படுத்துவதில், போதுவாக ஆரம்பத்தில் அரசாங்கம்



கண்டிப்பாக இருப்பது நல்லது. இதை 'என்போர்ஸ்' பண்ணுவதற்கு தனியாக போலீஸ் போடப்போகிறார்களா, அல்லது ஏற்கெனவே இருக்கிறவர்களை வைத்துக் கொள்ளப்போகிறார்களா, என்பது தெரியவில்லை. ஆனால் ஆரம்பத்தில் சற்றுக்கடுமையாக, கண்டிப்பாக நடவடிக்கை எடுத்தால், கள்ளச் சாராயம் காய்ச்சுவதும், திருட்டுத்தனமாகக் குடிப்பதும் தடுத்து நிறுத்தப்படலாம். எவ்வளவு தான் கடுமையாக அரசாங்கம் இருந்தாலும் சிறிது திருட்டுத்தனமாகச் சாராயம் காய்ச்சுவது, கள்ளத்தனமாகக் குடிப்பது இருக்கத்தான் செய்யும். அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. மதுவிலக்கை ரத்து செய்வதற்கு முன்னாலும், 3 ஆண்டுகளுக்கு முன்பு, இது நடந்துகொண்டு தான் இருந்தது. போலீஸ் ஸ்டேஷன் ஏற்பட்டு எத்தனையோ நூற்றாண்டுகள் ஆகிவிட்டன. திருடக் கூடாது, கொள்ளை அடிக்கக்கூடாது, கொலை செய்யக்கூடாது, அவற்றைத் தடுத்து மக்களைப் பாதுகாப்பதற்காகத் தான் போலீஸ் ஸ்டேஷன் வைத்திருக்கிறோம். இருந்தும், திருடு, கொள்ளை, கொலை இல்லாமல் இருக்கிறதா? அதற்காக, போலீஸ் ஸ்டேஷன் வேண்டாம் என்று சொல்லிவிட முடியுமா? உலகம் உள்ளவரை குறைகள் இருக்கத்தான் செய்யும். அரசு அதைக் கவனித்துத்தான் சீர்திருத்தம் செய்ய வேண்டும். ஆகவே, மதுவிலக்கை மீண்டும் கொண்டுவந்ததற்காகப் பாராட்டுவதோடு, அதை நன்றாக அமுல்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

டூரிஸம்பற்றிச் சொன்னார்கள். முன்பு காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும், அதற்குப் பின்னால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும், இந்த மதுவிலக்கை ரத்து செய்த வரை, டூரிஸ்டுகளுக்கு எந்தக் கஷ்டமும் இல்லாமல் சலுகை அளித்துத்தான் வந்தோம். தமிழ் நாடு வருகிற டூரிஸ்டுகள் தாராளமாக மது அருந்தலாம். அவர்கள் கொண்டு போகலாம் என்று கடைசி நேரத்தில் விதிகளைத் தளர்த்திக் கொடுத்திருந்தோம். அந்நிய நாட்டிலிருந்து வருபவர்களுக்கு வேண்டிய வசதிகள் முன்பு இருந்ததுபோல் செய்தால் போதும்.

அடுத்தபடியாக, குடிப்பதற்கான சாராயம், தொழில்களுக்கு வேண்டிய சாராயம் என்று இருக்கிறது. இன்டஸ்ட்ரியல் ஆல்ககால், டிரிங்கிங் ஆல்ககால் என்று சொல்லுகிறார்கள். இன்டஸ்ட்ரியல் ஆல்ககால் இன்றியமையாதது. அதைக் காய்ச்சுவதற்காக பல தொழிற்சாலைகளுக்கு லைசென்ஸ் கொடுத்திருக்கிறார்கள். எவ்வளவுக்கெவ்வளவு தொழில் பெருகுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதைச் செய்யலாம். குடிப்பதற்குச் சாராயம் காய்ச்ச மீண்டும் அனுமதித்து அடுத்த மாநிலங்களுக்கு அனுப்பலாம் என்ற யோசனை சரியல்ல. எப்படி நமது

[திரு. கே. ராஜாராம்] [1974 ஆகஸ்ட் 24

மாநிலத்தில் இருக்கிறவர்கள் குடிக்காமல் இருக்க வேண்டும் என்று எண்ணுகிறோமோ அதுபோல் பிறரும் குடிக்கக்கூடாது என்று எண்ண வேண்டும்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தி லிருந்து ஏற்றுமதி செய்யாமல் இருந்தால் மற்ற மாநிலத்திலே இருக்கிறவர்கள் குடிக்காமல் இருப்பார்கள் என்று எண்ணுகிறார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

**திரு. கே. ராஜாராம் :** தலைவர் அவர்களே, மற்ற மாநிலத்தில் இருப்பவர் களும் குடிக்காமல் இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அவர்களுக்கும் இந்த மாநிலத்தை ஆளுகிறவர்கள் போல் நல்ல வெளிச்சம் கிடைக்க வேண்டும் என்று தான் விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நம்முடைய மாநிலத்தின் கொள்கை, இங்கேயிருந்து கூட சாராயம் மற்ற மாநிலங்களுக்கு அனுப்புவது இல்லை என்பது தான். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் விரும்புவது தான் நம்முடைய கொள்கையும் ஆகும்.

**திரு. கே. ராஜாராம் :** அதை உணர்ந்துதான் சொல்லுகிறேன், இரண்டொரு உறுப்பினர்கள் அனுப்ப வேண்டுமென்று சொன்னதற்காகச் சொன்னேன். மாநில அரசாங்கத்தின் கொள்கை அனுப்பக்கூடாது என்பதைத் தெரிந்துதான் சொல்லுகிறேன். அதை அனுமதிக்கக்கூடாது என்பது ஒரு நல்ல முடிவு.

தவிர, தேர்தலில், உபதேர்தலில் தோற்றுப் போனதற்காக மீண்டும் மதுவிலக்கை இந்த அரசாங்கம் அமுலுக்குக் கொண்டுவந்திருக்கிறது என்றால், அது சரியல்ல. அது நல்ல வாதமும் அல்ல. தேர்தலில் ஒரு கட்சி ஜெயிக்கலாம், தோற்கலாம். மீண்டும் ஒரு தேர்தலில் ஆளும் கட்சி தோற்று விட்டால், மதுவிலக்கை மீண்டும் கொண்டுவந்ததால்தான் தோற்று விட்டது என்று சொல்வதா ? ஆகவே தேர்தலையும் இதையும் பிணைக்காமல், இடையில் ரத்து செய்துவிட்டாலும், பொது மக்களின் நன்மைக்காக, மீண்டும் கொண்டு வந்திருக்கிறார்கள் என்ற விதத்தில் பேசுவது தான் நல்லது. இந்த நல்ல காரியத்தை ராஜாஜி ஆரம்பித்து வைத்தார்கள். இடையில் நின்று விட்டது. இப்போது மீண்டும் வருவதை அவர் இருந்து பார்க்கக் கொடுத்து வைக்க வில்லையே என்று தான் வருத்தம். ஆகவே, ராஜாஜி, மகாத்மா காந்தி ஆகியோருடைய ஆன்மாக்கள் இதைப் பார்த்துப் பாவசம் அடையும் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.



1974 ஆகஸ்ட் 24]

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் நல்ல விளக்கமான கருத்துக்களைக் கொடுத்து விட்டார்கள். நான் சொல்ல வேண்டியதை எல்லாம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லி விட்டார்கள். அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியது போல், இந்த மதுவிலக்கைக் கொண்டு வந்திருப்பது ஏதோ தேர்தலில் தோற்றுப் போனதற்காக அல்ல. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விளக்கமாகச் சொன்னார்கள். சட்டமன்றப் பேரவையிலும், இந்த அவையிலும். "இந்தத் திட்டத்தை ஒத்தி வைக்கும்போதே, நம்முடைய நெஞ்சிலே ஒரு முள் குத்திக் கொண்டிருந்தது. அது மெள்ளத்தான் குறைவதாக நினைத்துக் கொண்டிருந்தோம். அதை இப்போது எடுக்க வேண்டும் என்று நினைத்து எடுத்துவிட்டோம்" என்று சொன்னார்கள். இந்த மதுவிலக்குத் திட்டம் கண்டிப்பான முறையில் அமல் நடத்தப்படும் என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எவ்வளவு தான் அரசு அதிகாரிகள் கடுமையான நடவடிக்கை எடுத்தாலும், பொது மக்களின் ஒத்துழைப்பு எந்த அளவுக்கு இருக்கிறதோ அந்த அளவுக்குத் தான் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களும் அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களும் நல்ல ஒத்துழைப்புத் தந்தால், வெற்றிகரமாக அமல்படுத்த முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இளம்பரிதி அவர்கள் முதலில் எப்படிப் பேசினாலும் கடைசியில் ஆதரிப்பதாகச் சொன்னார்கள். கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர்கள்பற்றித் தனக்குத் தெரியும் என்று சொன்னார்கள். அந்தப் பட்டியலைக் கொடுத்தால் அது உதவியாக இருக்கும். அப்படிப்பட்டவர்களைக் கண்காணிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது, அவர்களைக் கண்காணிக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6-20)

அடுத்து, உறுப்பினர்கள் திரு. சுவாமிநாதன் அவர்களும், திரு. நாராயணசாமி அவர்களும் ஆலைகளைப்பற்றிச் சொன்னார்கள். ஆலைகளைப் பொறுத்தவரையில், அவர்களுக்கெல்லாம் எக்ஸ்பான்ஷன் அனுமதி கொடுத்து, இன்டஸ்டிரியல் ஆல்கஹாலாக மாற்றிக்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாமென்று அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆலைகள்

இன்டஸ்டிரியல் ஆல்கஹால்-ஐ உற்பத்தி செய்யும் நிலைமைகளை அரசு உருவாக்கியிருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து அதிகப்படியாக இருக்கிற இன்டஸ்டிரியல் ஆல்கஹாலைக் கொண்டு 'Alcohol-based chemical industries ஆரம்பிக்கலாமென்ற ஒரு கருத்தும் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. பல தொழிலதிபர்கள் அதுபற்றி அரசாங்கத்திடம் முறையீடு செய்திருக்கிறார்கள். அதையெல்லாம் பரிசீலித்த பிறகு, நடவடிக்கை எடுப்பதற்கான ஒரு சூழ்நிலை இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இப்போது அந்த ஆலைகளிலே உற்பத்தியாவதில் பாதியளவே நம்முடைய தொழிற்சாலைகளுக்குப் போதுமானதாக உள்ளது. அவர்கள் அதிகப்படியாக 20 மில்லியன் லிட்டர் அளவுக்குத் தயார் செய்துகொண்டிருக்கிறார்கள். 'Alcohol-based chemical industries' ஆரம்பிப்பது என்று சொன்னால், அதற்கு இரண்டு ஆண்டுகளாவது பிடிக்குமென்று நான் சொன்னேன். மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. நாராயணசாமி அவர்கள் 4 ஆண்டுகளாகுமென்று சொன்னார்கள். அவர்கள் அதிகப்படியாக உற்பத்தி செய்யக்கூடிய நிறனை இந்த 4 ஆண்டுகளுக்கும் வைத்துக்கொண்டிருப்பார்கள். அந்தத் திறனை நாம் நிறுத்தப்போகிறோமா அல்லது வெளி மாநிலங்களுக்கு அனுப்ப நாம் அனுமதிக்கப்போகிறோமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இன்டஸ்டிரியல் ஆல்கஹாலைத் தயாரித்தால், அதை இங்கேயும் விற்கலாம்; வெளியேயும் அனுப்பலாம். அதில் ஒன்றும் ஆட்சேபனை கிடையாது. ஆனால் சாராயத்தை உற்பத்தி பண்ணி வெளியே அனுப்பத் தயாராக இல்லை. சாராயத்தை இங்கே உற்பத்தி செய்து கூட வெளி மாநிலங்களுக்கு அனுப்பலாமென்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். அந்த நோக்கம் அரசாங்கத்திற்குக் கிடையாது. எந்த ரூபத்திலும் தமிழ் நாட்டில் சாராயம் உற்பத்தி செய்யக்கூடாது என்பதுதான் தமிழ் நாடு அரசாங்கத்தினுடைய கொள்கை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, வெளிநாட்டுக்காரர்கள் பற்றிச் சொன்னார்கள். அவர்களுக்கு ஏற்கெனவே இருக்கின்ற அனுமதி கொடுக்கப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. வசந்த பாய் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். Health reasons-க்காக permit கொடுத்தால், அதற்குக் கட்டணம் வசூலிக்க வேண்டுமா என்று கேட்டார்கள்.



மதுவிலக்கு வந்துவிட்டால், நான் குடிக்க மாட்டேனென்று அவர்களே குறிப்பிட்டார்கள். அவரை எல்லோரும் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மதுவிலக்கு கொண்டு வந்த பிறகு . . .

Thiru G. VASANTHA PAI: May I interrupt the Hon. Minister? I said that because the Government insisted that I should have a permit, I was not willing to have a permit. So, I will not drink, as I should not be put to the necessity of paying for it.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: I thank him, Sir. I welcome that. நானே அதைத்தான் சொல்கிறேன். அதை நான் வரவேற்கிறேன். திரு. வசந்த பாய் அவர்கள் சொல்லுவதுபோல், அரசாங்கம் கட்டணம் விதிக்கிறது. Health reasons-க்காகக்கூட நான் மதுவை அருந்த மாட்டேனென்று ஒரு முடிவு எடுத்துக்கொள்வது நல்லது. அதை நான் பாராட்டுகிறேன். அதைப் பலரும் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மதுவிலக்குத் திட்டத்தை நிறைவேற்றுவதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. பக்கர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். பிரச்சாரக் குழுக்களை அமைக்க வேண்டுமென்று சொன்னார்கள். கள்ளச் சாராயம் காய்ச்சுவதைக் கண்டுபிடிப்பது; மது குடிப்பதால் ஏற்படும் தீமைகளைப்பற்றி யெல்லாம் பிரச்சாரம் செய்வது போன்றவற்றைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். அவர்களே திறமையான பேச்சாளராக இருக்கிறார்கள். அவருடைய கட்சியும் கூட இதை மிகத் தீவிரமாக அமல்நடத்த வேண்டுமென்று சொல்லுகிறது. எனவே அவர்களே ஒரு குழு அமைத்து, இதைப்பற்றிப் பிரச்சாரம் செய்வார்களேயானால், அதை மனப்பூர்வமாக வரவேற்கிறோமென்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

THIRU G. VASANTHA PAI: May I interrupt the Hon. Minister again? My point was whether the Government would consider not charging a fee from a person who was medically advised to have liquor, because by charging a fee from him, the Government were really charging a fee for a medicine that was prescribed on health grounds. I want an answer for this from the Hon. Minister.

THE HON. THIRU S. J. SADIQ PASHA: I am sorry. I cannot oblige the hon. Member Thiru Vasantha Pai.

திரு. ஜி. சுவாமிநாதன்: Indian made foreign liquor தயாரிக்கும் ஆலைகளைப் பல பேர் ஆரம்பித்திருக்கிறார்கள். அரசாங்கம் ஒரு நிலையான கொள்கையை வைத்திருக்குமென்ற காரணத்தால், அவர்கள்

ஆரம்பித்திருக்கிறார்கள். பல லட்சக் கணக்கான ரூபாய் முதலீடு செய்து இயந்திரங்களெல்லாம் வாங்கியிருக்கிறார்கள். அதற்கு என்ன செய்யப் போகிறார்களென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அவர்களே இதற்கு ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அந்த எக்ஸ்பன்ஷனுக்கு அனுமதி கொடுக்கப் பட்டிருக்கிறது. ஐ.எம்.எப்.எல். தயாரிக்கிறவர்கள்கூட இன்டஸ்டிரியல் ஆல்கஹால் தயாரிக்கலாமென்று இருக்கிறது.

THIRU S. NARAYANASWAMY : Industrial alcohol is sought to be processed into potable alcohol—Indian made foreign liquor and for this purpose, new complicated machines have been installed, for manufacturing industrial alcohol from molasses and then to process it into potable alcohol. The question is what the Government are going to do with this machinery, since Prohibition is to be re-introduced. This is a great problem to be solved.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** Indian made foreign liquor தயாரிப்பதற்கு அனுமதி கொடுப்பதற்கில்லை என்றுதான் அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

THIRU G. VASANTHA PAI : Sir, the Hon. Minister said that he could not oblige me. I have not asked for a permit. What I wanted to know is whether in the case of patients who have been advised to take liquor for health reasons, the Government will consider giving exemption from paying tax for that purpose.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, எக்சம்ப்ஷன் கொடுப்பதாக இல்லை என்று அரசு முடிவு செய்திருக்கிறது. ஏற்கெனவே கட்டணம் வசூலிக்கப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து, மீண்டும் அந்தக் கட்டணம் வசூலிக்கப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கடைகளை ஏலத்தில் எடுப்பதுபற்றிச் சொன்னார்கள். கடைகளை ஏலம் எடுத்தவர்கள், அந்தக் கடைகளை நடத்த முடியாமல் மறு ஏலத்திற்கு வந்தால், அந்த மறு ஏலத்தில் எடுப்பவர்கள் என்ன தொகை கேட்கிறார்களோ அந்தத் தொகைக்கும், ஏற்கெனவே எடுத்திருந்த தொகைக்கும் உள்ள வித்தியாசத் தொகையை வசூலிப்பதற்காகத்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதை வசூலிப்பது நியாயமில்லையென்று ஹைக்கோர்ட்டுக்குப் போனார்கள். வழக்கு



வெற்றிகரமாக முடியவில்லை. அரசாங்கத்திற்கு வர வேண்டிய பணத்தைத்தான் அரசாங்கம் நடவடிக்கை மூலம் வசூலிக்கிறதே தவிர வேறல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக இந்த மசோதாவை மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்றிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. டிமான்டி அவர்கள் 'செக்ரமென்ட்ல் ஒயின்' பற்றிக் கேட்டார்கள். நிச்சயமாக அது கொடுக்கப்படும். அதில் ஆட்சேபணை கிடையாது. இந்த 'செக்ரமென்டல் ஒயின்' ஐ ஆந்திர மாநிலத்திலிருந்து கொண்டு வருவதற்கு 6 லட்ச ரூபாய் எக்சைஸ் வரி கொடுக்க வேண்டியிருக்கிறதென்றும், அதற்கு விதி விலக்கு வேண்டுமென்றும் கேட்டார்கள். ஒரு மாதத்திற்கு முன்னால் விதிவிலக்கு கொடுத்திருக்கிறோம். அதைக் கொண்டு வரத் தடைகள் இருக்காது. அதற்கு என்னென்ன விதிமுறைகள் இருக்கின்றனவோ அந்த விதிமுறைகளுக்கு உட்பட்டு அனுமதிக்கப்படுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக மிகப் புனிதமாகக் கருதப்படும் இந்த மசோதாவை எல்லோரும் ஒருமனதாக நிறைவேற்றித் தந்து, இந்த மசோதா சட்டமான பிறகு மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் ஒத்துழைப்புத் தந்து இதை வெற்றிகரமாக நிறைவேற்றிடக்கூடிய வாய்ப்பினை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, சுற்றுலாவைப் பொறுத்தவரையில், அமைச்சரவர்கள் என்ன உத்தேசித்திருக்கிறார்களென்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையில், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களே விளக்கிச் சொன்னார்கள். சுற்றுலாப் பயணிகளுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலொன்றும் கஷ்டம் ஏற்படாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள், வெளிநாட்டுக்காரர் மாத்திரமல்ல; வெளி மாநிலத்திலிருந்து வந்தால்கூட அவர்களுக்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இந்தியாவில் யாரும் குடிக்கக்கூடாது என்பது நம் கொள்கையாக இருக்க வேண்டுமே தவிர, ஆந்திரக்காரன் குடிக்கலாம், கர்நாடகத்திலிருந்து வந்தால் குடிக்கலாமென்று சொல்லுவது நியாயமல்ல. அந்நிய நாட்டுக்காரர்களுக்குக் குடிப்பது பழக்கமாகிவிட்டதால் அவர்களை அனுமதிக்கலாம், நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில். . .

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்தில் குடிக்கக் கூடாதென்றால், யாருமே குடிக்கக்கூடாதென்பது பொருள். அப்போது வெளி நாட்டுக்காரனும் குடிக்கக்கூடாது. இப்போது வெளிநாட்டுக்காரர்கள் குடிக்கலாமென்று இருக்கிறது. வெளி மாநிலத்திலிருந்து வருகின்றவர்களும் குடித்துப் பழகியிருக்கிறார்கள். அவர்கள் குடிப்பதை எப்படித் தடை செய்ய முடியும்? எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொன்னதுபோல், பெர்மிட் கொடுக்கலாமென்றால், முன்னால் எவ்வளவு கஷ்டம் இருந்ததென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். டைனிங் ஹாலில் குடிக்கக்கூடாதென்று முன்னால் வைத்தார்கள். வெளிநாட்டுக்காரர்களுக்கு அனுமதி வழங்குவதில் எந்த அளவுக்கு மாறுதல் செய்ய முடியுமென்பதைப் பார்க்க வேண்டும். அதனால் நம்முடைய மாநிலத்திற்குப் பயன் ஏற்படுமென்பதைத்தான் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. சி. வி. ராஜகோபால் :** தலைவரவர்களே, வெளிநாட்டுக்காரர்கள் வந்து, தங்களைப் போன்றவர்களை விருந்துக்கு அழைத்து, அந்த விருந்தில் அவர்கள் ஆல்கஹால் சாப்பிடும்போது, தங்களைப் போன்றவர்கள் 'அதைத் தொடுவது பழக்கமில்லை' என்று சொன்னால், அவர்கள் அநாகரீகமென்று நினைத்துக் கொள்வார்களே ... (குறுக்கீடு) அப்படி அதைத் தொட்டு விட்டால், அது 'அஃபென்ஸ்' ஆகாதாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** போலீஸ் இருக்கிறதா என்று பார்த்து விட்டு, திரு. சி. வி. ராஜகோபால் விருந்தில் கலந்து கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. வி. ராஜகோபால் அவர்கள் அதுமாதிரி நடவடிக்கைகளில் ஈடுபட்டால், சட்டப்படி அதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமே தவிர, வேறு வழியில்லை. பொதுவாக இந்த மசோதாவை வரவேற்ற நண்பர்களுக்கு நன்றி தெரிவித்து, இந்த மசாதாவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 6-30)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1974-ஆம் ஆண்டு மதுவிலக்கு (மீண்டும் அமல்படுத்துதலும், திருத்தமும்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1974) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, நெடுந்தலைப்பு, முகப்புரை ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு மதுவிலக்கு (மீண்டும் அமல்படுத்துதலும், திருத்தமும்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1974) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு மதுவிலக்கு (மீண்டும் அமல்படுத்துதலும், திருத்தமும்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1974) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## (2) 1974-ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) மூன்றும் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/ 1974)

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** மேலவைத் தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1974 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) மூன்றும் திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தலைவரவர்களே, நகராட்சி உறுப்பினர்களின் பதவிக்கால அளவு, தமிழ் நாடு 1974 ஆம் ஆண்டு 19 வது சட்டத்தின் மூலம் 1974 ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் நாள் வரை கடைசியாக நீட்டிக்கப்பட்டது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். இதற்கிடையில் நகராட்சித் தேர்தல்

---

@ 358–359 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**1974 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த பதவிக்கால நீட்டிப்பு) மூன்றும் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1974)**

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [24 ஆகஸ்ட் 1974

களில் பயன்படுத்துவதற்கான வாக்குச் சீட்டுகளை அச்சிடும் நடைமுறை பற்றி முக்கியமான முடிவு ஒன்று எடுக்கப்பட்டது. நாடாளுமன்ற சட்ட மன்றத் தேர்தல்களுக்கு உபயோகப்படுவதைப் போல அந்த நடைமுறையைக் கொண்டு வரலாமா என்று யோசித்து, தேர்தலில் இணைப்புச் சீட்டுடன் கூடிய வாக்குச் சீட்டுக்களைப் பயன்படுத்தலாமா என்று நன்கு பரிசீலனை செய்த பிறகு, அவ் விதம் அச்சிடும் நடைமுறையைப் பின்படுத்துவதென முடிவு செய்யப்பட்டது. வாக்குச் சீட்டுக்களை அச்சிடுவதில் ஏற்பட்ட இந்த முக்கியமான மாற்றம் கார ணமாகவும், மாநகராட்சிகளுக்கும் நகராட்சிகளுக்கும் உறுப்பினர்களைத் தேர்ந் தெடுக்கும் விதிகளை விரிவாக திருத்தம் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்ட தாலும், கூடுதலாக வாக்குச் சாவடிகளை ஏற்படுத்தவும், வாக்குப் பதிவு மாற்றம் அதற்கு வேண்டிய எல்லா விதமான உதவிகளை செய்வதற்கும் சற்றுக் கால தாமதம் ஆகும் என்ற காரணத்தினுலேயும், இந்தச் சட்ட மன்றம் நடைபெருத காலத்தில், சட்டத்தை 1974 ஆண்டு ஆகஸ்டு முதல் நாளைக்குப் பிறகு நீடிக்க முடியவில்லை. 1974-ல் அப்போது சட்ட மன்றக் கூட்டம் நடைபெருததால் 1974-ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) மூன்றும் திருத்த அவசரச் சட்டத்தை, தமிழ் நாடு அவசரச் சட்டம் 2-ன் கீழ் 1974 ஜூன் திங்களில் சாற்றுரைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்த அவை முன் உள்ள சட்ட வரைவு மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாகக் கொண்டு வரப்படுகிறது. இதிலே மாநக ராட்சி என்று சேர்க்கப்பட்டிருக்கின்ற காரணத்தாலே மாநகராட்சித் தேர்தல் களும் உள்ளடங்கியது என்று கருதாமல், பொதுவாகச் சட்டங்கள் இயற்று கிறபோது, இது மாவட்ட நகராட்சிகள் சட்டத் திருத்தம் என்று கொண்டு வரப்படுகின்ற காரணத்தாலே, இது மாநகராட்சிக்கு மட்டும் திருத்தம் என்று கருதாமல், இது மொத்தமான நகராட்சிகளையும் பொறுத்த திருத்தம் என்று ஏற்றுக்கொண்டு அதை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள் கின்றேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்.

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1974-ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த. பதவிக்கால நீட் டிப்பு) மூன்றும் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 28/1974) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

**திரு. கே. ராஜாராம் :** தலைவரவர்களே, இந்த மசோதாவில் மேலும் 3 மாதங்களுக்கு நீட்டிப்பு கொடுக்கவேண்டும் என்பது அவசியம். ஆனல் அதற் குப் பிறகும் 2 மாத காலம் வரை நீட்டிப்பு கொடுக்கலாம் என்றும், அந்தக்

**1974 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) மூன்றும் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1974)**

1974 ஆகஸ்ட் 24] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

கால அளவைக் குறைக்கவோ, நீட்டிக்கவோகூட அரசாங்கத்திற்கு அதிகாரம் உண்டாக்கவும், அவையின் முன் கொண்டு வந்துள்ள இந்த மசோதா கூறு கிறது. எனக்கு ஒரு சந்தேகம். இந்த 2, 3, 5 மாதத்திற்குள்ளேயே வரப் போகிற டிசம்பர் மாதத்திற்குள்ளேயே தேர்தல் நடந்துவிடுமா அல்லது 2 மாதம் என்பதைப் பொதுவாகவே வைத்துக்கொண்டு, 2 மாதம் முடிந்ததும் இன்னொரு 2 மாதம், இன்னொரு 2 மாதம் என்று நீட்டிப்பதற்காக என்று வாசகத்திலே சரியாக வரையறை செய்த மாதிரி தெரியவில்லை. அப்படி ஏதாவது நோக்கம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். மூன்று மாதத்திற்குப் பின்னல் ஒரே 2 மாதம்தானு? அல்லது அதற்கு மேலும் இரண்டு இரண்டு மாத காலம் என்று நீட்டிக் கொடுப்பதற்கு இடம் கொடுக்குமா என்ப தனைத் தெரிந்துகொள்ள விரும்புகின்றேனே ஒழிய வேறு ஒன்றும் இல்லை. ஏற்கெனவே ஒரு அவசரச் சட்டம் மூலம் இதை அங்கீகரித்துவிட்ட மாதிரி தான். அவசரச் சட்டமாகப் பிரசுரிக்கப்பட்டதை சாதாரண சட்டம் ஆக்கு வதற்காக வந்துள்ள மசோதா இது. இதிலே வாதத்திற்கே அதிக இடமில்லை. இந்த விளக்கத்தை மட்டும் அமைச்சர் அவர்களிடமிருந்து அறிந்துகொள்ள விரும்புகிறேன். தேர்தல் எப்போது நடக்கும் என்பதை உத்தேசமாகவாவது அமைச்சர் அவர்கள் சொல்லும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** மேலவைத் தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களுக்கு ஏற்பட்டுள்ள சந்தேகத்திற்கு விளக்கம் சொல்கின்றேன். தமிழ் நாட்டைத் தவிர, பிற மாநிலங்களில் பல மாநகராட்சிகளுக்கு ஏறத்தாழ 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் கூட தேர்தல் நடைபெருமல் இருக்கின்றது. ஏன் அண்டை மாநிலங்களில் எல்லாம்கூட ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் இவைகளில் தேர்தல் நடைபெருமல் இருக்கின்றது. அப்படிப்பட்ட நிலைமை தமிழ் நாட்டிலும் ஏற்படுமா என்ற அச்சத்தோடு கேட்கின்றார்கள் என்று கருதுகின்றேன். இன்னும் 5 மாத காலத்திற்குள் தேர்தலை நடத்திவிடலாம் என்றுதான் இப்போது முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதற்குமேல் நீட்டிப்பதற்கு உத்தேசம் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1974 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிக்கால நீட் டிப்பு) மூன்றும் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

களில் பயன்படுத்துவதற்கான வாக்குச் சீட்டுகளை அச்சிடும் நடைமுறை பற்றி
முக்கியமான முடிவு ஒன்று எடுக்கப்பட்டது. நாடாளுமன்ற சட்ட மன்றத்
தேர்தல்களுக்கு உபயோகப்படுவதைப் போல அந்த நடைமுறையைக் கொண்டு
வரலாமா என்று யோசித்து, தேர்தலில் இணைப்புச் சீட்டுடன் கூடிய வாக்குச்
சீட்டுக்களைப் பயன்படுத்தலாமா என்று நன்கு பரிசீலனை செய்த பிறகு, அவ்
விதம் அச்சிடும் நடைமுறையைப் பின்படுத்துவதென முடிவு செய்யப்பட்டது.
வாக்குச் சீட்டுக்களை அச்சிடுவதில் ஏற்பட்ட இந்த முக்கியமான மாற்றம் கார
ணமாகவும், மாநகராட்சிகளுக்கும் நகராட்சிகளுக்கும் உறுப்பினர்களைத் தேர்ந்
தெடுக்கும் விதிகளை விரிவாக திருத்தம் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்ட
தாலும், கூடுதலாக வாக்குச் சாவடிகளை ஏற்படுத்தவும், வாக்குப் பதிவு மாற்றம்
அதற்கு வேண்டிய எல்லா விதமான உதவிகளை செய்வதற்கும் சற்றுக் கால
தாமதம் ஆகும் என்ற காரணத்தினாலேயும், இந்தச் சட்ட மன்றம் நடைபெறாத
காலத்தில், சட்டத்தை 1974 ஆண்டு ஆகஸ்டு முதல் நாளைக்குப் பிறகு நீடிக்க
முடியவில்லை. 1974-ல் அப்போது சட்ட மன்றக் கூட்டம் நடைபெறாததால்
1974-ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள்
(திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) மூன்றும் திருத்த அவசரச் சட்டத்தை, தமிழ்
நாடு அவசரச் சட்டம் 2-ன் கீழ் 1974 ஜுன் திங்களில் சாற்றுரைக்க வேண்டிய
அவசியம் ஏற்பட்டது. இந்த அவை முன் உள்ள சட்ட வரைவு மேற்சொன்ன
அவசரச் சட்டத்திற்குப் பதிலாகக் கொண்டு வரப்படுகிறது. இதிலே மாநக
ராட்சி என்று சேர்க்கப்பட்டிருக்கின்ற காரணத்தாலே மாநகராட்சித் தேர்தல்
களும் உள்ளடங்கியது என்று கருதாமல், பொதுவாகச் சட்டங்கள் இயற்று
கிறபோது, இது மாவட்ட நகராட்சிகள் சட்டத் திருத்தம் என்று கொண்டு
வரப்படுகின்ற காரணத்தாலே, இது மாநகராட்சிக்கு மட்டும் திருத்தம் என்று
கருதாமல், இது மொத்தமான நகராட்சிகளையும் பொறுத்த திருத்தம் என்று
ஏற்றுக்கொண்டு அதை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்
கின்றேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்.

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1974-ஆம் ஆண்டு, சென்னை
மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த. பதவிக்கால நீட்
டிப்பு) மூன்றும் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்
வடிவு எண் 28/1974) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

**திரு. கே. ராஜாராம் :** தலைவரவர்களே, இந்த மசோதாவில் மேலும் 3
மாதங்களுக்கு நீட்டிப்பு கொடுக்கவேண்டும் என்பது அவசியம். ஆனால் அதற்
குப் பிறகும் 2 மாத காலம் வரை நீட்டிப்பு கொடுக்கலாம் என்றும், அந்தக்





கால அளவைக் குறைக்கவோ, நீட்டிக்கவோகூட அரசாங்கத்திற்கு அதிகாரம்
உண்டாக்கவும், அவையின் முன் கொண்டு வந்துள்ள இந்த மசோதா கூறு
கிறது. எனக்கு ஒரு சந்தேகம். இந்த 2, 3, 5 மாதத்திற்குள்ளேயே வரப்
போகிற டிசம்பர் மாதத்திற்குள்ளேயே தேர்தல் நடந்துவிடுமா அல்லது 2
மாதம் என்பதைப் பொதுவாகவே வைத்துக்கொண்டு, 2 மாதம் முடிந்ததும்
இன்னொரு 2 மாதம், இன்னொரு 2 மாதம் என்று நீட்டிப்பதற்காக என்று
வாசகத்திலே சரியாக வரையறை செய்த மாதிரி தெரியவில்லை. அப்படி
ஏதாவது நோக்கம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். மூன்று
மாதத்திற்குப் பின்னால் ஒரே 2 மாதம்தானா? அல்லது அதற்கு மேலும் இரண்டு
இரண்டு மாத காலம் என்று நீட்டிக் கொடுப்பதற்கு இடம் கொடுக்குமா என்ப
தனைத் தெரிந்துகொள்ள விரும்புகின்றேனே ஒழிய வேறு ஒன்றும் இல்லை.
ஏற்கெனவே ஒரு அவசரச் சட்டம் மூலம் இதை அங்கீகரித்துவிட்ட மாதிரி
தான். அவசரச் சட்டமாகப் பிரசுரிக்கப்பட்டதை சாதாரண சட்டம் ஆக்கு
வதற்காக வந்துள்ள மசோதா இது. இதிலே வாதத்திற்கே அதிக இடமில்லை.
இந்த விளக்கத்தை மட்டும் அமைச்சர் அவர்களிடமிருந்து அறிந்துகொள்ள
விரும்புகிறேன். தேர்தல் எப்போது நடக்கும் என்பதை உத்தேசமாகவாவது
அமைச்சர் அவர்கள் சொல்லும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** மேலவைத் தலைவரவர்களே,
மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களுக்கு ஏற்பட்டுள்ள சந்தேகத்திற்கு
விளக்கம் சொல்கின்றேன். தமிழ் நாட்டைத் தவிர, பிற மாநிலங்களில் பல
மாநகராட்சிகளுக்கு ஏறத்தாழ 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் கூட தேர்தல்
நடைபெறாமல் இருக்கின்றது. ஏன் அண்டை மாநிலங்களில் எல்லாம்கூட
ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் இவைகளில் தேர்தல் நடைபெறாமல்
இருக்கின்றது. அப்படிப்பட்ட நிலைமை தமிழ் நாட்டிலும் ஏற்படுமா என்ற
அச்சத்தோடு கேட்கின்றார்கள் என்று கருதுகின்றேன். இன்னும் 5 மாத
காலத்திற்குள் தேர்தலை நடத்திவிடலாம் என்றுதான் இப்போது முடிவு
செய்யப்பட்டிருக்கிறது. இதற்குமேல் நீட்டிப்பதற்கு உத்தேசம் இல்லை
என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1974 ஆம் ஆண்டு சென்னை
மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிக்கால நீட்
டிப்பு) மூன்றும் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு
எண் 28/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**1974 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) மூன்றாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1974)**

[திரு. கே. ராஜாராம்] [1974 ஆகஸ்ட் 24

சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள், 2, 3, அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, நெடுந்தலைப்பு, முகப்புரை ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1974-ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) மூன்றாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1974) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகின்றேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1974-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) மூன்றாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1974) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(3) 1974 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1974)**

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** மேலவைத் தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1974 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

என்று முன்மொழிகின்றேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1974-ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

---

@ 359–360-ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**1974-ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1974)**

1974 ஆகஸ்ட் 24]

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, நெடுந்தலைப்பு, முகப்புரை ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1974 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1974) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகின்றேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1974 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1974) நிறைவேற்றப்படவேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(4) தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1974)**

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மேலவைத் தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1974) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

---

@360361-ம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள **பிரச்சினை :**

"சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1974) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

*தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.*

*சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.*

*பிரிவுகள் 2 முதல் 4 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.*

*பிரிவு 1, நெடுந்தலைப்பு, முகப்புரை ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.*

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1974-ஆம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1974) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகின்றேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1974) நிறைவேற்றப்பட வேண்டும்".

*தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.*

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் செவ்வாய்க்கிழமை 27—8—1974 அன்று பிற்பகல் **4.00 மணிக்குக் கூடும்.**

*பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.*

*(பிற்பகல் 6-40)*



## இணைப்பு I

*[309-ஆம் பக்கத்தில் இனம் 5(1)க்கான அடிக்குறிப்பைக் காண்க]*

## L. A. BILL No. 38 of 1974

## (As passed by the Assembly)

*A Bill to revive the operation of the Tamil Nadu Prohibition Act,* 1937.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-fifth Year of the Republic of India as follows:—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Prohibition (Revival of Operation and Amendment) Act, 1974.

2. *Definitions.*—In this Act, unless the context otherwise requires,—

(1) "Prohibition Act" means the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937);

(2) "Prohibition (Suspension of Operation) Act" means the Tamil Nadu Prohibition (Suspension of Operation) Act, 1971 (Tamil Nadu Act 33 of 1971);

(3) "toddy" means toddy as defined in clause (19) of section 3 of the Prohibition Act;

(4) words and expressions used herein and not defined in this Act but defined in the Prohibition Act shall have the same meanings as assigned to them under that Act.

3. *Revival of Operation of Tamil Nadu Act X of* 1937.—(1) The whole of the Prohibition Act, to the extent to which the operation of the said Act was suspended by the Prohibition (Suspension of Operation) Act shall stand revived with effect on and from the 1st September 1974.

(2) The provisions of sub-section (1) are without prejudice to the revival of the provisions of the Prohibition Act in respect of toddy, with effect on and from the 1st September 1973 by section 2-A of the Prohibition (Suspension of Operation) Act.

(3) For the removal of doubts, it is hereby declared that the provisions of sections 4 (1) (j) and 4-A of the Prohibition Act, shall also stand revived with effect on and from the 1st September 1974.

4. *Amendment of Tamil Nadu Act X of 1937.*—In the Prohibition Act as so revived, in Chapter III, after section 24, the following section shall be added, namely :—

"24-A. *Privilege of selling by retail to be auctioned.*—(1) Not-withstanding anything contained in this Act, the State Government may, grant to any person or persons on such conditions and for such period as may be prescribed the exclusive or other privilege of the selling by retail any liquor or article containing such liquor—

(*a*) to any person or institution to whom licences have been granted under section 8 on the ground that such liquor or article is required by such person or institution for *bona fide* medicinal, scientific, industrial or such like purposes; or

(*b*) to persons to whom permits have been granted for possession and consumption of liquor on the ground that the health of such persons will be seriously and permanently affected if they are not permitted to consume liquor;

(*c*) to any other person or institution who has been licensed or permitted for the possession and use of such liquor or other article; or

(*d*) to persons who are exempted from the provisions of this Act; or

(*e*) which is exempted from the provisions of this Act.

(2) Instead of, or in addition to, any duty leviable under this Act, the State Government may accept payment of a sum, in consideration of grant of any privilege under sub-section (1).

(3) The sum payable under sub-section (2) shall be determined as follows :—

(*a*) by auction or otherwise as the State Government may, by general or special order, direct; and

(*b*) by such authority and subject to such control as may be specified in such order.

(4) No grantee of any privilege under sub-section (1) shall exercise the same unless or until he has received a licence in that behalf from the District Collector or any other officer specially empowered by the State Government in this behalf.



(5) The provisions of this Chapter relating to licenses shall, so far as may be, apply to any licence granted under sub-section (4)".

5. *Repeals.*—(1) The Tamil Nadu Prohibition (Suspension of Operation) Act, 1971 (Tamil Nadu Act 33 of 1971), and the Tamil Nadu Excise Act, 1971 (Tamil Nadu Act 34 of 1971), shall stand repealed with effect on and from the 1st September 1974.

(2) The repeal of the Tamil Nadu Excise Act, 1971 (Tamil Nadu Act 34 of 1971) [hereinafter in this sub-section and sub-sections (3) and (4) referred to as the said Act] shall not affect...

(*a*) anything done or any offence committed, or any fine or penalty incurred or any proceedings begun before the repeal of the said Act; or

(*b*) the previous operation of the said Act or anything duly done or suffered thereunder; or

(*c*) any right, privilege, obligation or liability (including all arrears due to the State Government under the said Act) acquired, accrued or incurred under the said Act; or

(*d*) any fine, penalty, forfeiture or punishment incurred in respect of any offence committed against the said Act; or

(*e*) any investigation, legal proceeding or remedy in respect of any such right privilege obligation, liability, fine, penalty, forfeiture or punishment as aforesaid;

and any such investigation, legal proceeding or remedy may be instituted, continued or enforced and any such fine, penalty forfeiture or punishment may be imposed, as if this Act had not been passed.

(3) Notwithstanding anything contained in the foregoing provisions of this Act, any licence or permit issued under the said Act shall, on and from the 1st September 1974, cease to have effect and accordingly no person shall be entitled to the import, export, transport, manufacture, possession and sale of any liquor or molasses as on and from the said date, except under and in accordance with the provisions of the Prohibition Act, as amended by this Act.

(4) All rules made or continued and notifications issued or continued under the said Act shall be deemed to have been made, issued or continued, as the case may be, under the corresponding provisions of the Prohibition Act in so far as they are not inconsistent with the provisions of the Prohibition Act and shall continue in force accordingly unless and until superseded by anything done or any action taken under the Prohibition Act.

## இணைப்பு II

[349 ஆம் பக்கத்தில் இனம் 5 (2)க்கான அடிக்குறிப்பைக் காண்க]

### L. A. Bill No. 28 of 1974

(As passed by the Assembly)

*A Bill further to amend the Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and Extension of term of office) Act*, 1971.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-fifth year of the Republic of India as follows :—

1. *Short title.*—This Act may be called the Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and Extension of term of office) Third Amendment Act, 1974.

